அன்பு செய்த அற்புதம்

(கவிதையும், கதையும்.)

நாமக்கல் கவிஞர்
வெ. இராமலிங்கம் பிள்ளை



பழனியப்பா பிரதர்ஸ்
தெப்பக்குளம்
திருச்சி-2
::
சேப்பாக்கம்
சென்னை - 5

முதற் பதிப்பு 2—9—1957

விலை
ரூ. 7-50

ஏஷியன் பிரின்டர்ஸ்,
சென்னை-5

பதிப்புரை

'அன்பு செய்த அற்புதம்'—ஒரு பெருங் கதை! தொட்டால் படித்து முடிக்காமல் கீழே வைக்க மனம் வராது—அத்தனை வேகம்; விறு விறுப்பு! அடுத்து என்ன என்ற ஆவலை அடிக்கடி தூண்டிக்கொண்டே இருக்கும் கதை ஓவியம்! எளிய நடை, கோவையான கதைப் போக்கு, கருத்தாழம்—அத்தனையும் ஒருங்கே அமைந்தது!

நீண்ட நாட்களுக்குப் பிறகு, காந்தீயக் கவிஞர் திரு. வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள், இந் நாவலை முன்னும் பின்னும் கவிதை நடையிலும், [redacted] உரை நடையிலுமாக ஆக்கி, கவிப் பிரியர்களையும் வசன - கதா ரசிகர்களையும் ஒருங்கே திருப்திப் படுத்தியுள்ளார்கள்.

இதனை எங்கள் வழி வெளியிட உதவிய கவிஞர்க்கு, எங்கள் உளங் கனிந்த நன்றி உரியவாகுக!

பழனியப்பா பிரதர்ஸ்

கள்ளன் யார்?

யாரிடம் சொல்லுவேன் அநியாயம் இதனை!
பாரிடை இதற்கொரு பரிகாரம் உண்டோ!
எப்படி இருந்தேன்! என்றனை இப்படி
கெடுத்த பாவியைக் கேட்பார் இல்லையா?
... ...
ஊரார் எல்லாம் ஒதுங்கி வணங்கி
மரியாதை செய்யும் மகிமை மிகுந்து
உயர்ந்து விளங்கிய உத்தியோ கஸ்தரின்
தவமெனப் பிறந்த தலைமகன் ஆனேன்.
இல்லையென் றுரைக்க எதுவுமில் லாமல்
விரும்பிய யாவும் வேண்டிய உடனே
எங்கிருந் தாயினும் எனக்குக் கிடைக்க,
செல்லக் குழந்தையாய்ச் சீருடன் வளர்ந்து
உயர்தர உணவும் உண்டிகள் பலவும்
தின்று செழித்துத் திடகாத் திரனாய்
மானெனத் துள்ளி, மயிலெனக் களித்து,
முகிலெனத் திரிந்து, முயல்போல் ஓடி,
குயிலெனக் கூவி, கிளியெனக் கொஞ்சி,
அணிலெனத் தாவி, அலையென மோதி,
மனமற்றுத் தூங்கி, மலரொத்து விழித்து,
அச்சமோ கவலையோ அணுவள வின்றி,
நலிவில் லாமல் நாளுக்கு நாளாய்
வளமை சிறந்த வாலிபன் ஆனேன்.
'தண்டால்' எடுத்து 'முண்டா' முறுக்கி,
'பஸ்கிகள்' போட்டு கால்கள் பலத்து,
'சாண்டோ' வேலைகள் சகலமும் முயன்று

பந்தாட் டங்களில் பலவிதம் ஆடி,
பந்தய ஓட்டம் முந்திட ஓடி,
பள்ளிக் கூடப் 'பார்'விளை யாட்டில்
வியக்கத்தக்க வித்தைகள் செய்து,
வருஷா வருஷம் பரிசுகள் வாங்கி,
என்னுடை வகுப்பில் என்னிலும் மிஞ்சின
பலசாலி யாரும் பார்ப்பதற் கில்லை
என்றெனைப் புகழ்ந்து எல்லாரும் மெச்ச,
மகிழ்ச்சியிற் குறையா மாணவன் ஆனேன்.
தலைமயிர் அதற்கு வாசனைத் தைலம்
பலவிதம் பூசிப் பக்குவம் செய்து,
கன்னங் கரேல்என மின்னும் என்கேசம்.
எத்துணைச் சிறுபொருள் எதுவா னாலும்
காணது போனால் கண்டு பிடித்திட
என்னையே அழைப்பர்; எதனால் என்றால்
வெகுதூ ரத்திலும் வேணது காணும்
கருடனைப் போன்றன என்னுடை கண்கள்,
எதையும் உடனே தேடி எடுக்கும்.
பள்ளியை விட்டுப் பசியுடன் வருவேன்,
தலைவா சலைநான் தாண்டிடு முன்பே
மோப்பம் பிடித்தே முற்றிலும் அறிந்து
வீட்டில் சமைத்துள விசேஷ உணவுகள்
என்னென்ன என்பதை எளிதிற் சொல்வேன்.
கடுகை எடுத்துக் கதவில் அடிப்பினும்
ஓசையைக் கேட்டு வாசலைப் பார்க்கச்
செய்வன என்னுடைக் கூரிய செவிகள்.
நாக்கின் திறமையோ மிகவும் நல்லது;
சுவையில் மட்டுமா? சொல்லிலும் கூட.
பாதாம் கொட்டை பட்டெனத் தெறிக்கக்
கடித்து உடைத்துக் கல்லையும் நொறுக்கும்

பலமிகுந் துள்ளன என்னுடைப் பற்கள்.
உடலின் வலிமையோ மிகவும் உறுதி.
இரண்டு பேர்கள் எதிரெதிர் நின்று
முக்கி இழுப்பினும் அறுக்க முடியா
முறுக்கின நூலை 'முண்டா'வில் கட்டிக்
கையை மடக்கினுல் கண்ட துண்டமாம்.
தாம்புக் கயிற்றை வயிற்றில் தளைந்து
பருத்து விம்மினுல் பட்டெனத் தெறிக்கும்.


இப்படிப் பலமுள என்னுடை உடலின்
ஒவ்வொரு அங்கமும் ஒவ்வொரு கணமும்
என்னுடை இச்சையில் சொன்னது செய்யும்.
உறுப்புகள் அனைத்தும் ஒற்றுமை யாக
எவர்சொன் னாலும் எதையும் என்றன்
உத்தர வின்றி ஒன்றுமே செய்யா.
எதற்கும் என்னுடை ஏவலே கேட்டு
அடங்கி ஒடுங்கி மிகவும் அன்பாய்
அப்படி யிருந்த அவைகளை! யாரோ
கள்ளன் புகுந்து கலைத்துவிட் டானே!
உறுப்புகள் என்றன் உடைமைகள் அன்றே!
அடக்கி ஆள்வதென் உரிமை அல்லவா!
சுதந்திரம் எனக்குச் சொந்தம் இல்லையா!
எவரோ சொல்லும் எதையோ கேட்டு
நல்லஎன் உறுப்புகள் நன்றி மறந்தன;
சொன்னதைச் செய்வது சுத்தமாய் விட்டன.

எண்ணற்ற மணமிக்க எண்ணைகள் தடவி
நித்தமும் பலமுறை நீவிச் சீவி
வாரி முடித்து வளர்த்தஎன் சொந்தக்
கறுத்த மயிரைக் கைகுவித் திறைஞ்சி

'வேண்டாம், வேண்டாம், வேண்டாம்' என்று
கெஞ்சிக் கெஞ்சிநான் கேட்டுக் கொண்டும்
பிறத்தி யாரின் பேச்சையே கேட்டு
ஓசையில் லாமல் ஒவ்வொன் ருகவே
வெள்ளை வெளேரென வெளுத்து விட்டன !
மன்னித்து மீண்டும் மைபூசி அவற்றைக்
கறுப்பாய் இருக்கவே கட்டளை இட்டும்
பூசின கறுப்பையும் புறக்கணித் திட்டு
வெளுத்தே மீளவும் வெளிப்படு கின்றன !
எவர்சொல் கேட்டோ என்சொல் மீறின.
கண்ணெனக் காத்தஎன் சொந்தக் கண்கள்
முன்னே என்னவோ முணுமுணுப் பாகச்
சரியாய்ப் பார்க்கச் சம்மதம் இன்றி
வருத்தம் ஏனோ கண்ணீர் வடித்தன ;
ஆற்றித் தேற்றி அமைதிகள் சொல்லி
கண்ணுடி தந்து கவலை மாற்றினேன்.
மீண்டும் என்சொல் மீறிவிட் டனவே !
பராதீனமாய்ப் பார்வை குறைத்தன.
வயிரக் கடுக்கனும் வாங்கித் தந்தும்
செவிகளும் எனக்குச் செவிடாகி விட்டன !
நித்தமும் பலமுறை நீவிக் கொடுத்து
சளிபிடித் தாலும் சங்கடப் படுவேன்
பூவோ அத்தரோ மூக்குப் பொடியோ
கேட்டதைக் கொடுத்துக் கிருபை செய்தேன்,
மூக்கும் முன்போல் முகருவ தில்லை !
உண்ணவும் தின்னவும் ஓயாது தந்தேன்,
நாக்கும் கூடஎன் நன்றி மறந்ததே !
சுவைப்பதும் குன்றிச் சொல்லிலும் குளறி
பேசக் கூடப் பிரிய மில்லாமல்
மோசம் செய்ய முனைந்து விட்டதே !

கல்லையும் அரைத்தஎன் பல்லுகள் எல்லாம்
சொந்தக் காரஎன் சொற்கே ளாமல்
எங்கோ யாரோ எவர்பின் னலோ
ஒவ்வொன் ருய்ப்பல ஓடிப் போயின !
இன்னும் சிற்சில இருப்பன அவையும்
ஓடிட எண்ணியே ஆடிக் கொண்டுள !
சொல்லிடும் முன்னல் சுறுசுறுப் புடனே
எங்கும் போகிற என்னுடைக் கால்கள்
எழுந்திடச் சொன்னல் விழுந்திடு கின்றன !
நடக்கச் சொன்னல் முடக்கு கின்றன !
ஓடச் சொன்னல் உதறுகின் றனவே !
எதைச் சொன்னலும் ஏட்டிக்குப் போட்டி !
என்னுடைக் கால்களா ? எவருடைக் கால்கள் !
தென்ன மரத்தின் தேங்காய் களையும்
கதறி விழும்படிக் கல்லால் அடித்து
ஏவின கணமே எதையும் செய்தன
சொந்தஎன் கைகளும் சொல்வதைச் செய்ய
மறுக்கின் றனவே என்ன மாயமோ !
எதையும் என்னுடை இஷ்டப் படிக்கே
சகலமும் செய்திட சர்வாதி காரி
நானே என்றுதான் நம்பியிருந்தேன்.
எனக்கே சொந்தமாய் என்னுடன் உதித்து
நானே ஊட்டி நாளும் வளர்த்தஎன்
உறுப்புகள் கூட ஒன்று விடாதுஎன்
அதிகா ரங்களை அலட்சியம் செய்தன !
எவரைப் பொறுத்தோ என்னை மறுத்தன.
சுதந்தரம் கெடுத்துச் சூழ்ச்சிகள் செய்திடச்
சேத்தாளி யாரோ சேர்ந்திருக் கின்ருன் !
ஆசைகள் காட்டி அவைகளைக் கெடுக்க
எவருமில் லாமலா இப்படி நடக்கும் ?

கட்டுக் கலைத்தஅக் கள்ளனே எனக்குக்
காட்டுவார் உண்டோ காட்டுவா ராஞல்
விடுவெனே அவனை விலங்குகள் போட்டு
உள்ளே பூட்டி ஒருநாளும் விடேன்
திருடனைப் பிடித்தவர் தெரிவிக்க வேண்டும்
விளம்பரப் படுத்திய விண்ணப்பம் இதனைப்
படிப்பவர் தேடிப் பாருங்கள் அவனை.



மங்களாம்பாள்

மங்களம் மிகமிக மகிழ்தரும் பெண்மணி
அழகும் அறிவும் அடக்க ஒடுக்கமும்
பெண்மைக் கியல்பாம் பெருமைகள் என்பன
ஏறத்தாழ எல்லாம் உள்ளவள்.
வர்ணனை என்று வார்த்தைகள் பொறுக்கி
உபமா னங்களை ஓடித் தேடி
கற்பனை செய்திடும் கஷ்டமே வேண்டாம்.
மங்களம், பார்த்தவர் மனதைக் கலக்கும்
அழகியென் றுரைத்தால் அதுவே போதும்.

கவிதை என்கிற காரணம் காட்டி
ஆசையை நிரப்ப அதையும் செய்வோம்.
நீட்டம் குறைந்து அகலம் நிரந்து
கூர்மை யில்லாத கோழிமுட் டையை
ஒத்தது அவளுடை முகத்தின் உருவம்.
மலரப் போகிற ரோஜா மடலின்
வெளியே தெரிகிற சிவந்த வெண்மையில்
சந்தனக் குழம்பின் சம்பந்த மாகிய
மஞ்சள் கலந்தது மங்களம் மேனி.
இருட்டைப் பிடித்துக் கம்பியாய் இழுத்து
கம்பியின் இயல்பாம் கடினம் போக்கி
பட்டுநூல் போன்ற பதமுண் டாக்கி
வளைத்து நெளித்து வாசனை பூசி
கருப்புடன் வெகுசிறு நீலமும் கலந்து
சிறந்த கைத்திறச் சித்திரக் காரனும்
சரியாய் அதற்கினை சாயம் குழைப்பது

முடியா தெனும்படி செய்து முடித்த
அழகுடன் நீண்டது அவளுடை கூந்தல்.
நெற்றியை ஒப்பிட நினைப்பில் வருகிற
உபமானம் எதுவும் உபயோக மில்லை.
குங்குமப் பொட்டினைத், தங்கத் தகட்டிடை
சிவப்புக் கல்லெனச் சித்திரித் தாலும்
தகதகப் பாயினும் தளதளப் பில்லை.
மைதீட் டாமலும் மைமை நிறைந்து,
கூரிய பார்வையில் குளிர்ந்து நோக்கி,
கருணை பொழிவன அவளுடை கண்கள்.
குட்டையோ கட்டையோ கூர்மையோ அல்ல,
முத்தோ நத்தோ மூக்குத்தி வயிரமோ
எதுவுமில் லாமல் இயற்கையின் அழகு
இதுஎனக் காட்டும் எழில்மிகும் நாசி.
இலைகளில் மறைந்த மலர்கள் இவையென
கறுத்த ரோமம் கவிந்து மறைக்கக்
காதில் இருசிறு கம்மல்கள் மட்டும்
அறியா வயதில் அன்னை செய்வித்த
தொளைகளை மூடத் தோதான தன்றி
அவளுக்கு அவற்றுல் அழகென்ப தில்லை.
எந்த நேரத்திலும் எவரொடு பழகினும்
முறுவல் காட்டவே முனைவன போன்ற
அவளுடை உதடுகள், அளவோடு அமைந்து,
மாலை, காலை, மத்தியா னம்எனும்
நேரம், காலம், நியதியில் லாமல்
இச்சைப் படுகிற எத்தனை தரமும்
விரும்பிய போதெலாம் விரிந்து குவியும்
தனமகள் வசிக்கும் தாமரை இதழ்கள்.
பல்லின் வரிசை, பார்க்கப் பார்க்கத்
தெவிட்டா இன்பம் தெரியச் செய்திடும்.

முத்தும் பாலும் முழுநிலா ஒளியும்
மல்லிகை முல்லையும் மற்றுள இனமும்
வெண்மையில் தோற்பினும் வெல்கிட முடியா
அத்துணை வெண்மை அவளது பல்லொளி.
மங்களம் பேசினுல் மதிநிறைந் திருக்கும்.
பேச்சைக் கேட்டவர் பிரமித்து மகிழ்வர்.
பாடிடக் கேட்பினை பணியெலாம் மறந்து
குழலிசை கேட்ட கோபிகள் போலச்
சொக்கி மயங்கிச் சுதந்தர மிழந்து
தலையை ஆட்டித் தாளமும் போடுவர்.

அங்க வர்ணனை அதிகமாய் வேண்டாம்.
முகத்தொடும் பாட்டொடும் வர்ணனை முடிப்பம்.
உறுப்புகள் அனைத்தையும் ஒன்றுஒன் றுகத்
தனித்தனி சொல்லல் தமிழ்வழக் காகும்.
அங்கம் குறைந்திட அலங்கா ரம்சொலல்
அமங்கலம் என்பது ஆன்ரோர் கருத்து.
பண்டைய புலவர்கள் அப்படிப் பாடினர்,
தப்போ சரியோ இப்போது வேண்டாம்,
காலப் போக்குடன் கலந்திட வேண்டும்.
அங்குலம் நான்குடன் ஐந்தடி உயரம்.
உயரத் துக்கான கனமும் உள்ளவள்.
பட்டோ ஜரிகையோ கட்டுவ தில்லை,
ஆசையும் இல்லை ; அவசியம் அல்ல.
பெண்களிற் பலபேர் பெரிதும் தவருய்
மினுமினுப் பாகிய ஜரிகையே மிகுந்த
பளபளப் பாகிய பட்டாடை அதுதான்
அழகைத் தருமென ஆயிரக் கணக்கில்
பணத்தைக் கொட்டிப் பட்டாடை வாங்கி,
கட்டுவ தெல்லாம் ஜரிகையைக் காட்டவே

என்கிற நோக்கமே எண்ணத்தில் நிலவ
கோணலும் மாணலும் குறுக்கும் மறுக்குமாய்
உடையை அணிந்து உடலைச் சுற்றிலும்
ஒருஜாண் தூரம் உப்பல் உண்டாகி
பண்ணுடை சுற்றிய பலாமரம் போல
முறுக்கிய பட்டின் முடமுடப் பாலும்
வணங்கா ஜரிகையின் வடவடப் பாலும்
குனியவோ, நிமிரவோ, கூப்பிட்ட உடனே
திரும்பிப் பார்க்கவோ திண்டாடு கின்றதும்
எந்திரப் பதுமைபோல் எடுத்தடி வைத்தும்
வேலைகள் செய்யப் புடவை விடாமல்
குடும்பக் காரியம் செய்யவும் கூசி
உட்காரக் கூட ஒதுக்கிடம் தேடுதல்
பார்க்கிறோம்; மங்களம் பரிகசிப் பாளதை.
கதராடை, தப்பினல் கைத்தறிப் புடவையை
கொசுவி, முறுக்கிக் குழைய வணக்கி
உடலோடு ஒன்றுக ஒட்ட உடுத்து
தாயார் மகிழத் தந்தையும் புகழக்
குடும்ப வேலைகள் குறைவறச் செய்வாள்.
பொழுதுக்கும் வேலைகள் பார்த்த போதிலும்
கட்டிய சேலை கலைந்து விடாமல்
வகிர்ந்த வாக்கின் வடிவு கெடாமல்
பின்னிய கூந்தல் பிரிந்து விழாமல்
அணிந்த குங்குமம் அழிந்து கெடாமல்
புதுமை விடாத புஷ்பம் போல்வாள்.
மகளிர் பள்ளியில் மாணவி யாக
எஸ்.எஸ். எல்.ஸி. என்கிற பரிட்சை
மாகாண முழுதிலும் 'மார்க்கில்' முதலாய்
பட்டமும் கீர்த்தியும் பரிசிலும் பெற்றாள்.
மேலும் படிக்கவே மிகவும் ஆசை.

ஆயினும் தாயார் அனுமதி தந்திலள்.
அதற்கு வேண்டிய பணமின்மை அறிந்தும்
கல்வியே மக்களின் செல்வமாய்க் கருதும்
தந்தை அதற்குச் சம்மதம் தந்தார்.
கடன்பட் டாயினும் கல்லூரி அனுப்பி
மகளிர் விடுதியில் மகளைச் சேர்த்திட
மகாதேவரும் மகிழ்வுடன் இசைந்தார்.
ஆயினும் தாயார் அதற்கு ஒப்பிலள்
வரும்படி யின்றிப் பெரும்படித் தாகிய
செலவை நினைப்பது சீரழி வென்றே
ஜானகி அதனைத் தடுத்து விட்டாள்.
இப்படி யாகநம் இங்கித மங்களம்
ஊருக் கெல்லாம் ஒருபெரும் பேச்சாய்
பதினறு முடிந்து பதினேழாம் ஆண்டு
அரும்பும் அழகொடு அமிழ்தெனத் திகழ்வாள்

வரலாறு

மங்களம் தகப்பனார் மகாதேவர்,
தென்மொழி வடமொழி இரண்டும் தேர்ந்தவர்
ஆங்கில மொழியிலும் ஆழ்ந்த அறிஞர்
பள்ளிப் படிப்பினில் பாத பி.ஏ. அவர்.
தரித்திரம் பிடித்த 'தாலூக் காபீஸ்'
குமாஸ்தா வேலையில் குலைந்து போனவர்.
பி. ஏ. முடிக்குமுன் பிதா இறந்ததால்
குடும்ப வறுமையின் கொடுமையை நீக்க
உடனே தான்ஒரு உத்தியோ கத்தினைத்
தேடிட வேண்டிய தேவையுண் டானது.
வெவ்வே றிடங்களில் வேலையைக் கோரி
விண்ணப்பம் அனுப்பி வீட்டோ டிருந்தார்.
தாலூகா வேலைதான் தலையில் விடிந்தது.

அறிவுக் கேற்ற அலுவல் கிடைப்பதோ
படிப்புக் குகந்த காரியம் பார்ப்பதோ
விரும்பிய படிக்கொரு வேலையில் சேர்வதோ
தகுதியைப் பற்றிய தன்மை யுள்ளதாய்
உத்யோகம் அடைவதோ ஊதியம் பெறுவதோ
இந்திய நாட்டில் இப்போது இல்லை.
இலக்கிய ஞானம் இணையிலா ஒருவன்
கல்வியே வேண்டாக் காரியம் செய்வதும்...
கணித சாஸ்திரம் கைதேர்ந்த ஒருவன்
எண்ணிக்கை வேண்டா வேலையில் இருப்பதும்...
ரஸாயனத்திலே ரஸனை மிகுந்தவன்
கச்சேரி மேஜையில் கவிழ்ந்து கிடப்பதும்...
சங்கீத வித்தையில் சமனிலாக் கலைஞன்
தபால் ஆபீஸ் தந்தி யடிப்பதும்...
சித்திரக் கலையில் கைத்திறம் சிறந்து
பத்திரம் 'ரிஜிஸ்டர்' பதிவு செய்வதும்...
சத்தியம் தவிரா உத்தம குணவான்
வக்கீல் தொழிலில் வருத்தப் படுவதும்...
கொல்லா விரதமே கொண்டுள ஒருவன்
பட்டாள வீரனைப் பதிந்து கொள்வதும்...
விஞ்ஞா னங்களில் விருப்புள இளைஞன்
'டிக்கெட் கலெக்டராய்'த் திண்டாட நேர்வதும்...
புத்தகம் படிப்பதில் பித்துள்ள புலவன்
புக்கிங் கிளார்க்காய்'ப் புழுங்கு கின்றதும்...
உருட்டி மருட்டத் தெரியாத ஒருவன்
போலீஸ் காரனைப் பொழுது போக்குவிப்பும்...
திட்டிப் பேசவும் தெரியாத நல்லவன்
அமீனா வேலையில் அடிபட்டு வருவதும்...
கள்ளு சாராயம் கடிந்திடும் கருத்தன்
கலால் வேலையில் 'டிகிரி' கணிப்பதும்...

மாமிச உணவை மறுக்கும் மனத்தான்
ஆட்டுக் கறியையும் மாட்டுக் கறியையும்
சுத்தம் பார்த்ததில் முத்திரை குத்தலும்...
இப்படிப் பற்பலர் இடந்தடு மாறினர்
உணவைத் தேடும் ஒன்றுக் காகவே
சிக்கின வேலையில் சிக்கிக் கொண்டு
வருந்துமிந் நாட்டின் வழக்கம் போலவே
மங்களம் தந்தை மகாதேவரும்
விரிந்த கல்வியும் வேதாந்த நோக்கும்
சுதந்தர ஆர்வமும் சுசிகர எண்ணமும்
சாதிச் சடங்கு சழக்குகள் ஒழித்து
சமரசம் உணர்ந்த சன்மார்க்க நெறியும்
கற்பிதம் கடந்த அற்புதப் பிறவியாம்
காந்தியின் வாழ்வில் கரையிலாக் காதலும்
உள்ளவர் ஆனதால் ஒழுக்க நீதியாய்
கதராடை யல்லால் வேறுடை கட்டார்
நித்தமும் நூற்பதை நியமமாய்க் கொண்டு
அகிலம் முழுவதும் அஹிம்ஸா தர்மம்
நிலவிட விரும்பும் நித்தியத் தியானமும்
அன்பும் அருளும் அறமும் அறிந்த
பொதுநல சேவை புரிவதில் ஆசையும்
முதலிய சிறப்புகள் முற்றுறப் பெற்றும்
குமாஸ்தா வேலையில் குறுகிக் கிடந்தார்.
பதினேழு வருஷம் வேலை பார்த்தபின்
எழுபது ரூபாய் சம்பளம் என்றும்
பஞ்சப் படியென பதிஞ்றும் கூட்டி
வருகிற பணம்தான் முக்கிய வருவாய்.
பூர்வீக சொத்துகள் புஞ்சையில் கொஞ்சம்
எங்கோ இருப்பதை எவரோ பார்த்துக்
குத்தகைக் காரன் கொடுத்தது லாபம்.

மகாதேவரின் மனைவிக்கு அண்ணன்
உயர்ந்த சம்பள உத்யோ கஸ்தராய்
மைத்துனர் ஒருவர், மனம்வரும் போது
தங்கையைக் கருதித் தருகிற உதவிகள்
குடும்பத் தொல்லைகள் குறைவதற் குதவும்.
சம்பளம் தவிர 'கிம்பளம்' கருதிடா
மனச்சுத்த முள்ளவர் மகாதேவர்.
பெண்கள் நான்கு, பிள்ளைகள் மூன்று,
தள்ளாத வயதான தாயார், அத்துடன்
அமங்கலி யாய்விட்ட அம்பிகை என்னும்
தங்கை ஒருத்தி தன்னுடை மக்கள்
மூன்று பேருடன் மூன்றரை வருஷமாய்
மகாதேவரின் மனையிலே வாசம்.
குடும்பமோ பெரிது வருவாய் குறைவு
கஷ்ட ஜீவனம் என்பதே கண்டது.
அப்படி யிருந்தும் அறிவின் பெருமையால்
மகாதேவரோ மனந்தள ராமல்
குதூகலமாகவே குடித்தனம் நடத்தி
தன்னுடை மக்களும் தங்கை மக்களும்
கவலையில் லாமல் கல்வி பயின்றிடச்
செய்யத் தக்கன குறைவறச் செய்து
கொடுமைசேர் வறுமையும் கூசிட வாழ்ந்தார்.

சங்கரலிங்கம்

கண்ணைக் கவரும் கட்டழ குடைய
ஆண்பிள்ளை யென்றுல் அவனைச் சொல்லலாம்.
இருண்ட கேசமும் இடம்பெரு நெற்றியும்
கருத்த புருவமும் கருணைசேர் விழிகளும்
கூரிய பார்வையும் குறையிலா நாசியும்
சிரிப்புத் தவழும் சிவந்த உதடுகள்
பளிங்கினும் வெள்ளிய பற்களின் வரிசையும்
திரண்ட தோள்களும் திடமுள்ள கைகளும்
பரந்த மார்புமாய்ப் பார்வைக் கினியநல்
சிங்கார வடிவினன் சங்கர லிங்கம்.
'பி.ஏ. ஆனர்ஸ்' பட்டம் பெற்றவன்
உயர்ந்த குணமும் ஒழுக்கமும் உள்ளவன்.
பெரியோ ரிடத்தில் பிழையிலாக் குணவான்.
அனுஷ்டா னங்களை அலட்சியம் செய்யான்.
துன்பம் நேர்ந்தவர் துணையென நிற்கத்
தன்னலம் துறக்கும் தன்மை உடையவன்.
தேச பக்தியில் தீவிரம் கொண்டவன்.
அடிமை வாழ்க்கையில் அருவருப் புள்ளவன்.
அச்சம் என்பதை அறவே மறந்தவன்.
சத்தியம் தவரு உத்தமன்; ஆனல்
சாத்வீகம் என்பதில் சந்தேகம் உள்ளவன்.
மகாத்மா காந்திமேல் மட்டிலா மதிப்புளான்.
''பூமியில் இப்படிப் புனிதன் ஒருவனை
பார்த்ததும் இல்லைப் படித்ததும் இல்லை
கட்டுக் கதையிலும் கற்பனை செய்திட
முடியா தெனும்படி முற்றிலும் புதுமைசேர்

மகாத்மா காந்தி மாபெரும் பிறவிதான்;
வழிபட்டு, தினமும் வணங்கத் தக்கவர்.
ஆயினும் அவர்தரும் அஹிம்ஸா மார்க்கம்
உலகத்தின் இயல்புக்கு ஒவ்வாது சற்றும்.
அவரைத் தவிர அப்படி நடப்பது
எவருக் காயினும் என்றும் முடியுமா ?
மகாத்மா சொல்வது மாபெரும் விஷயம் ;
ஞானியும் யோகியும் நல்லது எனலாம் ;
அவர்களும் கூடச் செய்வது அரிதாம்.
பண்டிதர் யாவரும் படித்து மகிழலாம்
பாமர மக்கள் அறிவதும் பாரம்.
கோணலாய்க் கொண்டு குற்றமே நிறைந்த
தீமையே அதிகமாம் என்பது திண்ணம்.
அஹிம்சைப் பேச்சால் அச்சமே மிகுந்திடும்.
கொல்லா விரதம் கோழைத் தனமாய்க்
கொடுமைக் காரர் கொலைசெய்ய வரினும்
கற்பைக் கெடுக்கக் கருதிடும் போதும்
மானம், மக்கள், மனைவியைக் காக்கவும்
ஆண்மையும் ஆற்றலும் அறவே இழந்து,
பேடித் தனமாய் ஓடி ஒளித்தலே
அஹிம்சைப் பேச்சால் அடைவார் மக்கள்.
கத்தி முனையினுல் நம்மைநாம் காத்திடக்
கொல்லவோ சாகவோ கூச்சப் படாத
ஆண்மையே நமக்கு மிகவும் அவசியம்.
ஆணெனப் பிறந்த அனைத்துள பேர்க்கும்
தேக வல்லமை மிகமிகத் தேவை.
ஆயுதப் பழக்கமும் அத்யா வசியம்
ராணுவப் பயிற்சியைப் பேணுதல் கடமை''
என்பன போன்ற எண்ணங் களையே
சங்கர லிங்கம் எங்கும் பேசுவான்.

பேச்சில் இப்படிப் பேசினும் இயல்பாய்ச்
சங்கர லிங்கம் சாந்தமே மிக்கவன்.
பழகிய எவரொடும் பக்ஷமாய் இருப்பான்.
அடிக்கவே வரினும் அமைதியைக் கைவிடான்.
கோபித்த எவரொடும் குளிரப் பேசுவான்.
பகைமை என்பதைப் பாராட்ட மாட்டான்.
துன்பம் பிறர்க்குத் துளிகூட எண்ணுன்.
இரக்கம் கொள்வதே இயல்பாக உள்ளவன்.
உபகாரம் செய்வதே உயிர்வாழ்க்கை என்பவன்.
சொந்த வாழ்க்கையில் இத்துணைச் சுத்தமாய்
சாந்தமே காட்டும் சங்கர லிங்கன்
தேச பக்தியின் தீவிரத் தாலோ
பொதுநலப் பேச்சைப் பேசும் பொழுதெலாம்
வீரமும் தீரமும் வெல்வதும் கொல்வதும்
ஆண்மையும் ஆற்றலும் அழித்தலும் ஒழித்தலும்
அஞ்சாமை, அசராமை, கெஞ்சாமை ஆகிய
போர்முறைப் பேச்சே பொழுதும் பேசுவான்.
வனப்பும் வளமும் வலிமையும் வாய்ந்து
இருபத் திரண்டாம் வயதான இளைஞன்
சந்தோஷ மூட்டும் சங்கர லிங்கன்.

வரலாறு

வயல்களிற் சிறந்த வசந்த புரியில்
சீரும் சிறப்பும் செல்வாக்கு முள்ள
குறைவிலாச் செல்வர் கோபால கிருஷ்ணர்
சங்கர லிங்கனின் தந்தையர் ஆவார்.
பரம்பரை கொஞ்சம் பணமுள்ள குடும்பம்.
ஜவுளிக் கடையும் தானிய மண்டியும்
இரும்பு வர்த்தகமும் இவருக்கு உண்டு.
சண்டைக்கு முன்னுல் சாதா ரணம்தான்.

வந்தது யுத்தம் தந்தது யோகம்.
வெள்ளைச் சந்தையோ கள்ளச் சந்தையோ
எங்கே இருந்துதான் எப்படி வந்ததோ
கொள்ளை கொள்ளையாய்க் குவிந்தது செல்வம்.
உப்பா ? புளியா ? உளுந்தா ? துவரையா ?
கடுதாசி தானே கணக்கென்ன அதிலே.
சண்டைக்கு முன்னுல் சகலமும் சேர்ந்து
முப்பது ஆயிரம் முழுசாக இல்லா
அவருடை ஆஸ்தி ஐந்தே ஆண்டில்
எண்பது லக்ஷம் எப்படி ஆனதோ !
எவரும் அறியார், ஈசனும் கூட
அறிவரோ என்பது ஐயப் பாடுதான்.

கோபால கிருஷ்ணர் குதூகல மானவர்.
இரக்கமோ ஈகையோ எண்ணத்தில் இல்லார்.
ஆயினும் பலவித ஆடம் பரங்களால்
புண்ணிய வான்எனும் புகழுடன் வாழ்ந்தார்.
தன்னுடை பேரால் தண்ணீர்க் குழாய்கள்,
மனைவியின் பேரால் மாட்டுத் தொட்டிகள்,
பிதாவின் பெயரால் பெரியதோர் சத்திரம்,
அன்னையின் பெயரால் ஆலய தருமம்,
இப்படிப் பட்டன இடையிடை செய்து
விளம்பரம் பெறுவதில் விருப்பம் உள்ளவர்.
உத்தியோ கஸ்தரை உபசாரம் செய்து
சர்க்கார் இடங்களில் சலுகை பெற்றிடத்
தாராள மாகவே எதையும் தருவார்.
எவருக் காயினும் எதைச் செய்தாலும்
பணமே குறியாய்க் காரியம் பண்ணுவார்.
சிறுமீன் வீசி உறுமீன் பிடிப்பதில்
செப்பிடு வித்தைகள் செய்திட வல்லவர்.

ஊரில் மிகவும் உயர்ந்த மனிதராய்க்
குறைவில் லாதவர் கோபால கிருஷ்ணர்.
அவருடை மனைவி அன்னபூரணி ; அவர்
உயர்ந்த குணவதி ; உத்தமி எனலாம்.
ஆடம் பரங்களில் ஆசையில் லாதவள்.
ஏழை எளியவர் எதைக் கேட்டாலும்
தன்னுல் ஆவதைச் சொன்னுல் போதும்,
உடனே கொடுத்து உவக்கும் உத்தமி.
கொழுத்தவர்க் கீவார் கோபால கிருஷ்ணர் ;
அலுத்தவர்க் கீவது அன்ன பூரணிதான்.
வருவாய் கருதியே தருவார் கணவர்,
புண்ணியம் ஒன்றையே எண்ணுவாள் மனைவி.
ஏனைய நாடுகள் எப்படி யாயினும்
தமிழ்நா டதனில் தானமும் தருமமும்
புண்ணியம், விரதம், தெய்வம், பூசனை
ஆகிய இவற்றை ஆடவர் மறப்பினும்
பெண்களே இன்னமும் பெரிதும் காப்பவர்.
இன்றைக்கும் தினந்தினம் இத்தமிழ் நாட்டில்
பிச்சைக் காரர்கள் பிரியத் துடனே
குறைகளைச் சொல்லிக் கூவும் போது
'அம்மா', 'தாயே', 'ஆத்தா', 'ஆச்சி'
என்பன கூவி இரப்பதே சாட்சி.
ஐயா மறுப்பினும் அம்மாள் மறுத்திடாள்.
ஒருபிடி அன்னமோ உப்பிட்ட கஞ்சியோ
ஐயமிட் டுண்பதே அருந்தமிழ்ப் பெண்மை.
அதனுல் தானே என்னமோ அறியோம்
தமிழன் இல்லறம் தனிச்சிறப் புளதாய்
வறுமையும் அடிமையும் வருத்திடும் நாளிலும்
கொடுமைகள் குறைந்து குலவிடச் செய்வது.
வாழிய தமிழ்தரும் வண்மைசேர் பெண்மை.

'கோபால கிருஷ்ணரின் குபேரச் செல்வம்
ஆக்கம் பெற்றது அன்னபூ ரணியினால்'
என்றுதான் ஊரில் எவரும் பேசுவர்.
சங்கர லிங்கம் தலைச்சன் குழந்தை
அவனுக்குப் பிறகு அம்புஜம் என்கிற
இனியநற் பெண்மணி இரண்டாம் பேறு.
ஆணொன்று பெண்ணொன்று அவர்களே மக்கள்:
அம்புஜம், வெகுநல்ல அன்பான வாலிபன்
பாரிஸ்டர் ஆகிய பரமேச் வரனை
மணந்து கொண்டனள் மதுரையில் வாசம்.

ஊர் மாறினால்
உறவு மாறுமா?

ஊர் மாறுதல்

மதிமுகச் சிறுபெண் மங்களம் என்பவள்
ஏழாம் வயதாய் இருக்கிற போது
விருத்த புரத்தில் வேலையில் இருந்த
மகாதேவரை மாற்றுதல் செய்திட
கோபால கிருஷ்ணர் குடியிருப் பாகிய
வசந்த புரிக்கு வந்திட நேர்ந்தது.
உடனே வேலையை ஒப்புக் கொளும்படி
அவருக்கு வந்தஅவ் வுத்தர வதனால்
வீடுபார்க் காமல் வேற்றூர் அதற்குக்
குடும்பம் முழுதையும் கூட்டிச் செல்வது
தகாது என்பதாய்த் தான்மட்டும் தனியே
வசந்த புரிக்கு வந்துசேர்ந் துடனே
உத்தியோ கத்தினை ஒப்புக் கொண்டபின்
பதினைந்து நாளாய் பலமுறை அலைந்து
ஊருக்கு அப்பால் ஒதுக்கான பகுதியில்
கூரை வேய்ந்தது குடிசை கிடைத்தது.
அதற்கும் வாடகை மிகவும் அதிகம்.
இரண்டே ரூபாய் என்னினும் கூட
தகுதி யில்லாதஅத் தட்டுவீட் டுக்குப்
பனிரண்டு ரூபாய் பணம்குறைந் தாலும்
முடியாது என்றும், முன்பண மாகவும்
மூன்று மாதப்பணம் வாடகை முழுதும்
தரவேண்டும் என்றும் தயங்காது கேட்க,
வழிவேறு காணூர் வாடகைக் கிசைந்து
முன்பணம் கேட்டதை முழுதும் கொடுத்து
அந்தக் குடிசையை அமர்த்திக் கொண்டனர்.

ஒருமாத காலம் ஒண்டியா யிருந்து
ஓட்டலில் உண்டுஅக் குடிசையில் உறங்கிக்
குடும்பத் தார்களைக் கூட்டிக் கொணர
ஒருவாரம் ஓய்வில் ஊருக்குப் போனர்.
அவர்போன பின்பு ஐந்துநாள் சென்று
எவர்செய்த தீங்கோ எதனு லேயோ
வாடகை வீடும் அதே வரிசையில்
எழுபது மனைகளும் எரிந்து போயின.
குடும்பம் முழுதையும் கூட்டிக் கொண்டு
பெட்டியும் பேழையும் கட்டிலும் பிறவும்
சாமான் என்கிற சகலமும் தொடர
நோயால் வருந்திய தாயா ரோடும்
வசந்த புரிக்குள் வந்தார் மீண்டும்.
வெந்துபோய்க் கிடந்த வீட்டைக் கண்டார்,
தங்கவும் இடமிலை தெருவில் தவித்தார்.
சத்திரம் சாவடி சமீபமா யில்லை.
உச்சி வேளையின் உக்கிரம் எரிக்கப்
பசிநே ரத்தின் வேகமும் பலக்கக்
குழந்தைக ளெல்லாம் புழுங்கிக் குழைய
வந்தவர் யாவரும் வண்டியோ டிருக்க
மகாதேவரோ மனம்மிக நொந்து
நாலா பக்கமும் ஓடினர் நாடினர்.
இறங்கி நிற்கவும் இடமில் லாமல்
துடித்துப் பொடித்துக் களைத்துத் துவண்டு
வியர்த்து வெறித்து-வெருண்டு மருண்டு
வேதனை யுற்றார் வீதியில் திகைத்து.
பார்த்தவ ரெல்லாம் பரிதபித் தார்கள்.
கண்டவர் யாவரும் கவலையுற் றார்கள்.
அங்கே இருந்தோர் அனைவரும் ஏழைகள்,
இருப்பிடம் கொடுக்க என்ன செய்வார்கள் ?

அவர்களில் மிகவும் அனுதாபி ஒருவர்
மகாதேவரின் அருகினில் வந்து
ரகசியம் போல வெகுவிந யத்துடன்
"வாருங்கள் என்பின் வழிகாட்டு கின்றேன் ;
சிசுக்கள் எல்லாம் பசிக்குப் பறக்க
இப்படித் தெருவில் ஏங்கிட வேண்டாம்.
ஊருக் குள்ளே உயர்ந்த மனிதர்
கோபால கிருஷ்ணர் குறைவிலாச் செல்வர்,
அங்கே போனுல் அவதிகள் தீரும்
சத்திரச் சாவியைக் கேட்டால் தருவார்.
அங்கே சிலநாள் தங்கி யிருக்கலாம்
வீடு கிடைத்தபின் வேறிடம் போகலாம்.
அவர்தப்பி னலும் அவருடைய மனைவி
புண்ணிய வதியிடம் சொன்னற் போதும்.
வேண்டிய எதையும் விருப்புடன் செய்வார்"
என்றதைக் கேட்டு உடனே இசைந்து
வண்டிகள் நான்கும் பின்னுல் வரும்படி
கோபால கிருஷ்ணரின் கோமனை நாடி
மகாதேவரும் மகிழ்வுடன் போனர்.
ஒருமைல் சென்றபின் உயர்ந்த மாளிகை
அரண்மனை போன்றதின் ஆசார வாசலில்
மோட்டார் வண்டிகள் முன்னுல் நின்றன.
'கோட்டும் பூட்டுமாய்' கோபால கிருஷ்ணர்
அலங்காரம் மிகுந்த உடைகளை அணிந்து
வண்டியில் ஏறிட வெளியில் வந்தார்.
துணையாக வந்தவர் தூண்டி விட்டதால்
அவசரம் கருதி அவரிடம் அணுகி
மகாதேவரும் வந்ததைச் சொன்னர்.
கோபால கிருஷ்ணர் குனிந்த படியே
"கலெக்டர் துரையைக் காணப் போகிறேன்

இப்போது சிறிதும் அவகாசம் இல்லை
பேச்சுக்கள் இருந்தால் பின்னல் பார்ப்போம்"
என்றதும் உடனே வண்டியில் ஏறினர்
மோட்டார் காரும் முடுகி மறைந்தது.
மகாதேவரோ மனமுடைந் தவராய்
செல்வச் செருக்கின் செய்கையைக் கண்டு
வாய்பே சாமல் வருத்த முற்றார்.
கலெக்டரைப் பார்க்கக் கணவர் போவதை
கவனித்துக் கொண்டு, கதவண்டை நின்று
கணவர் சொன்னது காதில் விழுந்த
அன்ன பூரணி அம்மாள் உடனே
மகாதேவரை மனைக்குள் அழைத்து
"எந்தஊர் நீங்கள்? எங்குவந் தீர்கள்?
விசனம் எதனல்? வேண்டிய தென்ன?
கூச்சப் படாமல் கூறுங்கள்" என்றாள்.
மகாதேவரும் மிகவும் மகிழ்ந்து
வரலாறு முழுவதும் வரிசையாய்ச் சொன்னார்.
அதற்குள் அங்கே அவருக்குப் பின்னல்
வரச்சொன்ன வண்டிகள் வந்து சேர்ந்தன.
மகாதேவரின் நற்குண மனைவி
ஜானகி அம்மாள் சங்கோச மின்றி
எவரொடும் சீக்கிரம் பழகும் இயல்பினள்;
வண்டிவிட் டிறங்கி உள்ளே வந்தாள்.
அன்ன பூரணியின் அருகினிற் சென்று
பழகின மனிதரைப் பார்த்தது போல
வந்தனை புரிந்து வணக்கம் செய்தாள்.
குறுகுறுப் பாகிய குழந்தைகள் சூழ
வாடின மேனியாய் வணங்கி நின்றவள்
மகாதேவரின் மனைவியென் றறிந்து
அன்னபூ ரணியின் அன்புகள் கிளர்ந்து

பெண்மனக் கருணை பின்னும் பெரிதாய்
வரலாறு, கேட்டது வரையிலும் நிறுத்தி,
வந்தவர் யாரையும் வண்டிவிட் டிறக்கி
சாமான் மூட்டைகள் சகிதம் அவர்களை
வீட்டில் இருத்தி விருந்தும் ஊட்டினள்.
அன்னபூ ரணியின் அலங்கார மாகிய
மாளிகை வீட்டின் மற்றொரு பகுதியில்
தெரிந்தவர் வந்தால் இருந்து போகவும்
வீட்டில் நடக்கும் விசேஷங் களுக்கு
பலபேர் வருபவர் படுத்துக் கொள்ளவும்
நான்கு வீடுகள் நல்லவை உண்டு;
எப்போதும் அவைகள் காலியா யிருக்கும்.
அவைகளில் ஒன்றில் அன்றே அவர்களைக்
குடிபுகச் செய்து வேணவை கொடுத்து
"வாடகை வீடு கிடைக்கிற வரைக்கும்
அதிலே இருங்கள் அகப்படா விட்டால்
நிரந்தர மாகவும் நீங்கள் இருக்கலாம்"
என்றுஅவ் வுத்தமி இன்புறச் சொன்னள்.
மகாதேவரும் மகிழ்ச்சியில் மூழ்கினர்.

கலெக்டரைப் பார்த்தவர்

காரியம் கருதிக் கலெக்டரைப் பார்த்த
கோபால கிருஷ்ணர் குறித்த வேலையில்
தனக்கு வேண்டிய 'தஸ்தா வேஜு'கள்
தாசில் தாரிடம் தங்கிவிட் டதனல்
'தாலூக் காபீஸ்' தயவை நாடிட
வெறுங்கை யோடு வீடு திரும்பினர்.
அன்னபூ ரணியோ அவரிடம் ஒன்றும்
வீடுவிட் டதையும் விளம்பிட வில்லை.
தாலூக் காவில் தங்கி யிருக்கிற

கட்டுகள் தம்மை கலெக்டருக் கனுப்ப
தாசீல் தாரைத் தரிசனம் செய்துக்
கும்பிடப் போகுமுன் கோபால கிருஷ்ணர்,
குறிப்பிட்ட கட்டின் குமாஸ்தா அவரை
வழக்கம் போலவே வசமாக் கிக்கொளல்
நல்லது என்பதில் நம்பிக்கை உள்ளவர்.
அரைக்கா சாயினும் அரசாங்கச் சம்பளம்
வாங்கும் எவரையும் வந்தித்து வாழ்த்திக்
காரியக் குறியுடன் கருணையும் காட்டுதல்
கோபால கிருஷ்ணரைப் போன்றவர் கொள்கை.
அந்தப் படிக்கவர் அடுத்தநாள் காலையில்
தாலூக் காபீஸ் தனேச்சென் றடைந்து
குறிப்பிட்ட குமாஸ்தா எவரெனக் கோரினர்.
இவரிடம் அடிக்கடி இனம்வாங்கிடும்
சேவகன் கந்தன் வணக்கம் செய்துடன்
கூட்டிச் சென்றான் குமாஸ்தா அவரிடம்.
தம்முடை இடத்தில் தலைநிமி ராமல்
காரியம் செய்வதில் கருத்தா யிருந்த
மகாதேவரே மற்றவர் கோரிய
தஸ்தா வேஜாகள் தம்மிடம் இருக்கும்
அதிகாரி யாகிய அந்தக் குமாஸ்தா
காலடி ஓசை காதில் பட்டதும்
நிமிர்ந்து பார்த்தார், எதிரே நின்றுள
கோபால கிருஷ்ணரைக் கும்பிட் டெழுந்து
நல்வர வேற்று நாற்காலி தந்து
அமரச் செய்தார் அன்புடன் வணங்கி.
வழக்க மாகவே தம்மிடம் வருகிற
எவருக் கெனினும் இப்படிச் செய்வது
மகாதேவரின் மாறுத கொள்கை.
அத்துடன், இப்போது அடுத்துள மனிதர்

உயர்ந்த குணவதி உத்தமி யாகிய
அன்னபூ ரணியின் அகமுடை யாரெனும்
உண்மையும் சேர்ந்து மதிப்பை உயர்த்த
மட்டிலா மகிழ்வுடன் மரியாதை செய்தார்.
மகாதேவரின் மகிழ்ந்த முகத்தை
நன்றுகப் பார்த்ததும் நடுக்குற் றவர்போல்
வெட்கமோ துக்கமோ வேறென்ன எதுவோ
நெஞ்சைக் கலக்கிட நேரே பார்க்கவும்
கோபால கிருஷ்ணர் மிகவும் கூசினர்.
எப்படிப் பட்டவர் எவரா னலும்
மனசாட்சி என்பது மனிதருக் குண்டுதான்.
தப்பிதம் செய்தால் தன்னெஞ்சே தன்னைச்
சுடும் எனும் பேச்சு சும்மா வந்ததா?
' கொதிக்கிற வெயிலால் குழைந்து போயுள
மக்களும் நோயுடன் தாயும் மனைவியும்
தங்குதற் கிடமிலை தவிக்கிறேம் ' என்று
கண்ணீர் விடாக்குறை கையேந்தி நின்று
ஒருநாளைக் கேனும் ஒதுங்கி யிருக்கவே
இடம்வேண்டு மென்று இரந்த வேளையில்
அசலூர்க் காரர் அகதிகட் கென்றே
தருமம் என்றிடும் சத்திரம் தன்னிலும்
இடம்தரத் தமக்கு நேரம் ஏதெனக்
கூசாது சொன்ன அக் குற்றம் அதனால்
கோபால கிருஷ்ணரும் வெள்கிக் குலைந்தார்.
பணமே குறியாய்க் காரியம் பார்க்கிற
இவரைப் போலுள எல்லா ருக்கும்
வெட்கமும் துக்கமும் வெகுநேரம் நிற்கா.
விரைவினில் கூச்சமும் வெட்கமும் மாறி
பார்த்திலா மனிதர்போல் பாசாங்கு செய்து
இன்பம் ஊறின ஏதெதோ பேசி,

கருதிவந் துள்ளதம் காரியம் சொன்னார்.
சொன்னதும் உடனே மின்னெனப் பாய்ந்து
மகாதேவரும் மற்றுள தம்முடை
அவசர வேலைகள் அனைத்தும் விடுத்து
சர்க்கார் கட்டுகள் சகலமும் ஆய்ந்து
தேவை உள்ளதைத் தேடி எடுத்தார்.
கொண்டாட்ட முற்ற கோபால கிருஷ்ணரை
மகாதேவர் மகிழ்வுடன் நோக்கி
"எனக்கு முன்னால் இங்கே இருந்தவர்
கவனிக் காமலே கட்டிப் போட்டுளார்.
தாசில் தாரிடம் தனியே பேசி, நான்
எழுதத் தக்கன யாவையும் எழுதி
சீக்கிரம் கலெக்டரைச் சேரச் செய்கிறேன்"
என்றதை மிகவும் இன்புறக் கேட்டு
கோபால கிருஷ்ணர் வந்தனம் கூறி
நன்றி செலுத்திடும் வழிகளை நாடி
விரசே தம்முடை வீடுபோய்ச் சேர்ந்தார்.
வேலைக் காரரை வேகமாய்க் கூவி
வெறுமெனக் கிடக்கிற தம்முடை வீடுகள்
நான்கில் ஒன்றை நல்லதாய்ப் பார்த்து
சுத்தம் செய்திட உத்தர விட்டார்.
அதனைக் கேட்டதும் அவருடை மனைவி
'ஏதுக்கு' என்று எதிரே வந்தாள்.
"வெகுநல்ல மனிதர் வீடில்லை யென்று
நேற்றுநம் வாசலில் நின்றெனைக் கேட்டார்;
கலெக்டரைப் பார்க்கக் கார் ஏறுகின்ற
அவசரத் தால்அதை அலட்சியம் செய்தேன்.
சர்க்கார் வேலை, சாந்த குணவான்,
நமக்கும் அவரால் நன்மைகள் உண்டு,
காலியாய்க் கிடக்கிற கட்டிடம் ஒன்றை

கொடுப்போம்" என்றார் கோபால கிருஷ்ணர்.
அதனைக் கேட்ட அன்ன பூரணியும்
கலகல வென்று கைதட்டிச் சிரித்து,
"வீடு சிக்காமல் வீதியில் தவித்து
கெஞ்சின பேச்சைக் கேட்கவும் மறுத்து
வீடு கிடைத்தபின் வீடு கொடுப்பதாய்
தாராளம் பேசுதல் என்ன தருமமோ!
இப்போது அவர்கள் இருப்பிடம் கிடைத்து
சுகமா யிருக்கிறார் சும்மா இருங்கள்.
பசித்தபோ தில்லை! புசித்தபின் ஊட்டல்
தானமா, தருமமா, தகுமா?" என்றாள்.
"கிடைத்ததா வீடு! எங்கே கிடைத்தது?
இப்போது இந்தநம் ஊரிலே எங்கும்
வீடு கிடைப்பது வெகுகஷ்ட மாச்சே!
அவர்களைப் பற்றி நீ எப்படி அறிவாய்?"
என்றார் கணவர். எதிர்மொழி யாக
நடந்ததை யெல்லாம் நாயகி சொன்னாள்.
கோபால கிருஷ்ணர் குதூகல முற்று
மனைவியை மிகவும் மெச்சி மகிழ்ந்தார்.

நட்பு வளர்தல்

ஆழ்ந்த கல்வியும் ஆன்ம உணர்ச்சியும்
சத்திய விரதமும் சாந்தமும் நிறைந்த
மகாதேவரின் மாபெரும் சீலமும்,
சிரித்த முகமும் சினமிலாத் தன்மையும்
இனிய வார்த்தையும் இரக்கமும் மிகுந்த
ஜானகி அம்மாள் சரசசல் லாபமும்,
குளிர்ந்த பார்வையும் கூரிய புத்தியும்
வயதுக்கு மீறிய விநயமும் வாய்ந்த
மங்களம் சிறுமியின் மாசிலா அழகும்
கோபால கிருஷ்ணரின் குடும்பத் தாரை
களிப்புறச் செய்திடும் காரணம் அதனால்
நாளுக்கு நாளாய் நட்புகள் முதிர்ந்து
இரண்டு குடும்பமும் ஒன்றே எனும்படி
ஆசையும் பாசமும் ஆர்வமும் வளர்ந்து
கொஞ்சிக் குலவிக் குறைவற வாழ்ந்தனர்.
கச்சேரி வேலைகள் கழிந்த நேரங்களில்
மாலையும் காலையும் மகாதேவரும்
கோபால கிருஷ்ணர் கூடவே இருந்து
வேதாந்த சித்தாந்த வித்தியா சங்களை,
தமிழின் சிறப்பை, தாய்மொழிப் பற்றை,
தத்துவம் நிறைந்தவடமொழித் தன்மையை,
ஆங்கில பாஷையின் நிறைந்த ஆற்றலை,
பலமொழி கற்பதால் நலமிகும் பலனை,
சமரச உணர்வை, சன்மார்க்க வாழ்வை,
அரசியல் நிலையை, சுதந்தர ஆசையை,
சாந்தியின் சிறப்பை, காந்தியின் அருமையை,

சத்தியம் வெல்லும் சந்தேகம் இன்மையை,
மெய்ஞ்ஞானம் கருதா மேல்நாட் டறிவை,
விஞ்ஞான வெறிகள் விளைக்கும் தீமையை,
இந்திய வாழ்வின் இணையிலாச் சிறப்பை,
கலைகளுக் கெல்லாம் நிலையெனத் தகுந்த
தமிழ்நாட் டாரின் தனிஅறப் பண்பை,
தனித்தனி மிகவும் தர்க்க ரீதியில்
ஒப்புமை சிறந்த உபமா னத்துடன்
தெளிவுறச் சொல்லுவார் மகாதேவரும்.
பக்தியி னுலோ பாவனை தானே
கண்கொட் டாமல் காது கொடுத்து
கேட்டுத் தொலைப்பார் கோபால கிருஷ்ணர்.
அடிக்கடி மிகவும் ஆர்வமும் காட்டி
குறுக்கே கேள்விகள் கூடவும் போடுவார்.
ஒழிந்த வேளையில் உறவாடல் அன்றி
மகாதேவர், மனம்போன படிக்கு
கோபால கிருஷ்ணர் கூப்பிடு கின்ற
தமாஷ்கள் பார்க்கத் தாம்போக மாட்டார்.
அதனால் அவரிடம் மதிப்பும் அச்சமும்
கொண்டே நடப்பார் கோபால கிருஷ்ணர்.
பணமும் பட்டமும் பதவியும் தவிர
குறிவே றில்லாக் கோபால கிருஷ்ணரும்
மகாதேவரின் மாசற்ற நட்பால்
செறுக்கும் முறுக்கும் சிறிதே குறைந்து
அன்பின் பெருமையை அறியவும் ஆனார்.
ஆடவர் இருவரும் அப்படி யாக
பெண்களைப் பற்றிப் பேசவும் வேண்டுமா ?
கண்ணியம் மிகுந்த புண்ணிய வதியாம்
அன்பின் வடிவெனும் அன்னபூ ரணியும்
நன்றியை மறவா நல்லறி வுடைய

சரசப் பெண்மணி ஜானகி அவளும்
கடுகள வேனும் கண்ணியம் குறையா
அன்பர்கள் ஆனதில் அதிசயம் இல்லை.
விருந்துகள் செய்வதும் விழாக்கள் காண்பதும்
ஆலயம் தொழுவதும் அறங்கள் புரிவதும்
புராணம் படிப்பதும் பொழுதும் அலுவலாய்
இணைபிரி யாமல் குலவி யிருந்தனர்.

பெயிலாப் பிரியம்

இவர்களைக் காட்டிலும் இன்னும் அதிகமாய்
அன்பும் பிரியமும் ஆர்வமும் பொங்கக்
கொஞ்சிக் களித்துக் குலாவி மகிழ்ந்து
ஆடியும் பாடியும் ஆனந்தம் கண்டவர்
ஏழே வயதின் இளம்பிரா யத்துள
மங்களம் என்கிற மதுரச் சிறுமியும்
பனிரண்டு வயதெனும் பச்சிளம் பையன்
சங்கர லிங்களும் இங்கிதச் சிறுவனும்.
புண்ணியம், பாபம், புனிதம், அநிதம்,
தானம், தருமம், தப்பிதம், ஒப்பிதம்
செல்வம், வறுமை, கீர்த்தி, செறுக்கு
என்னது, உன்னது, ஏற்றம், தாழ்வு,
என்பன எதையும் இன்னதென் றறியா
கள்ளம் கபடம் காரணம் வேண்டாப்
பரிசுத்த மானஓர் பாசமே பற்றுய்க்
காதலோ காமமோ கலியாண உரிமையோ
அறியாப் பருவம் அதிலே அவர்கள்
ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து
கணப்பொழு தேனும் காணு திருப்பது
முடியாது என்றிட முடிபோட்டு விட்டது
எந்தச் சக்தியோ ஏதோ அறிகிலோம்.

மகளிர் பள்ளியில் மங்களம் படித்தாள்
ஆண் பாடசாலைக்கு அவன் போய்வருவான்.
இதற்கும் அதற்கும் ஒருமைல் இருக்கும்.
இரண்டு பள்ளியும் ஏக காலத்தில்
ஆரம்பம் ஆகி முடிவும் அடையும்.
இரண்டு வேளையும் இல்லம் வருகையில்
மங்களம் பள்ளிக்குச் சங்கரன் சென்று
அவளையும் தன்னுடன் அழைத்து வருவான்.
சங்கர லிங்கம் தன்னைக் கூப்பிட
வரும்வரை மங்களம் வாசலில் நிற்பாள்.
விடுமுறை நாட்களில் வீட்டில் இருவரும்
மாளிகை முனையின் மாடியில் தனியே
பாட்டும் கேலியும் படிப்பும் சிரிப்புமாய்
ஏகாந்த மாகவே இருக்க விரும்புவர்.
இரவிலும் கூட இவர்கள் இருவரும்
வெகுநேரம்வரை வேடிக்கை பேசிட
ஒருவர் மனைக்கு ஒருவர் போவார்கள்.
மங்களம் அடிக்கடி சங்கரன் மனையிலும்
சங்கரன் அடிக்கடி மங்களம் வீட்டிலும்
உண்பதும் அங்கே உறங்கியும் போவர்.
அழகும் அழகும் ஆசைகொண் டனவோ!
அறிவும் அறிவும் அளவளா வியதோ!
குணமும் குணமும் கலந்து கொண்டதோ!
மனமும் மனமும் ஒன்றுய் மருவிட
சின்னஞ் சிறிசுகள் இத்தனைச் சீக்கிரம்
இணைபிரியாப் பெரும் துணைவர் களானதில்
அன்னபூ ரணிமிக ஆனந்த மடைவாள்.
ஜானகி அம்மாள் தேனினும் சுவைப்பாள்.
மகாதேவரோ மௌனமாய் மகிழ்வார்.
கோபால கிருஷ்ணரோ குழந்தைகள் இப்படி
பூர்வஜன்மத்தின் தொடர்ச்சியே போன்ற

அபூர்வ மாகிய அன்புகொண் டாடலை
கவனித் ததில்லை காரிய மிகுதியால்.
ஏழு ஆண்டுகள் இப்படிச் சென்றன.
இடையே பற்பல இன்ப நிகழ்ச்சிகள்:
விடுமுறை ஒருநாள் வீட்டு வாசலில்
வேடிக்கையாக விவாதங்கள் பேசி
இருவரும் தனியே இருந்த ஓர் பொழுதில்
ஊர்களைச் சுற்றியும் ஊசிகள் விற்றும்
பச்சைகுத்தியும் பாட்டுகள் பாடியும்
குறிசொல் லிவாழும் குறத்தியர் வந்தனர்.
கோபால கிருஷ்ணர் 'கோர்ட்டு' வேலையாய்
ஊரிலே இல்லை; உள்ளூர்க் கோயிலில்
அபிஷேகம் என்று அன்னையர் இருவரும்
சென்றிருந் தார்கள் என்ற தனாலே
வீட்டில் யாருமே இல்லாதவேளை,
அதுவும் சேர்ந்து அச்சமே அற்றதால்
குறத்தி மார்களைக் கூப்பிடச் செய்து
சங்கரலிங்கம் சரசமாய்ப் பேசி
பணம்தரு கின்றதாய்ப் பாடிடச் சொன்னான்.

குறி சொல்லல்

மன்மதன் ரதியென சங்கரன், மங்களம்
இருவரும் விளங்கிய இன்பக் காட்சியை
பார்த்த மகிழ்ச்சியோ பணத்திற்காகவோ
என்றுமில் லாதஓர் இன்பப் பெருக்குடன்
குறத்தியர் பாடிக் குறிசொல்லலுற்றார்:—

குறத்தியர் பாட்டு

1. இமயம் முதல் குமரிவரை எங்களுடை நாடு
இடையிலுள்ள தேசமெல்லாம் எங்களுக்கு வாசம்
தமிழ்முனிவன் பொதிகைமலை தன்னிலெங்கள்வீடு
தரணியெல்லாம் சுற்றிடுவோம் தைரியம்தான் ஜோடு

2. ஜாதியில்லை மதமுமில்லை சண்டையில்லை அதனால்
சாமியென்றும் நேமமென்றும் சடங்குகளும் இல்லை.
நீதிஎன்ற ஒன்றுமட்டும் நெஞ்சிலுண்டு பின்னே
நீசரென்று எங்களையார் பேசினாலும் என்னே?

3. பட்டமில்லை பதவியில்லை பகையுமில்லை ஐயே!
பணமுமில்லை திருடரென்ற பயமுமில்லை மெய்யே.
கஷ்டமில்லை நஷ்டமில்லை கவலையில்லை அம்மா!
காணியில்லை பூமியில்லை கடனுமில்லை சும்மா!

4. மலையினிலே குடிசைகட்டி மரநிழலில் வாழ்வோம்
மான்மயிரும் தேன்முதலாய் மக்களுக்கு விற்போம்
தலையினிலே இடிவரினும் தைரியமாய் ஏற்போம்
தஞ்சமற்ற யாரையுமே அஞ்சிடாமல் காப்போம்.

5. எந்தபாஷை எந்தநாட்டில் என்ன பேச்சு எனினும்
எங்களுக்குப் பேதமில்லை எதையும் பேசத் துணிவோம்,
சொந்தபாஷை பெருமைக்காகத் தூறு சொல்ல மாட்டோம்
சுற்றிச்சுற்றி எங்கும் சென்று சுகமுரைத்துக் கேட்போம்.

6. வீடுவாசல் மாடகூடம் எங்களுக்கு வேண்டாம்
வீதிதின்னை சத்திரங்கள் வேணதுண்டு ஆண்டே!
பாடுபட்டு ஓடியாடிப் பசியெடுத்து உண்போம்,
பயமுறுத்தும் நோய்களெங்கள் பக்கமில்லை என்போம்.

7. பச்சைகுத்திக் குறிகள்சொல்லிப் பாடியாடித் திரிவோம்;
பாசிஊசி பலவும்விற்றுக் காசுவாங்கி வருவோம்;
இச்சையான உணவைநேர்ந்த இடத்திலாக்கித் தின்போம்;
இங்கும் அங்கும் எங்கும் தூங்கி இன்பவாழ்க்கை என்போம்.

8. பச்சையென்றால் ஒருநிறமாம் பச்சைமட்டும் அல்ல;
பலநிறமும் சேர்த்தியாகப் பதியவைப்போம்; நல்ல
இச்சையான உருவமெல்லாம் எழுதிடுவோம் மெய்யே;
இப்பொழுதே காட்டுகிறேம் என்னவேண்டும் ஐயே!

9. காதலனே காதலியோ கண்காணாப் பொழுதில்
கண்டுகளி கொண்டு மனக் கவலை கொஞ்சம் ஒழிய
ஆதரவாய்க் கைதனிலே அவர்வடிவும் பேரும்
அழகாகப் பச்சைகுத்தி அமைத்திடுவோம் பாரும்.

10. குறிதவறாக் குறியுரைப்போம் குறைகளெல்லாம் தீர
குற்றமெல்லாம் நீங்கிவிடக் கோளாறும் கூறி,
நெறிமுறையாய் நீங்களெல்லாம் நெடுநாளும் வாழ
நினைத்திடுவோம் எங்கள்குலத் தெய்வமெல்லாம் சூழ.

11. நாள்கிழமை நட்சத்திரம் பார்ப்பதில்லை நாங்கள் ;
நல்ல நல்ல ஜோசியங்கள் சொல்லிடுவோம் பாங்கே
ஆள்வடிவம் பேச்சு நடை அவைகளையே கொண்டு;
அத்தோடு கைரேகை அதையும் பார்ப்பதுண்டு.

12. காசுபணம் பேசிவரும் ஜோசியரைப் போல
காயிதமும் பென்சலுமாய்க் கணக்குப் போடவேண்டாம்;
ஆசையுடன் பகவதியின் அருள் வாக்கினலே
அச்சமற்றுக் குறியுரைப்போம் பச்சைகுத்தல் போல.

என்பன பாடி இருகரம் கூப்பி
"எது வேணும் சாமி! என்னவேணும் அம்மா?
பச்சைகுத்தவா? பாசி ஊசி வேணுமா?
குறிகேட்க ஆசையா?" என்றனர் குறத்தியர்.
சந்தோஷ மடைந்த சங்கரலிங்கம்
"குறிசொல்லு பார்ப்போம் பணமின்னும் கூட்டித்
தருகிறேன் என்றான்." தயங்காது அவர்கள்:

13. ராணியுடன் ராஜனைப்போல் நல்லஜோடி நீங்கள்;
ராமனுடன் சீதையைப்போல் ரஞ்சிதமாய் வாழ்வீர்,
ஆணையிட்டுச் சொல்லுகிறேம் ஐயமில்லை ராஜா
அம்மாளும் நீங்களுமே ஆசைமிக்க நேசம்.

14. கண்மணிபோல் பெண்ணிவளைக் கலியாணம் பண்ணி
கப்பலேறி சீமை சென்று காசுபணம் சேர்ப்பீர்;
பெண்மணியும் ஒரு கணமும் பிரிந்திருக்கமாட்டாள்;
பேசுவதேன் உங்களுக்கு ஈசன்முடி போட்டான்.

15. பொல்லாத வேளைகொஞ்சம் புலப்படுதே பின்னல்
பொன்னன வாழ்க்கையிலே சின்னதுன்பம் மன்ன,
நில்லாது சீக்கிரமே நீங்கிவிடும் ஆண்டே
நெஞ்சமதில் கொஞ்சங்கூட அஞ்சிடுதல் வேண்டாம்.

16. அம்மாளைப் பெற்றவர்க்கு அதிக பணம் இல்லை;
ஐயாவின் விட்டினிலே அளவில்லாத செல்வம்;
கொம்மாளம் போட்டு உங்கள் குடிவிளங்க வேணும்
குத்துவிளக் கேபோலப் புத்திரரும் தோணும்.

17. பாருக்குள் எத்தனையோ பாதகரும் உண்டு
பழிபேசித் தூற்றிடுவார் பயமில்லை ஒன்றும்;
போருக்குள் ஆண்சிங்கம் போலஜயம் பெறுவீர்
பொன்னனப் பெண்ணிவரைப் போற்றி நலம் உறுவீர்.

18. கோபமில்லாக் குணமுடனே குடித்தனமே செய்வீர்
குறைச்சலில்லா யோகமெல்லாம் கூடிவரும் மெய்தான்;
சோபனமே சோபனமே சோபனமே நீங்கள்
சுகமுடனே வாழ்ந்திடுவீர் குறியுரைத்தோம் நாங்கள்.

19. வயிரமதைத் தங்கத்திலே வைத்திழைத்தாற் போல
வடிவழகா உந்தனுடன் சுந்தரியைக் கண்டே
துயரமெல்லாம் விட்டுவிட்டோம் துணிமணியும் சோறும்
துரைமகனே எங்களுக்குத் துட்டுக் கூடத்தாரும்.

20. குள்ளநரிக் கொம்பீதுதான் கூடக்கொண்டு போனல்
கூட்டமாகப் பகை வரினும் ஒட்டமாகும்தானே;
கள்ளமில்லை இதற்கு ஒன்றும் காசுபணவேண்டாம்
கனவானே தந்திடுவோம் கைக்கொள்வீர் ஆண்டே!

என்பன பாடி இடுப்பிலிருந்தன
நரிக்கொம் பென்பன நல்லன வெள்ளைத்
துண்டுகள் இரண்டைத் தேய்த்துத் துடைத்து
சங்கர லிங்கன் அங்கையில் வைத்துக்
கும்பிடு போட்டுக் குறத்தியர் நின்றனர்.
குறிசொன்ன பாட்டின் பொருளைக் குறித்து
சங்கரன் களித்தான், மங்களம் வெளுத்தாள்.
குறத்தியர் பின்னும் குழைந்து வணங்கி
" குறி சொல்லிவிட்டோம் குறை யொன்றுமில்லை
பச்சையும் குத்திப் பார்த்திட ஆசை
சின்னதாய் ஒன்று என்ன வானாலும்
குத்திடும்படிக்கு உத்தரம் கொடுங்கள்.
அழகான பச்சை அலங்காரமாக
வலியே வராமல் வயணமாய்க் குத்துவம்
சாமி ! அம்மா ! தயவு சொல்லுங்கள் "
என்றிளங் குறத்தி இனிய முகத்துடன்
குனிந்து வணங்கி மிகவும் கோரினாள்.
சற்றே தயங்கிய சங்கரன் சரேலென
' குத்திடு ' என்று கையைக் கொடுத்தான்.
நீட்டிய கையை நீவிக் கொடுத்து
" பசும்பொன் மேனியில் பச்சை குத்தினால்
எத்தனை அழகாய் இருக்குமே ஐயா !
குத்துவது என்ன ? கூறுங்கள் அதற்கு
பச்சையே போதுமா ? பலநிறம் வேணுமா ?
எப்படி இச்சையோ அப்படிக் குத்துவேன் "
என்றனள் அந்த இளங்குறப் பெண்மணி.
' மங்களம் ' என்னுடை மனமொத்த பெயர்அதை
அழகான தமிழில் அலங்காரம் செய்த
சித்திர எழுத்தால் சிங்காரம் பண்ணிக்
குத்துக " என்றான். குறத்தி சொல்வாள் :

" எழுத்துகள் எழுதிட எமக்குத் தெரியுமா ?
பொம்மை என்றால் எதையும் போடுவோம்
அம்மாள் பேரா அந்தப் பேச்சு ?
எழுத்தை நீங்களே கைமேல் எழுதினால்
அதன்மேல் நாங்கள் பச்சையை அழுத்தி
சித்திர வேலையும் செய்து விடுவோம் "
என்றாள் குறத்தி. உடனே இசைந்து
' பவுண்டன் பேனா ' பச்சை மையினால்
சங்கரலிங்கம் ' மங்களம் ' பெயரை
எழுதினான் தன்னுடை இடதுகை மேலே.
பழுதுறு வண்ணம் பச்சையைக் குத்தி,
செடியும் மலர்களும் சித்திரம் செய்து,
பத்திர மாகப் பார்த்துக் கொள்கிற
முறைகளும் சொல்லி முடித்தாள் குறத்தி.
பார்த்துக் கொண்டே பக்கத்தில் நின்ற
மங்களம் தன்னுடை மனதுக் குள்ளே
சங்கர லிங்கன் சபலம் அதனைக்
கேலி செய்வது போலவோ என்னவோ
குபுக்கெனச் சிரித்துக் குனிந்து கொண்டாள்.
அவளுக்கும் பச்சையில் ஆசையோ என்கிற
சந்தேகத்தால் சங்கர லிங்கம்
" மறந்துவிட் டேனே ! மங்களம் ! மங்களம் !
உனக்கும் இப்படி ஏதேனும் ஒன்றை
பச்சை குத்தினால் பசுந்தா யிருக்கும்,
என்ன குத்தலாம் ?" என்றான் பரிவுடன்.
மங்களம் அதற்கு மறுமொழி சொல்வாள் :
" அனுதினம் பழகி அன்புகொண் டாடி
ஒருகணம் பிரியினும் உயிர்பிரி வதுபோல்
துன்பப் படுகிற தூய நண்பரை
மறந்து விடுகிற மனிதர்கள் அன்றோ

பச்சையில் குத்திப் பார்த்துக் கொள்ளுவர் ?
நிரந்தர மாகவே நெஞ்சிற் பதிந்து
முயற்சி செய்யினும் மறக்க முடியா
உள்ளன் புடையவர் ஒருவரை ஒருவர்
பச்சையில் குத்தியா பார்த்திட வேண்டும் ?
வேண்டாம் வேண்டாம் எனக்கு வேண்டாம்
அன்னையும் பிதாவும் அருவருப் படைவர் ;
எனக்கு வேண்டாம் பச்சை " என்றுள்.
சிறுபெண் உரைத்த சிறந்த கருத்தின்
உண்மையை உணர்ந்து உள்ளம் திகைத்து
சங்கர லிங்கன் சங்கோஜ முற்றுப்
பதில் பேசாமல் பச்சை குத்தின
குறத்தியர் தமக்குக் கூலி கொடுக்க
விரைந்து நடந்து வீட்டுக்குள் சென்று
துணியும் சோறும் துட்டும் கொடுத்து
அன்புடன் அவர்களை அனுப்பி வைத்தான்.
மங்களம், கருத்தில் மாறுபட் டாலும்
சங்கரன் பச்சையில் சலுகை காட்டி,
புண்ணு காமல் மருந்துகள் பூசி,
கலைந்து விடாமல் காக்கச் செய்து,
நித்தமும் கையை நீட்டச் சொல்லி,
அவளது பெயரை அதிலே பார்த்து
மனதுக் குள்ளே மகிழ்ச்சி யுறுவாள்.
'அன்பின் தன்மையை அமரரும் அறியார்'
கம்பன் சொன்னதன் கருத்தும் இதுவோ!

அதற்குப் பிறகு ஒரே ஆண்டுதான்
வசந்தபுரியில் மங்களம் வசித்தாள்.
அதன்மேல், நெடுநாள் அங்கே இருந்ததால்
வேறு தாலுக்கா விருதூர் அதற்கு

மகாதேவரை மாற்றிவிட்டார்கள்.
எட்டு ஆண்டுகள் ஒரே இடத்தினில்
இருந்தது அதுவே அதிசயம் எனலாம்.
இணைபிரி யாதஅவ் விரண்டு குடும்பமும்
பிரிந்த துன்பம் பேசவே வேண்டாம்.
மற்றவர் வருத்தம் மறக்க முடியினும்
மங்களம் அவளும் சங்கர லிங்கமும்
விட்டுப் பிரிந்த வேதனை அதனைத்
தேவரும் கூடத் தெரிவது சிரமம்.
அபூர்வ மாகிய அவர்கள் ப்ரேமையை
மகாதேவரும் அவருடை மனைவியும்
அன்னபூ ரணியும் நன்றாய் அறிவர்.
தனித்தனி அறிந்து தருக்குவர் எனினும்
ஒருவருக் கொருவர் ஒன்றும் பேசிலர்.
மகாதேவரை மாற்றிய பின்னர்
விரும்பிய போதெலாம் விருதூ ருக்கும்
சங்கரன் தன்னுடைத் தாயா ரோடும்
பெண்களுக் கென்றுள ப்ரத்யேக மோட்டார்
வண்டியிற் சென்று, பார்த்து வருவான்.

திருமணப் பேச்சு

கோவிந் தராஜன் கோபால கிருஷ்ணரின்
பள்ளித் தோழர்; பாலிய நண்பர்.
ஐம்பது லக்ஷம் பெறுமான ஆஸ்தியும்
பத்து லக்ஷம் ரொக்கமும் படைத்தவர்.
வசந்த புரிக்கு வடக்கே இருபது
மைலில் இருக்கிற மாஞ்சோலை என்னும்
சிற்றூர் அதனில் சிறந்த மனிதர்.
கள்ளச் சந்தையில் கொள்ளையில் கிடைத்த
பணமல்ல. அவருடை பரம்பரைச் சொத்து.
நல்ல குணவான், நாணய முள்ளவர்.
கோபாலகிருஷ்ணர் கோரும் போதெலாம்
கேட்ட தொகையை நீட்டுவார் உடனே.
வட்டியில் லாமலும் வாங்கிக் கொள்வார்.
குறைந்த ரொக்கக் கோபால கிருஷ்ணர்
கடைகளை வைக்கக் கருதின போதும்
கோவிந்த ராஜர் கொடுத்த பணம்தான்
ஆரம் பத்திலே அதிகமாய் உதவி.
அன்றியும் அவரிடம் அடிக்கடி வாங்கிய
கைமாற்றுப் பணம்தான் கணக்கில் லாமல்
கள்ளச் சந்தையில் கொள்ளை யடித்திட
உதவிற்று என்பதும் மிகவும் உண்மை.
ஆதலால் அவரிடம் அன்பும் நன்றியும்
கொண்டவர் ஆவார் கோபால கிருஷ்ணர்.
மற்றும் அவரை மதித்திடக் காரணம்
வெகுநா ளாகவே வேரொன்றும் உண்டு.
எந்தக் காரியம் எங்கெங்கு செயினும்

கோபால கிருஷ்ணரின் குறிக்கோள் எல்லாம்
பணத்தையே முற்றிலும் பற்றிய தாகும்.
... ...
சற்றே பருத்து, சாமான்ய மாகிய
அழகும் படிப்பும் அறிவும் அமைந்து
பாட்டுடன் கொஞ்சம் 'பிடிலில்' பழக்கமும்
உள்ளவ ளாகவும் உடம்பு முழுவதும்
பட்டும் வயிரமும் பளபளப் பாகச்
செயற்கை அழகுகள் மிகவும் செறிந்த
பதினறு வருஷப் பருவப் பெண்மணி
கோவிந்த ராஜரின் ஒரே குழந்தை.
ஆஸ்தி முழுவதும் அவளையே சேரும்.
கோபால கிருஷ்ணரின் குறியும் அதுவே.
தன்மகன் சங்கர லிங்கன் தனக்கே
மனைவியாய் அவளை மணம்செய்து விட்டால்
சொத்துகள் எல்லாம் சொந்தமாம் என்னும்
ஆசைகொண் டவராய் அந்தக் கருத்தைத்
தானே சொல்லிட ஏனே தயங்கி
அன்பர்கள் மூலம் அறியப் படுத்தினர்.
கூருமுன்னமே கோவிந்தராஜரும்
அறிவும் படிப்பும் அழகும் ஆற்றலும்
சகலமும் நிறைந்த சங்கர லிங்கனை
மருமக னாய்க்கொள மனதுக் குள்ளே
அடிக்கடி நினைத்து ஆசைகொண் டவர்தான்;
ஆனால் அதற்குள்ள அதிகாரி அவரல்ல.
இரண்டாம் தாரமாய் இவருக்கு அமைந்துள
அழகும் இளமையும் ஆற்றலும் படைத்த
கோமள வல்லியாம் கோவிந்தர் மனைவிதான்
மகளுக்குத் தகுந்த மாப்பிள்ளை பார்த்துச்
சம்பந்தம் பேசிடச் சர்வாதிகாரி.

கோமள வல்லியின் கூடப் பிறந்த ஓர்
தமயன் மகனும் சபாபதி தனக்கே
மகளைக் கொடுத்து மணம்முடித் திட்டால்
ஆஸ்திகள் அனைத்தும் அவனையே சேர்ந்து,
பிறந்த வீடும் சிறந்திடும் என்பது
கோமள வல்லியின் குறையாத ஆசை.
அண்ணன் மகனை எண்ணிக் கொண்டே
பெண்கேட்க வருகிற பேர்களுக் கெல்லாம்
இதையும் அதையும் எதையோ சொல்லி,
சாக்குக் காட்டிப் போக்கி விடுவாள்.
அண்ணன் மகனே அறிவுளான் எனினும்
குணமும் கெடுதல் பணமும் இல்லான்.
ஒழுக்க வழக்கமும் உள்ளவன் அல்ல.
படிப்பில் மட்டுமே 'பாஸ்' ஆன பி. ஏ.
கோவிந்த ராஜரோ மிகவும் கோழை.
தாமே அடிக்கடி தம்ஒரு மகளை
கோபால கிருஷ்ணரின் வீட்டில் கொடுக்கவே
எண்ணுவார் என்பது உண்மையே எனினும்
கோமள வல்லியின் கொள்கைக்கு அஞ்சி
கோபால கிருஷ்ணரின் கோரிக்கை வந்தும்
இச்சைப் படிக்கொரு நிச்சயம் சொல்ல
தைரியம் இன்றித் தயங்கித் தவித்தார்.
கோமள வல்லிக்குக் கோவிந்தராஜர்
கோபால கிருஷ்ணரின் மகனைக் குறித்து
பேச்சை எடுத்தால் பேசவே மாட்டாள்;
காரணம் அறியாது கலங்குவர் கணவர்.
அதுவே முயற்சியாய் அனுதினம் கோமளம்
படிப்படி யாகப் பக்குவம் பார்த்து
இதிலும் அதிலும் பேச்சை இழுத்து
மனதில் உள்ளதை மறை முகமாகவே

சிறுகச் சிறுகத் தெரியச் செய்து,
கடைசியில் ஒருநாள் கருத்தை முழுதும்
தெரிவித்து விட்டாள். திடுக்கிட்டக் கணவர்
உடனே மறுக்க உறுதியில் லாமல்
'பார்க்கலாம்' என்று பதில்சொல்லிவிட்டு
விசனத் தோடும் வெளியிலே சென்று,
பசுபதி என்கிற பரிவான நண்பர்
வீட்டை நாடி வேகமாய்ப் போனர்.
பசுபதி மிகவும் படித்த மனிதர்
ஆங்கிலப் படிப்பு அதிகமா யில்லை.
நாட்டுப் படிப்புதான், நல்ல விவேகி.
ஜோசியம் பார்ப்பதில் ஆசை அதிகம்.
கோவிந்த ராஜர் குடும்ப விஷயமாய்
சஞ்சலம் வருகிற சமயங் களிலே
பசுபதி யிடமே பரிகாரம் கேட்பார்.
சமயோ சிதமிகும் தந்திர சாலி
பசுபதி, மிகவும் பலன்தரக் கூடிய
யோசனை கூறித் துயரம் ஒழிப்பார்;
இப்போது வந்ததும் அப்படி எண்ணியே.
தமயன் மகனுக்கு மகளைத் தந்திட
கோமளம் மனதில் கொண்டுள உறுதியும்,
நெடுநா ளாகத் தன்னுடை நெஞ்சில்
கோபால கிருஷ்ணரின் மகனைக் குறித்து
அடிக்கடி உதிக்கிற ஆசையைப் பற்றியும்,
கோபால கிருஷ்ணரே கோருவ தாக
நண்பர்கள் பலபேர் நாடிச் சொன்னதும்
எல்லாம் விவரமாய் எடுத்துச் சொல்லி,
'என்ன செய்யலாம்' என்பதும் கேட்டார்.
பசுபதி பற்பல யோசனை பண்ணி
"கோமளம் சொல்வது குற்றம். அவளது

தமயன் மகன்ஒரு தறிதலைப் பேர்வழி.
சங்கர லிங்கமே சரியான மணமகன்.
நல்லதோர் யோசனை நான்சொல் லுகின்றேன்,
உடனே நீர்அதை ஒத்துக் கொண்டு
நாளை மறுதினம் நல்லநாள் பார்க்க,
ஜாதகம் பார்த்திடச் சம்மதித் திடுங்கள்.
நல்லது; மற்றவை நான்பார்த்துக் கொள்வேன்;
எப்படி என்பதை என்னோடு விடுங்கள்.
சுந்தர ராமர் ஜோசியர் அவர்களை
அனுப்பி வைக்கிறேன் அதுவே போதும்
நிம்மதி யாக நீங்கள் போகலாம்.''
என்ருர் பசுபதி எழுந்தார் மற்றவர்.
கோமளம் சொன்னதில் கோபம் வந்தும்
வெளியில் காட்ட விருப்பமில் லாமலோ
எதிர்த்துப் பேசத் தைரியம் இன்றியோ
வருத்தத் தோடு வெளியே வந்தவர்
பசுபதி முயற்சி பலிக்கும் என்கிற
திருப்தி யோடும் திரும்பிச் சென்று
மனையிற் புகுந்து மனைவியை நாடினர்.
கணவர் திருமுகம் களிப்போ டிருக்கிற
குறிகளைக் கண்ட கோமள வல்லியும்
திருமணப் பேச்சைத் திரும்பவும் தொடங்கி
அண்ணன் மகனையே மாப்பிள்ளை யாக்கும்
ஆசை மிகுதியை அறியச் செய்து
நாயகர் கருத்தை நாடினுள் நயந்து.
கோவிந்த ராஜர் மறுமொழி கூறுவார் :
''சத்தியம் கோமளம், சபாபதி விஷயமாய்
இதுவரை நான்அதை எண்ணவே இல்லை.
நீயோ அவனையே நிச்சயம் செய்துளாய்.
நமக்குள் வேற்றுமை நன்ரு யிராது.

முகூர்த்தம் பார்த்து முடித்து விடலாம் ;
ஜாதகம் பார்க்கிற சாஸ்திரி ஒருவரை
அழைத்துக் கேட்டு ஆவன செய்வோம்''
என்றதைக் கேட்டு என்று மில்லாத
சந்தோஷம் என்னும் சாகரம் அதனில்
முழுகித் திளைத்து மூச்சுத் திணறப்
புருஷனை மெச்சிப் பூரித்தாள் கோமளம்.
மறுநாள் காலையில் கோமளம் மனைக்கு
பசுபதி வகுத்துள திட்டப் படிக்கு
சுந்தர ராமன் சோதிடர் வந்தார்.
கோவிந்த ராஜர் கொல்லையி லிருந்தார்.
கோமள வல்லி கூடத்தி லிருந்தாள்.
பழக்க மாகிய அவரைப் பார்த்ததும்
கும்பிட்ட தெய்வம் குறுக்கே வந்ததாய்
வியந்து மகிழ்ந்து வேகமாய் எழுந்து
ஆசனம் கொடுத்து அமரச் செய்து
''நினைக்க நினைக்க நீங்கள் வந்தீர்களே !
அழைத்து வரும்படி ஆள்விட் டாரா ?''
என்ருள் கோமளம், ''இல்லை, இல்லை.
குடும்ப விஷயமாய் கோவிந்த ராஜரை
பத்து நாளாகப் பார்த்திட நினைப்பு,
அவகாசம் கிடைத்தது அதனல் வந்தேன்.
என்ன விசேஷம்'' என்ருர் ஜோசியர்.
''அவகாசம் தானே ? அவசர மில்லையே ?
என்ருள் கோமளம், ''இல்லை'' என்ருர்.
உடனே கோமளம் உள்ளே ஓடிச்
சபாபதி ஜாதகம், தன்மகள் ஜாதகம்
இரண்டையும் ஒன்ருய் எடுத்து வந்து,
''ஜாதகப் பொருத்தம் சரிபெறப் பார்த்து
இந்த மாதமே முகூர்த்தம் இருந்தால்

சொல்லுங்கள்'' என்று கோமளம் சொன்னாள்.
சுந்தர ராமர் 'சரி'என்று சொல்லி,
சந்தோ ஷத்துடன் ஜாதகம் வாங்கி
விரித்துப் பார்க்குமுன் விநயத் தோடு
''மகளுக்குத் தானே ? மாப்பிள்ளை எந்தஊர் ?''
என்றதும் கோமளம் இளகிய குரலாய்
''பேரும் ஊரும் பின்னுற் சொல்லுவேன்,
பொருத்தம் கூட்டிச் சொன்னுற் போதும்;
மாப்பிள்ளை ரொம்பஎன் மனசு பிடித்தவர்.
கொஞ்சம் நஞ்சம் குறையிருந் தாலும்
பரிகா ரத்துடன் பொருத்தம் பார்த்து
நீங்கள்தான் அதை நேர்செய்ய முடியும்
பாருங்கள்'' என்றாள் மிகவும் பணிவுடன்.
ஜோசியர் மிகவும் சுறுசுறுப் பாகவே
கையோடு கொணர்ந்த பையில் இருந்து
காகிதம், பென்சில், ஜோதிடக் கணிதம்
முதலிய வைகளை முன்னல் விரித்து
கோடுகள் கிழித்து ராசியும் குறித்து
கணக்கில் லாமல் கணக்குகள் போட்டு
கூட்டிக் கழித்துக் கழித்துக் கூட்டிப்
பெருக்கி வகுத்து வகுத்துப் பெருக்கி
கோரிய எதுவோ கூடாமை போல்
உள்ளம் கலங்கி உதட்டைக் கடித்து
மேலும் கீழும் மிரள விழித்து
யோசனை கேட்க நாசியைப் பிடித்து
கையைப் பிசைந்து மெய்யை நெளித்து
சிறுமூச்சு வாங்கிப் பெருமூச்சு விட்டு
போட்ட கணக்கின் ஏட்டைத் திருப்பி
புதிய கணக்குகள் மீண்டும் போட்டு
முகத்தைச் சுழித்து அகத்தில் இல்லா


விசனக் குறிகளை வெளிக்குக் காட்டி
வார்த்தை பேசாமல் வருத்தப் பட்டார்.
கோமள வல்லியோ உள்ளம் குழம்பி,
பிரசவ அறையில் பிள்ளை பெறுமுன்
எதிர்பார்த் திளைக்கும் ஏக்கம் போலும்,
யானைப் பட்டாசு ஒன்றிலே அதற்கு
நெருப்புவைத் தோடி நெடுந்தூரம் போய்
வெகுநே ரம்வரை வெடியாமை கண்டு
எட்டிக் கிட்டி ஏங்கும் இளைஞர்போல்,
விஞக்கள் கேட்க, விடைகளை யெல்லாம்
எழுதிக் கொண்டுபோய் எதிரில் நின்று
காட்டும்பொழுது கடுகடுப் போடு
முகத்தைச் சுழித்து முணுமுணுப் பாகப்
பேசாது பார்க்கும் ஆசான் குறிப்பில்
மருண்டு நிற்கும் மாணவன் போலும்,
மீனுக் காகத் தூண்டிலை வீசி
கரையில் அமர்ந்து கண்கொட் டாமல்
தண்ணீ ருக்குள் தக்கை போகிற
தருணம் வேண்டித் தவிக்கும் ஒருவன்
நீண்ட நேரமாய்த் தூண்டிலைப் பிடித்து
காத்துக் காத்துக் களைத்தது போலும்,
துடித்துத் தவித்துத் துவண்டு போனாள்.
இங்கே விஷயம் இப்படி இருக்க,
தெரிந்தே தானே தெரியாம லேயோ
கோவிந்த ராஜர் கொல்லைப் புறத்தில்
வாழைக் கன்றுகள் நட்டு வளர்க்கக்
குழிகளை வெட்டிக் குப்பை போட்டிட
ஆட்களை ஏவிட அங்கே இருந்தார்.
இல்லா திருப்பது நல்லதென் றெண்ணியோ
கோவிந்த ராஜரைக் கூப்பிடும் எண்ணம்

கோமள வல்லியும் கொண்டா ளில்லை.
சுந்தர ராமரும் சொன்ன தில்லை.
நெடுநேரம்வரை நீட்டி நெளித்து,
ஜோசியர் மெதுவாய் சொல்லத் துணிந்து
"எப்படியெல்லாம் எண்ணிப் பார்க்கினும்
தோஷம் ஒன்று தொடரு கின்றதே !
சிறியதும் அல்ல; பெரியஓர் தோஷம்"
என் னும் போதே கோமளம் இரைந்து
"தோஷமா! ஐயோ! 'தோஷமே இல்லை'
என்பதாய் அல்லவா எழுதிக் கொடுத்தார்
விஜய புரத்துள வெங்கண்ண ஜோசியர்"
என்றதைக் கேட்ட இங்குள ஜோசியர்
"வெங்கண்ண ஜோசியர் வெகுநல்ல மனிதரே
தாக்ஷண் யத்தால் தவறை மறைப்பது
அவருடை வழக்கம் ; அதுபெரும் குற்றம்.
உள்ளபடிக்கு இதில் உண்மையைச் சொன்னால்
ஜாதக ருக்குச் சனிதசை வருமுன்
மாரகக் கண்டம் மறுப்பதற் கில்லை.
ஆயுள் பாகம் ஒன்றுதான் ஐயம்,
ஜாதக ரீதியாய் சனிதசை வருவது
இவருடை வயசு இருபத்தி ஏழில்.
அதற்கும் முன்னால் அப்பெருந் தோஷம்.
கண்டம் என்னமோ கடினமா னதுதான்
பரிகாரம் செய்தால் பலிக்கலாம் எனினும்
சந்தேகம் மிக்கஇச் சங்கடம் எதற்கு ?
விளக்கைப் பிடித்தும் குழியில் விழுவதா?
என்னுடைக் கணிதம் தப்பென நினைத்தால்
வெகுநல்ல ஜோசியர் வீரரா கவரிடம்
காட்டுங்கள்" என்று கண்டித்துச் சொல்ல,
கோமளம் ஆசை குலைந்தவ ளாகி

விசனமே வடிவாய் விதிர்த்து நின்றாள்.
பிறஎது குறையினும் பெண்கள் அனைவரும்
மாங்கல்ய பலமே பெரியதாய் மதிப்பவர்.
ஆயுள் பாகம் ஐயமே என்றது
தாலி பலத்தைத் தாக்குவ தாதலால்
கோமளம் நெஞ்சம் குமுறிட எண்ணுவாள்
"சுந்தர ராமர் சொல்வது சரியோ
வெங்கண்ண ஜோசியர் சொன்னது மெய்யோ
ஜாதகம் ஆயுளில் சந்தேகம் உள்ளது.
அப்படி யானால் எப்படிச் செய்வது"
என்பதே கோமளம் எண்ணத்தில் தோன்றி
பொருமிப் புழுங்கிப் புகைந்து நின்றாள்.
கொல்லையில் இருந்த கோவிந்த ராஜர்
அந்த வேளையில் அவ்விடம் வந்தார்.
சுந்தர ராமரைக் கண்டதும் சுருக்காய்
"வரவேணும் ஜோசியரே எப்போது வந்தீர்"
என்பதன் முன்னால் எதிரே தரையில்
கணக்குகள் போட்ட காகித மெல்லாம்
விரிந்து கிடந்தது தெரிந்ததும் உடனே
"ஜாதகம் பார்த்ததா ? சரிதானே பொருத்தம்
முகூர்த்தம் பார்த்து முடித்திட லாமா?
நீங்கள் சொன்னால் போதும் ; நிம்மதி"
என்றதும் ஜோசியர் எழுந்து நின்று
சொன்னதை யெல்லாம் மீண்டும் சொன்னார்.
கேட்டதில் மிகவும் வாட்டம் போல
கோவிந்த ராஜரும் கோமள வல்லியைப்
பச்சாத் தாபப் பரிவுடன் பார்த்து
"என்ன கோமளம் ! எப்படி யோசனை
நீயே சொல்லு" என்று நிறுத்தினார்.
ஏக்கமும் துக்கமும் இடைதடு மாறி

குமுறிக் குழம்பிய கோமள வல்லி
முகத்தைக் கவிழ்த்து முந்தியை இழுத்து
கண்களைப் பொத்திக் கலங்கினாள் குலுங்கி.
கணவன் மனவியைக் கனிவுடன் தேற்ற,
கோமளம் விரைவினில் துக்கம் குறைந்து
''ஆயுள் பாகமே சந்தேக மானால்
அப்புறம் அதன்மேல் ஆசைவைப் பானேன் ?
என்னுடை ஆசைகள் இப்படிப் போனபின்
எங்கே கொடுத்தால் இனிமேல் என்ன ?
இஷ்டப் படிக்கு எங்கோ கொடுங்கள்.
என்னுடை இஷ்டம் இனிஎன்ன ?'' என்றாள்.
உடனே கோவிந்தர் உள்ளே ஓடித்
தன்னிடம் இருந்த சங்கர லிங்கன்
ஜாதகம் கொணர்ந்து ஜரூராய் நீட்டி
''பரவா யில்லையா பாருங்கள்'' என்றார்.
திரும்பவும் ஜோசியர் தீர்க்கமாய் அமர்ந்து
வேறே காகிதத் தாளை விரித்து
சகலமும் முன்போல் சாஸ்திர முறையில்
கணக்குகள் பார்க்கும் காரியம் முடித்து,
சந்தோஷ முகமாய்த் தலையை நிமிர்த்து
''பேஷான ஜாதகம் பெருமை மிக்கது,
ஆயுள் பாகமும் அமோக மானது,
படிப்பும் பணமும் பலமாக உள்ளது,
கட்டின மனவியைக் கண்போல் காப்பான்.
புத்திரப் பேறும் பூரண மானதே;
பெண்ணுக்கு மட்டும் சிலநாள் பீடை
ஒன்றே ஒன்றுதான் குறைபோல் உள்ளது.
தோஷம் அதனால் துளிகூட இல்லை.
அதுஎன்ன என்றால் அயல்நாடு பயணம்.
படிப்பில் உயர்ந்த பட்டம் பெறவோ

திரைகடல் ஓடித் திரவியம் தேடவோ
சதியை விட்டுப் பதியவன் பிரிந்து
சிறிதே காலம் சேதமில் லாமல்
இன்னொரு நாட்டில் இருந்திட நேரும்.
அதன்பின் இருவரும் அன்புடன் வாழ்வார்
இதனால் தோஷமே இல்லை'' என்றார்.
''ஆமாம், சரிதான் ; அந்தப் பிள்ளையை
கைத்தொழில் பற்றிய கல்விகள் கற்றிட
சீமைக்கு அனுப்பச் சிந்தனை என்று,
கோபால கிருஷ்ணரே கூறிய துண்டு''
என்று கோவிந்தர் இயம்பிடு முன்னால்
''கோபால கிருஷ்ணர் குமாரர் தானே ?
அப்படிச் சொல்லும். அதைவிடப் பையன்
எங்கே கிடைப்பான் ? ஏன்இனி யோசனை ?
கும்பிடு போட்டுக் கொடுங்கள்'' என்று
சுந்தர ராமர் சொல்லி முடித்தார்.
கோமள வல்லியும் குளிர்ந்த முகமாய்
கவலை மாறிய குறிகள் காட்டினாள்.



திருமண ஒப்பந்தம்

சுந்தர ராமரை இருக்கச் சொல்லி
அடுத்த நாளே அவசர மாகவே
கோவிந்த ராஜர் கோபால கிருஷ்ணரை
அழைத்து வரும்படி ஆளை அனுப்பினர்.
கோபாலர் வந்தார் கொண்டாட்ட மாக
மங்களச் சேதியை மகிழ்வுடன் கேட்டு
ஆனந்தம் என்னும் ஆழியில் முழுகி
புதையல் எடுத்த பூரிப் படைந்தார்.
தாமதம் செய்வது தவறென நினைத்து
சீரும் வரிசையும் செய்யத் தக்கன
பெறுவன யாவும் பேசி முடித்தபின்
சீக்கிரம் திருமணம் நிச்சயம் செய்திட
மனைவியும் தாமும் வருவதாய்ச் சொல்லி,
சுந்தர ராமரே பார்த்துச் சொல்லிய
முகூர்த்த தேதியும் முடிவு செய்திட்டபின்
விருந்து மகிழ்வுடன் வீடு திரும்பினர்.
தாங்கவே முடியாச் சந்தோ ஷத்துடன்
தனியே மனைவியைத் தம்முடன் இருத்தி
அன்ன பூரணிக்கு அனைத்தும் சொல்லி
"சீக்கிரம் சென்று நிச்சயம் செய்திட
வேண்டும்" என்றார் வெற்றிக் குரலாய்.
விஷயம் கேட்டதும் விசனக் குறியுடன்
"சங்கர லிங்கன் சம்மதிப் பானே?
அவனைச் சிறிதும் அனுசரிக் காமல்
இப்படி அவசரம் ஏதுக் காகவோ?
பையன் வாழ்வினும் பணமா பெரியது?

அவனைக் கேட்டபின் அங்கே போவோம்"
என்றார் மனைவி. கணவர் இரைந்து,
"அடிபோ பைத்தியம், அவனையேன் கேட்க?
நீயும் நானும் நிச்சயம் பண்ணினால்
மாட்டேன் என்று மறுத்திடு வானா?
அப்படிப் பிள்ளை அவனல்ல அறிவேன்.
என்னையும் உன்னையும் கேட்டா இசைந்தோம்?
பெற்றவர் பொறுப்பு; பிள்ளையைக் கேட்பதேன்?
அப்படி யென்ன அநியாய மானதா?
கோவிந்த ராஜர் குணமான கனவான்.
நானும் அவரும் பாலிய நண்பர்கள்.
எத்தனை உதவிகள் எனக்குச் செய்தவர்!
நன்றி மறப்பது நல்லதா சொல்லு நீ?
பெண்தானென்ன, பிழைசொல்லலாமா?
என்ன குறைச்சல்? ஏனிந்த யோசனை?
'பணந்தான் பெரிதோ,' என்று பழிக்கிறாய்;
பணம் வேண்டாதவர் பாரிலே யார்சொல்?
அறுபது லக்ஷம்! அற்பமா சொற்பமா?
தேடி வருவதை ஓடிடச் செய்வது
புத்தியுள்ளவர்கள் புரியும் வேலையா?
கிறுக்குகள் பேசிக் கெடுத்திட வேண்டாம்.
சங்கரன் எதுவும் சந்தேகித்தாலும்
நீ சொல்லி அவனை நேர்செய்து வைத்திடு.
புண்ணியம் பண்ணவும் பொருள் வேண்டாமா?"
என்றார். சற்றே மனைவியும் இரைந்து,
"பணம் பணம் என்று பணத்தைப் பற்றியே
எந்த நேரத்திலும் இதுவா பேச்சு?
இருக்கிற பணங்கள் இது போதாதா?
புதையல் வேண்டுமா புண்ணியம் பண்ண!
உலகப் பணமெலாம் ஒன்றுத் திரண்டு

நம்மிடம் சேரினும் நமக்குப் போதுமா ?
ஒழுங்காய் வந்தது உள்ளதைக் கொண்டே
பரலோகம் வரை புண்ணியம் பண்ணலாம்.
இந்தப் பெண்ணே எந்தப் பெண்ணே
அவனைக் கேட்டபின் ஆவன செய்வோம்
அவசரப் பட்டால் அனர்த்தம் விளையும்''
என்றுள் மனைவி மிகவும் ஏக்கமாய்.
'' கேட்டுத்தான் சொல்லேன்; கேட்கும் போது
பணத்துக்காகவே பண்ணுவதாக நீ
எதையும் சொல்லி இகழ்ந்து விடாதே.
பெண்ணைப் பற்றியும் பெருமையாய்ப் பேசித்
தனியே கேட்டுத் தகவல் சொல்லு ''
என்றார் கணவர் '' அப்படி எதற்கு ?
நேரில் அழைத்து நீங்களே கேட்டால்
அவனுடைய மனசை அறியலாம் நீங்கள்.
குறுக்கே நானேன் ?'' என்றுள் குணவதி.
அப்படியானால் அதுவும் சரிதான்,
நானே அழைத்து நயமாய்க் கேட்பேன்,
அவன் சம்மதித்தால் அதற்குப் பிறகும்
உனக்கேதேனும் ஆட்சேபம் உண்டா ?''
'' இதுவே அவனுக்கு இஷ்டம் என்று
சங்கரலிங்கம் சம்மதித்திட்டால்
எனக்கேன் அதிலே அட்டி இருக்கும் ?''
என்று மனைவியும் எழுந்து போயினாள்.
சங்கரலிங்கமும் மங்களாம்பாளும்
எத்துணை அபூர்வ நேசர்கள் என்பதை
கோபால கிருஷ்ணர் கொஞ்சமும் அறியார்.
அன்னபூரணியோ நன்றாய் அறிவாள்.
சங்கரலிங்கமும் மங்களாம்பாளும்
கிட்டி நெருங்கித் தொட்டும் பழகுவர்.

பலபேர் முன்னிலும் பரிகாசம் பேசி,
கொஞ்சி மகிழ்ந்து குலவும் போதும்
தனியே இருவரும் தங்கிவிட்டாலும்
கொச்சைப் பேச்சோ காமக்குறும்போ
காட்டினதில்லை. கருத்தில் என்னவோ !
பெண்களுக்குள்ள பிறவிக்குணத்தால்
ஆசையை அடக்குதல் அவர்கள் இயல்பால்
மங்களம் அடக்கம் மற்றிலை எனினும்
ஆண்களுக்குள்ள ஆத்திர இயல்பால்
வழக்கமாகவே வாலிபர்க்குள்ள
துடிப்புகள் எதுவும் தோன்றும்படிக்கு
சங்கரலிங்கனும் சபலப்பதட்டம்
காட்டினதில்லை. காரணம் அதனால்
விரைவில் இவர்கள் விவாகமாவதை
அவசரப் படுத்தும் அவசிய மின்றிக்
கலியாணப் பேச்சைக் கருதுவாரில்லை.
மங்களம் போல், ஒரு மருமகள் கிடைப்பது
புண்ணிய மென்றே பூரித்திருந்த
அன்னபூரணியும் அவகாசமாகவே
கணவரிடத்தில் கருத்தைச் சொல்லி,
சங்கரலிங்கன் மங்களாம்பாளின்
திருமணம் செய்யத் தீர்மானித்திருக்க,
பணத்தை மட்டும் பெரிதெனப் பார்த்து
கோவிந்த ராஜரின் மகளைக் கொள்ளத்
திடீரெனக் கணவர் தீர்மானித்ததில்
அன்னபூரணிவெகு அவஸ்தை யுற்றாள்.
'' சங்கரன் சிறிதும் சம்மதம் செய்யான்.
பணமென்று விட்டால் குணமெதும் பாராத்
தன்னுடைக் கணவர் என்ன செய்வாரோ !
தந்தையும் மகனும் சந்திக்கும் வேளையில்

எப்படி ஆகுமோ ஏதோ !" என்று
அமைதி இழந்தாள் அன்னபூரணியே.
கண்டிக்க வேண்டிய காரணம் இன்றி
தண்டிக்க வேண்டிய தப்பிதம் இன்றி
அன்புடன் வளர்த்த அருமை மகனுய்
சங்கரலிங்கன் எங்கும் எதிலும்
தந்தை சொன்னதைத் தட்டினதில்லை.
அந்த நினைப்பில் அவர்சொல் இதையும்
ஒப்புவான் என்றே உறுதியாய் எண்ணித்
திருமண விஷயமும் தீர்மானித்தார்.
சின்ன வயதிலே சொன்னது செயினும்
வயது முதிர்ந்துள வாலிபன் ஆனவன்
சுதந்தர உணர்ச்சிகள் தோன்றின பின்னர்,
அதுவும் இப்படி அபூர்வதினுசாய்
நேசமாய் முளைத்துப் பாசமாய் வளர்ந்து
பிரியம் முதிர்ந்து ப்ரேமை எனும்படி
காரணம் கடந்த காதலராகச்
சங்கரலிங்கனும் மங்களாம்பாளும்
இருந்த நிலைமையை இவரென்ன கண்டார் ?

சேனையிற் சேர்ந்தது

பாஞ்சால நாட்டின் மத்திய பகுதியில்
ஜான்சி என்கிற நகரைச் சார்ந்த
மாபெரும் சமவெளி மைதானத்தில்
ராணுவப் பயிற்சிகள் நடைபெறுதற்கே
கூட்டமாய் அடித்துள கூடாரம் ஒன்றில்
வடதேசத்தில் வழக்கமாய் நடுக்கும்
பனிக்காலத்துப் பாதிராத்திரியில்
ஒடுக்கமானதோர் மடக்குக் கட்டிலில்
குளிருக்காகக் குறுகிக் குறுகிக்
கனத்த ராணுவக் கம்பளமாகிய
போர்வைக்குள்ளே புரண்டவண்ணமாய்,
ஆறுமாதமாய் அடக்கிவைத்திருந்த
சொந்தஊர் மேலுள சிந்தனை சூழ்ந்து,
சங்கடம் மிஞ்சின சங்கரலிங்கன்
தூக்கம் வராமல் துடித்துக் கொண்டு
நேர்ந்த படியெலாம் நினைக்கலானான்.
கோபிக்காதவர் கோபம் கொதித்துச்
சொல்லாத வார்த்தை சொன்னரென்று
தந்தையினிடத்தில் வந்த வருத்தமே
ஊரையே விட்டும் உடனே ஓடிடக்
கடைசியில் நேர்ந்த காரணம் எனினும்
' அடிமை வாழ்வை அகன்றுஇந் நாட்டார்
சுதந்தர அரசியல் துவக்கும் முன்னல்
ஆணெனப் பிறந்துள அத்தனை பேரும்
பட்டாளத்திலே பயிற்சிகள் பெறுவது
அவசியம் ' என்று,தான் அநேக நாளாய்க்
கொண்ட கருத்தினைக் கொண்டு செலுத்தவே

உந்தின ஆசைதான் உண்மைக் காரணம்.
ஜெர்மனி யுத்தம் சேர்வதன் முன்னுல்
ஆயிரத்துத்தொள் ளாயிரத்தோடு
முப்பத்தி ஏழாம் ஆண்டின் முடிவில்
பி. ஏ. தேறிய பிள்ளைகள் தமக்கு
உயர்ந்த ராணுவ உத்தியோகங்களும்
' கிங்ஸ் கமிஷனும் ' கிடைக்கும் என்று
இந்திய சர்க்கார் எங்கணும் விடுத்த
விளம்பரம் பார்த்து விண்ணப்பம் போட்ட
ஒன்பது இளைஞருள் சங்கரன் ஒருவன்.
கோபால கிருஷ்ணர் கோவிந்த ராஜரின்
மகளைத் தனக்கு மணம்பேசி வந்ததின்
ஒருவாரம் முன்வந்த உத்தரவதனில்
சங்கரலிங்கனைக் ' கிங்ஸ் கமிஷனில் '
எடுத்துளதாக எழுதியிருந்தது.
சேனையிற் சேர்ந்திட விரும்பும் சேதியை
தந்தையருக்கும் தாயாருக்கும்
எந்தவிதத்தில் எப்படிச் சொன்னுல்
அனுமதி வருமென அறியாதவனுய்,
சேர்வதா விடுவதா திகைப்புகள் வந்து
சங்கரலிங்கன் சங்கடம் மிகுந்து
பற்பல யோசனை பண்ணியும் பயனிலை.
தந்தையோ, அதற்குச் சம்மதம் தாரார்;
அன்னையோ சொன்னதும் குன்னியே குலைவார்.
அப்படி இருக்கையில், அவனை ஒருநாள்
கோபால கிருஷ்ணரே கூப்பிடச் சொல்லி
கலியாணப் பேச்சைக் கனிவுடன் நுழைத்து,
கோவிந்த ராஜரின் குமார்த்தியைக் குறித்து
சங்கர லிங்கனின் சம்மமதம் கோரினர்.
மகனே அதனை முற்றிலும் மறுத்து

நீண்ட நேரமாய் நியாயங்கள் பேசி
அங்கே பெண்கொள ஆசைப்படுவது
பணத்தைக் கருதியே பண்ணுவதன்றி
நலமெதும் தனக்கென நாடுதல் அன்றென
மறுத்து விட்டதில் எரிச்சல் மண்டிய
கோபால கிருஷ்ணர் கடிந்து கூறிய
வசை யைக் கேட்டதும் வருத்தம் மிகுந்து
விரைந்து உடனே வெளியே சென்று
அன்னைக்கு மட்டும் சின்ன ஓர் கடிதம் ...
" சங்கரலிங்கன் சாஷ்டாங்க தெண்டன்
சமர்ப்பித்து எழுதிய சங்கதி யாதெனில்:
கோவிந்த ராஜரின் மகளைக் கோரி
திருமணம் எனக்குத் தீர்மானித்ததாய்
தந்தை சொன்னதால் நொந்துளேன் அம்மா!
இத்தனை சீக்கிரம் விவாகம் எதற்கு?
அந்தப் பெண்ணை நான் அறவே விரும்பேன்.
என்னுடை நோக்கம் எங்கே என்பதை
அம்மா! தாங்கள் முற்றிலும் அறிவீர்.
அதற்கும் இப்போது அவசரம் இல்லை
பிரியம் போலப் பின்னுல் செய்வோம்.
அப்பா பேசின அவசரம் பார்த்தால்
உடனே முகூர்த்தம் ஊர்ஜிதம் ஆகும்.
அதற்குப் பயந்து அயலூர் சென்று
சில நாள் கழித்துத் திரும்பி வருகிறேன்.
தயவு செய்து அம்மா! தாங்கள் மட்டும்
வருத்தப்படாமல் வாழ்ந்திட வேண்டும்.
மங்களத்துக்குமிச் சங்கதி சொல்லி,
கவலைகொள்ளாமல் காத்திடவேண்டும்
அன்னையே தங்கள் பொன்னடி சரணம் "
என்பதை எழுதி மிகவும் இசைவுள

நண்பன் இடத்தில் ' நான்குநாள் கழித்து
கொடுக்கும்படிக்கு ' உளவுகள் கூறிச்
சென்று மறைந்தவன் சென்னை சேர்ந்து
அதிகாரி யிடத்தில் ' ஆஜர் ' ஆனதும்
பட்டாள முறையில் பதிவான பின்னர்
பாஞ்சால நாட்டில் பயிற்சி பெறுகிறுன்.
சேனைப் பயிற்சியில் சீக்கிரமாகவே
திறமைசாலியாய்த் திகழ்ந்து சங்கரன்
அதிகாரிகளின் அன்பிற்கு மிகவும்
பாத்திரனுகிப் பலவிதத்தாலும்
மெச்சத் தகுந்துள மேன்மை பெற்றதால்
வீட்டைப் பற்றிய விசாரமே இன்றி
மங்களாம் பாளையும் மறந்தவன் போல
ஆறு மாதமாய் அலுப்பற்றிருந்தான்.
செயற்கைச் சூழ்நிலை மறக்கச் செய்யினும்
இயற்கையின் ஆற்றலை எதிர்க்க முடியுமா ?
அன்பின் தொடர்பினை அறுத்தல் ஆகுமா ?
இளமையின் இயல்பை அழிக்க இயலுமா ?
பாசம் என்பதை விலக்கிடப் படுமா ?
காதலின் வலிமையைக் கலைக்க முடியுமா ?
காமத் துடிப்புதான் கட்டுக் கடங்குமா ?
வீட்டின் நினைவுகள் விட்டிடக் கூடுமா ?
பட்டாளம் எனினும் பயப்படுமோ இவை ?
கோபம் வந்ததால் கடிந்து கூறினும்
பிறந்த நாளாய்ப் பிறிதொரு எதிலும்
தயவே செய்துள தந்தையைக் கருதி,
அனுதினம் தனக்கு அறங்களைப் புகட்டும்
அன்பின் வடிவாம் அன்னையை எண்ணி,
மறக்கவே முடியா மங்களாம் பாளையும்
அவளுடை தந்தை அமைதியும் அன்பும்

பெருங்குணம் பலவும் பிணைந்தவ ராகிய
மகா தேவரை, அவருடை மனைவியாம்
ஜானகி யம்மாள் சற்குணச் சிறப்பை,
தன்னுடன் மங்களம் தனியே இருந்து
கொஞ்சிக் குலாவலைக் குளிர்ந்து நோக்கி
சந்தோஷ மடையும் அவர்கள் சலுகையை,
காதலின் இயல்பும் காமக் குணமும்
இன்ன தென்றறியா இளம்பி ராயத்திலே
முன்னெரு நாளில் வீட்டுக்கு முன்னல்
தானும் அவளும் தனியே இருக்கையில்
குறத்தியர் பாடிய குறிகளில் அவர்கள்
"நீங்கள் இருவரும் நிகரற்ற ஜோடிதான்
கண்மணி இவளை நீ கலியாணம் பண்ணி
கப்பலில் ஏறிச் சீமைகள் கடந்து
காசு பணங்களைச் சேர்ப்பீர் காணும்"
என்றது கொஞ்சம் பலித்ததை எண்ணி,
மங்களம் என்கிற மகிழ்தரும் பெயரை
கையிலே குத்திக் காட்டிய பொழுதில்
பார்த்த மங்களம் பரிகாசம் பண்ணி
"உள்ளன் புடையவர் ஒருவரை ஒருவர்
பச்சையில் குத்தியா பார்த்திட வேணும்"
என்றதும், தான்அதில் ஏமாந்து போனதும்,
நினைத்து நினைத்து நெஞ்சம் குமுறிட
பதைத்துச் சங்கரன் படுக்கையில் புரண்டான்.
மாதங்கள் ஆறும் ஓடி மறைந்தும்
மாதா பிதாவும் மங்களம் கூட
தன்னுடை இருப்பிடம் இன்ன தென்றறியக்
கூடா தவராய்க் குலைந்திடு வார்களே!
சிலநாள் கழிந்ததும் சீக்கிரம் வருவதாய்
தாயாருக்குக் கடிதம் தந்ததை

அடிக்கடி நினைத்து ஆதங்கம் அடைவான்.
விநாடி நேரமும் விடாது மனதில்
குடிகொண் டிருக்கும் குலக்கொடி மங்களம்
எப்படித் தவிப்பளோ என்பதை எண்ணுவான்.
தன்னிலை தெரியார் அன்னையும் தந்தையும்
என்ன செய்தார்களோ என்றுளம் ஏங்குவான்.
இப்படி யாகவே இரவு முழுவதும்
விசனப் பட்டே பொழுதும் விடிந்தது.
'காப்பி' குடித்ததும் கையோடு கையாய்
மங்களம் அவட்கொரு கடிதம் வரைந்து
தாயாருக்கும் தகவல் கொடுத்திட
வேண்டும் என்கிற விருப்பம் தூண்டிட
படுக்கையை விட்டுப் பாய்ச்சலில் எழுந்து
கூடாரத்தின் வாசலைக் குறுகுமுன்
ஜெயபால் என்கிற பெயருள்ள ஜெனரல்
பயிற்சி முகாமின் பார்வைத் தலைவன்
சங்கர லிங்கனைச் சந்திக்க வந்தான்.
சங்கர லிங்கன் அங்குற்ற நாள்முதல்
இவர்கள் இருவரும் எதனை லேயோ
ஒருவருக் கொருவர் பாசம் உதித்து
நாளுக்கு நாளாய் நட்பு மிகுந்தனர்.
இரவும் பகலும் இருவரும் சேர்ந்தே
ஒவ்வொரு நாளும் உணவு கொள்வார்கள்
... ...
சங்கர லிங்கன் ஜெயபால் சகிதம்
அறுபது பேர்களை அன்றைய தினமே
பங்காளம் செலப் பயணப் படும்படி
தளபதி அனுப்பிய தகவல் வந்ததை
தெரியப் படுத்தவே ஜெயபால் வந்தது.
உடனே புறப்பட உத்தரவென்றதால்

விடிகிற வரையிலும் ஏங்கி விரும்பிய
கடிதம் எழுதவும் காலமில்லாமல்
சங்கர லிங்கன் சாமான் அனைத்தையும்
மூட்டை கட்டும் வேலையில் முனைந்து
அன்றே பயணமாய் அடுத்த நாளிரவில்
கல்கத்தாவின் கடைப்புறம் அதனில்
பட்டாளங்கள் பயிற்சிக் கென்றுள
இடத்தில் வந்து இறங்கித் தங்கினன்.
கல்கத்தா சேர்ந்ததும் கடிதமொன் றெழுதி
தங்கும் இடத்தை மங்களம் முதலியோர்
அறியச் செய்திடும் ஆசை பற்றியே
பச்சையில் பெயரைப் பார்த்துப் பார்த்து
வண்டியில் நெடுகவும் நினைத்து வந்தவன்
நினைத்ததை எழுதிட நேரமில்லாமல்
மூட்டைகள் சாமான் முடிப்புகள் அவிழ்த்து
செம்மை பார்க்கவே இரண்டுநாள் சென்றன.
மூன்றுவது நாள் அதுவே முயற்சியாய்
கடிதம் எழுதிடக் காகிதம் எடுத்து
ஆரம்பம் செய்து 'அன்பார்ந்த மங்களம்'
என்பதை முடிக்குமுன் எதிர்வந்து ஏவலாள்
"அவசர ஜோலியாம், தளபதி அழைக்கிறார்,
உடனே வரும்படி உத்தரவு" என்றான்.
கையில் இருந்தஅக் காகிதம் பேனை
இரண்டையும் மேஜைமேல் இட்டெறிந் திட்டு
உடுப்புகள் அணிந்து ஓடினன் அங்கே.
'திடமும் திறமும் தீவிரம் வாய்ந்து
பயிற்சியிற் சிறந்த பனிரண்டு பேரை
பர்மா விற்குப் பயணப் படுத்தி
உடனே அனுப்பிட உத்தர' வென்று
அகில இந்தியா அதிபதி அனுப்பின

தந்தி வந்ததைத் தளபதி காட்டி
ஜெயபால் சங்கர லிங்கனும் சேர்ந்த
பனிரண்டு பேர்களைப் பார்த்துப் பொறுக்கிய
தாக்கீது ஒன்றையும் கையிலே தந்து
அன்றே புறப்பட ஆணையும் சொன்னர்.
நின்று நிமிரவும் நேரமில் லாமல்
மூன்றுநாள் முன்னல் அவிழ்த்த மூட்டையைக்
கட்டிக் கொண்டுபோய்க் கப்பலில் ஏறினன்.
ரங்கூன் சேர்ந்து அங்கோர் இடத்தில்
தனக்கெனக் காட்டிய தனிஒரு விடுதியில்
சாமான் மூட்டையைச் சட்டென அவிழ்த்து
முதற்காரியமாய் முன்னே நினைத்த
கடிதம் எழுதிட மிகவும் கருத்துடன்
புதியஓர் தாளில் பொறிக்கலா யினன்.
"அருமை மங்களம்! ஆசீர்வதிக்கிறேன்.
மனமுவந் தென்னை நீ மன்னிக்க வேண்டும்.
இதுவரை என்னுடை இருப்பிடங் கூடத்
தெரிவிக்காத ஓர் தீமை செய்திட்டேன்.
உன்னைப் பிரிந்துநான் உயிர் பிரிவதுபோல்
தவிக்கிறேன் என்பது தவிர்க்கொணு சத்தியம்.
உன்னிடம் கூட ஓர் உரைசொல்லாமல்
வந்திட நேர்ந்ததில் மிகவும் வருத்தமே.
அப்படி நேர்ந்ததும் ஆண்டவன் திருவுளம்
என்றே நினைத்துநான் வந்திட இசைந்தேன்.
அங்குநான் தங்கினுல் அன்புஎன் தந்தை
பணத்தையே முக்கிய பரிசாய்க் கருதி
எனக்குச் சிறிதுமே இஷ்டமில்லாதஓர்
பெண்ணை எனக்கெனப் பேசிமுடித்ததை
கலியாணம் செய்யவும் கட்டாயப்படுத்துவர்
என்பதற்கஞ்சிநான் என்னுடன் சிலருமாய்

சென்னைக்குப்போய்ச் சேனையிற் சேர்ந்தோம்.
பட்டாள வேலைகள் பயிற்சியில் சிறந்து
'சார்ஜெண்ட்மேஜர்' என்னும் தலைப்புடன்
'கர்னல்' துரையின் காரியதரிசியாய்
இருந்து வருகிறேன் இனிச்சிலநாளில்
விடுமுறை பெற்று விரைவினில் வந்து
மங்களம்! உன்னுடன் குலவி மகிழ்வேன்.
மங்களம்! உன்னையும் மறந்திடுவேனே?
எப்போதோஎன் இடதுகை அதனில்
குறத்தியர் வந்துமுன் பச்சை குத்திய
'மங்களம்' என்னும் மகிழ்தரும் பெயரை
பார்க்கும் போதெலாம் உன்னையே பார்க்கிற
மாதிரியாகவே மகிழ்ச்சி யடைகிறேன்.
பச்சையை அப்போது பரிகாசம் செய்தாய்
அதுதான் இப்போது ஆறுதல் தருவது.
என்னையே எண்ணிநீ ஏங்கித் தவிப்பாய்
அறிவேன் மங்களம். அறிவேன், அறிவேன்.
இதுநாள் வரைக்கும் எழுதாதிருந்ததை
மன்னிக்க வேண்டும் மறுமுறை கேட்கிறேன்.
இங்குள பலரும் 'ஷங்கர்ஜி' என்றென்னை
அழைப்பது கேட்டால் அதிசயப்படுவாய்.
தந்தை, தாயார், தம்பிமார், தங்கையர்
என்னுடை வீட்டார் எல்லாருக்கும்
கடிதம் இதுவே காட்டுவாய் கண்மணீ
விடைநீ அனுப்ப விலாசம் தந்துளேன்"
என்றுதன் விலாசமும் எழுதிமுடித்து,
தந்தை மூலமாய் தரும்படி அதிலே
மங்களம் தகப்பனர் மகாதேவரின்
வீட்டு விலாசம் விவரமாய் எழுதி
அனுப்பும் முறையில் அனுப்பிடச் செய்தான்.

என்னவானுனே !

கோவிந்தராஜரின் குமரியை மணக்க
விரும்பாததனல் வெளியூர்களிலே
சிலநாள் இருந்து சீக்கிரம் அவனே
வருவான் என்றே வருத்தப்படாமல்
அன்னபூரணியும் அமைதியுற் றிருந்தாள்.
சொன்னது செய்யும் தன்னுடை ஒருமகன்
மறுத்துப் பேசின வருத்தம் மிஞ்சிட
கொதித்துச் சீறிய கோபாலகிருஷ்ணர்
காணுது போனபின் கண்ணீர் கலங்கி
எங்கு சென்றுனே என்னமோ என்று
மகனையே நினைத்து மருள லாயினர்.
விரைவினில் திரும்பி வீட்டுக்கு வருவதாய்
சங்கரலிங்கன் தாயாருக்கொரு
கடிதம் தந்ததைக் காட்டின பிறகே
கோபாலகிருஷ்ணரும் ஏக்கம் குறைந்தார்.
தந்தையும் மகனும் சந்தித்த சமயம்
என்ன நடந்தது என்பதைப் பற்றி
அன்னபூரணியும் அவரைக் கேட்டிலள்.
... ...
மகாதேவரும் மங்களம் முதலியோர்
இன்னெரு ஊரில் இருந்ததனலே
சங்கரன் மறைத்த சங்கதி யதனை
எளிதில் அறியக் காரணம் இல்லை;
அன்னபூரணியும் அறிவிக்க வில்லை.
சங்கரலிங்கன் எங்கோ போனபின்
நாட்களும் ஓடி வாரமும் நடந்து

மாதம்இரண்டு மறைந்த பின்னரே
பெற்றவள் ஏக்கம் முற்றத் தொடங்கி
அன்னபூரணியும் அலுக்க லாயினள் ;
கோபாலகிருஷ்ணரும் கவலை கொண்டார்.
பழக்கம் ஆகிய பற்பல ஊர்களில்
தெரிந்தவர்க் கெல்லாம் தெரியப் படுத்தி
எழுதிக் கேட்டும் எங்குமே இல்லை !
அப்படி மாதம் ஆறும் அகன்றன.
புத்திர வாஞ்சை பொல்லாததன்றே !
அறிவிற் சிறந்த அன்னபூரணியும்
கண்ணீர் சிந்திக் கலங்க லானள்.
அதற்குப் பிறகும் அடக்க முடியுமா ?
அக்கம் பக்கமும் அறியத் தொடங்கி
மகாதேவரும் மங்களாம்பாளும்
ஜானகி யவளும் சங்கதி கேட்டு
நேரில் அறிந்திட நினைவு மேலிட்டு
வசந்த புரிக்கு வந்திட விரும்பி
விடுமுறை கோரி விண்ணப்பம் செய்து
உத்தரவுக்காய் உளைந்து நின்றனர்
... ...
பகலில், உண்டபின் படுக்கையிற் கிடந்து
சிரமம்தீரச் சிறிதள வேனும்
தூங்கா விடினும் துவளப் புரண்டு
எழுந்த பிறகுதான் எதையும் செய்வது
கோபாலகிருஷ்ணர் கொண்டுள வழக்கம்.
மகனைப் பிரிந்த ஏழாம் மாதம்
மாடியில் அவருடை மஞ்சத்தின்மேல்
அப்படி ஒருநாள் அவர் படுத்திருந்து
மகனைப் பற்றிய கவலைகள் மருட்ட
ஏங்கி யிருக்கையில் என்னமோ அலுவலாய்

அன்னபூரணியும் அங்கே வந்தனள்.
மனைவியைக் கண்டதும் மகன்மேற் பாசம்
அதிகமாய் அலட்ட மனைவியை அழைத்து,
புத்திரன் நினைப்பைப் புலம்பினர் கணவர்.
இருவரும் சேர்ந்த ஏக்கப் பேச்சில்
அதுநாள் வரையிலும் அவரிடம் கேட்க
ஆசைகொள்ளாதவள் அன்னபூரணியும்
" நீங்களும் அவனும் சந்தித்த நேரம்
என்ன நடந்தது ?" என்று வினவினள்.
" கோவிந்தராஜரின் மகளைக் கொள்வது
பணத்திற்கேஎன பரிகாசம் பண்ணி
என்றுமில்லாவிதம் எதிர்ப்புகள் சொல்லி
'கலியாணம் என்பது கள்ளச் சந்தையா ?
காசாசைக்கா காதல் உதிக்கும் ?'
என்பன சொல்லி ஏளனம் செய்தான்.
கோபம் பொங்கிய கொதிப்பால் நானும்
இப்படிப் பேசும்நீ என்மகன் அல்ல ;
எக்கேடோ கெட்டு எங்கோ போய்த்தொலை'
என்றேன் உடனே என்னைவிட் டகன்றான்
அப்படிச் சொன்னது அதுஎன் பிழைதான்.
யோசனை யின்றிப் பேசினேன் எனினும்
இதுநாள் வரையில் எதைச்சொன்னாலும்
எதிர்த்துப் பேசுதல் இன்னதென்றறியான்
இப்படி மறைவான் என்பதை ஐயோ !
எண்ணது போனேன் விதியே " என்று
வாய் விட்டழுது கண்ணீர் வடித்துக்
கோபாலகிருஷ்ணர் குலைந்து விம்மினர்.

... ...

அணியும் துணியும் அலங்காரங்களும்
படிப்புக்கு வேண்டிய பலவித செலவும்

செல்வ மிகுதியால் செய்ததே ; அத்துடன்
ஏக புத்திரன் என்கிற ஆசையும்
கொண்டவர் எனினும் கோபாலகிருஷ்ணர்
சங்கரலிங்கனின் சற்குணச் சிறப்பை,
கல்வியின் தேர்ச்சியை, கலைகளில் ரஸனையை,
அன்பின் நிலையை, ஆசையின் போக்கை,
சுதந்தர உணர்ச்சியை, சுபாவ தினுசை,
வாழ்க்கையின் குறியை, மனதின் வலிமையை,
கோபாலகிருஷ்ணர் கொஞ்சமும் அறியார்.
பணத்தைத் தேடவே பகலெலாம் அலைவார்
நாள்தவறாமல் நடு ராத்திரிதான்
வீட்டுக்கு வருவார் ; படுப்பார் ; விடியுமுன்
எழுவார் மீண்டும் ; எங்கோ போவார்.
குழந்தையை எடுத்துக் கொஞ்சிக் குலவவோ
உடலைத் தீண்டும் இன்பம் உணரவோ
குறுநடை கண்டு உள்ளம் குளிரவோ
மழலையைக் கேட்டு இன்னிசை மாந்தவோ
படிப்பை, எழுத்தைப் பார்த்து மகிழவோ
விளையாடும் சிசுவின் வேடிக்கை பார்க்கவோ
நேரமே இல்லா நிலைமையில் அலைந்த
கோபால கிருஷ்ணர், குமாரன் அருமையை
அறியாது போனதில் அதிசயம் இல்லை.
அப்படிப்பட்டவர் அவருமே கூட
அழுதுவிட்டாரெனின் அன்னபூரணியார்
அடைந்த துயரம் அளவிடக் கூடுமா ?
பொங்கிய அழுகையைப் பொறுத்துக் கொண்டு
" தலைக்குமேல் வளர்ந்த தனிமகன் அவனை
இப்படித்தானு இகழ்வது நீங்கள் ?
பால்மணம் மறையாப் பருவம் தொடங்கி
காதல் என்கிற அதையும் கடந்த

பற்பல ஜென்மம் தொடர்ந்து பழகிய
ஆசையோ என்ன அவன்ஒரு பெண்ணை
நேசித்து வருவதை அறியாது நீங்கள்
வேறொரு பெண்ணை விவாகம் செய்திடக்
காட்டாயம் பேசிநம் கண்மணி அவளை
ஊரை விட்டே ஓட்டிவிட்டீர்களே !
எங்குசென்றனை ! என்ன வானனை !
இருக்கிற இடமும் தெரிய இல்லையே !
ஐயோ !" என்று அன்னபூ ரணியும்
அழுகைக் குரலில் ஆரம்பிக்குமுன்
" வேறொரு பெண்ணை விரும்பியா சங்கரன்
என்னுடன் அப்படி எதிர்த்துப் பேசினன் !
நெடுநா ளாய்அவன் நேசித்து வருகிற
இன்னொரு பெண்அவள் இருக்கிறாள் என்பதை
அவனும் அன்றைக்கு அதைப்பற்றி ஒன்றும்
சொல்லவே இல்லையே ; சூசக மாகவும்
அப்படி ஆசை அவனுக்கு உள்ளதை
கடுகள வாயினும் காட்டவும் இல்லையே !
முன்னமே இதனை முற்றிலும் அறிந்துள
நீ கூட எனக்கு நினைப்பூட் டவில்லையே!
அப்படி விரும்பும் அந்தப் பெண்யார் ?"
என்றார் கணவர், மனைவி இயம்புவாள் :
" பணம் பணம் என்றே பகலிரவாக
ஓடித் திரிகிற உங்களுக் குத்தான்
இங்கே நடக்கிற எதையும் அறிந்திட
நேரமே இல்லையே, நீங்கள் எப்படி
அவனது ஆசையை அறிய முடியும் ?
அவனுடை விருப்பை ஆரா யாமல்
நீங்களே பெண்ணை நிச்சயம் செய்தபின்
நான்தான் எப்படி நடுவே சொல்வது ?

மகாதேவரின் குமாரத்தி மங்களம்
அவள்தான் அவனது ஆசைக் குகந்தவள்.
என்பதை இங்குள எல்லோரும் அறிவர் ;
நீங்கள் மட்டுமே அதிலே நீக்கம்.
கலியா ணத்தைக் கருதும் போது
சொல்லலாம் என்று சும்மா இருந்தேன்.
கோவிந்த ராஜரின் மகளைக் குறித்து
என்னிடம் கூட்டச் சொல்லாது இப்படி
நீங்கள் செய்தது நியாயம் தானா ?"
என்றாள் மனைவி என்றதும் கணவன்...
" அப்படியா அது ! அறியாது போனேன்.
நிச்சயம் இதை நான் நினைக்கவே இல்லை.
மங்களாம் பாளும் அழகான மங்கைதான்.
மகாதேவரும் மாசற்ற நல்லவர்.
என்னமோ நான்அதை எண்ணவே யில்லை "
என்று முடிக்குமுன் எதிர்பா ராதஓர்
அதிசயம் போலவே அவர்களை நாடி
மகாதேவரே மாடிக்குள் வந்தார்.
அவருக்குப் பின் ஜானகி அம்மாள்
இடுப்பில்ஓர் சிசுவும் இன்னும் மூன்று
மக்களும் தொடர வந்தாள் அங்கே.
வந்த இவர்களை வரவேற்று ஆனபின்,
நிமிஷம் இரண்டு நேரம் சென்றதும்
மாநிலம் அறியா மற்றொரு நாட்டின்
வித்தகம் நிறைந்தஓர் சித்திர வித்துவான்
நீரிலும் அல்ல, நெய்யிலும் அல்ல,
அமிழ்தம் என்கிற அதிலும் அல்ல,
தெய்விகம் என்றிடும் திரவம் அதனில்
சாயம் குழைத்து, நேயம் கலந்து,
எழுதிய சித்திரம் எழுந்து நடந்து;

அடிமேல் அடிவைத்து அசைவது போல,
பருவம் தருகிற பணிவும் தணிவுமாய்
மங்களாம் பாளும் மாடிக்குள் வந்தாள்.
மங்களம் வந்ததை மகனே வந்ததாய்
அன்னபூ ரணியவள் ஓடி அணைத்தாள்.
கோபால கிருஷ்ணரோ கூசிக் குழம்பி
மின்னலைப் பார்த்தெனத் தன்னுடைக் கண்கள்
இருண்டு, தெளிந்து, மருண்டு, மலைத்து,
விழுங்க விழுங்கப் பார்த்து வியந்து,
உள்ளம் நாணுற ஊமையே போன்ருர்.
ஏழையின் மகளென எண்ணின தாலோ
என்றுமே அவளை எண்ணுத தாலோ
அவகாசம் இல்லாத அதனல் தானே
அதுநாள் வரையிலும் அன்புடன் பார்த்து
மங்களாம் பாளின் அழகினை மதிக்கக்
கூடாது போய்விட்ட கோபாலகிருஷ்ணர்,
அமரரும் வியக்கும் அற்புத சுந்தர
வடிவின் அமைப்பை, வர்ணச் சிறப்பை,
பார்த்துப் பார்த்துப் பரவச முற்று
மகனையும் நினைத்து உள்ளம் மயங்கி
வெளியே காட்டவும் வெட்க மேலிட்டு
சந்தோஷத் துடன் சல்லா பித்தார்.
அன்னையின் துடிப்புடன் அன்னபூரணியார்
மகாதேவரை, மலைப்புடன் பார்த்து
" சங்கரலிங்கன் எங்குளன் என்றிட
உங்களுக் காயினும் கடிதம் உண்டா ?"
என்றனள். அவரும் " இல்லை " என்றனர்.
" மங்களாம் பாளையும் மறந்துவிட்டானு !
இருக்கிற இடத்தை இவளுக் காயினும்
அறியப் படுத்தவும் அன்பற்றுப் போனதா !

என்னரும் ஒருமகன் என்னவானுனே
தெய்வமே " என்று தேம்பித் தேம்பி
அன்னபூ ரணியும் அழுதிட லானுள்.
சகிக்க முடியுமோ ? ஜானகி அழுதாள்.
துன்பமும் துன்புறும் துறவியின் திடமுள
மகாதேவரும் மனந்தடு மாறினர்.
மங்களம் அளவிலா சங்கடம் அடைந்து
உணர்ச்சியின் வேகம் உச்சியில் தாக்கச்
சொந்த நினைப்பின் சிந்தனை இழந்து
எதுவும் செய்திட இயலா தவளாய்க்
கவிழ்ந்த தலையுடன் கற்சிலை போலத்
திசையெலாம் சுழலத் திகைத்து நின்ருள்.

கயவன் உறவு

முன்சொன் னதுபோல் உத்யோக முறையில்
மகாதேவரூர் மாற்றுதல் ஆகி,
விருதூர் வந்து வசிக்கிற வீட்டின்
எதிர்வீடாக இருந்திட நேர்ந்தது
ஐந்நூறு வேலிக்கு அதிகாரியாகப்
பணத்திமிர் தூண்டும் பாபச் செயல்கள்
அனைத்தும் சேர்ந்தொரு ஆள்வடி வாகிய
குப்புச் சாமியாம் குணங்கெட்ட வாலிபன்,
மாபெரும் செல்வனின் மாளிகை வீடு.
குப்புச் சாமிஓர் காமக் குறும்பன்.
ஆளில் அழகன் அறிவில் அதமன்.
பாடு படாமல் பகட்டுகள் செய்து
உழைப்பில் லாமல் உண்டு கொழுத்துக்
காரிய மின்றிக் கோயில் காளைபோல்
அங்கும் இங்கும் அலைந்து திரிந்து
பொய்யும் புளுகுமே பொழுது போக்காகக்
கட்சிச் சண்டையே களியாட் டமாக,
விவகார விருத்தியே வேடிக்கை யாகக்
கூலியை விரும்பிக் கொலையும் செய்கிற
பாதகர் கும்பலே பந்துமித் திரராய்,
காமக் களிப்பே வாழ்வின் கருத்தாய்,
சூதும் வாதுமே சூழும் துணைவராய்,
தறுக்கிய முறுக்கே தலையின் தன்மையாய்,
இச்சகம் கேட்கவே செவிகள் இருப்பதாய்,
பெண்களைப் பார்க்கவே கண்களைப் பெற்றதாய்,
வேசையர் மோப்பமே மூக்கின் வேலையாய்,
வாதுகள் பேசவே வாயின் வைப்பாய்

கள்ளக் கடிதமே கைகளின் கடமையாய்,
நீசத் தனங்களே நெஞ்சக நினைப்பாய்,
பிறர்மனை நாடலே கால்களின் பெற்றியாய்,
ஆசைகள் சுமப்பதே ஆக்கையின் நோக்கமாய்,
சுகபோ கங்களே தேடும் சொர்க்கமாய்,
இறைவனை மறுப்பதே இறுமாப் பாக,
இருப்பவன் மங்களம் எதிர்வீட்டுக்காரன் ;
இருபத்தி ஏழு பிராயம் இருக்கும்.
பதினொன்கு வயது பாலனு யிருக்கையில்
அன்னையும் தந்தையும் ஆசைப்பட்டதால்
கோமதி என்கிற குணமுள்ள பெண்ணை
செல்லத் திருமணம் செய்து வைத்தார்கள்.
அழகில்லை யென்று அநியாயம் சொல்லி,
கட்டின மனைவிபால் களங்கமே கண்டு
ஊரார் பெண்களை உயர்த்திப் பேசுவான்.
ஆயினும் அவளிடம் மிகவும் அதிகமாய்
அவனுடைப் பெற்ரோர் அன்பு செய்ததால்
முற்றிலும் வெறுக்க முடியாது போனதால்
காமப் பசியின் களைதீர்க்க மட்டுமே
கருவிபோல் மனைவியைக் கருதி வந்ததனால்
இரண்டு பெண்களை ஈன்றனள் கோமதி.
இளையபெண் பிறந்த ஏழாம் மாதம்
குப்புச் சாமியின் அப்பன் இறந்தார்.
அடுத்த வருஷம் அன்னையும் மாண்டாள்.
அதிகாரம் முழுவதும் அவனிடம் வந்தது.
கிழவர்கள் ஒழிந்ததால் கேட்பவ ரில்லை.
வீணர்கள் சேர்க்கை விருத்தி யடைந்தது.
ஏமமும் ஜாமமும் காமப் பேச்சுகள்.
பட்டப் பகலையும் இரவெனும் படிக்கு
வீட்டில் எப்போதும் வேசையர் வாசம்.

ஆட்டமும் பாட்டும் சீட்டுமே அலுவல்.
சூதாட வந்திடும் சோம்பர்கள் தம்மை,
தன்னிடம் சேர்க்கத் தனித்தனி யாகவே
அவரவர் மனைக்கு 'மோட்டார்' அனுப்பி
அழைத்து வருவதே ஆட்களின் வேலை.
வெட்கம் மானம் விவஸ்தையில்லாமல்
அக்கம் பக்கம் அருவருத் திகழக்
குடித்தனம் கெடுவதில் கோமதி வருந்தி,
கணவனை ஒருநாள் கைகூப்பி வணங்கி
கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டனள்.
குப்புச் சாமியோ கொதிக்க விழித்து
முழிகளை உருட்டி மூக்கை விரித்து
உதட்டைக் கடித்து உறுமிக் கொண்டு
" நீ யார் எனக்கு நீதிகள் சொல்ல ?
தைரியம் கூறித் தட்டிக் கொடுத்தக்
கிழங்கள் தொலைந்தும் கிருதுகள் செய்கிறாய்,
இங்கு நான் உன்னை இருக்க விட்டதே
குற்றம் " என்றுக் கொடூரம் பேசி
அடுத்த நாளே அதே வேலையாய்
கோமதி அவளைக் குழந்தைக ளோடும்
தாய்வீட்டிற்கே தள்ளி விட்டவனுய்,
ஏனென்று கேட்க எவருமில் லாமல்,
கரைகள் உடைந்த கால்வாய் போலும்
இழுத்து நிறுத்தும் 'பிரேக்குகள்' இல்லா
'மோட்டார்' வண்டியின் முடுக்கைப் போலும்
கடிவாளமில்லாக் குதிரையின் கதியாய்,
'மீட்டர்' இல்லாத மின்சாரம் போல்,
காவலில்லாத, 'கஜானு' போலும்
வேலியில் லாமல் விதைத்த பயிரெனப்
பத்தியம் கெட்டப் பண்டிதம் போலப்

போன வழியெலாம் மனசைப் போக்கிச்
செல்லும் இடமெலாம் சினத்தைச் செலுத்தி,
பாபம் என்கிற பயமில் லாமல்,
புண்ணியம் என்னும் எண்ணமே இன்றி,
இருப்பவன் அந்த எதிர்வீட்டுக் குப்பன்.
... ...
மங்களாம் பாளுடன் மகாதேவரும்
குடும்ப சகிதமாய்க் குடிபுக வென்று
எதிர்வீட்டு முன்னுல் இறங்கின பொழுதே
வேலை யற்றவனுய் வீதியிற் போகிற
பெண்களைப் பார்ப்பதே பெருத்த இன்பமாய்,
தன் வீட்டு மாடியின் தாழ்வாரத்தில்
நின்றுகொண் டிருந்த நெறி கெட்ட குப்பன்
கற்பனை யாகவே கதைகளில் வருகிற
காமன் என்கிற ரதியின் கணவனும்
உண்மை யாகவே உடலுடன் வந்தால்
கண்டதும் உடனே காலில் விழுத்து
வணங்கிடுவான் எனும் சுந்தர வடிவினள்
மங்களம் என்கிற மாபெரும் பெண்மையை
கண்டான் தன்னிரு காமக் கண்களால்.
கண்டதும் தன்னுடைக் கண்களைச் சுருக்கி
திடுக்கென நிமிர்ந்து நெஞ்சம் திமிர்ந்து
இரையைக் கண்டஓர் நரியின் இயல்பொடு
குனிந்து நிமிர்ந்து கூர்ந்து விழித்து,
மலர்வனம் கண்ட மதுகரம் போலச்
சுழன்று, சுழன்று, சூழ்ச்சிகள் நாடி,
குடம்நிறை கள்ளைக் குடியன் கண்டென
மூக்கைச் சுறுக்கி நாக்கைச் சுவைத்து,
பால்மணம் மூக்கிலே பட்டதும் வீட்டுளோர்
ஏமாறப் பார்க்கிற பூனைபோல் ஏங்கி,

வானத்தில் பறந்து வட்டமிட் டிருந்த
பருந்தொரு கோழிக் குஞ்சைப் பார்த்ததும்
குண்டுபோல் பாய்கிற கொள்கையில், குப்பன்
கிடுகிடு வென்றுக் கீழே இறங்கினன்.
தன் தனி அறைக்குள் தாவிப் புகுந்து,
பட்டுச் சட்டையைப் பார்த்துப் பொறுக்கி,
அத்தர் தினுசுகள் அதன்மேல் கொட்டி
வேகமாய் அணிந்து, வேறுள அழகுகள்
பலவும் முடித்துக் கண்ணுடி பார்த்து,
சிங்காரங்களில் சிந்தை மகிழ்வுடன்
வீதியின் குறுக்கே விரைந்து நடந்து
முன்பின் அறியா முற்றிலும் புதியவர்
மகாதேவரை மலர்ந்த முகத்துடன்
பலநாள் பழகிய நேசப் பான்மையில்
வணக்கம் காட்டி வரவேற்பு சொல்லி,
மகாதேவரும் மனைவியும் மகளும்
புதுமனை குடிபுகத் தம்முடைப் பொருள்கள்
பெட்டிகள் பேழைகள் தட்டுமுட்டுகளையும்
வண்டியில் இருந்து வாசலில் இறக்கும்
முயற்சியில் அவனும் முனைந்தவனாகி,
தன்வீட்டு ஆள்களைத் தருவித்து அவரை
அதட்டிச் சாமான் அனைத்தையும் உடனே
மகாதேவ ரோர் குடிபுகும் மனையினில்
வைக்கும் இடங்களில் வைக்கச் செய்து,
கட்டை வண்டியில் வந்த களைப்பால்
சமையல் செய்வது சங்கடம் என்று
தன்னுடை வீட்டுச் சமையற் காரரை
அவர்கள் உணவை ஆக்கச் செய்து,
பசுவின் நெய்யும் பாலும் தயிரும்
வேண்டிய யாவும் விருப்புறத் தந்து

அளவிடக் கூடா அன்பு காட்டினன்.
இங்கித சுந்தரி மங்களம் எழிலை
அருகிலே பார்த்து அனுபவித்திடவும்
பிரியம் வளரப் பேசிப் பழகவும்
தன்னுடை ஆசையைப் பின்னல் முயல
சுலபமா யிருக்கச் சூழ்ச்சி யாகவே
இப்படிச் செய்தான் குப்புச் சாமியும்.
அறிமுக மில்லா ஆண்கள் வரினும்
கள்ளமில்லாமல் உள்ளம் உவந்து
பேசிப் பழகும் பெருமையிற் சிறந்த
மங்களாம்பாளும் மிகவும் மகிழ்வுடன்
குப்புச் சாமிபால் கூச்சப்படாமல்
நயமுறப்பேசி நன்றியும் கூறினள்.
எங்கே யிருந்தோ எதிர்பா ராமல்
தாமே வந்தார் உதவிகள் தந்தார்
பரோப காரப் பண்புகள் மிகுந்த
குணவான் என்றே குப்புச் சாமியை
மகாதேவரும் மனைவியும் மதித்து
பற்பல விதமாய்ப் புகழ்ந்து பலமுறை
வந்தனம் செலுத்தி வணக்கம் செய்தனர்.

... ...

அதுமுதல் அங்கே அடிக்கடி வந்து
சேம விசாரணை செய்வது போல
வேண்டாத போதும் வேண்டுமென்றே அவன்
பரிவுடன் பற்பல உதவிகள் பண்ணிப்
பரிச்சய உறவைப் பலப்படுத்தினன்.
குப்புச் சாமியின் குணக்கேடு எதையும்
அறிந்து கொண்டிட அவகாசம் இல்லா
ஜானகி யம்மாள் சந்தோஷமுற்றாள்.
மகாதேவரும் மயங்கிப் புகழ்வார்.

அச்சம் இன்றியும் அடக்கம் மிகுந்து,
கோணுதல் இன்றியும் நாணம் சிறந்து,
மதிநலம் இருந்தும் மடமைபோல் ஒதுங்கி,
பதட்டம் எதிலும் பயிர்ப்பே கொள்ளும்
மங்களம் இவற்றில் மனதைச் செலுத்தாள்.
அவசியம் இன்றேல் அன்னியர் எவரொடும்
பேச்சுக் கொடுப்பதில் பிரியமில்லாதவள்.
அன்றியும் அவள்தன் அன்னைக்குப் பதிலாய்
வீட்டுக் குள்ளே வேலை பார்ப்பவள்.
வந்தவர் யாரொடும் தந்தையோ தாயோ
சம்பா ஷிக்கையில் தான்அங்கு நில்லாள்.
கூப்பிட்டு எதையும் கூறினுல் அல்லால்
தானாக வந்துத் தலையிட மாட்டாள்.
அப்படிப் பட்டவள் அவளுங்கூட
குப்பன் வந்தால் கூசாது பேசுவாள்.
மகாதேவரோ மாசறி யாதவர்
விடியுமுன் எழுந்து விரைவில் முழுகி
நியமம் முடித்து நிஷ்டையில் அமர்ந்து
இறைவனின் தியானம் எண்ணிய பின்னர்
தேவாரம் பாடி, திருக்குறள் அல்லது
பகவத்கீதை, 'பைபிள்,' 'குர்ஆன்,'
சைவம் வைணவ சமய நூல்களில்
சிறிதுள நேரம் சிந்தனை செலுத்தி.
காலை வேளையை அப்படிக் கழித்து,
பத்து மணிக்குமேல் போஜனம் பண்ணி
கச்சேரி போனுல் கதிரவன் மறைந்து
வெகுநேரம் போய் வீட்டுக்கு வருவதே
மகாதேவரின் தினசரி வழக்கம்.
வீட்டுக்கு வருவதை வீதியில் கண்டதும்
குப்புச்சாமியும் கூடவே வருவான்.

அதே வீதியில் அக்கம் பக்கமாய்
வசிக்கிற எவரொடும் வார்த்தை யாடவும்
நேரமே இல்லா நிலைமையில் இருந்த
மகாதேவரை மற்றவர் யாரும்
அணுக நேரினும் அநேக மாகக்
குப்புச்சாமியும் கூட இருப்பதால்
அவனைப்பற்றிய எதையும் அறிந்திட
மார்க்கமில்லாதஅம் மகாதேவரும்
குப்புச் சாமியைக் குற்றமில்லாத ஓர்
நல்லவ னென்றே மிகவும் நம்பினர்.
... ...
சந்தித்த முதல்நாள் மிகவும் சகஜமாய்
கூச்சப் படாமல் குழந்தை யுள்ளமாய்க்
கனிவுறும் பேச்சுடன் இன்முகம் காட்டிய
மங்களாம்பாளுடன் மகிழ்வுறப் பேசிடும்
ஆசைக் காகவே அடிக்கடி குப்பன்
அங்கே வருவான். அப்படிப் பேசப்
பலதரம் முயன்றும் பலிக்கவே யில்லை.
கண்ணியம் அறிந்த கன்னிகை ஒருத்தி
அன்னியு ஒருவன் அருகினில் வந்து
கொஞ்சி மகிழ்ந்துக் குலவிப் பேசுதல்
நித்த நித்தமும் நிகழக் கூடுமா ?
கொஞ்சம் கொஞ்சமாய்ச் சந்திப்பும் குறைந்து
காண்பது கூடக் கடினமாய்ப் போனதால்
தன்வீட்டு முகப்பில் தங்கி அங்கிருந்து
மங்களம் அவளுடை மனையில் திரிந்து
வேலைகள் பார்க்கிற வேளை களிலும்
சிற்சில சமயம் சிறிதுள நேரம்
வாசலின் பக்கமாய் வருகிற போதும்
கண்ணிற் படுகிற உருவக் காட்சியை

பார்ப்பதற் கென்றே வாசலைப் பார்த்தே
காத்துக் கிடப்பான் கடைகெட்ட குப்பன்.
அதனைப் பார்த்திடும் அத்தெருப் பெண்கள்
மகாதேவரின் மனைக்குள் புகவும்
அச்சங் கொள்ளுவர். அதனுற் பெண்களும்
ஜானகி யிடத்திலும் சாவ தானமாய்க்
குப்பனைப் பற்றிக் கூறுவ தில்லை.
மகாதேவரைப் போல்அவர் மனைவியும்
குப்புச் சாமியின் குணம்அறி யாமல்
நல்லவன் என்றே நம்பினதோடு
வள்ளலாய் மதித்து வாழ்த்தி மகிழ்வாள்.
... ...
தாயும் தந்தையும் தன்வசம் ஆனபின்
மகளும் இசைவது மிகவும் எளிதென
ஏழைக் குடும்பம் என்பதனாலும்
வேறு வழிகளை நினைத்தன விலக்கி
மறுமணம் பேசிடும் தீர்மா னத்துடன்
உடனே அதற்கொரு உபாயம் செய்து
அடுத்த ஞாயிறு ஓய்வுநாள் அதனில்
மகாதேவரும் மற்றும் அவருடைக்
குடும்பம் முழுவதும் குப்புச் சாமியின்
வீட்டுக்கு வந்து விருந்துண்டு போக
வரவேண்டும் என்று வற்புறுத் தினதால்
விருந்துகள் முதலிய வேடிக்கை எதிலும்
மனமில் லாதஅம் மகாதேவரும்,
அறியாத ஊரில் அழையாமல் வந்து
உதவிகள் செய்திட்ட உபகாரி ஆனதால்
தள்ளவே கூடாத தாக்ஷண் யமாக
ஜானகி யம்மாள் சலுகைக் கிணங்கி,
குப்பன் விருந்தினை ஒப்புக் கொண்டார்.

விமரிசை மிகுந்த விருந்து நடக்கிற
குப்பன் மனைக்குக் குடும்பம் முழுவதும்
மகாதேவரும் மனைவியும் மங்களம்
சிறுவர் சிறுமியர் யாவரும் சென்றனர்.
விருந்துக்கு முன்னுல் தன்னுடை வீட்டின்
சிறப்பையும் அதிலுள செல்வப் பொருள்களை
மங்களாம் பாளுடன் மாதா பிதாவும்
அறியும் படிக்கென ஒவ்வொரு அறைக்கும்
குப்பன் அவர்களைக் கூட்டிக்கொண்டுபோய்
அங்கங் கிருந்தன அபூர்வ மாகிய
பற்பல பொருள்களைப் பார்க்கச் செய்தான்.
இரும்புப் பெட்டகம் ஒன்றிலே யிருந்து
பெண்கள் குலத்தின் கண்களைப் பறிக்கும்
ரத்தின வகைகளில் சித்திரம் இழைத்த
ஆபர ணங்களை அடுக்கடுக் காக
எடுத்துக் காட்டி " இவைகள் இனிநான்
மணக்கப் போகிற மனைவிக்கு " என்றான்.
மகாதேவரும் மிகவும் மலைத்து
" இன்னுமா விவாகம் இல்லை ?" என்றார்.
" அதைப் பற்றி விவரமாய் அப்புறம் பேசுவோம் "
என்றான் குப்பனும், இரக்கமே மிகுந்த
மகாதேவரும் மனதில் வருந்தினர்.

அழகியை மறக்க ஆகுமா?

பெண் கேட்பது

விருந்து நடந்தது; அருந்தினோர் சிலரே.
மனைவியோ மக்களோ மற்றெரு சுற்றமோ
உறவினர் என்றிட ஒருவரும் அங்கிலர்.
பெண்டுகள் என்கிற பேச்சே இல்லை.
குண்டனும் முண்டனும் குட்டையும் நெட்டையும்
இளைஞனும் முதியனும் இங்கும் அங்குமாய்
வேலைக்காரரே வெகுபேர் இருந்தனர்.
அத்தனை பேரும் ஆண்களே யல்லால்
பெருக்கி வாறவும் பெண்ணென்பதில்லை.
மங்களம் வருகிற மகிழ்ச்சியினாலே
பலபேர் அவளைப் பார்க்கப் படாதென
நாளும் வருகிற நண்பரிற் கூட
குப்பன் யாரையும் கூப்பிட வில்லை.
விருந்து முடிந்தபின் இருந்து கொஞ்சம்
பேசிக் களித்திடப் பெண்களில் லாததால்
மங்களம் அங்கே தங்க விரும்பிலள்.
வீட்டுக்கு உடனே போய்விட விரும்பி
வந்தனம் சொல்லிடத் தந்தையோ டிருந்த
குப்புச் சாமியைக் கும்பிட்டு நின்று
' வருகிறேன் ' என்று வாய்விட்டுச் சொல்லி
தான்மட்டும் உடனே தன்வீடு சென்றுள்.
ஜானகி அம்மாள் சற்றே தங்கினள்.
ஆபர ணங்களின் அழகையும் புகழ்ந்து
விருப்புறப் பேசி விடைபெற்றுச் சென்றுள்.
குழந்தைகள், தாயார் கூடவே சென்றனர்.
மகாதேவரும் மனைக்குப் போவதாய்

எழுந்தார்; அவரை இருக்கும் படியாய்
" ஞாயிற்றுக் கிழமை ஓய்வுநாள் தானே
போகலாம் கொஞ்சம் பொறுங்கள் " என்று
கேட்டுக் கொண்டான் வீட்டுக் காரன்.
மகாதேவரும் மகிழ்ச்சியே காட்டி
தடைசொல் லாமல் தங்கினர் அங்கே.
ஜானகி யம்மாள் போன பிற்பாடு
மகாதேவரும் குப்பனும் மாத்திரம்
ஏகாந்த மானஓர் இடத்தில் அமர்ந்து
குப்புச் சாமியும் கூறுவா னுயினன் :
" தாங்கள் எனக்குத் தந்தையே போன்றவர்
உங்களிடத்திலே உள்ளதைச் சொல்லிட
சற்றேனும் எனக்கு சங்கோஜம் இல்லை.
'இன்னமும் விவாஹம் இல்லையா ?' என்று
நீங்கள் கேட்டது நெஞ்சைக் குத்திட
என்னென்று சொல்வேன் என்றன் விதியினை ?
ஏராள மாகிய செல்வம் இருந்தும்
கண்ணியத் தோடும் புண்ணியம் கூடிய
இல்லற இன்பம் இன்னும் எனக்கிலை.
கலியாணம் என்றும் காதல் என்றும்
இல்லறம் என்றும் எதையும் அறியாப்
பையனு யிருந்த பருவத் திலேயே
அழகோ அறிவோ ஆற்றலோ அன்றிப்
படிப்போ பழக்கமோ பணம்கூட இல்லா
மூடத் தனங்களே முற்றிலும் நிறைந்து
அடக்க ஒடுக்கமும் அன்புமில் லாதவள்
குரங்கே எனத்தகும் குரூபி ஒருத்தியை
பெற்றோர் எனக்குப் பிடிவாதமாகவே
பாலியத் திருமணம் பண்ணி வைத்தார்கள்.
எல்லா விதத்திலும் ஏட்டிக்குப் போட்டியாய்

ஒருசிறி தாகிலும் ஒற்றுமை யின்றி
இல்லறச் சுகமே இல்லாமற் செய்தாள்.
கடைசியில் என்மேல் கடும்பழி சுமத்திக்
கொடுமை செய்வதாயக் குற்றமும் சாட்டி
ஐம்பதினுயிரம் ரூபாய் அடங்கிய
தன்னிடம் இருந்தவை என்னுடை நகைகளும்
பதினேழு ஆயிரம் ரொக்கப் பணமும்
அவளுடை ஆடைகள் அனைத்தும் சேர்த்துக்
குழந்தைகள் இரண்டையும் கூட்டிக் கொண்டு
இங்குநான் வீட்டிலே இல்லாத சமயம்
தாய் வீட்டுக்கே போய்ச் சேர்ந்திட்டாள்.
சாந்தப் படுத்திடச் சாத்திய மானவை
என்னுற் கூடிய எல்லா முயற்சியும்
பண்ணினேன் அதனுல் பயனென்று மில்லை.
அதன்பின்
விருப்பமில் லாதவள் வீட்டி லிருப்பது
படுக்கிற அறையில் பாம்பிருப்பது போல்
அபாயம் என்பதை அறிந்தேன் அதனல்
சனியன் விட்டதாய் சந்தோஷமுற்று
அத்துடன் அவளை அறவே மறந்தேன்.
வேறொரு பெண்ணை விவாகம் செய்து
இல்லறம் தொடங்க எண்ணி யிருக்கிறேன்.
அளவிலாச் செல்வமும் அரண்மனை யேபோல்
இந்தஎன் வீடும் இருந்தும் சுகமென்ன ?
எண்ணிக்கை யில்லாத ஏவலாள் காவலும்
எத்துணைச் சிறப்புகள் எவை யிருந்தாலும்
மனையின் மாட்சிக்கு மங்கலம் தருகிற
இல்லாள் இல்லையேல் வாழ்க்கை எதற்காம் ?
பாலை வனம்போல் பசையற்ற தாகுமே
என்பதே கவலையாய் ஏங்கி இளைக்கிறேன்.

மகாதேவரே ! மனக்குறை இதனைஎன்
தந்தையே போலுளத் தங்க ளிடத்தில்
சொல்லிக் கொண்டால் சுகம் வரும் என்று
குடும்பமும் தாங்களும் குடிவந்த நாளாய்த்
தருணம் விரும்பித் தவிப்புடன் காத்து
இன்றுதான் அதற்குச் சமயம் இசைந்தது.
மறுமணம் புரிந்து மகிழ்வுடன் இருந்து
இல்லறம் சிறந்து இன்புற்று வாழ்ந்திட
ஆசீர் வதித்து அருளுங்கள் " என்று
பழிகளே நிறைந்த பச்சைப் பொய்களைக்
கூச்சமில் லாமல் கூறி, அக் குப்பன்
குழைந்து வணங்கிக் குருவிடம் சீடன்
உபதேசம்பெறும் உருவம் போலவே
மகாதேவரின் மறுமொழி அதனை
எதிர்பார்த் தவனுய் ஏங்கி யிருந்தான்.
மர்மத்தை அறியாத மகாதேவரும்
குப்பன் அவரிடம் கூறிய தெல்லாம்
உண்மையென் றெண்ணி உள்ளம் உருகிட
" அப்படி யாஅது ஐயோ பாவம் !
உண்மை அதுவெனில் உங்கள் நிலைமை
பார்க்கவும் கேட்கவும் பரிதா பமானதே.
ஏறுமா றுகிய மனைவி இருந்தால்
இல்லறம் கெட்டும் தொல்லையே அதிகம்.
இத்துணை மிகவும் இளம்பிரா யத்தினில்
மனமொத்து நடக்கும் மனைவியில்லாமல்
நீங்கள் மறுமணம் நினைப்பது சரிதான்.
மனதுக் கிசைந்த ஓர் கன்னியை மணந்து
நிம்மதி யடைந்து நீடூழி வாழப்
பகவான் திருவுளம் பாலிக்க வேண்டி
மனமார உங்களை வாழ்த்துவேன் " என்ருர்.

" தாங்கள்தான் எனக்குத் தற்போது பகவான்,
தாயும் குருவும் தந்தையும் ஆவீர்.
கருத்தைக் கவர்ந்துள கன்னி ஒருத்தியை
மனமுவந் தெனக்கு மணஞ்செய்து வைத்து
செல்வமும் இளமையும் சீரழியாமல்
காப்பது தங்களின் கடமை " என்று,
குப்பன் பற்பல கும்பிடு போட்டான்.
அதனைக் கேட்டு அதிசயம் அடைந்து
" பெண்பார்த்து நிச்சயம் பேசிவிட் டீர்களா ?
ஆயிற் றென்ரூல் அருகினில் இருந்து
கலியாண வேலைகள் கருத்துடன் செய்து
மகிழ்வேன் " என்ரூர் மகாதேவரும்.
" பெண் பார்க்கிறதும் பெரியீர் உமதே ;
நீங்கள் நினைத்தால் நிமிஷம் முடிக்கலாம்.
கருணை புரிந்தெனைக் காப்பாற்ற வேண்டும் "
என்றந்த வஞ்சகன் இருகரம் குவித்தான்.
" ஊருக்குப் புதியநான் உங்களுக் கிசைந்த
கன்னிகை யாரெனக் காண்பது எப்படி ?"
என்றதும் குப்பனும் எழுந்து வணங்கி,
" தங்கள் திருமகள் மங்களம் கன்னியை
எனக்குத் தந்திடில் ஏக்கம் தீருவேன்,
நலம்பல கண்டு நல்வாழ்வு பெறுவேன் ;
அப்பெரும் பாக்கியம் அடியேன் எனக்குக்
கிடைத்திடத் தாங்கள் கிருபை செய்திடில்
என்னுடைச் சொத்துகள் எல்லா வற்றையும்
மங்களம் பேரிலே மாற்றித் தருகிறேன்.
தாங்களே ஆஸ்தியின் தலைவரா யிருந்து
ஆட்சி செலுத்திட அமைவீ ராயின்
ஓயாது உழைத்தும் ஒருபயன் காணாத்
தரித்திரம் பிடித்த ' தாலுக் ஆபீஸ் '

வேலையை விட்டினி வீட்டோ டிருந்து
ஆன்ம விசாரணை அதிகம் செய்யலாம்.
தெய்வமே போன்ற தேவரீர் எனக்கு
வரம்இதைத் தந்து வாழ்விக்க வேண்டும் "
என்ரூன் குப்பன் எதிர்பா ராததாய்
இடிபோல் விழுந்த இந்தப் பேச்சையும்
அன்புடன் மிகவும் அமைதியாய்க் கேட்ட
மகாதேவரும் மறுமொழி சொல்வார் :
" கலியாண மில்லாத கன்னிகை ஒருத்தி
வீட்டி லிருந்தால் விரும்பின எவரும்
பெண்கேட் பதனல் பிழைஒன்றுமில்லை.
மங்களம் என்னுடை மகளும் கன்னிதான்,
கேட்டதில் யாதொரு கெடுதலும் இல்லை.
செல்வம் நிறைந்த சீமான் ஆகிய
உங்களைப் போன்றுள ஒருவர் எனக்கு
மாப்பிள்ளை யாவதும் மகிழத் தக்கதே.
ஆயினும் என்மகள் அருமை மங்களம்
சொந்த உணர்ச்சியின் சுதந்தரம் மிக்கவள்.
தன்னுடைத் திருமணம் தன்னிஷ்டம் என்பது
நெடுநா ளாகவே அவளுடை நிச்சயம்.
அவளே விரும்பி ஆசைப் படுகிற
இடமும் காலமும் இசைந்தா லன்றி
கலியாண விஷயம் கருதவொண் ணுதென
எங்களுக் குள்ஒரு ஏற்பாடு உண்டு.
மங்களம் தானே மணக்க விரும்பும்
எவரோ அவரே எனக்கு மருமகன்.
ஆதலால் அன்பரே அதிகாரி நானல்ல,
மனமுவந் தென்றனை மன்னிக்க வேண்டும்.
அனுமதி கொடுங்கள் அவசர மாகிய
கச்சேரி வேலைகள் கவனிக்க வேண்டும்,

போய்வருகின்றேன் '' என்று புறப்பட
குப்பன் மனதில் கட்டின கோட்டை
இடிந்தது போல்மிக ஏமாந்து போனான்.
குடும்பம் பெரிதாய் வரும்படி குறைவாய்
கஷ்டப் படுகிற கச்சேரி குமாஸ்தா
பணத்தைக் கருதிப் பணிவா ரென்றும்
எளிதில் இதற்கும் இசைவா ரென்றும்
எண்ணி யிருந்தது மண்ணுகி விட்டது.
ஆயினும் அதனால் ஆசை விடுமா ?
காமத் தீமையும் கயமையும் நிறைந்த
குப்பன் அதிலொரு குதர்க்கம் எண்ணினான்.
மகாதேவரின் மறுமொழி முற்றும்
மகளின் திருமணம் பொறுத்த மட்டிலும்
அவளே அதற்குள அதிகாரி என்றும்
மங்களம் தானே மணக்க விரும்பும்
எவரும் தனக்குச் சம்மதம் என்றுதான்
அர்த்தப் படுவதால் அதுவும் நல்லதே.
நேரிற் கேட்டோ நிருபம் எழுதியோ
மங்களாம் பாளின் மனசைக் கவர்ந்தால்
தாய்தந் தையரின் தயவே வேண்டாம்
அதுவும் தவறினால் அப்புறம் பார்ப்போம்.
எப்படி யாயினும் இவளை விடுவதா?
ஆஹா ! அவளது அழகுதான் என்னே !
பார்க்கப் பார்க்கப் பரவச மாக்குதே
நினைக்க நினைக்க நிலைகொள் ளவில்லையே !
இப்படி அழகியை எப்படி மறப்பது ?
விட்டு விடுவதா '' என்று விம்மினான்.

காமக் கொடுமைக்கு இலக்கான கடிமை

ஐந்தாறு நாளைக்கு அப்புறம் ஒருநாள்
காலைவேளையில் கச்சேரி வேலையாய்
மங்களம் தந்தையும் மனையை விட்டபின்
ஆலயம் தொழுதிட அன்னையும் அத்தையும்
குழந்தைகளோடும் கோயில் சென்றனர்.
எதிர்வீடு ஆனதால் எல்லா வற்றையும்
பார்த்துக் கொண்ட அப் பாதகன் குப்பன்
மங்களம் மட்டிலும் மனையில் இருப்பதால்
தனியே அவளுடன் இனிமைகள் பேசி
ஆசைகள் காட்டி அன்பைக் கவர்ந்திட
வாய்ப்பான தருணம் வந்ததென் றெண்ணி
உள்ளே ஓடினான் உடைகளை மாற்றி
அதிகப் படுத்திய அலங்காரத்துடன்
வெளியே நடந்து வீதியைக் கடந்து
கன்னியின் வீட்டுக் கதவை யடைந்தான்.
காமமே கூடக் காலையில் ஒதுங்கும்
காமுகன் நினைப்பில் காலமும் உண்டா?
மற்றிரும் இன்றி மங்களம் மட்டும்
தனியே யிருந்த தன்மை யினாலே
தாழிடப் பட்டஅக் கதவைத் தட்டினான்.
ஆத்திரக் காரரின் அவசர புத்தியில்
அமைதியாய்க் கூப்பிட அவனுக்கு வருமா ?
தடதட வென்று கதவைத் தட்டினான்.
மடைப்பள்ளி வேலையில் இருந்த மங்களம்
எவரோ என்னமோ ஏதோ என்று
ஓசை கேட்டதும் ஓட்டமாய் வந்து

படக்கெனக் கதவைத் திறந்து பார்த்தாள்.
கசடனக் குப்பன் கள்ளச் சிரிப்புடன்
பல்லை யிளித்துப் பசப்புகள் காட்டிக்
கதவைத் தட்டின காரணம் சொல்லப்
பேச்சு வராமல் பிரள விழித்தான்.
மாசுகள் படரா மனமுள்ள மங்களம்
குப்பனைப் பார்த்துக் கூச்சமில் லாமல்
"ஐயா! நீங்களா! அவசரம் என்ன ?"
என்றனள். குப்பன் எதிர்மொழி குளறிட,
"அவசரம் ஒன்றும் இல்லை ஆயினும்
மனமார்ந்த அன்புள்ள மங்களம்! உன்னுடன்
பேசலாம் என்றெரு ஆசை பிறந்தது
பார்க்க வந்தேன்" எனப் பல்லை இளித்தான்.
சுருக்கெனப் பாய்ந்த பெண்மையின் சுரணையோ
இயல்பாய்ப் பெண்மையில் இருக்கிற குணமோ
அசட்டுச் சிரிப்பின் அர்த்தம் அறிந்தோ
எதனலேயோ எப்படியோ அவள்
குப்பன் பேச்சின் குறிகண் டதுபோல்,
"அப்பா அம்மா அத்தையும் கூட
ஒருவரும் இப்போது உள்ளே இல்லையே!
வீட்டு வேலைகள் வெகு மிக அதிகம்
நிற்கவும் கூட நேரம் இல்லையே
அரிசியைக் களைந்து அடுப்பில் போட்டேன்
கொதிவரும் நேரம் குழைந்து போய்விடும்,
மன்னிக்கவேணும்" என்று மங்களம்
இன்னும் பேசிட இடமிலா வண்ணம்
மூடினுள் கதவை முன்னிருந்ததுபோல்
தாழையும் போட்டுத் தான்விட்டுவந்த
காரியம் பார்க்கக் கடுகிச் சென்றுள்.
கல்நெஞ் சாயினும் காமம் புகுந்திடில்

தைரியம் இழந்து தடுமாறும் அல்லவா ?
மின்போல் மங்களம் தன்பால் வந்ததும்
கதவைத் திறந்ததும் காரியம் கேட்டதும்
எண்ணிய பேச்சை எடுக்க விடாமல்
சமையலைச் சொல்லிச் சட்டென உடனே
கதவையும் மூடித் தாழைக் கடாவி
மறைந்து விட்டதும் மனதைக் குழப்பக்
குப்பன் ஆசைகள் குலைந்து விட்டன.
சந்தித்த நாள்முதல் சந்தோஷத்துடன்
பலநாள் பழகிய பரிச்சயம் போல
இனிய முகத்துடன் பனிமொழி பேசும்
மங்களம் இப்படி மறுப்புக் காட்டிக்
கன்னத்தில் அடித்தெனக் கதவைச் சாத்தித்
தாழ்ப்பாளுமிட்டு மறைந்த தன்மையால்
எதிர்பாராதவர் ஏமாற்றம் வந்து
மற்றெதும் நினைக்க மார்க்கமில் லாமல்
வெட்கம் வருத்திட வீடு திரும்பினன்.

... ...

மங்களம் வாசலில் மயங்கி நின்றவன்
வீட்டுக்கு வந்ததும் வீராப்பு கொண்டு,
காமக் கொதிப்புடன் கோப முங் கலந்து
இதுவும் அதுவும் இடைதடு மாறிட
கோபம் வருவதும் காமம் குறைவதும்
காமம் புகுவதும் கோபம் கலைவதும்
அரைநொடிப் பொழுதில் அடிக்கடி மாறி
கடோசி யாகக் காமமே வென்றதாய்
'மங்களம் அப்படி மறைந்த காரணம்
அடுப்பு வேலையின் அவசரம் அல்லால்
தன்னிடம் அவளுக்குத் தயவின்மை அல்ல;
கொஞ்சம் கொஞ்சமாய்க் குறிப்பை உணர்த்தி

ஆத்திரப் படாமல் ஆசை மூட்டினால்
இசைவாள்'' என்றே எண்ணச் செய்தது.
... ...
அப்படி முயல்வது எப்படி என்பதை
பற்பல விதமாய் யோசனை பண்ணி
மங்களாம் பாளின் மனதைக் கவர்ந்திட
கடிதம் ஒன்றெழுதிக் காதலைச் சொல்லிப்
பெண்மனம் மிகவும் பிரியப் படத்தகும்
பரிசுகள் அனுப்பிப் பார்க்கலாம் என்று
தீர்மா னித்தான் திருட்டுக் குப்பன்.
உடனே சென்றான் உள்ளே அமர்ந்து
பேனு காகிதம் பிறவும் எடுத்து,
சிங்கார வார்த்தைகள் சிந்தனை செய்து
''காமக் கனியே ! கண்மணி மங்களம்!
அற்புத மானஉன் அழகும் அறிவும்
உடையும் நடையும் ஒயிலும் செயலும்
கண்ணைப் பறித்துக் கருத்தைக் கவர்ந்துஎன்
உடலை வெதுப்பி உயிரை வதைத்திட
அடக்கவே முடியாக் காதல் அடைந்துளேன்.
உன்றனை எனக்கு உறுதுணை யாக்கித்
தேசம் புகழத் திருமணம் புரியத்
தரவேண்டு மென்றுன் தந்தையவர்களை
விநய பூர்வமாய் வேண்டிக் கொண்டேன்.
அவரும் என்னுடை ஆவலை அறிந்து
'பெண்கேட் பதிலொரு பிழையும் இல்லை,
ஆயினும் என்றன் அருமைப் புதல்வி
மங்களம் மிகவும் மதிநலம் சிறந்து
சுதந்தர உணர்ச்சி மிதந்த மனத்தாள்.
அவளுடைத் திருமணம் அவளது இஷ்டம்
மற்றவர் தலையிட மார்க்கமே இல்லை''

என்றனர் அதனால் உன்றனைக் கேட்டு
திருவே! உன்னைத் திருமணம் புரிந்து
இல்லறம் நடத்த இச்சைப் படுகிறேன்.
மனமுவந்தென்னை மணந்திடு வாயேல்
மனைவி யில் லாமல் மங்கிக் கிடக்கும்
ஏராள மாகிய என்னுடைச் செல்வம்
உனக்கே இனிமேல் உரிமை யாகுமால்
தரித்திரம் பிடித்த ''தலாக் காபீஸ்''
கச்சேரி வேலையில் கஷ்டப் படுவதில்
உன்னுடைத் தந்தையும் உருகிடவேண்டாம்.
மங்களம்! உன்றனை மன்றாடி மிகவும்
கெஞ்சிக் கேட்கிறேன்; கிருபை கூர்ந்து
என்னை நீ மணக்க இசைந்திட வேண்டும்.
குலதெய்வ மாயுனைக் கும்பிடு கின்றேன்''
என்றொரு கடிதம் எழுதிமுடித்துஅதை
எவரிடம் கொடுத்து எப்படி அனுப்பினால்
மற்றவர் யாரும் அறியா வண்ணமாய்
தனியே அவளிடம் தந்து அவள் பதிலை
வாங்கி வந்திடத் தகுதி வாய்ந்தவர்
யாரெனப் பலமுறை ஆலோ சித்தபின்
தானே நேரில் தந்திடு வதுதான்
உத்தமம் என்றொரு உறுதி கொண்டனன்.
... ...

குப்பன் ஏமாற்றமடைதல்

தனியே அவளிடம் கடிதம் தந்திட
மங்களம் வீட்டில் மற்றவர் யாரும்
இல்லாத வேளையை எதிர்பார்த் தவனுய்
கள்ளனக் குப்பன் காத்துக் கிடந்தான்.
நான்கு நாள்சென்று ஞாயிற்றுக் கிழமை
அவ்வூர்ச் சிறுமியர் அனைவரும் படிக்கும்
பெண்பாடசாலைப் பெரிய பள்ளியின்
ஆண்டு விழாநாள் அதுவாக நேர்ந்தது.
பரிசு வழங்கலும் பாடலும் ஆடலும்
நாடகம் ஒன்று நடப்பது காணவும்
ஊரா ரெல்லாம் உவந்திடும் திருநாள்.
மாலையில் நான்கு மணிக்குச் சரியாய்
ஆரம்ப மாவது அந்தக் கொண்டாட்டம்.
கூட்டம் மிகவும் பெரிதாய்க் கூடும்.
முந்திக் கொண்டால் முன்னுல் அமரலாம்
இல்லா விட்டால் இடம் கிடைக்காது.
அதனுல் மிகவும் அவசர மாகவே
மணிமூன் றுக்கே மாதர்கள் பலபேர்
ஆடையாபரண அலங்கா ரத்துடன்
வீதியிற் போவதை வீட்டு முகப்பினில்
குந்தி யிருந்தவன் குப்பன் கண்டான்.
அன்னிய மாதரை ஆசைக் கண்ணுடன்
உற்றுப் பார்ப்பதில் உள்ளம் களிக்கிற
வெட்கமில் லாப்பெரும் வெறியனக் குப்பன்
அங்குள வேளையில் மங்களம் வீட்டின்
இளைஞரும் அவரவர் இங்கித உடையில்
வெளியே வருவதைக் கண்டான் வீணன்.

மங்களாம்பாளும் வெளியே வருவாள்
பார்க்கலாம் என்ற பரிவுடன் மிகவும்
கூர்ந்த கண்ணுடன் குப்ப னிருந்திட
மங்களாம்பாளுடை தங்கை மார்களும்
தம்பிகள் மூவர் தாயார் ஜானகி
அத்தையாம் அம்பிகை அவளுடை மக்கள்
மங்களம் தவிர மற்றுள பேர்கள்
அங்கே வசிக்கிற அத்துணை பேரும்
வாசலைக் கடந்து வெளியே வந்ததைக்
கண்டான் குப்பன் கொண்டான் களிப்பு.
திருட்டுக்காகவே இருட்டைக் கோரி
காத்துக் கிடக்கிற கள்ளனைப் போல
காதலை எழுதிய கடிதம் அதனை
நேரில் தந்திட நேரம் பார்த்தவன்
அளவிடக் கூடா ஆனந்த முற்றுன்.
வெளியே வந்தவர் வேடிக்கை நடக்கிற
பள்ளிக்குப் போகிற பாதையிற் சென்றபின்
வேகமாய்க் குப்பன் வீட்டினுட் சென்று
ஒய்யார மாகிய உடைகளை யணிந்து
வரையறை யின்றி வாசனை பூசிக்
காதல் கடிதம் கவனமா யெடுத்து,
சட்டைப் பைக்குள் சரியாக வைத்து
வெளியே வந்தான்; மங்களம் வீட்டுக்
கபாடம் மூடி இருப்பதைக் கண்டான்.
மூடின கதவினை முன்னே ஒருநாள்
தட்டின கதையைத் தானே நினைத்து
அப்படி மீண்டும் செய்திட அஞ்சி
என்ன செய்யலாம் என்பதைப் பற்றி
எண்ணிக் கொண்டே திண்ணையில் அமர்ந்தான்.
... ...

விடுமுறை நாளிலும் வேலை ஒழிவிலாக்
கொடுமை மிகுந்தது குமாஸ்தா வேலை.
அதிலும் மிகமிக அலுப்புத் தருவது
தரித்திரம் பிடித்த தாலூக் ஆபீஸ்.
மகாதேவர்க்கு மற்ற நாட்களில்
இரவிலும்கூட கச்சேரி இருக்கும்.
ஞாயிறு மட்டும் நான்குமணி வரை
கச்சேரி வேலைகள் கவனித்து விட்டு
மாலையில் சீக்கிரம் மனைக்கு வந்திடுவார்.
அப்போது மங்களம் அப்பா வுக்கெனத்
தயார் செய்துள சிற்றுண்டி தருவாள்.
அதனைப் புசித்துக் காப்பியும் அருந்தி
மகளுடன் சற்றே மகிழ்வுடன் பேசி
அலுப்புகள் தீர்ந்து ஆறு மணிக்குமேல்
பூசை அறைக்குள் ஆசனத் தமர்ந்து
குத்து விளக்கின் குளிர்ந்த ஒளியில்
பகவத் கீதை படிப்பது வழக்கம்.
அதனைக் கருதியே அன்றைக்கு மங்களம்
வேடிக்கை பார்க்க வீட்டார் அனைவரும்
போனவ ரொடுதான் போகா திருந்ததும்.
ஒவ்வொரு ஞாயிறும் இவ்விதம் செய்வார்.
அப்படி யாகவே அன்றைய தினமும்
ஞாயிறு ஆனதால் நான்கு மணிக்கே
மகாதேவர்தம் மனைக்கு வருவது
தெருவின் கோடியில் தெரிவதைக் கண்ட
குப்பன் உடனே குதிகொண் டெழுந்து
வீதியில் இறங்கி விரசே நடந்து
மகாதேவரை வரவேற்பதுபோல்
குழைந்து வணங்கிக் கும்பிடு போட்டான்.
கள்ளமில் லாதநல் லுள்ளம் படைத்தவர்

மகாதேவரும் மிகவும் மகிழ்வுடன்
வந்தனம் செய்து வாழ்த்துரை சொல்லி
சேமலாபங்களின் சேதிகள் கேட்கப்,
பெண்பாடசாலைப் பெருவிழா அதனைப்
பார்க்கலாம் என்கிற பரிவினுல் அவரையும்
கூப்பிட வந்ததாய்க் குப்பன் சொன்னன்.
வேடிக்கை பார்ப்பதில் விருப்பமில் லாததை
சட்டெனச் சொல்வது சரியல்ல என்றே
வேறொரு அலுவல் வீட்டில் இருப்பதாய்
சொல்லிக் கொண்டே மெல்ல நடந்தார்.
குப்பனும் அவருடன் கூடவே வந்தான்.
மனைக்கு வந்ததும் மகாதேவரே
தாழிடப் பட்டுள கதவைத் தட்டிக்
கூவி யழைத்த குரலைக் கேட்டுத்
தந்தை வருகிற தருணம் என்பதை
அறிந்து மங்களம் அவருக் கானதோர்
சிற்றுண்டி பக்குவம் செய்துகொண் டிருந்த
வேலையை விட்டு வேகமாய் வந்து
தந்தையைக் காணத் தாழ்ப்பாள் நீக்கினள்.
குப்பன் தம்முடைக் குடும்பத் துக்கொரு
உபகாரி என்கிற உரிமை பற்றிய
மரியாதையொடு மகாதேவரும்
அவனையும் தம்முடன் உள்ளே அழைத்தார்;
உடனே குப்பனும் உள்ளே நுழைந்தான்.
அப்பா அழைத்ததை ஆமோ தித்தென
குப்பனைப் பார்த்துக் குமாரி மங்களம்
இயல்பாம் அவளுடை இனிய குணத்தால்
'வாருங்கள்' என்று வரவேற்புசொன்னள்.
அப்படி மங்களம் அவனை மதித்து
'வாருங்கள்' என்றதே வரப்பிரசாதமாய்

உள்ளம் குளிர்ந்து உடலம் சிலிர்த்து
கள்ள ஆசையின் களிப்புகள் பொங்கக்
குப்பன் மிகவும் குதுகுதுப் படைந்து
கடிதம் தருவதைக் கருதித் தன்னுடை
சட்டைப் பையைத் தொட்டுக் கொண்டான்.
... ...
கச்சேரி உடைகளைக் களைந்துடை மாற்றி
வேலையிற் புழுங்கிய வெப்பம் தீரக்
குளிர்ந்த நீரில் குளித்திட எண்ணிக்
கொல்லைக் கிணற்றிடம் செல்ல நினைத்த
மகாதேவர்தம் மகளிடம் சென்று
'குளிக்கப் போகிறேன்; குப்பு சாமிக்கு
சிற்றுண்டி எதுவும் செய்தது இருந்தால்
அதையும் காப்பியும் அவருக்கு முதலில்
கொடு அம்மா' எனக் காதோடு கூறினர்.
உடனே மங்களம் உப்புமா வடையுடன்
வாழைப் பழமும் தட்டில் வைத்துக்
குப்பனுக் கருகில் கொண்டுபோய் வைத்தாள்.
மரியாதை தெரிந்த மகாதேவரும்
குப்பனைப் பார்த்துக் "கூச்சமில்லாமல்
சாப்பிடுங்கள் நான் சடுதியிற் சென்று
குளித்து வருகிறேன்" என்று கூறினர்.
அதனைக் கேட்டஅக் குப்பன் அடைந்த
ஆனந்தத்தையும் அளவிட முடியுமா ?
தந்தையும் இன்றித் தனியே இருக்கிற
கன்னிகை யிடத்தில் கடிதம் கொடுத்திட
அப்படிக் கிடைத்த அரியதோர் வாய்ப்பை
ஆண்டவன் அருள்என அப்போது தான்அக்
கயவனும் கூடக் கடவுளை எண்ணினன்.
... ...

மங்களம் தந்தை குளிக்க மறைந்ததும்
குப்பன் தனக்குக் கொடுத்த சிற்றுண்டியை
பசியில் லாமலும் ருசிபார்க் காமலும்
தின்னும் பொழுதே திருப்பித் திருப்பி
மிகவும் ருசியாய் இருப்பதாய் மெச்சி
மங்களம் கேட்டு மகிழும் படிக்கென
பலவிதம் புகழ்ந்து, பலகாரங்களை
முழுதும் விரைவில் புசித்து முடித்தான்.
மங்களம் அதனுல் மறுமுறை யாக
பலகா ரங்களைப் பரிமாற வந்தாள்.
ஆயினும் குப்பன் அதனை மறுத்து
'போதும்' என்று புன்னகை புரிந்து
கையை உடனே கழுவிக் கொண்டான்.
கடிதம் தந்திட மிகநல்ல காலம்
கிடைத்துள அதனைக் கெடுத்திடும் படிக்கு
விருந்திலே பொழுதை வீணுக்குவானு?
காப்பியைக் கொடுக்கக் கன்னிகை வருகிற
அப்போது தந்திட ஆயத் தமாக
சட்டெனக் குப்பன் சட்டையி லிருந்த
கடிதம் அதனைக் கையில் எடுத்துப்
பிடித்துக் கொண்டு பெருமூச்சு விட்டான்.
கருதிய படிக்கே காப்பியைக் கொணர்ந்து
அதனைக் குப்பனுக் கருகில் வைத்தாள்.
அப்போது குப்பன் அவளைப் பார்த்து
'மங்களம் ! உனக்கொரு மகிழ்வான சேதி;
கருணை கூர்ந்து கடிதம் இதனைப்
படித்துப் பார்த்து பதில் உரை'என்று
நிருபம் அதனை அவளிடம் நீட்டினன்.
வஞ்ச மெண்ணமல் வாங்கினள் மங்களம்.
எட்டச் சென்று எதிரே நின்று

அப்போதேயே அவனுக்கு முன்னால்
கடிதம் அதனைக் கவனமாய் விரித்துப்
பதற்றமில் லாமல் படிக்க லானாள்.
நிறுத்து, நிறுத்தி, நிதானத்துடன்
வரிவரி யாக வாசித் தானதும்
துரிதமாய் மடித்துத் துண்டு துண்டாகக்
கிழித்துக் கசக்கிக் கீழே எறிந்து
மனைக்குள் புகுந்து மறைந்தாள் மங்களம்.
பார்த்தான் குப்பன் ! கைகால் பதற
உள்ளம் கொதித்து உடலும் வெயர்க்க
ஆசைகள் இடிந்து அவமதிப் படைந்து,
கோபம் குமுறிக் குரோதமாய் மாறத்
தேள்கொட்டிவிட்டத் திருடனைப் போலச்
சொல்லவொண்ணாத துன்பம் சூழ்ந்து
கண்கள் இருண்டு கால் தள்ளாட
மெள்ள எழுந்து மெதுவாய் நடந்து
வெந்து வெதும்பி வீடுபோய்ச் சேர்ந்தான்.
தன்வீடு சேர்ந்ததும் மின்வேகத் தன்மையில்
அச்சமும் நாணமும் நொடியில் அகன்றன.
வீறுள்ள பேச்சுகள் வெறிகொண் டெழுந்தன.
'இந்தச் சிறுக்கிக்கு இத்துணைத் திமிரா !
கடிதம் கொடுத்தஎன் கண்ணுக்கு முன்னால்
கிழித்துக் கசக்கிக் கீழே எறிவதா !
ஆகட்டும், சீக்கிரம் அறிவுறச் செய்கிறேன்.
எந்த விதத்திலும் இந்தச் செருக்கியின்
மானங் கெடுத்து மறுவேலை பார்க்கிறேன்
சத்தியம் இது' எனச் சபதம் கூறினான்.
... ...
அதிசயம் போலவே அடுத்த நாளன்றே
குப்பன் மனத்தின் குரோதம் களித்திடத்

தக்கதோர் நிகழ்ச்சி தானுக வந்தது.
அவ்வூரின்தபால் 'ஆபீஸ்' அதற்கு
புதிதாய் மாற்றிய 'போஸ்ட்மேன்' ஒருவன்
குப்பன் தபாலைக் கொடுக்க வந்தவன்
" 'மகாதேவர் மேல் பார்த்து மங்களம்
கையிற் கொடுப்பது' என்றொரு கடிதம்
வந்திருக்கும்இதை வாங்குவோர் வசிக்கும்
வீடுஎங்கே ?" எனக் குப்பனை வினவிக்
கடிதம் அதனை நீட்டிக் காட்டினான்.
உடனே குப்பன் உள்ளம் களித்துக்
காட்டின கடிதம் கையில் வாங்கி
மேல்விலாசத்தை மெதுவாய்ப் பார்த்து,
'மங்களம் தந்தை மகாதேவரா ?
இங்கே தான்அவர் என்னுடன் இருப்பவர்;
கொடுத்து விடுகிறேன் போ'எனக் கூறிட
தபால் சேவகன் தன்வழி சென்றான்.
உள்ளே கொண்டுபோய் உறையைக் கிழித்து,
படித்துப் பார்க்கப் பர்மாவி லிருந்து
சங்கர லிங்கன் மங்களத்துக்கென
அனுப்பிய காதல் அதுவெனக் கண்டு
பொங்கி எழுந்த பொறுமை தூண்ட
எவ்விதம் சூழ்ச்சிகள் எப்படிச் செய்தால்
மங்களாம் பாளின் வாழ்வைக் கெடுக்கும்
என்பதைப் பற்றியே எண்ணுவ தானான்.

பேசும் பெண் மனம்

சங்கர லிங்கம் மங்களத்துக்கென
எழுதிய கடிதம் இப்படியாகக்
குப்பன் கையிற் சிக்கிக் கொண்டதால்
சங்கர லிங்கம் எங்கே போனான்
எப்படி யிருக்கிறான் என்பதைப் பற்றிய
சேதிகள் எதையும் தெரிவதற்காகிய
மார்க்கமில் லாமல் மனம்பதைத் துருகிய
தாயும் தந்தையும் தவித்த தவிப்பும்,
மனதை அடக்கும் மகாதேவரும்
அந்தரங்கத்தில் அடைந்த அவஸ்தையும்,
தூய அன்பின் துடிதுடிப் பாகிய
மங்களாம்பாளின் மாளாத் துயரமும்,
சானகியம்மாள் சஞ்சலப் பட்டதும்,
எண்ணமுடியினும் எழுத்தி லடங்குமா ?
ஆடவர்துன்பம் அளந்திட முடியினும்
பெண்மனத் துயரம் மிகமிகப் பெரியது.
பெண்மனம் என்னும் பெரும்பொரு ளதனை
உலகுக் கீந்துள ஒருபெருங் கருணையை
அறியாப் பலர்அதை அவமதிக் கின்றனர்.
அன்பும் ஆர்வமும் அடக்கமும் சேர்ந்து
உண்மைத் தன்மையும் உறுதியும் மிகுந்து
தன்னல மறுப்பும் சகிப்புத் தன்மையும்
இயல்பாய் அமைந்து இன்பச் சொரூபமாய்
தாயாக நின்று தரணியைத் தாங்கும் ;
தாரமாய் வந்து தளர்வைப் போக்கும் ;
உடன்பிறப் பாகி உறுதுணை புரியும் ;

மகளாய்ப் பிறந்து சேவையில் மகிழும் ;
அயலார் தமக்கும் அன்பே செய்யும் ;
நாணம் கெடாமல் நட்பு கொண்டாடும்;
சினேகம் இன்றியும் சிரித்துப் பேசும் ;
காமமில் லாமலும் கொஞ்சிக் களிக்கும்;
பெருமை மிக்கது பெண்ணியல்பாகும்.
அந்தப் பெருமையை அறியா ஆடவர்
அன்புப் பேச்சை ஆசையென் றயிர்த்து,
சிரித்து விட்டதில் சிற்றின்பம் எண்ணி,
களிப்பைக் காமமாய்க் கற்பனைசெய்து,
அவமதிப்படைவதும் அடிக்கடி உண்டு.
இப்படிப் பலபேர் ஏமாந்துபோவதால்
பெண்மனம் என்பதைப் பிழைபடப் பேசி
'புதிர்' என்று சொல்வது புரியாத் தனமே.
'வஞ்சனை' என்பர் வஞ்சக முடையோர்.
'மாய்கை' என் றுரைப்பது ஆண்களின் மமதை
'கபடம்' என்றிகழும் ஏமாந்த காமம்.

... ...

சங்கர லிங்கம் எங்கோ போனபின்
பதிஞ்ரெரு மாதம் பறந்து விட்டன.
அன்னபூரணிக்கு அதுவே ஏக்கம்.
காலையும் மாலையும் கடவுளை வணங்கி
பிள்ளையைக் குறித்துப் பிரார்த்திப்பதுவே
பொழுதும் வேலையாய்ப் புகைந்துப் புழுங்கி
உணவுகொள் ளாமல், உறக்கமில்லாமல்
பார்த்தவர் யாரும் பரிதபித் தேங்கி
உயிர்துறந் திடுவளோ எனமனம் உளைய
வாடி வதங்கி வற்றிப் போயினாள்.
அன்னையின் அன்பெனல் அப்படி யிருக்க
விரியும் அன்பின் வேரொரு வடிவாம்

மங்களாம்பாளின் மனத்துயரத்தை
முழுதும் விளக்க முடியாது; உண்மை.
பறக்கப் பழகிய பருவம் தொடங்கி
ஒன்றைவிட் டொன்று ஒருகணம் பிரியா
இரண்டு மணிப்புரு இணைபிரிந் திடுங்கால்
அடையும் வேதனை அடைந்தாள் மங்களம்.
மாசுகள் படியா இளமையின் மனதின்
காமம் கடந்த காதலும் காணு
ப்ரேமை என்கிற பெயரிலாப் பிரியம்
இழைக்கும் துன்பம் எப்படித் தென்பதை
வரைந்து காட்டிட வார்த்தைகள் இல்லை.
இப்படி நிலையில் இருந்திட நேரும்
பெண்களின் துயரம் பேச்சில் அடங்குமா ?
வெவ்வேறு வேலையாய் வெளியே சென்று
பற்பல பேருடன் பழகும் தன்மையால்
ஆண்கள் தம்துயரை அடியோடு முற்றும்
மறந்து மகிழவும் மார்க்கங்கள் உண்டு.
மாதருக் கப்படி மார்க்கங்களில்லை.
மங்களம் போன்றுள பருவ மங்கையர்
பொழுது போக்காக வெளியே போவதும்
நம்முடை நாட்டின் நடை முறையல்ல.
அதுமட்டும் அல்லாமல் ஆணிலும் பெண்ணிலும்
இறைவன் என்னும் இயற்கையின் கட்டளை
வெவ்வே றுகவே விளங்குதல் வெளிப்படை.
ஆடவர் பாசம் அடிக்கடி மாறும்.
கட்டின மனைவிபால் காதலே பேசினும்
இன்னொரு அழகியை எதிரே கண்டால்
அவளிடம் ஆசை கொள்ளுவர் ஆடவர்.
இதுவே ஆண்களின் இயல்பின் சராசரி
அப்படிக் கில்லாத ஆண்களும் உண்டு.

ஆயினும் அவர்கள் மிகவும் அபூர்வம்.
பெண்மனப் பாசம் முற்றிலும் பிறிதாம்.
ஒருதரம் ஒருவனை உள்ளம் வரித்தால்
அவனையே நினைத்து அழுங்கும் புழுங்கும்.
வேறொரு வனுக்கே விவாகம் நேரினும்
பழைய காதலும் பற்றியே தொடரும்.
கற்பினைக் கருதிக் கடமையை உணர்ந்து
கட்டிய கணவனை ஒட்டி யிருப்பினும்
ஆதியில் விரும்பிய ஆடவன் நினைப்பு
மாதர்கள் மனதில் மறவா திருக்கும் ;
அதனையும் மற்றவர் அறியவொண் ணாது.
... ...
பெண்குணச் சிறப்புகள் பெரிதும் நிரம்பிய
மங்களம், சங்கரன் எங்கோ போனபின்
அடைந்த வேதனை அளப்பரிதாகும்.
சொல்லால் செயலால் துயரம் வெளியிடாள்.
வீட்டு வேலையில் வேற்றுமை யில்லை.
பெற்றோ ரிடத்தும் பிரியம் தவருள்.
மற்றவ ரிடத்தும் மாறுதல் காட்டாள்.
எனினும் இளமையின் இனிமை குறைந்து,
மனதின் உறுதியும் மகிழ்ச்சியும் குன்றி,
ஏகாந்த வேளையில் கண்ணீர் இரைத்து,
ஊமையர் கண்ட கனவினை ஒக்க
வாய்விட் டுரைக்க வழியில்லாமல்
கூந்தலை வாறிக் கோதிப் பின்னுதல்
மலர்களைச் சூடுதல் மஞ்சள் பூசுதல்
அஞ்சனம் தீட்டி அழகுறல் முதலிய
சிறுசிறு முக்கியச் சிங்காரிப்பிலும்
இம்மியும் விருப்பம் இல்லா தவளாய்
துள்ளிக் குதிக்கும் துடிப்புகள் துவண்டு

பாட்டிலும் படிப்பிலும் மனம்படி யாமல்
ஊணும் உறக்கமும் உவப்பிலவாக
தேகம் இளைத்துத் தேஜஸில்லாமல்
துடைப்பவ ரின்றித் துருப்பிடித் திட்ட
எந்திரப் பதுமைபோல் இயங்குவதாகி
சதாகாலமும் சங்கரன் நினைப்பால்
தனியே யிருந்து தவிக்கிற போது
சிற்சில சமயம் சித்தம் உடைந்து
'அன்பனே விரைவில் அடையாவிட்டால்
இறந்திடப் போகிறேன்' என்றும் எண்ணுவாள்.

காதலைக் கலக்கிய கடிதம்

இங்கே சங்கதி இப்படி யிருக்க
ரங்கூன் பதியில் சங்கரலிங்கன்
எப்படி யிருந்தான் என்பது பார்ப்போம்.
பட்டாள அலுவலில் பகலைக் கழித்து,
பந்தாட்டங்களில் அந்தியைப் போக்கி,
இருட்டிய பின்னர் எட்டுமணிக்குள்
பொதுவாக உள்ள போஜனசாலையில்
நண்பர்கள் சிலருடன் உண்பது முடித்து,
நயமிகும் அன்பன் ஜெயபா லோடும்
உல்லாசமாகச் சல்லாபித்தபின்,
பத்துமணிக்குள் படுக்கை நாடித்
தனியொரு பகுதியில் தனக்கென்று தந்துள
விடுதிக்கு வருவான், விசனமும் வந்திடும்.
படுக்கையிற் படுத்துப் பலமுறை புரண்டு,
துள்ளித் துள்ளித் தூக்கம் வராமல்,
விழித்து விழித்து வெறிக்கப் பார்த்து,
குறுகிக் குறுகிக் குப்புறப் படுத்து,
நினைத்து நினைத்து நெஞ்சம் குமுறி,
அடக்க அடக்க அதிகப் படுவதாய்ப்
பொங்கிப் பொங்கிப் புறப்படு கின்ற
துக்கம் வந்து தொண்டையை அடைக்க,
வீரரின் எண்ணம் விம்மலைத் தடுக்க,
ஆண்எனும் இயல்பு அழுவதை விலக்க,
கற்றுள கல்விகள் கருத்தில் குறுக்கிட
அறிவின் ஒளிகள் ஆத்திரம் அடக்க,
ஒழுக்க ஆசைகள் ஒருபுறம் வளைக்கப்

படுக்கையை விட்டுப் பதறி எழுவான்.
அறைக்குள்ளேயே அங்குமிங்குமாய்ச்
சுற்றிச்சுற்றிச் சோர்ந்து நடந்து
கால்கள் ஓய்ந்து கண்கள் சுழன்று
மீண்டும் படுக்கையில் மெதுவாய்ப் படுப்பான்.
தாயை நினைத்து உள்ளம் தவிக்கும்;
தந்தையை எண்ணிச் சற்றே தயங்கும்;
மகாதேவரை மதித்து மலைக்கும்;
மங்களம் நினைப்பு மலைபோல் கனக்கும்;
ஏனெனில் அவட்குக் கடிதம் எழுதி
மாதங்கள்பல ஓடி மறைந்தும்
பதிலே வராத காரணம் பற்றி
பற்பல விதமாய் எண்ணிப் பதைப்பான்.
அழகே வடிவாய் அன்பே நினைவாய்
அறிவே சொல்லாய் அறமே செயலாய்
விளங்கும் பெண்ணெனத் தன்னுளம் விரும்பும்
மங்களம், தன்னை மறந்துவிட் டாளோ
என்பதே நித்தமும் சங்கரன் ஏக்கம்.
மற்றவர் நினைப்பு மறந்த போதிலும்
மங்களம், நினைப்பு மனதைக் கலக்கும்.
இப்படித் தினமும் இரவைக் கடத்தி,
உதயக் காலையில் உறக்கம் வரினும்
தூக்கக் கண்ணுடன் துடிதுடித்தெழுந்து,
பட்டாள அலுவல்கள் பார்த்திடவேண்டும்.
ஒருநாள் காலை ஒன்பது மணிக்கு
சங்கர லிங்கம் சஞ்சலம் மிகுந்து
மங்களம் ஏனை மறுமொழிக் கடிதம்
எழுதா திருக்கிறுள் என்பதை எண்ணித்
தனியே யிருந்து தவிக்கிற போது
வழக்கம் போலத் தபால்கள் வந்தன.

அநேகமாக அவைகள் அனைத்தும்
உத்தியோக அலுவலை ஒட்டியவாகவே
இருக்கும். ஆயினும் இவனுடை ஏக்கம்
தபால்கள் வந்ததும் தனக்கதில் எதுவும்
சொந்தக் கடிதம் வந்துளதாஎனப்
பார்த்துவிட்டுத்தான் மற்றவை படிப்பான்.
அப்படிப் போலவே அன்றும் பார்த்தான்.
அதிசயம்தானென அவனுக்கென்றெரு
கடிதம் இருந்ததைக் கண்டு களித்தான்.
உடனே எடுத்து உற்றுப் பார்த்து
எந்தஊர் முத்திரை இருக்கிற தென்று
ஊன்றிப் பார்த்து உவகை பூத்தான்.
விருதூர் முத்திரை விளங்கிடக் கண்டு
ஏக்கம் குறைந்து இன்பம் நிறைந்து
மங்களாம்பாளின் பதிலென மகிழ்ந்து,
கடிதம் அதனைக் கண்களில் ஒற்றி
மங்களம் நினைப்பில் மார்போ டணைத்து
முறுவல் காட்டி முத்தம் கொடுத்து
களிப்பின் மிகுதியால் கைகள் நடுங்க
உறையைக் கிழித்து உள்ளே யிருந்த
மோகன மாகிய காகிதம் அதனைப்
பவித்திர மென்னப் பக்தி பூர்வமாய்
எடுத்து விரித்துப் படித்துப் பார்த்து,
ஒருமுறை படித்து உள்ளம் திடுக்கிட,
மறு முறைபடித்து மிகவும் மருண்டு,
மூன்றும் தடவைத் திணறிய மூச்சு
நின்று விடும்போல் நிலைதடு மாறி,
முகத்தைச் சுருக்கி மூக்கை விரித்து
உதட்டைக் கடித்து உருட்டி விழித்து
மேலும் கீழும் மிரளப் பார்த்து

'மங்களம்! மங்களம்! மங்களம்!' என்று
இரைந்து தன்னுடை இடதுகை நீட்டி
அதிலே முன்னுள் அழகுற எழுதிப்
பச்சை குத்திய பெயரைப் பார்த்து
கசிந்து கசிந்து கண்ணீர் துளும்ப
தாங்கமாட்டாத தாபம் கனக்க...
வலதுகை கொண்டுதன் இடதுமார் பழுத்தி
மூர்ச்சை தட்டிட, முன்னுல் இருந்த
மேஜையின் மீது மெதுவாய்ச் சாய்ந்து
தலையைக் கவிழ்த்துத் தன்நினைவின்றி
மத்தியான்னம்வரை மயங்கிக் கிடந்தான்.

ஜானகியின் தடுமாற்றம்

மகாதேவரின் மனையாளாகிய
ஜானகி யம்மாள் தன்னுடன் பிறந்த
அண்ணன் ஒருவர் ஆதி நாராயணர்
வேலை சிக்காமல் வெகுநாள் அலைந்து
வருவாய் நாடி வடநாடு சென்றார்.
அங்கே ஒருவரின் ஆதர வடைந்து
மத்திய சர்க்கார் உத்தியோ கத்தில்
குமாஸ்தா வாகச் சேர்ந்து கொண்டவர்
படிப்படி யாகப் பதவியில் உயர்ந்து,
கவர்னர் ஜெனரல் காரியா லயத்தின்
' மானே ஜரி'ன்கீழ் மாதச் சம்பளம்
ஆயிரத்தைந் நூறு வாங்கும் அதிபராய்
நல்ல நிலைமையில் டில்லியில் உள்ளவர்,
மங்களம் பிறந்த மறுவருஷத்தில்
தங்கையைப் பார்க்கத் தமிழ்நாடு வந்தார்.
அதற்குப் பின்னுல் அ வகாச மின்றி
வரவில்லை எனினும் வாஞ்சை குறைவில்லை.
தபால் மூலமாய்த் தங்கையின் நலத்தை
அடிக்கடி அறிந்து உதவியும் அனுப்புவார்.
அவருடை ஒருமகன் ஆனந்த ரங்கன்
சீமைக்குப் போய்க் கல்வியிற் சிறந்து
' ஐ. சி. எஸ். ' பட்டம் அடைந்து வந்தவன்
' ஜில்லா கலெக்டர் ' வேலை செய்கிறுன்.
அவனுக் கேற்றதோர் அழகியைத் தேடி
திருமணம் செய்திடத் தீர்மானித்து
ஆதிநாராயணர், அவருடை மனைவி

சரஸ்வதி என்கிற தம்பதி சகிதம்
தமிழகம் வந்துத் தகவல் கிடைத்த
பற்பல பெண்களைப் பார்த்துக் கொண்டே
ஒவ்வொரு ஊராய் ஓடும் வழியில்
தங்கையோ டொருநாள் தங்கிட எண்ணி
விருதூர் வழியை விசாரித் தறிந்து
மகாதேவரின் மனையகம் வந்தார்.
தமயனைக் கண்ட ஜானகி யம்மாள்
அண்ணு! அண்ணு! அண்ணு' என்று
பொங்கி மகிழ்ந்து பூரிப் படைந்து
வீட்டுக் குள்ளே வேலையா யிருந்த
மகளைக் கூவி " மங்களம் ! ஓடிவா
மாமனும் மாமியும் வந்திருக் கின்றனர்.
பார்த்ததே இல்லையே, பாரடி வந்து"
என்றுள் ; கேட்டதும் எழுந்தோடி வந்து
மங்களம், வந்துள மாமன் மாமியின்
எதிரே விழுந்து வணங்கி எழுந்து
புறத்தே ஒதுங்கிப் புன்சிரிப் போடு
மாமனை மாமியை மகிழ்வுடன் பார்த்தாள்.
முழுமதி நாணும் முகத்தின் அழகும்
சூடாமணி போன்று ஜொலிக்கும் கண்ணும்
முத்தினும் வெளுத்த முறுவல் ஒளியும்
உள்ளம் கவரும் உதட்டின் நிறமும்
சித்திரப் பதுமைபோல் சிறந்து விளங்கும்
மருகியைக் கண்டதும் மாமனும் மாமியும்
கோடை வெயிலில் கொதிப்புற நடந்து
மரநிழல் கண்ட மனிதரைப் போலும்
வருஷக் கணக்காய்த் தண்ணீர் வறண்ட
மாநில மக்கள் மழைகண் டதுபோல்
மகிழ்ந்து மகிழ்ந்து அழகினை மாந்தி,

திகைத்து வியந்து திக்குமுக் காடிக்,
குழைந்து வாழ்த்திக் கொஞ்சிக் களித்துப்,
பூரிந்து புகழ்ந்து புதுமைகொண் டாடி,
ஜானகி யவளை சரஸ்வதி பார்த்து,
" என்னடி ஜானகி! உன்னுடை மகளா !
இப்படி ஒரு பெண் இருக்கிரு ளென்பதை
உங்கள் அண்ணு ஒருநாள் கூட
சொன்னதும் இல்லையே ! சொல்லி யிருந்தால்
இப்படித் தினமும் எங்கெங் கேயோ
பெண்தேட வென்று பெரும்பணச் செலவில்
அலைந்து திரிகிற அவஸ்தையே வேண்டாம்.
நாங்கள் வந்ததும் நல்லதாய்ப் போச்சு ;
ஆனந்த ரங்கன் அழகான பையன்
ஜில்லா கலெக்டர் ; சிறந்த சம்பளம்.
அவனுக் கேற்ற அகமுடை யாளாய்
உன்மகள் இவளை என்மகன் தனக்கே
கொடுத்து விடுநீ குறைச்சலே இல்லை ;
என்ன சொல்கிருய் ?" என்றுள் சரஸ்வதி.
ஜானகி யம்மாள் சட்டென நிமிர்ந்து
" ஏழைக ளாகிய எங்களை மதித்துப்
பெண்கொள வருவீர் என்கிற பேச்சு
உதிக்கவே யில்லை, உண்மை அதுதான்.
அதனல் நாங்கள் அயலொரு வரனை
நினைத்தோம் ; ஆனல் நிச்சயம் இல்லை.
எதற்கும் வீட்டின் எஜமான் வரட்டும்
அவரைக் கேட்டால் ஆவன சொல்வார் "
என்றுள் ஜானகி, என்றதும் மங்களம்
வீட்டுக் குள்ளே விரைந்து மறைந்து
கலங்கிய கண்ணுடன் காரியம் பார்த்தாள்.
அதன்பின் உடனே ஆதிநாராயணர்,

மைத்துன ராகிய மகாதேவரை
அழைத்து வரும்படி ஆளை அனுப்பினர்.
விருந்தினர் தம்மை இருந்திடச் செய்து
ஜானகி யம்மாள் சமையலுக் காகிய
காரிய மெல்லாம் கவனிக்க லானாள்.
மனைவி சகிதமாய் மைத்துனர் வந்துள
சேதியைக் கேட்டச் சிறிது நேரத்தில்
மகாதேவரும் மனைக்கு வந்திட்டார்.
மைத்துனரோடும் மனைவியைப் பார்த்து
வணங்கி மகிழ்ந்து வரவேற்பு சொல்லி
குசல விசாரணை குறைவறப் பேசி
விருந்துண் டானபின் விநய பூர்வமாய்
மகாதேவரைப் பார்த்து மைத்துனர்
" உங்கள் மங்களம் எங்கள் புதல்வன்
ஆனந்த ரங்கனுக் கமைந்த மணமகள்.
பொருத்தம் பார்க்கும் வருத்தமே வேண்டாம்.
அன்புடன் நீங்களும் ஆமோதித்தால்
இன்றே நிச்சயம் இங்கே செய்து
விவாகம் அதையும் விரைவில் முடிப்போம்.
இப்படி மருமகள் இங்கே யிருக்க
எங்கே நான்போய் ஏன் தேடவேண்டும் ?
தயவுடன் அவளைத் தந்திட வேண்டும் "
என்ருர் அதனை இன்புறக் கேட்ட
மகாதேவரும் மறுமொழி சொல்வார்:
" உறவின் உரிமை உங்களுக் கேதான் ;
ஆனந்த ரங்கனும் அதற்குத் தக்கவன்.
ஆயினும் என்மகள் ஆதியி லிருந்து
வேரெருரு இளைஞனை மிகவும் விரும்பிக்
காதல் கொண்டுள கதை ஒன்றுண்டு.
அவனும் இவளிடம் ஆசைமிக்கவன்.

செல்வம் கொழிக்கும் சீமான் புத்திரன்.
அறிவிலும் அழகிலும் ஆசைக் குகந்தவன்.
படிப்பிலும் சிறந்த பட்டம் பெற்றவன்.
திருமணம் செய்திடத் தீர்மானிக்குமுன்
அவனுடைத் தந்தை அயலொரு பெண்ணை
பணத்தாசையினல் பலவந்த மாகவும்
கட்டிவைப் பதற்குக் கருதினர் என்று
தந்தையின் முயற்சியைத் தட்டிக் கழிக்கவே
சங்கர லிங்கம் என்கிற அவனும்
எங்கோ போனன் இன்னும் வரவிலை.
இருக்கிற இடமும் எவரும் அறிந்திலர்.
அவனையே நினைத்து அனுதினம் மங்களம்
ஏங்கி இளைத்து எலும்பாய் இருக்கிருள்.
அவளுடை மனதை நன்ருய் அறிந்தநான்
நிச்சயம் சொல்லிடும் நிலையில் இல்லையே !
என்பது ஒன்றே என்னுடை வருத்தம்.
மனமார இப்போது மன்னிக்க வேண்டும்,
பகவான் திருவுளம் என்னவோ பார்ப்போம்,
பொறுங்கள் ; கொஞ்சநாள் போனபிற்பாடு
நிலைமையில் எதுவும் மாறுதல் நேர்ந்தால்
மங்களாம்பாளின் மனமும் மாறலாம்.
அதன்பின் உங்களை நானே அழைப்பேன்"
என்றதைக் கேட்டு ஏமாந்த மைத்துனர்
சத்தியம் பேசும் உத்தம ராகிய
மகாதேவரின் மனதை அறிந்தபின்
மற்றெதும் பேசிட மார்க்கமில்லாமல்
"பகவான் அருளும் பலித்திட வேண்டும்
மங்களம் மனமும் மாறிட வேண்டும்
என்பதே என்னுடைப் பிரார்த்தனை" என்ருர்.
அதனைக் கேட்ட ஜானகி அம்மாள்

மங்களாம் பாளே மணந்து வாழச்
சங்கரலிங்கமே சகலவி தத்திலும்
சிறந்தவ னென்பதை அறிந்தவ ளாயினும்
ஆதிநா ராயணர் அண்ணன் அல்லவா ?
உடன்பிறப் பென்கிற பாசம் உந்திட
சங்கரன் வருவதில் சந்தேகம் உள்ளது
ஆதலால் மகளுக்கு ஆனந்த ரங்களேத்
தீர்மா னிப்பதும் தேவலே யென்றே
ஆசைப் பட்டாள்; ஆயினும் தன்னுடை
புருஷன் சொன்னதே போதுமென் றெண்ணி
அவளுடைக் கருத்தை அடக்கிக் கொண்டாள்.
அன்று முழுவதும் அங்கே தங்கிய
விருந்தினர் மறுநாள் வேற்றூர் போயினர்.

மங்களம் மனம் உடைதல்

அவர்கள் போனபின் ஆறுநாள் சென்று
ஒருநாள் மங்களம் ஓய்வானநேரம்
புழங்குதல் இல்லாப் புறக்கடை அறையில்
எவரும் அறியா ஏகாந்தத்திலே
விளக்க முடியா விசனத் தோடும்
அன்பன் சங்கரன் அவனையே எண்ணிக்
கண்ணீர் கசியக் கலங்கும் பொழுது
மாமனும் மாமியும் வந்தது பற்றியும் . . .
தன்னைப் பார்த்துத் தாயா ரிடத்தில்
மாமி சொன்னதும் மறுமொழி யாக
அன்னை சொன்னதில் "அயலொரு வரனை
நினைத்தோம் ஆனல் நிச்சய மில்லை,
எஜமான் வரட்டும்" என்று சொன்னதும் . . .
தந்தை கூடச் சந்தே கத்துடன்
"பகவான் திருவுளம் என்னவோ பார்ப்போம் ;
நிலைமையில் எதுவும் மாறுதல் நேர்ந்தால்
மங்களாம்பாளின் மனமும் மாறலாம்
அதன்பின் உங்களை நானே அழைப்பேன்"
என்றதும் நினைத்து எரிச்சல் பொங்க
உள்ளம் புகைந்து உடலம் கொதித்து
வேர்த்து விதிர்த்து வெதும்பும் தருணம்
தபால் சேவகன் கதவைத் தட்டினன்.
ஜானகி யம்மாள் சட்டென ஓடி
தாழ்ப்பாள் திறந்தாள் ; தபாற்காரனும்
'ரிஜிஸ்டர் கடிதம் நேரிற் தந்திட
மங்களாம் பாளே வரவேண்டு' மென்றான்.

அன்னை, மகளைக் கூவி அழைத்தாள்.
மங்களம் வந்திலள் ; மாதா தேடினள்.
இருக்கும் இடங்களில் இல்லாமையினால்
கொல்லைப் பக்கமாய் உரக்கக் கூவினள்.
சத்தம் கேட்டதும் சட்டென மங்களம்
கண்ணைத் துடைக்க முகத்தைக் கழுவி
வேதனைக் குறிகள் வெளியில் தெரியா
வண்ணமாய் வந்து தபாலை வாங்கினள்.
அதன்மேல் விலாசம் ஆங்கில மொழியில்
இருந்தது கண்டாள் ; இடது புறத்தில்
அனுப்பும் விலாசம் அதுவும் இருந்தது.
உடனே அதனை உற்றுப் பார்த்திட,
அந்த விலாசம் சிந்தையைக் கவர்ந்த
சங்கரன் பெயரே அங்குள தாகக்
கண்டதும் மங்களம் அடைந்த களிப்பை
சொல்லவும் வேண்டுமா ? சொன்னால் முடியுமா ?
மலர்ந்தன கண்கள் ; மறைந்தது சோகம் ;
ஒளிர்ந்தது வதனம் ; உயர்ந்தன மார்கள் ;
சிவந்தது அதரம் ; சிரித்தன பற்கள்.
அதனைக் கண்டதும் அருகே இருந்த
அன்னையும் மகிழ்ந்து "என்னடி மங்களம் ?
ஏன் சிரிக்கின்றாய் ? எங்கே யிருந்து
வந்திருக்கின்றது ? வாசித்துச் சொல்லு"
என்றாள் ஜானகி இங்கிலீஷ் அறியாள்.
புன்சிரிப் போடும் புகல்வாள் மங்களம்
"கோபால கிருஷ்ணர் குமார ராகிய
அவர்தான் அம்மா அனுப்பி யிருக்கிறார்.
உள்ளே போவோம் உட்கார்ந்து படிப்போம்"
என்றதும் உடனே இருவரும் சென்று
தாழ்வாரத்தின் தரையில் அமர்ந்தனர்.

மேலுறை அதனை மெதுவாய்க் கிழித்துத்
தாளை எடுத்துத் தளுக்காய் விரித்துப்
பரபரப் புடனே படிக்க முனைந்தாள்.
சங்கர லிங்கன் இங்கிலீஷ் எழுத்து
அழகா யிருக்கும் மங்களம் அறிவாள்.
எழுத்தைப் பார்த்து ஏமாற்றத்துடன்
ஒருவரி படித்ததும் ஐயம் உதித்து,
மறுவரி படித்ததும் மலைப்புத் தட்டச்,
சிலவரி படித்தபின் சித்தம் குழம்பி
இடையே கொஞ்சம் இன்பமும் வந்து
சிறிது நேரத்திலே அதுவும் சிதறி,
படிக்கப் படிக்கப் பயமுண் டாகிட
மலர்ந்த கண்கள் அலந்து வதங்க,
ஒளிர்ந்த வதனம் உலர்ந்து சுருங்க,
உயர்ந்த மார்பும் ஒடுங்கித் தளர,
சிவந்த அதரம் குவிந்து சுருங்கச்
சிரித்த பற்கள் சென்று மறைந்திட,
முழுதும் படித்து முடிக்கும் முன்பே
"ஐயோ ! அம்மா ! அம்மா !" என்று
மயங்கி மங்களம் மண்ணிற் சாய்ந்தாள்.
பார்த்த ஜானகி பதைபதைத் திட்டாள்.
கண்கள் இருளக் கைகால் நடுங்க
மகளைத் தூக்கி மடியிற் போட்டு
மயக்கம் தீர்க்கும் மாற்றுகள் செய்யத்
தண்ணீர் முதலிய கொண்டு தரும்படி
உரக்கக் கத்தி உள்ளே யிருந்த
அம்பிகை நாத்தியை அழைத்தாள் அலறி;
உள்ளே யிருந்தனர் ஓடிவந் தார்கள்.
வேண்டிய பொருளை விரைவில் தேடி
செய்யத் தெரிந்துள பலவும் செய்தனர்.

மங்களம் சிறிதும் மயக்கம் தீர்ந்திலள்.
மகாதேவரை அழைத்து வரும்படி
சேதி அனுப்பினர் சீக்கிர மாகவே
அவரும் வந்தார்; அவருடன் வந்த
வைத்தியர் ஒருவர் வாகட முறையில்
செய்யத் தக்கன செய்த பிற்பாடு
சில்லிட்ட தேகம் சிறுகச் சிறுக
வெதுவெதுப் பேறி வேர்வையும் விட்டு
விழுந்த நாடிகள் எழுந்தன வாக
தடைபட்ட மூச்சும் தாரா ளமாகி
அபாய நிலைமை அகன்றது எனினும்
கண்ணைத் திறந்திலள் காதும் கேட்டிலள்.
தாதுகள் நன்ருய்ச் சோதனை செய்து
' இனிமேல் பயமில்லை ' என்ருர் வைத்தியர்.
அதனல் மிகவும் அச்சம் குறைந்த
நிலைமை தோன்றி நிதானம் நிலவ,
மகாதேவர் மனைவியைக் கேட்டு
மங்களம் அப்படி மயங்கி விழுந்திடக்
காரண மாகிய கடிதம் அதனை
வாங்கிப் படித்தார். வருந்தத் தகுந்த
காரியம் அதிலே கண்டுள தெனினும்
சங்கரன் குணத்தைச் சரிவரத் தெரிந்துள
அவருக் கென்னவோ அந்தக் கடிதம்
பொய்யெனும் எண்ணமே புத்தியிற் பட்டது.
உறையில் விலாசம் உண்மையே போலத்
தோன்றிய தெனினும் துருவிப் பார்க்கையில்
அதன்மேல் இருந்த அனுப்பும் விலாசம்
' சார்ஜென்ட் மேஜர் சங்கர லிங்கம்
இந்திய சேனை ஈசான ரங்கூன் '
என்பது மட்டும் தெளிவாய் இருந்தது.

தபால் முத்திரை தனிலுள ஊர்பேர்
விளங்கும் படியாய் முத்திரை விழவிலை.
திருப்பித் திருப்பித் திலைந்து பார்க்க
' ரங்கூன் ' ' ஸ்டாம்ப் ' அங்கிலை என்பதை
தெரிந்து கொண்டதும் தியக்கம் விட்டது.
சஞ்சலம் நீங்கிய சந்தோஷத்துடன்
மனைவியை நோக்கி " மங்களம் வாழ்வைக்
கெடுக்க நினைக்கும் கீழ்மகன் யாரோ
எழுதி யிருக்கிருன் என்று நினைக்கிறேன்.
சங்கர லிங்கம் சார்ஜென்ட் மேஜராய்
பர்மா நாட்டில் ரங்கூன் பகுதியில்
இருக்கிருன் என்பதில் உண்மை இருக்கலாம்.
மற்றவை யெல்லாம் முற்றிலும் பொய்கள்
என்பதே என்னுடை எண்ணம்" என்ருர்.
என்றதைக் கேட்டதும் ஜானகி எழுந்து
" கடிதம் அதிலே கண்டுள தெல்லாம்
சுத்தமாய் எனக்குச் சொல்லுங்கள்" என்ருள்.
முற்றிலும் அதனை மொழிபெயர்ப் பாக
மகாதேவரும் மனைவிக்குச் சொன்னது:
அன்பு மிகுந்துள மங்களம் அம்மா!
பர்மா நாட்டில் ரங்கூன் பகுதியில்
இந்தியச் சேனையில் இருந்து வருகிற
அன்பன் ஒருவன் அனுப்பும் கடிதம்:
என்னுடன் இருக்கும் உன்னுடை அன்பர்
சங்கர லிங்கம் சகல விதத்திலும்
நல்லவர் ஆனதால் நானும் அவரும்
நெருங்கிப் பழகும் நேசர்க ளானேம்.
ஆரம்பத்தில் அனுதினம் அடிக்கடி
உன்னைப் பற்றியே என்னிடம் பேசுவார்.
" மங்களம் அழகும் மதிநலத் தெளிவும்

சொல்லின் இனிமையும் சுசிகர மாகிய
பழக்க வழக்கமும் பணிவும் தணிவும்
உடையின் எழிலும் நடையின் ஒயிலும்
ஜீவகாருண்யமும் சேவையில் எண்ணமும்
இன்னொரு பெண்ணிடம் கண்டதே யில்லை.
அவளைத் தவிர அயலொரு பெண்ணை
நீனைக்கவும் கூடஎன் நெஞ்சம் மறுக்கும்.
அப்படிப் பட்ட அழகியை விடுத்து
என்னுடைத் தந்தை என்மனம் குழுற
வேறொரு பெண்ணை விவாகம் செய்யக்
கட்டாயம் பேசிய காரணம் அதனால்
வீட்டையும் விட்டுநான் வெளியேற நேர்ந்தது.
எந்தநே ரத்திலும் என்முன் தோன்றி
உருவெளியதிலே உறவு கொண்டாடும்
கண்மணி அவளை எப்போது காண்பேன்''
என்பதே நித்தமும் என்னுடன் பேசிய
அப்படிப் பட்டவர்! எப்படியோஒரு
பர்மாக் காரியின் பாச வலைக்குள்
சிக்கிக் கொண்டுச் சீர்குலைந் திட்டார்.
கூடிய மட்டும் தடுத்துக் கூறியும்
என்னுடைச் சொற்கள் ஏறவே இல்லை.
காமத் துடிப்பில் கண்ணிழந் தவராய்த்
தன்னையும் மறந்து உன்னையும் விடுத்துப்
பட்டாள நண்பர் பலபேர் பார்க்கப்
பர்மாக் காரியின் பந்துக்கள் கூடித்
திருமணம் 'ரிஜிஸ்டர்' செய்தா கிவிட்டது,
இனிநீ அவரை எண்ணவும் வேண்டாம்.
என்பதை உனக்கு எழுதும் படிக்கு
அவரே சொன்னதை எழுதி அனுப்பினேன்.
அவர்மேல் உனக்குள ஆசையை விட்டுன்

இஷ்டப் படிக்குநீ இன்னொரு வரனை
தேடிக் கொள்வதே தேவலை என்றார்.
சங்கடம் தருகிற சங்கதி இதைஉன்
நன்மைக் காகவே நானும் எழுதினேன்.
மன்னிக்க வேண்டும் அம்மா மங்களம்''
என்பது கடிதம் என்றார் கணவர்;
அதனைக் கேட்ட ஜானகி அம்மாள்
மிகவும் வருந்தி வேதனை யுற்றாள்
எனினும் சொல்வாள் '' உண்மை யிருக்கும்.
பர்மாக் காரிகள் பசப்பிக ளாமே!
மாயா ஜாலம் மயக்கு வித்தையில்
கைகாரிகளெனக் கதைகளும் உண்டு.
வாலிபன் சங்கரன் வயதின் துடிப்பில்
ஏமாந்து விட்டதாய் இருப்பினு மிருக்கும்.
இத்துணை நாளும் இருக்கும் இடத்தையும்
மங்களத்துக்கும் மறைத்த காரணம்
அதுதான் என்றே அனுமானிக்கிறேன்.
ஆகையால் நாம்இனி அவனையே வரஞய்
நீனைத் திருப்பதும் நியாயமாகாது.
எப்படி இருக்குமோ எவரென்ன கண்டது?
அண்ணன் குமாரன் ஆனந்த ரங்கன்
இன்னொரு பெண்ணை எண்ணிடு முன்னல்
நீங்களே அழைத்து நிச்சயம் செய்வது
நல்லது என்றே நான்நினைக்கின்றேன்''
என்றாள் ஜானகி என்றதைக் கேட்ட
மகாதேவரும் மறுமொழி சொல்வார்:
'' ஜானகி நீஉன் சபல புத்தியால்
அப்படிச் சொல்வது அநீதி யாகும்.
அண்ணன் உறவின் ஆசை புகுந்தே
நீயும் இப்படி நிலைகுலைந் திட்டாய்.

சங்கரன் அப்படிச் சதிகாரன் அல்ல.
முற்றிலும் இதுஒரு மோசக்காரனுல்
எழுதப் பட்டதே என்பது காண்பாய்.
அவசரப் படுவது அறிவுள்ளதல்ல.
பொறுத்துக் கொண்டிரு உண்மை புரியும்.
யாருக்கும்இதை அறிவிக்க வேண்டாம் ''
என்றபின் ஜானகி சும்மா இருந்தாள்.

சங்கரன் நோயுறல்

ரங்கூன் நகரில் ராணுவ முகாமில்
தன்னுடை விடுதியில் சங்கரலிங்கம்
மெய்மறந்தவனுய் மேஜையின் மீது
கவிழ்ந்து கிடந்ததைக் கண்டோம் முன்பு.
அப்படிச் சங்கரன் கிடந்ததை அவனுடை
வேலைக் காரன் வெகுநேரம் வரை
சும்மா என்னவோ சோம்பலில் அப்படி
சாதாரணமாய்ச் சாய்ந் திருப்பதாய்
எண்ணிக் கொண்டே இருந்தவன் பிறகு
பக்கத்திற்போய், குனிந்து பார்த்திட
உடல்நலம் கெட்டு உபத்திரவத்தில்
சங்கடப் படுவதாய்ச் சந்தேக முற்று
உடம்பைத் தொட்டான்; சங்கரன் உணர்ந்திலன்.
கையைத் தீண்டினன்; கனலாய்க் கொதித்தது.
'ஐயா ! ஐயா ! ஐயா !' என்று
பலமுறை அழைத்தான் பதிலே இல்லை;
வேலைக் காரன் மிகவும் வெருண்டு
வேகமாய் உடனே வெளியே ஓடி
கர்னல் துரையின் காரியா லயத்தில்
சங்கர னுக்குச் சலுகை மிகுந்த
சினேகித னுகிய ஜெயபா லிடத்தில்
சங்கதி சொல்லச் சட்டென அவனும்
அங்கே இருந்தவர் அன்பர்கள் சிலரும்
டாக்டர் மேஜர் ஜான்ஸன் துரையுடன்
விரைந்து சங்கரன் விடுதிக்கு வந்தனர்.
பரிசோதனைகள் பண்ணின பண்டிதர்

அபாயம் உளதென அறிவித்து உடனே
இதயத் துடிப்பை இளகச் செய்திட
ஊசி மருந்தினை உடலிற் செலுத்தி,
'ஆம்புலன்ஸ்' என்னும் ஆள்தூக்கி யதனைக்
கொண்டு வரும்படி கோரிக்கை யோடு
ஆஸ்பத்தி ரிக்கொரு ஆளை யனுப்பினர்.
தூக்கும் படுக்கையும் துரிதமே வந்தது.
அதிலே அவனை அலுங்காது கிடத்தி
துணைவர்கள் அவனைத் தூக்கிச் சென்று
வைத்திய சாலையில் படுக்க வைத்துச்
செய்யத் தக்கன சிகிச்சை செய்தனர்.
அன்று முழுவதும் அசைவிலா திருந்து,
கொஞ்சங் கொஞ்சமாய் குணமுண் டாகி,
மறுநாள் காலையில் மயக்கம் குறைந்து
சங்கரன் உணர்ச்சிகள் சலனம் பெற்றன.
'மங்களம் ! மங்களம் ! மங்களம் ! என்று
அடிக்கடி சங்கரன் அரற்ற லானான்.
சிறுகச் சிறுகச் சித்தம் தெளிந்து
கண்ணைத் திறந்து கட்டிலுக் கருகில்
நின்றுகொண் டிருந்த நேசனைப் பார்த்து
'ஜெயபால் ! ஜெயபால் ! என்ன செய்குவேன் !
ஆசை முழுதும் அழிந்து விட்டதே !
நனவுக ளெல்லாம் கனவா யினவே !
இன்பம் என்பது இனிஎனக் கேது ?
ஐயோ ! மங்களம் ! அப்பா !' என்று
மறுபடியும் அவன் மயக்க முற்றனன்.
அதன்மேல் சற்றே அமைதி யுண்டாகி
நாளுக்குநாளாய் நலமுற லானான்.
சங்கர லிங்கம் வைத்திய சாலையில்
இருபத் தேழுநாள் சிகிச்சையில் இருந்து

கூடிய வரையில் குணமடைந் தவனுய்
விடுதலை பெற்று,தன் விடுதிக்கு வந்தான்.
ஆயினும் உடம்பின் ஆற்றல் சிதைந்து
காரியம் பார்க்கும் வீரியம் குறைந்து
வியாதிக் காரரின் விடுமுறை பெற்று
தன்னந் தனியே இருந்த தன்மையால்
மங்களம் நினைப்பே மனதைக் குழப்பிட
ஏங்கி இளைத்தது எப்படி யென்றுல் :
நினைந்து நினைந்து நேர்த்திகள் சேர்த்து
புனைந்து புனைந்து கற்பனை புகுத்தி
வனைந்து வனைந்து வருணம் தீட்டி
எட்டச் சென்றும் கிட்டப் போயும்
குனிந்து நிமிர்ந்து கூர்ந்து குழைந்து
நேராக நின்றும் ஓரமாய்ச் சென்றும்
பார்த்துப் பார்த்துப் பலமுறை ஆய்ந்து
எழுதிய சித்திரம் எரிந்து போனதைப்
பார்த்த ஓவியன் பதைத்தது போலும்,
குயிலினம் பாடவும் மயிலினம் ஆடவும்
கிளிகள் கொஞ்சவும் வண்டுகள் கிளரும்
எண்ணரும் பற்பல வண்ண மலர்களின்
பரிமளம் கமழவும் பலவித மாகிய
கனிகளின் காட்சிகள் கண்ணைக் கவரவும்
தாமரை பூத்த தடாகம் நிறைந்த
குளிர்ந்த நீரில் குளித்து வருகிற
மெல்லிய தென்றல் மேனியில் தவழவும்
தேகம் சிலிர்த்து சித்தம் நிலைத்து
பேரின்பத்தைப் பெற்றது போன்ற
உணர்ச்சிகளேமிக உண்டாகும்படி
கண்டுகொண் டிருந்தஓர் அழகிய காவனம்
ஒருநொடிப் பொழுதில் ஒன்றுமில்லாமலோர்

மணல்வெளிப் பாலையாய் மாறிக் கொதிப்புற,
பதைபதைத் திடுகிற பாதசாரிபோல்
இன்பம் வறண்டு துன்பமே சூழ்ந்து
உலகை வெறுத்து உணவை மறுத்து
நித்திரை யின்றி நிரந்தர மாகிய
விசனக் கடலில் விழுந்தான் சங்கரன்.

... ...

மங்களம் என்கிற மங்கையின் சிறப்பும்
அளவற்ற காதல் அவளிடம் கொண்டுள
சங்கர லிங்கன் சரித்திர முழுவதும்
நன்ரு யறிந்துள நண்பன் ஜெயபால்
அடிக்கடி பலவித ஆறுதல் சொல்லி,
தேற்றியும் சங்கரன் தேரு ஞகிப்
படுக்கையிற் கிடந்தே பகலையும் கழிப்பான்.
இடையிடை அடிக்கடி இடதுகை நீட்டி
அதிலே பச்சையில் அழகுறத் தீட்டிய
'மங்களம்' பெயரைப் பார்த்து மருள்வான்.
குறத்தியர் முன்னே பச்சை குத்திய
அப்போது மங்களம் அவனைப் பார்த்து
'நிரந்தர மாகவே நெஞ்சிற் பதிந்து
முயற்சி செய்யினும் மறக்கவே முடியா
உள்ளன் புடையவர் ஒருவரை ஒருவர்
பச்சையிற் குத்தியா பார்த்திட வேண்டும் ?'
என்பன சொல்லி ஏளனம் செய்ததை
நினைத்து நினைத்து நெஞ்சம் குமுறிட
" அப்படிச் சொன்னவள் அந்த மங்களம்,
இப்படி செய்ததை எப்படிச் சகிப்பது ?"
உள்ளன்பென்பது உலகினில் இல்லையோ !
காதல் என்பது கானல் நீர்தானு ?
உலகம் முழுவதும் ஒருபெரும் ஜாலம்,

பொய்யுல கென்றது மெய்தான் போலும்.
இப்படிப் பட்டவள் இவளா நம்பியா
தந்தையைச் சினந்து தாயையும் பிரிந்து
வீட்டைத் துறந்து நாட்டைக் கடந்து
பட்டாளம் சேர்ந்து பரதேசி யானேன் !
இப்படிச் செய்திட எண்ணியே முன்நான்
அனுப்பிய கடிதம் அதற்கொரு பதிலும்
இத்தனை நாளும் எழுதா திருக்கிருள்
என்றதன் உண்மை இன்றுதான் கண்டேன்.
ஐயோ ! அம்மா ! அப்பா !" என்று
பச்சையைப் பார்த்துப் பல்லைக் கடித்து
அந்தப் பச்சையை அழிக்க நினைத்து
அழியா தென்பதை அறிந்து வருந்தும்.
கண்முன் இருந்த கையை மறைத்து
குப்புறக் கிடந்து குமுறுவான் கொஞ்சம்.
உயிரைத் துறந்திட ஒருகணம் நினைப்பான்.
மறுகணம் அதனை மறந்து விடுவான்.
அடுத்த நிமிஷம் அவன்மனக் கண்முன்
மங்களாம்பாளின் மலர்ந்த முகமும்
அகன்ற நெற்றியும் அழகிய புருவமும்
கூரிய விழிகளும் குளிர்ந்த பார்வையும்
சிவந்த உதடும் சிரித்த பற்களும்
உருவெளித் தோன்றி உணர்ச்சியைக் கிளர
கட்டித் தழுவிடக் கைகளை விரித்துத்
தாவி எழுந்து தடுமாறி நிற்பான்.
கிட்டிய உருவெளி எட்டிப் போனதும்
சிதைந்த ஆசை சினமாய்க் கொதித்து
ஊருக்குப்போய் உடனே அந்த
மங்களாம்பாளின் மயிரைப் பிடித்து
அடித்து உதைத்து ஆத்திரம் தீரக்

காறி உமிழ்ந்து கடிந்திட நினைப்பான்.
அந்தக் கணமே அதையும் வெறுத்து
'பிழைபுரிந் தாலும் பெண்களை அடிப்பது
ஆண்மையை அழிக்கும் அறிவீனம்' என்று
அமைதிவந் தவன்போல் படுக்கையில் அமர்வான்.
பின்னும் நினைவுகள் பின்னிக் குழப்பப்
'பெண்ணை அடிப்பது பிழையென்ருலும்
மங்களாம்பாளை மாசு படுத்திய
ஆடவன் அவனை அழித்துவிட்டாலும்
குற்றமாகாதெனக் கொஞ்சம் எண்ணுவான்.
உடனே அதையும் உதறித்தள்ளி
'அதுதான் எதற்கு? அதுவும் பாதகம்
ஆசைகள் காட்டி மோசம் செய்தவள்
மங்களம் ஆகையால் மற்ருெரு மனிதனை
நிந்தனை செய்வது நியாயமே அல்ல.
இவளையும் கூட இகழ்ந்து பேசிட
என்ன உரிமை எனக்கிருக்கின்றது?
எவளும் எவனும் எப்படிப் போனுல்
நாமேன் அதனுல் நலிந்திட வேண்டும்?
அவளுடை செயல்கள் அவளுடை உரிமை.
என்மேல் அவளுடைக் காதல் இருப்பதாய்
எண்ணி யிருந்தது என்னுடைத் தப்பிதம்
'நிரந்தர மாகவே நெஞ்சிற் பதிந்து
முயற்சி செய்யினும் மறக்க முடியா
உள்ளன் புடையவர் ஒருவரை ஒருவர்
பச்சையில் குத்தியா பார்த்திட வேண்டும்'
என்றுமுன்னே அவள் ஏதோ சொன்னதை
பெரிதாய் எண்ணிப் பித்துக் கொண்டிட்டேன்.
இன்னதென்றறியாச் சின்ன வயதினில்
விளையாட்டிற்சொன்ன வேடிக்கைப் பேச்சை

நிச்சயம் எனநான் நினைத்துக் கொண்டது
மடத்தன மன்றி மற்றென்னவாகும்?
ஆதலால் அவளை அடியோடு மறந்து,
'காதல் என்பதும் கட்டுக்கதையென
ஒதுக்கி விடுவதே உத்தமம்' என்று
ஆறுதல் அடைவான், அரைநொடிப் போதில்
மீண்டும் அவளையே நினைத்து மெலிவான்.
இப்படிச் சிலநாள் இடருற் றிருந்ததில்
சோகம் மிகுந்திட தேகம் இளைத்து
அன்னையின் ஏக்கம் அதிகப் பட்டது.
உடனே ரஜாவில் ஊருக்குப்போய்
அன்னையைக் கண்டு ஆறுத லடைந்து
தந்தையைச் சினந்த தப்பிதம் மாற்றி
தன்னுடை வீட்டில் தங்கி யிருந்தால்
பெற்ருே ரன்றி மற்ருே ரிடத்தில்
அடைந்திட முடியா அன்பு மருந்தால்
உடல்நலம் வருமென உறுதி கண்டனன்.
மறுநாள் காலையில் ஜெயபால் வந்ததும்
ஊருக்குப் போய்வர உதித்துள ஆசையை
சங்கரன் சொன்னன்; சரியெனக் கண்ட
நண்பனும் அதுதான் நல்லது என்றிட,
இருவரும் சேர்ந்து எண்ணிப் பேசி
வியாதியின் நிமித்தம் பெற்றுள விடுமுறை
அதையே மேலும் ஆறு மாதங்கள்
நீட்டிக் கொள்வதாய் நிச்சயம் செய்து
வேண்டிய விதமாய் விண்ணப்பமெழுதி
சேனு பதியிடம் ஜெயபால் கொடுத்துச்
சொல்லத்தக்கன யாவையும் சொல்ல,
சீக்கிர மாகவே 'சிக்லீவ்' வந்தது.
உடனே சங்கரன் ஊரை நோக்கிப்

பயணம் புறப்பட பரிவுள்ள ஜெயபால்
சங்கரன் கப்பலில் தனியே போவது
அப்போ திருந்த அவனுடல் நிலைக்குச்
சரியல்லவென்று சகாயத்துக்கொரு
ஆளையும் அவனுடன் அனுப்பிவைத்தான்.

அன்னபூரணிக்கு அபாயம்

பெற்றிட விரும்பும் பேறுகள் யாவினும்
மக்களைப் பெறுவதே மாபெரும் பேறென
உலகம் மகிழ்வது கண்கண்ட உண்மை.
குறைகளி லெல்லாம் மிகப்பெரும் குறையென,
குழந்தையில் லாததைக் குறிப்பதும் வழக்கம்.
உணவுப் பொருள்கள் உற்பத்தி குறைந்து,
பற்பல நாட்டிலும் பஞ்சம் மிகுந்திட
ஜனத்தொகை மிகுவது சங்கடம் தருமெனக்
குழந்தை பெறுவதைக் குறைத்திட வேண்டிக்
கருப்பத் தடைகளைக் கருதுமிந் நாளிலும்
குழந்தையில்லாமல் குறைபடுவோர்பலர்.
கூனை, முடமோ, குருடோ, செவிடோ,
ஆணை, பெண்ணை, அழகோ, அசிங்கமோ
தான்பெற்ற மகவே தனிச்சிறப் புளதாய்
உணரச் செய்வது உடம்பின் இயல்பு.
குணமிலாக் குரூபக் குழந்தை பெறினும்
அப்படி இன்பம் அடைகுவ ரென்றுல்
அறிவுடன் அழகும் அமைந்த மக்களைப்
பெற்றவர் அடையும் பெருமித மகிழ்வை
எழுதவும் முடியுமா ? ஏடுதான் போதுமா ?
பெற்றோர் இருவருள் பெற்றவ ளாகிய
அன்னையின் மகிழ்ச்சி அளவுக் கடங்குமா ?
... ...
அழகும் அறிவும் ஆற்றலும் அமைந்து
கல்வியிற் சிறந்து கலைகளும் தெரிந்து
இரக்கம், ஈகை, இனிமையும் பொருந்தி

ஒழுக்க வழக்கம் உயர்ந்தவ ணுகிச்
சான்ரோன் என்று சகலரும் புகழும்
தனிமக ணுகிய சங்கர லிங்கனைப்
பிரிந்து வருந்தும் பெற்றவ ளாகிய
அன்னபூரணியார் அடைந்த வேதனை
எப்படித் தென்பதை எப்படிச் சொல்வது ?
சங்கர லிங்கன் எங்கே போயினன்
ஏது செய்கிறன் என்னவா யுள்ளான்
என்பவை பற்றிய ஏதொரு சேதியும்
வந்திலா ததனால் நொந்து நொந்திளைத்து
நாளுக்கு நாளாய் மிகவும் நலிந்து,
உள்ளத் துயரம் உடல்நோ யாகிப்
பலநாளாகப் படுத்த படுக்கையாய்ச்
சதாகாலமும் சங்கரன் பெயரே
மூச்சுக்குமூச்சு முனகிய வண்ணம்
அபாய நிலைமை அடிக்கடி நேர்ந்து,
வைத்திய நிபுணர் பலபேர் வந்து
நாளொரு முறையும் பொழுதொரு மருந்தென
பற்பல விதமாய் சிகிச்சை பண்ணியும்
பயன்பட வில்லை பார்த்தவ ரெல்லாம்
'பிழைப்பது கடினம்' என்பதே பேசி
கையைப் பிசைந்து கண்ணீர் கசக்கும்
நிலைமையிற் கிடந்தாள் நினைவரும் குணவதி.
எந்த நேரத்திலும் எவருக் கெனினும்
இல்லையென்னுமல் எதையும் கொடுத்து
உதவிட என்றே உள்ளவள் என்றிடும்
உத்தமி யானதால் ஊரா ரெல்லாம்
அவளுக்கு நேர்ந்த அபாய நிலையை
அவரவர் வீட்டில் அடைந்தது போன்று
அன்னபூரணியின் ஆசார வாசலில்

கூட்டங் கூட்டமாய்க் கூடி நிற்பதும் . . .
வருவதும் போவதும் வாய்பேசாமல்
தெய்வம் தொழுவதும் தேம்பி அழுவதும் . . .
'அமாவாசை அடுத்துள அதனால்
பாட்டியம் போனால் பயமில்லை' என்றும்
'ஜோசியர் என்னதான் சொன்னார் ? என்றும்
பற்பல விதமாய்ப் பேசிப் பரிவதும் . . .
'டாக்டர்' முகத்தை ஏக்குடன் பார்ப்பதும்
இப்படித் தவிப்புடன் இருக்கிற ஒருநாள்
மத்தியானத்தில் பனிரண்டு மணிக்கு
முற்றிலும் புதியதோர் மோட்டார் வண்டியில்
வந்தொரு வாலிபன் வாசலில் இறங்கினன்.
இறங்கிய வாலிபன் இடதுகை அதனில்
தோல்பெட்டி ஒன்றையும் தூக்கி இறங்கிட,
ஆங்கில உடைகள் அணிந்துள அவனைரு
கைப்பெட்டியுடனே இறங்கக் கண்டதும்
இன்னொரு நூதன டாக்டர் இவனென
அங்குள அனைவரும் ஆசை மிகுதியால்
அன்னபூரணியின் அபாயம் நீங்கிடக்
கருணையின் கடலாம் கடவுள் அனுப்பிய
வைத்தியன் என்றே வணங்கிச் சூழ்ந்தனர்.
வணங்கின அவர்களைத் திருப்பி வணங்கிட
ஆங்கில முறையை அனுசரிப்பதுபோல்
வாலிபன் தன்னுடை வலதுகை அதனால்
அணிந்துள தொப்பியை அகற்றின உடனே
கூட்டத்திலேயொரு நோட்டக்காரன்
வாலிபன் அருகினில் விரைந்து வந்தான் ;
உருட்டி விழித்து உற்றுப் பார்த்தபின்
அடையாளத்தினை அறிந்து கொண்டதும்
" சங்கர லிங்கமா ! சாமீ ! அப்பா !

இத்தனை நாளும் எங்கே போனாய் ?
தாயார் இப்படித் தவித்திட லாமா ?''
என்றான் ; அங்கே இருந்தவ ரெல்லாம்
சங்கர லிங்கம் ! சங்கர லிங்கம் !
அன்னபூரணியின் ஆருயிர்ப் புதல்வன்
ஆமாம், ஆமாம், அவனே அவன்தான்.
சங்கர லிங்கமே, சந்தேக மில்லை.
ஆமாம் ஆம்'என ஆரவாரித்தனர்.
மனையின் முன்னால் மாபெருங் கூட்டம்
அப்படிக் கூடிடக் காரணம் அறியான்
'தாயார் இப்படித் தவிக்க லாமோ ?
என்றதைக் கேட்டதில் ஏக்கம் மிகுந்து
ஐயமும் உதித்து அச்சமுண்டானதால்
அன்னையைப் பார்த்திட ஆவல் துடித்திட
உள்ளே நுழைந்திட ஓரெட்டு வைத்தான்.
அந்தத் தருணம் அவனுக்கு எதிரில்
வந்தார் டாக்டர் வெங்கட வரதன்.
வெங்கட வரதன் வெகுநல்ல நிபுணர்,
கோபால கிருஷ்ணரின் குடும்ப வைத்தியர் ;
சங்கரன் கதையைச் சரிவரத் தெரிந்தவர்.
அன்னபூரணிக்குள அபாயம் தந்தது
மகனைக் காணு மனைவியா தீதான்
என்பதை நன்கு யெண்ணியறிந்தவர்.
கண்முன் மகனையே கண்டா லல்லால்
தேறுள் என்பதைத் தீரத் தெளிந்தவர்.
அன்னபூரணியின் அப்போதை நிலைக்கு
மாற்றுகள் நாடி மருந்தினைக் குத்திக்
குலைந்து கிடந்த கோபால கிருஷ்ணரைத்
தட்டிக் கொடுத்துத் தைரியம் சொல்லி
வெளியே வந்தவர் வெங்கட வரதன்.

சங்கரன் பெயரை ஜனங்கள் கூவிப்
போட்ட கூச்சலைக் கேட்டுக் கொண்டே
வந்தவர் அங்கே வாசலில் நின்ற
சங்கர லிங்கனைச் சந்திக்க நேர்ந்தது.
அவனைக் கண்டதும் ஆனந்த முற்றார்.
ஆயினும் இன்னொரு அச்சமும் உதித்து
அன்னையைப் பார்க்க அவசரப் படுகிற
சங்கரலிங்கனைச் சாந்தப்படுத்தி,
வெங்கட வரதன் விளம்ப லுற்றார்:
''உடனே நீபோய் உள்ளே நின்றால்
இருதயத்தின் பலம் ஈனமாயிருப்பதால்
மகனைக் கண்டதும் மகிழ்ச்சியின் வேகம்
திடுமெனத் தாக்கித் தீமையுண் டாகலாம்.
கவலையைப் போலவே களிப்பும் கூட
சட்டென இடித்தால் கெட்டதே யாகும்.
அன்னையின் நிலைமை அபாயம் எனினும்
தன்னினைப் பின்னும் தடுமாறவில்லை
தானே பேசிடச் சக்தியே இல்லை.
ஆயினும் சொன்னதை அறியும் தன்மை
கொஞ்சம் கூடக் குறைந்திட வில்லை.
ஆகையால் ஒன்றும் அவசரம் வேண்டாம்
முன்னால் நான்போய் உன்மேல் அவர்க்குள
ஏக்கம் குறைந்திட எத்தனம் செய்து
சீக்கிரம் மைந்தனைப் பார்க்கலாம் என்கிற
தைரியம் வந்திடத் தக்கன சொன்னால்
நன்மருந் தாகிய நம்பிக்கை ஊறும் ;
வாழ்க்கை வெறுத்த வன்மனம் மாறும் ;
உயிரை வகித்திட உறுதியுண்டாகும்.''
என்றதும் சங்கரன் நன்றென இசைந்தான்
உடனே வைத்தியர் உள்ளே போனார்.
அன்னபூரணியின் அருகில் அமர்ந்து

நாடியைப் பார்க்கிற நாட்டம் போல
"அம்மா ! உமக்கொரு அழகான சேதி
வந்து விட்டதனால் வருத்தம் தீர்ந்தது.
வியாதியின கொடுமை விட்டது இனிமேல்.
மங்களம் மிகுந்த சங்கதி அம்மா"
என்ருர் உடனே இருகண் மலர்ந்து
அன்னபூரணியும் அவரைப் பார்த்தாள்.
வார்த்தை பேசிட வல்லமை இலதால்
கையை அசைத்துச் சைகை காட்டி
'என்ன' என்பதுபோல் இருகை ஏந்தினுள்.
"அம்மா! இனிமேல் அச்சம் விட்டது.
சங்கர லிங்கம் சடுதியில் வருவதாய்
சேதிவந் திட்டது சீக்கிரம் வருவான்.
கவலே வேண்டாம் கடவுள் காப்பார்."
என்ருர் வைத்தியர் என்ற அக்கணமே
அன்னபூரணியின் அசதிகள் மிகவும்
குறைந்தன போன்ற குறிகளுண் டாகி
வார்த்தை பேசிட வாயெடுப் பதுபோல்
உலர்ந்த நாக்கால் உதட்டைத் தடவி
தாகம் தணிக்கத் தண்ணீர் கேட்கிற
பாவனே காட்டி டாக்டரைப் பார்த்து
வலக்கைப் பெருவிரல் வாயிடை வைத்தாள்.
உடனே வைத்தியர் ஒதுக்கில் இருந்த
'குளுகோஸ்' கரைத்துக் கொடுத்தார்; குடித்தாள்.
அதுநாள் வரைக்கும் ஆகாரங்களே
வெறுத்து விலக்கிய வியாதிக்காரி
'குளுகோஸ்' பருகிய விதத்தைக் குறித்து
வெங்கட வரதன் வியந்து மகிழ்ந்தார்.
தாகம் தீர்ந்து தளதளப் படைந்த
தொண்டையைத் தீட்டி மெலிந்த தொனியில்

"வாஸ்தவந் தானு? வந்திடு வானு?"
என்ருள் உத்தமி. டாக்டர் எழுந்து
முகத்தை அவளுக்கு முன்னல் நீட்டி,
"சத்தியம் அம்மா சங்கரன் வருவான்
நிச்சயம் அவனே நீங்களே காண்பீர்"
என்ருர்; உடனே ஏக்கம் குறைந்து
"கடிதம் வந்ததா தந்தியில் கண்டதா?
எப்போது வருவான்?" என்ருள் பெண்மணி.
"தந்தியோ கடிதமோ வந்ததால் அல்ல.
அவனே அனுப்பிய ஆள்வந்து சொன்னது.
மாலே ரயிலில் மைந்தன் வருகிருன்"
என்று வைத்தியர் இரைந்து சொன்னர்.
அதனேக் கேட்டதும் அன்னபூ ரணியும்
இருகரம் குவித்து இறைவனே எண்ணி
வைத்தியருக்கும் வணக்கம் செய்தாள்.

... ...

மனேவியின் நிலேமை மனதைத் துளேக்க
அறிவுகள் கலங்கி அங்கொரு மூலேயில்
குழைந்து கிடந்த கோபால கிருஷ்ணர்
'அவனே அனுப்பிய ஆள்வந்து சொன்னது.
சந்தேக மில்லே சங்கரன் வருகிருன்'
என்று வைத்தியர் இரைந்து சொன்னது
காதிற் பட்டதும் கனவுகண் டதுபோல்
விலுக்கென எழுந்து விரைந்து வந்து
வைத்தியர் முன்னல் வணங்கி நின்று,
"உண்மை தானு? உங்களுக் கிப்படி
சங்கதி சொன்னவன் எங்குளன்?" என்ருர்.
விநயம் தெரிந்த வெங்கட வரதன்
"பொறுங்கள் அவனிடம் போவோம்" என்று
கோபால கிருஷ்ணரின் குறையைத் தீர்த்து

அன்னபூரணியின் அருகில் குனிந்து,
"அம்மா ! சிறிதும் ஐயுற வேண்டாம்;
சத்திய மாகச் சங்கரன் வருகிருன்.
நானே இன்று ரயிலடிக்குப் போய்
அழைத்து வருகிறேன் அவனே" என்ருர்.
அன்னபூரணிதன் தலையை அசைத்து
ஆமோதித்தாள் அஞ்சலி செய்து.
கோபால கிருஷ்ணரைக் கூட்டிக் கொண்டு
வெங்கட வரதன் வெளியே போனர்.
வெளியே வந்ததும் வெங்கட வரதன்
கூடி யிருக்கும் கும்பலை நோக்கி
"அம்மாளுக்கினி அபாயம் இல்லை
பிசகே இல்லை பிழைத்துக் கொண்டார்.
கவலைப் படாமல் கலைந்து போங்கள்"
என்ருர்; அங்கே இருந்தவ ரெல்லாம்
சீதையைத் தேடிட இலங்கையுட் சென்ற
அனுமான் வரவை ஆவலோ டெண்ணித்
திரும்பித் திரும்பித் தென்திசை நோக்கி
ஏங்கி இளைத்து எதிர்பார்த் திருந்த
வாநரர் களிக்க வந்திட்ட அனுமான்
சீதையைக் கண்ட சேதியைச் சொல்லக்
கேட்டதே போலக் கிளர்ந்து மகிழ்ந்து,
ஒருவருக் கொருவர் ஓடி உரைத்தும்
கட்டித் தழுவியும் கைகள் குலுக்கியும்
குனிந்து குனிந்து கும்பிடு போட்டு
வைத்தியருக்கே வந்தனம் செய்தும்,
ஆகாயத்தினை அண்ணாந்து பார்த்துக்
கைகளைக் கூப்பிக் கடவுளைத் தொழுதும்
அவரவர் மனம்போல் அவரவர் மகிழ்ந்து
குதூகலத்துடன் கும்பல் கலைந்தது.

கூட்டம் குறைந்ததும் கோபால கிருஷ்ணர்
வெங்கட வரதனை விருப்புடன் பார்த்து
" சங்கரன் வருகிற சங்கதி சொல்லிட
அவனே அனுப்பின ஆள்யார் ?" என்ருர்.
காதிற் பட்டதும் களுக்கெனச் சிரித்து
வெங்கட வரதன் வேகமாய்த் திரும்பி
அங்கொரு புறத்தில் ஆங்கில உடையில்
நெஞ்சத் துடிப்புடன் நின்றுகொண் டிருந்த
இளைஞனைக் காட்டி " இவர்தான் " என்ருர்.
வைத்தியர் சொல்லி வாய்மூடு முன்னுல்
தந்தைக்கு எதிரில் சங்கரன் வந்து
வாய்பேசாமல் வணக்கம் செய்தான்.
அன்னிய உடையுடன் அங்கமும் இளைத்து
முகமும் வெளுத்து முன்னுல் நிற்கிற
உருவம் அதனை உற்றுப் பார்த்துப்
பழகிய முகமாய் இருப்பதைப் பற்றி
நினைத்து நினைத்து நினைவு வராமல்
சங்கரன் போலுள சாடையைக் கண்டும்
' மாலை ரயிலில் வருவான் ' என்றதால்
அங்கே நிற்பவன் அவனுகுமோஎன
கோபால கிருஷ்ணர் குழம்பு கின்றதை
வேடிக்கை பார்த்த வெங்கட வரதன்
பரிகசிப்பதுபோல் பலமாய்ச் சிரித்தார்.
சிரிப்பின் ரகசியம் தெரிந்துவிட்டதுபோல்
கோபால கிருஷ்ணர் இளைஞனைக் குறுகி
கவனமாய்ப் பார்த்துக் கண்டார் மகனை.
உடனே அவனை உயிருறத் தழுவி
பேச்சு வராமல் பிரமித்து நின்ருர்.
பொன்னிருந்தாலும் புகழிருந்தாலும்
பெற்ற மகன்போல் பின்னென்றும் உண்டோ

... ...
அப்படிப் பிரிந்து இப்படிக் கூடிய
தந்தையும் மகனும் சந்தித்த மகிழ்வின்
ஆவேசங்கள் அடங்கிய பின்பு
வெங்கட வரதன் விளம்ப லுற்றார்,
" அன்னபூரணியிடம் சொன்னது போல
மாலை ரயிலில் வந்தமாதிரியே
சங்கர லிங்கன் சாயுங் காலம்
ஐந்து மணிக்குமேல் அன்னையைப் பார்ப்பது
நல்லது என்பது நான்தரும் யோசனை.
மத்தியில் சங்கரன் மாடிக்குப்போய்
இப்போ தணிந்துள இங்கிலீஷ் உடையை
முற்றிலும் மாற்றி முன்போல் இங்கே
வழக்கமாய் அணிகிற உடைகளை வனைந்து
தாயாரைப்போய்த் தரிசிக்க வேண்டும்,"
என்றார் ; அதுவே சரியென இசைந்து
பக்கத்தில் இருந்த படிக்கட்டு வழியே
மகனும் தந்தையும் மாடிக்குச் சென்றார்.
வெங்கட வரதன் வீட்டுக்குள் போய்
அன்னபூரணியின் அருகில் அமர்ந்து
பழரசம் தந்தார் ; பருகினாள் அவளும்.
ஆகாரத்தால் அலுப்புகள் குறைந்து
மகனைப் பார்க்கும் மகிழ்வும் சேர்ந்து
ஜீவ நாடிகள் செழுமை பெற்றன.
மப்பும் மயக்கமும் முற்றிலும் மாறி,
முகமும் ஒளிர்ந்து முறுவலும் அரும்ப
" ரயில்வண்டி வருகிற நாழியாய் விட்டதே
சங்கர லிங்கம் இங்கே வருவது
இன்றைக்குத் தானே ?" என்றாள். அதற்கு,
" ஆமாம் அம்மா ஐயம் வேண்டாம்,

சிறிது நேரத்தில் செல்வன் வருவான்.
ரயில்வர இன்னும் நான்கு நாழிகை
இருக்கிற தாகையால் அவசரம் இல்லை.
புகைவண்டி நிலைக்கு நானே போவேன்,
அழைத்து வருகிறேன், ஆயாசமின் றி
நிம்மதி யாக நித்திரை போங்கள் "
என்றார் டாக்டர், ஏற்றுக் கொண்டு
சொன்ன படிக்குத் தூங்க விரும்பிக்
கண்களை மூடிக் கருத்தை அடக்க
முயன்று பார்த்தாள் முடியவே யில்லை.
மைந்தன் நினைவே மனதில் நிரம்பி
கண்ணுக் குள்ளே காணும் மகனை
வெளியே பார்க்கும் வேளை வந்திடத்
துடிக்கிற அன்னை தூங்குவ தெப்படி ?
தூங்காக் கண்களைத் தூங்குவ தாக
மூடியே வைப்பதும் முற்றிலும் கடினம்.
அப்படி யிருந்தும் அன்னபூ ரணியோ
செல்வக் குமரன் வருகிற சேதியை
சொன்ன வைத்தியர் சொற்படி தூங்கி
நன்றியைக் காட்டும் நல்ல மனதுடன்
கஷ்டத் தோடும் கண்களை இறுக்கித்
தூங்குவ தாகவே தோற்ற மளித்தாள்.
நித்திரை என்றே நினைத்துக் கொண்டு
புகைவண்டி நிலைக்குப் போவது போல
வெங்கட வரதன் வெளியே போனார்.

ஐந்து மணிக்குமேல் அடிமேல் அடியென
வெங்கட வரதன் மெதுவாய் நடந்து
அன்னபூரணியை அடுத்து நின்று
" சந்தோஷம் அம்மா சங்கரன் வருகிறான்.

நிதானமாக நீங்கள் அவனைப்
பதறுதல் இன்றிப் பார்த்திட வேண்டும்.
அவசரப் பட்டு அலுங்கிக் குலுங்கி
எழுந்திட விரும்பும் எத்தனம் வேண்டாம்.
ஆத்திரம் அடைந்து அழுவதோ விழுவதோ
தேக நிலைமையில் தீமை பயக்கும்''
என்றதைக் கேட்டு, எழுந்திருக்காமல்
படுத்த படியே மகனைப் பார்த்திட
சம்மதம் சொன்னாள். சற்று நேரத்தில்
சங்கேதப்படி சங்கரன் வந்தான்.
அன்னையை வணங்கி அருகில் அமர்ந்தான்
கண்டாள் மகனைக் கண்ணீர் ததும்பத்
தன்னையும் மீறித் தாய்மனம் தள்ளச்
சட்டெனப் புரண்டு எட்டிப் பிடித்து
மகனை இழுத்து மார்போ டணைத்து
உச்சியைத் தொட்டு உடம்பைத் தடவி
மகிழ்ச்சியில் முழுகி மவுனமா யிருந்தாள்.
சிறிது நேரத்தில் சிரித்த முகமாய்
கைகளைத் தளர்த்திக் கண்ணைத் துடைத்துக்
குமாரன் முகத்தைக் கூர்ந்து பார்த்து
அருகே கூடின அத்தனை பேரையும்
குளிரப் பார்த்துக் கும்பிடு போட்டு
'உட்காருங்கள்' என்றாள் உத்தமி.
சாகக் கிடந்தஅத் தாயாருக்குச்
சங்கரலிங்கன் சஞ்சீவி யானான்.

———

தாயும் மகனும்

காரண மின்றிக் காரியம் இல்லை;
ஒவ்வொரு நோய்க்கும் ஒவ்வொரு காரணம்;
காரணம் தெரியாக் காரணத்தால்தான்
பலருடைய நோய்க்குப் பரிகாரத்தின்
வழிதெரியாமல் வைத்தியம் திகைப்பது.
வியாதியின் காரணம் விலகிப் போனதால்
அன்னபூரணியும் அதிசீக்கிரத்தில்
உடல்நலம் பெற்று உலாவ லானாள்.
மைந்தனும் வந்து, மனைவியின் உயிரும்
தப்பிப் பிழைத்த தன்மையி னாலே
களிப்பில் முழுகிக் கரைகாணமல்
கடவுளின் உண்மை கண்டுவிட் டவர்போல்
அதுநாள் வரையும் ஆலயம் தொழுவதில்
அக்கறை யில்லாது அலைந்தவ ராகிய
கோபால கிருஷ்ணர் கோயிலுக் கெல்லாம்
அபிஷேகங்களும் ஆராதனைகளும்
நடத்தி மகிழ்வதில் நாட்டங் கொண்டார்.
அன்னதானங்களும் அடிக்கடி செய்து
புண்ணியம் தேடும் எண்ணம் புகுந்து
முன்னைய செயல்கள் முற்றிலும் மாறி
புதிய குணங்கள் புகுந்தவ ராகி
அனைவரும் புகழ்ந்து அதிசயிக்கும்படி
துன்பம் வருவதும் தூய்மை தரவே
என்பதற் கிதுஒரு எடுத்துக் காட்டுபோல்
வேறொரு மனிதராய் விளங்க லாயினர்.
அன்னபூரணிக்கு அபாயம் என்றொரு

தந்தியைக் கண்டு வந்தவ ராகிய
சங்கரலிங்கன் தங்கைப் பெண்மணி
அம்புஜம் அவளும் அவளுடைக் கணவன்
'பாரிஸ்ட' ராகிய பரமேச் வரனும்
அங்கே யிருக்கிற ஆனந்தத்துடன்
விருந்தும் விழாவும் விதம்விதம் நடந்து
கோபால கிருஷ்ணர் குபேர வீட்டில்
மகிழ்ச்சி மிகவும் மங்கலம் கண்டது.
அன்னபூரணியும் அகமுடையாரும்
அம்புஜப் பெண்ணும் அவளுடைக் கணவரும்
மற்றுள யாவரும் மகிழ்ச்சியோடிருக்க
சங்கரன் மட்டும் சந்தோஷமின்றி
உடம்பும் இளைத்து ஊக்கமும் குன்றி,
கவலையோ டிருக்கும் காரணம் அறிய
அன்னபூரணிக்கு மிகவும் ஆசை.
வீட்டி லெந்நேரமும் கூட்ட மிருந்ததில்
உடனே கேட்பதும் உசிதமா யில்லை.
சிலநாள் சென்று சிறுகச் சிறுகச்
சந்தடி அடங்கிச் சாவதானத் துடன்
தாயும் மகனும் தனியே ஒருநாள்
ஆசை தீரப் பேசிடும் பொழுது
பெற்றோர் தம்மைப் பிரிந்து போனபின்
சென்னைக்குப் போய்ச் சேனையில் சேர்ந்து
ரங்கூன் சென்று ராணுவ முகாமில்
வேலை பார்த்ததின் விதமெலாம் சொல்லி,
ஊருக்கு வருமுன் உடல்நலம் கெட்டு
அன்னையைப் பார்க்க ஆவலுண்டானதும்
சீக்கிர மாகவே 'சிக்லீவ்' பெற்றதும்
துறைமுகம் வந்து துணையுடன் தன்னை
அன்பன் ஜெயபால் அனுப்பி வைத்ததும்

சாங்கோ பாங்கமாய்ச் சொல்லிய சங்கரன்
உடல்நலம் கெட்ட காரணம் உரைத்திலன்.
மைந்தன் சொன்னதைக் கேட்டபின் மாதா
"எங்கு போனையோ என்ன வானையோ
என்பதைப் பற்றிய எங்களுக் கிருந்த
கவலைகள் தீரக் கடிதம் ஒன்றுநீ
எழுதி யிருந்தால் இப்படித் தவிப்பமா?
ஏனப்பா நீ எழுதவே இல்லை?"
என்றாள்; கேட்டதும் இடியுண் டதுபோல்
"எழுதவே யில்லையா! என்ன அம்மாஇது!
எழுதினேன் அம்மா, எழுதினேன், எழுதினேன்.
இதுநாள் வரைக்கும் பதில்தான் இல்லை"
என்றான் புத்திரன்; ஏங்கிய அன்னை
"யாருக் கெழுதினாய் அப்பா!" என்றாள்.
அதனைக் கேட்டதும் ஆத்திரம் பொங்க
"யாருக் கெழுதுவேன்? அவளுக்குத்தான்.
இருக்கிற இடத்தை இன்னதென் றெழுதி,
விவரமாய் என்னுடை விலாசமும் தந்து,
இங்கே உள்ளவர் எல்லா ருக்கும்
அதுவே கடிதம் பொதுவான தென்று
உரிமை மிகுந்துள உங்களுக்கும் அதைக்
கட்டாய மாகக் காட்டவும் சொல்லிப்
பதில் போடும்படிப் பரிவுடன் கேட்டு,
'மகாதேவரே பார்த்து மங்களம்
கையிற் கொடுப்பது' என்றெரு கடிதம்
போட்டே னம்மா, பொய்யோ சொல்வேன்?
ஏழெட்டு மாதம் இருக்குமே எழுதி!"
என்றான் மைந்தன் ஈன்றவள் வியந்து
"இல்லையே அப்பா, வரவே இல்லையே!
கடிதம் வந்தால் காட்டாதிருப்பளா?"

என்றவள் சொன்னதும் எரிச்ச லோடும்
"காட்ட விரும்பினுல் காட்டியிருப்பாள்
இஷ்டமில் லாதவள் ஏனதைக் காட்டுவாள் ?"
என்ருன் சங்கரன்; என்றதைக் கேட்டு,
அன்னபூரணிமிக அதிசயப் பட்டு
"அப்படிச் செல்வது அநீதி யப்பா
மங்களம் அன்பில் மாசுறச் சொல்வது
பாவம், பாவம், மிகவும் பாவம்.
இஷ்டமில் லாமலா இப்படித் தினமும்
உன்னையே நினைத்து உருகிப் போவாள் ?"
என்ருள் அன்னை ; எதிராய் சங்கரன்
"இப்போது மங்களம் எங்கே யிருக்கிருள் ?"
என்றதைக் கேட்டு இன்னும் வியந்து,
"என்ன ! சங்கரா ! இதுஎன்ன கேள்வி ?
எங்கே இருப்பாள் ? எப்போதும் போல்
பெற்ருேரி டத்தில் பெண்ணு மிருக்கிருள்"
என்ருள் தாயார் ; என்றபிற் பாடும்
"அப்படி யானுல் அம்மா ! இங்கே
நீங்கள் இப்படி அபாய நிலையில்
இருந்ததைப் பார்க்க ஏன்வர வில்லை?"
என்ருன் சங்கரன்; தாயார் இசைப்பாள் :
"அபாயம் வந்ததை மங்களம் அறியாள்.
அம்புஜம் வந்திடத் தந்தி அடித்தபேர்
மங்களாம்பாளை மறந்துவிட்டார்கள்.
முப்பது நாளைக்கு முன்னுல், அவளும்
மகாதேவரும் மனைவியும் பிறரும்
என்னைப் பார்க்கவே இங்குவந்தார்கள்.
அப்போது எனக்குச் சற்றே அசௌக்யம் ;
அவர்கள் போனபின் அதிகப் பட்டது.
உன்னைப் பற்றின ஒருவித சேதியும்

வரவில்லை யென்றே வருந்தி வருந்தி
மெலிந்து நலிந்து மேனியும் குலைந்து
வாடி வதங்கி வரைந்து காட்டிய
ஏக்கம் இதுவென இருந்தாள் மங்களம் ;
பார்த்தேன் மிகவும் பதைத்துப் போனேன் .
அப்படிப் பட்டவள் அவளை இப்படிக்
குற்றம் சொல்வது கூடாது மகனே !
கடிதம் இருந்தால் காட்டி யிருப்பாள்.
எழுதின கடிதம் எங்கே போச்சோ
தபாலில் ஒருக்கால் தவறி யிருக்கும்
ஏனுனக் கவளிடம் இந்தச் சந்தேகம் ?"
தாயுரை கேட்டு வேகம் தணிந்து
சங்கர லிங்கம் சற்று நேரம்வரைக்
கண்களை மூடித் தலையைக் கவிழ்த்து
ஆள்காட்டி விரலை நெற்றியில் அழுத்தி
ஆலோசனைகளில் ஆழ்ந்தவனைப்
பேச்சில் லாமல் பெருமூச்சு விட்டுத்
தலையை நிமிர்த்துத் தாயைப் பார்த்து
"சந்தேகம் அல்ல ; சங்கடம் மிகுந்து
நீங்கள் இப்படி அபாய நிலையில்
படுத்துக் கிடந்ததைப் பார்க்கவும்கூட
வந்திலளே எனும் வருத்தம்" என்று
மனதில் உள்ளதை மழுப்பி விட்டான்.
அதனைக் கேட்டபின் அச்சம் நீங்கி
மகனைப் பார்த்து மாதா சொல்வாள் :
"ஆமாம் அப்பா அதுவும் சரிதான்.
ஆயினும் எனக்கு அபாயம் வந்ததை
அவளுக்கு யாரும் அறிவிக்க வில்லை.
மங்களம் இங்கே வராதிருந்ததும்
நல்லது என்றே நான்நினைக் கின்றேன்.

உன்னையே நினைத்து உருகிப் போனவள்
என்னையும் பார்த்துப் பின்னும் இளைக்க
அவளைப் பார்த்துநீ அழுதே யிருப்பாய்.
இரண்டொரு நாளில் இங்கே அவளும்
மகாதேவரும் மனைவியும் பிறரும்
வரும்படி மோட்டார் வண்டி அனுப்புவோம்;"
கேட்டதும் சங்கரன் நீட்டி நிமிர்ந்து
"அம்மா! நானே அவர்களைப் பார்க்கப்
போய்வருகின்றேன், போகவா?" என்றான்.
தாயார் அவனைத் தடுத்துச் சொல்வாள்
"வேண்டாம் அப்பா, இப்போது வேண்டாம்.
உனக்கும் இப்போது உடல்நலம் குறைவு
அலைச்சல் வேண்டாம்; அதுமட்டு மல்ல
இன்னும் சிலநாள் என்றனை விட்டுநீ
விலகி யிருக்கவும் விரும்பவே மாட்டேன்.
நல்லநாள் பார்த்து நானே அவர்களை
அழைத்து வரும்படி ஆவன செய்வேன்
மங்களம் வருவாள்; மகிழ்வாய் நீயும்."

———

உள்ளம் உருகும் பய

நல்ல சேதி

பிரிவாற்றுமை என்கிற பிணியின்
சித்திரம் போலச் சீர்குலைந்தவளாய்
மங்கியிருக்கிற மங்களாம்பாளை
சங்கரன் பார்த்துச் சங்கட மடைவான்
என்பதே முக்கிய எண்ணமாய்க் கொண்டு,
மாயமா யெங்கோ மறைந்த சங்கரன்
வந்துவிட்டானெனும் வாசகம் கேட்டால்
மங்களம் மீண்டும் மலர்ச்சிகள் பெற்றுப்
புத்துயிர் வந்து பூரிப் படைந்து
முன்போல் தன்னுடை மின்னெளி வீசிக்
கண்ணைக் கவரும் கட்டழகடைவாள்,
அதன்பின் சங்கரன் அவளைக் காண்பது
நல்லது என்பதை நன்றுய் உணர்ந்தே
அன்னபூரணியும் அப்படிச் சொன்னது.
அந்தப் படிக்கே அடுத்த நாளன்றே
சங்கரன் வந்துள சங்கதி யதனை
மங்களாம்பாளும் மாதா பிதாவும்
அறிந்திடச் செய்து அவர்களுக் காக
நல்லநாள் அடுத்த ஞாயிற்றுக் கிழமை
காலையில் அங்கே 'கார்'வரும் என்றும்
அதிலே அவர்கள் அனைவரும் இங்கே
வரவேண்டு மென்றும் சொல்லி வரும்படி
விருதூருக்கொரு வேலைக்காரனை
அன்னபூரணியே அனுப்பி வைத்தாள்;
கோபால கிருஷ்ணரும் குமரனும் அறியார்.

இயற்கை என்கிற இறைவன் அருளிய
பெண்ணியல் பென்னும் பெரும்பொருளதனில்
அடங்கிய சக்தியை அறிவார் யாரே !
எங்கே யிருந்துதான் எப்படி வருமோ
அழுகையோ அழகோ அவர்கள் விரும்பினுல்
நினைத்த உடனே முன்வந்து நின்று
எண்ணிய படிக்கே ஏவலைச் செய்யும்.

சங்கரன் வந்துள சங்கதி காதினில்
பட்டதும் உடலில் அமிர்தம் பாய்ந்தெனக்
காணுது போனதைக் கண்டெடுத்ததுபோல்,
முற்றிலும் பற்றிய முழுமதிக் கிரஹணம்
ஒருநொடிப் பொழுதில் ஒதுங்கியதே போல்
மங்களாம் பாளின் வதனம் மலர்ந்து,
பரந்த விழிகளில் செவ்வரி படர்ந்து,
உதடும் முகமும் உதிரம் சுரந்து,
காந்த மணியெனக் கண்ணெளி மின்ன,
குளிர்ந்த உள்ளம் குறுநகை கூட்ட,
காதலின் வெப்பம் வேர்வையிற் காட்ட,
மகிழ்ச்சிப் பெருக்கை மடமை குறைக்க,
நாக்கின் உரையை நாணம் தடுக்க,
ஆசையின் போக்கை அச்சம் விலக்க,
அங்கத் துடிப்பினைப் பயிர்ச்சி அடக்க,
மகிழ்ச்சிக் கள்ளால் மயங்கிய மங்களம்
அரைமணி நேரம் ஆன பிற்பாடு
சிறுகச் சிறுகச் சித்தம் தெளிந்து
ஒருவாறிடத்தும் ஒன்றும் பேசாள்.
கொல்லைக்குப் போய்க் குளிர் நீராடி
உள்ளே வந்து உடைகளை மாற்றி
சிக்காய்க் கிடந்த சிகையைக் கோதி

வாரி முடித்து வாசனை யென்பதை
மறந்த கூந்தலில் மலர்களும் சூடி
நிலைக்கண் ணுடியில் நேராக நின்று
குங்குமப் பொட்டைக் கூர்ந்து வைத்துப்
பூஜை செய்கிற அறைக்குள் புகுந்து
எரிகிற விளக்கை ஏறத் தூண்டி
அதுநாள் வரைக்கும் அழுத கண்ணீருடன்
சங்கர லிங்கம் எங்கிருந் தாலும்
காத்திட வேண்டிக் கைதொழு திட்டவள்
காத்துத் தந்துள கருணையைப் போற்றி
ஆனந்தக் கண்ணீர் ஆருய்ப் பெருகிட
குலதெய்வங்களைக் கும்பிட் டெழுந்து
வணங்கி நின்று வாழ்த்துப் பாடினுள்.
பாடுதல் கேட்டுப் பரவச மடைந்த
மகாதேவரும் அவருடை மனைவியும்
பெற்ற மகிழ்ச்சியைப் பேசவும் வேண்டுமா ?
மகாதேவரோ மவுனமாய் மகிழ்ந்தார் ;
ஜானகி யம்மாள் சலசலப்போடு
அங்கும் இங்கும் அன்புரை வீசி
விருந்து சமைத்திட விருப்பம் சொல்லி
ஆலயம் போய்வர அவசரம் பேசி
ஒவ்வொருவருக்கும் உத்தர விட்டுக்
குழந்தைகளோடு கொஞ்சிக் குலவி
சலிப்பில்லாமல் சந்தோஷித்தாள்.
குடும்பம் முழுவதும் கோயிலுக்குப்போய்
வீட்டுக்கு வந்து விருந்துகள் அருந்தி
பலவிதக் களிப்பில் பகலைப் போக்கினர்.

படுக்கையை விரித்துப் படுத்தாள் மங்களம் ;
அதுநாள் வரையில் அன்பனைப் பற்றிய

துன்ப மிகுதியால் தூங்கின தில்லை.
இன்றைக் காவது தூங்கலாம் என்று
கண்ணை மூடினால், கண்ணுக் குள்ளே
சங்கரன் புகுந்து சங்கடப் படுத்தி
மூடின கண்ணை முழிக்கச் செய்கிறான்.
தூங்க விடாமல் துன்பம் செய்கிற
அன்பனைச் சற்றே அப்புறப் படுத்த
எந்தப் புறமாய் எப்படி யெல்லாம்
புரண்டு சுருண்டு படுத்த போதிலும்
விழிகளை மூடிடச் சங்கரன் விட்டிலன்.
இன்பமும் இப்படித் துன்பம் தந்திடத்
துளியள வேனும் தூக்கமில்லாமல்
பொழுது விடியப் போகிற தருணம்
வானம் வெளுத்தது கண்டாள் மங்களம்.
விடிந்தால் வருவது வியாழக் கிழமை ;
சேதியைச் சொல்லிய தூதுவன் குறித்த
நல்லநாளாகிய ஞாயிற்றுக் கிழமை
விடிந்திட இன்னும் வெகுநாள் குறுக்கே
இருப்பன போன்று ஏங்கிய மங்களம்
சட்டென மனதில் திட்டமிட்டவளாய்
வியாழக் கிழமையை சீக்கிரம் விரட்டப்
படுக்கையை விட்டுப் பாய்ந்தெழுந்திட்டாள்.

பிரிந்தவர் கூடுதல்

நல்லநாள் குறித்துள ஞாயிற்றுக் கிழமை
காலையில் ' மோட்டார் காரை ' அனுப்ப,
சனி நாளன்று சாயங் காலமே
மோட்டார் ஓட்டும் முருகனை அழைத்து
அன்னபூரணியே அவனிடம் சொல்வாள் :
" விடியற் காலையில் விருதூர் சென்று
மங்களாம்பாளை மாதாபிதாவுடன்
அழைத்துக் கொண்டுவா ; அப்படிச் செய்வதில்
கவனிக்க வேண்டிய காரியம் ஒன்று ;
வசந்த புரிக்குள் வந்தபின் வண்டியை
வீட்டுக்கு நேராய் ஓட்டி விடாமல்
சாலையை விட்டுச் சந்திலே திருப்பி
விருந்தினர் தங்கும் விடுதிக்கு முன்னால்
நிறுத்திக் கொண்டு நீமட்டும் வந்து
தனியே என்னிடம் தகவலைச் சொல்லு.
நான்வந்து அவர்களை நல்வர வேற்று
காரியம் மற்றவை கவனித்துக் கொள்வேன் ;
மங்களம் வந்ததை மத்தியானம்வரை
எவரும் அறிந்திடக் கூடாது என்பதால்
யாரிடத்தும் நீ அறிவிக்க வேண்டாம் "
எஜமானி அவளிடம் நிஜமான அன்புள்ள
வண்டிக்காரனும் வணங்கிச் சென்றான்.

... ...

தாய்சொல் எதையும் தட்டாத சங்கரன்
நல்லநாள் பார்த்து நானே அவர்களை
அழைத்து வரும்படி ஆவன செய்வேன் '

என்றுதன் தாயார் சொன்னதற் கிணங்கி
விருதூர் போகிற ஆசையை விலக்கி
மங்களம் அங்கே வருகிற காரியம்
அன்னையின் மனம்போல் ஆகட்டு மென்று
அந்த நினைப்பினை அப்புறப் படுத்தி
ரங்கூன் நகரின் ராணுவ முகாமில்
உடுக்கை யிழந்தவன் கைபோல் உதவிய
சிறந்த அன்பன் ஜெயபால் முதலிய
நண்பருக் கெல்லாம் நன்றிகள் கூறி,
வந்து சேர்ந்ததை வரிசையாய்ச் சொல்லி
தன்னுடை வரவால் தாயார் பிழைத்த
விதத்தையும் மிக்க விரிவாய் எழுதி,
கடிதம் வரைவதில் காலம் கழித்தான்.
காலையில் எழுந்து கடன்களை முடித்து
ஒருமணி நேரம் உலாவச் சென்று
வீட்டுக்கு வந்ததும் வெந்நீராடி
பசும்பால் மட்டும் அளவாய்ப் பருகி
மாடிக்குப் போய் மத்தியானம் வரை
எழுத்தோ படிப்போ ஏன்றது செய்து,
பனிரண்டு மணிக்குப் பைய இறங்கிச்
சாப்பாட்டுக்கென சங்கரன் வருவான்.
அன்னபூரணியே அவனுக் காகப்
பத்திய மாகச் சத்துள உணவாய்
ஆக்கி யுள்ளதை அவளே படைத்து
அருகினில் அமர்ந்து அருந்தச் செய்வாள்.
அதற்குப் பின்னுல் அரைமணி நேரம்
தந்தை, மைத்துனர், தங்கை முதலிய
எல்லாருடனும் சல்லாபித்த பின்
மறுபடியும் அவன் மாடிக்குப் போய்
ஆறு மணிவரை அங்கே இருப்பான்.

அதுவே சங்கரன் தினசரி அலுவல்.

... .

கூறிய படிக்கே குறிப்பிட்ட ஞாயிறு
முற்பகல் பனிரண்டு மணிக்கும் முன்பே
மகாதேவரும் மனைவியும் மகளும்
வசந்த புரிக்கு வந்துசேர்ந்தார்கள்.
விருந்தினர் தங்கும் வீட்டுக்கு முன்னுல்
வண்டியை நிறுத்திய 'ட்ரைவர்' வந்து
அன்னபூரணியிடம் அறியப்படுத்தினுன்.
அவளும் உடனே அவ்விடம் சென்று
வழக்கம் போலவே வரவேற்று, உடனே
" பனிரண்டு மணிக்குப் பக்கமாய் விட்டது.
சங்கரன் வந்து சாப்பிடும் நேரம்
சங்கர லிங்கம் சாப்பிட்டுவிட்டு
மெத்தைக்குப் போனபின் மீண்டும் வருகிறேன்,
அதன்மேல் மற்றுள அனைத்தும் சொல்வேன் ;
உங்களுக் கிங்கே உணவுகள் வந்திடும்
மன்னிக்க வேண்டும் " என்று மறைந்தாள்.
அன்னபூரணியின் பெருமை அறிந்துள
மகாதேவரும் மற்றுள இருவரும்
ஆணையின் படிக்கே அங்கே இருந்தனர்.

... ...

வழக்கம் போலப் பனிரண்டு மணிக்குச்
சங்கரன் வந்துச் சாப்பிட்டு விட்டு
மாடிக்குப்போய் மஞ்சத்தின் மேல்
படுத்த படியே பத்திரிகைத்தாள்
புதிதாய் வந்ததைப் புரட்டும் போது
ரங்கூன் எனும் பெயர் அங்கே தென்பட
உடனே அதனை உற்றுப் பார்த்திட
தளபதி யாகிய தாம்ஸன் துரையவர்,

குதிரை மீதிருந்து குதிக்கும் போது
இடறி விழுந்ததில் இடுப்பு முறிந்திட
அடிபட்டதனால் ஆஸ்பத்திரியில்
படுத்துக் கிடப்பதாய் சேதி படித்ததும்,
அதுவே அப்பெரும் ஆஸ்பத்திரியில்
தானும் சிலநாள் தன்னோ வின்றிப்
படுத்துக் கிடந்ததின் பயங்கர மாகிய
நினைவுகள் எல்லாம் நெஞ்சிற் பாய்ந்திட
அதனைத் தொடர்ந்து அப்படி நோய்வரக்
காரண மாகிய கடிதம் வந்ததைச்
சங்கரன் நினைத்துச் சட்டென எழுந்து
அறைக்குள் சென்று அங்கே யிருந்த
தன்னுடன் கொணர்ந்த பெரியதோர் தகரப்
பெட்டியைத் திறந்து கட்டுகள் பிரித்துக்
கடிதம் அதனைக் கண்டு பிடித்தான்.
மறுபடியும் அவன் மஞ்சத்தில் அமர்ந்து
கடிதம் அதனைக் கண்முன் விரித்து
அதிலே உள்ளதும் அன்னை சொன்னதும்
ஏறுமாறுகவே இருப்பதைக் குறித்து
எண்ணிக் கொண்டே ஏக்குறும் பொழுது
" வந்துவிட்டீர்களா வாழ்ந்தேன் " என்றொரு
தேனினும் சிறந்த தீங்குரல் கேட்கத்
திடுக்கிட்டவனுய்த் திரும்பிப் பார்த்தான்.
மாடியில் அங்கொரு மயில்வந்ததுபோல்
வீட்டுக்குள் உதிக்கும் வெண்ணிலா வென்ன
இச்சையும் நாணமும் எதிரெதிர் இழுக்க
மென்சிரிப் போடு மெதுவாய் நடந்து
கண்டதும் இனிக்கிற கற்கண்டாகிய
மங்களம் வருவதை சங்கரன் கண்டான்.
கண்கள் காண்பது கனவா ! நனவா !

உண்மை அவளா ! உருவெளியோ ! வெனத்
திகைத்த சங்கரன் தீர்மானிக்குமுன்
சங்கரன் முன்னுல் சற்று தூரத்தில்
பத்தரை மாற்றுத் தங்கப் பதுமை
வனவது போன்று வணங்கி நின்ருள்.
உடனே சங்கரன் உதறி எழுந்து
எகிறிக் குதித்து எதிரே பாய்ந்து
வாறியெடுத்து மார்போடணைத்து
மூச்சுத் திணறிட முத்தம் பொழிந்து
குளறிக் குளறிப் புகழ்ச்சிகள்கூறி
குழைந்து குழைந்து கொஞ்சிடும்போது
மங்களம் முற்றிலும் தன்னையே மறந்து
இன்பப் பரவசம் என்பதோர் நிலையில்
புன்சிரிப் பல்லால் வேறெதும் புரிய
இயலாதவளாய் சும்மா இருந்தாள்.
சங்கரலிங்கம் சலிக்கிறவரைக்கும்
முத்தம் கொடுத்து முடிந்த பிற்பாடு
மங்களாம்பாளை மஞ்சத்தமர்த்தி
அவளுக்கு எதிரில் தானும் அமர்ந்து
" கண்ணே உனக்குக் கடிதம் அனுப்பிப்
பதில்வரும் என்றே பார்த்துப் பார்த்து
ஏமாந்து போனேன் ; ஏன் பதில் இல்லை ?
என்ன காரணம் ? என்மேற் கோபமா ?"
என்ருன் சங்கரன் என்றதைக் கேட்டதும்
கட்டிலைவிட்டுச் சட்டெனக் குதித்து
சங்கரன் எதிரே மங்களம் நின்று
வாதாட முனையும் வக்கீலைப்போல்
" கடிதமா ! எனக்கா ! கதையா ? கனவா ?
நீங்கள் எனக்கு நிருபமும் எழுதி,
கடிதமும் என்றன் கையில் கிடைத்துப்

பதில் எழுதாத பாதகியா நான் ?
எழுதாத கடிதம் எப்படி வந்திடும் ?
செய்யாத ஒன்றைச் செய்தது என்று
விளையாட்டுக்கென விரும்பிக்கூட
உரைக்கும் வழக்கம் உங்களுக்கில்லையே !
பர்மா போனபின் பழகிக்கொண்டதா ?''
என்றுள் ; அதிலொரு இன்பம் கண்டதில்
சங்கரலிங்கன் சற்றே சிரித்தான்.
உடனே அதிலொரு உண்மை கண்டதாய்
'' சிரிப்பதிலிருந்தே தெரிந்து கொண்டேன்
எழுதவே இல்லை என்பதே உண்மை.
கடிதம் வந்ததைக் காட்டாமல் நான்
மற்றவர்க்கெல்லாம் மறைத்து விட்டதாய்
நீங்கள் என்னவோ நினைத்துள மாதிரி
அம்மாள் சொல்லிய அதனைக் கேட்டு
அடங்காத் துயரால் அழுகை வந்தது
இப்படித்தானு செய்வது ?'' என்றுள்.
அதைக் கேட்டின்னும் அதிகமாய்ச் சிரித்து
'' உண்மைதான் மங்களம் ! பொய்யா உரைப்பேன் ?
பரிகாசம் எனினும் உன்னிடம் பண்ணலாம்
அன்னையிடத்தில் அதைச் செய்வேனு ?
கடவுள் அறியக் கடிதம் எழுதினேன்.
சேனைத் தபாலுடன் சேர்த்தே அனுப்பினேன்.
எப்படித்தவறும் ?'' என்பதைச் சங்கரன்
சொல்லும்போதே சுறுக்கென நினைத்து
மங்களம் அங்கே மாடிக்கு வருமுன்
கையிற் பிடித்துக் கண்முன் விரித்துப்
படித்துக் கொண்டே பற்பல நினைத்து
மங்களம் வந்ததில் முற்றிலும் மறந்து
கட்டிலில் போட்டது விருதூர்க் கடிதம்

அதனை எடுத்து அவளிடம் நீட்டி
'' என்னுடைக் கடிதம் என்னவாயிற்றோ
அந்தக் கடிதம் அப்படிப் போய்விட
இந்தக் கடிதம் இப்படி வந்துஎன்
நெஞ்சைப் பிளந்து நிலைகுலைத்திட்டது.
சித்தம் கலங்கிச் செத்துப் பிழைத்தேன் ;
படித்துப்பார் '' எனக் கொடுத்தான் பரிவுடன்.
மங்களம் அதனை மலைப்புடன் வாங்கி
பலகணி ஒன்றின் பக்கமாய் நின்று
படித்தாள் உடனே நெஞ்சம் பதைத்து
அழுகை வரும்போல் ஆத்திரம் பொங்கி
கைகள் பதறிடக் கண்கள் சிவந்து
உருட்டி விழித்து உதட்டைக் கடித்து
அப்படிப் பொய்களை அஞ்சாதெழுதிய
பாதகர் யாரென எண்ணிப் பார்த்து
உடனே தனக்கொரு ஊகம் உதித்து,
கடிதம் அதனுள் கருத்தைச் செலுத்தி
மீண்டும் ஒருதரம் மெதுவாய்ப் படித்துப்
பலமுறை அதனைத் திருப்பிப் பார்த்திட
தனக்கொரு கடிதம் ரிஜிஸ்டர் தபாலில்
வந்ததைப் பற்றிய நினைவுகள் வந்தன.
எழுத்தின் தினுசும் எழுதிய தாளும்
அதேமாதிரி இருப்பதை அறிந்து
இதையும் அதையும் எழுதின பேர்வழி
ஒருவரேதான் என உறுதிகொண்டவளாய்,
கொதித்த உள்ளம் உடனே குளிர்ந்து,
ஏறிய புருவம் இறங்கி அமர்ந்து,
கலங்கிய கண்கள் இலங்கிடத் தெளிந்து,
உதட்டைக் கடித்தன பற்கள் ஒதுங்க,
சுருங்கிய அதரம் சுரந்து சிவக்க,

மங்கிய வதனம் மீண்டும் மலர்ந்தது.
அன்பனே மங்களம் இன்புறப் பார்த்து
"இதனே நம்பியா இப்படி நீங்கள்
சித்தம் கலங்கிச் செத்துப் பிழைத்து
ஏங்கி இளைத்தது ?" என்றுள்; சங்கரன்
வெட்கமும் துக்கமும் வேதனைப் படுத்த
கூசிக் குளறிக் கூறுவதானுன் :
" மங்களம் என்னை நீ மன்னிக்க வேண்டும்
பர்மா நாட்டில் பட்டாளத்திலே
வேலைபார்க்கிற என்னுடை விலாசம்
உங்களுக்கன்றி ஒருவருக்கும் நான்
எழுதவே யில்லை என்பதும், அத்துடன்
உன்னுடைத் தந்தையின் உத்தரவின்மேல்
எழுதினதாகவே எழுதியிருப்பதால்
விலாசம் தந்திட வேறே யாருளர் ?
அவரே சொல்லி அனுப்பிய தென்றே
எண்ணிட நேர்ந்தது ; என்ன செய்வேன்நான் ?
உன்னுடை நிலைமை என்னுடைத் தாயார்
சொன்ன பிற்பாடுதான் சூதினைக் கண்டேன்.
மன்னித்திடுவாய் மங்களம் !" என்றுன்.
" இப்படிக் கடிதம் எனக்கும் ஒன்றுமுன்
வந்தது; அதைநான் வாசித்த உடனே
முற்றிலும் மயங்கி மூர்ச்சை யடைந்தேன்.
வைத்தியம் செய்துதான் நினைப்பு வந்தது,"
என்றுள் மங்களம் என்றதும் சங்கரன்
"அப்படிக்கடிதம் அது என்ன?" என்றுன்.
விஷயம் முழுவதும் விவரமாய்ச் சொல்லி
மங்களம் சங்கரன் மனதைத் தேற்றினள்.
பிரிந்தவர் கூடிய பேரானந்தப்
பேச்சுகளெல்லாம் பேசிய பின்னர்

"தந்தை, தாயார், தம்பிகள், தங்கையர்
உங்கள் வீட்டில் உள்ளவ ரெல்லாம்
சௌக்கியம்தானே?" என்றுன் சங்கரன்.
"எல்லாம் சௌக்கியம் என்னுடன் இங்கே
தந்தையும் தாயும் வந்துளார்" என்றுள்,
"அப்படியா அது! அவர்களும் இங்கே
ஏன்வரவில்லை?" என்றுன் சங்கரன்.
"என்னை மட்டிலும் முன்னுல் இங்கே
தனியே போம்படி உங்கள் தாயார்
கட்டளை யிட்டதே காரணம்" என்றதும்
இருவரும் சேர்ந்து இரைக்கச் சிரித்து
மனமும் மனமும் மருவிய போலக்
கண்ணைக் கொண்டே கருத்தைக்காட்டி
ஒருவரை யொருவர் உவந்து பார்த்து
மகிழ்ந்ததன் பின்னர் மங்களம் தன்னுடைக்
கையில் இருந்த கடிதம் அதனை
சங்கரனிடத்தில் தந்து சிரிப்புடன்,
"மன்னித் திடுங்கள் மறந்தே போனேன்
அன்னையும் பிதாவும் ஆவலோடுங்களைக்
காணத்துடித்துக் காத்திருப்பார்கள்.
அவர்களை இங்கே அழைத்துவருகிறேன்"
என்றுள் மங்களம் ; சங்கரன் இசைந்திட
மாடிவிட்டிறங்கி மங்களம் சென்றுள்.
கையில் வாங்கிய விருதூர்க் கடிதம்
அதனை மிகவும் ஆத்திரத்தோடும்
பலமுறை திருப்பிப் பார்த்தான் சங்கரன்.

கடிதம்

"அன்பர் சங்கரலிங்கம் அவர்களே!
வெகுதூரத்தில் வேலையில் இருக்கும்
தங்களுக் கிந்தத் தபாலை அனுப்பிச்
சங்கடம் தருவது சரியல்லவென்றே

எண்ணித் தவித்து எழுதத் தயங்கிக்
கடமை தூண்டும் கட்டாயத்தால்
மகாதேவரே மன்ருடி என்னை
எழுதச் சொன்னதால் எழுதத் துணிந்தேன்;
ஆசைகாட்டி மோசம் செய்வதே
பெரும்பாலாகிய பெண்களின் இயல்பு.
நெடுநாள் மிகவும் நெருங்கிப் பழகி
இன்புடன் பேசி அன்புகள் செய்து
காமம் மூட்டிக் காதலும் காட்டி
நானிலத்திலும் நம்பிடச் செய்து
நிச்சயம் திருமணம் என்றே நினைத்துக்
காத்துக் கிடக்கும் காதல் மிகுந்த
இளைஞன் ஒருவனை ஏமாற்றிவிட்டு
எங்கோ இருக்கும் எவனே ஒருவனை
கூட்டிக் கொண்டுதம் வீட்டையும் துறந்து
ஓடிப் போகிற பெண்களும் உண்டே.
'நீங்கள் மிகவும் நிச்சயமாகக்
காதலியென்றே கருதி யிருக்கும்
மங்களாம்பாளெனும் மாபெரும் அழகியும்
முற்றிலும் ஒருபெரும் மோசக்காரியாய்,
கள்ளத்தனமாய்க் காதல் நடத்தி
எவனே ஒருவனை இழுத்துக்கொண்டு
ஊரைவிட்டே ஓடிப் போயினள்.'
ஆற்றல் மிகுந்துள அறிவாளியாகிய
நீங்கள் இதனில் நிலைதளராமல்
துச்சம் இவளைத் தூவெனத் தள்ளி
விரும்பத்தகுந்த வேரொரு பெண்ணை
பர்மாவிலேயே பார்த்துக் கொள்ளலாம்'
இதனை எழுதினேன் இப்படிக்கு உங்கள்
மதிப்பிற் சிறந்துள மகாதேவரின்
ஆணையின் படிக்கே அனந்தகிருஷ்ணன்''

காதலிலும் ஒரு

காந்தீய சல்லாபம்

தாயும் தந்தையும் தன்னைத் தொடர
மங்களம் மீண்டும் மாடிக்கு வந்தாள்.
மகாதேவரும் மனைவியும் வருவதை
எதிர்பார்த்து நின்ற சங்கரன், இன்புடன்
வரவேற்பு சொல்லி வணக்கம் செய்தான்.
மட்டிலாப் பிரியம் மனதில் இருப்பினும்
அவசரப்படாமல் அமைதியாய் அணுகி
சங்கரலிங்கன் முதுகினைத் தடவி
வணங்கிய தலையில் வலக்கை வைத்து
மகாதேவரும் வாழ்த்தி மகிழ்ந்தார்.
அவருடை மனைவி ஜானகி அம்மாள்
பெண்ணியல்புக்கே பெரிதும் உரிய
ஏக்கத்தோடும் இரக்கத்தோடும்
ஆர்வத்தோடும் அபிநயத்தோடும்
பொங்கி வழிகிற பூரிப்போடும்
மருகனைக் காணும் மாமியாராகவே
அன்புரை கொட்டி ஆரவாரித்தாள்.
பிரியா அன்பரைப் பிரிந்து நெடுநாள்
காணமல் ஏங்கிக் கண்டதும் வருகிற
ஆவேசங்கள் அடங்கிய பின்னர்
அரைமணி நேரம் நால்வரும் அமர்ந்து
பர்மா நாட்டின் பற்பல சேதியும்
ஐராவதியெனும் ஆற்றங்கரையில்
ரங்கூன் அழகும் ராணுவத் தொழிலும்
அங்கே தன்னுடை அலுவல் விதமும்
முதலிய எல்லாம் முறையே சங்கரன்

சொல்லக் கேட்டுச் சுவைத்த பின்னர்,
மங்களாம்பாளும் ஜானகி மாதும்
அவ்விடம் விட்டு அன்னபூரணியார்
இருக்கும் இடத்திற்கு இறங்கிப் போய்விட
சங்கரலிங்கனும் மங்களம் தந்தையும்
இருவரும் மட்டும் ஏகாந்தமாகச்
சரசமாய்ப் பேசிச் சல்லாபிக்கையில்
மகாதேவரின் மனதில் இருந்த ஓர்
சந்தேகத்தைச் சங்கரனிடத்தில்
புன்சிரிப்போடு புகலுவதானார்.
"தொழிலுக்கலையும் தொல்லையில்லாமல்
கண்ணியமாகக் காலங் கழித்துப்
பொதுநலம் நாடிப் புண்ணியம் புரியும்
வசதிகள் மிகவும் வாய்க்கப் பெற்றுள
செல்வம் நிறைந்துள சீமாளுகிய
உனக்குக் கூடவா அடிமை உத்தியோகம் ?
அப்படியே ஒரு ஆசை இருப்பினும்
வேறுள பற்பல வேலைகள் விட்டு
பட்டாள வேலையில் ஆசைபடிந்ததேன் ?"
என்றதைக் கேட்டு இளமைத் துடிப்புடன்
சங்கரலிங்கன் சாற்றுவ தானான் :
" பட்டாளப் பயிற்சி கட்டாயம் வேண்டும்
பட்டாளத்தின்பலத் தாலல்லவா
அன்னியர் நம்மை அடக்கி யாள்வது ?"
என்றதை சங்கரன் எடுத்து முடிக்குமுன்
மகாதேவரும் இடையே மடக்கி
" அப்படி நம்மை அடிமைப் படுத்திய
அன்னியனுக்கே பின்னும் அடிமையாய்
அவனுடைச் சேனையில் அடங்கி யிருத்தல்
நம்மைக் கொண்டே நம்முடை நாட்டை

அடக்கிட அன்னியர்க் குதவுதல் அல்லவா ?"
என்னூர் அதற்கு இளைஞன் கூறும் :
" எவரிட மாயினும் எப்படி யாவது
நம்முடை நாட்டவர் நவீன முறையில்
ஆயுதப் பயிற்சிகள் அடைதல் அவசியம்.
சமயம் நேர்ந்தால் சண்டை செய்தே
அன்னியர் ஆட்சியை அகற்றவும் உதவும்.
நம்முடை நாடும் நலம்பெற வேண்டின்
உலகப் போக்கை உற்றுப் பார்த்து
இக்காலத்துக் கேற்றன வாகிய
புதுப் புது முறையைப் போற்றிடவேண்டும்.
சாதிகள் இல்லாச் சமுதாயத்தை
உண்டாக்கிவைக்க உழைத்திடவேண்டும்.
இல்லாவிட்டால் இந்திய நாட்டை
அன்னிய நாட்டார் அவமதிப்பார்கள்.
எந்திரச் சாலைகள் எங்கணும் மிகுந்து
பசியும் பிணியும் பஞ்சமும் நீங்க
உற்பத்தி விகிதம் உயர்ந்திடவேண்டும்.
ஏழைக ளென்றும் செல்வர்க ளென்றும்
ஏற்றத் தாழ்வின் வேற்றுமை யின்றி
எல்லா மக்களும் இன்புற்று வாழும்
சமத்துவ நிலையைச் சாதிக்க வேண்டும்.
முடியரசாட்சிகள் முற்றிலும் நீக்கிக்
குடியரசாக்கிக் கொள்ளுதல்வேண்டும்.
இப்படி யெல்லாம் ஈடேற்றம் அடைய
விஞ்ஞான அறிவும் வீரமும் சேர்ந்த
யுத்தப் பழக்கமே மெத்தவும் நல்லது.
ஆணெனப் பிறந்துள அத்தனை பேரும்
பட்டாள வேலை பழகுதல் வேண்டும்.
சோம்பலைப் போக்கிச் சுறுசுறுப்பாக்கி

காலாகாலக் கடமைகள் உணர்ந்து
அச்சம் என்பதை அடியோடுவிட்டு
நாட்டைக் காக்கவும் நல்லன செய்யவும்
உயிரைக் கொடுக்கிற உயர்ந்த தியாகம்
சேஞ வீரனே செய்திட முடியும்
என்பதை நன்ருய் எண்ணிப் பார்த்தேன்,
பட்டாள வேலையில் பாய்ந்தது என் மனம். ”
அனைத்தும் மிகவும் அமைதியிற் கேட்டு
மகாதேவரும் மறுமொழி சொல்வார் :
“ சங்கரலிங்கம்! சந்தோஷமுற்றேன்.
உன்னுடை நோக்கம் மிகவும் உயர்ந்தது
என்பதிற் சிறிதும் சந்தேகம் இல்லை.
சொல்லிய வெல்லாம் நல்லன என்றே
நடைமுறை உலகம் நம்புவதுண்மை.
ஆயினும் அவற்றை ஆராயாமல்
நீயும் இப்படி நினைப்பது சரியா ?
நோக்கம் தனையே நோக்குவ தல்லால்
நோக்கம் பெறுகிற மார்க்கம் அதனை
மக்கள் சிறிதும் மதிப்பதே யில்லை.
எண்ணிய ஒன்றை எப்படி யாகிலும்
அடைந்தாற் போதும் அதனுல் பிறர்க்கு
எத்துணைத் துன்பம் எப்படி நேரினும்
பாதகமில்லை என்றே பலபேர்
உயர்ந்த நோக்கம் உள்ளன என்று
கொடுமை செய்யவும் கூசுவதில்லை.
எத்துணை உயர்ந்த நோக்கம் எனினும்
கொடுமை செய்தொரு நன்மை கொள்வது
நல்லவர் எவரும் நயந்திட மாட்டார்.
உலகம் போற்றும் உத்தமன் காந்தி
ஓயாது சொல்லும் உண்மை இதுவே.

இந்தியர் சிலபேர் இங்கிலீஷ்காரன்
பட்டாளத்தில் பயிற்சிகள் பெற்ருல்
ஆயுத பலத்தால் அவனுடை ஆட்சியை
நீக்கிட முடியும் என்னும் நினைப்பு
கொக்கின் தலையில் வெண்ணெய் குழப்பி
அதனைப் பிடிக்கிற ஆசையே போலும்.

போர் வெறி

காட்டில் வசித்துக் கட்சிகள் கட்டி
மனிதனை மனிதன் மிருகமாய் மதித்து
கொலையும் களவும் கொள்ளையுமாக
அடிதடி வாழ்வே அல்லும் பகலும்
தொழிலா யிருந்த காலம் தொலைந்து
மிருகத் தனங்கள் மிகவும் குறைந்து
மனிதனை மனிதன் சமமாய் மதித்து
அன்பும் சமூக அறிவும் வளர்ந்து
நாகரீகத்துடன் நாட்டில் வசிக்கிற
இக்காலத்திலும் இப்படி எங்கும்
போர்வெறிப் பேச்சே போற்றி டலாமா ?
என்பதை யாவரும் எண்ணிப் பார்த்து
மனிதனை மனிதன் தெய்வமாய் மதித்து
புலையும் பகையும் கொலையும் தவிர்த்த
கருணை வாழ்வை நடத்திக் காட்டவே
ஆண்டவன் அனுப்பிய அற்புதத் தூதன்
உலகம் வியக்கும் உத்தம சாந்தன்
காந்தி மகாத்மா வாழும் காலம்
இப்போ தாவது இந்தப் போர் வெறி
மாறிடு மாஞல் மாநிலம் வாழும்
சாத்விக எதிர்ப்பில் சாவோர் வெகுசிலர் ;
ஆயுத எதிர்ப்பில் அழிவுகள் அனந்தம்.

அன்பின் வழியில் கோபமும் அடங்கும் ;
வம்பின் வழியில் வெறியே வளரும்.
மற்றுள நாட்டவர் மதிக்காவிடினும்
மேதினிக் கெல்லாம் மெய்ஞ்ஞான தீபம்
இந்தியா, காந்திசொல் இகழ்ந்திடலாமா ?
மனித சுபாவம் மாறுது அதனால்
போர்வெறி என்பதைப் பூமியை விட்டு
முற்றிலும் போக்கல் முடியா தெனினும்
நல்லதும் தீயதும் நாடிட வென்றே
கல்விகள் மிகுந்த நல்லவர் தம்முள்
சிலபேராயினும் சிந்தனை செய்து
யுத்தம் செய்வதில் ஒத்துழையாமல்
காந்தியின் வழியைக் கடைப் பிடித்திட்டால்
கொலைமிகும் யுத்தக் கொடுமை குறையும்
உலகுக் கதுபெரும் உபகார மாகும்.

எந்திர மோகம்

எந்திரச் சாலைகள் எங்கணும் பெருகில்
பசியும் பஞ்சமும் பறந்திடு மென்றே
நம்மிற் பலபேர் நம்புவ துண்மை ;
ஆராய்ந் தறியின் அதுவெறும் மயக்கம்.
காலப் போக்கைக் கருதும் பொழுது
எந்திரப் பெருக்கை எதிர்த்துப் பேசல்
பைத்திய மென்றே பரிகசிப்பார்கள்.
ஆயினும் உண்மையை அஞ்சாது சொல்வோம்:
எந்திரப் பெருக்கம் ஏற்பட்டுவிட்டால்
நன்மை மிகுமென நம்புவ தெல்லாம்
கல்லைக் கட்டிக் கடலிற் குதித்து
நீச்சம் பழகிட நினைப்பது போலாம்.
எத்தனைக் கெத்தனை எந்திரச் சாலையோ

அத்தனைக் கத்தனை ஆயிரக் கணக்கில்
மக்கள் பிழைப்பில் மண்ணே போடும்.
கைத்தொழி லெல்லாம் கட்டாயம் அழியும்.
அளவோ டிருந்தால் அநேக விதத்தில்
எந்திரச் சாதனம் இன்பம் தருவதே.
உழைப்புக் கென்றே உண்டான வாகிய
கையும் விரலும் காலும் முதலிய
உறுப்புக ளெல்லாம் உழைப்பில்லாமல்
மனிதரின் தேகம் மரத்துப் போய்விட
எல்லாத் தொழிலும் எந்திரம் செய்தால்
மனிதருக் கெல்லாம் மற்றென்ன வேலை ?
வேலையில்லாதவர் திண்டாட்டமே மிகும்.
வேலையில்லாதவர் வேறென்ன செய்வார் ?
பட்டினிக் காரரின் பட்டாள மாகித்
தெருத் தெருவாகச் சுற்றித் திரிந்து
கூட்டம் கூடிக் கூக்குரல் போட்டுக்
கெஞ்சிக் கேட்டும் கிளர்ச்சி செய்தும்
வறுமை தீர்ந்திட வழியில்லாமல்
பசிப்பிணி அவர்களைப் படுத்தும் பாடால்
பொறுமை இழந்து ஆத்திரம் பொங்கி
எதையும் செய்திட இடமுண் டாகும் ;
சமுதா யத்தில் சச்சரவே மிகும் ;
சர்க்காருக்கும் சங்கடம் அதிகம் ;
கையால் செய்திட முடியாத காரியம்
எந்திரம் செய்வது ஏற்புடைத் தாகும்.
சிற்சில தொழில்கள் எந்திரம் செய்வது
தப்பிதம் என்று தடைபோட வேண்டும்.
எத்தொழில் மற்றது எப்படித் தாயினும்
உணவும் உடையும் உற்பத்தி யாவது
கட்டாய மாகக் கைத்தொழி லாகவே

இருக்கும்படிக்கொரு ஏற்பாடு செய்தால்
பெரும்பாலோர்க்கும் பிழைப்பு நடக்கும் ;
வேலையில்லாதவர் வேதனை ஒழியும் ;
உத்தமன் காந்தி உபதேசிக்கும்
சத்தியம் இதனைச் சரிவரச் செய்தால்
சமுதாய வாழ்வில் சங்கடம் குறையும்.
பொருளாதாரம் பொதுவாக எங்கும்
பல பேரிடத்திலும் பரவலாய்த் தங்கும்.
எந்த நாட்டிற்கும் எந்திரப் பெருக்கம்
அவதியே மிகுக்கும் அப்படி யிருக்க
ஏழையே மிகுந்த இந்திய நாட்டில்
கோடானு கோடிக் கூலிக்காரர்
வேலையில்லாமல் திண்டாடும் வேளையில்
எந்திரச்சாலைகள் எங்கணுமானால்
தரித்திரக்கொடுமை தலைவிரித்தாடும்.
இப்போதிருக்கிற எந்திரச் சாலையுள்
கைத்தொழில் அழியக் காரணமானதை
கூடியமட்டும் குறைப்பது நல்லது.
விஞ்ஞான அறிவின் விளைவே எந்திரம்.
விஞ்ஞானம் என்பதும் மெய்ஞ்ஞானப் பகுதியே
மெய்ஞ்ஞான நினைவுள்ள விஞ்ஞானம் வேண்டும்.
ஆக்கமே நோக்கி அழிப்பதை நீக்கி
அன்புகள் செய்யவே ஆயுதமாகி
மெய்ஞ்ஞான அறிவை மேன்மைப் படுத்தவே
விஞ்ஞானம் உதவியாய் விளங்கிடவேண்டும்.
மனிதப் பண்புகள் மாண்டுவிடும்படி
விஞ்ஞான மோகம் வெறியாகிவிட்டால்
எண்ணிப் பார்த்தே எதையும் செய்கிற
மனிதனும்கூட ஓர் மனமென்பதில்லா
எந்திரமாகவே இயங்கிட நேரும் ;

மனதின் சிறப்பே மனிதன் சிறப்பு.
மனப் பண்புகெட்டால் மற்றென்ன வாழ்வு ?
சமூக சல்லாப சந்தோஷம் ஏது ?
ஆதலால் இந்த எந்திர ஆசையை
அடக்கி ஆள்வதே அறிவுடைத்தாகும்.

சாதிகளில்லாச் சமுதாயம்

சாதிகள் இல்லாச் சமுதாயத்தை
உண்டாக்க விரும்பல் உயர்ந்த நோக்கம்.
ஆயினும் அதனை அவசரப் படாமல்
ஆராய்ந்து பார்த்தல் அவசியமாகும் •
சாதிப் பெயர்கள் தொழிலைச் சார்ந்து
பண்டைய நாளில் பழக்கமானது.
இருப்பதனாலொரு சாதகம் இல்லை ;
இல்லாவிடினும் பாதகமில்லை.
அக்கால சூழ்நிலை இக்காலத்தில்லை.
அதனால் சாதிகள் அவசியம் அல்ல.
என்பதில் குற்றமே இல்லை ; எனினும்
ஐயர், செட்டி, ஆச்சார், பிள்ளை,
நாய்க்கர், கவுண்டர், நாயுடு, உடையார்,
முதலியார், ராயர் முதலிய பற்பல
பெயர்களை யெல்லாம் பேர்த்துவிட்டால்
மக்கள் அனைவரும் மனமொத்தவராய்க்
குலவுவ ரென்பது குருட்டுத்தனமே.
சாதிப் பிரிவுகள் சற்றுமில்லாமலும்
ஐரோப்பியர்கள் அனைவரும் ஒன்றுபோல்
கொஞ்சி மகிழ்ந்துக் குலவுகின்றார்களா ?
ஒருநிறம் ஒருமதம் ஒருகுலம் எனினும்
எத்தனைச் சண்டைகள் இவர்களுக்குள்ளே !
சாதிகள் என்னும் சர்ச்சை பற்றிய

இந்திய நாட்டின் தொந்தரவெல்லாம்
பிறப்பில் மட்டும் பெரியவனென்று
மனிதனே மனிதன் மட்டமாயெண்ணி
நடத்தையில் உயர்ந்த நல்லவர்தமையும்
தீண்டத்தகாதவர் என்கிற தீமைதான்
கொடியது, கொடியது மிகவும் கொடியது.
தீண்டாமை மட்டும் தீரத் தொலைந்தால்
சாதிகளில்லாச் சமுதாயம் அதுதான்.
அதனால் அல்லவா அண்ணல் காந்தியும்
தீண்டாமை ஒழிப்புத் திட்டமாக் கொண்டு
சாதிகள் உள்ளதைச் சட்டை செய்திலர்?
சாதிப் பெயரைத் தள்ளிவிட்டாலும்
பழக்கவழக்கப் பாகுபாட்டின்படி
இனவேற்றுமைகள் இருந்தே தீரும்.
அரசியல் கட்சிகள் அநேக சாதிபோல்
பிரிந்து நிற்பதைப் பேசுவாரில்லை.
வேறுள சாதிக்கு விசனப்படுகிறோம்.
அன்பும் அறமும் அடிப்படையாகப்
பொதுநல வாழ்வின் பொறுப்பை உணர்ந்து
அவரவர் கடமைகள் அவரவர் செய்தால்
இனவேற்றுமையும் என்ன செய்திடும்?

குடியரசும் முடியரசும்

முடியரசாட்சியை முற்றிலும் நீக்கிக்
குடியரசாக்கிக் கொள்ளல் வேண்டும்
என்றது காலத் தியல்புக் கேற்றதே.
உலகப் போக்கை உற்றுப் பார்க்கின்
முடியரசென்பது முடியாது இனிமேல்.
வெள்ளைக்காரன் வெளியேறிவிட்டால்

குடியரசாட்சியே நாமும் கோருவோம்.
மூடியரசாயினும் குடியரசாயினும்
நல்லரசாட்சியே நமக்கு வேண்டும்.
முடியரசென்பது முற்றும் தீயதோ
குடியரசென்பது குறையற்ற நல்லதோ
என்பதன் தீர்ப்புச் சொல்லுதல் எளிதல்ல.
எவ்வித அரசியல் ஏற்பட்டாலும்
நல்லரசாட்சி நாட்டில் நடைபெறத்
தகுதிகள் அமைந்த தலைவன் வேண்டும்.
முடியரசாட்சியின் தலைவன் முன்னைய
பரம்பரை பாத்தியம் பற்றிய அரசன்.
குடியரசாட்சியில் கூறும் தலைவன்
அடிக்கடி மாறினும் அவனும் அரசனே.
தலைவனுக் கமைகிற தகுதியைப் பொறுத்தே
நல்லதோ கெட்டதோ அரசும் நடக்கும்.
மன்னவன் எப்படி மன்னுயிர் அப்படி
என்கிற உண்மை எப்போதும் ஒன்றே.
முடியுடை அரசை முறைதவருமல்
அடக்க நிற்பது அறநெறி அறிவே.
குடியரசதிபன் குறை செய்யாமல்
அடக்க நிற்பது அன்றுட சட்டம்.
அறநெறி என்பது கடவுளை அஞ்சும்;
அன்றுட சட்டம் மனிதரை அஞ்சும்.
சந்ததி அரசன் சர்வாதிகாரன்,
குடிகளுக்குள்ள குறையைப் போக்க
உரியது எதையும் உடனே செய்வான்.
குடியரசதிபன் கோரிய எதையும்
உடனே செய்யத் தடைகள் உள்ளவன்.
திடமுள நெஞ்சும் திறமையும் உளதேல்
ஜனதிபதியும் சர்வாதிகாரி போல்

அரசவை அமைச்சை அடக்கி ஆளலாம்.
அப்படித் தலைவன் அபூர்வம் அதுவும்
ஜனநாயகத்தின் இனமானதல்ல.
ஜனங்களைக் கேட்டே சகலமும் செய்வது
ஜனநாயகத்திலும் சாத்தியம் அல்ல.
குற்றம் கடிந்து குடிகளைக் காப்பதில்
அரைகுறையாகிய அதிகாரத்துடன்
கேட்டுக் கேட்டுச் செய்வதும் கெடுதலே.
கடமைகள் உணர்ந்து கடவுளுக் கஞ்சி
உண்மை, ஊக்கம், உறுதிகளோடும்
அன்பும் அறிவும் ஆற்றலும் அமைந்து
தன்னலம் கருதாத் தலைவனைத் தெரிந்து
பொறுக்கிக் கொள்ளும் பொறுப்புகள் மட்டும்
குடிகளுக்கிருந்தால் குடியரசைப் போல்
விரும்பத் தக்கது வேறெதும் இல்லை.
அப்படித் தலைவனை ஆய்ந்து கொள்ளவும்
நல்லரசாங்கம் நாட்டில் நடக்கக்
கருத்தோடதனைக் கண்காணிக்கவும்
காந்தி மகாத்மா காட்டும் வழியில்
தெய்வ நம்பிக்கையும் தீவினை அச்சமும்
சத்தியப் பற்றும் சான்ற நெறியும்
மக்கள் வாழ்வில் மலியச் செய்தால்
அரசும் அமையும் அறமும் வளரும்.

சமத்துவம்

'ஏழைகளென்றும் செல்வர்களென்றும்
ஏற்றத் தாழ்வின் வேற்றுமையின்றி
எல்லா மக்களும் இன்புற்று வாழும்
சமத்துவ நிலைமை சாதிக்க வேண்டும்'
என்றுநீ சொல்வது மிகநல்ல எண்ணமே.

நல்லவரெல்லாம் சொல்லுவததுதான்.
செய்தற் கரியதைச் செய்தவராகிய
மாநிலத்துதித்த மகான்க ளெல்லாம்
வந்ததும் அதற்கே ; வாழ்ந்ததும் அதற்கே ;
உலகம் போற்றும் உத்தமனுகிய
காந்தி மகாத்மா கவலையும் அதுதான்.
ஆயினும் உண்மையை ஆராய வேண்டும் ;
சமத்துவம் என்பதைச் சரியானபடி நாம்
அறிந்து கொள்ளாததே அனர்த்த மெல்லாம்.
சமரசம் என்று சான்றோர் சொல்வது
எல்லா மனிதரும் எல்லா விதத்தும்
சமானம் என்றே சாதிப்பதல்ல.
பசிமுதலாகப் பற்பல வாகிய
உடலிப்பற்றிய உணர்ச்சிகளால் வரும்
இன்பதுன்பங்கள் எல்லோருக்கும்
ஒன்றே ஆதலால் ஒவ்வொரு மனிதனும்
தன்னைக் காட்டிலும் தாழ்ந்தவராக
வாழ்க்கை நடத்தும் வசதிகள் குறைந்த
எவரையும் பார்த்து அவரும் தனக்கு
சமான உயிரெனச் சலுகை காட்டி,
நானிலம் நம்பும் நல்வினைப் பயனால்
செல்வத்தாலோ கல்வியினாலோ
திறமையினாலோ திண்மையினாலோ
உயர்ந்துள ஒருவன் தாழ்ந்துள ஒருவனைச்
சமமாய் எண்ணுதல் சன்மார்க்கமாகும்.
சான்றோர் சொல்லும் சமத்துவம் அதுதான்.
அன்பும் அருளும் அதனைப் பெருகும்,
ஜீவகாருண்யம் சிறந்து விளங்கும்.
ஏற்றத் தாழ்வுகள் எதுவானாலும்
சமுதாயத்தில் சண்டை வராது.

செல்வர்கள் அப்படிச் செய்யாவிட்டால்
உணவும் உடையும் உறையுளு மின்றித்
தாழ்ந்த நிலையில் தவிக்கிற மக்கள்
'பலபேர் வருந்தச் சிலபேர் சுகித்தல்
சரியல்ல' என்னும் சமத்துவம் பேசித்
துன்பமும் செய்யத் துணிந்திடுவார்கள்.
அப்படிச் செய்வது அநீதி எனினும்
தாழ்ந்தவர்க் கிரங்காத் தனவான் செய்யும்
பாவத்துக்குப் பலனே அதுவாம்.
என்பதைத் தவிர என்ன சொல்லலாம்?
சோறும் துணியும் சுகமும் கிடைத்திட
வசதியில்லாமல் வாடி வருந்தும்
ஏழைக்கு செல்வன் இரக்கம் காட்டல்
கட்டாயமான கடமை என்பதில்
சமத்துவம் பேசுதல் சரியான தத்துவம்.
மற்றப்படிக்கிம் மாநில வாழ்வில்
சமத்துவம் என்பது சாத்தியம் அல்ல.
ஏற்றத் தாழ்வுகள் இருந்தே தீரும்.
வேற்றுமைதானே உலகின் விசித்திரம்.
அவற்றை மாற்றிட யாரால் முடியும்?
எல்லா மனிதரும் எல்லாவற்றிலும்
சமானம் என்பது சரியானதல்ல.
எந்த மனிதனும் எதையும் செய்திட
முடியும் என்பதும் முடியாத காரியம்.
எந்தத் தொழிலும் எவரும் கோரிட
உரிமை உள்ளது உண்மை எனினும்
தகுதியும் அதற்குத் தனித்தனி வேண்டும்.
தகுதியிருந்தும் தடுப்பாரின்றியும்

எல்லாருக்கும் எளிதாவதில்லையே!
ஒருதாய் வயிற்றில் ஒக்கப் பிறந்துள
சகோதரர்கூட சமமாயில்லையே!
ஏற்றத் தாழ்வுகள் ஏதுமில்லாமல்
செல்வப் பிரிவினை செய்து கொண்டாலும்
ஒருவரைப் போலவா ஒருவர் சுகிக்கிறார்?
இரட்டைப் பிள்ளையும் ஒன்றுபோல் இல்லையே!
ஒரே இடத்திலே ஒரே விருந்தினில்
அநேகம் பேர்கள் அமர்ந்த பந்தியில்
ஒரே சமையலின் உண்டிகள் பலவும்
ஒரே மாதிரி உபசாரத்துடன்
சமானமாகவே சாதித்தாலும்
ஒருவரைப் போலா ஒருவர் உண்கிறார்?
அளவும் ருசியும் அருந்தும் விதமும்
ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு மாதிரி.
இப்படித் தாகிய இயல்புடை உலகில்
சமத்துவம் எப்படிச் சாத்தியமாகும்?
இல்லாத சமத்துவம் இருப்ப தெப்படி?
சான்றோர் சொல்லும் சமத்துவம் எதுவெனில்:
எத்துணை வேற்றுமை இருப்பன எனினும்
வேற்றுமைக் குள்ளும் விளங்குவதாகிய
ஒற்றுமை யதனை உணர்வோ மானுல்
ஏதோ ஒருவிசை எப்படியாகவோ
ஒவ்வொருவரையும் வெவ்வேறு விதமாய்
உண்டாக்கி யுள்ள உண்மை அறிந்து
கருணை காட்டக் கற்றுக் கொண்டால்
ஏழைக்குச் செல்வன் இன்பம் செய்வான்.
செல்வனுக் கேழையும் துன்பம் செய்யான்.
ஆன்ம சமத்துவ அறிவில்லாமல்
வேறு சமத்துவம் வெறும் வாய்ப் பேச்சே,

கட்டாய மாக்கிச் சட்டம் செயினும்
வாழ்வில் சமத்துவம் வரமுடியாது.
காந்தி மகாத்மா காட்டும் நெறியே
சமரச வாழ்வின் சரியான போதம்.

உயிரைக் கொடுத்தல்

' நாட்டைக் காக்கவும் நல்லன செய்யவும்
உயிரைக் கொடுக்கும் உயர்ந்த தியாகம்
சேனை வீரனே செய்திடமுடியும்'
என்றுநீ சொன்னதை எண்ணிப் பார்ப்போம்.
பட்டாளத்தில் பயிற்சி பெறுகிற
ஒவ்வொரு வீரனும் உயிரைக் கொடுக்கவா
போர்முனை நாடிப் புறப்படுகின்றான்?
தன்னுயிர்க் காத்துத் தப்பிப் பிழைக்கப்
பலவிதமாகிய பாதுகாப்புகளுடன்
பள்ளமும் தோண்டிப் பதுங்கிக் கொண்டு
துப்பாக்கி யோடும் தூரத்திருந்து
எதிரிகள் சற்றே ஏமாறும் வேளையில்
குறிப்பாய்ச் சுட்டுக் கொல்லவே போகிறான்.
அப்படிப் போனவன் அசந்த வேளையில்
எதிரியின் குண்டு இவன்மேற் பாய்ந்து
உயிரை இழக்கிறான் ; அதுதான் உண்மை ;
கொல்லப் போனவன் கொல்லப் படுகிறான்.
பிறரைக் கொல்லவே பயிற்சி பெறுகிற
சேனை வீரன் தியாகமா செய்கிறான் ?
தியாகம் என்பதன் தினுசே வேறு.
காந்தி மகாத்மா கற்பிக்கிறபடி
நாட்டை மீட்கவும் நல்லன செய்யவும்
துன்பம் எதையும் அன்புடன் சகித்து
பகைவரிடத்தும் பட்சமே காட்டி

ஆயுதம் ஏந்துதல் அறவே மறுத்துச்
சத்திய சாந்தமே தன்படையாகத்
தன்னுயிர் போயினும் தான்பிற உயிரைக்
கொல்லா விரதமே கொண்டவனைத்
தீமையை எதிர்க்கும் திடமனமுடைய
உத்தமன் அவனே உயிரைக் கொடுப்பவன்.
தியாகம் என்கிற தீரமும் அதுதான்.
அஹிம்சா முறையில் அப்படித் தீரனுய்
சந்தோஷத்துடன் தன்னுயிர் விட்டால்
அதுதான் தன்னுடை ஆசை என்பதை
எத்தனையோ தரம் எழுத்து மூலமாய்
அண்ணல் காந்தியே அறிவித்துள்ளார்.
உயிரைக் கொடுக்கிற உயர்ந்த தியாகம்
இதுவே யல்லால் இன்னென்றும் அல்ல.

அச்சமில்லாமை

' அச்ச மில்லாமையும் அதனுல் வருவதால்
பட்டாள வேலையில் படிந்தது ' மனமென
அழுத்திச் சொன்னுய், அதுவும் கூட
உற்றுப் பார்க்கின் உண்மையே அல்ல.
பட்டாளத்தில் பயிற்சி பெறுகிற
சேனை வீரன் செய்கிற காரியம்
அத்தனையும் ஒரு அச்சத்தால் தான்.
குறித்த வேலையைக் குறித்த முறையில்
காலம் நேரம் கணக்குப் படிக்குச்
செய்யத் தவறின் சேனைத் தலைவன்
கண்டிப்பாகிய தண்டனை தருவான்
என்னும் பயமே முன்னுல் நிற்கக்
காலையிலிருந்து மாலைவரையும்
எந்திரம் போலவே எதையும் செய்வது

அச்ச மில்லாமல் ஆகிற வேலையா ?
உத்தரவின்றேல் ஓய்வுதான் உண்டா !
தூங்கக் கூடச் சுதந்தரம் உண்டா !
எந்த நேரத்தில் எழுப்பின போதும்
எவ்விதத் தொழிலில் ஏவி விட்டாலும்
மறுத்துப் பேசிட மார்க்கமும் உண்டா !
சண்டை செய்யச் சம்மதிக்காதவன்
போர்முனை நோக்கிப் போக மறுத்தால்
விட்டிடுவார்களா ? சுட்டும் கொல்லுவர்
என்கிற அச்சம் இருக்கச் செய்வதே
பட்டாள வேலைப் பயிற்சி என்பது.
அச்சமில்லாமை அங்கே யில்லை.
அச்சமில்லாமை அதுஎது என்றால்
இச்சைப் படிக்கே எதையும் செய்யச்
சுதந்தரம் தனக்குச் சொந்தமாய் நிற்கக்
குணமே நாடிக் குற்றம் கடிந்து
தன்னைத் தானே தண்டிப்பவனுய்
ஏவல் சொல்லவும் ஏனென்று கேட்கவும்
தன்மனச் சாட்சியே தனக்குத் தலைவனுய்ப்
பதுங்கிக் கொள்ளப் பகையில்லாமல்
நடுங்க வேண்டிய ஞாயமில்லாமல்
தண்டனை பயக்கும் தப்பித மென்னத்
திடுக்கிடச் செய்யும் தீமை பண்ணுமல்
வாய்மையும் தூய்மையும் வழுவாநெறியில்
அனைத்துள உயிர்க்கும் அன்பே செய்து
அருள்மனம் நிறைந்த அமைதி ஒன்றே
அச்சமில்லாமை அளிக்க வல்லது.
அச்சமில்லாமை அரும்பெரும் செல்வம்.
அப்படிப் பட்டொரு அச்ச மில்லாமை
காந்தி மகானிடம் மட்டும் காண்கிறேம்.''

சகலமும் கேட்டசி சங்கரலிங்கன்
மரியாதையாக மறுமொழி சொல்வான்:
'' நீங்கள் சொல்லும் நியாயமனைத்தும்
எண்ணிப் பார்க்கவும் ஏட்டில் எழுதவும்
பிரசங்கிக்கவும் பிழையற்றனவே.
சிற்சிலர் அப்படிச் செய்யவும் கூடும்.
அண்ணல் காந்திஓர் அற்புதப் பிறவி.
சரித்திரம் கண்டிலாச் சத்திய சாந்தன்.
சொல்வது போலவே நடக்கிற சுத்தன்.
வணங்கத் தகுந்த மாபெரும் புனிதன்.
ஆயினும் என்னவோ அவர்வழி இந்த
உலகத் தியல்புக்கு ஒத்துக் கொள்ளுமா ?
என்னும் ஐயம் எல்லோர்க்கும் உண்டு.
மற்றதுக் கெல்லாம் மறுப்புச் சொல்லிட
முடியா தெனினும் முக்கியமாக
அன்னியர் நம்மை அடக்கி ஆள்வதைப்
போர் புரியாமல் போக்கிட முடியும்
என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை.
தேச பக்தியில் சிறந்தவராயுள
அநேக தலைவரின் எண்ணமும் அதுவே.
அண்ணல் காந்தியின் அபார சக்தியால்
மற்றவர் அவரை மறுக்கக் கூசுவர்.
வங்காளத்தின் சிங்கமெனத் தகும்
சுபாஷ் சந்திரர் சொல்லியே விட்டார்.
அன்னிய ஆட்சியை அப்புறப் படுத்த
சாத்விக மார்க்கம் சரியான தல்ல,
சுபாஷ் சந்திரர் சொல்லும் வழியே
வெள்ளைக் காரனை வெளியே துரத்தப்
பயனுள தென்பது பலருடைக் கருத்து
எப்படியாயினும்'' என்று சங்கரன்

கூறி முடிக்குமுன் கோபாலகிருஷ்ணர்
மாடிக்குள் வந்து மகாதேவரை
வணக்கத்தோடு வரவேற்றுவிட்டு
சேம விசாரணை செய்திட லானார்.
பெரியவர் இருவரும் பேச்சிலிறங்கிடச்
சங்கரலிங்கன் சட்டென எழுந்து
அவ்விடம் விட்டு அப்பாற் சொன்றான்.

———

திருமணம்

மகாதேவரும் மனைவியும் மகளும்
வாரம் முழுவதும் வசந்தபுரியில்
தங்கியிருந்துத் தம்மூர் சென்றனர்.
அதன் பின் ஒருநாள் அன்னபூரணியும்
அவருடைக் கணவரும் ஆலோசித்து
சங்கரனுக்கும் மங்களத்துக்கும்
விரைவில் மிகவும் விமரிசை யாகத்
திருமணம் நடத்தத் தீர்மானித்துச்
சுபதினம் பார்க்கச் சோதிட நிபுணர்
கோபாலகிருஷ்ணரின் குடும்ப ஜோசியர்
சுப்பிரமணியரைச் சுறுக்காய்ச் சென்று
அழைத்து வரும்படி ஆளை அனுப்பினர்.
வேலைக்காரனும் வேகமாய்ச் சென்று
சொன்னதும் உடனே சோதிடர் வந்தார்.
சங்கரன் ஜாதகம் மங்களம் ஜாதகம்
இரண்டையும் தாமே எடுத்து வந்து
கோபாலகிருஷ்ணரே அவரிடம் கொடுத்து
பொருத்தம் பார்த்துத் திருமணம் புரியும்
முகூர்த்தம், தேதி முதலிய எல்லாம்
குறித்துத் தரும்படிக் கேட்டுக் கொண்டார்.
அதனைக் கேட்ட அன்னபூரணியார்
"பொருத்தமா இனிமேல் பார்க்கப் போவது?
உள்ளப் பொருத்தம் உறுதிப் பட்டபின்
வேறு பொருத்தம் வேண்டிய தென்ன ?"
என்றாள் : அதற்கு இரைக்கச் சிரித்து
கோபாலகிருஷ்ணர் கூறுவதானார் :

" ஜாதகம் பார்க்கிற சம்பிரதாயப்
பேச்சின் நினைப்பில் பொருத்தம் பேசினேன்.
வேறுபெண் பார்க்கும் விருப்பினுல் அல்ல "
என்ருர் அதனை ஜோசியர் ஏற்று,
" சங்கரனுக்கும் மங்களத்துக்கும்
பாலியத்திருந்தே பலமான பாசம்
இருந்து வருவது எனக்கும் தெரியும்,
அம்மாளுக்கும் அதுதான் ஆசை
மனசு பொருந்தினுல் மற்றதும் பொருந்தும்.
பத்துப் பொருத்தமும் பார்ப்பதனுலும்
பாதக மில்லை பயப்பட வேண்டாம் "
என்று முறைப்படி இராசியும் அமிசமும்
கட்டம் போட்டுக் கணிதம் செய்து,
" பூர்வ ஜன்மத்தின் தொடர்பே போன்று
ஜாதகப் பொருத்தம் சகல விதத்திலும்
உச்சமாய் மிகவும் மெச்சத் தகுந்ததே.
வருகிற மாதம் வைகாசி யதனில்
பூதவாரத்தில் பூசமும் ரிஷபமும்
கூடிய நன்னுள் குறைவற்ற முகூர்த்தம்.
திவ்வியமாகத் திருமணம் நடத்திட
ஊரார் மகிழும் உயர்ந்த குணவான்
சங்கரலிங்கன் மங்களாம்பாளுடன்
நீடூழி வாழ்வான் நீங்கள் இருவரும்
பேரப் பிள்ளைகள் சூழப் பெற்றுப்
பல்லாண்டு மகிழப் பகவான் அருளும்,
ஆனுல் ஒன்று : அறிவித்தல் கடமை
பெண்ணின் தெசையில் பீடை கொஞ்சம்.
திருமணம் ஆனதும் ஒருசில மாதமே
அந்தப் பீடையின் அதிகார காலம்.
பக்தியோடிருக்கப் பரிகாரம் " என்ருர்

ஜோசியர் சொன்னது சுறுக்கெனப் பாய
கோபால கிருஷ்ணர் புருவம் குனித்துப்
" பெண்ணின் தெசையில் பீடை என்ருல்
பையனுக் கதனுல் பாதகம் உண்டா ?"
என்ருர் ; கேட்டு மிகவும் ஏங்கிய
அன்னபூரணியார் அவரைப் பார்த்து
" பெண்ணின் தெசையில் பீடை என்ருல்
பையனையும் அது பாதிக்காதா ?
இன்பமோ துன்பமோ இருவருக்கும்தான் "
என்ருள் ; ஜோசியர் இடையே சொல்வார் :
" பரவாயில்லை பயப்பட வேண்டாம்
பீடையும் அப்படிப் பிரமாதமல்ல
இப்படிப் பீடைகள் எல்லார்க்குமுண்டு.
வியாதியே வரினும் சீக்கிரம் விலகும்
பக்தியோடிருந்து பத்தியம் காக்க
எச்சரித்திடவே இதையும் சொன்னது.
கவலைப் படாமல் கலியாண வைபவம்
சிறப்பாய் நடக்கச் செய்யத் தக்கன
காரியங்களை இனிக் கவனிக்க வேண்டும்
எல்லாம் சுபமாய் இனிதுற நடக்கும் ;
பகவான் திருவருள் பாலிக்கும் " என்று
சொல்லி முடித்தார் சுப்ரமணியர்.
கோபால கிருஷ்ணர் கும்பிடு போட்டார்
அன்னபூரணி ஓர் அறைக்குட் சென்று
தாம்பூலத்துடன் தட்சிணை வைத்த
தட்டம் கொணர்ந்து அவரிடம் தந்திட
வாங்கி மகிழ்ந்து வாழ்த்திச் சென்ருர்.
... ...
எல்லாருக்கும் நல்லவள் என்றிட
கீழோராயினும் தாழ உரைத்து

அண்டின எவர்க்கும் அன்பே செய்யும்
ஒப்புரவறிந்த உள்ளம் படைத்துள
உத்தமி என்றும் ஊரார் வணங்கும்
அன்னபூரணியின் அருமைப் புதல்வன்
குபேரச் சீமான் கோபால கிருஷ்ணரின்
ஒரு மகனுகிய திருமிகும் செல்வன்
சங்கரலிங்கன் மங்களாம்பாளே
வாழ்க்கைத் துணையாய் மாலே சூட்டித்
திருமணம் புரிந்த திருநாள் நடந்த
வைபவம் முழுவதும் வருணனேயின்றிக்
கண்டதை மட்டும் சொல்வதும் கடினம்,
சிற்பம் சிறந்து சித்திரம் நிறைந்த
பருவதம் போன்றுள மாபெரும் பந்தரில்
மணிகளும் மலரும் மருவிய மணவறை
வகை வகை யாகிய வாத்திய முழக்கம்
நவநவமாகிய நடனக் காட்சிகள்
விதம் விதமாகிய சங்கீத வித்தைகள்
வர்ண ஜாலம் மிக்க வாண வேடிக்கை.
ஏழை எளியவர் எல்லாருக்கும்
அறுசுவை கூடிய அன்னதானங்கள்.
வறியவர்க் கெல்லாம் வஸ்திர தானம்,
தகுதிகட்கேற்ற சன்மானத்துடன்
கலைஞருக் கெல்லாம் 'காஷ்மீர்' சால்வை.
அசலூர்க்காரர் அத்துணை பேர்க்கும்
வரவும் போகவும் வழிச் செலவுப் பணம்.
இப்படி நடத்திய ஒப்பரிதாகிய
மங்களம் சங்கரன் மணவிழாக் காணக்
கிடைத்த பேர்களே கொடுத்து வைத்தவர்
... ...
கலியாணத்தைக் கருதிடத் தெரியா

இளமையிலேயே இணே பிரியாமல்
அழகிலும் அறிவிலும் அன்பிலும் தென்பிலும்
ஒருவரை யொருவர் உயர்வாய் மதித்துக்
கருத்தொரு மித்த காதலராகிய
சங்கரலிங்கனும் மங்கள நங்கையும்
மணந்து கொண்டதில் அவர்கள் மகிழ்ச்சி
எவ்வள வென்பதை எப்படிச் சொல்வது?
... ...
வசந்த புரியில் வைபவ மெல்லாம்
முடிந்த பின்னர் மூன்று நாள் சென்று
மங்களம் தந்தை மகாதேவரும்
வரவேற் பென்னும் வழக்கப் படிக்கு
விருதூர் தனிலொரு விருந்து வைத்தார்.
சம்பந்தி வீட்டார் சம்பத்தை ஒட்டி,
விருந்தினர் வருகை பெருந்திரளாகும்.
அப்படிக் கூட்டம் அமரவும் கூட
இருக்கிற வீட்டில் இடம் போதாது
என்பதற்காகவே எதிர் வீடாகிய
குப்பன் மனேயில் குறித்த விருந்தை
நடத்திட நினேத்து அவனே நாடினர்.
மங்களாம்பாளிடம் மையல் கொண்டு
குப்பன் செய்துள குறும்புத் தனத்தை
மங்களம் தவிர மற்றவர் அறியார்.
அதையும் குப்பன் அறிவான் ஆகையால்
குப்பன் அவரிடம் எப்போதும் போல்
மரியாதை யாகவே நடப்பது வழக்கம்.
மகாதேவரின் மனேயாளாகிய
ஜானகிகூட அவனிடம் சகஜமே.
குப்பனுக்கிருந்த கோபம் முழுதும்
மங்களம் மீதுள மையல் ஒன்றுதான்.

அழைப்பிற் கிணங்கிய அன்பர்கள் போலவே
மங்களம் காதலன் சங்கரன் என்பவன்
'எப்படிப் பட்டவன்' என்பதைக் காணப்
பொருமை தூண்டப் பொருமிக் கொண்டே
கலியாணத்தில் கலந்து கொள்ளவும்
வசந்த புரிக்கும் வந்தவன் குப்பன்.
விருந்தை அவனுடை வீட்டில் நடத்தக்
கோரின உடனே குப்பன் மிகவும்
சந்தோஷத்துடன் சம்மதம் சொல்லி
" என்னுடைச் சம்மதம் ஏன் கேட்க வேண்டும் ?
இந்த வீடுங்கள் சொந்த வீடாச்சே !
இஷ்டம் போல எதையும் இங்கே
தாங்கள் நடத்தத் தடையென்ன ?" என்றான்.

விரும்பிய சிறப்புடன் விருந்தும் நடந்தது.
சங்கர லிங்கன் அங்கே வந்ததும்
நெடுநாள் பழகிய நேசனைப் போல
குப்பன் அவனுடன் குலவி மகிழ்ந்து
இணை பிரியாமல் கூடவே இருந்தான்.
சங்கரனுடைய சமரச இயல்பும்
அழகிய முகமும் அகன்ற மார்பும்
திடகாத்திரமாய்த் திரண்ட தோளும்
கூரிய மூக்கும் குளிர்ந்த நோக்கும்
சிவந்த உதடும் அடிக்கடி சிரித்து
முல்லையின் வெளுத்த பல்லொளி பரப்பி
இன்னுரை பேசும் இங்கித குணமும்
கள்ளக் குப்பனும் களிக்கச் செய்தன.
ஆயினும் அவனுடை அந்தரங்கத்தில்
'சங்கர லிங்கன் மங்களம் கணவன்'
என்ற பொருமையே எழுந்து நின்றதால்

சங்கரன் இங்கிதச் சல்லாபங்களை
முழுதும் ரஸிக்க முடியாத குப்பன்
இன்பம் போலவே துன்பப் பட்டான்.
சல்லாபிக்கையில் சங்கரலிங்கன்
எதையோ சொல்லிட இடதுகை நீட்ட
அதிலே விளங்கிய அழகான பச்சை
மயக்கம் தருகிற ' மங்களம் ' பெயரைக்
கண்டான் குப்பன் ; கண்டதும் உடனே
அவனுடைத் துன்பம் அதிகப்பட்டது.
... ...
சாப்பிட்டானபின் சங்கர லிங்கனைக்
குப்பன் மிகவும் குதூகலத்துடன்
தன்னுடைச் சொந்தத் தனிஅறை அதற்குள்
அழைத்துச் சென்றுநல் ஆசனம் தந்து
வாசனைபூசி மேசையின் மீதுள
பலவிதமாகிய பழங்களை நீட்டி
உண்ணச் சொல்லி உபசரித் திட்டான்.
சங்கர லிங்கனும் சாத்துக்குடிப் பழம்
ஒன்றை எடுத்து உரித்திடும்போது
குப்பனை யாரோ கூப்பிட்டார்கள்.
கூப்பிட்ட பக்கம் குப்பன் போய்விட
உரித்த சுளையை உறிஞ்சிய சங்கரன்
விதைகளைத் துப்பிட விரித்து வைத்திட
காகிதம் ஒன்றைக் கண்டு பிடித்திட
அங்கும் இங்கும் அறைக்குள் பார்த்தான்.
மேஜையின் அடியில் மிகவும் பெரியதோர்
குப்பைக் காகிதக் கூடை இருந்தது.
கையை நுழைத்துக் காகிதம் ஒன்றை
எடுத்தான் அதுஒரு ' கவராய் ' இருந்தது.
விதைகளைத் துப்ப விரிக்கும் பொழுது

பர்மா ' ஸ்டாம்பு ' அதன்மேல் பார்த்தான்.
விலாசம் படிக்க விருப்பம் வந்தது.
படித்தான் : உடனே உள்ளம் பதைத்தது.
' மகாதேவர் பார்த்து மங்களம்
கையில் கொடுப்பது ' என்பதைக் கண்டு
திடுக்கிட்ட வனுய்த் திகைத்துப் போனுன்.
தபாலில் எங்கோ தவறிப் போனதாய்
அன்னை சொன்னதை அவனும் நம்பிய
அவனே அனுப்பிய அதே ' கவர் ' அது.
குப்பன் வீட்டுக் கூடையிற் கிடப்பது
எப்படி என்பதை எண்ணித் துடித்துக்
கவருள் அனுப்பிய கடிதம் கூட
அதிலே கிடக்குமோ என்கிற ஆசையில்
கூடையில் உள்ளதைக் கொட்டிப் பார்த்தும்
அதிலே கடிதம் அகப்பட வில்லை.
கொட்டின குப்பையைக் கூடையிற் போட்டு
முன்போல் அதனை மூலையில் வைத்துச்
சங்கரன் மிகவும் சந்தேகத்துடன்
என்னென்னவோ பல எண்ணிடலானுன்.
கொஞ்ச நேரத்தில் குப்பனும் வந்தான்.
உள்ளொன்று வைத்துப் புறமொன்றுரைக்கப்
பழகாத சங்கரன் பதை பதைப் போடு
" இந்தக் ' கவர் ' இங்கு எப்படி வந்தது ?
இதனுள் இருந்தஅக் கடிதம் எங்கே ?
என்றுதன் கையில் ஏந்திய ' கவரை ' க்
காட்டினுன் சங்கரன் ; கண்டதும் குப்பன்
இடிவிழுந்ததுபோல் ஏங்கி இளைத்துக்
கையும் களவுமாய்ப் பிடிபட்ட கள்ளன்
முழிப்பதைப் போன்று முறைத்து முறைத்துக்
கண்கொட்டாமல் ' கவரைப் ' பார்த்து

ஒருசில நிமிஷம் ஊமைபோல் நின்று,
சூதருக்குள்ள சூட்சும புத்தியால்
சங்கட நிலையைச் சமாளித்தவனுய்
பொருத்தமான ஓர் பொய்யைப் புனைந்து
" இந்தக் ' கவரா ?' இதனை ஒருநாள்
மகாதேவரின் மக்களிற் சிலபேர்
விளையாட வந்தவர் விட்டுப் போனதாம்.
வீட்டைப் பெருக்கிய வேலைக்காரன்
எடுத்துப் பார்த்து என்னிடம் தந்தான்.
வீதியில் எறியும் விருப்ப மில்லாமல்
குப்பைக் காகிதக் கூடையில் போட்டது.
வேலைக்காரன் வெற்றுக் ' கவர் ' தான்
கண்டதாய்த் தந்தான் கடிதம் இல்லையே "
என்ருன் குப்பன் ; என்றதைக் கேட்டு
சங்கரன் மிகவும் சங்கட முற்ருன்.
குப்பன் சொன்னதை ஒப்புக் கொண்டால்
மகாதேவரோ மங்களாம்பாளோ
அல்லது மங்களம் அன்னையே தானே
வாங்கிய தபாலை வரவில்லை என்று
பொய் சொன்னதாகப் புலப்படுகின்றது.
மகாதேவரோ மாசற்ற குணவான் ;
புதல்வியும் கூடப் பொய் சொன்னதில்லை.
அவளுடை அன்னையும் அப்படிச் செய்யாள்.
இவர்களைத் தவிர அவர்கள் வீட்டில்
மற்றவர் யார் இதை வாங்கி மறைப்பவர் ?
குப்பன் சொன்னது எப்படிப் பொருந்தும் ?
என்கிற பலவிதம் எண்ணித் திகைத்து
குப்பனைப் பார்த்துச் சங்கரன் கூறுவான் :
" இந்த விலாசம் என்னுடை எழுத்து.
நானே இதனை ராணுவத் தபாலுடன்

அனுப்பி வைத்தேன் ; ஆயினும் இதனை
மகாதேவரோ மங்களாம்பாளோ
வாங்கவே இல்லை என்று மறுத்தனர்.
அப்படியிருக்க அவர்களின் வீட்டுக்
குழந்தைகள் இங்கே கொண்டு போட்டதாய்
வீட்டைப் பெருக்கிய வேலைக்காரன்
சொன்னது முற்றும் சுத்தப் பொய்தான்
என்று நினைக்கிறேன் ; எனினும் நான்போய்
மகாதேவரை மற்றும் ஒருமுறை
கேட்டுப் பார்க்கிறேன் ; வீட்டைப் பெருக்கிய
வேலைக்காரனை விசாரிக்க வேண்டும்,
அவனையும் கொஞ்சம் அழையுங்கள் '' என்றான்.
எழுந்தான் சங்கரன் ; எதிரே நின்ற அக்
குப்பன் வணங்கிக் கும்பிடு போட்டு
'' எங்கே அதனை இங்கே கொடுங்கள்
நானும் கொஞ்சம் நன்றாய்ப் பார்த்திட ''
என்று, சங்கரன் எடுத்த அக் 'கவரை'ப்
பார்க்கிறவன் போல் பற்றிக் கொண்டதும்,
'' இந்த விசாரணை இப்போது வேண்டாம்
கல்யாண விருந்தில் கலவரம் எதற்கு ?
மகாதேவரே வாங்க விடினும்
மற்றுளோர் வாங்கி மறந்திருக்கலாம்.
தவறுதலாகத் தபாற் காரனே
குழந்தைகளிடத்தில் கொடுத்திருக்கலாம்
எவருடைக் குற்றமோ எப்படிக் காண்பது ?
அப்புறம் இதனை ஆராய்ந்திடலாம்,
இப்போது வேண்டாம் '' என்பனவற்றைச்
சுமுகமாகவே சொல்லிக் கொண்டே
கையில் இருந்த அக் 'கவரை' மடித்து
சட்டைப் பையில் இட்டுக் கொண்டான்.

அதனைச் சங்கரன் ஆட்சேபித்துத்
தன்னிடம் 'கவரை'த் தரும்படி கேட்டான்.
சிற்றினக் குப்பன் சிரித்துக் கொண்டே
''இப்போது வேண்டாம் இருக்கட்டும் என்னிடம்
அவசியமானால் அப்புறம் தருகிறேன்.
பாதகம் இல்லை பதற்றம் வேண்டாம்''
என்றான்; மிகவும் ஏமாந்த சங்கரன்
'' உங்கள் செய்கை ஒழுங்கானதல்ல
விசாரிப்பதனை வேண்டுமானால்
இப்போது வேண்டாம் என்பது சரிதான்
என்னுடைக் 'கவரை' என்னிடம் கொடுக்க
உங்களுக்கித்தனை சங்கடம் எதற்கு ?
தயவு செய்து அதனைத் தாருங்கள் '' என்றான்.
குப்பன் மீண்டும் குலுங்கச் சிரித்து
எதுவானாலும் இப்போது வேண்டாம்,
கவரை எவர்க்கும் காட்டப்படாது,
இருக்கட்டு மென்னிடம்' என்றான் அதனால்
சங்கரனுக்குச் சங்கடம் மிகுந்து
சித்தம் பதைத்துச் சினமும் உதித்து
புதுஇடம் என்பதால் பொறுத்துக் கொண்டு
உதித்த கருத்தை உரைக்கலானான் :
'' நீங்கள் சொல்வதில் நியாயமே இல்லை
உங்கள் செயலை ஊன்றிப் பார்க்கின்
வந்த தபாலை வாங்கி மறைத்தது
நீங்களேதான் என நினைக்கிறேன் நான் ''
என்றதைக் கேட்ட குப்பன் இளித்து
எப்படித் தாங்கள் எண்ணினும் சரியே
'கவரை'ப் பற்றிய கவலையே வேண்டாம்.
என்னிடம் இருப்பதே நல்லது '' என்றான்.
சங்கரலிங்கம் சகித்திட முடியா-

ஆத்திரமடைந்து " ஆமாம், ஆமாம்
'கவரைப் பற்றிய கவலையே வேண்டாம்'
வந்த தபாலை வழிப்பறி செய்தது
நீங்களே என்பது நிச்சயம் கண்டபின்
'கவரைப் பற்றிய கவலை எதற்கு ?
வேண்டாம்' என்று வெளியேறி விட்டான்.
" வந்த தபாலை வழிப்பறி செய்தது
நீங்களே என்பது நிச்சயம் " என்று
சங்கரன் சொன்னது சதிசெய் குப்பனை
ஈட்டிபோல் குத்தி நெஞ்சை இடிக்கக்
குப்பனுக்குதித்த கோபமுங் கொதிப்பும்
மங்களம் மீதுள மாச்சரியத்தை
அதிகப் படுத்தவே செய்தது; அதனால்
சங்கரனைத் தன் சத்துரு போலவே
குப்பன் அவன்மேல் குரோதங் கொண்டான்.

பறந்து வந்த பட்டாளக் கட்டளை

திருமணம் ஆனபின் ஒருமூன்று மாதம்
சங்கரலிங்கனும் மங்களாம்பாளும்
பெற்றோர் களிக்க மற்றோர் மகிழ
உற்றூர் நயக்க ஊரார் வியக்க
அன்பும் அறிவும் ஆற்றலும் விளங்கத்
துன்பப்படுவோர் துயரம் துடைத்து
அண்டின எவர்க்கும் ஆதரம் தந்து
'இன்பம்' என்பதே இன்பங் கண்டிட ..'
நல்லற வாழ்க்கை நடத்திடும் போது
அவனுடை 'சிக்லீவ்' ஆறுமாதமும்
முடிகிற தருணம் முற்றுதல் கண்டு,
சங்கரன் மீண்டும் ரங்கூனுக்குப்
போவானெனவென நெஞ்சம் புழுங்கித்
தாயும் தந்தையும் தவிக்கலாயினர்.
அன்னபூரணியோ அதுவே ஏக்கமாய்
ரானுவ வேலையை ராஜினாமாவே
செய்து விடும்படி மெய்தளர்ந்திரங்கி
பன்னிப் பன்னித் தினமும் பலமுறை
கெஞ்சிக் கெஞ்சி மகனைக் கேட்டாள்.
மங்களாம்பாளும் மன்றுடலானாள்.
கோபால கிருஷ்ணரும் அதையே கோரினர்.
தந்தை சொல்லைத் தட்டிப் பேசவோ
அன்னையின் அன்பை அசட்டை பண்ணவோ
மனைவியின் நிலையை மறந்துவிடவோ
எண்ணவும் மாட்டா இயல்புள சங்கரன்.
மற்றதை யெல்லாம் மதிக்காவிடினும்

பால் மணம் மாறுப் பருவம் தொடங்கி
அன்பும் ஆசையும் அளவிலவாகிக்
கற்பனைக் கெட்டாக் காதலாய் நிற்கும்
மங்களாம்பாளைப் பிரிந்திட மறுக்கும்
வாலிபத் துடிப்பின் வலிமையும் கூடிய
காதலுட் கிடந்த காம உணர்ச்சியும்
உத்தியோகத்தினை உதறித் தள்ளிட
வேண்டிய தென்றே தூண்டின வெனினும்
ஆண்மை எனவும் ஆற்றல் எனவும்
வீரம் என்றும் தீரம் என்றும்
பட்டாளத்தில் பயிற்சி பெறுவது
தன்னுடை நாட்டை அன்னியராளும்
சிறுமை நீங்கச் செய்திட வேண்டிய
கடமைக் குதவும் காரிய மென்றும்
இப்படியாகவே எண்ணிப் பழகிய
சங்கரலிங்கன் சட்டென உடனே
பட்டாளத்தினை விட்டொழித்திடுவது
கோழைத் தனமெனக் கூசிய தன்மையால்
ராணுவ வேலையை ராஜினாமாச்
செய்திட அவனது சித்தம் மறுத்தது.
ஆயினும் தன்னரும் அன்னையை எண்ணி
தந்தையின் விருப்பம் தனையும் மதித்து
காதலி மங்களம் கண்மணி அவளைப்
பிரிந்து போய்விடப் பிரியமில்லாமலும்
சங்கரலிங்கன் சங்கடம் மிகுந்து
இருதலைக் கொள்ளி இடையே சிக்கிய
எறும்பைப் போன்று ஏங்கித் தவித்து
அநேக விதமாய் ஆலோசித்து
மாதாபிதாவின் மங்களாம்பாளின்
கவலையை மாற்றும் கருத்துடன் ஆய்ந்து

உடனே தோன்றிய உபாயமாக
" இப்போதைக்கென இன்னும் எனக்கு
ஆறுமாதங்கள் அவசியம் 'சிக்லீவ்'
தரவேண்டுமென்று தந்தி கொடுக்கிறேன்.
முற்றிலும் அந்த 'லீவ்' முடிவதற்குள்ளே
பட்டாள வேலையை விட்டிடலாமா
என்பதைப் பற்றியும் எண்ணலாம் " என்று
அவர்களுக் கொருவித ஆறுதல் சொல்லித்
தன்னுடை ஏக்கமும் தணியச் செய்திட
அந்தத் தந்தியை உடனே அனுப்பினன்.
பத்து நாள் சென்று பதிலும் வந்தது.
அந்தப் பதிலில் மிகவும் அழுத்தமாய்
" ஆறுமாதம் 'லீவ்' அனுமதி தருவது
முடியாத காரியம்: மூன்றே மாதம்
தரப்பட்டுள்ளது தவறிவிடாமல்
ரஜா முடிந்ததும் ராணுவத் தலைமை
அதிகாரி முன்னர் ஆஜராய் விடுக "
என்ற வாசகமே எழுதியிருந்தது.
அந்த மட்டேனும் வந்ததைப் பற்றி
சங்கரலிங்கன் சந்தோஷித்தான்.
அன்னையும் பிதாவும் அவனுடை மனைவியும்
ராணுவத் தொழிலை ராஜினாமாவே
செய்து விடும்படி சேர்ந்து கூறினர்.
அவர்களை மறுக்க அஞ்சினன் எனினும்
அந்தரங்கத்தில் சங்கரன் ஆசை
பட்டாளத்தினைப் பற்றியே நின்றது.
வேலையை விட்டு விலக எண்ணுமல்
திரும்பவும் போகவே விரும்பினதுண்மை.
விருப்பம் அதனை வெளியிடப் பயந்து
வேலையை விட்டு விலகுவான் என்றே

நம்பும்படிக்கே நடந்து கொண்டு
இரண்டு மாதம் இனிது கழிந்த பின்
சங்கரன் விரும்பும் சங்கதியாக
" ரஜாவில் சென்றுள ராணுவக்காரர்
அனைவரும் உடனே அகத்தியமாகப்
பதில் எழுதாமல் பதினைந்து நாளில்
சேனையில் வந்து சேர்ந்திட வேண்டும்
இல்லாவிட்டால் எவராலுலும்
பிடி வாரண்டுகள் பிறப்பிக்கப்படும்
ராணுவ விசாரணை நடத்தித் தகுந்த
தண்டனை தருவதும் தப்பாது " என்று
ரங்கூன் பகுதி ராணுவத் தலைவர்
அவசரக் கடிதம் அவனுக்கு வந்தது.
அருகே இருந்து அதனைப் படித்த
மங்களம் உடனே மனமுடைந்தவளாய்
கண்கள் இருண்டு கைகால் நடுங்கத்
துன்பம் வந்து தொண்டை யடைக்கப்
பேச்சு வராமல் மூச்சு விரைந்து
குமுறிக் கொண்டே குளறிக் குளறி
' எப்படிச் சகிப்பேன் இதைநான் ' என்று
முணகிக் கொண்டே முன்னலிருந்த
கட்டிலிற் சாய்ந்து கவிழ்ந்து கொண்டாள்.
அதனைப் பார்த்து மிகவும் அலண்ட
சங்கரன் அவளைச் சாந்தப் படுத்தி
" மயங்க வேண்டாம் மங்களம்! நான்போய்
அளவின்றி என்னிடம் அன்புள்ள நண்பர்
அங்குள்ள டாக்டர் அவரிடம் சொல்லி
உடல்நலம் எனக்கு திடமற்று விட்டதால்
பட்டாள வேலைக்குப் பயனற்ற தென்றெரு
' சர்ட்டிபி கேட்டு'டன் சலுகை கேட்டால்

உடனே விடுதலை உத்தர வாகும்
அவர்களே என்னை அனுப்பிடுவார்கள்
கண்ணே! மங்களம்! கலங்கிட வேண்டாம்.
விசனப்படாமல் விடைகொடுத்தனுப்பு
விரைவில் திரும்பி வந்து விடுகிறேன்.
பின்பு நான் உன்னைப் பிரியவே மாட்டேன் "
என்றுன் மங்களம் மெதுவாய் எழுந்து...
புன்சிரிப் போடும் புருஷனைப் பார்த்து
" நிச்சயமாகவே நீங்கள் அப்படிச்
செய்தாக வேண்டும் செய்யா விட்டால்
மாமியும் நானும் மாமா கூடத்
துடியாய்த் துடித்துத் துயரப்படுவோம்
மற்றவர்களைவிட மாமியவர்களைத்
தவிக்க விடுவது தருமமா ?" என்றுள்.
அப்படித் தன்னுடை அன்னையிடத்தில்
பாசம் கொண்டுள பரிவைப் புகழ்ந்து
மனைவியைச் சங்கரன் மார்போட ணைத்து
பயப்பட வேண்டாம் பட்டாளத்தினை
விட்டொழித்திட்டே விரைவில் வருவேன்.
நீயும் சேர்ந்து நிலைமையை விளக்கி
அன்னையும் பிதாவும் என்னைப் போய்வர
அனுமதி தந்திட ஆவன சொல்லுக "
என்றுன் சங்கரன் ஏக்கம் குறைந்து
நாயகன் சொன்னதை நம்பிய மங்களம்
ஒத்துப் பேசிட ஒப்புக் கொண்டாள்.
இருவரும் சென்று இனியன வாகிய
வேறுள பற்பல விஷயம் பேசின
இடையே மெதுவாய் இதனை நுழைத்து
அன்னபூரணியார் அறியச் செய்தனர்.
கேட்டதும் தாயார் வாட்டங் கொண்டாள்.

அன்னைக்குச் சங்கரன் ஆறுதல் சொல்லி
பட்டாள வேலையை விட்டிடப் போவதாய்
நெடுநேரம்வரை நியாயம் சொன்னபின்
கோபாலகிருஷ்ணரைக் கூப்பிடச் செய்து
கடிதம் வந்ததை அவரிடம் காட்டப்
பார்த்த உடனே பதை பதைத் திட்டார்.
நிற்கவும் கூட நிலை கொள்ளாமல்
அருகே அங்கொரு ஆசனத்தமர்ந்து
குனிந்த தலையுடன் நினைந்து நினைந்து
சங்கரலிங்கன் ரங்கூனுக்குப்
போகாதிருக்கப் பொருத்தமாகிய
தந்திரம் நாடித் தலையை நிமிர்த்து
மகனைப் பார்த்து மருண்ட குரலில்
" உடனே புறப்பட உடல்நல மில்லை
என்கிற காரணம் எடுத்துக் காட்டி
இங்குள டாக்டர் எவரிட மேனும்
அத்தாட்சி வாங்கி அனுப்பிடலாம் " எனத்
தந்தை சொல்லிட மைந்தன் அதற்கு,
" பட்டாளத்தின் சட்டப்படிக்கு
அப்படிச் செய்வதில் தப்பிதம் வரலாம்
தப்பிதம் வராமல் ஒப்புவர் எனினும்
அதிகம் 'சிக்லீவ்' அதனுற் பெறலாம்.
வேலையிலிருந்து விடுதலை பெற்றிட
அப்படிச் செய்வதில் அனுகூல மில்லை.
நானே போஞல் என்னுடை நண்பர்
ரங்கூன் சேனையின் ராணுவ டாக்டர்
அவரிடம் சொல்லி ஆவன செய்தால்
அவர்களே என்னை அனுப்பிடுவார்கள்.
விடுதலை பெற்றுநான் வீட்டோடிருக்க
இதுதான் மிகவும் ஏற்ற உபாயம் "

என்ருன் ; தந்தையும் ஏற்றுக் கொண்டார்.
அதன்மேல் அவரும் அன்னபூரணியும்
பெற்ற மனத்தின் பாசப் பித்தெனும்
வேதனையோடும் விடை கொடுத்தார்கள்.

இரண்டாவது உலகப் போர்

பர்மாவுக்குப் பயணத்தோடு
சென்னைக்கு வந்து சேரும் வரையில்
பட்டாள வேலையை விட்டே விட்டிட
சங்கரலிங்கன் சற்றும் எண்ணிலன்.
தாய் தந்தையரும் தனதருங் காதலி
மங்களாம்பாளும் மனங்கலங்காமல்
அனுப்பி வைப்பர் என்கிற ஆசையே
பட்டாளத்தினை விட்டு வந்திடுவதாய்ச்
சொல்லும்படிக்குத் தூண்டிய துண்மை.
அந்த நினைப்புடன் சென்னை யடைந்தவன்
சென்னையைவிட்டு ரங்கூன் செல்லும்
கப்பலில் ஏறிக் கடலைக் கடக்கும்
முதல்நாள் இரவே முற்றிலும் சங்கரன்
மனோதிடத்தை மாற்றி விட்டது.
முன்னே சங்கரன் சென்னைக்கு வந்து
சேனையில் சேர்ந்து ரங்கூன் செல்கையில்
இருந்த நிம்மதி இப்பொழு தில்லை.
அந்தப் பயணம் அப்பாவின் மேல்
மகனுக்கிருந்த மனத்தாபத்தால்.
மங்களாம்பாளை மணக்கத் தடையாய்
வேறொரு பெண்ணை விவாகம் பேசி
தந்தை மிகவும் தவறுய்ச் செய்த
முயற்சி யதனை முறியடித்திடவே.
முன்னே போனது முற்றிலும் தனக்கு
இன்பம் வருவதை எதிர்நோக்கிய செயல்.
இப்போது போதல் இன்பம் வந்ததை

விட்டுப் பிரிகிற விசனமே மிக்கது.
மதுவெறி போன்ற புதுமண நினைவால்
சங்கரலிங்கன் மங்களாம்பாளின்
பிரிவாற்றுமைப் பித்து மேலிட்டுப்
புயலிற் சிக்கிய கட்டுமரம் போல்
சித்தம் குழம்பித் தத்தளித் திட்டான்.
கப்பல் ரங்கூன் கரைசேரு முன்னுல்
சங்கரன் தனக்குள் சங்கற்பம் செய்து,
விடைபெற வென்றே வீட்டிலுள்ளவர்
கண்ணைத் துடைக்கக் கற்பனை செய்த
பொய்க் காரணமே மெய்க்காரணம்போல்
உடல் நலம் சிறிதும் திடமிலை யென்று
டாக்டரிடத்தில் சலுகை வாங்கி
விடுதலை பெற்று வீட்டுக்கே இனித்
திரும்பிச் சென்றிடத் தீர்மானித்தான்.
ரங்கூன் வந்ததும் ராணுவ முகாமில்
முறைப்படி சங்கரன் முன்னே பார்த்த
உத்தியோகத்தை ஒப்புக் கொண்டு
உடனே தன்னிடம் உள்ளன்பு மிக்க
அருமை நண்பன் ஜெயபால் அவனிடம்
வேலையை விட்டு விலகிடத் தனக்கு
விருப்பம் உள்ளதை விளக்கிச் சொல்லி
டாக்டரிடத்தில் சலுகை கிடைக்கச்
செய்யும் படிக்கு ஜெயபாலிடத்தில்
கெஞ்சும் குரலில் கேட்டுக் கொண்டான்.
அதனைக் கேட்ட அன்பன் ஜெயபால்
" நமக்கு மிகவும் நண்பராயிருந்த
டேவிட் டாக்டர் டில்லிக்குப் போய்
ஐந்தாறு நாட்கள் ஆகிவிட்டனவே !
பதிலாய் வந்தவர் பழக்க மில்லையே !

அன்றியும் ஒன்றுநாம் ஆராய வேண்டும்.
ராஜாவில் சென்றுள ராணுவக்காரர்
அனைவரும் உடனே ஆஜராகும்படி
கட்டளை யிட்டதன் காரணம் யாதெனில்
சண்டை வருமெனும் சந்தேகந்தான்.
அப்படி யிருக்கும் இப்பொழுதுனக்கு
விடுதலை கிடைப்பது விளையாட்டல்ல.
எனினும் முயன்று பார்ப்போம்" என்றான்.

பத்துநாள் சென்று டாக்டரைப் பார்த்து
உடல் நலக் குறைவால் உத்தியோகத்தை
விட்டுப் போய்விட விருப்பம் என்பதைச்
சொன்னான் சங்கரன்; சொன்னதை யெல்லாம்
பொறுமையிற் கேட்டப் புதிய டாக்டரும்
சங்கரலிங்கன் அங்கம் முழுவதும்
பலவிதமாகப் பரிசோதித்தபின் ...
"உறுப்புகள் கோளாறு ஒன்றும் காணேம்
மனந்தான் கோளாறு என்று மதிக்கிறேன்.
எனினும் உங்களை இன்னும் பத்துநாள்
பார்வையில் வைத்துப் பரிசோதித்தபின்
ஆலோசிப்போம்; ஆயினும் உமக்கு
வேலையிலிருந்து விடுதலை தருவது
இப்போது உடனே இயலாத காரியம்.
யுத்தம் வருமென யூகிப்பதனால்
பட்டாளங்களைப் பலப்படுத்தும்படி
அரசாங்கத்தின் ரகசிய ஆணை.
வருமா யுத்தம் வராதா என்பது
அதிகம் சொன்னால் அறுபது நாளில்
தீர்மானமாகத் தெரிந்து போகும்.
அதுவரை நீங்கள் அவசரப்படாமல்

பொறுத்திருங்கள். போர்வரு மென்பது
நிச்சயமாகவே நீங்கிப் போனால்
வேலையை விட்டு விலகுதல் சுலபம்.
போரே வரினும் போர்முனை செல்லும்
வேலையல்லாமல் பின்னணி வேலையே
உமக்குத் தரும்படி உத்தரவாகத்
தக்கன செய்வேன் தயங்க வேண்டாம்.
உங்கள் உடலில் ஒருநோயும் இல்லை
மனந்தான் ஏனோ மருண்டிருப்பதால்
தைரியம் மிகவும் தளர்ந்து விட்டது.
கவலைப் படாமல் களிப்போடிருங்கள்"
என்றார் டாக்டர் ஏமாந்த சங்கரன்
விசனத்தைவிட வெட்கம் மிகுந்து
வைத்தியரவர்க்கு வந்தனம் சொல்லி
அயலே இருந்த ஜெயபாலோடும்
விரைந்து தன்னுடை விடுதியடைந்தான்.
... ...
'மனந்தான் ஏனோ மருண்டிருப்பதால்
தைரியம் மிகவும் தளர்ந்து விட்டது'
என்பதை டாக்டர் இனிய சொற்களில்
சொன்னது அவனைச் சுறுக்கெனக் குத்தித்
தன்னைச் சிறிதும் தைரிய மில்லாக்
கோழைய னென்று குறித்தது போலச்
சங்கோஜமுற்ற சங்கரலிங்கன்
தனக்குத்தானே தைரியம் சொல்லி
அத்துடன் முன்னே அங்கே பழகிய
நண்பர்கள் அடிக்கடி அவனிடம் நாடிட
அன்பர்கள் செய்யும் தெம்புகள் சேர்ந்து
கொஞ்சங் கொஞ்சமாய் ஏக்கம் குறைந்து
எப்போதும் அவன் இயல்பில் இருந்த

‘ வீரம், வெற்றி, தீரம் என்றும்
ஆண்மை, அறிவு, ஆற்றல் என்றும்
ஆணெனப் பிறந்த அத்தனை பேரும்
ராணுவப் பயிற்சி பேணுதல் கடமை
ஆயுதப் பயிற்சியும் மிகவும் அவசியம் ”
என்கிற முறையில் எண்ணத் தொடங்கி
யுத்தம் வரினும் சித்தம் கலங்கக்
கூடாதென்னும் தைரியம் கூடி
மனதைக் கலக்கும் மனைவியின் காதல்
அதனுடன் உதிக்கும் அன்னையின் அன்பு
பின்னல் தொடரும் பிதாவின் பிரியம்
என்பனவற்றின் ஏக்கங்களையும்
சகித்துக் கொண்டான் சங்கரலிங்கம்.

‘ வருமா சண்டை வராதா,’ என்பது
அதிகம் சொன்னல் அறுபது நாளில்
தீர்மானமாகத் தெரிந்து விடுமெனச்
சந்தேகித்த ஜர்மனிச் சண்டை
நாற்பது நாளில் நடக்கலுற்றது.
மூன்று லோகங்களை முழுவதும் ஆண்டு
அண்டங்களையும் அடக்கிட எண்ணித்
தானே கடவுள் தனக்கும் மேலே
ஏதொரு பொருளும் இல்லையென்றுரைத்து,
தன்னுடை பெயரே தாரகமாக
ஜகத்துள யாவரும் ஜபிக்கச் செய்வது
கட்டாய மாக்கிக் கடுங்கோல் நடத்திய
ஹிரணியன் போன்ற ஹிட்லர் என்னும்
வர்மம் மிகுந்த ஜெர்மன் தலைவன்
ஆங்கில நாட்டை அழித்திட வென்றே
ஆயுத பலங்களை அதிகப் படுத்தி

மூர்க்கன் இதாலி முஸோலினி யோடும்
டோக்கியோ ஜப்பான் டோஜோ வோடும்
ரகசியமாகிய ராணுவ நட்புடன்
பெல்ஜியம் நாட்டைப் பேய்வேகத்தில்
பாய்ந்து தாக்கிப் பற்றிக் கொண்டான்.
அதனை எதிர்த்து ஆங்கில நாடும்
பிரெஞ்சு தேசமும் பெல்ஜியத்துக்குத்
துணைதர முயலத், துரிதமாய்ப் பாய்ந்தன.
பிரான்சையும் ஹிட்லர் பிடித்துக் கொண்டு
இங்கிலாந்துக்கு எதிர் கரையாகிய
‘ கலேய் ’ நகரில் கால் வைத்தான்றி
குண்டுகள் வீசி லண்டன் மாநகர்
அதனை முழுதும் அழிக்க முயன்றான்.
ஆற்றல் மிகுந்த ஆங்கில மக்கள்
சகல துன்பங்களும் சகித்துக் கொண்டு
கடும்போர் புரிந்து லண்டனைக் காத்தனர்.
ஆங்கில நாட்டின் அவதியைக் கண்டு
அதனிடம் ருஷ்யா அனுதாபித்ததால்
வெற்றியில் வந்துள வெறிமிகுந்தவனுய்
ஹிட்லர் மிகவும் துட்டத்தனமாய்
ருஷியா மீதும் ரோஷம் கொண்ட
பதட்டம் அதன்மேல் படையெடுத்திட்டான்.

எதிர்பாராத இன்பம்

ஐரோப்பாவில் அப்படி யிருக்க
இங்கிலாந்துக்கு அபாயம் என்றதால்
இந்திய நாட்டில் இருந்தன வாகிய
இங்கிலீஷ் படையும் இந்தியர் படையும்
ஐரோப்பாவுக் கனுப்ப நேர்ந்தது.
அதனல் புதுப்புது ஆட்களைச் சேர்த்து
ஏராளமாகிய இந்தியர்களுக்குப்
பயிற்சி கொடுத்துப் பட்டாளங்களை
அதிகப்படுத்தும் அவசியம் வந்தது.
சண்டை தொடங்கிச் சரியாகப் பத்து
மாதம் முடிகிற வரைக்கும் சங்கரன்
பர்மாவிலேயே பற்பல இடங்களில்
சேனையில் புதிதாய்ச் சேர்ந்தவருக்குப்
பயிற்சி கொடுக்கும் வேலை பார்த்தான்.
அதன்பின் அவனை அதே வேலையைச்
சென்னையில் தங்கிச் செய்யும் படிக்கு
உத்தரவானது: உடனே சங்கரன்
சென்னைக்கு வந்து சேர்ந்து விட்டான்.
அக்கரை விடுத்து இக்கரை சேர்ந்து
சொந்தவூர் இருக்கும் இந்தியா மண்ணில்
சென்னைக்கு வந்து சேர்ந்ததும் உடனே
அதுநாள் வரையில் அடங்கிக் கிடந்த
பாசம் கிளம்பிப் பலமுடன் தாக்க
மங்களாம்பாளை மாதா பிதாவைப்
பார்க்கத் துடித்து வெகுபாடுபட்டான்.
'வருகிறேன் சீக்கிரம் வருகிறேன்' என்று

அடிக்கடி பலவித ஆறுதல் காட்டித்
தானே எழுதிய தபால்க ளெல்லாம்
பொய்கள் என்பதில் பொறுமை யிழந்து
கடிப்புக் காட்டிக் காதலி மங்களம்
எழுதியிருந்தது இடித்தது அவனை.
சென்னையிற் பயிலும் சேனையின் தளபதி
பர்மாவிலேயே பழக்க மானவர்.
சங்கரன் திறமையில் சந்தோஷ மிக்கவர்.
அவரால் கிடைத்த அபாரத் தயவால்
மாதா பிதாவை மனைவியைப் பார்க்கப்
பத்துநாள் லீவில் பறந்து சென்றான்.
அவனைக் கண்டதும் அன்னையும் பிதாவும்
மங்களாம்பாளும் அடைந்த மகிழ்ச்சி
சொல்லால் விளக்க ஒல்லா தெனினும்
உவமானத்தால் ஒருவாறு முடியும்.
மகனைக் கண்டதும் மாதா பிதாக்கள்
உயிர் வந்தடைந்த உடலே போன்றார்.
கணவனைக் கண்டதும் காதலி மங்களம்
உடலைக்கூடிய உயிரே போன்றாள்.
பத்துள நாட்களும் பத்தே நொடிபோல்
பறந்து விட்டபின் பழைய படிக்கே
விடைபெறும்போது விசனம் வந்தது.
சண்டை நடப்பதால் சங்கரனுக்கு
அபாயம் வருமென அச்சங் காட்டிய
மாதா பிதாவுடன் மங்களாம்பாளின்
கவலையை நீக்கக் காரணம் காட்டப்
பொய்யும் மெய்யும் புனைந்து கூறிச்
சேனையிற் புதிதாய்ச் சேருகின்றவர்க்குப்
பயிற்சி தருகிற பணியே யல்லால்
போர்முனை அதற்குப் போகிற வேலை

தனக்கீலை யென்றும் தன்னிருப்பிடமும்
சென்னை யிலன்றிப் பின்னிலை யென்றும்...
அடிக்கடி வந்து அவர்களைப் பார்க்க
அனுமதி எளிதில் அடையலா மென்றும்...
சண்டையும் முடிகிற தருணம் ஆனதால்
விரைவில் கிடைக்கும் விடுதலை என்றும்...
உறுதிகள் சொல்லி, ஒரு மாதத்தில்
நீண்ட ரஜாவில் மீண்டும் வருவதாய்,
ஆறுதல் சொல்லித் தேறுதல் செய்து
விடைதரப் பெற்று விரைந்து மீண்டும்
சென்னைக்குப் போய் வேலையிற் சேர்ந்தான்.

———

பர்மாவில் நேதாஜி

மனிதப் பிறவியின் சிறப்பை மறந்து
வன மிருகங்கள் வாழ்வதுபோல
ஒருவர் உரிமையை ஒருவர் பறிக்கவே
ஆயுத பலத்தால் அழிவுகள் செய்து
மனிதனை மனிதன் மாய்த்துக் கொள்ளும்
அந்தச் சண்டை அப்படி நடக்கிற
அதே சமயம் இதே உலகில்
மிருகங்களைவிட மிகமிகச் சிறந்த
மனிதனுக்குள்ளே மறைந்து நிற்கும்
தெய்வத் தனத்தைத் தெரியச் செய்கிற
ஆன்ம பலத்தின் அற்புதப் பெருமை
இதுவெனக் காட்டி இம்சை யெண்ணமல்
அடிமைத் தனத்தை அகற்றிட மட்டும்
தன்னுயிர் கெடினும் தான்பிற உயிரைக்
கொல்லா விரதமே கொள்கையாக் கொண்டு,
சொந்தமில் லாமல் இந்திய நாட்டை
அடிமைப் படுத்தி ஆட்சி நடத்திய
ஆங்கிலருக்கும் தீங்கு செய்யாமல்
அன்பே தன்னுடை ஆயுதமாகச்
சத்தியமேதன் மெய்த்துணையாகச்
சன்மார்க்கத் தொரு சாத்விகப் போரை,
இமயம் போன்றுள இங்கிலீஷ் ஆட்சியும்
திக்குமுக் காடித் திணறி விடும்படி
கண்கண்ட தெய்வம் காந்தி மகாத்மா
நானிலம் வியக்க நடத்தி வந்தார்.
அந்தப் போரில் ஆதியிலிருந்து
நம்பிக்கை யில்லாத நல்லோர் சிலருள்

வங்காளத்தின் சிங்கமெனத் துகும்
சுபாஷ் சந்திர சூரரும் ஒருவர்.
உயர்குடிப் பிறப்பும் ஒழுக்கச் சிறப்பும்
ஆழ்ந்த கல்வியும் அரசியல் ஞானமும்
தீவிரம் மிகுந்த தேசபக்தியால்
அன்னியர் ஆட்சியை அகற்றிட வேண்டிப்
பஞ்ச தந்திரங்களின் பற்றும் உள்ளவர்.
அப்படிப் பட்டவர் அந்த சுபாஷ் போஸ்
வெள்ளைக்காரனை வெளியே விரட்ட
ஸாத்விகப் போர்முறை சரியானதல்ல;
உத்தமோத்தமனும் உயர்ந்த ஆத்மா
அண்ணல் காந்தியின் எண்ணம் நல்லதே.
எனினும் அவர்வழி இந்திய மக்களைக்
கோழைகளாக்கவே கூடியதல்லால்
வெள்ளைக்காரனை வெளியேற்றாது.
சத்திய சாந்த சன்மார்க்க மெல்லாம்
நமக்குள் இருப்பது மிகவும் நல்லதே.
ஆனால் நம்மை அடிமைகளாக்கி
ஆயுத பலத்தால் அடக்கி யாளும்
அன்னியப் பிடிகளை அறுத்துக் கொள்ளக்
கொல்லவும் சாகவும் கூச்சப் படாத
ஆயுதச் சண்டையே அதற்கு வேண்டும்'
என்பதே தன்னுடை நம்பிக்கை யென்று
மகாத்மாவுடன் மாறுபட்டவராய்
சலிப்புடன் விலகிய சுபாஷ் சந்திரர்
முற்றிலும் வேறொரு முறையில் எவர்க்கும்
தெரியாதபடிக்கொரு திட்டம் போட்டுச்
சண்டை நடக்கிற சமயம் பார்த்து
மாயமாய் எங்கோ மறைந்து விட்டார்.
எங்கே போனார் எப்படிப் போனார்

என்பதைப் பற்றியே எவரும் அறியார்.
இந்திய மக்களும் இங்கிலீஷ் அரசும்
ஆராய்ந்து ஏங்கி அதிசய முற்றனர்.
... ...
ஐரோப்பாவில் அப்படி யாகிய
சண்டை நடக்கச் சண்டையிற் கூட்டாய்
ஜர்மனி கட்சியில் சேர்ந்துள ஜப்பான்
ஆசியப் பகுதியில் ஆங்கிலேயரின்
ஆட்சியில் இருந்த அநேக நாட்டைத்
தன்வசப் படுத்தத் தாக்கலுற்றது.
அப்படித் தாக்கிய அந்த முயற்சியில்
சிறுகச் சிறுகச் சீனக்கடலின்
பற்பல பகுதியில் கப்பற் படைகள்
தங்கி யிருக்கத் தளங்கள் செய்து
திடீர் தாக்குதல் திறமுடன் நடத்தி
மலாய் நாட்டின் மாபெருந் துறைமுகம்
சிங்காரம் மிகுந்த சிங்கப்பூரை
படுவேகத்தில் பற்றிக் கொண்டது.
சடுதியில் அந்தச் சப்பான் படைக்கு
மலாயா முழுதும் வசமாகிவிட்டது.
பற்பல முனைகளில் படைகளை இறக்கி
பர்மா மீதிலும் படையெடுத்தார்கள்.
இந்திய நாட்டின் வடகிழக் கெல்லை
அஸ்ஸாம் மணிபுரி அருகிலும் கூட
சென்றது ஜப்பான் சேனையின் போர்முனை.
... ...
சிங்கப்பூரைப் பிடித்த சேனைகள்
பர்மா மீதிலும் பாய்ந்திடும் என்று
சந்தேகித்ததும் ஆங்கில சர்க்கார்
சென்னையில் இருந்த இந்தியச் சேனை

அனைத்தையும் மிகவும் அவசரமாகப்
பர்மாவுக்குப் பயணப் படுத்தி
ரங்கூன் வந்து தங்கச் செய்தனர்.
சென்னையிற் பயின்ற சேனைகளோடு
சங்கர லிங்கனும் ரங்கூன் சேர்ந்தான்.
பர்மா நாட்டில் வசித்துப் பழகிய
சங்கரலிங்கன் சகாக்களாகிய
ஜெயபால் முதலிய சிறந்த நண்பர்கள்
பலரும் மீண்டும் பர்மாவிற்கே
வந்து சேர்ந்தனர்; வந்ததும் அவர்க்கு
அங்கே யிருந்த ஓர் ஆங்கில தளபதி
ஜப்பானியர்களை அப்பால் நிறுத்திப்
பர்மா நாட்டின் பாதுகாப்பிற்கு
வேண்டிய செயலை விளக்கிச் சொல்லி,
பர்மா தெற்குப் பகுதியில் உள்ள
எல்லை அரண்களுக் கேவப் பட்டனர்.
சங்கரனும் தன் சைனியத் தோடு
தென்கிழக் கெல்லை முகாமைச் சேர்ந்தான்.
... ...
ஜரூர் தாக்கினால் ஜப்பான் படைகள்
சிங்கப்பூரைப் பிடித்த சேதிகள்
இந்திய நாட்டை எட்டின போதே
வியப்புண் டாக்கிய வேறொரு சேதியும்
வந்தது கேட்டதும் இந்திய மக்கள்
மட்டில் லாததோர் மகிழ்ச்சி யுற்றனர்.
இளைஞரின் உள்ளம் துள்ளி யெழுந்தது.
முதியவர் அளவிலா அதிசய முற்றனர்.
அன்னிய ஆட்சியும் அதிர்ச்சி கொண்டது.
அப்படிக் கேட்ட அதிசயம் எதுவெனில்:
கண் கொட்டாமல் காவலில் இருந்து

எவரும் காணு எந்த விதத்திலோ
மாயமாய் எங்கோ மறைந்து போனவர்
சுபாஷ் சந்திரச் சுதந்தர வீரன்
மர்ம விதத்தினில் ஜெர்மனி சேர்ந்து
ஹிட்லரும் தானும் இஷ்டர்களாகி ...
ஜர்மனி உதவியால் ஜப்பான் சென்று
அங்கே யிருந்து அவர்கள் பிடித்த
சிங்கப்பூரில் தங்கியிருந்து அம்
மலாயா நாட்டை மருவி வசிக்கும்
இந்தியருக்கொரு தொந்தரவின்றி ...
ஜப்பான் படைகள் ஒப்பாய் நடக்கத்
திட்டப் படுத்தித் தேயிலை, ரப்பர்
தோட்டங்களிலே தொழில்கள் செய்தும்
பட்டணங்களிலே வர்த்தகம் பண்ணியும்
அநேக நாளாய் அங்கே வசிக்கும்
தமிழருக் கெல்லாம் தைரியம் தந்து ...
மலாயா நாட்டில் செல்வம் மலிந்த
நாட்டுக் கோட்டை நகரத் தாரெனும்
செட்டிமார் தங்களை ஒருங்கு சேர்த்து ...
அவர்கள் கட்டின ஆலயம் ஒன்றில்
கூட்டம் கூட்டிக் கொள்கை விளக்கி
இந்தியத் தாயின் நிந்தனை நீங்கி
விடுதலை அடைந்திட வெகுநல்ல தருணம்
அதுதான் என்பதை அழுத்திப் பேசி ...
ஆங்கில ஆட்சியை அடித்து விரட்டிட
தேசீய சேனை திரட்டிட வேண்டி
உதவிகள் கோரிட உடனே செட்டிமார்
லட்சக் கணக்கில் தட்சிணை தந்தனர்.
அப்படிச் செல்வம் திரட்டி அங்குள
இந்திய இளைஞரை எட்டிய மட்டும்

சேர்த்து ஒருபெரும் சேனையுண்டாக்கி
'இந்திய தேசீய சேனை' என்கிற
நாமம் சூட்டி நன்முரண் பழக்கி
'ஜெய் ஹிந்த்' என்னும் ஜெய கோஷத்துடன்
தானே அதற்குத் தளபதியாகி,
'நேதாஜி' எனும் நீடிய புகழுடன்
ஜப்பானியருடன் ஒப்பக் கூடியே
பர்மாவின் மேல் படையெடுத்துள்ளான்.
இந்திய விடுதலை வந்திடும் விரைவில்'
என்கிற சேதியே எட்டின அதிசயம்.
... ...
இந்திய தேசம் இங்கிலீஷ்காரரின்
ஆட்சியிலிருந்து மீட்சி பெறுவது
காந்தி மகாத்மா கற்பிக்கிறபடி
சாத்விக முறையில் சாயாதென்று
சுபாஷ் சந்திரர் சொல்வது போன்றே
சொல்லி அடிக்கடி சுபாஷ் போசை
விரும்பத் தகுந்த வீராதி வீரனுய்
மிகவும் மதித்து மெச்சிப் பேசும்
சங்கரன் அந்தச் சங்கதி கேட்டு
அடக்கவே முடியாத ஆர்வங்கொண்டு
எப்படியாவது இங்கிலீஷ்காரரை
இந்திய நாட்டின் எல்லையை விட்டுத்
துரத்திட மிகவும் துரிதப் படுத்திய
தீவிரம் மிகுந்த தேச பக்தியால்
மற்றுள நீதிகள் யாவையும் மறந்து
ஜப்பானியர்களை அப்பால் நிறுத்தப்
பர்மா தெற்குப் பகுதியில் இருந்த
சங்கரலிங்கன் சமயம் பார்த்து
நேதாஜிக் கொரு நிருபம் அனுப்பித்
தேசீய சேனையில் சேர்ந்து கொண்டான்.

சங்கரனுக்கு நேர்ந்த கதி!

பர்மா நாட்டின் பற்பல முனையில்
இங்கிலீஷ் படைகளை எதிர்த்து மடக்கிச்
சங்கரன் காட்டிய சாமர்த்தியத்தை
சுபாஷ் சந்திரர் சபாஷ் சொல்லி
மெச்சிப் புகழ்ந்து மேன்மைப் படுத்தி
நம்பத் தகுந்தொரு நண்பனுக் கொண்டு
தம்முடை சேனைத் தலைவருள் ஒருவனுய்
அதிகாரங்களை அவனிடம் தந்தார்.
... ...
இங்கே சங்கதி இப்படி யிருக்கச்
சிங்கப்பூரை ஜெயித்த ஜப்பான்
தன்னுடை சக்தியின் தகுதிக்கு மீறிப்
பசிபிக் சமுத்திரப் பகுதியிலுள்ள
அமெரிக்காவின் ஆதீனமாகிய
'பெர்ல்' துறைமுகம் 'பிலிபைன்' தீவுகள்
முதலிய இடங்களை முட்டாள்தனமாய்த்
தாக்கிப் பிடித்த அத் தன்மையினலே
ஆற்றல் மிகுந்துள அமெரிக்காவின்
கோபத்துக்கும் குறியாகிவிட்டது.
கடற்படை பலமும் கணக்கிலடங்கா
ஆகாய விமான ஆற்றலும் உடைய
அமெரிக்க சேனை அதி சீக்கிரத்தில்
ஜப்பான் பிடித்த சகல இடத்தையும்
மிகவும் எளிதில் மீட்டுக் கொண்டபின்
அப்பாலிருந்த ஜப்பான்! மீதும்
படையெடுத்துப்போய் பயங்கர மாகிய

அணுகுண்டுகளை அதன்மேல் வீசி
ஹிரோஷிமா, நாக சாக்கி என்னும்
நகரம் இரண்டையும் நாசப்படுத்தி
கொள்ளை கொள்ளை மக்களைக் கொன்று
பல லக்ஷம்பேர் படுகாய முற்றுக்
கை போனவரும் கால் போனவரும்
மூக்கும் காதும் மூளியானவரும்
குருடானவரும் கூனனவரும்
ஆகும்படிப் பல அழிவுகள் செய்திடக்
கண்ட ஜப்பானியர் கதிகலங்கிப் போய்
சண்டையை விட்டுச் சரணடைந்தார்கள்.
அத்துடன் ஜப்பான் ஆற்றல் ஒடுங்கிடப்
பர்மாமுனையும் படுத்து விட்டது.
அதற்கும் முன்னால் ஆகாய விமானம்
கெட்டு விழுந்து பட்ட நெருப்பினால்
வியக்கத் தகுந்த வீராதி வீரன்
நேத்தாஜி போசும் உயிரை நீத்தார்.
தலைவனில்லாமல் தைரியம் இழந்து
தேசிய சேனை திண்டாடலுற்றது.
அமெரிக்காவின் ஆதரம் மிகுந்த
ஆங்கிலப் படைகளின் ஆற்றல் சிறந்து
சிங்கப்பூரை ஜெயித்து மீட்டன.
மலாயா நாட்டின் வடபாகத்திலும்
பர்மா நாட்டின் பற்பல விடத்தும்
நேசப் படைகள் நெருங்கி நெருங்கி
சுபாஷ் சேனையைச் சூழ்ந்து கொண்டன.
சங்கரன் முதலியோர் சரணடைந்தார்கள்.
அதே மாதிரி ஐரோப்பாவிலும்
ஜெர்மனி திட்டம் ஜெயிக்கவில்லை.
ஆரம்பத்திலே அடிபட்ட ருஷியா

சிறுகச் சிறுகத் திருப்பி யடித்து
ஜெர்மனிக்குள்ளே சேனை நடத்தி
தலைநகர் பெர்லினைத் தாக்கலுற்றது.
கெலித்த ருஷியர் கிழக்கில் நெருக்க
ஆங்கில, பிரெஞ்சு, அமெரிக்க சேனைகள்
மேற்குப் புறத்தில் மிடுக்குடன் தாக்கிப்
பெர்லின் நகரைப் பிடித்து விட்டனர்.
ஐரோப்பாவை அலங்கோலமாக்கி
உலகப் போரை உண்டாக்கி வைத்துக்
கோடிக் கணக்கில் மக்களைக் கொல்லக்
காரணன் ஆகிய கயவருட் கயவன்
ஹிட்லரைப் பிடித்துச் சிறையில் இருத்திப்
பழிவாங்க எண்ணிப் பதைபதைப் புடனே
பெர்லின் நகரைப் பிடித்த சேனைகள்
ஹிட்லர் வசித்த இருப்பிடம் முழுதும்
தீவிரமாகத் தேடிப் பார்த்தனர்.
ஹிட்லரோ எங்குமே இல்லாது போனான்.
எங்கே போனான் எப்படி யானான்
என்பதைப் பற்றின இன்றைய வரையில்
உண்மை யறிந்தவர் ஒருவரும் இல்லை.
பகைவர் வசத்தில் பட்டுக் கொண்டு
உயிர் சுமந்திருக்க ஒப்பாத ஹிட்லர்
மானம் பெரிதெனும் மறத்துணிவோடும்
எவரும் அறியா எந்தவிதத்திலோ
தன்னைத்தானே தகித்துக் கொண்டு
சாம்பலைக் கூடச் சத்துரு யாரும்
காணக்கூடாது என்னும் கருத்துடன்
மாயாவியாக மறைந்தா னென்று
பின்னால் பலபேர் சொன்னார் : அதுவும்
அனுமானந்தான் அறிந்தாரில்லை.

அப்படி முடிந்தது ஐரோப்பியப் போர்.

... ...

பர்மா நாட்டில் ஜப்பான் பக்கம்
சேர்ந்து கொண்டதில் செய்துள சதிக்குச்
சங்கரலிங்கனும் அவனுடன் சார்ந்த
பதினேரு பேரும் பட்டாள முறையில்
இங்கிலீஷ்காரர் எழுவர் அடங்கிய
' கோர்ட் மார்ஷல் ' குற்ற விசாரணை
நடத்தப்பட்டபின் கொடுத்த தீர்ப்பில்
சங்கரலிங்கனும் சகாக்களாகிய
பதினேரு பேரும் சதிகாரர் என்பது
நிரூபணத்தால் நிச்சயமானதாய்ச்
சுட்டுக் கொன்றிடக் கட்டளை யிட்டனர்.
அதன்மேல் அவர்கள் 'அப்பீல்' செய்யத்
தவணை நாட்கள் முப்பது தந்தனர்.

... ...

சதிகாரர் என்று சங்கரன் முதலிய
அவர்களைத் தண்டித்த அதே சேனையில்
வெள்ளைக்காரர்கள் மிகவும் விரும்பி
நம்பத் தகுந்துள நாணயத் தோடு
சங்கரனிடத்தில் சலியாத அன்புள
ஜெயபால் என்பவன் சேனதிபதியின்
அன்பிற்குகந்து அதிகாரத்துடன்
செல்வாக்கு மிக்க சிறப்போடிருந்தான்.
நண்பன் சங்கரன் பிடிபட்ட நாளாய்
அளவிலா வேதனை அடைந்த ஜெயபால்
சதிகளிலிருந்து சங்கரலிங்கனை
விடுவிக்க முயன்று வெகுபாடு பட்டான்.
தன்னுடை நண்பன் சங்கரன் என்பதை
காட்டிக் கொண்டால் கஷ்டம் வருமென

பற்றிலன் போலவே பாசாங்கு பண்ணி
சாட்சிகள் மூலம் சங்கரலிங்கன்
சதிகாரன் அன்றெனச் சாதிக்க முயன்று
ஊணுறக்கமின்றி ஓய்வில்லாமல்
மறைமுகமாகவே மாபாடு பட்டான்.
ஆயினும் முடிவில் அவனுடை முயற்சி
பயனற்றதாகிப் பனிரண்டு பேரும்
கொன்று விடத்தகும் குற்றவாளிகளே
என்கிற தீர்ப்பில் இங்கிலீஷ்காரர்கள்
ஏழுபேர்களுமே ஏகோபித்தனர்.
சுட்டுக் கொன்றிடக் கட்டளை யானதைக்
கேட்ட ஜெயபால் கிறுகிறுப் படைந்து
விம்மித் துடித்து வேதனை மிகுந்து
கதறிக் கதறிக் கண்ணீர் வடித்து
நினைத்து நினைத்து நெஞ்சம் குமுறி
அப்பீலில் ஆயினும் அன்பனைக் காக்க
அவனுல் கூடிய அனைத்தும் செய்து
முப்பது நாளும் ஓயாது முயன்றான்.
எப்படி முயன்றும் என்னென்ன செய்தும்
சங்கரலிங்கன் சதிகாரன் என்றே
சுட்டுக் கொல்லவே சொல்லி விட்டார்கள்.
ஜெயபால் துக்கம் செப்பவும் தகுமா ?
' அப்பீல் ' செய்தது அப்படியானபின்
ஜெயபால் வேறொரு முயற்சி செய்தான்:
ஜெயபால் நண்பனுய் ஜேகப் என்கிற
இங்கிலீஷ் 'கர்னல்' ஒருவன் இருந்தான்.
அந்தக் 'கர்னல்' அந்தச் சண்டையில்
குண்டடி பட்டுக் குற்றுயிராகப்
போர்க்களத்தில் ஒரு புதரில் கிடந்ததை
அறியாததனுல் 'அம்புலென்ஸ்' காரர்

அவனைத் தவிர அடிபட்ட பிறரைப்
பொறுக்கிக் கொண்டு போய்விட்டார்கள்.
பாசறை சேர்ந்து பார்க்கிற போது
ஜேகபைக் காணு ஜெயபால் வருந்தித்
திரும்பவும் சென்று தேடி எடுத்து
'ஆஸ்பத்திரியில்' அவனைச் சேர்த்துப்
பிழைக்கச் செய்தான் என்னும் பெருமையில்
ஜேகப் துரைக்கு ஜெயபாலிடத்தில்
வருணிக்க முடியாப் பாசம் வளர்ந்து
இணையற்ற நண்பராய் இருவரும் இருந்தனர்.
அத்தகு ஜேகபின் அண்ணன் தாமஸ்
'கமாண்டரின் சீப்' காரியாலயத்தில்
சேனாதிபதியிடம் செல்வாக்குள்ளவன்.
ஜெயபால் கெஞ்ச ஜேகபும் இசைந்து
சங்கரலிங்கன் சாகாதிருக்கப்
பதினேரு பேர்க்கும் பரிவது போலக்
கருணை மனுச்செயும் காரணம் காட்டித்
தண்டனை செய்வதைத் தாமதப்படுத்த
தாமஸ் துரைக்குத் தந்தி கொடுத்தான்.
தம்பியைக் கருதித் தாமஸ் துரையும்
அவனுல் முடிந்த அனைத்தும் செய்து
தண்டனை நாளைத் தள்ளி வைத்தார்கள்.
ஜெயபாலுக்காய் ஜேகப் கர்னல்
தாமஸ் துரைக்குத் தந்தியனுப்பிய
ரகசியம் சிறிதும் ராணுவத்துள்ள
இங்கிலீஸ்காரர் எவரும் அறியார்.
தாமஸ் துரையும் தன்னுலாகிய
சகல விதத்திலும் சலுகை தேடினன்.
குற்றச்சாட்டுக் குறிப்புக ளடங்கிய
கட்டுகள் முழுதும் 'கமாண்டரின் சீப்'

அமைதியிற் படித்து ஆராய்ந்து பார்த்து
சங்கரலிங்கன், சையத் காதர்,
முனிஜி என்கிற மூவர்க்கு மட்டும்
கருணை என்பதே காட்டத் தகாதென
மற்றவர்க் கெல்லாம் மரணத் தீர்ப்பை
ஆயுள் தண்டனை ஆக்கிட மாற்றிச்
சங்கரலிங்கன், சையத் காதர்,
முனிஜி என்கிற மூவரை மட்டும்
சுட்டுக் கொல்லவே கட்டளை யிட்டான்.
சங்கரன் தப்பவே சலுகை தேடிய
ஜெயபால் மீதும் ஜேகப் மீதும்
இடிவிழுந்ததுபோல் இருந்தது தீர்ப்பு.

முதல் பாகம் முற்றிற்று

இரண்டாம் பாகம்

மங்களத்தின் மனத்துயரம்

பால் மணம் மாறுத பச்சிளம் பருவத்தில் பற்றிய பாசம். பிறவிகள் தோறும் பின்பற்றியதோ என்னும் பிரியம். அமரரும் அறிந்ததில்லை என்று சொல்லப்படும் தூய அன்பு. காம உணர்ச்சி யென்பது கடுகளவும் இல்லாத காலத்தில் உண்டான காதல். சங்கர லிங்கனிடத்தில் அப்படிப்பட்ட உறவு கொண்டுள்ள மங்களாம்பாளின் பிரிவாற்றுமை மன வேதனைகளை என்னென்று சொல்ல முடியும் ?

'சேனைக்கு ஆள் சேர்க்கும் வேலையில் சென்னையில் தான் இருப்பேன். போர்முனைக்குப் போகமாட்டேன். இனி அடிக்கடி வருவேன் வருத்தப்படவேண்டாம்' என்று விடைபெற்றுப் போன சங்கரலிங்கன் நெடுநாள் கடிதமே எழுதாமலிருந்துவிட்டுத் திடீரென்று தான் பர்மாவுக்கே போகவேண்டி யிருப்பதாகவும் ஆனாலும் பயப்பட வேண்டியது ஒன்றுமில்லை யென்றும் சமாதானப் படுத்திக் காதலிக்கு ஒரு கடிதம் எழுதிவிட்டு ரங்கூனுக் குப் போய்விட்டான். அந்தக் கடிதத்தைக் கண்ட போதே மங்களமும் அவளுடைய மாமியும் மாமனரும் அளவற்ற அச்சமடைந்தார்கள். பர்மாவுக்குப் போய்ச் சேர்ந்தவுடன் சங்கரலிங்கம் தன்னுடைய தந்தைக்கும் தாயாருக்கும் மனைவிக்கும் தனித் தனிக் கடிதங்கள் எழுதி மூன்றையும் ஒரே உறையில் வைத்து மங்களாம் பாள் விலாசத்துக்கே அனுப்பி யிருந்தான். மூன்று கடிதங்களிலும் முக்கியமான சேதி ஒன்றேதான்.

ஆனால் மங்களாம்பாளுக்கு எழுதிய கடிதத்தில் இளந் தம்பதிகளுக்குள் இயல்பாக உள்ள சிங்காரப் பேச்சுகள் சித்திரிக்கப் பட்டிருந்தன. கடிதத்தை மனைவியின் விலாசத்துக்கு அனுப்பிய மர்மம் அதுதான். மற்றபடி மூன்று கடிதங்களிலும் இருந்த ஒரே கருத்து என்ன வெனில் " நான் மிகவும் சௌக்கியமாக இருக்கிறேன். என்னுடைய ஆருயிர் நண்பன் ஜெயபாலும் மற்றும் பல பழைய அன்பர்களும் என்னுடன் இருக்கிறார்கள். நான் போர் முனைக்குப் போகாமல் பின்னணியில் இருப் பதற்கான பிரயத்தனங்கள் செய்து அதற்கு வேண்டிய சிபாரிசுகளையும் டாக்டர் செய்துவிட்டார். அதனால் நீங்கள் கவலைப்பட வேண்டிய காரணமே இல்லை. என்றாலும் என்னைப் பிரிந்திருப்பது உங்களுக்கு எவ் வளவு வேதனைக்கிடமான விஷயம் என்பதை நான் நன்றாக அறிவேன். அந்த வேதனை உங்களைப் பிரிந் திருக்கும் எனக்கும் உண்டு. கருணைகூர்ந்து கொஞ்ச காலம் பொறுத்துக் கொள்ளுங்கள். விரைவில் டாக்டர் சிபாரிசால் விடுதலை பெற்று வீட்டுக்குவந்து விடுகிறேன்" என்பதே. இப்படி அவன் எழுதியது முற்றிலும் பொய் யல்ல. சென்னையில் இருக்கிற வரையில் சங்கரலிங்கம் சந்தோஷமாகத்தான் இருந்தான். ஏனெனில் சொந்த ஊருக்குச் சமீபத்திலிருப்பதால் நினைத்தபோது சென்று தாய் தந்தையரையும் மனைவியையும் கண்டு மகிழ்ந்து வரலாம் என்ற எண்ணத்தால். அவன் உடனே பர்மாவுக்குப் போகவேண்டும் என்று மிகவும் அவசரமும் கண்டிப்புமான உத்தரவு திடீரென்று வந்தது கண்டு திகைத்து விட்டான். மறுபடியும் ஒருமுறை மங்களாம் பாளைப் பார்த்துவிட்டு வரக்கூட முடியாதபடி உடனே தயாராக இருந்த கப்பலில் புறப்படவேண்டு மென்ற உத்தரவு தந்தியில் வந்தது. ராணுவ உத்தரவு.

யுத்தம் நடக்கிற காலம். தட்டிக் கழிக்கவோ தாமதிக்கவோ முடியாது. காதலியைப் பற்றிய கவலையோடு தான் கப்பலேறினான். முன்னொரு முறை பர்மாவுக்குப் போகும்போது நினைத்தபடியே பட்டாள வேலையை விட்டுத் தொலைத்துவிட வேண்டுமென்றே இப்போதும் எண்ணினான். பர்மாவிற்கு வந்து சேர்ந்தவுடன் மீண்டும் தன்னுடைய நண்பன் ஜெயபாலிடம் சொல்லித் தனக்கு உடல் நலம் குறைந்திருப்பதாக டாக்டர் சிபார்சு பெற்று வேலையை விட்டுவிடத் தீர்மானித்தான். யுத்த நெருக்கடி மிகுந்துள்ள சமயமானதால் வேலையிலிருந்து விடுதலை கிடைப்பது முடியாத காரியம் என்பது ஜெயபாலுக்குத் தெரியும். சங்கரலிங்கனும் அதை அறியாதவனல்ல. இருந்தும் சங்கரனிடத்தில் ஜெயபால் கொண்டிருந்த அளவற்ற அன்பினால் அந்த முயற்சிக்கு இசைந்தான். முன் சங்கரனைப் பரிசோதித்த டாக்டரே இப்போதும் பரிசோதித்தார். முன் சொன்ன தீர்ப்பே இப்போதும் சொன்னார். உடல்நலத்தில் ஒரு கோளாறும் இல்லை யென்றும் மனம்தான் அதைரிய மடைந்திருக்கிற தென்றும் கண்ட டாக்டர் சங்கரனிடத்தில் மிகவும் அனுதாபங்கொண்டு முன் சொன்னபடியே அவனைப் போர்முனைக்கு அனுப்பாமல் பின்னணியில் காரியம் பார்க்கச் சிபார்சு செய்வதாக வாக்களித்தார்.

அந்த மகிழ்ச்சியில் எழுதிய கடிதங்களே முன்னே சொல்லப்பட்ட மூன்று கடிதங்களும். ஆனால் டாக்டர் எதிர்பார்த்தபடி காரியங்கள் நடைபெறவில்லை. மின் வேகத்தில் சிங்கப்பூரைப் பிடித்துக்கொண்ட ஜப்பானியர் பர்மாவின்மீது பாய்ந்த வேகத்தில் ரங்கூன் முகாமில் தயாரித்திருந்த திட்டங்கள் தடுமாறிவிட்டன. ஆலோசிக்க அவகாசமில்லாமல், உடனே ஓடி ஜப்பான் படைகளைத் தடுத்து நிறுத்தப் பலவிடங்களுக்குப்

படைகளை அனுப்பித் தீரவேண்டிய அவசரம் உண்டாகி விட்டது. சங்கரலிங்கன் நல்ல தேர்ச்சி பெற்றவன் என்று முன்னாலேயே பெயர் வாங்கிவிட்டவன் ஆனதால், அவன் முன்னணிக்குப் போகாமல் தப்பித்துக்கொள்ள முடியாது போய்விட்டது. அத்துடன் சங்கரனுடைய தகுதிகளைப் பற்றி 'ரிகார்டுகள்' மூலமாக அறிந்திருந்த ஆங்கிலேய தளபதி சங்கரனை நேரில் சந்தித்துப் பேசி அவனை மெச்சிப் புகழ்ந்து உத்ஸாகப்படுத்தி விட்டார். அதனால் திகைத்திருந்த மனம் சற்றே திடமுற்றுப் போர்முனைக்குப் போனான். அங்கே போன சில நாட்களுக்குள் நேதாஜி சுபாஷ்சந்திரபோஸ் இந்திய தேசீய சேனைக்குத் தலைவனாக மலாயா நாட்டில் ஜப்பானியருடன் சேர்ந்து இங்கிலீஷ்காரரை எதிர்க்க வரும் செய்தி சங்கரனுக்கு எட்டியது. உடனே வெள்ளைக்காரனை இந்தியாவைவிட்டு வெளியேற்ற வேண்டுமென்று வெகுநாளாக எண்ணிக் கொண்டிருந்த தேச பக்தியினால் வீறிட்டெழுந்த வெறி சங்கரனை விழுங்கிவிட்டது. எந்த விஷயத்திலாயினும் மனிதன் வெறி கொண்டுவிட்டால் அந்த ஒரு விஷயத்தைத் தவிர மற்றதை யெல்லாம் முற்றிலும் மறந்துவிடுகிறான் என்ற உண்மைக்கிணங்க சங்கரலிங்கன் மங்களாம்பாளையே மறந்துவிட்டான் என்றால் மற்றென்ன சொல்லக் கிடப்பது.

அதனால் முன்னே சொல்லப்பட்ட மூன்று கடிதங்களுக்குப் பிறகு மறுபடியும் கடிதம் எழுதக்கூடிய சூழ்நிலை சங்கரனுக்கு இல்லாமலே போய்விட்டது.

அந்த மூன்று கடிதங்களும் வந்தபின் சங்கரன் போர்முனைக்குப் போய்விடுவானே என்ற கவலை நீங்கி மங்களமும் அவளுடைய மாமன் மாமியும் சற்றே ஆறுதலடைந்தார்கள். ஆனால் அந்த ஆறுதல் எத்தனை

நாளைக்கு இருக்கும் ? சில மாதங்கள் பொறுத்திருந்தார் கள். மாதங்கள் ஓடி வருஷமும் மறைந்துவிட்டது. சங்கரனிடத்திலிருந்து கடிதமும் வரவில்லை. அவனைப் பற்றிய செய்தியும் காதில் விழவில்லை. சண்டையோ பர்மா பகுதியில் வெகு மும்மரமாக நடப்பதாகப் பத்திரிகைகளில் பார்த்தார்கள். சங்கரனும் போர் முனைக்குத்தான் போய்விட்டானே என்ற ஏக்கம் எல்லா ருக்கும் வந்துவிட்டது. போர்முனையில் யாருக்கு என்ன நேருமோ என்ற பயம் பதைக்கச் செய்துவிட்டது. தந்தையும் தாயும் மனைவியும் தனித் தனியாகவும் சேர்ந்தும் சங்கரனுக்கு எழுதிய பல கடிதங்களுக்கும் பதிலே வராததால் அவனைப் பற்றிய அச்சம் நாளுக்கு நாள் அதிகப்பட்டது. கோபால கிருஷ்ணருடைய குடும் பத்தில் மகிழ்ச்சி மறைந்துவிட்டது. எப்போதும் ஏக்கமே இடம் பெற்றுவிட்டது.

ஒரு நாள் மங்களாம்பாள் தானும் தன் கணவனும் தங்கியிருந்த அறையில் தனியாக மேஜைக்கு முன்னால் இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவள் அங்கே உட்கார்ந்தது பர்மாவிலுள்ள ராணுவ முகாமுக்கு ஒரு கடிதம் எழுதுவதற்காகவே. அந்தக் கடிதம் தன் கணவருக்கல்ல; கணவனுடைய ஆருயிர் நண்பரான ஜெயபாலுக்கு. ஜெயபாலைப் பற்றி சங்கர லிங்கம் தன் மனைவியிடம் வெகு விரிவாகப் பேசி யிருந்தான். ஜெயபாலின் முழு விலாசமும் அவனுடைய உத்தியோகமும் மங்களாம்பாளுக்குத் தெரியும். கணவ னுக்கு எழுதிய கடிதங்களுக் கெல்லாம் பதிலே வராததால் இப்போது ஜெயபாலுக்கு எழுதி, கணவனைப் பற்றிய விஷயங்களை அறியலாம் என்று எண்ணிக் காகிதமும் பேனாவும் கையுமாக மேஜைக்கருகில் அமர்ந் தாள். அந்த மேஜையின்மீது வைக்கப்பட்டிருந்த

கணவனுடைய புகைப்படம் அவளுடைய கண்ணிற் பட்டது. அதைக் கண்டவுடன் கடிதம் எழுத நினைத்த காரியத்தையும் மறந்துவிட்டுப் படத்தையே கண் கொட்டாமல் பார்த்துக்கொண் டிருந்தாள். ஆயிரம் எண்ணங்கள் உதித்து அலைமோதின. கண்ணீர் சுரந்து கன்னங்களில் வழிந்தோடியது. கண்ணீரையும் துடைக் காமல் கற்சிலைபோல் அசைவற்று நெடுநேரம் அமர்ந் திருந்தாள்.

அந்த அறைக்கு வெளியில் ஏதோ ஒரு கனத்த பொருள் தடாரென்று தரையில் விழுந்த சத்தம் கேட்டு மங்களம் திடுக்கிட்டுத் திரும்பினாள். மாமனார் கோபால கிருஷ்ணர் பேசுகின்ற குரல் கேட்டது.

கோபாலகிருஷ்ணர் ஜோசியத்தில் மிகுந்த நம்பிக்கை யுள்ளவர். பஞ்சாங்கம் பார்க்காமல் எந்தக் காரியமும் பண்ணமாட்டார். வாழ்க்கையில் அவர் அடைந்த வெற்றிக்கு அதுதான் காரணம் என்பது அவருடைய நம்பிக்கை. மங்களாம்பாள் அறிவும் அழகும் அன்பும் நிறைந்த மிகவும் விரும்பத் தகுந்த பெண்தானென்றாலும் அதிருஷ்டக் குறைவுள்ளவள் என்பது அவருடைய எண்ணம். மகனுக்குத் திருமணம் நடத்த முகூர்த்த நாள் நிச்சயித்தபோது ஜோசியர் மங்களாம்பாள் ஜாதகத்தில் ஏதோ தோஷம் இருப்ப தாகச் சொன்னது அவருடைய நினைவில் இருந்து கொண்டே யிருந்தது. மகனுக்கு நேரிட்ட துன்பங்க ளெல்லாம் மங்களாம்பாளின் ஜாதகத்திலுள்ள தோஷத் தினால்தான் என்று அவருக்குத் தோன்றியது. அதனால் மகனுடைய ஜாதகத்தையும் மங்களாம்பாளுடைய ஜாதகத்தையும் நன்றாக ஆராய்ந்து பார்க்கச் செய்து தோஷங்களுக்குப் பரிகாரம் செய்ய வேண்டுமென்று பதைத்துக்கொண் டிருந்தார். அதற்காக வசந்தபுரிக்கு

ஐம்பது மைல்களுக்கு அப்பாலுள்ள ஒரு சிற்றூரில், சோதிடத்தில் நிகரற்ற நிபுணரெனப் பெயர்பெற்ற அப்பண்ண ஜோசியரிடம் போய்விட்டு அப்போதுதான் திரும்பி வந்தவர் கோபால கிருஷ்ணர்.

கோபால கிருஷ்ணர் வீட்டுக்குள் நுழைந்தபோது முன் கட்டிலிருந்த அவருடைய மனைவி அன்னபூரணியம்மாள் அவரை ஆவலோடு வரவேற்றாள். கணவரின் முகம் வாடியிருப்பதைக் கண்டாள். ஜோசியரிடம் போய் வந்ததைப் பற்றி ஏதாவது சொல்லுவாராக்குமென்று எதிர்பார்த்த அன்னபூரணியம்மாள் கணவனுடைய முகவாட்டத்தைக் கண்டு கலக்க முற்றாள். மனைவியிடம் ஒன்றும் சொல்லாமல் மளமளவென்று கோபால கிருஷ்ணர் மாடிக்குச் சென்றார். அன்னபூரணியும் பின் தொடர்ந்தாள். மாடியிலிருந்த விசாலமான கூடத்தில் மங்களாம்பாள் உட்கார்ந்திருந்த அறைக்கு வெளியில் ஒரு பெரிய மேஜையும் அதைச் சுற்றிப் பல நாற்காலிகளும் இருந்தன. பிரயாணத்தின் அலுப்பினாலும் மனதிலிருந்த சலிப்பினாலும் கோபாலகிருஷ்ணர் தாம் கொண்டு வந்த கனத்த கைப்பெட்டியைக் கவனக் குறைவோடு மேஜையின்மேல் வைத்தார். மேஜையைப் பார்க்காமல் பின்னால் வந்த மனைவியைப் பார்க்கத் திரும்பியபடியே பெட்டியை வைத்ததால் அது மேஜையின் மீது சரியாகப் படியாமல் தடாரென்று தளத்தில் விழுந்தது. அந்த ஓசைதான் மங்களத்தைத் திடுக்கிட்டுத் திரும்பச் செய்தது. பெட்டி கீழே விழுந்தவுடன் கோபாலகிருஷ்ணர் மனைவியைப் பார்த்து, "நம்முடைய பொல்லாத காலத்துக்கு இதுவும் ஒரு அறிகுறிதான்" என்றார். பொல்லாத காலம் என்று அவர் சொன்னதைக் கேட்டு அச்சம் மிகுந்த அன்னபூரணியம்மாள், "ஜோசியர் என்ன சொன்னார் ?" என்றாள். "என்னத்

தைச் சொல்லுவார். எல்லாம் மங்களாம்பாள் ஜாதகத்திலுள்ள தோஷம்தான் என்று சொன்னார்" என்று சொல்லிவிட்டு அந்தக் கூடத்தின் கோடியிலிருந்த தன்னுடைய அறைக்குள் கோபாலகிருஷ்ணர் புகுந்து விட்டார். கீழே விழுந்த பெட்டியை எடுத்துக்கொண்டு அன்னபூரணியம்மாளும் அவர் பின் சென்றாள்.

மங்களம் இருந்த அறையின் கதவு மூடப்பட்டிருந்ததால் அவள் அங்கேயிருந்தது அவர்களுக்குத் தெரியாது. பெட்டி விழுந்த ஓசையும் மாமனார் சொன்னதும் மாமியார் கேட்ட கேள்வியும் அதற்கு மாமனார் சொன்ன பதிலும் மங்களத்துக்கு நன்றாகக் கேட்டன. மேலும் என்ன பேசுவார்களோ என்று காது கொடுத்துக் கவனித்தாள். கோபாலகிருஷ்ணருடைய பாதரட்சைகள் மிக உயர்ந்த இங்கிலீஷ் சிலிப்பர்கள். ஆணிகள் பதித்த மிதியுள்ளவை. அதனால் அவர் அங்கிருந்து தம்முடைய அறைக்குப் போனதை காலடி ஓசையால் கண்டுகொண்டாள். அதன் பிறகு அங்கு பேச்சரவம் இல்லை. மாமியாரும் மாமனாருடன் போயிருக்க வேண்டுமென்று மங்களம் அனுமானித்துக் கொண்டாள். 'எல்லாம் மங்களாம்பாள் ஜாதகத்திலுள்ள தோஷம்தான்' என்று மாமனார் சொன்னது மங்களாம்பாளை வாள்கொண்டு வெட்டிச் சித்ரவதை செய்வதுபோல் வருத்தியது. தன் கணவனைப் பற்றிய கவலைக்கெல்லாம் தன்னுடைய ஜாதக தோஷந்தான் காரணமாக இருக்குமோ என்று தன்னைத் தானே நொந்து கொண்டாள். தானும் தன் கணவரும் கலியாணம் செய்து கொண்டதற்குமுன் மிக சிறு பிராயத்திலேயே ஒருவரையொருவர் நேசித்துக் களித்த நாட்களையெல்லாம் எண்ணி யெண்ணிக் கண்ணீர் வடித்தாள். ஒருநாள் வீட்டுக்கு முன்புறத்தில் தானும் அவரும் விளையாடிக்கொண்

டிருந்தபோது குறத்தியர் வந்து குறி சொன்னதும் அப்போது அவர்கள்,

"பொல்லாத வேளைகொஞ்சம் புலப்படுதே பின்னல்
பொன்னான வாழ்க்கையிலே சின்னதுன்பம் மன்ன"

என்று பாடியதும் அவளுடைய நினைவிற்கு வந்தது. அந்தப் பொல்லாத வேளைதான் மாமனார் சொன்ன 'பொல்லாத கால'மாக இருக்குமோ என்று புலம்பிக் கொண்டாள். பிறருக்குத் துன்பமுண்டாக்கும் ஜாதக முள்ள தன்னுடைய பிறப்பு என்ன பிறப்பு என்று ஏங்கினாள். கணவனுடன் மற்றப் பெண்களைப் போல இன்பமாக வாழக் கொடுத்து வைக்காமற் போனாலும் ஆதரவான மாமனாரும் அன்பு மிகுந்த மாமியாரும் தன்னைப்பற்றிக் குறைவாக நினைக்க வேண்டியதாகி விட்டதே என்று குமுறினாள்.

வெகு நேரம் இப்படி வெந்து வெதும்பிக்கொண் டிருந்து விட்டுத் தன்னைத் தானே ஒருவாறு தேற்றிக் கொண்டு கண்களைத் துடைத்துக்கொண்டாள். உடனே கணவரைப் பற்றிய உண்மைகளைத் தெரிந்துகொள்ள ஜெயபாலுக்குக் கடிதம் எழுதவந்த காரியம் நினைவுக்கு வந்தது. மனதைச் சாந்தப்படுத்திக் கொண்டு ஜெய பாலுக்கு எழுத வேண்டிய முறையை ஆலோசித்துக் கொண்டு மிக்க வணக்க விநயத்துடன் கடிதம் எழுத லானாள்.

இங்கே இப்படி இருக்கத் தன்னுடைய அறைக்குச் சென்ற கோபாலகிருஷ்ணர் பிரயாண உடைகளை மாற்றிக்கொண்டு மனைவியைப் பார்த்து,

"எனக்கென்னமோ மிகவும் பயமாகத்தான் இருக்கிறது" என்றார்.

'எதைப் பற்றி?' என்றாள் அன்னபூரணியம்மாள்.

"மகனைப் பற்றித்தான்" என்றார்.

"ஏன் அவனைப் பற்றி என்ன பயம்?" என்றாள்.

"அவன் உயிரோடு திரும்பி வருவானா என்பது..." என்று சொல்லி முடிக்காமல் கோபால கிருஷ்ணர் தேம்பியழ ஆரம்பித்துவிட்டார். அன்ன பூரணி அவரைவிட மிகவும் நிதானமுள்ளவளானாலும் கணவர் சொன்ன சொற்களும் அவருடைய அழுகையும் அன்னபூரணியின் தாய் மனத்தைத் தவிக்கச் செய்து விட்டன. உடனே அவளும் அழுதுவிட்டாள். சற்று நேரத்துக்குள் கோபாலகிருஷ்ணர் அழுகையை அடக்கிக் கொண்டு, "எல்லாம் மங்களத்தின் ஜாதக தோஷந் தான்" என்றார்.

"அதைத்தான் விவரமாகச் சொல்லுங்களேன்" என்றாள்.

"இந்தப் பெண்ணுக்கு மாங்கல்ய பலம் போதாது" என்றார்.

"அப்படி யென்றால்?"

"சங்கரனுடைய உயிருக்கே அபாயமான காலம் இப்போது" என்று ஜோசியர் சொல்லுகிறார். எப்படி யென்றால், "மங்களத்துக்கு இப்போது நடக்கிற தசை யில் அவள் மாங்கல்யத்தை இழந்துவிட நேர்ந்தாலும் நேரும் என்று ஒளி மறைவில்லாமல் சொல்லுகிறார். அதனால் எனக்கு மிகவும் பயமாக இருக்கிறது" என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது அவருடைய வேலைக் காரர்களில் ஒருவன் அப்போதுதான் வந்திருந்த தபால் களை அவரிடம் கொடுப்பதற்காக அறைக்குள் வந்தான். அவன் வந்ததும் பேச்சை அத்துடன் நிறுத்திவிட்டுத் தபால்களை வாங்கினார் கோபாலகிருஷ்ணர். வாங்கிய தபால்களை வரிசையாகப் புரட்டிப் பார்க்கும்போது

சங்கரலிங்கன் கையெழுத்துடன் ஒரு இரசீது காணப் பட்டது. உடனே அதைத் தனியே எடுத்து ஊன்றிப் பார்த்தார். ஆம் அது சங்கரலிங்கத்தின் கையெழுத்து தான். அந்த இரசீது மங்களாம்பாள் சங்கரலிங்கனுக்கு அனுப்பியிருந்த ஒரு 'ரிஜிஸ்டர்' கடிதத்தை அவன் பெற் றுக்கொண்ட அத்தாட்சியான 'அக்ஞலெட்ஜ்மென்ட்' தான். அதைப் பார்த்தவுடன் கோபாலகிருஷ்ணர் மகனையே பார்த்துவிட்டதுபோல் அதை மனைவியிடம் காட்டி மகிழ்ந்தார். அன்னபூரணியம்மாளும் அந்த இரசீதைத் திருப்பித் திருப்பிப் பார்த்துத் திருப்தியடைந் தாள். ஆனால் மகனிடத்திலிருந்து கடிதம் ஒன்றும் வரவில்லையே என்று வருத்தம் காட்டினாள். என்றாலும் இப்போதைக்கு மகன் சௌக்கியமாக இருக்கிறான் என்ப தற்கு இரசீது சாட்சியாக வந்திருப்பதில் சந்தோஷ மடைந்து அதை மருமகளுக்குக் காட்ட வேண்டுமென்று மாடியை விட்டுக் கீழே சென்று மங்களாம்பாளைத் தேடினாள். மாடியில் அறைக்குள்ளிருந்த மங்களத்தைக் கீழே எப்படிக் காண முடியும் ? மீண்டும் மாடிக்கு வந்த அன்னபூரணி, மங்களம் இருந்த அறையின் கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே புகுந்தாள். அப்போதுதான் மங்களம் ஜெயபாலுக்கு அனுப்ப வேண்டிய கடிதத்தை எழுதி முடித்திருந்தாள். மாமியாரைக் கண்ட மங்களம் எழுந்து நின்றாள். "மங்களம்! இதைப் பாரம்மா" என்று அன்னபூரணி தன் கையிலிருந்த தபால் இரசீதைக் கொடுத்தாள். அதை வாங்கிப் பார்த்த மங்களம் அடக்க முடியாத ஆனந்தமடைந்து அந்தக் காகிதத் துண்டை மார்பில் வைத்து அழுத்திக்கொண்டு மாமியாருக்கு முன்னால் வணங்கி நின்றாள். மருமகளிடத்தில் அளவற்ற அன்பு கொண்டிருந்த அன்னபூரணி மங்களத்தை அணைத்துக்கொண்டு ஆசீர்வதித்தாள்.

சங்கரலிங்கன் கையெழுத்தைக் கண்டு அவனுடைய தாயும் தந்தையும் தாரமும் சந்தோஷமடைந்தார்கள். ஆனால் அந்தக் கையெழுத்து அவன் சதிக்குற்றம் சாட்டப்பட்ட கைதியாகக் காவலில் இருக்கும்போது போடப்பட்ட கையெழுத்தென்பதும் அதன் பிறகு அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதும் இவர் களுக்கு எப்படித் தெரியும் ?

சங்கரலிங்கனுடைய கையெழுத்துள்ள இரசீதைக் கண்ட மகிழ்ச்சியால் கோபாலகிருஷ்ணருக்கு மங்களத் தின் ஜாதக தோஷத்தைப் பற்றிய அருவருப்பு குறைந் தது. அதனால் அவர் மருமகளிடத்தில் எப்போதும் போல் தான் நடந்து கொண்டார். ஆனாலும் அவர் 'எல்லாம் மங்களாம்பாள் ஜாதகத்திலுள்ள தோஷந்தான்' என்று சொன்னது மங்களம் மனதை உறுத்திக்கொண்டே யிருந்தது. வெளியில் காட்டிக்கொள்ளா விட்டாலும் தன்னைக் காணும்போதெல்லாம் மாமனாருக்கு அந்த அரு வருப்பு உதிக்குமே என்ற எண்ணத்தால் கொஞ்ச நாளைக்குத் தாய் தந்தையருடன் தங்கியிருந்து வந்தால் நல்லது என்று எண்ணினாள். அந்த எண்ணத்துடன் ஒரு நாள் தன் மாமியாரிடத்தில் பெற்றோரையும் உடன் பிறப்புகளையும் பார்த்துவர ஆசையாக இருக்கிறதென்று மிக்க விநயமாக விண்ணப்பித்துக் கொண்டாள். முகங் கோணுமல் நடந்துகொள்ளும் மருமகளிடத்தில் அந்த மாமியாரும் முகங்கோணினதில்லை. உடனே அனுப்ப வேண்டும் என்றுதான் அன்னபூரணி ஆசைப்பட்டாள். ஆனால் மகனைப் பற்றிய ஏக்கம் வரும் போதெல்லாம் மருமகளைப் பார்த்துத்தான் அன்னபூரணி ஆறுதல் அடைவாள். அதனால் சற்றே தயங்கினாள். மாமியாரின் தயக்கத்தை உணர்ந்த மங்களம் உடனே, "உங்களுக்குத் துணையாக நான் இங்கேதான் இருக்க வேண்டுமென்ற

யோசனையில்லாமல் சொல்லிவிட்டேன். அம்மா, அப்பாவை அப்புறம் பார்த்துக்கொள்கிறேன். இப்போது நான் போகவில்லை. இங்கேயே இருக்கிறேன்'' என்றாள். அது அவள் உண்மையாகவே அன்னபூரணியின் மனத் துயரை உணர்ந்து சொன்னதுதான். அந்த அருமை யான குணத்தை அறிந்திருந்த அன்னபூரணி, ''நீ எப் போதும் என்னுடன் இருப்பதேதான் எனக்கு இன்ப மானது. இருந்தாலும் இப்போது சங்கரன் சௌக்கிய மாக இருப்பதாகத் தெரிய வந்ததால் ஏக்கம் குறைந் திருக்கிறது. நீயும் உன் பெற்றோர்களைப் பார்த்து நாளாச்சு. பத்துப் பதினைந்து நாட்களாவது அவர்க ளிடம் இருந்துவிட்டு வருவது நல்லதுதான் போய் வாம்மா. நாளைக்கே அனுப்புகிறேன்'' என்றாள்.

அன்று மாலையில் அன்னபூரணியம்மாள் தன் கணவருடன் பேசிக்கொண் டிருந்தபோது மருமகள் தன்னுடைய பெற்றோரைப் பார்த்துவரப் பிரியப்படு கிறாள் என்பதைச் சொன்னாள். அதைக் கேட்டவுடன் கோபாலகிருஷ்ணர், ''ஆம் அதை நானே எண்ணிக் கொண்டிருந்தேன். சொல்ல மறந்துவிட்டேன். மங்களத் தின் ஜாதகத்திலுள்ள தோஷத்துக்காக அவள் குறைந்த பட்சம் ஒரு மண்டலமாவது சிவன் கோவிலில் சேவித்து, பார்வதி தோத்திரம் பண்ணினால் பரிகாரம் ஆகுமென்று அப்பண்ண ஜோசியர் அந்த விரதத்தைச் செய்து முடிக்க வேண்டிய விவரங்களை எழுதிக் கொடுத்திருக் கிறார். இந்த ஊரில் விஷ்ணு ஆலயம்தான் இருக்கிறது. மங்களாம்பாளின் பெற்றோர் வசிக்கிற விருதூர் விசேஷ மான சிவஸ்தலம். அதனால் அங்கே தங்கியிருந்து இந்த விரதத்தை முடித்தால் மங்களாம்பாளுக்கு மாங்கல்ய பலம் பெருகுமென்று நினைக்கிறேன். வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுத்து

நாளைக்கே அங்கே அனுப்பி வைப்பது நல்லது'' என்று சொல்லித் தன் கைப்பெட்டியிலிருந்த ஜோசியர் எழுதிக் கொடுத்த விரதத்தின் விவரங்களடங்கிய காகிதத்தை எடுத்துக்கொடுத்தார். ஆலயம் தொழுவதில் அவரைவிட அதிகமான நம்பிக்கையுடைய அன்ன பூரணியம்மாள் அந்த யோசனையை மிக்க ஆர்வத்தோடு ஆமோதித்தாள். மறுநாளே மங்களாம்பாள் விருதூ ருக்குப் பயணமானாள்.

மரண தண்டனையே ஊர்ஜிதம்

ரங்கூனுக்கு வடக்கே முப்பது மைல் தூரத்தில் மரங்கள் அடர்ந்த மலையடிவாரத்தில் ஒரு பெரிய சம வெளி. பர்மாவின்மீது படையெடுத்த ஜப்பானியருடன் போர் நடத்திய மூலப்படையின் முக்கியமான முகாம் அங்கேதான். சண்டைக்கு முன்னால் வெறும் பொட்ட லாகக் கிடந்த அந்தச் சமவெளி வெகு சீக்கிரத்தில் ஒரு பட்டணமாகிவிட்டது. அதிகாரிகள் தங்குவதற்குச் சிறு சிறுகட்டிடங்களும் வெடி மருந்துக் கிடங்குகளும்,பீரங்கிக் கூடங்களும், குதிரை லாயங்களும், தந்தி, டெலிபோன், தபால் நிலையங்களும், ஆகாய விமான நிலையமும் எல் லாம் அலாவுதீன் அற்புத விளக்கைத் தேய்த்தவுடன் உண்டானவை போல் வெகு விரைவில் உருவானவை. அந்தப் பாசறையிலிருந்து கடற்கரைக்குப் போக ஒரு அழகான பாதை உண்டு. அந்தப் பாதை வானளாவிய மரங்கள் அடர்ந்த வனங்களின் வழியாகச் செல்வது. வழி முழுதும் படைவீடுகள் உள்ள வெகு பாதுகாப்புள்ள பாதை. அது பட்டாளங்களுக்கு யுத்த தளவாடங்களும் உணவுப் பொருள்களும் கடற்கரையிலிருந்து வந்து சேருவதற்கென்றே அமைக்கப்பட்ட குறுக்குப் பாதை. போர்வீரர்கள் ரங்கூனுக்குப் போகாமல் கப்பலுக்குப் போகிற ரகசிய வழியும் அதுதான். அந்தப் பாதையின் வழியாகப் போவதற்கும் வருவதற்கும் தனியான அனுமதி வேண்டும். அந்த அனுமதிச் சீட்டுகளை வழங்குகின்ற அதிகாரமும் அந்தப் பாதையின் பாது காப்புக்கான எல்லா அலுவல்களும் ஜெயபால் கவனிக்க வேண்டிய காரியங்கள். அந்தப் பாதைக்குப் போகிற

கதவு எப்போதும் பூட்டப்பட்டிருக்கும். அதைத் திறக்க வேண்டுமானால் ஜெயபாலின் உத்தரவின்மேல்தான் செய்ய வேண்டும். பெரும்பாலும் அவனுடைய கண் காணிப்புடன்தான் அது திறக்கப்படுவது. அதனால் ஜெயபால் அந்தக் கதவுக்கு அருகாமையிலுள்ள ஒரு சிறு பங்களாவில் வசித்து வந்தான். அந்தப் பங்களா மிகச் சிறியதுதான். ஆனாலும் வாழ்க்கைக்கு வேண்டிய எல்லா வசதிகளும் பொருந்தியது. அந்தச் சிறு வீட்டின் மத்தியில் ஒரு கூடம். அக்கூடத்தின் ஒரு புறத்தில் சுவரோரத்தில் இரும்பால் செய்யப்பட்ட ஒரு பெரிய மடக்கு மேஜையும் அதன் மூன்று பக்கங்களிலும் மூன்று மடக்கு நாற்காலிகளும் இருந்தன. மேஜையின் ஓரமாக இருந்த சுவரில் இரண்டு பெரிய 'போட்டோ' படங்கள் மாட்டப் பெற்றிருந்தன. அவற்றுள் ஒன்று ஜெயபாலும் சங்கரலிங்கமும் போர் முனைக்குப் போகுமுன் சேர்ந்து எடுத்துக் கொண்டது. இன்னொன்று ஜெயபாலும் ஜேகப் துரையும் சேர்ந்து எடுத்துக்கொண்டது. அது முன்னே ஜேகப் துரை குண்டுபட்ட காயத்துடன் புதரில் கிடந்ததை அறியாமல் 'அம்புலன்ஸ்'காரர்கள் பாசறைக் குப் போய்விட்ட பின் ஜெயபால் மீண்டும் போர்க்களத் தில் தேடிப் பார்த்து ஜேகப் துரையை எடுத்து வந்து ஆஸ்பத்திரியில் சேர்த்து பிழைக்கச் செய்த அன்பிற்கு அறிகுறியாக ஜேகப் துரையின் வேண்டுகோளால் எடுக்கப்பட்டது. அந்த நன்றிக்காகத்தான் ஜேகப் ஜெயபாலிடத்தில் அன்பு மிகுந்த நண்பன் ஆனது. அத னால்தான் ஜேகப் துரை தன்னுடைய தமயன் தாமஸ் துரை மூலமாகச் சங்கரலிங்கத்தைச் சதிக்குற்றத்தி லிருந்து காப்பாற்ற முயன்றது.

மேஜையின்மீது, மிகவும் அலங்காரமுள்ள சட்டத் தில் சுவரோரத்தில் சாய்க்கப்பட்டிருந்த இன்னொரு

படமும் இருந்தது. அது சங்கரலிங்கனும் மங்களாம் பாளும் சேர்ந்துள்ள 'போட்டோ.' அவர்களுடைய திருமணத்துக்குப் பின் ஜெயபாலுக்கு அனுப்புதற்கென்றே எடுக்கப்பட்டது. அது தனக்குக் கிடைத்தவுடன் ஜெயபால் அதற்கு விலையுயர்ந்த சீனச் சித்திரச் சட்டம் போட்டுத் தன் மேஜையின்மீது தான் உட்காரும் நாற்காலிக்கு நேராக வைத்து நித்தமும் பார்த்து மகிழ்வது. அந்தப் படத்தில் சங்கரனும் மங்களமும் காமனும் ரதியும் போலக் காட்சியளிப்பதாகச் சொல்லி, ஜெயபால் நண்பர்களுக்குக் காட்டிக் களிப்படைவான். அந்தப் படத்தைப் பார்த்த அனைவரும் அது கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கத் தக்கது என்றே வியந்து புகழ்ந்து மகிழ்வார்கள். அந்தப் படத்தில் சங்கரனுடைய முகத்தில் சாந்தமும் அன்பும் தவழும். கொஞ்சிக் குலவிப் பேசுவது போன்ற எண்ணத்தைக் கூட்டும். மங்களத்தின் முகம் மறுவற்ற முழுமதிபோல் மகிழ்ச்சி தந்து மனக்கவலைகளை மறக்கச் செய்யும். கோபதாபங்களைக் குறைக்கும்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்தப் படங்களுக்கு எதிரில் நாற்காலியில் அமர்ந்திருந்தான் ஜெயபால். அன்றைய தபாலில் தனக்கு வந்த கடிதம் ஒன்று அவன் கையில் இருந்தது. அதை விரித்தான். ஒரு முறை படித்துப் பின் பெருமூச்சு விட்டான். மறுமுறை படித்தான். மேஜையின் மீதிருந்த மங்களம்—சங்கரன் படத்தைப் பார்த்தான். மீண்டும் கடிதத்தைப் பார்த்தான். உடனே தலையை நிமிர்த்தி எதிரில் சுவரிலிருந்த சங்கரனும் தானும் சேர்ந்திருக்கும் 'போட்டோ'வைப் பார்த்தான். இப்படியாகக் கடிதத்தையும் படங்களையும் மாற்றி மாற்றிப் பார்த்துக்கொண்டு வெகு நேரம் வரை உன்மத்தன்போல் உட்கார்ந்திருந்தான். அதன் பிறகு கடிதத்தை மடியின்மேல் வைத்து விட்டுத் தலையைக்

கவிழ்ந்து கண்களை மூடிக்கொண்டு சிந்தனையில் ஆழ்ந்தவன்போல் சிறிது நேரம் செயலற்றிருந்தான். மறுபடியும் அவன் கண்ணைத் திறந்தபோது மடியிலிருந்த கடிதத்தின்மீது தன்னுடைய கண்ணீர் வடிந்திருப்பதைக் கண்டான். 'பிளாட்டிங்' காகிதத்தால் கடிதத்தின்மேல் விழுந்திருந்த கண்ணீரை ஒற்றி யெடுத்துவிட்டுக் கடிதத்தை அதன் உறையிற் போட்டு மேஜையின்மீது வைத்து விட்டு எழுந்து போய் பக்கத்திலிருந்த படுக்கையிற் படுத்துக் கொண்டான்.

அந்தக் கடிதம் மங்களாம்பாள் ஜெயபாலுக்கு எழுதிய கடிதம். மங்களத்தின் மாமனார் கோபாலகிருஷ்ணர் வெளியூருக்குப் போய் ஜாதகங்களை ஆராய்ந்து வந்து அன்னபூரணியம்மாளிடம் 'எல்லாம் மங்களாம்பாள் ஜாதகத்திலுள்ள தோஷந்தான்' என்று சொன்னதைக் கேட்ட பின் அன்றைக்கு எழுதியது. அந்தக் கடிதம்:

அன்பு மிகுந்த சகோதரர் ஜெயபால் அவர்களுக்கு,

தங்களுடைய ஆருயிர் நண்பரின் மனைவியாகிய மங்களாம்பாள் மிக்க வணக்கத்துடன் எழுதிக் கொண்டது.

அண்ணா! என்னைப் பற்றித் தங்களுக்கு எல்லாம் தெரியும். தங்களைப் பற்றியும் தங்களுடைய அபூர்வ குணங்களைப் பற்றியும் என்னுடைய கணவர் வெகு விரிவாகப் பலமுறை சொல்லியிருக்கிறார். எங்கள் திருமணத்துக்கு முன்பே பல கடிதங்களிலும் தங்களுடைய அருமை பெருமைகளைப் பற்றி எழுதியிருந்தார். இங்கே அவர் இருந்தபோது அடிக்கடி தங்களைப் பற்றியே பேசுவார். அந்த உரிமையினால் நான் தங்களுக்கு இந்தக் கடிதத்தை எழுதிக் கொள்ளத் துணிந்தேன். மிக்க அபாக்யவதியான என்மீது இரக்கங்கொண்டு இக்கடிதத்திற்கு உடனே பதில் எழுதுவீர்களென்று மிகவும் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

என் கணவரிடமிருந்து நெடுங்காலமாகக் கடிதமே வரவில்லை. அவரைப் பற்றிய ஒரு சேதியும் எங்களுக்கு

எட்டவில்லை. நாங்கள் எழுதிய பல கடிதங்களுக்கும் பதில் வரவில்லை. அதனால் எங்களுக்குள்ள ஏக்கத்தை என்னென்று சொல்லுவது! இத்தனைக்கும் காரணம் என்னுடைய துரதிருஷ்டந்தானே என்று என் மனம் உடைந்து விடும்போலிருக்கிறது. இப்போது என் கணவர் எங்கே இருக்கிறார்? அவர் கடிதமே எழுதாமலிருக்கும் காரணம் என்ன? உடல் நலம் சரியில்லையா? போர் முனைக்குப் போனாரா? அபாயம் ஏதேனும் ஏற்பட்டு ஆஸ்பத்திரியில் கிடக்கிறாரா? என்பன போன்ற பலவித ஏக்கங்கள் வதைக்கின்றன. அவருடைய பெற்றோரும் நானும் என்னுடைய தாய் தந்தையும் தவித்துக் கொண்டிருக்கிறோம். அண்ணா! உங்களுக்குக் கோடி புண்ணியம் உண்டாகும். உடனே அடுத்த தபாலிலேயே அவருடைய யோக க்ஷேமங்களை எழுதியனுப்புங்கள். கூடுமானால் தந்தி கொடுங்கள். இந்த உதவிக்கு நான் என்றென்றும் தங்களுக்கு நன்றி செலுத்துவேன். அண்ணா! அலட்சியமாக இருந்துவிட வேண்டாம். தங்கள் பதில் வரவில்லையானால் இந்த வேதனை என்னை விரைவில் கொன்று விடும். உடனே பதில் எழுதுங்கள். கோடி நமஸ்காரம்.

பணிவுள்ள
மங்களாம்பாள்

(இது, அவள் ஆங்கிலத்தில் எழுதிய கடிதத்தின் மொழி பெயர்ப்பு. ஜெயபாலுக்குத் தமிழ் தெரியாது என்பதை மங்களம் அறிவாள். ஜெயபால் நேபாள தேசத்தைச் சேர்ந்தவன். நேபாளம், இந்துஸ்தானி, இங்கிலீஷ் ஆகிய மூன்று பாஷைகள்தான் ஜெயபாலுக்குத் தெரியும் என்று சங்கரன் மங்களத்திடம் சொல்லியிருந்தது அவளுடைய நினைவில் இருந்தது. அத்துடன் சங்கரலிங்கன் இந்துஸ்தானியில் வெகு

நன்றாகப் பேசக் கற்றுக் கொண்டதும் ஜெயபாலின் உறவால்தான் என்பதையும் சொல்லியிருந்தான்.)

இப்படி வந்துள்ள கடிதத்துக்கு என்ன பதில் எழுதுவது? சங்கரலிங்கமோ சதிக்குற்றத்துக்கு ஆளாகி மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதியாகக் காவலில் இருக்கிறான். அவனைக் காப்பாற்றுவதற்கென்று ஜெயபாலும் ஜேகப் துரையும் சேர்ந்து செய்த எல்லா முயற்சிகளும் வீணாகிவிட்டன. கடைசியாகக் 'கமாண்டரின் சீப்' அவர்களிடம் செய்து கொண்ட கருணை விண்ணப்பத்திற்கும் அவர் மற்றவர்களுக்கெல்லாம் கருணைகாட்டி மரண தண்டனையை ஆயுள் சிறைவாசமாக மாற்றி, சங்கரனையும் இன்னும் இருவரையும் மட்டும் சுட்டுக் கொன்றுவிடும்படி தீர்ப்புக் கூறிவிட்டார். அம்மூவரையும் சுட்டுவிடுவதற்கான நாளைக் குறிக்கும் உத்தரவை எதிர்பார்த்துப் புண்பட்ட நெஞ்சில் புரையோடிக் கொண்டிருக்கும் ஜெயபால் இந்தக் கடிதத்திற்கு என்ன பதில் எழுதுவான்! அந்தக் கடிதத்தைப் படித்து அவன் அடைந்த வேதனை அவனுடைய இதயத்தைப் பிளந்து விடும்போல் இருந்தது. உடலின் வலிமையிலும் உள்ளத்தின் உறுதியிலும் அந்தப் பட்டாளத்திலுள்ள எவரினும் சிறந்தவன் ஜெயபால். அவன் செய்துள்ள துணிகரச் செயல்கள் பலவுண்டு. போர்முனையில் அவன் புரிந்துள்ள வீரச் செயல்கள் ராணுவ அதிகாரிகளால் மிகவும் புகழப் பட்டவை. அவற்றிற்காக அவனுக்கு உத்யோக உயர்வுக்கும் பிரத்யேகப் பரிசுக்கும் சிபார்சுகள் செய்யப்பட்டிருக்கின்றன. எப்படிப்பட்ட சங்கடமான நிலைமையிலும் சமாளித்துக் கொள்ள வல்லவன். அச்சம் என்பதை அறியாதவன். துக்கம் அவனைத் தொட்டதே யில்லை. அப்படிப்பட்ட ஜெயபால், மங்களாம்பாள் கடிதத்தைப்

படித்துக் கதிகலங்கி மதிமயங்கிக் கட்டிலிற் படுத்துக் கொண்டு தன் வலது கையால் இடதுபுறத்து நெஞ்சை அழுத்திப் பிடித்துக் கொண்டு கிடக்கலானான்.

மங்களாம்பாளை அவன் நேரிற் கண்டதில்லை யென்றாலும் படத்தில் இருக்கிற அவளுடைய உருவம் இடுப்பு வரையிலுந்தான் இருக்கிற தென்றாலும் இப்போது கட்டிலிற்கிடந்த ஜெயபாலுக்கு மங்களாம் பாளின் முழு உருவமும் முன்னால் நிற்பது போல் தோன்றியது. கடிதத்துக்கு உடனே பதில் எழுதும்படி அவள் கை கூப்பி வணங்கிக் கெஞ்சுவது போல் காணப் பட்டது. அண்ணா, அண்ணா வென்று அவள் கூப்பிடும் குரல் ஜெயபாலுக்குள்ள ஒரே ஒரு தங்கை விதவையாகி வீட்டோடிருப்பதை நினைப் பூட்டியது. அந்த நினைப்பு வந்தவுடன் அவனுடைய நெஞ்சம் பகீரென்று பற்றிக் கொண்டது. ஐயோ! இன்னும் சில நாட்களில் மங்களாம்பாளும் தன் தங்கையைப் போலவே விதவை யாகி விடுவாளே என்று விம்மினான். மங்களம் விதவை யாவது சங்கரன் மரணத்தைக் குறித்தவுடன் சட்டென்று சங்கரனுடைய உருவமும் ஜெயபாலுக்கு முன்னால் தென்பட்டது. இரண்டு உருவங்களையும் மாற்றி மாற்றிப் பார்த்து மருண்டு வெருண்டு மயங்கிக் கிடந்தான் ஜெயபாலன்.

ஜெயபாலன் சங்கரனிடத்தில் வைத்திருந்த பாசம் மிகவும் அபூர்வமானது. சங்கரனும் ஜெயபாலும் சந்திக்க நேரிட்ட நிமிஷத்திலேயே அவர்களுக்கும் தெரியாமல் ஒருவர் உள்ளத்தை ஒருவர் பற்றிக் கொண்ட உறவாகிவிட்டார்கள். அந்த உறவு ஆரம்பத் தில் ஒரு காரணமும் இல்லாமல் தானாகவே உண்டானதுதான். ஆனாலும் அந்த உறவு அதிகப் பட்டு அவர்களை ஆன்ம நேயர்களாக்குவதற்கு ஒரு

காரணமும் அமைந்தது. அந்தக் காரணம் என்ன வென்றால் இவர்கள் இருவரும் இவர்களுடைய தந்தையரிடத்தில் கொண்டுவிட்ட கோபத்தினால் சேனையில் வந்து சேர்ந்தவர்கள். இருவருக்கும் அவர்க ளுடைய தந்தையர்மீது ஏற்பட்ட சலிப்புக்குக் காரணமும் இவர்கள் காதலிக்காத பெண்களைக் கல்யாணம் செய்து கொள்ளும்படிக் காட்டாயம் செய்தது தான். அந்த ஒற்றுமை மிகவும் அதிசயிக்கத் தக்கது. அத்துடன் குணங்களிலும் ஆசாபாசங்களிலும் ஒத்த உணர்ச்சியுள்ள இயல்புடையவர்களாகவும் இருந்தார் கள். இப்படியாக அவர்களுடைய நட்பு நாளுக்கு நாள் வளர்ந்து உயிருக்குயிரான நேசத்தை உண்டாக்கி யிருந்தது. சங்கரனுக்குத் துன்பம் நேர்ந்த போதெல்லாம் உடுக்கை இழந்தவன் கைபோல உதவியவன் ஜெயபால். ஜெயபாலுக்கு அப்படி உதவி செய்ய வேண்டிய சந்தர்ப்பம் எதுவும் சங்கரனுக்கு வாய்க்கவில்லை யென்றாலும் சங்கரனுடைய அன்பும் ஜெயபால் அன்பை விட எந்த விதத்திலும் குறைந்ததல்ல. போர்முனைக்குப் போவதற்கு முன்னாலும் ராணுவ அதிகாரிகளிடத்தில் சங்கரனைவிட ஜெயபாலுக்கே செல்வாக்கு அதிகம். சண்டையில் ஜெயபால் காட்டிய சாமர்த்தியங்களால் இப்போது ஆங்கிலேய அதிகாரிகளிடத்தில் அவனுக்கு முன்னிலும் செல்வாக்கு அதிகம். அப்படியிருந்தும் சங்கரனைக் காப்பாற்ற முடியவில்லை. சங்கரன் தன் னுடைய உயிருக்குயிரான நேசன் என்பதைக்கூட சொல்லிக்கொள்ளக் கூடாத சூழ்நிலையினால் ஜெயபால் ஜெகப்துரை மூலமாகச் சங்கரனை விடுவிக்கப் பல வழிக ளில் பாடுபட்டும் பயனற்றதாகிவிட்டது. போர் முனைக்கு அனுப்பப்பட்ட சங்கரன் பகைவர்களுடன் சேர்ந்து கொண்டது மன்னிக்க முடியாத குற்றம்

என்பதை ஜெயபால் நன்குக அறிவான். ஆனலும் அவன் சங்கரனிடத்தில் வைத்திருந்த பித்துக்கொண்ட பிரியத்தால் எப்படியாவது சங்கரனைத் தப்பித்துக் கொள்ளச் செய்யலாமென்றே எண்ணியிருந்தான். அது முடியாமற் போய்விட்டதால் சங்கரனுக்கு விதிக்கப் பட்ட மரண தண்டனை தனக்கே வந்துவிட்ட மரண வஸ்தைபோல எந்த நேரத்திலும் சங்கரனைப் பற்றிய கவலையினல் வெந்து வெதும்பிக்கொண் டிருந்தான். அந்த வேதனையை மங்களத்தின் கடிதம் அதிகப்படுத்தி விட்டது அதிசயமல்ல.

கண்ணைத் திறக்காமல் கட்டிலில் படுத்திருந்த ஜெயபால் தூங்கிவிட்டானே அல்லது மூர்ச்சை யடைந்துவிட்டானே என்று நினைக்கும்படி நெடுநேரம் அசைவற்றுக் கிடந்தான். அந்தச் சமயத்தில் அவனைத் தேடிக் கொண்டு ஜேகப்துரை அங்கே வந்தார். ஜேக்பும் ஜெயபாலும் உத்தியோகத்தில் ஒரே அந்தஸ்துள்ளவர் கள். ஆனலும் ஜேகப்துரை ஜெயபாலுக்குக் கீழ் உதவியாளனுக அலுவல் பார்க்கப் பணிக்கப்பட்டி ருந்தார். ஏனெனில் ஜெயபால் அனுபவம் மிகுந்தவனுக அதிகாரிகளின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவன் என்ற தனல். ஜேகப் ஜெயபாலிடத்தில் மிகுந்த விசுவாச முள்ளவர் என்பதும் அதனல் சங்கரலிங்கன் விஷயத்தில் ஜெயபாலுடன் உள்ளன்போடு ஒத்துழைத்தவர் என் பதும் நமக்குத் தெரிந்தவைதாம். சங்கரனுக்குக் 'கமாண்டரின் சீப்' கருணை காட்டாமல் சுட்டுக் கொன்று விடும்படித் தீர்ப்புச் சொன்னதிலிருந்து ஜேகப் துரையும் ஜெயபாலைப் போலவே கவலைப்பட்டுக் கொண்டிருந்தவர். 'கமாண்டரின் சீப்' தீர்ப்புக்குப் பின்னும் ஜேகப் துரை தன்னுடைய சொந்த யோசனை யின் மேல் இன்னெரு முயற்சி செய்தார். அது என்ன

வென்ருல்: முன்னே கருணை விண்ணப்பம் செய்து கொண்டது சதிக்குற்றத்தில் சேர்க்கப்பட்ட பதினெரு பேரும் சேர்ந்து செய்து கொண்டது. அவர்களில் எட்டுப் பேருடைய மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றி, சங்கரன் முதலிய மூவரை மட்டும் சுட்டுக் கொன்றுவிடவே தீர்ப்புச் சொல்லப்பட்டது. இப்போது ஜேகப் துரையின் ஆலோசனைப்படி சங்கரலிங்கன், சையத் காதர், முனிராஜ் என்ற மூவரும் சேர்ந்து மீண்டும் 'கமாண்டரின் சீப்'புக்குச் செய்துகொண்ட பிரார்த்தனை. அந்த விண்ணப்பத்தை அங்கிருந்த தளபதியாகிய ஆங்கிலேய அதிகாரி டங்கன் ஏற்றுக் கொள்ள மறுத்தார். ஆனல் ஜேகப் துரையும் ஆங்கிலேயன் ஆனதால் அந்தப் பாசறையிலிருந்த வேறு சில ஆங்கிலேய அதிகாரிகளையும் தளபதிக்குச் சிபார்சு செய்யச் செய்தார். அதனல் தளபதி அந்த விண்ணப்பத்தை வேண்டா வெறுப்புடன் வாங்கி, 'கமாண்டரின் சீப்'புக்கு அனுப்பியிருந்தார். அந்த விண்ணப்பத்தை உத்யோக முறையில் அங்கிருந்து தளபதி அனுப்பினதோடு ஜேகப் துரை தன்னுடைய தமயன் தாமசுக்குச் சொந்த முறையில் மிகவும் அழுத்தமான ஒரு கடிதம் எழுதி அந்த விண்ணப்பம் வெற்றிபெறக் கூடிய முயற்சிகளைச் செய்ய வேண்டும் என்று மிகவும் கேட்டுக்கொண் டிருந்தார். தன்னல் செய்யக்கூடிய முயற்சிகளைச் செய்வ தாகவும் ஆனல் அது வெற்றிபெறுவது மிகவும் கடினம் என்றும் தாமஸ்துரை தம்பிக்கு எழுதிய பதில் இரண்டு நாட்களுக்கு முன்னல் வந்திருந்தது. விண்ணப்பம் வெற்றிபெறுவது மிகவும் கடினம் என்று தாமஸ்துரை எழுதிவிட்டதில் ஜெயபாலும் ஜேகப்துரையும் மிகவும் அச்சமடைந்தார்கள். என்ருலும் எப்படியாவது சங்கர

னுக்குக் கொஞ்சம் நல்லதிருஷ்டம் இருந்து 'கமாண்டரின் சீப்பினுடைய' மனசை மாற்றிவிடலாம் என்ற ஆவல் இவர்களுக்கு இருந்துகொண்டே யிருந்தது. 'கமாண்டரின் சீப்'பின் தீர்ப்பை தினமும் எதிர்பார்த்து ஏங்கியிருந்தார்கள்.

கண்களை மூடிக்கொண்டு கட்டிலிற் கிடந்த ஜெயபால் தூங்கிவிடவுமில்லை; மூர்ச்சையடைந்து விட்டவனும் அல்ல. சங்கரனைப் பற்றியே எண்ணிக்கொண்டு தன்னையே மறந்திருந்தான். அந்த எண்ணங்கள் எங்கெங்கோ ஓடித் திரிந்துவிட்டுக் கடைசியாகச் சங்கரனுக்கும் அவனுடன் சேர்ந்த இருவருக்கும் கமாண்டரின் சீப் கருணைகாட்டி மரண தண்டனையை மாற்றிவிட்டது போல ஒரு காட்சியைக் கவனம் செய்துகொண்டிருந்தன. கற்பனை செய்துகொண்ட அந்தக் காட்சி அவனுடைய மன வேதனையைக் கொஞ்சம் குறைத்திருந்தது.

அந்தச் சமயத்தில்தான் ஜேகப்துரை அங்கே வந்தது. அவசரமாக வந்த ஜேகப்துரை, ஜெயபால் படுத்திருந்த கட்டிலுக்கு அருகில் வந்த காலடி ஓசை ஜெயபாலின் கற்பனைக் காட்சியைக் கலைத்துவிட்டது. ஜெயபால் கண்ணைத் திறந்தான். அந்த நேரத்தில் ஜெயபால் படுப்பதோ தூங்குவதோ வழக்கமில்லை என்பதை அறிந்திருந்த ஜேகப், ஜெயபாலின் கலங்கியிருந்த கண்களையும் துன்பம் தோய்ந்த முகத்தையும் பார்த்துவிட்டு,

"என்ன ஜெயபால் ஏதேனும் அசௌக்யமா?" என்றார்.

"அசௌக்யம் ஒன்றுமில்லை" என்று சொல்லிக் கொண்டே ஜெயபால் எழுந்து வந்து, தான் ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு இன்னொரு நாற்காலியைக் காட்டி நண்பரை அமரச் செய்து மேஜை

யின்மீது கிடந்த மங்களாம்பாளின் கடிதத்தை எடுத்து ஜேகப்பிடம் கொடுத்து அதைப் பார்க்கச் சொன்னான்.

ஜேகப்துரை அதைப் படித்துப் பார்த்தார். உடனே அவருடைய முகம் சுருங்கிவிட்டது. உதடுகள் பிரிந்தன. கண்களைப் பரக்க விழித்து ஜெயபாலைப் பார்த்து,

"இந்தப் பெண்ணின் கடிதமா?" என்று மேஜையின் மீதிருந்த மங்களாம்பாளின் படத்தைச் சுட்டிக் கேட்டார்.

"ஆம் அந்தப் பெண்ணின் பரிதாபத்துக்காகவாவது கடவுள் கருணைபுரிந்து சங்கரன் மரண தண்டனையை மாற்றவேண்டும்."

"ஐயோ பரிதாபம்! கடவுள் கருணை புரியவில்லையே! என்ன செய்யலாம்? நாமும் நம்மாலான எல்லா முயற்சிகளையும் செய்துவிட்டோம். பயனில்லையே" என்று ஜேகப் நாக்குளறச் சொல்லிக் கண் கலங்கினார்.

"ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள் 'கமாண்டரின் சீப்' கருணை காட்டுவாரென்றே எனக்குத் தோன்றுகிறது" என்று ஜெயபால் சொல்லி முடிக்குமுன் ஜேகப்துரை தம் சட்டைப் பையிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்து 'இதைப் பாருங்கள்' என்று ஜெயபாலிடம் கொடுத்தார். அந்தக் காகிதத்தில் அன்றைய தபாலில் தளபதிக்கு வந்த 'கமாண்டரின் சீப்' அவர்களுடைய உத்தரவின் நகல் வாசகம் இருந்தது. அது ஜேகப்துரை குறித்துக்கொண்டு வந்தது.

அந்த உத்தரவு:

'சங்கரலிங்கன், சையத் காதர், முனிஜி ஆகிய மூவருக்கும் கருணை காட்டக் காரணமே இல்லை. அடுத்த மாதம் 27-ஆம் தேதி அந்த மூவரையும் ராணுவ முறைப்படி சுட்டுக் கொன்றுவிட்டு 'ரிபோர்ட்' செய்ய வேண்டும்? என்பதுதான்.

மங்களாம்பாளின் நோன்பு

விருதூருக்கு வந்த மங்களாம்பாள் மாமனூர் சொல்லியபடி ஜோசியர் எழுதிக் கொடுத்திருந்த நியமங்களில் துளிகூடப் பிசகாமல் சிவன் கோயில் சேவை செய்து கொண்டிருந்தாள். இயல்பாகவே தெய்வ நம்பிக்கை மிகுந்த மங்களம் இப்போது தன் உயிரினும் சிறந்த கணவனுடைய நலத்துக்காக மிகவும் பக்தி சிரத்தையுடன் நோன்பு காத்தாள் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? தெய்வ பக்தியினால் நாம் கோரியதெல்லாம் கிடைத்து விடுவதில்லை யென்றாலும் மனிதருக்குத் துன்பம் வந்து விட்ட காலத்தில் அந்தத் துன்பத்தின் கொடுமையைக் குறைப்பதற்குத் தெய்வ நம்பியைக் காட்டிலும் சிறந்த சாதனம் வேறென்றுமில்லை யென்பது ஆன்றோர் கண்ட அனுபவம். அந்த உண்மைக்கிணங்க வசந்த புரியில் இருந்தபோது ஒரு நிமிஷங்கூட ஓயாமல் கணவனைப் பற்றியே கவலைப்பட்டுக் கொண்டிருந்த மங்களாம்பாள் இப்போது சிவன் கோயில் சேவையினாலும் பார்வதி தோத்திரப் பாராயணத்தாலும் துக்கப் படுவதற்கு நேரமில்லாமல் நிம்மதி மிகுந்தவளாகவே இருந்தாள். விடியுமுன் எழுந்து நீராடி, வீட்டில் பூசை அறையில் வெகு நேரம் குல தெய்வப் பிரார்த்தனை செய்து விட்டுச் சிவன் கோயிலுக்குப் போவாள். பத்து மணி வரை எழுதிக் கொடுத்திருந்த முறைப்படி பார்வதி தோத்திரம் செய்து ஆலய வழிபாடுகளை முடித்துக் கொண்டு வீட்டுக்கு வந்து இலேசாக ஆகாரம் உண்ட பின் சிறிது நேரம் ஓய்வு கொள்வாள். பனிரண்டு மணிக்கு மேல் ஐந்து மணி வரைக்கும் தெய்வ பக்திக்கு

அனுகூலமான புத்தகங்களைப் படித்துக் கொண்டிருப்பாள். இடையிடையே தாயார், தங்கை, தம்பிமார்கள், அத்தை முதலானவர்களுக்கு ஒத்தாசையாக வீட்டுக் காரியங்களையும் கவனிப்பாள். ஐந்து மணிக்கு மேல் முகங்கழுவித் தலைவாரித் திலகமிட்டுக்கொண்டு வயசுக் கொத்த அலங்காரங்களைச் சிறிதும் ஆடம்பரமில்லாமல் செய்துகொண்டு ஆறு மணிக்கு முன்னால் ஆலயத்துக்குப் போய் விடுவாள். எட்டு மணிக்குமேல் வீட்டுக்கு வந்து கோவிலில் நைவேத்தியம் செய்யப்பட்ட இரண்டொரு பழங்களையும் கொஞ்சம் பாலையும் மட்டும் உண்பாள். பத்துப் பதினைஞ்சு மணி வரையிலும் ஏதோ படிப்போ பாராயணமோ செய்து கொண்டிருந்து விட்டுப் படுப்பாள். காலை நேரத்தில் அவளுடைய தாயாரும் மாலை நேரத்தில் அவளுடைய தந்தையும் அவளுடன் ஆலயத்துக்குப் போய் வருவார்கள்.

இப்பட்டிப்பட்ட அனுஷ்டானத்தால் அவளுடைய தேகம் சற்றே இளைத்தது என்றாலும் அவளுடைய பெண்மையழகு புடம் போட்ட பொன்னைப்போல் முன்னிலும் பல மடங்கு பொலிவுற்றது. முற்றுந் துறந்த முனிவர்களும் மோகித்துவிடக்கூடிய அந்த அழகை எதிர் வீட்டுக் குப்பன் அவள் கோவிலுக்குப் போகும்போதும் வரும்போதும் பார்த்துப் பார்த்துப் பரவசப்படுவான். கற்புக் கனலாகிய அவளிடம் காமக் குறும்புகள் காட்ட முடியாது. முன்னமேயே சூடுண்டவன். அத்துடன் சங்கரலிங்கன் மங்களாம்பாளுக்கு எழுதியிருந்த முதல் கடிதத்தை இவன் வாங்கி மறைத்து விட்டதைச் சங்கரலிங்கன் கண்டுபிடித்துக் கண்டித்தான். அதற்காகக் கோபமும் பொறுமையுங் கொண்டு குப்பன் சங்கரனிடத்தில் பகைமை கொண்டவன். அதனால் குப்பனுக்கு மங்களத்தின் அழகினால் உதிக்கும் காம

ஆசை அவள்மீது மாச்சரியமாகவே மாறிவிடும். ஆனால் அந்த மாச்சரியத்தைக் காட்டிக் கொள்ள மாட்டான். முன் செய்த குறும்புத்தனங்களை யெல்லாம் விட்டுவிட்டு மிக்க நல்லவனாகிவிட்டவன் போலவே நடித்துக்கொண்டு எப்போதும்போல் மகாதேவரிடத்திலும் அவருடைய மனைவியிடத்திலும் உறவாக இருந்து வந்தான். மங்களாம்பாள் குப்பனைப்பற்றிய சிந்தனையே கொள்ளாமல் தன்னுடைய நோன்பிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தாள். அடிக்கடி குப்பன் மங்களத்தின் பெற்றோரிடம் வந்து பேசிக் கொண்டிருந்தாலும் அவள் கவனம் செலுத்துவதில்லை.

தான் சிவன் கோயில் சேவை செய்வது தன்னுடைய ஜாதகத்திலுள்ள தோஷத்துக்குப் பரிகாரமாக என்ற அளவில்தான் மங்களத்துக்குத் தெரியும். அந்தச் சேவையினால் கணவன் தன்னைப் பிரிந்திருக்கிற குறை தீர்ந்துவிடும் என்றும், விரைவில் அவனிடமிருந்து நல்ல சேதி வரும் என்றும் மட்டுந்தான் அவள் எண்ணியது. சங்கரலிங்கன் உயிரிழக்க நேரலாம் என்றும், மங்களத்தின் ஜாதகப்படி அவளுக்கு அப்போது மாங்கல்ய பலம் குறைவான தசை என்றும் ஜோசியர் சொன்னது அவளுக்குத் தெரியாது. அந்த விஷயத்தைச் சொன்னால் அவள் மனமுடைந்து போவாள் என்பதை அறிந்திருந்த அன்னபூரணியம்மாள் அதை மங்களத்திற்குச் சொல்லக் கூடாதென்று தன் கணவரைக் கேட்டுக் கொண்டாள். அந்தப்படியே சங்கரலிங்கன் சீக்கிரமாகத் திரும்பி வருவதற்காகவே அந்த சேவை என்று அன்னபூரணியம்மாள் மருமகளைத் தாய் வீட்டுக்கு அனுப்பும்போது சொன்னது.

மருமகளை விருதூருக்கு அனுப்பிய பின் கோபால கிருஷ்ணர் மகனிடமிருந்து ஏதேனும் சேதி வருமா வென்று ஏங்கி எதிர்பார்த்துக்கொண் டிருந்தார். ஒரு

சேதியும் வரவில்லை. ஒருக்கால் விருதூருக்கு வந்திருக்குமோ என்ற சபலம் வந்தது. உடனே அன்னபூரணியம்மாளுடன் கோபாலகிருஷ்ணர் மருமகளையும் சம்பந்திகளையும் பார்த்துவிட்டுப் போக விருதூருக்கு வந்தார். அங்கும் மகனைப்பற்றிய சேதி ஒன்றும் வராதிருந்ததைக் கண்டு வருந்தினர். அந்த வருத்தத்தோடு சம்பந்தியாகிய மகாதேவருடன் பேசிக்கொண் டிருந்த சந்தர்ப்பத்தில் மங்களத்தினுடைய மாங்கல்யத்துக்கு அபாயம் நேரலாம் என்று ஜோசியர் சொன்னதை மறந்தாற்போல் சொல்லிவிட்டார். சொல்லிவிட்டபின், தான் சொன்னது தவறென்று கண்டு அதை மங்களத்திடம் சொல்ல வேண்டாம் என்றும் சம்பந்தியிடம் கேட்டுக் கொண்டார். அப்போது சேவை செய்ய வேண்டிய ஒரு மண்டலம் முடிவடையக் கூடிய தருணம். நோன்பு முடிந்ததும் மங்களத்தைத் தம்முடன் அழைத்துக் கொண்டு போக வேண்டும் என்று அவளுடைய மாமனாரும் மாமியாரும் விரும்பினர்கள். ஆனால் மங்களம் இன்னும் ஒரு மண்டலம் சேவை செய்ய விரும்பினாள். அந்த விருப்பத்தை எல்லாரும் பாராட்டி, அவளை விட்டுவிட்டு கோபால கிருஷ்ணரும் அன்னபூரணியும் வசந்தபுரிக்குப் போய் விட்டார்கள். மங்களாம்பாள், பரிசுத்தமான பக்தியுடன் எந்த நேரத்திலும் தெய்வ சிந்தனையாகவே இருந்ததனால் கவலையோ களைப்போ இல்லாமல் சேவை செய்துகொண் டிருந்தாள். தினந்தினம் அவளுடைய தாயும் தந்தையும் அவளுடன் கோயிலுக்குப் போய் வந்தார்கள். கோயிலில் அவள் வழிபடும்போது கூடவேதான் இருந்தார்கள். ஆனாலும் அவர்களுடைய நினைவெல்லாம் மருமகன் என்னவானானோ மகளுடைய ஜாதக தோஷம் எப்படி முடியுமோ என்ற விசாரத்திலேயே வெம்பிக்கொண் டிருந்தது. மங்களத்தின்

தாயார் ஜானகியம்மாள் அடிக்கடி மகளுக்குத் தெரியாமல் அழுதுகொண் டிருப்பாள். ஆனால் மகளுக்கு முன்னால் தான் கண்ணீர் வடிப்பதைக் காட்டிக் கொள்ள மாட் டாள். இயல்பாகவே தாய்க்குப் பெண்மக்களின்மீது பாசம் அதிகம். ஒரு தாய் தன்னுடைய மகளுக்கு வேறு எப்படிப்பட்ட துன்பம் நேர்ந்தாலும் சகித்துக்கொண்டு தன்னாலியன்ற ஆறுதல்களைச் சொல்லி, வேண்டிய உதவிகளையும் செய்வாள். ஆனால் தன் மகள் அமங்கலி யாகி விடுவாளோ என்பதைச் சகிக்க மாட்டாள்.

மங்களத்தின் தந்தை மகாதேவர், மகளிடத்தில் தாயைவிடப் பலமடங்கு பாசமுள்ளவர். மங்களத்தின் அருமை பெருமைகளை அதிகம் அறிந்தவர் அவர்தான். மகளின் நிலைமையைப் பற்றிய விசாரமும் அதிகம் அவ ருக்குத்தான். ஆனால் அதற்காக அவர் தன் மனைவியைப் போல் துக்கப்பட்டுக் கொண்டிருப்பதில்லை. அவர் ஆண் பிள்ளை. அத்துடன் அவர் வேதாந்த மனப்பான்மையுள்ள வர். 'மனிதப் பிறவியே துன்பமும் துயரமும் நிறைந்தது. ஒவ்வொருவரும் அவரவருடைய கர்ம பலன்களை அனுப விக்கத்தான் தீரவேண்டும். துன்பமோ இன்பமோ ஒரு வர் செய்த பாவ புண்ணியங்களுக்குத் தக்கபடிதான் வரும். அது கடவுளின் கட்டளை' என்ற நம்பிக்கையுள்ளவர். மகாத்மா காந்தி தமது உயிரைப் பணயம் வைத்து உண்ணாவிரதம் இருக்கும் சமயங்களில் அவருடைய பக்தர் கள் அவர் இறந்து விடுவாரோ என்று ஏங்கும்போது 'நான் இப்போது இறந்துபோக மாட்டேன். எவ்வளவு காலம் நான் உயிருடன் இருந்து பணியாற்ற வேண்டும் என்று இறைவன் விதித்திருக்கிறானோ அவ்வளவு காலமும் நானே விரும்பினாலும் இறந்துவிட முடியாது. எப்போது இறைவன் என்னை அழைத்துக் கொள்ள விரும்புகிறானோ அப்போது எத்தனை வைத்திய

நிபுணர்கள் சேர்ந்து முயன்றாலும் என் உயிரைக் காக்க முடியாது' என்று சொன்னதை மகாதேவர் மந்திரம் போல் மனப்பாடம் செய்து கொண்டு அடிக்கடி அதைப் பிறருக்குச் சொல்லுவதுண்டு. அதனால் இறைவன் திருவுள்ளம் எதுவோ அதுதான் நடக்கும் என்று மருமகனைப் பற்றிய மனக்கவலை அதிகப்படாதபடி அடக்கிக் கொள்வார். சங்கரலிங்கம் யுத்தம் நடத்து கின்ற சேனையில் ஒரு உத்யோகஸ்தன். அந்தச் சேனை போர் முனைக்குப் போவதற்கு முன்னால் அவன் எழுதியிருந்த கடிதத்தில், தான் போர் முனைக்குப் போவதில்லை யென்றும் டாக்டர் சிபார்சின் மேல் பின்னணியிலேயே வேலை பார்க்க ஏற்பாடாகி யிருக்கிற தென்றும் எழுதியிருந்தான். அதுதான் அவனிடமிருந்து வந்த கடைசிக் கடிதம். அதற்குப்பின் கடிதமே வரவில்லை. அவன் போர்முனைக்குப் போகா திருந்தால் கடிதம் வராதிருக்கக் காரணமில்லை. அதனால் அவன் போர் முனைக்குப் போயிருக்கத்தான் வேண்டும். அப்படியானால் அவனுக்கு அபாயம் நேர்ந்திருக்கலாம் என்று நினைக்க நியாயமிருக்கிறது. அந்தச் சூழ் நிலையினாலும் மங்களாம்பாளின் ஜாதகப்படி அவளுடைய மாங்கல்யத்துக்குத் தீங்கு நேரிடக் கூடிய தசையாக இருப்பதாக ஜோசியர் சொன்னாரென்று கோபால கிருஷ்ணர் தன்னிடம் சொன்னதனாலும் மகாதேவர் தம்முடைய மருமகனைப் பற்றி அப்படிப்பட்ட சேதி வந்தாலும் வரலாம் என்றே எண்ணினார். இந்த எண்ணம் உறுதிப்படுவதற்கு இன்னொரு காரணம், மங்களாம்பாள் ஜெயபாலுக்கு எழுதிய கடிதத்துக்கும் பதிலே வராதது. அதனால் எப்படிப்பட்ட துக்கமான சேதிக்கும் தம்மைத் தயார் செய்து கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தார். ஆனால் அந்தத் தீர்மானம்

மகளைக் காணுத போதெல்லாம் திடமாகவே இருக்கும். மங்களாம்பாளைக் கண்டவுடனே அது கலங்கிவிடும். மகளுக்குத் துணையாகக் கோயிலுக்குப் போகும் போதெல்லாம் குனிந்த தலை நிமிராமல் மகாதேவருடைய மனம் மகளைப் பற்றிய விசாரத்திலேயே மயங்கும். எனினும் மகளோடு பேசும்போதெல்லாம் தம்முடைய மனக்குழப்பத்தைக் காட்டிக் கொள்ளாமல் சங்கரலிங்கன் சௌக்கியமாகத் திரும்பிவர பரமேஸ்வரனும் பரமேஸ்வரியும் அருள்புரிவார்கள் என்ற நம்பிக்கையைப் பலப்படுத்தியே பேசுவார். உண்மையான தெய்வ பக்தியுடன் பிரார்த்தனை செய்தால் எந்தக் காரியமும் கை கூடும் என்ற நம்பிக்கையை மகாதேவரே மங்களாம்பாளுக்கு ஊட்டியவர். இப்போது தம்முடைய மகளோ அந்த நம்பிக்கையோடு சிவன் கோயில் சேவையினால் தன் கணவன் சுகமாக வந்து விடுவானென்றே பிரார்த்தனை செய்துகொண்டிருக்கிறாள். அப்படியிருக்கையில் மகாதேவர் தம்முடைய மனதிலிருக்கும் சந்தேகங்களைக் காட்டிக் கொள்ளுவாரா? மகளோடு பேசுவது மருமகன் வந்துவிடுவான் என்ற நம்பிக்கையைப் பற்றி. மனதோடு பேசுவது மருமகன் வருவானா என்ற அவநம்பிக்கையைப் பற்றி. இப்படியாக மங்களாம்பாளின் சிவபூசை நடந்துகொண்டிருந்தது. ஏறத்தாழ மூன்று மாதகாலம் இடைவிடாத சேவைக்குப் பின்னும் சங்கரலிங்கனைப் பற்றிய எந்தச் சேதியும் வந்த பாடில்லை. மகளுடைய நம்பிக்கையும் குலைந்து அவள் மனமுடைந்து போவாளே என்ற ஏக்கம் மகாதேவருக்கு வந்துவிட்டது. சங்கரலிங்கன் யுத்தமுனைக்குப் போய் அங்கே அவனுக்கு ஏதேனும் அபாயந்தான் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று தம்முடைய மனதிலிருந்த ஊகத்தைச் சிறுகச் சிறுக மகளுக்குச் சொல்லி

அவளுடைய மனதையும் தயார் செய்து விடலாமா என்ற எண்ணம் மகாதேவருக்கு அடிக்கடி வருவதுண்டு. ஆனால் அப்படிச் செய்யத் துணிவு பிறக்கவில்லை.

கடிகாரம் தவறினாலும் மங்களாம்பாள் கோயிலுக்குப் புறப்படும் நேரம் தவறாது. கோயிலிலிருந்து திரும்பி வரும் நேரமும் ஏறத்தாழ அதே மாதிரி இருக்கும். அந்த நேரங்களில் எதிர் வீட்டுக் குப்புச்சாமி தவறாமல் மங்களாம்பாளைப் பார்ப்பதற்கென்றே தன் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்துகொண்டிருப்பான். மங்களாம்பாள் கற்புக் கனல் என்பதைக் குப்பன் முன்பே கண்டு கொண்டவன். இருந்தாலும் அவனுக்கு மங்களத்தின் மேலுண்டான காம ஆசை இருந்துகொண்டேயிருந்தது. அலங்காரங்கள் செய்து கொள்ளாமலும் கண்ணைக் கவரும் இயற்கை அழகுடன் கையில் நைவேத்தியத் தட்டத்துடன் மங்களாம்பாள் ஒரு தெய்வப் பெண்போல் கோயிலுக்குப் போவதைக் காணும் போதெல்லாம் குப்பனுடைய காம ஆசை கரை கடந்து விடுவதுபோல் பொங்கும். ஆனால் அவள் நெருங்க முடியாத நெருப்பு என்பதனால் உடனே அந்தக் காம ஆசை அவள்மீது கோபமாக மாறும். அத்துடன் குப்பனுக்குச் சங்கரலிங்கத்தின் மேலுள்ள குரோதமும் கூடவே தொடரும். எனவே மங்களாம்பாளைப் பார்க்கும் போதெல்லாம் குப்புச்சாமிக்குக் காமமும் கோபமும் குரோதமும் ஏக காலத்தில் உதிக்கும். காமமோ கொண்டு செலுத்த முடியாது. கோபத்தையோ காட்டிக்கொள்ளக் கூடாது. அது மகாதேவரின் மனத்தாபத்தைத்தான் உண்டாக்கும். குரோதத்தை வேண்டுமானால் சமயம் கிடைத்தால் கொண்டு செலுத்திவிடலாம். அதற்கு வாய்ப்புக் கிடைக்குமா வென்று காத்திருந்தான்.

மங்களாம்பாள் சிவன் கோயில் சேவைக் கென்று விருதூருக்கு வருவதற்கு முன்பே குப்பனுக்குச் சங்கரலிங்கனைப் பற்றிய சகலமும் தெரியும். சங்கரன் பட்டாளத்தில் உத்யோகம் பார்த்ததும் அந்தப் பட்டாளம் பர்மாவில் நடக்கும் யுத்தத்தில் ஈடுபட்டிருந்ததும் குப்பன் அறிவான். சங்கரனிடத்திலிருந்து கடைசியாக வந்த கடிதமும் அந்தக் கடிதத்தில் இருந்த சேதியும் அதற்குப்பின் கடிதமே வராததும் மகாதேவர் சொல்லக் குப்பன் கேட்டிருந்தான். மகாதேவர் குப்பனைத் தம்முடைய குடும்பத்துக்கு உபகாரியான நண்பனுகவே கருதி வந்ததால் மங்களாம்பாளுடைய ஜாதகத்தில் தோஷம் இருப்பதாகக் கோபாலகிருஷ்ணர் சொன்னதையும்கூட மகாதேவர் குப்பனிடத்தில் சொல்லிவிட்டிருந்தார். மங்களத்தின் ஜாதக தோஷத்தால் அப்போது, அவள் தன் கணவனை இழந்துவிடவும் கூடும் என்பதை அறிந்த குப்பன் அப்படி ஒருசேதி வந்தால் தன்னுடைய வஞ்சத்தைத் தீர்த்துக் கொண்டது போல் களிப்படையத் தயங்க மாட்டான்.

பர்மாவில் நடக்கும் யுத்தத்தைப் பற்றிய விவரங்களைத் தினசரிப் பத்திரிகைகளில் அப்போதைக்கப்போது படிப்பது குப்பனுடைய பழக்கம். சங்கரலிங்கனைப் பற்றிய சேதி ஒன்றுமே தெரியவில்லை யென்ற ஏக்கம் மகாதேவர் குடும்பத்தில் உண்டானபின் தினசரிப் பத்திரிகைகளில் வரும் யுத்த சமாசாரங்களைக் குப்பன் முன்னிலும் அதிகமாகக் கூர்ந்து கவனிக்கலானான்.

குமாஸ்தா வேலையின் கொடுமையினால் மகாதேவருக்குப் பத்திரிகைகளைப் படிப்பதற்கான அவகாசம் தினந்தினம் கிடைப்பதில்லை. தாமே பத்திரிகையைப் பார்க்க முடியாத நாட்களில் குப்பனைக் கேட்டுத்தான் பர்மா விஷயங்களை அறிந்து கொள்வார். அவரே

பத்திரிகையைப் படிக்கிற தினங்களில்கூட ஏதேனும் தம்முடைய கண்ணுக்குப் படாமல் விட்டுப் போயிருக்குமோ என்று கச்சேரியிலிருந்து வந்ததும் குப்பனைக் கேட்டுத்தான் திருப்தியடைவார்.

சில நாட்களில் மகாதேவர் இரவு பத்துமணிவரையிலும் கூடக் கச்சேரியில் இருந்துவிட நேரும். அந்நேரத்துக்குப் பின் வந்தாலும் முதலில் குப்பனைப் பார்த்துப் பர்மா விஷயம் ஏதாவது பத்திரிகையில் வந்ததா என்பதைக் கேட்டுவிட்டுத்தான் சாப்பிடப் போவார். அந்தச் சமயங்களில் "இப்படிப் பத்திரிகை பார்க்கக்கூடக் கொஞ்சம் நேரம் கிடைக்காத இந்தக் குமாஸ்தா வேலையில் ஏன் இப்படிக் கஷ்டப்படுகிறீர்கள்" என்றுகூடக் குப்பன் பரிதாபம் காட்டுவான்.

மகாதேவர் விரும்பியிருந்தால் அவர் விருதூருக்கு வராமலேயே குமாஸ்தா வேலையை விட்டுவிட்டு கோபால கிருஷ்ணர் வீட்டிலேயே குடும்பத்தோடு இருந்திருக்கலாம். அன்னபூரணியம்மாள் இவருக்கு வேண்டிய சகல சௌகரியங்களையும் செய்து கொடுத்து வெகு சந்தோஷ மடைந்திருப்பாள். கோபால கிருஷ்ணரும் அதை ஆமோதித்திருப்பார். உண்மையில் மகாதேவரை விருதூருக்கு மாற்றிவிட்ட செய்தி கேட்டபோதே அன்னபூரணியம்மாள் மகாதேவரின் மனைவி ஜானகியிடத்தில் மகாதேவர் தம்முடைய வேலையை ராஜினாமாச் செய்துவிட்டு, அவர்கள் எப்போதும் தன்னுடனேயே தங்கிவிட வேண்டுமென்று பலமுறை வேண்டிக் கொண்டதுண்டு. ஜானகிக்கும் அதில் சந்தோஷம்தான். ஆனால் மகாதேவர் அதை விரும்பவில்லை. எட்ட இருந்துகொண்டு எவ்வளவு உதவிகளைப் பெற்றுக் கொண்டாலும் குற்றமில்லை; ஆனால் சொந்த உத்தியோகத்தையும் சுதந்தர

வாழ்க்கையையும் இழந்துவிட்டுப் பிறருக்குச் சுமையாக இருப்பது எவ்வளவு சுகமுள்ளதானாலும் கூடாது என்பது அவருடைய கொள்கை. அன்னபூரணியம்மாள் சொன்னதைத் தம்மிடம் சொல்லி அதற்கிசைந்துவிடச் சொன்ன ஜானகிக்கு மகாதேவர் புத்திசொல்லி அதை மறுத்துவிட்டார்.

சம்பந்தி வீட்டிலிருந்து என்ன சலுகை வந்தாலும் அதை மனைவி மக்களுக்கு விட்டுவிட்டு மகாதேவர் எப்போதும் எளிய வாழ்க்கையிலேயே இன்பங் கண்டார்.

மகாதேவர் சொந்தமாகத் தினசரிப் பத்திரிகை வாங்கும் வழக்கமே இல்லாதவர். சொற்ப சம்பளக்காரர். பெரிய குடும்ப முள்ளவர். கோபால கிருஷ்ணருடைய உறவு உண்டாவதற்கு முன்னால் எப்படிச் சிக்கனமாகக் குடும்பம் நடத்தினாரோ, அப்படியேதான் இப்போதும். அவர் சொந்தமாகப் பத்திரிகைகள் வாங்குவதில்லை என்பதற்குச் சிக்கனம் மட்டுமேயன்றி வேறொரு காரணமும் உண்டு. அது என்னவெனில் பத்திரிகைகளைப் படிப்பதற்குச் செலவாகும் காலத்தைப் பகவத் விஷயமான நூல்களைப் படிப்பதில் கழிப்பதே நல்லதெனக் கருதுபவர். மகாத்மா காந்தி, 'பத்திரிகைகளைப் படிக்காதிருப்பவர்களுக்கே நிம்மதி அதிகம்' என்று, கலவரமுண்டாக்கக் கூடிய விஷயங்கள் பத்திரிகைகளில் வெளியாகும் சமயங்களில் சொல்வதுண்டு. அதைப் பின்பற்றி மகாதேவர் பத்திரிகைகளைப் படிப்பதற்கு ஆர்வம் கொள்வதே யில்லை. ஆனாலும் இப்போது தம்முடைய அருமை மகளுக்காக மருமகனைப் பற்றிய செய்தி ஏதேனும் வராதா என்று கவனிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. அதற்காகப் பிறருக்கு வரும் பத்திரிகைகளையாவது கிடைத்தபோதெல்லாம் பார்ப்பதுண்டு.

தாலுக்கா கச்சேரியில் தாசில்தாருக்கு வரும் பத்திரிகை அடிக்கடி மகாதேவருக்கும் பார்க்கக் கிடைக்கும். அங்கே பார்க்கத் தவறினால் குப்புசாமியைக் கேட்டுத் தெரிந்து கொள்வார்.

வழக்கம்போல் குப்புசாமி ஒருநாள் காலையில் அன்று வந்த தினசரிப் பத்திரிகையைப் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது ஏதோ ஒரு செய்தியைப் படித்துவிட்டு அவன் தன்னையும் அறியாமல் 'ஐயோ!' என்று அலறிவிட்டான். அதைக் கேட்டு அவனுக்குக் 'காப்பி' கொண்டுவந்த அவனுடைய வேலைக்காரன் திடுக்கிட்டுக் 'காப்பி டம்ளரை'க் கீழே போட்டுவிட்டான். 'டம்ளர்' கீழே விழுந்த ஓசையைக் கேட்ட பிறகுதான் குப்பன், தான் 'ஐயோ' என்று கத்திவிட்டதை உணர்ந்து சமாளித்துக் கொண்டான். குப்பன் பொல்லாதவன்தான் என்றாலும் அவனும் பகுத்தறிவு படைத்த மனிதப் பிறவிதானே? அவனுக்கு மட்டும் மனமும் மனச் சாட்சியும் இல்லாமலா போகும்? மிருகங்கள் தம்முடைய உடலைப்பற்றிய இன்பதுன்ப உணர்ச்சிகளை மட்டுந்தான் அறிய முடியும். ஆனால் மனிதன் தன்னுடைய உடலைப்பற்றிய உணர்ச்சிகளை அறிவது மட்டுமல்லாமல் இன்னொரு உடலின் இன்ப துன்பங்களையும் எண்ணிப் பார்க்க முடியும். அதனால் தான் மனிதனை மிருகங்களுக்குள்ள ஐந்து உணர்ச்சிகளுக்குமேல் ஆறுவது உணர்ச்சியும் உள்ளவனைச் சொல்வது. இந்த ஆறுவது உணர்ச்சிதான் பகுத்தறிவு எனப்படுவது. இந்தப் பகுத்தறிவுதான் மனிதனுக்கு அவனுடைய தெய்வத் தன்மையை உணரச் செய்கிற ஒளி. இந்த ஒளி சிலரிடத்தில் பிரகாசமுள்ளதாகவும் பெரும்பாலும் மக்களிடத்தில் மங்கலாகவும் இருக்கிறது. சிலரிடத்தில் அது இருக்கிற இடமே தெரியாமல்

மறைந்து கிடக்கும். அது எவ்வளவுக் கெவ்வளவு ஒருவன் உள்ளத்தில் பிரகாசிக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவு அவன் தெய்வத் தன்மை அதிகப்பட்டவனாகின்றான் ; எவ்வளவுக் கெவ்வளவு மங்கியிருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு மிருகத் தன்மை மிகுந்தவனாகிறான். இப்படி மிருகத் தன்மையே மிகுந்தவனிடத்திலும் அந்த ஒளி சிற்சில சமயங்களில் பளிச்சிட்டு மின்னி விடுவதுண்டு.

அப்படிக் குப்புசாமியின் மனதில் அவனையும் அறியாமல் பளிச்சிட்டு மின்னிய பச்சாத்தாப உணர்ச்சி தான் அவனை 'ஐயோ' என்று கத்திவிடச் செய்து விட்டது. இப்படிக் குப்பனுடைய உள்ளத்தையும் குலுக்கிவிட்ட பத்திரிகைச் செய்தி என்னவென்றால் "பர்மாவில் தோல்வியடைந்து பிடிபட்ட நேதாஜியின் 'இந்திய தேசிய சேனையில்,' இந்திய சர்க்கார் சேனையிலிருந்து நேதாஜியுடன் சேர்ந்து கொண்டவர்களும் இருந்தார்கள். அவர்கள் இந்திய சர்க்காருக்குச் செய்த துரோகத்துக்காக ராணுவ விசாரணையில் பதினேரு பேர்களைச் சுட்டுக் கொன்றுவிடும்படித் தீர்ப்பு சொல்லப் பட்டது. அந்தப் பதினேரு பேரும் 'அப்பீல்' செய்து கொண்டார்கள். அந்த 'அப்பீலில்' அவர்களுள் எட்டுப் பேருடைய மரணதண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது. மற்ற மூவருக்கும் மரண தண்டனையே ஊர்ஜிதம் செய்து அவர்களைச் சுட்டுக் கொன்றுவிடும் படிச் சேனாதிபதி உத்தரவு செய்துவிட்டார். அம் மூவருள் 14-ஆவது ரெஜிமென்டின் கர்னல் 'ஷங்கர்ஜி' யும் ஒருவர். சையத் காதர், முனிஜி, ஷங்கர்ஜி என்ற அந்த மூவரும் மறுபடியும் மன்னர் பிரானுடைய கருணைக்காகக் கவர்னர் ஜெனரலுக்கு மனுச் செய்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது" என்பது.

இதைப் படித்தவுடனே குப்பனுடைய மனித சுபாவம் பளிச்சிட்டு மின்னிய பச்சாத்தாபத்தால் 'ஐயோ' என்று அதிர்ந்து விட்டான். மின்னிய பச்சாத்தாபம் மின்னலைப் போலவே மறைந்து அவனுடைய மிருக சுபாவம் மேலிட்டு, அந்தச் செய்தியால் சங்கர லிங்கன்மீது தன் மனதில் குடிகொண்டிருந்த மாச்சரியத்தைத் தீர்த்துக்கொண்டது போன்ற ஒரு உணர்ச்சியும் உண்டாயிற்று. காமவெறியின் காரணமாக அவனுக்கு மங்களாம்பாள் மீதிருந்த கோபமும் குறைந்துவிட்டது போன்ற ஒரு எண்ணமும் குறுக்கிட்டது. உடனே இந்தச் செய்தியை மங்களாம்பாள் அறியும்படிச் செய்து விடவேண்டு மென்ற ஆசையும் உண்டாயிற்று. அடுத்த கணமே மீண்டும் பச்சாத்தாபக் குணம் மின்னி, அப்படிச் செய்தால் மங்களாம்பாள் அதனால் துடிதுடித்து மன முடைந்து மாண்டுபோனாலும் போகலாமே, அது தன் மீது மாசற்ற நம்பிக்கை வைத்திருக்கும் மகாதேவருக்கு மாளாத துயரத்தை உண்டாக்குமே என்றும் மனத்தான்.

அந்தச் சமயத்தில் மங்களமும் அவளுடைய மாதாவும் கோயிலுக்குப் போயிருந்தார்கள். மகாதேவர் கச்சேரிக்குப் போவதற்காக வீட்டைவிட்டு வெளியே வந்தார். அவரைக் கண்டவுடன் குப்பனுடைய மனதிலுதித்த மற்ற எண்ணங்களெல்லாம் ஒதுங்கி இந்தச் செய்தியை அவருக்கு மட்டுமாவது உடனே தெரிவித்து விடத் தீர்மானித்து அவருக்கு எதிரில் ஓடிப்போய்த் தன் கையிலிருந்த பத்திரிகையைக் காட்டி அவரைத் தன் வீட்டுக்கு அழைத்தான். குப்பன் கையில் பத்திரிகை இருப்பதைப் பார்த்தவுடன் அதில் தன் மருமகனைப் பற்றிய செய்திதான் வந்திருக்கலாம் என்று அனுமானித்த மகாதேவர் குப்பனைத் தொடர்ந்து அவனுடைய வீட்டுக்குள் சென்றார்.

குப்பன் தானுக ஒன்றும் சொல்லாமல் பத்திரி கையை அவரிடம் தந்து அந்தச் செய்தியிருந்த பத்தியைச் சுட்டிக் காட்டினுன். அதைப் படித்த மகா தேவர் அடைந்த வேதனையை என்னென்று சொல்வது? அவர் மிகவும் வேதாந்த மனப்பான்மையுடையவர்தான். இன்பத்தையும் துன்பத்தையும் சமமாக மதிக்கவேண்டு மென்ற மனப் பழக்கமுள்ளவர்தான். மருமகனைப் பற்றி இப்படித் துக்ககரமான செய்தி வரலாம், அப்படி வந்தால் சமாளித்துக்கொள்ள வேண்டும் என்று முன்பே தம்மைத் தயார் செய்துகொண்டவர்தான். ஆனலும் பாசம் விட்டதா? பதை பதைத்துவிட்டார். இதுவரையிலும் கண் கலங்கியறியாத மகாதேவரும் கண்ணீர் வடித்துவிட்டார். அடக்க முடியாத வேதனை யோடு அருகிலிருந்த திண்ணையின்மீது படுத்து விட்டார். அதைக் கண்டு கடின சித்தமுடைய குப்பனுக்கும் கண்ணீர் கசிந்துவிட்டது. மங்களத்தின் மேலும் சங்கரன் மேலும் அவனுக்கிருந்த மாச்சரி யங்களும் அப்போது மறைந்துவிட்டன. உண்மை யாகவே அவனுடைய உள்ளத்தில் அனுதாபம் ஊறிவிட்டது. படுத்துவிட்ட மகாதேவருக்குப் பக்கத்தில் நின்றுகொண்டு "பயப்படாதீர்கள் இப்போது ஒன்றும் மிஞ்சிப் போய்விடவில்லை. கவர்னர் ஜெனரல் கருணைக்காக மனுச் செய்து கொண்டிருக்கிறூர்கள். அது கட்டாயம் பலிக்கும். மங்களம் அம்மாளுடைய சிவபூசை வீண் போகாது" என்ருன்.

குப்பன் அப்படிச் சொன்னது மகாதேவருடைய அறிவையும் ஆன்மாவையும் தட்டி யெழுப்பிவிட்டது போல் அவர் உடனே எழுந்து உட்கார்ந்து கண்களைத் துடைத்துக்கொண்டு "ஆம், உங்கள்வாக்குப் பலிக்கும்படி பகவான் அருள்புரிய வேண்டும். மங்களாம்பாளுடைய

சிவபூசை மகத்தான தவம். அது வீண் போகாதென்று நானும் பிரார்த்திக்கிறேன்," என்று குப்புச்சாமியை அரு கில் அமரச் சொல்லி,

"ஒரு விஷயம் உங்களை மிகவும் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன். அதைத் தாங்கள் தவருமல் கவனிக்க வேண்டும்" என்ருர்.

"என்ன? என்ன? அதைச் சொல்லுங்கள்; அது எதுவானலும் தவருமல் செய்கிறேன். சத்தியம்" என்ருன்.

"பத்திரிகையில் பார்த்த இந்த விஷயம் நம்மிருவ ரோடு மட்டும் இருக்க வேண்டும். என் மகளாவது மனைவியாவது இதை அறியக் கூடாது. என் மகள் இதை அறிந்தால் இப்போதே உயிரை விட்டுவிடுவாள். என் மனைவி அறிந்தால் அவள் தன்னையும் மறந்து அழுது அங்கலாய்த்து விஷயத்தை வெளியிட்டுவிடுவாள். அதுமட்டுமல்ல; அக்கம் பக்கத்திலுள்ள யாருக்கும் தாங் கள் சொல்லிவிடக் கூடாதென்று வேண்டிக் கொள்ளு கிறேன்" என்ருர்.

"நான் சொல்லவே மாட்டேன். முக்காலும் சத்தியம். ஆனல் பத்திரிகையில் வந்துவிட்ட இதை எப்படி மூடிவைக்க முடியும். பத்திரிகையை எத்தனையோ பேர்கள் படிக்கிருர்கள். அவர்களில் யாராவது சொல்லி விட்டால் என்ன செய்வது?" என்ருன் குப்பன். 'ஷங்கர்ஜி' என்ற பெயர் சங்கரலிங்கனைக் குறிப்பது என் பது நம்மைத் தவிர இதைப் படிக்கிற மற்ற யாருக்கும் தெரியாது. 14-ஆம் ரெஜிமெண்டில் சங்கரலிங்கம் கர்ன லாக இருந்த உண்மை எனக்கும் கூட என் மகள் ஒரு நாள் சொன்ன பிறகுதான் தெரியும். அதனல்தான் 'ஷங்கர்ஜி' என்பது சங்கரனைத்தான் குறிக்கிறது என் பதை உணர்ந்தேன். இல்லாவிட்டால் வெறும்

'ஷங்கர்ஜி' என்று மட்டும் இருந்திருந்தால் எனக்கும், சந்தேக முண்டாக்கியிருக்கும். 14-ஆம் ரெஜிமெண்டில் சங்கரலிங்கம் இருந்தாரென்பதை நீங்கள் அறிந்திருக்க நேரிட்டதும். 14-ஆம் ரெஜிமெண்ட் ஷங்கர்ஜி என்ப தைப்பற்றி ஏதாவது பத்திரிகைகளில் வருகிறதா என்று கவனமாகப் பாருங்கள்' என்று உங்களுக்கு நான் சொல்லியிருந்ததால்தானே நீங்களும் இதை அறிந்து கொண்டது ?" என்ருர். "ஆமாம், அது உண்மைதான்" என்ருன் குப்பன். "அதனுல் நம்மிருவரைத் தவிர இதைப் புரிந்து கொள்ளக் கூடியவர்கள் இங்கே யாரு மில்லே. நீங்களும் நானும் இதை வெளியிடாதிருந்தால் என் மகள் கவலேயில்லாமல் சிவபூசை செய்துகொண் டிருப்பாள். அதனுல் கவர்னர் ஜெனரலின் கருணையும் கிடைக்கும்" என்ருர். 'ஷங்கர்' என்ற பெயர் சங்கர லிங்கத்துக்கு அவன் ராணுவப் பயிற்சியிலிருக்கும்போதே உண்டாகி விட்டது. வடநாட்டார் 'சங்கரன்' என்ற பதத்தை 'ஷங்கர்' என்றுதான் உச்சரிப்பார்கள். சங்கரலிங்கனுடைய நல்ல குணங்களுக்காக அவனே வடநாட்டு சகாக்கள் மரியாதைக்காக 'ஷங்கர்ஜி' என்று அழைப்பார்கள். அதனுல் பட்டாளக்காருள் அவனே 'ஷங்கர்ஜி' என்றுதான் அறிவார்கள். சங்கரலிங்கன் ஆங்கிலத்தில் கையெழுத்துப் போடுவதும் 'ஷங்கர்' என்றுதான். கடிதம் தமிழில் எழுதினுலும் கையெழுத்து ஆங்கிலத்தில்தான் போடுவான். இது குப்பனுக்குத் தெரியும். அதனுல் குப்பன் அவருடைய விளக்கத்தை முற்றிலும் ஒத்துக்கொண்டு, அவர் விரும்புகிறபடியே இந்தப் பத்திரிகை விஷயத்தை யாருக்கும் வெளியிடுவ தில்லே யென்று சத்தியம் செய்து கொடுத்தான்.

மங்களம்பாளோ சிவன் கோயில் சேவை ஒன்றைத் தவிர வேறு எதிலும் கவனம் செல்லாதவளாக பக்தி

பரவசப்பட்டிருந்தாள். ஒரு மண்டலம்—அதாவது நாற்பத்தெட்டு நாள்—சேவை செய்தால் போதும் என்பதுபோல மாமனுர் சொன்னது. மங்களம் தானுகவே மேலும் ஒரு மண்டலம் சேவை செய்ய விரும்பினுள். இரண்டாவது மண்டலம் முடிந்து மூன்ருவது மண்டலம் தொடங்கிவிட்டது. தினந்தினம் மகளுடன் கோயிலுக்கு நடந்து வருவதில் அலுப்புத் தட்டி விட்டதோ என்னவோ ஜானகியம்மாள் மகளேப் பார்த்து, "நேற் ருேடு இரண்டு மண்டலம் பூர்த்தியாகிவிட்டதே போதா தாம்மா ?" என்ருள். அதற்கு மங்களம், "அம்மா! நான் கணக்கு ஒன்றும் எண்ணவில்லே. அவரிடமிருந்து சேதி வருவதற்கு எவ்வளவு காலமானுலும் அதுவரைக் கும் சேவை செய்துகொண்டே யிருக்கப் போகிறேன்" என்ருள். "என்னமோம்மா, அந்தப் பார்வதியும் பரமேஸ்வரனும்தான் கண்திறந்து பார்க்க வேண்டும்" என்று ஜானகியம்மாள் அத்துடன் பேச்சை நிறுத்தி விட்டு, மகளுடைய கண்ணுக்கு எட்டாத இடத்துக்குப் போய் விம்மி விம்மி அழுது துக்கத்தை ஆற்றிக்கொண் டாள். இப்படி மங்களாம்பாளும் அவளுடைய தாயாரும் தெய்வத்தை வேண்டிக் கொண்டிருந்த இதே சமயத்தில் ரங்கூனில் சங்கரலிங்கனுடைய கருணை விண்ணப்பம் அடைந்த கதியைப் பார்ப்போம்.

விதியின் சதி

'விதியை வெல்ல யாரால் முடியும்' என்பது பெரும் பாலும் மக்கள் ஒப்புக்கொள்ளும் பேச்சு. ஆனால் சிலர் 'விதியையும் மதியால் வெல்லலாம்' என்றும் சொல்லு கிறார்கள். ஒருவன் தனக்கு ஒரு துன்பம் வரப்போகிறது என்பதை அறிந்து தன்னுடைய யுக்தியினால் சில முயற்சி களைச் செய்து அந்தத் துன்பத்தை விலக்கிவிடுகிறான். அப்போது அவன் விதியைத் தன் மதியினால் வென்று விட்டதாக எண்ணுகிறான். ஆனால் அதே மனிதன் வேறொரு சமயத்தில் இன்னொரு துன்பத்தை விலக்கி விடப் பல முயற்சிகள் செய்தும் அது முடிவதில்லை. முன்னே ஒரு துன்பத்தை விலக்கிவிட்ட போது செய்த யுக்திகளைச் செய்தும், முன்னே இருந்ததைவிடச் சிறந்த உதவிகள் இப்போது இருந்தும் இது முடியாமற் போய் விட்டது ஏன் என்பதைக் கண்டுகொள்ள முடிவதில்லை. இப்போது அதே மனிதன், 'விதியை வெல்ல யாரால் முடியும்' என்பதைத் தவிர வேறெதுவும் சொல்ல முடிவதில்லை.

சங்கரலிங்கனைச் சதி செய்த குற்றத்துக்காக ராணுவ விசாரணை நடந்த போது அவனுடைய பிராண சினேகனுகிய ஜெயபால் சங்கரனைச் சதிக் குற்றத்திலிருந்து தப்ப வைக்கப் பலவிதமான யுக்திகளைச் செலுத்தி சாட்சியங்களைத் தயார் செய்தான். அது பலிக்கவில்லை. பிறகு 'கமாண்டரின் சீப்' அவர்களுக்கு அப்பீல் செய்து கொண்டும் கருணை விண்ணப்பம் அனுப்பிக் கொண்டும் பயனில்லை. சங்கரலிங்கம், முனிஜி, சையத் காதர் மூவரையும் சுட்டுக் கொன்று விடவே உத்தரவு வந்து விட்டது.

அந்த உத்தரவின் வாசகத்தைக் குறித்துக்கொண்டு வந்த ஜேகப் துரை அதை ஜெயபாலிடம் கொடுத்தா ரல்லவா? அதைப் படித்துப் பார்த்த ஜெயபால் தன் னுடைய மார்பிலேயே குண்டு பாய்ந்து விட்டதுபோல் மரணவஸ்தை யடைந்து துடித்து விட்டான். அதைக் கண்ட ஜேகப் துரையும் கண் கலங்கிவிட்டார்.

சங்கரன் சுட்டுக் கொல்லப்படுவதைச் சகிக்க மாட் டாமல், அவனைக் காப்பாற்ற ஜெயபால் மறுபடியும் ஒரு முயற்சி செய்ய விரும்பினான். மன்னர்பிரான் கருணை காட்ட வேண்டுமென்று ராஜப் பிரதிநிதியாகிய கவர்னர் ஜெனரலுக்கு விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டு மென்று ஜேகப் துரையிடம் ஜெயபால் கேட்டுக்கொண் டான். ஜேகப் துரையின் பெரு முயற்சியினாலும் அவருடைய தமயன் தாமஸ் துரையின் தயவாலும் அந்தக் கருணை விண்ணப்பம் கவர்னர் ஜெனரலுக்கு அனுப்பப்பட்டது. அந்த விண்ணப்பத்தின் முடிவு தெரிகிற வரைக்கும் சங்கரன் முதலானவர்களைச் சுட்டுக் கொல்வது ஒத்தி வைக்கப்பட்டது.

இந்த முயற்சியாவது பலித்துச் சங்கரனுடைய மரணதண்டனை மாற்றப்படுமென்று ஜெயபாலும் ஜேகப் துரையும் வெகு ஏக்கத்தோடு எதிர்பார்த்தார்கள். ஐயோ! பரிதாபம்! சங்கரனுடைய விதி வேறுக இருந்து விட்டது. சுட்டுக் கொல்லக் குறிப்பிட்டிருந்த தேதியை ஒத்திப் போட்டதைத் தவிர வேறெருரு பலனும் கிடைக்க வில்லை. கவர்னர் ஜெனரல் அந்தக் கருணை விண்ணப் பத்தை நிராகரித்துவிட்டார். ஜெயபால் எப்போதும் தன்னம்பிக்கையுள்ளவன்தான். 'விதியையும் மதியால் வெல்லலாம்' என்ற நம்பிக்கை உறுதிகொள்ளும்படி மதியூகத்தால் பல காரியங்களில் வெற்றியடைந்தவன். முன் யுத்த முனையில் குண்டுபட்டுப் படுகாயமடைந்து

புதரில் மறைந்து கிடந்த ஜேகப்துரையைத் தேடி யெடுத்துப் பிழைக்கச் செய்தவன் ஜெயபால்தான். அந்தச் செய்கை மதியினுல் விதியையும் வென்றுவிட்டது போலத்தான் இருந்தது. இப்போது பலவித யுக்திகள் செய்தும் சங்கரனுடைய மரண தண்டனையை மாற்ற முடியாது போய்விட்டது. அதனுல் 'விதியை வெல்ல யாரால் முடியும்' என்று ஏங்கச் செய்துவிட்டது. வேறென்ன செய்யமுடியும்?

இனிச் சங்கரனைச் சுட்டுக் கொல்ல வேண்டிய நாளைக் குறிப்பிட்டு விடுவார்கள். அந்தப் பாசறைக்கு அதிபதிகை வந்திருக்கும் டங்கன்துரை இந்தியர்கள் சுதந்தரமடைய வேண்டும் என்று விரும்புவதை வெறுக் கிறவன். இந்தியர்கள் சுதந்தரமாயிருக்கத் தகுதி யுள்ளவர்கள் அல்லவென்பது அவனுடைய கருத்து. நேதாஜி சுபாஷ் சந்திரர் ஜப்பானியருடன் சேர்ந்து கொண்டு இங்கிலீஷ்காரரை எதிர்த்ததை ஏளனம் செய்து, இந்திய தேசியப் படையை முறியடிக்கவேண்டும் என்று சபதங் கொண்டவன். நேதாஜி என்ற பெயரைச் சொன்னலும் சீறி விழக்கூடியவன். அப்படிப்பட்ட நேதாஜியுடன் சேர்ந்து கொண்டு துரோகம் செய்த சங்கரனுக்குக் கருணை காட்டினுல் இங்கிலீஷ் ஏகாதி பத்தியம் இடிந்துபோகும் என்று பலமுறை மேலதிகாரி களுக்கு எழுதினவன். கருணை விண்ணப்பங்களை அனுப்புவதற்கும் ஆட்சேபங்கள் சொன்னவன். ஜேகப் இங்கிலீஷ்காரன் என்றதனலும் அவருடைய தமயன் தாமஸ் 'கமாண்டரின் சீப்' காரியாலயத்தில் மிக்க செல்வாக்குள்ளவர் என்பதனலும் விண்ணப்பங்களை அனுப்பிக் கொள்ளவாவது முடிந்தது. இப்போது அந்த விண்ணப்பங்களெல்லாம் நிராகரிக்கப்பட்டு மரண தண்டனை ஊர்ஜிதமாகிவிட்டபடியால் இந்த டங்கன்

துரை, சங்கரன் முதலானவர்களைச் சுட்டுக் கொல்லத் துரிதப்படுவான் என்பதில் ஐயமில்லை.

இந்த எண்ணங்களெல்லாம் ஜெயபாலின் மனதில் அடுக்கடுக்காக அலை பாய்ந்தன. அவற்றைத் தொடர்ந்து, சங்கரனைக் கண்ணைக்கட்டி நிறுத்துவது போலவும் அவனை ஒரு வெள்ளைக்கார சோல்ஜர் சுடுவது போலவும், குண்டு பாய்ந்த சங்கரனுடைய உடல் உயிர் போகத் துடிதுடிப்பது போலவும் காட்சிகளைத் தன் மனக் கண்முன் கண்டு சகிக்கமாட்டாமல் 'ஐயோ' என்று கதறிவிட்டான். அப்போது அவன் இருந்த இடம் அவனுடைய காரியாலயம். அதில் அவனுக்குக் கீழே வேலை பார்க்கும் குமாஸ்தாக்கள் பலரும் இருந்தார்கள். தேள் கொட்டி விட்டதுபோல் திடீரென்று அவன் கதறி விட்ட துன்பக்குரல் அவர்களைத் திடுக்கிடச் செய்து விட்டது. மிகுந்த திடசித்தமுடையவனுகிய ஜெயபாலின் தீனக் குரலைக் கேட்ட அவர்கள் அனைவரும் அவனுக்கு ஏதேனும் மாரடைப்பு நேரிட்டுவிட்டதோவென்று அஞ்சி எழுந்தோடி வந்து என்னவென்று கேட்கத் தொடங்கிவிட்டார்கள். ஜெயபால் வெட்கித் தலை குனிந்து கொண்டான். அவர்களுக்கு என்ன பதில் சொல்லுவது என்பதை ஆலோசித்துக் கொள்வதற் காகவே சிறிது நேரம் தலையை நிமிர்த்தாமல் நோயுற்ற வன் போலவே காட்சியளித்தான். அதனுல் குமாஸ்தாக் களில் ஒருவன் ஜெயபாலின் உடம்பையும் கைகளையும் தலையையும் பல இடங்களில் தொட்டுப் பார்க்கத் தொடங்கினன். இன்னெருவன் அங்கிருந்த சேவகன் ஒருவனைக் கூவி உடனே போய் டாக்டரை அழைத்து வரக் கட்டளையிட்டான். அதைக்கேட்ட ஜெயபால் இனி மேலும் தலையைக் கவிழ்த்துக்கொண்டிருந்தால் டாக்ட ரும் வந்து, 'அம்புலன்சையும்' வரச் செய்து ஆஸ்பத்தி

ரிக்குத் தூக்கிக் கொண்டு போய்விடுவார்கள் என்று உடனே தலையை நிமிர்த்து,

" வேண்டாம் வேண்டாம் டாக்டரைக் கூப்பிட வேண்டாம். என்னமோ மார்பில் ஈட்டி பாய்ந்துவிட்டது போல் ஒரு வேதனை உண்டாயிற்று. அந்தத் துன்பம் பொறுக்க மாட்டாமல் அலறிவிட்டேன்; இப்போது ஒன்று மில்லை. சரியாகிவிட்டது. கொஞ்சம் தண்ணீர் மட்டும் கொண்டு வாருங்கள் " என்றான்.

அதைக் கேட்ட குமாஸ்தாக்களுடைய அச்சம் நீங்கிற்று. தண்ணீர் கொண்டுவரப்பட்டது. உண்மை யாகவே நாக்கு வறண்டு போயிருந்த ஜெயபால் தண்ணீரைக் குடித்துத் தாகம் தீர்ந்து மகிழ்ச்சி காட்டி வந்தனம் சொன்னான்.

அந்தச் சமயத்தில் தளபதி டங்கன் துரை ஜெயபாலை அவசரமாக வரச் சொன்னதாக ஒரு சிப்பாய் வந்து சேதி சொன்னான். உடனே ஜெயபால் டங்கன் துரையின் காரியாலயத்துக்குப் புறப்பட்டான். குமாஸ்தாக்களில் ஒருவன் சற்று இளைப்பாறிவிட்டுப் போகும்படி கேட்டுக் கொண்டான். அதற்கு ஜெயபால், " கவலைப்பட வேண்டாம். எல்லாம் சரியாகிவிட்டது. இளைப்பாற வேண்டிய அவசியமில்லை. டங்கன்துரை மிகவும் கோபக் காரர். அவசரமாக அழைப்பதை அசட்டை செய்யக் கூடாது " என்று சொல்லிவிட்டு வேகமாக நடந்தான்.

டங்கன் துரை வெகு கண்டிப்பான உத்யோகஸ்தன். நல்ல போர்வீரன். ஆங்கிலேய தளகர்த்தருக்குள் மிகச் சிறந்தவருள் ஒருவனாக மதிக்கப்பட்டவன். அஞ்சாமை யும் ஆற்றலும் உள்ள சிப்பாய்களை மெச்சிப் பேசி ஆதரிப்பான். கோழைகளுக்கும் துரோகிகளுக்கும் கொஞ்சம்கூட இரக்கம் காட்டமாட்டான். இங்கிலீஷ் ஏகாதிபத்தியத்தை மட்டுமல்ல, உலகத்தையே தாங்கி

நிற்பது பட்டாளங்கள்தாம் என்பதும், அந்தப் பட்டாளங் களின் ஆற்றலுக்குத் தன்னைப் போன்ற தயவு தாட்சண்யம் காட்டாத தளபதிகள்தாம் காரணம் என்பதும் டங்கன் துரையின் திடமான நம்பிக்கை. நல்ல முகவடிவம் உள்ளவன். என்றாலும் கடுகடுத்த பார்வையுள்ளவன். கலகலத்த சிரிப்பை அவனிடம் காண்பது அருமை. பிரியமான நண்பர்களிடம் குலவும் போது மட்டும் சிற்சில சமயங்களில் புன்முறுவல் காட்டு வான். உத்யோக முறையில் அவனிடம் நெருங்கும் யாருக்கும் அச்சமே உண்டாகும். ஏனென்றால் டங்கன் துரை, தனக்குக் கீழுள்ள உத்யோகஸ்தர்களுக்குச் சாதாரணமான உத்தரவுகளை யெல்லாம் எழுத்து மூலமாகத்தான் அனுப்புவார். ஏதாவது குற்றங்கண்டு கண்டிக்கவும் தண்டிக்கவும் வேண்டிய சமயங்களில்தான் நேரில் வரச் சொல்வது வழக்கம். அப்படிப்பட்ட டங்கன் துரை தன்னை அவசரமாக வரச் சொன்னது எதற் காகவோ என்ற அச்சத்துடனேதான் ஜெயபால் அவரை நோக்கிச் சென்றான். செல்லும் வழியில் தன்னுடைய உத்யோக அலுவல்களில் ஏதாவது தவறு இருக்குமோ என்று எண்ணியெண்ணிப் பார்த்தான். அப்படி ஒன்றும் தவறு செய்திருப்பதாக எண்ணிக்கொள்ள இடமில்லை. அப்படியிருக்க வேறு எதற்காக அவசரமாக அழைத் திருக்க முடியும்? ' ஒருக்கால் நான் சங்கரலிங்கனுக்கு மிகுந்த சலுகையுள்ளவன் என்பது டங்கன் துரைக்குத் தெரிந்துவிட்டதோ! சங்கரன் இருக்கும் சிறைக்கு நான் அடிக்கடி போவதையும் அவனுக்கு வேண்டிய வசதி களைக் கவனித்துக்கொள்வதையும் யாராவது டங்கன் துரைக்குச் சொல்லிவிட்டார்களோ! அல்லது சங்கர னுக்குள்ள மரணதண்டனையிலிருந்து அவனைத் தப்பு விக்க வேண்டுமென்று நானும் ஜேகப் துரையும் செய்த

ரகசிய முயற்சிகள் டங்கன் துரைக்கு எட்டிவிட்டனவோ! அப்படி இருந்தாலும் இருக்கும். ஏனென்றால் சங்கரனுக்காகாகக் 'கமாண்டரின்சீப்' புக்கும் 'கவர்னர் ஜெனரலு'க்கும் அனுப்பப்பட்ட விண்ணப்பங்களை வாங்கிக்கொள்ள டங்கன் மறுத்தார். ஆனால் ஜேகப் துரை, இங்கிருக்கும் வேறு ஆங்கிலேய உத்யோகஸ்தர்கள் மூலமாகத்தான் அந்த விண்ணப்பங்களை அனுப்பும்படி டங்கனுக்குச் சிபார்சு செய்யச் செய்தார். அவர்களில் யாராவது சொல்லியிருந்தாலும் இருக்கலாம். அப்படியானால் இங்கிலீஷ் ஆட்சிக்குத் துரோகம் செய்தவர்களுக்குச் சலுகையாக இருந்ததாகக் குற்றம் சாட்டி டங்கன் துரை கடுங்கோபங் கொள்வான். கோபித்தால் கோபிக்கட்டுமே! தலைக்குமேல் போனது சாண் போனலென்ன, முழம் போனலென்ன? பகிரங்கமாகவே ஒத்துக்கொள்வேன். என்ன செய்துவிடுவார்கள்? உத்தியோகந்தானே போகும்? போனால் போகட்டும். அதற்கும் அதிகமாக என்னையும் சுட்டுக் கொன்றுவிட உத்தரவானாலும் அதற்கும் சம்மதம். சங்கரனைச் சுட்டுக் கொன்ற பின் அதற்காக அழுதுகொண்டு உயிரோடிருப்பதை விட அவனுக்காக முயற்சிகள் செய்தேனென்று அவனோடு சுட்டுக் கொல்லப்படுவது மேல்' என்றெல்லாம் எண்ணிக்கொண்டே ஜெயபால் டங்கன்துரையின் காரியாலயத்துக்குள் நுழைந்தான்.

ஜெயபால் எதிர்பார்த்ததற்கு முற்றிலும் மாறுக டங்கன் துரை அவனைச் சுமுகமாக வரவேற்று ஒரு ஆசனத்தைக் காட்டி அமரச் சொன்னான். அபூர்வமான புன்சிரிப்புடன் டங்கன் துரை ஜெயபாலைப் பார்த்து விட்டு, 'ஜெயபால்! உங்களைப் பற்றி நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் இந்த யுத்தத்தில் சாதித்திருக்கிற வீரச் செயல்களுக்காக உங்களுக்கு வீரப்பதக்கமும்

உத்யோக உயர்வும் கிடைக்கப் போகிற தென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன். பரிசுக்குரியவர்களின் பெயர்களையும் விவரங்களையும் அனுப்பும்படி 'கமாண்டரின் சீப்' அவர்களுடைய அந்தரங்கக் கடிதம் எனக்குச் சில நாளைக்கு முன் வந்தது. அதற்காக 'ரிகார்டுகளை' ஆராய்ந்ததில் உங்கள் பெயர் முதன்மையாக நிற்கிறது. நீங்கள் மிக்க ராஜ விசுவாசத்தோடும் தைரியத்தோடும் சேவை செய்திருக்கிறீர்கள். நம்முடைய அரசனுக்குத் துரோகமாக ஜப்பானியருடன் சேர்ந்து கொண்ட 'ஷங்கர்ஜி' முதலானவர்களைச் சிறைபடுத்தியது உங்களுடைய பட்டாளந்தான் என்பதும் மிகவும் கொண்டாடத்தக்கது. அதற்காக உமக்கு ஒரு பிரத்தியேகப் பரிசும் சிபார்சு செய்யப் போகிறேன். இதைப் பற்றியும் இன்னும் சில விஷயங்களைப் பற்றியும் கலந்தாலோசிக்க என்னை டில்லிக்கு வரும்படி உத்தரவு வந்திருக்கிறது. இன்னும் இரண்டு வாரங்களுக்குள் நான் டில்லிக்குப் போக வேண்டியிருக்கும். அதற்குள் இரண்டு முக்கியமான காரியங்களைக் கவனிக்க வேண்டும்.

ஒன்று, இன்னும் பத்து நாட்களுக்குள் ஐயாயிரம் சிப்பாய்களை இந்தியாவுக்கு அவசரமாக அனுப்பி வைக்க வேண்டும். அந்த வேலையை வெகு ஜரூராக நீங்களே கவனிக்க வேண்டும். உங்கள் பார்வையில் இருக்கிற மலைப்பாதையின் வழியாக லாரிகளில் அந்த ஐயாயிரம் சிப்பாய்களையும் ரங்கூன் துறைமுகத்துக்கு அனுப்ப வேண்டும். துறைமுகத்தில், இவர்களை ஏற்றிக்கொண்டு இந்தியாவுக்குப் போக கப்பல்கள் காத்துக்கொண்டிருக்கின்றன. இது மிகவும் அவசரமான வேலை. உடனே ஆரம்பிக்க வேண்டும். இந்தியாவில் நெருக்கடி முற்றுகிறதாம்."

"அப்படி என்ன இந்தியாவில் நெருக்கடி?" என்ருன் ஜெயபால்.

"இந்தியாவில் என்ன நெருக்கடியா? சொல்லு கிறேன். உங்களைப் போன்ற விசுவாசமுள்ளவர்களுக்கு எந்த ரகசியத்தையும் சொல்லலாம். இந்தியாவில் இப் போது என்ன நெருக்கடி யென்ருல், இந்தியர்கள் மகாத்மா மகாத்மா என்று சொல்லுகின்ற மிஸ்டர் காந்தி இருக்கிருரல்லவா?"

"ஆமாம்."

"அந்தப் பைத்தியக்காரர்-அவர் நல்ல மனிதர்தான்; பெரியவர்தான். ஆனலும் அவரை நான் பைத்தியம் பிடித்தவராகத்தான் மதிக்கிறேன்—அவர் இங்கிலீஷ் காரரை இந்தியாவைவிட்டு வெளியே போய்விடச் சொல்லுகிருர் அல்லவா?"

"ஆமாம்."

"வெள்ளைக்காரன் வெளியே போய்விட்டால் அதன் பிறகு இந்தியாவில் என்ன நடக்கும் தெரியுமா? கொள்ளை யும் கொலைகளும் குழப்பமுந்தான் நடக்கும். அதை இந்தப் பைத்தியக்காரக் காந்தி எண்ணிப் பார்ப்பதில்லை. இவர் இந்த யுத்தம் ஆரம்பிக்கும் போதே தம்முடைய ஒத்துழையாமை இயக்கத்தை மீண்டும் நடத்தத் திட்டமிட்டிருந்தார் அல்லவா?"

"ஆமாம்"

"நல்ல வேளையாக அவரையும் அவருடைய சகாக் களையும் உடனே சிறையிலடைத்தார்கள். இல்லாதிருந் தால் இந்தச் சண்டையில் நாம் ஜெயித்திருக்கவே முடி யாது. அவரைக் கைது செய்தபோது அவர் 'செய் அல் லது செத்துப்போ' என்று செய்த உபதேசத்தால் எவ் வளவு சதிவேலைகள் நடந்தன பார்த்தீர்களா!"

"அந்தச் சதிவேலைகளெல்லாம் அவர் உபதேசித்தது அல்ல வென்று தானே பின்னல் தெரிய வந்தது" என்று ஜெயபால் முனகினன்.

"அவர் சதி செய்ய உபதேசித்தாரோ இல்லையோ, அந்தக் கலவரங்கள் அத்தனைக்கும் அவருடைய இயக் கம்தான் காரணம். இப்போது காந்தி சிறையில் இல்லை. யுத்த நெருக்கடி தீர்ந்து விட்டதால் காருண்யமுள்ள நமது சர்க்கார் அவரை விடுதலைசெய்து விட்டார்கள். மறுபடியும் அந்தக் காந்தி வெள்ளைக்காரனை வெளியே போகச் சொல்லும் முறையில் தமது சட்ட மறுப்பு இயக்கத்தை ஆரம்பித்திருக்கிருராம். அதனல் இந்தியா முழுதும் அராஜகமும் குழப்பங்களும் உண்டா கும் என்பது நிச்சயம். அந்தக் குழப்பங்களை உடனே அடக்க அங்கங்கே இருக்கிற போலீஸ் மட்டும் போதாது. பட்டாளத்தின் உதவியும் அவசியமாக இருக்கிறது. அத னல் உடனே இங்கிருந்து ஐயாயிரம் சிப்பாய்களை அனுப் பும்படி ரகசிய உத்தரவு வந்திருக்கிறது. இந்தச் சிப்பாய் கள் கப்பலேறுவதும் கூட ரகசியமாக இருக்கவேண்டும் என்பது உத்தரவு. ஏனென்ருல் காந்தியின் சாத்வீக இயக்கத்தை நசுக்க இங்கிலீஷ் அரசாங்கம் பட்டாளத் தைக் கொண்டு வருகிறது என்று காங்கிரஸ்காரர்களும் அவர்களை ஆதரிக்கும் இந்தியப் பத்திரிகைகளும் கூக் குரல் கிளப்புவார்களாம். நீங்கள் மிகவும் நம்பத் தகுந் வர் ஆகையினல் நீங்கள் இந்த வேலையைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து அந்தச் சிப்பாய்களைக் கடற் கரைக்குப் போகும் ராணுவப் பாதை வழியாக அனுப்ப வேண்டும்."

"அப்படியே செய்கிறேன்," என்ருன் ஜெயபால்.

டங்கன் துரை பர்மாவில் யுத்தம் ஆரம்பமான பிறகு அங்குள்ள சேனைகளுக் கெல்லாம் அதிபதியாக ரங்

கூனுக்கு அனுப்பப்பட்டவன். முன்னே அங்கிருந்த சேனதிபதிகளைக் காட்டிலும் மிகச் சிறந்தவன் என்பதற் காகவே அவனை அங்கே அனுப்பினர்கள். அதனல் ஜெயபாலும் சங்கரலிங்கனும் நெருங்கிய நண்பர்கள் என்பதை டங்கன் துரை அறிந்தவனல்ல.

ஆனலும் டங்கன் துரை தன்னை அவசரமாக வரச் சொன்னர் என்றதைக் கேட்டவுடன், சங்கரனைப்பற் றியே எண்ணிக் கொண்டிருந்த ஜெயபால், சங்கரனுக் காகத் தான் செய்த முயற்சிகளைப் பற்றித்தான் டங்கன் துரை அறிந்து விட்டானே என்று அஞ்சிவிட்டான். சேனதிபதியின் பேச்சைக் கேட்டபின் நிம்மதியடைந்து நிமிர்ந்து உட்கார்ந்தான். அத்துடன் தனக்குப் பரிசும் பதவியும் வரப்போகிற தென்று டங்கன் சொன்னதைப் பற்றி மனதுக்குள்ளேயே மகிழத் தொடங்கினன். அந்த மகிழ்ச்சி நினைவு ஆரம்பிப்பதற்குள் டங்கன் துரை ஜெய பாலைப் பார்த்து, "இன்னெரு முக்கியமான வேலை. அதையும் உம்மிடத்தில் ஒப்படைக்கலா மென்று எண்ணு கிறேன்."

"என்ன ?"

"நீங்கள் சிறைபிடித்த அந்தப் பதினெரு சதிகாரர் களையும் சுட்டுக் கொன்றுவிடும்படி 'கோர்ட் மார்ஷல்' சொன்ன தீர்ப்பையே மேலதிகாரிகள் ஊர்ஜிதம் செய் திருந்தால் நன்ருயிருக்கும். அப்படிச் செய்தால் ராணு வத்தின் கட்டுப்பாடு கலையாமலிருக்கும். துரோகிகளுக் குக் கருணை காட்டவே கூடாது. இருந்தாலும் 'கமாண் டரின் சீப்' கருணை காட்டியதைப் பற்றி நாம் குற்றம் சொல்லக்கூடாது. மிகவும் பெரிய சதிகாரனுகிய இந்த ஷங்கர்ஜிக்குக் கருணை காட்ட மறுத்துவிட்டதைப் பற்றி நான் சந்தோஷப்படுகிறேன். அடுத்த வாரத்தில் இந்த 'ஷங்கர்ஜி' முதலான மூவரையும் சுட்டுக் கொன்று

அவர்களுடைய சடலங்களை மலைப்பாதையின் அருகி லுள்ள வனத்தில் புதைத்து அவர்கள் செய்த துரோகத் துக்காகச் சுடப்பட்ட விவரத்தையும் கல்லில் பொறித்து வைக்க வேண்டும். இந்த வேலைகளையும் நீங்களே கவனித்துக் கொள்ள வேண்டும். நீங்களே அவர்களைச் சுட்டுக் கொல்வதானலும் நான் சந்தோஷப் படுவேன்" என்ருன்.

ஜெயபாலின் கண்கள் இருண்டன. அவன் அமர்ந் திருந்த நாற்காலியும் அவனைச் சுற்றிலுமிருந்த எல்லாப் பொருள்களும் சுழல்வது போல் தோன்றின. உடல் நடுங்கிக்கொடுத்தது. உள்ளம் இடிக்க லுற்றது. எதிரி லிருந்த டங்கன் துரையின் உருவம் மறைந்தது. அதற் குப் பதிலாக சங்கரலிங்கத்தின் வாடி உருக்குலைந்த வடி வம் வந்து நின்றது. முழி பிதுங்கப் பார்த்தான். மூச் சுத் திணறி வேர்த்தான். எழுந்தோடிக் கட்டித் தழுவிக் கதறிவிட வேண்டுமென்ற உணர்ச்சி உண்டானது. உடனே சமாளித்துக் கொண்டான். டங்கன் துரை அவசரமாக வரச் சொன்னர் என்ற செய்தி வருவதற்குமுன் தன்னுடைய காரியாலயத்தில் சங்கரனை எண்ணி 'ஐயோ' என்று தான் கத்திவிட்ட தும் அதைக் கேட்டு அங்கிருந்த சிப்பந்திகள் அனைவரும் தன்னைச் சூழ்ந்துகொண்டதும் அதனல் தான் வெட்கித் தலைகுனிந்து கொண்டதும் நினைவுக்கு வந்துவிட்டது. தன்னுடைய உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டான். டங்கன் துரையைப் பார்த்தான். பதில் சொல்லப் பேச்சு வராமல் திகைத்தான். ஜெயபாலின் திகைப்பைக் கண்ட டங்கன், "என்ன ஜெயபால், பதில் பேசவில்லையே ! இந்தியர்களை இந்தியனே சுட்டுக் கொல்வதற்கு மனம் கூசுகின்றதாக்கும் ?" என்ருர்.

ஜெயபால் பதில் ஒன்றும் சொல்லாமல் வெகு கஷ்டப்பட்டு ஒரு புன்சிரிப்பைத் தன் உதடுகளில் வருவித்துக் கொண்டான். அதைக் கண்ட டங்கன் தாம் சொன்னதை அவன் ஆமோதிப்பதாகக் கொண்டு "என்ன இருந்தாலும் இன உணர்ச்சி இருக்கத்தான் இருக்கும். ஆனாலும் ஷங்கர்ஜியைப் போன்ற சதி காரர்களுக்காகப் பச்சாத்தாபப்படுவது நியாயமல்ல. போனாற்போகட்டும். அந்த வேலையை ஜேகப்துரையைச் செய்யச் சொல்லுகிறேன்" என்றார்.

அதைக் கேட்ட ஜெயபால் மீண்டும் திகைப் படைந்து, சங்கரனைச் சுட்டுக் கொல்லும் வேலையி லிருந்து ஜேகப் துரையை மீட்கக் கருதி,

"ஜேகபுக்கும் எனக்கும் ஐயாயிரம் சிப்பாய்களை இந்தியாவுக்கு அனுப்பும் வேலையே சரியாயிருக்குமே? கெடுபிடியில்லாமல் சிப்பாய்களை அனுப்புவது மிகவும் நுணுக்கமாகக் கவனிக்க வேண்டிய காரியம். முதலில் இதைச் செய்துவிட்டுத்தான்....." என்று முடிக்குமுன்,

"ஆமாம் அதுதான் வெகு அவசரமான வேலை. சரி, நீங்கள் இருவரும் அதற்கானவற்றை உடனே கவனியுங்கள். இவர்களைச் சுடுகிற வேலையை நானே கவனித்துக் கொள்ளுகிறேன். அந்த வேலையையும் இந்த ஐயாயிரம் சிப்பாய்களை இந்தியாவுக்கு அனுப்பின பிறகு வைத்துக்கொள்வோம். சிப்பாய்களை இந்தியா வுக்கு அனுப்ப வேண்டியதுதான் மிகவும் அவசரமாகக் கவனிக்கவேண்டிய அலுவல். அதை உடனே ஆரம் பித்து எனக்கு உடனுக்குடன் 'ரிபோர்ட்' செய்யுங்கள்" என்றார் டங்கன் துரை.

கடைசிச் சந்திப்பு

மரணதண்டனையை எதிர்பார்த்துக் கொண்டு சிறை யிற் கிடக்கும் சங்கரலிங்கனைப் பார்ப்போம்: ஐயோ! அந்தச் சங்கரலிங்கமா இவன்! மங்கையர் திலகமாகிய மங்களாம்பாள் மனதைவிட்டு ஒருகணமும் நீங்காமல், அவள் தன்னுடைய இஷ்ட தெய்வமாகத் தொழுதுவரும் சங்கரலிங்கமா இவன்! அன்னபூரணியம்மாளின் அருந் தவப் புதல்வனு இவன்! குபேர சம்பத்துடைய கோபால கிருஷ்ணரின் குலவிளக்கென்று சான்றோர் மகிழும் சங்கரலிங்கமா இவன்! ஆடவரும் பெண்மையை விரும்பும் அந்த வசீகரமான வதனம் எங்கே? எலுமிச்சம் பழத்தில் சிறிது சிவப்பு கலந்தது போன்று கண்ணைக் கவரும் அந்த நிறம் எங்கே? மின்விளக்குகள் போல ஒளிவீசும் கண்கள் எங்கே? பால் நிறமான பல் வரிசை பளிச்சென்று துலங்கும்படி அவன் உதடுகளில் எப்போதும் தவழ்ந்து கொண்டிருக்கும் புன்சிரிப்பு எங்கே? அந்த உதடுகள்தாம் எங்கே? திரண்ட கன்னங்கள் எங்கே? உருண்ட முகவாய்க் கட்டை எங்கே? பருத்த தோள்கள் எங்கே? பரந்த மார்புதான் எங்கே? நேரான உருவம் எங்கே? நிமிர்ந்த நடைதான் எங்கே? பரிதாபம்! பரிதாபம்! செல்வத்திற் பிறந்து, சீருடன் வளர்ந்து, கல்வியிற் சிறந்து கலைகளும் அறிந்து அன்பும் அறமும் ஆற்றலும் நிறைந்த அழகான வாலிபச் சங்கரலிங்கன் தேச பக்தியின் ஆவேசத்தால் அடைந்துவிட்ட சீரழிவுகள்தாம் என்னே!

சிறைப்பட்டு ஒரு வருடத்துக்கு அதிகமும் ஆகி விட்டது. வெட்டிவிடப்படாத அவனுடைய தலைமயிர்

காடுபோல் வளர்ந்து தோள்களையும் கடந்து தொங்கிக் கொண்டிருந்தது. அவனுடைய நிறம் உப்பில் ஊறு காய்போட்டு உலர்ந்துபோன எலுமிச்சம் பழத்தின் தோலைப்போல் கறுப்பும் வெளுப்பும் மஞ்சளும் கலந்து காட்டிற்று. கரடி மயிர்போல் அடர்ந்து வளர்ந்துவிட்ட தாடியும் மீசையும் அவனுடைய கன்னங்களையும் வாயையும் மறைத்துக் கொண்டன. கண்கள் குழி விழுந்து ஒளியிழந்து கலங்கியிருந்தன. தோள்கள் மெலிந்து துவண்டு கிடந்தன. விம்மிப் பருத்து விரிந்திருந்த மார்பும் ஒடுங்கி உருக்குலைந்து விட்டது. உடலும் வலைந்துவிட்டது. நடையும் தளர்ந்துவிட்டது.

நேதாஜியின் இந்திய தேசிய சேனையில் சேரும் பொழுது சங்கரலிங்கன் வெகு சந்தோஷத்தோடுதான் சேர்ந்தான். இந்திய நாட்டை அன்னிய ஆட்சியின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப் போகிறோம் என்ற பெருமித எண்ணந்தான் அப்போது அவன் மனதில் எழுந்து நின்றது. தன்னுடைய சேனைக்குத் துரோகம் செய்கிறோம் என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றவே இல்லை. நேதாஜியின் நன்மதிப்புக்குப் பாத்திரனாகிப் பர்மாவில் பல வீரச் செயல்களைப் புரிந்தபோது தன்னுடைய தாய் நாட்டிற்கு மகத்தான சேவை செய்வதாகப் பூரித்தான். நெடுநாளாக நேதாஜியிடத்தில் தனக்கிருந்த மதிப்பாலும், காந்திமகான் சொல்லும் சாத்வீக முறையில் வெள்ளையனை வெளியேற்ற முடியாது என்ற நம்பிக்கையினாலும் திடீரென்று இந்தியாவிலிருந்து மறைந்துபோன சுபாஷ் சந்திரபோஸ் ஜெர்மனிக்குச் சென்று ஹிட்லரின் நட்புடன் ஜப்பானுக்கு வந்து சேனை திரட்டி இங்கிலீஷ்காரரை எதிர்க்கிறார் என்றதைக் கேள்விப்பட்டதாலும் சுபாஷ் போஸின் கொள்கைகளில் தனக்கிருந்த நம்பிக்கை மேலும் அதிகப்பட்டு

நிச்சயமாக வெள்ளைக்காரரை வெளியேற்றிவிடலாம் என்றே எண்ணியிருந்தான்.

அந்த எண்ணம் உருப்படாமல், நேதாஜி விபத்துக்கு ஆளாகி இறந்தபின் இந்திய தேசிய சேனை வலிமை யிழந்துவிட்ட போதும் சங்கரலிங்கன் சளைக்கவில்லை. கடைசியாகத் தானும் தன் துணைவர்களும் சிறைப்படுத்தப்பட்ட தருணத்திலும் அது இந்தியத் தாய்க்குத் திருப்பணிக்கான தியாகம் என்றே திருப்தியடைந்தான்.

சங்கரனைச் சிறைப்படுத்திய பட்டாளம், ஜெயபால் உப-சேனாதிபதியாக இருந்த பட்டாளம். சிறைப்பட்டவர்களுக்கு விலங்கிட்டு ஆங்கிலேய தளபதிக்கு முன்னால் கொண்டு வந்தபோதுதான் சங்கரன் அதிலிருப்பதை ஜெயபால் கண்டு திடுக்கிட்டுப் போனான். தன்னுடைய உணர்ச்சிகளைக் காட்டிக் கொள்ளாமல் அடக்கிக் கொண்டு தளபதியின் உத்தரவின்படி அந்தக் கைதிகளைச் சிறையில் அடைக்க அழைத்துச் சென்றவனும் ஜெயபால்தான்.

பிறகு இரண்டு மூன்று நாட்கள் சென்றபின் வெகு ரகசியமாகச் சிறைக்குச் சென்று, ஜெயபால் சங்கரலிங்கனைச் சந்தித்து அவனுக்கு நேர்ந்துவிட்ட கதியைப் பற்றி கண்கலங்கித் தன் துயரத்தைச் சொல்லிக் கொண்ட சமயத்திலும் சங்கரன் கவலையற்றவனைகவே காணப்பட்டான் என்பது மட்டுமன்றித் தான் செய்தது சரியென்றே சாதித்துச் சந்தோஷப்பட்டான். 'கோர்ட் மார்ஷல்' விசாரணை வெகு தாமதமாக நடந்த காலங்களிலும் வெகு அலட்சிய முள்ளவனைகவே இருந்தான். 'கோர்ட் மார்ஷல்' விசாரணை முடிந்து மரணதண்டனை விதித்துச் சுட்டுக் கொல்லும்படித் தீர்ப்பு சொன்ன அந்தக் கணத்திலும் சங்கரலிங்கன் கலங்கவில்லை.

இந்தியாவின் சுதந்தரத்துக்காக வெகு மகிழ்ச்சியோடு உயிரைக் கொடுத்த பகவத்சிங் முதலான எத்தனையோ தியாகிகளுடன் தானும் ஒருவனாக இருக்கப் போகிறதாகவே எண்ணிக் கொண்டான். அவனோடு தண்டனையடைந்த மற்றப் பத்துப்பேரும் அப்போதே அழுது புலம்ப ஆரம்பித்து விட்டார்கள். ஆனால் சங்கரன் துளிகூடச் சலனங் காட்டவில்லை.

அப்பீல் செய்துகொள்ள ஒரு மாதம் தவணை கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லி மீண்டும் சிறைச் சாலைக்கு அனுப்பப்பட்டார்கள்.

சிறைச்சாலையை அடைந்ததும் சங்கரனுடைய தியாக ஆவேசம் அடங்கிவிட்டது. தீர்ப்புச் சொன்னவுடனே சுட்டுக் கொல்லப்பட்டிருந்தால் சங்கரன் வெகு சந்தோஷத்தோடு உயிரைக் கொடுத்திருப்பான். சிறைக்கு வந்தபின் 'அப்பீல்' செய்யும் முயற்சிகளைப் பற்றி ஜெயபால் அவர்களுடன் பேசத் தொடங்கியவுடனே அப்பீலில் உயிர்ப்பிச்சை கிடைக்கலாம் என்ற ஆசையும் ஊறத் தொடங்கிவிட்டது.

உயிரைக் காட்டிலும் உயர்ந்த பொருள் ஏது? உடைமைகள் எல்லாவற்றையும் இழந்தானாலும் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள விரும்புவதுதானே உலகத்தியல்பு? உடனே உதிக்கின்ற ஆவேசத்தின் வேகத்தில் உயிரை மதிக்காதவர்கள் பலர் உண்டு. ஆனால் அந்த ஆவேச வெறி இல்லாத போது உயிரை விட்டுவிட மனம் ஒப்புமா?

'அப்பீல்' விண்ணப்பங்களை அனுப்பிய பின் உயிராசையும் அதிகப்பட்டது. அதன்பின் சங்கரன் அப்பீலில் வெற்றி கிடைக்க வேண்டுமே என்ற எண்ணத்தால் ஏங்கி இளைக்கலானான். 'கோர்ட்மார்ஷல்' தீர்ப்புச்

சொல்லுவதற்கு முன்னால் சங்கரன் பசியோடு புசித்து நிரம்ப உணவு உண்பான். ஜெயபாலின் விசேஷக் கண்காணிப்பால் சங்கரனுக்கும் அவனை ஒட்டி அவனோடு சிறைப்பட்ட மற்றவர்களுக்கும் மிக நல்ல உணவுகள் கிடைத்து வந்தன. அப்பீல் விண்ணப்பத்தை அனுப்பிய பின் சங்கரனுக்கு உணவில் அருவருப்பு உண்டாகிச் சரியாகப் புசிப்பதில்லை. மனைவியைப் பற்றிய விசாரமும் தாய் தந்தையரைப் பற்றிய நினைப்பும் வதைக்கலுற்றன.

அப்பீலில் எட்டுப்பேருடைய மரணதண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றித், தன்னையும் மற்ற இருவரையும் மட்டும் சுட்டுக் கொன்றுவிடத் தீர்ப்பாகிவிட்டதைக் கேட்ட சங்கரன் குலைந்து போனதைக் கூறவும் முடியுமா? எல்லாருக்கும் மரண தண்டனையே ஊர்ஜிதமாயிருந்தாலும் இவ்வளவு தவிப்பு இருக்காது. மற்ற எட்டுப் பேருக்கும் கருணைபுரிந்த கடவுள் தன்னைக் கைவிட்டு விட்டதே என்று கதறிக் கதறிக் கண்ணீர் வடிக்கலானான். உயிராசை முன்னிலும் அதிகப்பட்டது. மரணவஸ்தையும் புகுந்துவிட்டது. மறுபடியும் 'கமாண்டரின் சீப்'புக்குக் கருணை விண்ணப்பம் அனுப்பியது அந்த உயிராசை அதிகப்படவே உரமிட்டது போலிருந்தது. பல நாள் ஏங்கி எதிர்பார்த்துக் கிடந்த பின் அந்த விண்ணப்பமும் தள்ளுபடியாகி விட்ட தகவல் வந்தது. அதனால் ஜெயபாலும் ஜேகப்துரையுங் கூட சகிக்க முடியாத சங்கடமுற்றார்களென்றால் சங்கரனைப் பற்றி என்ன சொல்வது!

மீண்டும் ஜெயபாலும் ஜேகப் துரையும் சேர்ந்து செய்த முயற்சியாக மன்னர் பிரான் கருணைக்காகக் கவர்னர் ஜெனரலுக்கு விண்ணப்பம் அனுப்பப்பட்டிருந்தது. அதன் முடிவும் மற்ற மனுக்களுக்குக் கிடைத்தது

போலத்தான் இருந்து விடுமோ என்று சங்கரனுடைய உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது.

அந்த நிலைமையில்தான் இப்போது நாம் சங்கரலிங்கனைப் பார்க்கிறோம். கடைசியாக அனுப்பப்பட்ட கருணை விண்ணப்பமும் நிராகரிக்கப் பட்டு விட்டதையும் இன்னும் சில நாட்களில் சங்கரனைச் சுட்டுக் கொன்று விட டங்கன்துரை முடிவு செய்திருப்பதையும் இனிமேல் தான் ஜெயபால் சங்கரனுக்குத் தெரிவிக்கப் போகிறான்.

அபாயம் எவ்வளவுக் கெவ்வளவு அதிகப்படுகிறதோ, அவ்வளவுக் கவ்வளவு உயிரின் மேலுள்ள ஆசையும் அதிகப்படுவது இயற்கை. அதனால் தன்னுடைய கடைசி விண்ணப்பத்தைக் கவர்னர் ஜெனரலுக்கு அனுப்பிய பின் அந்த விண்ணப்பம் வெற்றி பெறச் செய்து மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகவாவது மாற்றி வைக்க வேண்டுமென்று, இதுவரையிலும் நினைக்காத தெய்வங்களை யெல்லாம் நினைத்துத் தொழுதுகொண்டிருந்தான். சரியாக உணவு கொள்ளாமல் உடல் மிகவும் பலவீனமடைந்துவிட்டபடியால் பகலிலும் கூடப் படுத்தே கிடப்பான். இடையிடையே கொஞ்சம் தூங்கியும் போவான். ஒரு சமயம் தன்னுடைய மரணதண்டனை மாற்றப்பட்டு விட்டதாகக் கனவு கண்டு விழுக்கென்று எழுந்து உட்கார்ந்து கலகல வென்று சிரிப்பான். இன்னொரு சமயம் மரண தண்டனையே ஊர்ஜிதப்பட்டுத் தன்னைச் சுட்டுக் கொல்ல நிறுத்தியிருப்பது போல் கனவு கண்டு விழித்துக்கொண்டு படுத்தபடியே விம்மி விம்மி அழுவான்.

அவனுக்கு வந்த கடிதங்களெல்லாம் அவனிடத்தில் கொடுக்கப்பட்டிருந்தன. கடைசியாக மங்களம் ஜெயபாலுக்கு எழுதியிருந்த கடிதமும் அவனிடம் கொடுக்கப் பட்டிருந்தது. அதையும் மங்களம் எழுதியிருந்த மற்றக்

கடிதங்களையும் எடுத்துத் திருப்பித் திருப்பிப் பலமுறை படித்துப் பதைப்பான். "ஐயோ! கண்மணி, உன்னைத் தவிக்கவிட்டு நானும் இந்தக் கதியடைந்துவிட்டேனே! மறுபடியும் இந்த ஜன்மத்தில் உன்னைக் காண்பேனோ? நீயும் என் தாயும் தந்தையும் இந்தப் பாழும் பட்டாள வேலையை விட்டுவிட வேண்டு மென்று கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டீர்களே! பாவி நான் அதை முழுமனதோடு ஏற்றுக் கொள்ளாமற் போனேனே! விட்டுவிட முயற்சியும் செய்தேனே! என் விதி அப்படி இழுத்துக் கொண்டு போய்விட்டதே, என்ன செய்வேன்! உன் கடிதங்களுக்கு என்ன பதில் எழுதுவது? என் பதில் கிடைக்காமல் நீ என்ன பாடுபட்டுக் கொண்டிருக்கிறாயோ! முன் என்னைக் காணாத ஏக்கத்தால் நோயுற்று மரணத் தருவாயில் இருந்த என் அருமை அன்னை இப்போது என்ன நிலைமையில் இருக்கிறாரோ! கண்மணி! நான் உங்களுக்கெல்லாம் பரம பாதகம் செய்து விட்டேன். உன்னைக் கருதியும் என் தாயார் செய்துள்ள தான தருமங்களைக் கருதியுமாவது பகவான் எனக்கு உயிர்ப்பிச்சை தரமாட்டாரா" என்று அடிக்கடி புலம்பிக் கொண்டிருப்பான்.

அன்றைக்கும் அப்படிப் புலம்பிக் கொண்டிருக்கும் போது ஜெயபால் சிறைச்சாலைக்கு வந்தான். சங்கரலிங்கம் சிறை வைக்கப்பட்டிருந்த கட்டிடம் சிறைச் சாலைக்காகக் கட்டப்பட்டதல்ல. ராணுவ உத்தியோகஸ்தர்கள் தங்கியிருப்பதற்காகக் கட்டப்பட்டது. பெரும் பகுதியும் கனமான தேக்குச் சட்டங்களாலும் பலகைகளாலும் ஆக்கப்பட்ட பல தனித்தனி அறைகள் உள்ளது. தாற்காலிகச் சிறைச்சாலையாகப் பயன் படுத்தப் பட்டுக் காவல் புரியப்பட்டு வந்தது.

டங்கன் துரைக்கு அடுத்தபடி அந்த முகாமில் மிக்க செல்வாக்குள்ள அதிகாரி ஜெயபால்தான். கைதி

களைக் கண்காணிக்கும் பொறுப்பும் ஜெயபாலின் காரியாலயத்தைச் சேர்ந்தது. அந்த முறையில் சிறைச்சாலைக்கு ஜெயபால் எந்த நேரத்திலும் வருவான். ஆரம்பத்தில் சதிக் குற்றம் சாட்டப்பட்ட பதினேழு பேரும் ஒரே இடத்தில் வேறொரு கட்டிடத்தில் வைக்கப்பட்டிருந்தார்கள். பிறகு அப்பீலில் மரணதண்டனை ஊர்ஜிதமான சங்கரன், சையத்காதர், முனிஜி ஆகிய மூவரை மட்டும் இந்தக் கட்டிடத்தில் தனித்தனி அறையில் டங்கன் உத்தரவுப்படி, பூட்டி வைத்தார்கள். சங்கரன் பூட்டப்பட்டிருந்த அறை சற்று விசாலமானதாகவும் ஏகாந்தமாகப் பேச வசதிகள் மிகுந்ததாகவும் உள்ளது. கைதிகளைக் கண்காணிக்க வென்றும் அவர்களுடைய அப்பீல் விஷயமாக ஆலோசிக்க வென்றும் ஜெயபால் சங்கரன் அறையில் அதிக நேரம் தங்கி அவனுக்கு ஆறுதலுண்டாகும்படி பேசிக்கொண்டிருந்துவிட்டுப் போவான். சில சமயங்களில் ஜேகப் துரையும் வந்து ஆறுதல் சொல்லுவார். ஜேகப் துரையின் அண்ணன் கமாண்டரின் சீப் காரியாலயத்தில் மிகுந்த செல்வாக்குடையவர் என்பதனால் அப்பீலிலாவது கருணை விண்ணப்பத்திலாவது சங்கரனுடைய மரண தண்டனையை மாற்றிவிடக் கூடும் என்று ஜெயபால் சங்கரனுக்கு ஆரம்பத்திலிருந்து ஆறுதல் சொல்லி வந்தான். அதனாலும் கூட சங்கரனுக்கு உயிராசையும் மரண பயமும் அதிகப்பட்டுவிட்டன வென்று சொல்லலாம்.

அப்படியெல்லாம் ஆறுதல் சொல்லி உயிர் தப்பலாம் என்ற ஆசை வளரச் செய்த ஜெயபால் இனி அந்த ஆசையை விட்டுவிடச் சொல்லுவதற்காக இப்போது வந்தான்.

தனக்குற்ற மரணதண்டனையை நினைத்துத் தன்னைச் சுட்டுக் கொன்றுவிட்டால் அதன் பிறகு தன்

னருமை மனைவி மங்களத்தின் கதி என்னவாகும்? தன் தாயார் எப்படி உயிர் தரிப்பார்? தகப்பனூர் எப்படிச் சகித்துக் கொள்வார்? மாமனாரும் மாமியாரும் எப்படி மனம் பொறுப்பார்கள்? என்றெல்லாம் எண்ணி யெண்ணிப் பலவிதமான பயங்கரக் காட்சிகளைக் கண்டு கொண்டே படுத்துக் கிடந்த சங்கரன் ஜெயபால் வந்த காலடி ஓசையைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். துவண்டு கிடந்த சங்கரன் ஜெயபாலைக் கண்டதும் துள்ளியெழுந்து தாவிச் சென்று அவனைத் தழுவிக் கொண்டான். எலும்பும் தோலுமாக இளைத்துப் போன சங்கரனுடைய கொதிக்கின்ற உடலைத் தன் மார்போடு அணைத்துக் கொண்டு முதுகைத் தடவிக் கொடுத்தான் ஜெயபால். சங்கரனுடைய முகம் ஜெயபாலின் மார்பில் புதைந்து அவன்விட்ட மூச்சுகள் கொல்லனுடைய ஊதுலையே போலக் கனலைக் கக்கின. அதனால் முன்னமேயே சங்கரனுக்காக உருகிக்கொண்டிருந்த ஜெயபாலின் உள்ளத்தோடு இப்போது உடலும் உருகுவது போலிருந்தது. ஏனெனில் இதுவரையிலும் கவர்னர் ஜெனரலுக்கு அனுப்பியிருந்த விண்ணப்பத்தாலாவது சங்கரனுடைய மரணதண்டனை மாறலாம் என்ற நம்பிக்கையினால் ஜெயபாலின் உள்ளம் உருகிய போதும் உடல் உருகாதிருந்தது. இப்போது அந்த ஆசையும் அடியோடு அழிந்துவிட்டதால் உடலும் உருகுவதுபோல் இருந்தது.

என்ன செய்வான் ஜெயபால்? கருணை விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதையும் இன்னும் சில நாட்களில் சங்கரனைச் சுட்டுக் கொன்றுவிடப் போவதாக டங்கன் துரை சொன்னதையும் சங்கரனுக்கு எப்படிச் சொல்லுவது? அதைச் சொல்லாதிருப்பதுதான் எப்படி? சொன்னாலும் சொல்லாவிட்டாலும் சங்கரனுடைய துயர

மெல்லாம் அவனைச் சுட்டுக் கொன்றவுடனே அவனை விட்டொழியும். ஆனால் ஜெயபாலின் துயரமோ சங்கரன் மறைந்த பின்னும் தன்னுடைய வாழ்நாளெல்லாம் வதைத்துக்கொண்டே யிருக்கும். ஜெயபாலுக்குத் தன்னுடைய ஆருயிர் நண்பனுகிய சங்கரன் சுட்டுக் கொல்லப்பட்ட துக்கம் மட்டுமல்லாமல் தன்னுடைய நண்பனைக் காப்பாற்றத் தான் பட்ட பாடுகளெல்லாம் பாழாகித் தனக்கு வந்த தோல்வியின் அவமானமும் காலமெல்லாம் மனதைக் கலக்கிக் கொண்டே யிருக்கும். ஜேகப் துரையின் அன்பால் சேனுதிபதியின் காரியாலயத்தில் மிகுந்த செல்வாக்குடைய தாமஸ் துரையின் உண்மையான ஒத்தாசை கிடைத்தும் தன்னுடைய முயற்சிகள் தோல்வியடைந்து தனக்குண்டான அவமானத்துக்குக் காரணம் டங்கன் துரைதான் என்று எண்ணும்போது ஜெயபாலுக்கு டங்கன்மீது அளவற்ற எரிச்சலுண்டாயிற்று.

இப்படிப் பல எண்ணங்கள் மனதைக் குழப்பத் தன் மீது சாய்ந்திருந்த சங்கரனைத் தழுவியபடியே ஜெயபால் நெடுநேரம் நின்றுகொண் டிருந்தான். பிறகு மெதுவாகச் சங்கரனை உட்காரச் செய்து தானும் அவனுக்கு எதிரில் அமர்ந்தான். சங்கரனுடைய வலது கை விரல்களைத் தன்னுடைய இரண்டு கைகளின் விரல்களுக்குள்ளும் பிடித்துக்கொண்டு ஜெயபால் ஒன்றும் பேசாமல் சங்கரனுடைய முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தான். ஜெயபாலின் உள்ளம் குமுறிற்று; உடல் நடுங்கிற்று; உதடுகள் துடித்தன. கண்கள் கலங்கின.

இதற்குமுன் ஜெயபால் வந்தால் சிரித்த முகத்துடன் வருவான். சங்கரனுடைய மரணதண்டனையைப் பற்றி தன் மனதுக்குள் எவ்வளவு கவலை யிருந்தாலும் அதைக் காட்டிக்கொள்ளாமல் கலகலத்துப் பேசி, சங்கர

னுடைய கவலைகளைக் குறைப்பான். சங்கரனும் ஜெயபால் தன்னுடன் இருக்கும் வரையிலும் தனக்குள்ள மரணதண்டனையை முற்றும் மறந்தவன் போலவே சல்லாபிப்பான். இயல்பாகவே ஜெயபால் எந்தச் சமயத்தில் எப்படிப்பட்ட சங்கடம் நேர்ந்தாலும் சமாளித்துக் கொள்ளக்கூடிய தைரியமுள்ளவன்.

அப்படிப்பட்ட ஜெயபால் இப்போது நெடுநேரமாக ஒரு வார்த்தையும் பேசாமல் கை நடுங்கக் கண் கலங்கித் தன்னையே பார்த்துக்கொண்டு சும்மா இருப்பதைக் கண்டு சங்கரனுடைய அச்சம் உச்சமடைந்தது. அவனுக்கும் உடல் நடுக்கமெடுத்தது. மனம் பதைக்க வாய் குளறி,

"என்ன ஜெயபால்! ஒன்றும் சொல்லாமல் என்னைத் தவிக்கச் செய்கிறுயே?" என்றான்.

ஜெயபால் பதில் பேசவில்லை.

"கவர்னர் ஜெனரலின் பதில் வந்துவிட்டதா?"

ஜெயபாலின் கண்களில் சுரந்திருந்த கண்ணீர் அவன் கன்னத்தில் வடிந்தது. தலையைக் கவிழ்த்துக் கொண்டான்.

"ஏன் மரணதண்டனையே ஊர்ஜிதமாகிவிட்டதா?"

உடனே ஜெயபால் தலை நிமிர்ந்தான். தான் பிடித்துக்கொண்டிருந்த சங்கரனுடைய கையை விட்டு விட்டுக் கண்ணீரைத் துடைத்துக்கொண்டான். கண்ணீர் சுரந்த கண்களில் இப்போது கனல் பறந்தது. துடித்த உதடுகள் தடித்தன. நடுக்கிய உடல் மிடுக்கியது. குமுறிய உள்ளம் திமிறியது.

"ஷங்கர்ஜி! இந்த டங்கன் துரையைச் சுட்டுக் கொன்றுவிட்டு நானும் தற்கொலை செய்துகொள்ளப் போகிறேன்" என்று ஆத்திரத்தோடு கத்தினான்.

"ஏன்?"

" ஏனு ? உனக்குக் கருணை காட்டவே கூடாது என்று கமாண்டரின் சீபுக்கும் கவனர் ஜெனரலுக்கும் பலமுறை எழுதி நம்முடைய முயற்சிகளை யெல்லாம் முறியடித்தவன் இந்தச் சண்டாளன் டங்கன்தான் என்பதைக் கண்டு கொண்டேன். உன்னைச் சுட்டுக் கொல்லும்படி எனக்கே இவன் உத்தரவு செய்தான். இதைவிட எனக்கு மானக்கேடு என்ன இருக்கிறது ? பிறகு அவனே அடுத்த வாரத்தில் உன்னைச் சுட்டுக் கொல்லப் போவதாகத் தீர்மானித்திருக்கிறான். உன்னைச் சுட்டுக் கொல்வதைப் பார்த்துக் கொண்டு நான் இந்த உயிரை வைத்திருக்க முடியாது. அவன் உன்னைச் சுட்டுக் கொல்லுமுன் அவனையே நான் சுட்டுக் கொன்று விட்டு நானும் இறந்து போகிறேன். பிறகு உன்னை யாரோ என்னமோ செய்துகொள்ளட்டும் " என்றான்.

கேப்டன் இதைச் சங்கரன், தனக்கு மரணதண்டனை நிச்சயம் என்பதைத் தெரிந்துகொண்டான். அது வரைக்கும் உயிரின்மேல் அவனுக்கிருந்த ஆசை அந்தக் கணமே அகன்றது. அச்சம் விட்டது. விரக்தி பிறந்தது. வேதனை மறைந்தது. இயல்பாக அவனுக்கிருந்த தீரம் திரும்பி வந்துவிட்டது. தாய் நாட்டின் விடுதலைக் கென்று நேதாஜியோடு சேர்ந்த நினைவுகளெல்லாம் மீண்டும் புகுந்து புத்துயிர் பெற்றன. நேதாஜியின் தியாக மரணமும் நினைவுக்கு வந்தது. மரணதண்டனை விதித்த சமயத்திலும் விதிப்பதற்கு முன்னாலும் எவ்வளவு நிம்மதியோடு தான் செய்தது தியாகம் என்று எண்ணினானே அதே நிம்மதியுடன், ஜெயபாலின் இரண்டு கைகளையும் பிடித்துக்கொண்டு சங்கரன் சொல்லலுற்றான் :

" ஜெயபால் ! அப்படிச் செய்துவிடாதே. நீ டங்கன் துரையையும் கொல்லக் கூடாது; உன்னையும் மாய்த்துக்

கொள்ளக் கூடாது. நான் மிகவும் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன். எனக்காக உன் மனம் எவ்வளவு தவிக்கின்றது என்பதை நன்றாக அறிவேன். உயிரை வேண்டுமானாலும் கொடுக்கக் கூடிய நட்பு, கதைகளில் தான் படித்ததுண்டு. உன்னிடத்தில் அதைக் கண்ணாரக் கண்டுவிட்டேன். உன்னை நண்பனைப் பெறுவதற்கு நான் எத்தனை ஜென்மங்களில் என்னென்ன புண்ணியம் செய்திருந்தேனே ! ஊணுறக்கமில்லாமல் எனக்காக நீ பட்ட பாடுகள் அவ்வளவும் பயனற்றுப் போனதில் உனக்கு அவமானமும் ஆத்திரமும் மேலிட்டு வாழ்க்கையில் வெறுப்புத் தட்டிவிட்டதில் வியப்பில்லை. இந்திய நாட்டைவிட்டு வெள்ளைக்காரனை வெளியேற்ற வேண்டுமென்று நான் நேதாஜியுடன் சேர்ந்துகொண்டது எனக்கு மிகவும் சந்தோஷமான காரியமே. அதில் எனக்கு வெட்கமோ வருத்தமோ இல்லை. அதற்காக வெள்ளைக்காரன் என்னைச் சதிகாரன் என்று சொல்லி எனக்கு மரணதண்டனை விதித்ததிலும் வியப்போ விசனமோ இருக்க நியாயமில்லை. நேதாஜியுடன் சேர்ந்து கொண்டபின் நான் பல இடங்களில் வெள்ளைக்காரனை எதிர்த்து வெற்றி பெற்றேன். அந்தச் சண்டைகளில் நான் குண்டுபட்டு இறந்திருக்கலாமல்லவா ? அப்படிச் செத்திருந்தால் எப்படியோ, அப்படியே இப்போது என்னைச் சுட்டுக் கொல்வதையும் சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளச் சித்தமாகிவிட்டேன். நேதாஜியுடன் சேர்ந்த நான் நேதாஜி போன இடத்துக்கே போய்ச் சேருகிறேன். அதனால் எனக்குப் புகழும் புண்ணியமும் உண்டு என்று மனப்பூர்வமாக மகிழ்ச்சி யடைகிறேன். மரணதண்டனையை மாற்ற 'அப்பீல்' செய்ததனால் உண்டான மயக்கம் இப்போது தெளிந்து விட்டது. என்னை எப்போது வேண்டு

மானுலும் சுட்டுக் கொல்லட்டும். என்னுடைய மரண மும் எனக்கு முன்னால் என்னைப்போல் நம்முடைய நாட்டின் விடுதலைக்காக உயிர் துறந்த இளைஞர்களின் தியாகமும் வீணுகப் போகா. வெகு சீக்கிரத்தில் வெள்ளைக்காரன் வெளியேறிவிடுவான். அந்த வெற்றி யைக் கொண்டாட எனக்குப் பிரதிநிதியாக நீ உயிர் வாழவேண்டும்..... ''

''நான் உயிரோடிருந்தாலும் நீ இறந்தபின் எனக்கு நிம்மதி இருக்காது. உன்னைச் சுட்டுக் கொன்றது என்னை உறுத்திக் கொண்டேயிருக்கும். நானெப்படி வெற்றி கொண்டாட முடியும்?'' என்று முனகினுன் ஜெயபால்.

''ஜெயபால் நீ அப்படிச் சொல்லக் கூடாது. என்னை விடத் திடசித்த முள்ள தீரனை நீ இந்தக் கோழைத் தனத்துக்கு இடங்கொடுக்கலாகாது. என்னுடைய மர ணம் இனி தவிர்க்கமுடியாத விஷயம். நீ உயிரை இழப்ப தனல் என் மரணதண்டனை மாறிவிடுமா? டங்கன் துரை யைச் சுட்டுவிட்டு நீயும் தற்கொலை செய்து கொள்வ தாகச் சொல்லுவது வெறும் வெறிபிடித்த பேச்சேயல்லா மல் அதனல் யாருக்கு என்ன நன்மை? நீ இறப்பதனல் நான் உயிர் தப்ப முடியுமென்றுலும் எனக்காக நீ உயிர் கொடுத்த பெருமை உண்டு. நீ இறந்தாலும் இறக்கா விட்டாலும் என்னைச் சுட்டுக் கொன்றுவிடுவார்களென் பது நிச்சயம். அப்படியிருக்க எனக்கு முன் நீ இறந்து போவதில் எனக்கோ உனக்கோ என்ன பெருமை. எனக் குப் பின் நீ இருந்து எனக்காகச் செய்யவேண்டிய காரி யங்கள் உண்டு'' என்று சங்கரன் சொல்லி முடிக்குமுன் ஜெயபால்:

''என்ன? என்ன? நானிருந்து உனக்காகச் செய்யக் கூடியது என்ன?.....'' என்று வெகு அவசரமாகக் கேட் டான்.

''சொல்லுகிறேன். அதைச் சொல்லுமுன் இந்த வெறிபிடித்த எண்ணத்தை நீ விட்டொழித்ததாக வாக் குறுதி கொடுக்கும்படி மிகவும் கெஞ்சிக் கேட்டுக்கொள் ளுகிறேன்'' என்ருன் சங்கரலிங்கம்.

அதைக் கேட்ட ஜெயபால் ஆவேசம் குறைந்தவ னுகச் சற்று நேரம் தலைகுனிந்து ஆலோசித்து விட்டு,

''ஷங்கர்! நீ சொல்லுவதெல்லாம் நியாயந்தான். ஆனல்.....''

''ஆனல் என்பதற்கு இடமேயில்லை. எனக்காக இந்த வாக்குறுதியை நீ தந்தே ஆக வேண்டும்''

''சரி, அப்படியே செய்கிறேன். நானிருந்து உனக் காகச் செய்யவேண்டியது என்ன?''

''எனக்குப் பின் நீ எனக்காகச் செய்ய வேண்டியது எவ்வளவோ இருக்கிறது. முதலில் என் பெற்ருேர்க்கு நீ தான் இன்னெரு பிள்ளைபோல் ஆறுதல் சொல்ல வேண்டும். என் இளமையிலிருந்து என்னுள்ளத்தில் வளர்ந்துவிட்ட தேசபக்திக்காக என் உயிரைப் பலி கொடுப்பதில் எனக்கு மகிழ்ச்சியே மிகுந்திருக்கிறது. ஆனலும் ஒரே ஒரு வருத்தம் என் உள்ளத்தை உறுத்து கின்றது. அது என்னைப் பெற்ற என் தாயாருக்கும் என் அருமை மனைவிக்கும் நான் மிகவும் அநீதி செய்து விட்டேனே என்பதுதான். என் மரணத்தை அறிந்த பின் அவர்கள் இருவரும் உயிர் தரிப்பார்களோ என்பது சந்தேகம். இருந்தாலும் அவர்களுக்கும் என் தந்தைக் கும் என்னுடைய மனைவியின் பெற்ருேர்களுக்கும் நீ தான் தேறுதல் செய்ய வேண்டும். என்னை மனமுவந்து மன்னித்து விடும்படி நான் அவர்களை யெல்லாம் கேட் டுக் கொண்டதாகச் சொல்லு. நீ எனக்கு ஒரு உடன் பிறப்பைக் காட்டிலும் உயர்ந்தவன் என்பதை என்

பெற்றோரும் மனைவியும் அறிவார்கள். நான் இறந்த உடன் நீ ரஜா வாங்கிக் கொண்டு.....''

''ரஜவா! நீ இறந்தபின் எனக்கு இங்கென்னவேலை? வேலையை விட்டொழித்துவிடப் போகிறேன்'' என்றான் ஜெயபால்.

''அப்படியே செய். உடனே சென்று என் பெற்றோரையும் மனைவியையும் சந்தித்துவிட்டு உனக்காகக் காத்திருக்கும் உன் காதலியை மணந்து கொண்டு, முடியுமானால் நீயும் உன் மனைவியும் என் பெற்றோருடனும் என் மனைவியுடனும் சிலகாலமாவது தங்கியிருந்து, அவர்களைத் தேற்ற வேண்டும். உன்னிடத்தில் இருக்கும் என் கைப்பெட்டியில் நாமிருவரும் போர்முனைக்குப் போகு முன் ரங்கூனில் வாங்கிய அந்த மிகச்சிறந்த வைரங்கள் இருக்கின்றன. அதில் ஒரு பாதியை உன் மனைவிக்கு என் அன்பளிப்பாகக் கொடு. மற்றப் பாதி என் மனைவிக் கென்று எண்ணியிருந்தேன். ஆனால் என் மரணத்துக்குப்பின் மங்களம் அதை ஏற்றுக் கொள்ள மாட்டாள். என் தாயும் இனி அவற்றை லட்சியம் செய்ய மாட்டார். அதனால் அதை என் மாமியாரிடம் தந்து என் மனைவியின் தங்கைகளுக்குப் பயன் படுத்திக்கொள்ளச் செய். அத்துடன் அவர்கள் எல்லாருக்கும் தனித்தனியே என் கடைசிக் கடிதங்களையும் உன்னிடம் ஒப்படைக்கிறேன். இங்குள்ள எனக்குச் சொந்தமான உடைமைகளையெல்லாம் என்னுடைய நினைவுப் பொருள்களாக என் தந்தையிடம் சேர்த்துவிடு. என்னுடைய தாயாரிடம்...''

''ஷங்கர்! நீ என்னமோ வெகு சுலபமாகச் சொல்லிக் கொண்டே போகிறாய். உன் தாயாரும் மனைவியும் நான் சொல்வதற்காக ஆறுதல் அடைந்து விடுவார்களா? உன்னைச் சுட்டுக் கொன்றுவிட்டார்கள் என்பதை நான் சொன்னவுடனே அவர்களுடைய உயிர் போனாலும்

போய்விடுமே! நான் அவர்களைச் சந்திப்பதற்கு முன்னாலேயே பத்திரிகைகள் மூலமாக அவர்கள் அதை அறிந்து இறந்து போனாலும் போகலாமே! நானெப்படி அவர்களைத் தேற்றுவது? என்னாலேயே சகிக்க முடியாத இந்த வேதனையை நான் எப்படி அவர்களைச் சகித்துக் கொள்ளச் செய்வது? டங்கன் துரையின்மேல் எனக்குள்ள ஆத்திரத்தை அடக்கிக் கொள்ளச் சொன்னது சரி. அது நான் செய்யக் கூடியதே. என்னுடைய துக்கத்தைப் பொறுத்துக் கொண்டு உன் உடைமைகளையும் கடிதங்களையும் கொண்டுபோய் அவரவருக்குக் கொடுத்து விடுவதும் செய்யக்கூடியதே. எனக்காகக் காத்துக் கொண்டிருக்கும் காதலியை மணந்து கொள்வதும் நீ விரும்பியபடியே நான் செய்து கொள்வது எளிதே. ஆனால் நானும் அவளும் போய்.....''

இந்தச் சமயத்தில் ஜேகப்துரை வெகு அவசரமாக அங்கே வந்து ஜெயபாலைப் பார்த்து,

''ஜெயபால்! டங்கன் துரை இங்கே வந்து கொண்டிருக்கிறார். ஷங்கர்ஜி, சையத்காதர், முனிஜி ஆகிய மூவரையும் தனித்தனியே 'போட்டோ' படம் பிடிக்க வேண்டுமாம். அதற்காக ஸ்மித் துரையும் காமிராவுடன் வரப்போகிறார்'' என்று சொன்னார். அதைக் கேட்டதும் ஜெயபால் பேச்சை நிறுத்திவிட்டு ஜேகப் துரையுடன் வெளியே போய்விட்டான்.

டங்கன் துரை வந்து போன பிற்பாடு மறுபடியும் ஜெயபால் சங்கரனிடம் வந்தான். அடுத்த நாலைந்து நாட்களுக்குள் இந்தியாவுக்கு ஐயாயிரம் சிப்பாய்களைக் கப்பலேற்றி அனுப்ப வேண்டியிருக்கிற வேலையைப் பற்றியும் அதற்கான ஏற்பாடுகளையெல்லாம் முடித்து விட்டுத் தானும் ரஜா வாங்கிக்கொண்டு அதே கப்பலில் இந்தியாவுக்குப் போகப் போவதாகவும் ரஜா முடிவதற்

குள் ராணுவ உத்தியோகத்தை ராஜினமா செய்துவிடத் தீர்மானித்திருப்பதாகவும் சொன்னான். மேலும் சங்கரனுடைய உடைமைகளையும் கடிதங்களையும் தானே கொண்டுபோய்ச் சங்கரனுடைய பெற்றோர்களிடத்தில் சேர்த்து விடுவதாகவும் சொன்னான். டங்கன் துரையை சந்தித்து உடனே ராஜா கிடைக்கும்படிச் செய்துகொண்ட பின் மீண்டும் வருவதாகச் சொல்லிவிட்டு, கப்பலுக்குப் போகக் காத்திருந்த 'லாரிகளை' மலைப்பாதை வழியாக அனுப்பவேண்டிய அவசரவேலையை கவனிக்கப் போய் விட்டான்.

ஜெயபால் வருகின்றான்

மறு நாள் ஜெயபால் ராஜா கேட்பதற்காக டங்கன் துரையைப் பார்க்கப் போனான். டங்கன் முகமலர்ச்சியோடு ஜெயபாலை வரவேற்று "ஹல்லோ! ஜெயபால் உங்களைப் பற்றி இப்போதுதான் நினைத்துக் கொண்டிருந்தேன். நீங்களே வந்துவிட்டீர்கள். மிக்க சந்தோஷம்" என்றார்.

"எதற்காக என்னை நினைத்தீர்கள்?"

"அந்த ஷங்கர்ஜி ரொம்ப முரட்டுப்பயலாக இருக்கிறானே!"

"எப்படி?"

"மரண தண்டனை கொடுக்கப்பட்ட அந்த மூன்று சதிகாரர்களையும் சந்தித்து, அவர்களுக்குத் தங்களுடைய உறவினர்களைப் பார்க்க ஆசையிருந்தால் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து, வேண்டிய அவகாசம் கொடுத்து அதன் பிறகு தண்டனையை நிறைவேற்றும்படி எனக்கு உத்தரவு வந்திருக்கிறது. அதற்காகவும் அவர்களைப் 'போட்டோ' பிடிக்கவும் நேற்று நானே போயிருந்தேன். மற்ற இரண்டு பேரும் தங்களுடைய உறவினர்களின் விலாசங்களைச் சொல்லி, அவர்கள் வந்து பார்க்கும் வரையிலும் தம்மைக் கொல்லாதிருக்க வேண்டுமென்று மிகவும் அழுது கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்கள். இந்த ஷங்கர்ஜி மட்டும் தான் பார்க்க விரும்பும் உறவினர்கள் யாரும் இல்லையென்றும் தனக்கு எதற்காகவும் அவகாசம் வேண்டியதில்லை யென்றும் உடனே தன்னைச் சுட்டுக் கொன்று விடும்படிக்கும் வெகு அலட்சியமாக என்னை அவமதித்துவிட்டான்."

"அவமதித்து விட்டானே?"

"ஆம். என்னை ஒரு ஏகாதிபத்திய வெறியன் என்றும், கன்னெஞ்சன் என்றும், தன்னுடைய மரணம் வெகு சீக்கிரத்தில் இங்கிலீஷ் ஏகாதிபத்தியத்தின் வேரை அறுத்துவிடப் போகிறதென்றும் இன்னும் ஏதேதோ சொல்லி இகழ்ந்து பேசினான். அவனை அப்போதே சுட்டுவிட வேண்டுமென்ற ஆத்திரம் வந்தது. ஆனால் அப்படிச் செய்வது என்னுடைய ஆண்மைக்கும் பதவிக்கும் அழகல்லவென்று பொறுத்துக்கொண்டேன்."

"சாகத் துணிந்துவிட்டவன் அப்படித்தான் பேசுவான். அதைப் பொறுத்துக்கொண்டது தங்களுடைய பதவிக்குத் தக்கதுதான். மற்றவர்களுக்கு எவ்வளவு அவகாசம் தரப்போகிறீர்கள்?" என்றான் ஜெயபால்.

"ஏன் அவர்கள் பார்க்க விரும்பியவர்கள் வந்து பார்க்கிறவரை அவகாசம் தரவேண்டியதுதான். ஏறத்தாழ ஒரு மாத மாகலாம்."

"தங்களை அவமதித்த ஷங்கர்ஜிக்கு?"

"ஓ! அவனுக்கும் அதேதான். என்னை அவமதித்துப் பேசினதற்காக அவனை மட்டும் முன்னால் கொல்லுவதா? அது கண்ணியக் குறைவான காரியம். அவன் எவ்வளவு முரட்டுத்தனமாகப் பேசினாலும் அவனுக்கும் அவகாசம் கொடுக்கவேண்டியது நம் கடமை" என்றார் டங்கன் துரை.

"ஆம் அந்த ஷங்கர்ஜி தங்களிடம் பேசியது மிகவும் முரட்டுத் தனந்தான். அவனைப் பார்வையிடுவதற்காக நான் போன சமயங்களில் அவன் தன்னுடைய மனைவியையும் பெற்றோரையும் நினைத்துப் புலம்பிக்கொண்டிருந்ததும், அவர்களைப் பார்க்கத் துடித்ததும் எனக்குத் தெரியும். அப்படியிருக்க அவன் தான் யாரையும் பார்க்க

விரும்பவில்லை யென்று தங்களிடம் சொன்னது வெறும் வெறிதான்."

"அப்படியானால் அவன் தன்னுடைய மனைவியையும் பெற்றோரையும் பார்க்க விரும்புவதாக இப்போதாவது கேட்டுக் கொள்ளச் சொல்லுங்கள். நான் அதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறேன்" என்றார் டங்கன்.

"சொல்லிப் பார்க்கிறேன்."

"சரி, நீங்கள் வந்த காரியம் ஏதேனும் உண்டா?"

"உண்டு. அதற்காகத்தான் வந்தேன். இந்தியாவுக்கு அனுப்பும்படி தாங்கள் உத்தரவிட்ட ஐயாயிரம் சிப்பாய்களில் ஆயிரம் பேரைத் துறைமுகத்துக்கு அனுப்பிவிட்டேன். மீதி நாலாயிரம் பேர்களையும் இன்னும் நான்கு நாட்களில் அனுப்பிவிடலாம். கடைசிக் கப்பலில் நானும் மூன்றுமாத ரஜா பெற்றுக் கொண்டு இந்தியாவுக்குப் போய்வர விரும்புகிறேன். எனக்குத் தாங்கள் மூன்று மாத ரஜா கொடுக்கத் தயவு செய்ய வேண்டும்."

"ரஜாவா? உங்களுக்கா? உங்களுக்கு வீரப் பதக்கமும் பரிசும் வரப்போகின்றனவே! வெகு விமரிசையாக அந்தப் பரிசளிப்பு விழாவை நானே இங்கே நடத்த விரும்புகிறேன். அது நடந்தபின் நீங்கள் ரஜா வாங்கிக் கொள்ளலாமே?.....ரஜாவுக்கு இப்போது என்ன அவசரம்?"

"ஆம் ஒரு அவசரம் இருக்கிறது"

"என்ன?"

"இந்த யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே என் திருமணம் ஏற்பாடாகியிருந்தது. நான் மணந்து கொள்ளப்போகும் பெண் பல வருடங்களாக எனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறாள். அத்துடன் என்னுடைய

தாயார் அடிக்கடி மிகவும் அசௌக்ய மடைந்து விடுகிறார் களாம். இறந்து விடுவதற்குமுன் என் கலியாணத்தைக் கண்டுகளித்துவிட வேண்டுமென்று மிகவும் அவசரப்படு கிறார்கள். அவர்கள் என்னைப் பிரிந்து கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளாகிவிட்டன. என்னுடைய ஏக்கத்தால் அவருக்கு ஏதேனும் அபாயம் உண்டாகிவிடுவதற்கு முன் நான் போக வேண்டும்....."

"ஓ! கல்யாணமா? காதலி காத்திருக்கிறாளா? இவ்வளவு காலம் காத்திருக்கும் உங்கள் காதலி இன்னும் சிலநாள் - உங்களுக்கு பரிசுவிழா நடக்கிற வரைக்கும் - காத்திருக்க முடியாதா?"

"என் காதலி காத்திருக்கலாம். ஆனால் நோயாளி யான என் தாயார்....."

"ஆம் உங்கள் தாயாரைக் கவனிக்க வேண்டியது தான். அப்படியானால் உங்களுக்குப் பரிசளிக்கும் விழாவை இங்கே நடத்துவதற்கு நான் போட்டிருக்கிற திட்டம் எல்லாம் கெட்டுப் போகுமே?"

"ஏன்?"

"இந்த யுத்தத்தில் கலந்துகொண்டு வெற்றிக்குக் காரணமாக இருந்த பல பட்டாளங்களும் அவற்றின் தலைவர்களும் இப்போது இங்கே இருக்கிறார்கள். இன்னும் மூன்று மாதங்களுக்குப் பின் இப்போது இங்குள்ள எல்லாரும் இங்கேயே இருக்க முடியாது. சிறுகச் சிறுக இந்தியாவிலிருந்து வந்தவர்களையெல்லாம் திரும்பவும் அவரவர்கள் முன்னிருந்த இடங்களுக்கே அனுப்பிவிட வேண்டும். பரிசுகளுக்கு உரியவர்கள் எல்லாரும் இருக்கிற இங்கேயே அந்த விழாவை நடத்தத் திட்டமிட்டு கமாண்டரின் சீப் அவர்களுடைய அனுமதி யையும் பெற்றிருக்கிறேன். நீங்கள் மூன்று மாதம் ரஜாவில் போய்விட்டால் அதற்குள் இந்த முகாம் பெரும்

பாலும் கலைந்துவிடுமே! பரிசுக்குரிய பலரும் அவர் களுடைய பட்டாளங்களும் இப்படி ஒரே இடத்தில் இனி இருக்க முடியாதே! நான் வெகு ஆவலோடு ஏற்பாடு செய்திருக்கிற பரிசளிப்பு விழாவின் திட்டம் முழுதும் இனிப் பாழ்தான்" என்று டங்கன் துரை சலித்துக் கொண்டார்.

அதைக்கேட்ட ஜெயபால், சிறிது நேரம் சும்மா இருந்து விட்டுப் பிறகு "நான் பரிசுகள் பெற்றுச் சிறப் படைய வேண்டுமென்றே தாங்கள் செய்துள்ள ஏற்பாடு களெல்லாம் கெட்டுப் போவதற்கு நானே காரணமாக இருப்பது மிகவும் தப்பான காரியம்தான். அதனால் உங்களுடைய திட்டங்களுக்குப் பங்கமில்லாதபடி எனக்கு இப்போது ஒருமாத ரஜாமட்டும் கொடுங்கள். முதலில் என் தாயாரைக் கண்டு அவருடைய ஏக்கத்தை நீக்கி விட்டு வந்துவிடுகிறேன். திருமணம், விழா பின்னால் நடக்கலாம்."

"ரொம்ப சந்தோஷம் ஜெயபால்; மிக நல்ல யோசனை. என்னுடைய திட்டப்படி இங்கே விழா நடத்தி விட இந்த உதவிசெய்யும் உங்களுக்கு வந்தனம். நீங்கள் போய் உங்கள் தாயாரைக் கண்டு தைரியப்படுத்திவிட்டு ஒரு மாதத்துக்குள் திரும்பி வந்துவிடுங்கள். அதற்குள் நான் விழாவுக்கு வேண்டிய எல்லாக் காரியங்களையும் தயார் செய்து வைக்கிறேன். விழா முடிந்தபின் வேண்டிய ரஜா வாங்கிக்கொண்டு.....ஏன், அதற்குப் பின் நாமெல்லாருமே இந்தியாவுக்குப் போய்விட நேரலாம்.....உங்கள் திருமணத்தை சாவதானமாக நடத்தலாம். நானும்கூட உங்கள் திருமணத்துக்கு வந்து மகிழக்கூடிய பாக்கியம் பெறலாமல்லவா?" என்று அங்கேயே ஒரு மாத ரஜாவுக்கான விண்ணப்பத்தை வாங்கிக்கொண்டு, அப்போதே அந்த விண்ணப்பத்தின்

மீது, கப்பலேறுகின்ற தேதி முதல் முப்பது நாட்களுக்கு ரஜா கொடுத்திருப்பதாக உத்தரவும் எழுதிவிட்டார் டங்கன் துரை.

சங்கரனைப் பற்றிய சஞ்சலமும் தனக்கு ரஜா கிடைத்துவிட்ட சந்தோஷமும் ஒன்றை யொன்று ஏளனம் செய்வது போன்ற மனக் குழப்பத்துடன் ஜெயபால், டங்கன் துரைக்கு வந்தனம் சொல்லிவிட்டு விடை பெற்றுக் கொண்டான்.

மங்களத்துக்கு நேர்ந்த மானக்கேடு

மரணதண்டனை யடைந்த ஷங்கர்ஜி, சையத்காதர், முனிஜி ஆகிய மூவரும் கவர்னர் ஜெனரலுக்குக் கருணை விண்ணப்பம் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியைப் பத்திரிகையில் பார்த்துக் குப்புசாமி மகாதேவருக்குக் காட்டினான் அல்லவா? ஏற்தாழ அதே சமயத்தில் அந்தக் கருணை விண்ணப்பம் தள்ளுபடியாகி, மரணதண்டனையே ஊர்ஜிதமாகிவிட்ட உத்தரவும் டங்கன் துரைக்கு வந்துவிட்டது. அது பத்திரிகைகளில் வராத விஷயமானதால் இந்தியாவுக்கு எட்டவில்லை. குப்பன் அதைப்பற்றிய செய்திக்காகப் பத்திரிகைகளை மிகவும் கூர்ந்து கவனித்துக் கொண்டு இருந்தான். மகாதேவர் மருமகனுடைய மரணதண்டனை மாறும்படி மகளுடைய சிவபூசை பலிக்க வேண்டு மென்று பிரார்த்தித்துக் கொண்டிருந்தார். அவருடைய மனைவி ஜானகியம்மாள், 'பரமேசுவரனும் பார்வதியும் கண்திறந்து பார்ப்பார்கள்' என்றுதான் நம்பியிருந்தாள். சங்கரனுடைய தந்தை கோபால கிருஷ்ணர், மருமகளுடைய ஜாதக தோஷத்தால் மகனைப் பறிகொடுக்க நேர்ந்துவிடும் என்றே பயந்து நடுங்கிக்கொண் டிருந்தார். சங்கரனுடைய தாயார் அன்னபூரணியம்மாளோ மகனைப் பற்றிய ஏக்கத்தால் அன்ன ஆகாரம் செல்லாமல் ஏங்கி இளைக்கலானாள்.

மங்களாம்பாளோ மனம் சோராமல் சிவன் கோயில் சேவை செய்துகொண்டிருந்தாள். களைப்போ சலிப்போ

அவளிடத்தில் காணப்படவில்லை. கடிகார யந்திரம் போல் காலந்தவருமல் தெய்வ வழிபாட்டின் ஒழுங்குகளை அனுஷ்டித்து வந்தாள். அந்த அனுஷ்டானத்தின் சிறப்பாலோ, ஆகார நியதிகளின் ஆசாரத்தாலோ, இயல்பாகவே அவளுக்கிருந்த அபூர்வமாகிய அழகு பல மடங்கு அதிகப்பட்டது. அவள் கோயிலுக்குப் போகும்போதும் வரும்போதும் அவளைப் பார்த்து மகிழப் பெண்களும் பிரியங்கொள்ளலானார்கள்.

அழகே பெண்களுக்கு அவதிகளையும் உண்டாக்கி விடுவது அனுபவம். சிவபூசை ஒன்றைத்தவிர வேறு சிந்தனையே இல்லாதிருந்த மங்களாம்பாளுக்கு அவளுடைய சிவபூசையில் கரடி புகுந்து விட்டது போன்ற ஒரு காரியம் நடந்துவிட்டது. அந்த நிகழ்ச்சியால் சிவபூசை நின்றுவிட்டது மல்லாமல் மங்களாம்பாளுக்கு மானக் குறைவையும் உண்டாகிவிட்டது.

மங்களாம்பாள் சேவை செய்து கொண்டிருந்த சிவன் கோவிலுக்கருகில் ஒரு மடம் உண்டு. அந்த மடத்தில் காவியணிந்த துறவிகள் பலபேர் தங்கியிருப்பார்கள். வட நாட்டிலிருந்து ஸ்ரீரங்கத்துக்கும் இராமேசுவரத்துக்கும் யாத்திரை வருகின்றவர்கள் அடிக்கடி கூட்டம் கூட்டமாக வந்து அதிலே தங்குவார்கள். அவர்களில் பெரும்பாலோர் பைராகிகள். அதனால் அதை 'பைராகி மடம்' என்று சொல்லுவார்கள். கள்ளம் நிறைந்த உள்ளம் படைத்தவர்களானாலும் காவியணிந்தவர்களுக்குத்தான் அங்கே இடமுண்டு. எவ்வளவு நல்லவர்களானாலும் வெறும் பிச்சைக்காரர்கள் உரிமையோடு அங்கே தங்கமுடியாது. காவியணிந்தவர்களுக்குள்ளும் மடத்து மணியக்காரருக்குப் பிடித்தமானவர்களுக்குச் சலுகை அதிகம்.

அந்த மடத்தில் தங்கியிருந்த ஒரு துறவி மங்களாம்பாள் மீது காமக்கண் செலுத்தலானார். அவருடைய மீசையும் தாடியும் மேல் நோக்கி முறுக்கப்பட்டிருந்ததைப் பார்த்த யாரும் அவரை ஒரு பஞ்சாபி சீக்கியன் என்று சொல்லிவிடுவார்கள். அவருடைய தலைப்பாகையும் கழுத்திலிருந்து கால்கள் வரையிலும் உடம்பை மூடிக் கொண்டிருந்த சட்டையும் காவி நிறமாகவே இருந்தாலும் விலையுயர்ந்த பஞ்சாப் தேசத்துப் பட்டுத்துணிகளாகவே பளபளத்தன. வழிநெடுகப் பிச்சை வாங்கியோ, பிறருடைய உதவியைக்கொண்டோ, யாத்திரை செய்கிற பைராகிகளைச் சேர்ந்தவரல்லர் அவர். ஊரூராகச் சென்று உபந்யாசங்கள் புரிந்து வேதாந்த உபதேசம் செய்யும் ஒரு உண்மைத் துறவியாகவே அவர் தோற்றமளித்தார். அவர் அந்த மடத்துக்கு வந்தவுடன் மடத்து மணியக்காரரைப் பார்த்துத் தனக்கு ஆகாரம் வாங்கி வரும்படி ஒரு ஐந்து ரூபாய் நோட்டை நீட்டி இந்துஸ்தானியில் கேட்டுக் கொண்டார். வடநாட்டுக் காரர்கள் அடிக்கடி அங்கே வந்து தங்குவதால் மணியக்காரருக்கு இந்துஸ்தானி கொஞ்சம் புரியும். அதனால் மணியக்காரர் அந்த நோட்டை வாங்கிக் கொண்டுபோய், பக்கத்திலுள்ள ஓட்டலிலிருந்து ஒரு ஆளுக்கு வேண்டிய 'எடுப்புச் சாப்பாட்டை'க் கொண்டுவரச் செய்தார். அந்தச் சாப்பாட்டின் விலை முக்கால் ரூபாய் போக, மீதி நாலேகால் ரூபாயைத் துறவியிடம் கொடுக்க வந்தார். ஆனால் துறவியோ அதை வாங்கிக்கொள்ள மறுத்து அது மணியக்காரரிடமே இருக்கட்டும் என்று ஜாடைகாட்டினார். இந்தச் செய்கை மணியக்காரருக்குச் சாமியாரின் மேல் மிகுந்த மதிப்பை உண்டாக்கிவிட்டது. அதனால் மதிக்கத் தகுந்த துறவிகள் வந்தால் அவர்களுக்கு மரியாதை காட்டவேண்டும் என்ற அந்த மடத்தின்

வழக்கப்படி மணியக்காரர் உடனே அந்தத் துறவி அமர்வதற்காக மிக நல்ல ரத்தினக் கம்பளம் ஒன்றை விரித்தார். அத்துடன் சாமியார் சிரம பரிகாரமாகச் சாய்ந்து கொள்ள ஒரு திண்டையும் கொடுத்து உபசரித்தார்.

இப்படியாக, மடத்திற்கு அதிகாரியான அங்குள்ள மணியக்காரரின் பிரத்யேகச் சலுகையுடன் அந்தத் துறவி அங்கே தங்கியிருந்தார். அந்தச் சாமியார் ஒரு நாளைக்கு ஒரு வேளைதான் சாப்பிடுவார். காலையில் கொஞ்சம் பால். மத்தியானம் மட்டும் சாப்பாடோ சப்பாத்தியோ சிறிதளவே புசிப்பார். இரவில் கொஞ்சம் பால். அவ்வளவுதான். ஒவ்வொரு வேளைக்கும் ஆகாரம் வாங்கிவரத் தாமே மணியக்காரரிடம் பணம் கொடுப்பார். மிச்சப் பணத்தைப் பற்றி அக்கறையில்லை. சில சமயம் வாங்கிக் கொள்வார். பல சமயம் மறுத்துவிடுவார். அதனால் மணியக்காரரின் சலுகைகள் அதிகப்பட்டன. சாமியாருக்கென்று ஒரு ஸ்நான அறையும் விடப்பட்டது. விடியற்காலம் ஐந்து மணிக்கெல்லாம் சாமியார் நீராடிவிட்டுச் சிறிது நேரம் நிஷ்டையில் அமர்வார். இரண்டே நாளில் மணியக்காரர் சாமியாருக்குப் பரம சீடராகிப் பரிந்து பரிந்து பணிவிடைகள் செய்யலானார். பணத்தைக் கணக்குப் பார்க்காமல் கொடுக்கிறவனுக்கு யார்தான் பணிவிடை செய்யமாட்டார்கள்? அந்தத் துறவியிடத்தில் நிரம்பப் பணம் இருந்தது. அதைத் தன்னுடைய இடுப்பில் கட்டியிருந்த பட்டுக் கச்சையில் பத்திரப்படுத்தியிருந்தார். அன்றுடச் செலவுகளுக்கென்று அலாதியாக ஒரு 'மணிபர்ஸில்' வேறுகப் பணம் வைத்துக் கொண்டிருந்தார். அந்த 'மணிபர்ஸையும்' தன்னுடைய உள் சட்டைப் பையில் வைத்திருந்தார். தூங்கும்போதுகூட 'மணிபர்ஸை' அப்புறப்படுத்த மாட்டார். குளிக்கிற போதும் ஸ்நான அறைக்குள் சென்று கதவைத்

தாழிட்டுக் கொண்டுச் சட்டைகளைக் களைந்து, கச்சையை அவிழ்த்துக் கண்ணுக்கு முன்னால் வைத்துக்கொண்டுதான் குளிப்பார். குளித்துவிட்டு மாற்று உடைகளை அணிந்துக் கச்சையைக் கட்டிக்கொண்டு, 'மணிபர்சை' பந்தோபஸ்து செய்துகொண்டுதான் வெளியேறுவார். மடத்திலுள்ள வேலைகாரர்களுக்குத் தாராளமான கூலி கொடுக்கச் செய்து அழுக்கான உடைகளைத் தோய்க்கச் செய்வார்.

சாமியாரிடத்தில் நிறையப் பணம் இருப்பதையும் அவர் கணக்குப் பார்க்காமல் செலவு செய்வதையும் கண்ட மணியக்காரர் சாமியாரிடத்தில் நல்ல வெகுமதி அடையலாம் என்று ஆசைகொண்டதில் அதிசயமில்லை. அதனால் குடும்பத்தோடு வந்து தங்குகின்ற சேவகக்காரர்களுக்கு சொற்ப வாடகையில் விடுவதற்கென்று மடத்தின் பின்கட்டில் இருந்த காலி அறைகளில் ஒன்றை அந்தத் துறவிக்கு விட்டு அதிலேஅவரை இருக்கச் செய்தார் மணியக்காரர். துறவிக்கு வேண்டிய உணவும் பாலும் அந்த அறைக்கே கொண்டு வந்து கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த அறை மிகவும் ஏகாந்தமாக இருந்தது. அந்தத் துறவி தம் முடைய பெயர் யோகானந்தர் என்றும் அந்தப் பெயருக்குத் தபால் ஏதேனும் வந்தால் கவனித்து வாங்கி வரும்படியும் மணியக்காரரை கேட்டுக் கொண்டார்.

அந்த அறையில் இரண்டு பெரிய சாளரங்கள் இருந்தன. ஒரு சாளரத்தின் வழியாகப் பார்த்தால் கோயிலுக்கு வருகிறவர்களுடைய முகம் தெரியும். இன்னொரு சாளரத்தின் வழியாகப் பார்த்தால் அவர்களுடைய முதுகும் கோயிலும் தெரியும். அதைப்போலவே கோவிலில் இருந்து வருகிறவர்களுடைய முகம் இந்த

இரண்டாவது சாளரத்தின் வழியாகத் தெரியும். அவர்களுடைய முதுகு, முதல் சாளரத்தின் வழியாகத் தெரியும். அப்படிக் கோயிலுக்குத் திரும்பவேண்டிய மூலையில் அமைந்திருந்தது அந்த அறை.

இந்த அறையில் இருந்துகொண்டு மங்களாம்பாள் வருவதையும் போவதையும் பார்த்துக் கோயிலுக்கு வரும் [illegible]வி அவள்மீது காம ஆசை கொண்டிருந்த அந்தத் துற[illegible]டிவிட்டதனாலேயே கொண்டுவிட்டார். காவித்துணி கட[illegible]ந்த மனிதருக்கு காம ஆசை விட்டுவிடுமா? காஷாயம் தா[illegible]ரு நெடுங்குள் ஆஷாட பூதிகளே அதிகம். முற்றும் துறந்[illegible]த்தைக் காலம் தவம்புரிந்த முனிவர்களும் கூடக் காம[illegible]விகள் கடக்க முடியவில்லை யென்றால் சாதாரணத் துற[illegible]பிட வெறும் வேடத்தால் மட்டும் காமத்தை வென்று[illegible]த முடியுமா? மேலும் பிறப்பை ஒழித்துப் பேரின்பத்தை அடைவதற்கான தவம் புரிவதற்கென்று துறவுவேடம் பூணுகின்றவர்கள் மிகவும் சொற்பம். மனைவியின் மேல் கொண்ட கோபத்தினால் குடும்பத்தை வெறுத்துக் காவித்துணி கட்டிக்கொள்ளும் துறவிகளும் உண்டு. வாங்கின கடன்களைத் திருப்பிக் கொடுக்க வகை யில்லாமல் காஷாயம் தரிப்பவர்களும் உண்டு. துறவிகளைத் தெய்வம்போற் கருதி வணங்கி வழிபடுவது இந்த நாட்டில் பரம்பரை வழக்கமானதால் காவித்துணிக்குள் மறைந்து கொண்டு கள்ள வாழ்க்கை நடத்தும் கயவர்களும் உண்டு. வேறு குற்றங்கள் இல்லாவிடினும் வெறும் கள்ளுண்பதையும் கஞ்சா குடிப்பதையும் மட்டுமே கருதிக் காவியணிந்தவர்களும் உண்டு. கள்ளாசையும் கஞ்சா போதையும் இல்லாமலும் பெண்ணாசை ஒன்றை மட்டும் கருதி துறவுவேடம் பூண்ந்தவர்களும் உண்டு. கொலை கொள்ளை முதலிய குற்றங்களைச் செய்துவிட்டுத் தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்ளச் சாமியார்

மாறிவிடுவதும் உண்டு. பிறரிடத்திலிருந்து பெரும் பணத்தை அபகரித்துக் கொண்டு துறவு வேடத்தில் தூரதேசங்களுக்கு ஓடிப் போகிறவர்களும் உண்டு.

மங்களாம்பாள் மீது காமஇச்சை கொண்டுவிட்ட இந்தத் துறவி, மேற்சொன்ன எந்த வகையிற் சேர்ந்த வரோ தெரியவில்லை. ஆனால் அவர் மிகவும் சாதுவாகக் காணப்பட்டதால் அவர் உண்மையான துறவி யென்றும், மங்களாம்பாளின் அபூர்வமாகிய அழகு அவருடைய துறவு நிலையைக் கலைத்துவிட்டது என்றும்தான் எண்ண வேண்டியிருந்தது.

எப்படியோ மங்களாம்பாளின்மீது அவர் காம இச்சை கொண்டுவிட்டார். துறவு நிலை தொலைந்து விட்டது. நிம்மதி குலைந்துவிட்டது. நிஷ்டையில் அமர்வதும் நின்றுவிட்டது. காமத் துடிப்போ மிகுந்துவிட்டது. இல்லற வாழ்க்கையிலுள்ள சாதாரண மனிதர்களுக்குக் காம இச்சை உதித்தால் அது அவ்வளவு துன்பப் படுத்தாது. ஆனால் காம ஆசையை அடக்கிப் பெண்ணின்பத்தை நெடுநாள் விலக்கியிருந்தவர்களுக்குக் காம உணர்ச்சி வந்துவிட்டால் அது வெகு வேகத்தோடு துன்புறுத்தும். மேலும் வெறும் இரத்தத் திமிரினால் உடலின் உணர்ச்சியாக உதித்துவிட்ட காம ஆசையாக இருந்தால் அதைத் தீர்த்துக்கொள்வது கஷ்டமல்ல.

ஆனால் குறிப்பான ஒரு பெண்ணின் வடிவத்தில் லயித்துவிட்ட மன உணர்ச்சியாகிய காம ஆசையைத் தீர்த்துக்கொள்ள அந்தக் குறிப்பிட்ட பெண்ணே கிடைத்தாலன்றி வேறு வழியில்லை. அவளைவிட அழகுள்ளவேறு பெண் கிடைத்தாலும் அந்த ஆசை தீராது. அப்படிப்பட்ட காம வெறி, அந்தச் சாதுவுக்கு மங்களாம்பாள்மீது வந்துவிட்டது.

அந்தச் சாது தங்கியிருந்த அறையின் சாளரத்துக்கு வெகு சமீபமாக வந்துதான் மங்களாம்பாள் கோவிலுக்குத் திரும்ப வேண்டும். சாளரத்தின் கம்பிகளுக் கிடையில் கையை நீட்டி அவளைத் தொட்டுவிடலாம் போல் அவ்வளவு அருகாமையில் போவாள். சாளரக் கம்பிகளையும் மறந்துத் தாவிக் குதித்து அவளைத் தழுவிக் கொள்ளத் துடிப்பார் அந்தத் துறவி. காலையிலும் மாலையிலும் மங்களாம்பாள் வருவதைக் காணவென்றே சாளரத்தினருகில் காத்துக் கொண்டிருப்பார்.

முன்னே எதிர்வீட்டுக் குப்புசாமி மங்களாம்பாள் கோவிலுக்குப் போவதையும் வருவதையும் பார்ப்பதற் கென்றே நேரந்தவருமல் தன் வீட்டுத் திண்ணையில் தங்கியிருப்பானல்லவா? அதே மாதிரி இந்தச் சாமி யாரும் நேரந் தவருமல் சாளரத்தருகில் தங்கியிருக்க லானர். குப்புசாமி இப்போதெல்லாம் மங்களாம்பாள் மீது காமக்கண் செலுத்துவதில்லை. சங்கரலிங்கனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருப்பதைப் பத்திரிகையில் பார்த்த உடனே அவனுக்கு உதித்த பச்சாத்தாபமும், 'ஷங்கர்ஜி' என்ற பெயரைப்பற்றி யாருக்கும் சொல்லி விடக்கூடாது என்பதற்கு அவன் மகாதேவருக்குக் கொடுத்த வாக்குறுதியும் நிலைத்துவிட்டன. அதன் பிறகு மங்களாம்பாளைப் பார்க்கும் போதெல்லாம் அவள்மீது அவனுக்குப் பரிதாபமே உண்டாயிற்று. அந்த மட்டிலாவது மங்களத்தின் சிவபூஜை பலனளித்தது என்றுதான் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் குப்பனுக்கு மங்களத்தின் மீதிருந்த மையலும் சங்கரன் மீதிருந்த மாச்சரியமும் 'ஷங்கர்ஜி' என்ற பெயரைப் பற்றிய ரகசியத்தை மங்களத்துக்கே தெரியப்படுத்தி விடத்தான் செய்திருக்கும். அதனல் மங்களம் என்ன கதியடைந்திருப்பாளோ! எப்படிச் சொல்ல முடியும்?

குப்புச்சாமி விட்டுவிட்ட காரியத்தை இந்தச் சாமியார் மேற்கொண்டுவிட்டாரென்று சொல்லும்படி மங்களாம்பாளைப் பார்ப்பதற்கென்றே அவர் காலையும் மாலையும் அலுப்பில்லாமல் சாளரங்களின் அருகிலேயே நின்று சாதிப்பார்.

ஒரு நாள் காலையில் கோவிலுக்கு வந்துகொண் டிருந்த மங்களாம்பாளைச் சன்னலின் வழியாகச் சாமியார் பார்த்துக்கொண்டிருந்தார். அப்போது சாமியாரின் காலை ஆகாரத்திற்காகப் பால் கொண்டுவந்த மடத்தின் மணி யக்காரர் அறைக்குள் வந்தார். அவரைக் கண்ட சாமியார் சன்னல் பக்கம் கையை நீட்டி ஏதோ காரியமற்ற கேள்விபோல, "அதோ வருகிற பெண்ணை உங்களுக் குத் தெரியுமா?" என்று இந்துஸ்தானியில் கேட்டார்.

அதைப் புரிந்து கொண்ட மணியக்காரர் இந்துஸ் தானியும் தமிழும் சில இங்கிலீஷ் வார்த்தைகளும் கூடக் கலந்த பாஷையில் திக்கித் திணறிக் கொண்டு,

"அந்தப் பெண் உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்த வள். இங்கிலீஷ் பாஸ் செய்தவள். மிகப்பெரிய பணக் காரப் பையனுக்கு வாழ்க்கைப்பட்டவள். அந்தப் பையன் பட்டாளத்தில் சேர்ந்து பர்மா சண்டைக்குப் போனவன் திரும்பி வரவில்லை. அவன் என்னவானனே தெரியவே யில்லை. அவன் சண்டையில் குண்டுபட்டுச் செத்துப் போயிருப்பான் என்று கூடப் பேசிக் கொள்ளுகிறார்கள். ஆனல் இந்தப் பெண் புருஷன் திரும்பி வரவேண்டு மென்று ஐந்தாறு மாசமாகச் சிவன் கோயிலுக்குக் காலையும் மாலையும் நடையாக நடந்து தவங்கிடக்குது. தேவலோகத்து ரம்பை மாதிரி என்ன அழகு பாருங்கள்! மகா உத்தமி ஸார்" என்ற கருத்தை வெளியிட்டார்.

அதைக் கேட்ட சாமியார், 'அப்படியா? இங்கிலீஷ் படித்த பெண்ணு!' என்று மூக்கின் மேல் விரலை

வைத்துத் தலையைக் கவிழ்த்துக்கொண்டார். கொண்டு வந்த பாலை வைத்துவிட்டு மணியக்காரர் போய்விட்டார். அந்தப் பெண்ணைப்பற்றிச் சாமியார் மனதிலுள்ள காம வெறி மணியக்காரருக்குத் தெரியாது. மணியக்காரர் சொன்னதிலிருந்து அந்தப் பெண் தனக்குக் கிடைக்கக் கூடியவளல்ல என்ற ஏக்கம் வந்துவிட்டவர்போலச் சாமியார் நெடுநேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். பாலையும் குடிக்கவில்லை. அன்று மத்தியான ஆகாரமும் அவருக்குச் செல்லவில்லை. சாயந்திரம் வரையில் சங்கடப்பட்டுக் கொண்டே யிருந்துவிட்டார். ஆனாலும் வழக்கம்போல் மாலையில் மங்களாம்பாள் கோவிலுக்கு வருகிற நேரத்தில் சன்னலுக்கருகில் போய் நின்றுகொள்ளத் தவறவில்லை.

அன்னை முன்னாலும் மகள் பின்னாலுமாக ஜானகியம்மாளும் மங்களமும் வந்தார்கள். சன்னலைக் கடந்து கோயிலுக்குள் நுழைகிறவரை சாமியார் அவர்களைப் பார்த்துக்கொண் டிருந்தார். அதன்பிறகு சாமியாரும் கோயிலுக்குப் போகப் புறப்பட்டார். நெற்றி நிறையத் திருநீறு பூசி, நடுவில் ஒரு மிகப்பெரிய குங்குமத் திலகம் தீட்டிக் கொண்டார். விபூதிப் பையையும் ஜெபமாலையையும் எடுத்துக் கொண்டார். நன்றாக இருட்டுகிறவரை காத்திருந்தார். மணியக்காரரிடத்தில் சுவாமி தரிசனம் செய்துவரப் போவதாகச் சொல்லிவிட்டுக் கோவிலுக்குப் போனார். கடவுளைக் காணக் காவித் துணியணிந்த அந்தத் துறவி, ஆலயத்துக்குட் சென்றும் ஆண்டவனைத் தரிசிக்காமல் பிராகாரங்களைச் சுற்றிச் சுற்றி ஒரு பெண்ணைத் தேடினார். மண்ணெண்ணை விளக்குகளை அங்கங்கே மங்கி மங்கி எரிந்துகொண் டிருந்தன. அதனால் மங்களாம்பாள் இருந்த இடத்தை எளிதிற் காண இயலவில்லை.

கடைசியில் அந்தப் பெண்மணி அம்மன் சந்நிதியில் அமர்ந்திருப்பதைக் கண்டார். அப்போது மங்களம்

கண்களை மூடிக்கொண்டு பார்வதி தோத்திரத்தை ஜெபம் செய்துகொண் டிருந்தாள். அந்த ஜெபம் முடிகிற வரையிலும் காத்திருக்க வேண்டிய ஜானகியம்மாள், மகளுக்குச் சற்று தூரத்தில் ஒரு தூணின் மேல் சாய்ந்துகொண்டு ஓய்வாக உட்கார்ந்திருந்தாள். அங்கே வந்த துறவியைக் கண்ட ஜானகியம்மாள் உடனே எழுந்து நின்று அவரை வணங்கினாள். சாமியாரும் அந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் தன்னுடைய விபூதிப் பையை அவிழ்த்துத் திருநீற்றை எடுத்துத் தலைக்குமேல் உயர்த்தி ஏதோ மந்திரம் உச்சாடனம் செய்வது போல் உதடுகளை அசைத்துவிட்டு ஜானகியம்மாள்கையில் கொடுத்தார். அவளும் அதை பயபக்தியோடு வாங்கிக் கொண்டாள். அந்தச் சமயத்தில் கோயிலுக்குள் மணியடித்தார்கள். அதை ஜானகி நல்ல சகுனம் என நினைத்து மகிழ்ந்தாள். சாமியாரும் அது தனக்கு நல்ல சகுனம் என்று நினைத்துக் கொண்டார். உடனே சாமியார் மங்களாம்பாளைக் கவனிக்காதவர் போலவே அவளைக் கடந்து அம்மன் சந்நிதிக்குள் சென்று தரிசனம் செய்துவிட்டு வெளியே போய் அம்மன் கோயிலை வலம் செய்துகொண்டு கோயிலின் தலைவாசலுக்குப் போய்விட்டார்.

முறைப்படி வழிபாடுகளை முடித்துக் கொண்டு மங்களமும் ஜானகியும் வீட்டுக்குப் போக வெளி வாசலுக்கு வந்துகொண் டிருந்தார்கள். காமப் பித்துக் கொண்டுவிட்ட அந்தக் கபட சன்னியாசி அவர்களுக்காகவே அங்கே காத்துக்கொண் டிருந்தார். ஜெபமணி உருட்டிக்கொண்டு ஒன்றுமறியாதவர்போல உட்கார்ந்திருந்த அந்தச் சன்னியாசியைக் கண்ட ஜானகியம்மாள் தன்னுடைய மகளுக்கும் அவர் விபூதி கொடுத்து ஆசீர்வதிக்க வேண்டுமென்ற விருப்பத்தோடு நடையைக்

குறைத்தாள். அவர்கள் தன்னைக் கவனிக்காமல் போய் விடுவார்களோ என்று அஞ்சிய சன்னியாசியும் அதே சமயத்தில் ஜானகியம்மாளைக் கை காட்டி அழைத்தார். ஜானகியம்மாள் சன்னியாசிக்கு முன்னால் நின்றாள். தரையைப் பார்த்துக் கொண்டே பின்னால் வந்த மங்களமும் நிற்க வேண்டியவளாகி நிமிர்ந்து பார்த்தாள். ஜானகியம்மாள் சன்னியாசியை மகளுக்குச் சுட்டிக் காட்டி அவரை வணங்கச் சொன்னாள். மங்களாம்பாளும் உடனே மண்டியிட்டுத் துறவியை நமஸ்கரித்தாள். நமஸ்காரம் செய்துவிட்டு எழுந்திருக்க அவள் தலையை நிமிர்த்தும் போது அந்தச் சன்னியாசி அதற்கென்றே தயாராக வைத்திருந்த குங்குமத்தை எடுத்து மங்களாம் பாள் நெற்றியில் திலகமிட்டு 'காட் ப்ளெஸ் யூ' (கடவுள் உன்னை ஆசீர்வதிப்பாராக) என்று ஆங்கில மொழியில் ஆசீர்வதித்தார். மங்களாம்பாள் ஆங்கிலம் படித்தவள் என்று மணியக்காரர் சொன்னதை மனதில் வைத்துக் கொண்டு அப்படிச் செய்தார் போலும். சன்னியாசி இங்கிலீஷ் பேசியதைக் கேட்ட மங்களாம்பாள் அவரை ஒரு மகான் என்றே மதித்து, அவர் பொட்டு வைக்கத் தன்னைத் தொட்டுவிட்டதனால் உண்டான அருவருப்பை யும் அடக்கிக்கொண்டாள். சிறுசிறு பொட்டலங்களாக மடித்து வைத்திருந்த குங்குமத்தையும் விபூதியையும் சன்னியாசி மங்களாம்பாளிடம் கொடுத்தார். அவற்றை வாங்கிக்கொண்டு மங்களமும் ஜானகியும் போய்விட் டார்கள். பின்னாலேயே சன்னியாசியும் மடத்துக்குப் போய்விட்டார். மாற்றறியாப் பொன்போன்ற மங்களாம்பாளின் மேனியைத் தொட்டுவிட்ட மகிழ்ச்சி அந்தச் சன்னியாசியைத் தூங்கவிடவில்லை.

அடுத்த நாளும் அதைப்போலவே இருட்டிய பின் கோயிலுக்குச் சென்று சாமியார் அவர்களைச் சந்தித்துக்

குங்குமம் விபூதி கொடுத்து ஆசீர்வதித்தார். ஆனால், முதல் நாள் நடந்தது போல மங்களாம்பாளுக்குச் சன்னியாசியே பொட்டு வைக்க முடியவில்லை. அவள் அவரை நமஸ்கரித்த உடனே எழுந்து நின்று குங்குமத் தைத் தன்னிடம் கொடுக்கும்படி கையேந்தினாள். வேறு வழியின்றி அவரும் கொடுத்துவிட வேண்டிய தாயிற்று; இப்படி இரண்டு மூன்றுநாள் இரவில் மட்டும் கோயிலுக்குப் போய் அந்தத் துறவி அவர்களுடைய பரிச்சியத்தைப் பலப்படுத்திக் கொண்டார்.

அவர் அந்த மடத்துக்கு வந்த ஒன்பதாவதுநாள் அவருக்கு ஒரு அவசரத் தந்தி வந்தது. யோகானந்தர் என்ற பெயருக்கு வரும் தபால்களைத் தமக்குத் தரும்படி முன்பே அவர் சொல்லியிருந்ததன்படி மணியக்காரர் அதை வாங்கி வந்து துறவியிடம் தந்தார். அந்தத் தந்தியில் அவரை உடனே காசிக்கு வரும்படி கண்டி ருந்தது. அனுப்பினவருடைய பெயர் இல்லாவிட்டாலும் அது யார் அனுப்பிய தந்தியென்பது அவருக்குத் தெரியும். அது வெகு முக்கியமான தந்தி. அதனால் உடனே போகவேண்டியதுதான். ஆனாலும் அவ்வளவு சீக்கிரமாக அந்த ஊரைவிட்டுப் போய்விட அவருக்கு மனம் வரவில்லை. மங்களாம்பாளின் மீது அவர் கொண்டுள்ள மையல் கொஞ்சமல்ல. அவளோடு நெருங்கிப் பழகி அவளை தினந்தினம் பார்த்துக்கொண் டிருந்தாலும் போதும் என்ற எண்ணமுள்ள அந்த நிலை கெட்ட துறவிக்கு எப்படி அந்த ஊரைவிட்டு உடனே போய்விட மனம் வரும்? போகவோ மனமில்லை. போகாதிருக்கவோ முடியாது. என்ன செய்வது? எண்ணி யெண்ணிப் பார்த்தார். எப்படி எண்ணினாலும் சாளரத்தின் வழியாக மனதிற் புகுந்துகொண்ட மங்கையின் வடிவம்தான் வந்து வந்து நின்றது.

கடைசியாக, என்ன வந்தாலும் சரி அந்தப் பெண்ணுக்கு ஆங்கிலத்தில் ஒரு கடிதம் எழுதித் தம்முடைய காதலை அவளுக்குத் தெரிவித்துவிடுவது என்று தீர்மானித்தார். உடனே மணியக்காரரை அழைத்துக் கடிதம் எழுதக் காகிதம் வாங்கி வரும்படி சில்லறை இல்லாததால் ஒரு பத்து ரூபாய் நோட்டைக் கொடுத்தார். வந்த தந்திக்குப் பதில் எழுதத்தான் சாமியார் காகிதம் வாங்கிவரச் சொல்லுவதாக எண்ணிக்கொண்ட மணியக்காரர் உடனே போய் நான்கு தாள்கள் காகிதமும் ஒரு தபால் 'கவரும்' வாங்கி வந்தார். பேனு வேண்டு மென்றதற்கு மணியக்காரர் தம்முடைய 'பவுண்டன்' பேனுவைக் கொடுத்தார். மிச்சப் பணத்தையும் வாங்கிக்கொள்ளாமல் மணியக்காரரை அனுப்பிவிட்டு அறையின் கதவைத் தாழிட்டுக் கொண்டு தன்னுடைய காதலை யெல்லாம் கொட்டி ஒரு கடிதம் எழுதி முடித்து அதைத் தன்னுடைய உள் சட்டைப் பையில் 'மணிபர்சு'டன் பத்திரப்படுத்திக் கொண்டார்.

அன்று மாலை மங்களாம்பாளும் ஜானகியம்மாளும் ஆலயத்துக்குச் சென்றிருக்கள். இருட்டியபின் யோகானந்தரும் போனர். கோவிலுக்குள் தாய்க்குத் தெரியாமல் மகளிடத்தில் கடிதத்தைக் கொடுத்துவிட முடியவில்லை. வழக்கம்போல் தன்னை நமஸ்கரித்த மங்களாம்பாளுக்குக் குங்குமம் விபூதிப் பொட்டலங்களைக் கொடுத்தார். அவற்றை வாங்கிக் கொண்டு மீண்டும் அவரை வணங்கி விட்டுத் தாயும் மகளும் வீட்டுக்கு நடந்தார்கள். பின்னாலேயே யோகானந்தரும் போனர். இரண்டு மூன்று நாட்களிலும் அதேமாதிரி அவர்களுடன் பின்னல் நடந்த அவர் மடத்தோடு நின்றுவிட்டார். ஆனால் இன்றைக்கு மடத்தைத் தாண்டிய பின்பும் அவர் தம்முடன் வருவதைக் கண்ட ஜானகியம்மாள் துறவிக்கு

நன்றி செலுத்தும் முறையில் அவரைத் தன் வீட்டிற்கு அழைத்துப் போய் அதிதிபூசை செய்ய விரும்பினள். அந்த விருப்பத்தைச் சாமியாருக்கு இங்கிலீஷில் சொல்லி அவரை வீட்டுக்கு அழைக்கும்படி ஜானகியம்மாள் மங்களாம்பாளிடம் காதோடு சொன்னள். மங்களமும் அன்னையின் விருப்பத்தைத் துறவிக்கு ஆங்கிலத்தில் தெரியப்படுத்தினள். அவர்கள் அழைக்காவிட்டாலும் அவர்களுடைய வீட்டுவரையிலுமாவது போகத் தீர்மானித்திருந்த அந்தக் கள்ளத்துறவி, அதைக்கேட்டு ஆனந்த பரவசமடைந்து உடனே தலையை அசைத்து ஒத்துக் கொண்டார். அத்துடன் வீணையின் நாதத்தை விட இனிய குரலில் அந்தப் பெண் ஆங்கிலச் சொற்களை அழகாக உச்சரித்துத் தன்னை அழைத்ததில் காதல் வெறி அதிகரித்துவிட்டது.

துறவியை வெகு மரியாதையுடன் வீட்டுக்குள் அழைத்துச் சென்று கூடத்தில் ஒரு நாற்காலியில் அமரச் செய்துவிட்டு, ஜானகியும் மங்களமும் அவருக்கு விருந்து தயார் செய்யும் வேலையில் ஈடுபட்டார்கள். மங்களத்தின் தந்தை மகாதேவர் வீட்டிலில்லை. நாலைந்து நாட்களாக அவர் ஜமாபந்திக்கான அவசர வேலைகள் அதிகமிருப்பதாக மாலை ஏழு மணிக்கே சாப்பிட்டுவிட்டுப் போய் இரவு பனிரண்டு மணிவரையிலுங்கூட தாலுக்கா ஆபீசில் தங்கிவிடுவார். சிலநாள் விடிந்த பிறகுதான் வீட்டுக்கு வருவார். அதனால் துறவியின் ஆகாரத்துக்குப் பழங்கள் வாங்கிவர ஜானகியம்மாள் எதிர்வீட்டுக் குப்புசாமியின் வேலைக்காரரில் ஒருவனைக் கடைக்கு அனுப்பிவிட்டு வந்தாள். அதற்குள் மங்களாம்பாள், சாமியார் வடநாட்டுக் காரராயிற்றே என்று அவருக்காகச் 'சப்பாத்தி' செய்வதற்குக் கோதுமை மாவைப் பிசைந்து வைத்தாள். ஜானகி

யம்மாள் வந்தவுடன் இருவருமாகச் சேர்ந்து 'சப்பாத்தி' செய்து கொண்டிருந்தார்கள். சாமியாருக்கு இருப்புக் கொள்ளவில்லை. மங்களாம்பாள் தனியே வர மாட்டாளா என்று தவித்துக்கொண் டிருந்தார்.

சாமியாருடைய நல்ல காலமோ, மங்களாம்பாளுடைய பொல்லாத காலமோ, அவள் ஏதோ காரியமாகத் தனியே வந்து சாமியார் உட்கார்ந்திருந்த இடத்துக்கு அருகி லிருந்த அறைக்குள் போனாள். அந்த அறையில் பிர காசமான விளக்கு எரிந்துகொண் டிருந்தது. அந்தச் சந் தர்ப்பத்தை விட்டால் வேறு சமயம் கிடைக்காதென்று, சரேலென்று சாமியாரும் அந்த அறைக்குள் புகுந்து வெகு நேரமாகக் கையில் தயாராக வைத்துக்கொண் டிருந்த கடிதத்தை மங்களாம்பாளிடம் நீட்டினார். தன் னுடைய துன்பங்கள் நீங்கிவிடும்படி வரமளிக்க வந்த மகான் என்று தான் மதித்துவிட்ட அந்தத் துறவி தனக் குக் காதல் கடிதம் கொடுப்பாரென்று மங்களம் கனவிலும் கருதவில்லை. அதனால் கொஞ்சங்கூடச் சந்தேகங் கொள்ளாமல் அதை வணக்கத்தோடு வாங்கிக்கொண் டாள். ஏதேனும் உதவியைக் கோரித்தான் அவர் அதில் எழுதியிருப்பா ரென்று எண்ணி அதைப் படிப்பதற்காக விளக்குக்குப் பக்கமாகப் போனாள். அவள் அதைப் படிக்கிறவரைக்கும் கூடப் பொறுக்கமாட்டாதவர் போல அந்தக் கள்ளச் சாமியார் அவளை உடனே கட்டித் தழுவி விட ஆசை கொண்டுக் குத்துச் சண்டைக்குத் தயா ராகிற மாதிரி தன்னுடைய சட்டைத்துணிகளை முழங்கை களுக்கு மேல் சுருட்டிக் கொண்டு அவளையே பார்த்துக் கொண்டு நின்றார்.

விளக்கண்டை போன மங்களம் கடிதத்தை விரித் தாள். முதல் வரியைப் படித்தவுடனே திடுக்கிட்டுச் சாமியாரைத் திரும்பிப் பார்த்தாள். கடிதம் முழுவதையும்

படித்துவிட்டுப் பிறகு பேசலாமென்று எண்ணி மிகவும் பொறுமையோடு கடிதத்தைப் படித்தாள். படித்துவிட் டுக் கிழித்துவிடப் போவதுபோல் அதை மடித்துக் கொண்டே நிமிர்ந்தாள். புருவங்கள் நெற்றிக்கு ஏறின. நேத்திரங்கள் விரிந்தன. அந்தப் பொய்த் துறவியை விழுங்கிவிடுவது போல வெறிக்க வெறிக்கப் பார்த்தாள். அவள் வாய்திறந்து பேசுவதற்குள் அந்த வஞ்சகத் துறவி குபீரென்று பாய்ந்து அவளைக் கட்டித் தழுவி முத்த மிட்டு விட்டான். அதே கணத்தில் அந்தச் சன்னியாசிக் கென்று தட்டத்தில் 'சபாத்திகளை' அடுக்கிக்கொண்டு அறைக்குள் புகுந்த ஜானகியம்மாள், சும்மா நின்று கொண்டிருந்த மகள்மீது அந்தச் சாமியார் பாய்ந்ததை யும் முத்தமிட்டதையும் பார்த்துவிட்டாள். பார்த்தவுடனே "ஐயோ! ஐயோ! இந்த அநியாயமுண்டா? அட பழிகாரா! நீ சாமியாரா! சன்னியாசியா! அடபாவீ! சண்டாளா!" என்று கையிலிருந்த சப்பாத்தித் தட்டத்தைக் கீழே போட்டு விட்டுத் தலைதலையாக அடித்துக்கொண்டாள்.

ஜானகியம்மாள் இப்படிப் புலம்பத் தொடங்கிய வுடன் அந்தக் கள்ளத்துறவி வெகு வேகமாக அறையை விட்டு வெளியே சென்று வீதிக்குப் போய்விட்டான். ஜானகியும் அவனைத் தொடர்ந்து வீதிக்கு ஓடி வாசலில் நின்று கொண்டு, "பிடியுங்கள்! பிடியுங்கள்! அந்தத் திருட் டுச் சாமியாரை யாராவது பிடியுங்கள்! யாராவது பிடியுங் கள் மானத்தைக் கெடுத்துவிட்டு ஓடுகிறான். அவனைப் பிடியுங்கள்! பிடியுங்கள்" என்று கத்தினாள். அப்போது மணி பத்துக்கு மேலிருக்கும். வீதியில் ஜனங்கள் நட மாட்டமில்லை. ஜானகியின் ஓலத்தைக் கேட்டு அக்கம் பக்கத்தார் வருவதற்குள் அந்தத் திருட்டுச் சாமியார் இருட்டில் மறைந்துவிட்டான். தன்னுடைய படுக்கை யறைக்குள் இருந்த எதிர்வீட்டுக் குப்புசாமி ஜானகியின்

கூச்சலிக்கேட்டு ஓடிவந்து என்னவென்று கேட்டான். ஜானகியம்மாள் சுருக்கமாக விஷயத்தைச் சொல்லாமல் நாலைந்து நாட்களுக்கு முன்னல் அந்தச் சாமியாரைக் கோயிலில் சந்தித்ததிலிருந்து ஆரம்பித்து, இடையிடையே அழுது கொண்டும் அப்பிக் கொண்டும், அப்போது நடந்தவரையிலும் கதையைச் சொன்னாள். அதனல் அந்தத் திருட்டுச் சாமியாரை உடனே தொடர்ந்து பிடிக்க முடியாமற் போய்விட்டது. இதற்குள் பெருங் கும்பல் கூடிவிட்டது. உத்தமியாகிய மங்களாம்பாளுக்கு இந்த மானக்கேடு செய்தவனைச் சும்மாவிடக் கூடாதென்று, கூடியிருந்தவருள் பலபேர் கொதிப்படைந்தார்கள். இனிமேல் அந்தச் சாமியாரை எங்கே கண்டு பிடிப்பது என்று குப்புச்சாமி சொன்னபிறகுதான் அந்தத் திருட்டுச் சாமியார் பைராகி மடத்தில் தங்கியிருப்பவன் என்று சொன்னாள். உடனே குப்புச்சாமியும் கும்பலும் பைராகி மடத்துக்குப் புறப்பட்டார்கள். ஆனல் அந்தப் பைராகி மடத்தில் எப்போதும் எத்தனையோ சாமியார்கள் தங்கியிருக்கிறார்கள். அவர்களுள் இந்தச் சாமியாரைக் கண்டு பிடிப்பது எப்படி என்ற பேச்சு வந்தது. புறப்பட்ட கும்பல் நின்றுவிட்டது. உடனே, "அவனை நான் காட்டுகிறேன், வாருங்கள்" என்று ஜானகியே முன்னல் நடந்தாள்.

எல்லாரும் மடத்துக்குப் போனர்கள். அங்கே காஷாயமணிந்த பல சாமியார்கள் படுத்திருந்தார்கள். ஒவ்வொருவரையும் ஜானகி உற்றுப் பார்த்தாள். பட்டுத் துணிகளணிந்த அந்தப் பஞ்சாபித் துறவி அங்கே இல்லை. அவர் மடத்தின் பின்கட்டிலுள்ள ஒரு அறையில் தனியாகத் தங்கியிருந்தவர் என்பது அவரைத் தேடப் போன யாருக்கும் தெரியாது. அதனல் அந்தச் சாமியார் அங்கே இல்லையென்று தீர்மானித்துக் கொண்டு, வந்தவர்களெல்

லாம் மடத்தை விட்டு வெளியே வந்தார்கள். அந்தச் சமயத்தில் தன்னுடைய வீட்டுக்குப் போயிருந்த மடத்தின் மணியக்காரர் வந்தார். மடத்தின் வாசலில் அவ்வளவு பெரிய கும்பல் கூடியிருந்ததைப் பார்த்துத் திகைப்படைந்து விஷயம் என்னவென்று விசாரித்தார். குப்புச்சாமி நடந்ததை யெல்லாம் சொன்னன். ஜானகியம்மாள் சாமியாரின் அடையாளங்களை விவரித்தாள். அவர்கள் தேடுகின்ற சாமியார் எவர் என்பதை உடனே மணியக்காரர் ஊகித்துக்கொண்டார். ஒரு நாள் யோகானந்தர் சன்னலின் வழியாக மங்களாம்பாளைக் காட்டி அவளைப் பற்றி விசாரித்ததும் அதையொட்டி நடந்த பேச்சும் மணியக்காரரின் நினைவுக்கு வந்தன. யோகானந்தர் செய்துவிட்ட பெருங் குற்றத்தையும் அதனல் அந்தக் கூட்டத்திலுள்ளவர்கள் அடைந்திருக்கிற கொதிப்பையும் கண்ட மணியக்காரர் இப்போது யோகானந்தர் அவர்களிடம் சிக்கிக்கொண்டால் அவருக்கு நிச்சயமாக அபாயம் உண்டாகுமென்பதை அறிந்தார். அத்துடன் தன்னிடத்தில் வெகு அன்புடன் பழகிவிட்ட அந்த யோகானந்தரைக் காட்டிக் கொடுத்துவிடாமல் நடந்துகொள்ள வேண்டியது தன்னுடைய கடமை என்றும் கருதிய மணியக்காரர்,

"ஓ! அந்தச் சாமியாரா? அவர் இரண்டு மூன்று நாள் இங்கேதான் தங்கியிருந்தார். அதன் பிறகு இவ்வூர் கச்சேரி வீதியிலுள்ள மார்வாரி அவரைத் தன்னுடைய பங்களாவுக்கு அழைத்துக்கொண்டு போய்விட்டார். இப்போது அந்தச் சாமியார் அங்கேதானிருப்பார்" என்று புளுகினர்.

உடனே அந்தக் கும்பல் கச்சேரி வீதியிலுள்ள மார்வாரி பங்களாவை நாடிப்போய்விட்டது. யோகானந்தருக்கு வந்த அபாயம் அப்போதைக்கு நீங்கிவிட்டது.

என்றாலும், அது எப்போதும் இருந்துகொண்டேயிருக்கு மென்பதை உணர்ந்த மணியக்காரர் உடனே போய் எச்சரிக்கை செய்துவிட எண்ணி, மடத்தின் பின்கட்டில் யோகானந்தர் தங்கியிருந்த அறைக்குப் போனார். அது பரக்கத் திறந்து கிடந்தது. யோகானந்தர் அங்கில்லை. அவருடைய உடைகளிருந்த பையும் காணவில்லை. அவருடைய இரவு ஆகாரத்துக்காகப் பால் கொண்டுவந்த பாத்திரம் மட்டும் அங்கே இருந்தது. அந்தப் பாத்திரம் மடத்தைச் சேர்ந்தது. அதிலிருந்த பாலும் வைத்துப் போனபடியே இருந்தது. மடத்தின் பின்கட்டிலுள்ள எல்லா இடங்களிலும் மணியக்காரர் தேடிப்பார்க்கும் போது எப்போதும் மூடித் தாழிடப்பட்டிருக்கும் கொல்லைக் கதவு திறந்து கிடப்பதைக் கண்டார். தன்னைத் துரத்திக்கொண்டு வந்த கூட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்ள யோகானந்தர் கொல்லைக் கதவைத் திறந்து கொண்டு ஓடிப்போயிருக்க வேண்டு மென்று ஊகித்தார்.

கச்சேரி வீதியிலுள்ள மார்வாரி பங்களாவுக்குப் போன கூட்டம் ஏமாற்றமடைந்தது. கச்சேரி வீதியில் ஒரு மார்வாரி பங்களா இருப்பது உண்மைதான். ஆனால், அதில் வசிக்கும் மார்வாரி இரண்டு நாட்களுக்கு முன்னாலேயே சொந்தக் காரியமாக பம்பாய்க்குப் போய்விட்டதால் பங்களா பூட்டப்பட்டிருந்தது. எங்கெங்கோ தேடியும் அந்தத் திருட்டுச் சாமியார் அகப்படவில்லை.

இரவு முழுதும் மங்களாம்பாள் அழுது கொண்டேயிருந்தாள். விடிந்த பிறகு வீதிக்குப் போகக்கூட வெட்கப்பட்டாள். ஆனால் பலபேர் அவளுக்கு அனுதாபம் தெரிவிக்க வீட்டுக்குள்ளேயே வந்துவிட்டார்கள். அவர்களுக்கெல்லாம் ஜானகியே பதில் சொல்லி அனுப்பிவிட்டாள்.

அன்று மத்தியானம் வசந்தபுரியிலிருந்து மங்களாம்பாளின் மாமனார் வீட்டு 'மோட்டார் கார்' வந்தது. அன்னபூரணியம்மாள் மகனைப்பற்றிய விசனத்தால் மிக்க அசௌக்கிய முற்றிருப்பதாகவும் மருமகளைப் பார்க்க விரும்புவதாகவும் உடனே அழைத்துவரச் சொன்னதாகவும் 'டிரைவர்' சொன்னான். வீட்டைவிட்டு வெளியே போக வெட்கப்பட்டுக்கொண்டு அந்த ஊரில் இருப்பதைவிட வேறு எங்காவது போய்விட்டால் நல்லது என்று எண்ணவேண்டிய நிலையிலிருந்த மங்களம் உடனே வசந்தபுரிக்குப் புறப்பட்டுவிட்டாள்.

கைதிகள் ஓடிவிட்டார்கள்

பர்மாவிலிருந்து இந்தியாவுக்குப் போகக் கப்பல் பிரயாணம் ஒன்றுதான் வழி. இந்தியாவையும் பர்மாவையும் இணைக்கத் தரை மார்க்கமாகச் சரியான பாதை இல்லை. ஒரே ஒரு பழங்காலக் காட்டுத்தடம் உண்டு. அந்தத் தடம் ரங்கூனுக்கு வடக்கே சுமார் அறுநூறு மைல்களுக்கு அப்பால் ஆரம்பமாகிறது. பர்மாவின் வடக்கிலுள்ள மாந்தலே என்னும் நகரத்துக்கும் வடக்கே சுமார் நூறு மைல் போனால் அந்தப் பாதைக்குப் போகலாம். ரங்கூனிலிருந்து அந்தத் தடத்துக்குப் போகவேண்டுமானால் மாந்தலே வரையிலும் ரயிலிலும் நல்ல ராஜபாட்டைகளிலும் போகலாம். மாந்தலேயிலிருந்து அந்தக் காட்டுத்தடம் ஆரம்பிக்கிற இடம்வரைக்கும் வண்டிகள் போகக்கூடிய சுமாரான ரஸ்தாக்கள் உண்டு. அதற்கப்பால் அந்தக் காட்டுத்தடம் முழுதும் ஒற்றையடிப் பாதைதான். வண்டி போகாது. அந்த ஒற்றையடிப் பாதையில் ஐந்நூறு மைல்களுக்கு மேல் நடந்து சென்றால் இந்தியாவின் வடகிழக்கில் அஸ்ஸாம் மாகாணத்திலுள்ள மணிபூர் என்ற சிறு நகரத்துக்குப் போய்ச் சேரலாம். அந்தத் தடம் மரங்கள் அடர்ந்த மலைக்காடுகளின் வழியாகப் பல பள்ளத்தாக்குகளைக் கடந்து போகவேண்டிய மிகவும் கரடு முரடான காட்டுத்தடம். வழிநெடுகப் புலி, சிறுத்தை, யானை முதலிய வனவிலங்குகள் அடிக்கடி குறுக்கிடக்கூடிய மார்க்கம். அந்த மலைப் பிரதேசத்தில் அங்கங்கே சிதறிக் கிடக்கும் சிறுசிறு கிராமங்களில் வசிக்கும் மலைநாட்டு

மக்களைத் தவிர மற்றவர்கள் அந்தத் தடத்தில் சஞ்சரிப்பது மிகவும் அபூர்வம்.

அந்தப் பாதையில், ஒரு மேட்டின்மேல் போகும் போது இருபுறங்களிலும் காணப்படுகிற மலைச்சரிவுகளின் தோற்றம் பாதாளத்தில் விழுந்துவிடுவோமா என்ற பய முண்டாக்கும். ஒரு பள்ளத்தாக்கில் நடக்கும் போது இருபுறத்திலும் கவிந்து கொண்டிருக்கிற மலைப் பாறைகள் இடிந்து தலையில் விழுந்துவிடுமோ என்று வெருளச் செய்யும். காட்டுக்குள் நடக்கும்போது வன விலங்குகளின் உறுமல்களும் ஊளைச் சத்தமும் நடுங்கச் செய்துவிடும். நடந்து வந்த அலுப்புத்தீரச் சற்று அதன் மீது உட்காரலாம் என்று, மரமென்று நினைத்து உட்காரப் போன ஒரு பொருள் மலைப்பாம்பாக இருக்கும். வழி முழுதும் உதிர்ந்து கிடக்கும் உலர்ந்துபோன இலைகளுக்கடியில் மறைந்திருந்த பாம்பு திடீரென்று படமெடுத்து பதறச் செய்துவிடும். மிகப் பெரிய மலைக்குரங்குகள் நம்மீது பாய்வது போல் தலையை நீட்டிப் பல்லைக் காட்டிப் பயமுறுத்தும். பர்மாவிலிருந்து மணிபூருக்கே போகவேண்டியவர்கள்கூட அந்தப் பாதையில் பயணம் செய்யமாட்டார்கள்.

அப்படிப்பட்ட அந்தக் காட்டுத்தடம் அந்த யுத்த காலத்தில் வெகு முக்கியமான பாட்டையாகிவிட்டது. மலாயா நாட்டைப் பிடித்துக்கொண்டு பர்மாவின்மீது படையெடுத்த ஜப்பானியர், பர்மாவின் நிலப்பகுதிகளை வசப்படுத்துவதற்கு முன்னாலேயே ஆகாய விமானங்களில் வந்து ரங்கூன் நகரத்தின்மீது வெடிகுண்டுகளை வீசிவிட்டார்கள். அந்தச் செய்கை பர்மாவில் வசித்து வந்த இந்தியர்களைக் கதிகலங்கச் செய்துவிட்டது. அங்கிருந்த இந்தியர்கள் உடனே இந்தியாவுக்கு ஓடிவிடத் தீர்மானித்து, ஏக காலத்தில் எல்லாரும் பயணப்

பட்டுவிட்டார்கள். லக்ஷக்கணக்கான அவ்வளவு பேருக்கும் கப்பல்களில் இடமில்லை. கொஞ்சம் முந்திக் கொண்டவர்களும் சர்க்கார் சலுகையுள்ளவர்களுமான ஒரு சிறு பகுதிக்குமட்டும் கப்பலில் இடம் கிடைத்தது. வாடகைக்குப் பிரயாணிகளை ஏற்றிக்கொள்ளும் ஆகாய விமானப் போக்குவரவும் அப்போது இல்லை. அதனால் கப்பல்களில் இடம் பெற்ற வெகு சிறு பகுதியினரைத் தவிர மிகப் பெரும் பகுதியினராகிய மற்ற இந்தியர்கள் எல்லாருக்கும் இந்தியாவுக்கு வர, முன்னே சொன்ன காட்டுத்தடத்தைவிட வேறு கதியில்லை. அவரவர்கள் வீட்டிலிருந்த எல்லாப் பொருட்களையும் அப்படியே விட்டுவிட்டு, கட்டின துணியோடு கையிலிருந்த பணத்தையும் நகைகளையும் மட்டும் எடுத்துக்கொண்டு, குழந்தை குட்டிகளைக் கூட்டிக்கொண்டு, குடும்பம் குடும்பமாக அந்தக் காட்டுத் தடத்தில் நடக்கலானார்கள்.

அவர்களுள் திடகாத்திரராக இருந்த ஆண்பிள்ளைகளும்கூடக் கொஞ்சதூரப் பயணத்துக்காளலும் நடந்து போகப் பழகினவர்களல்ல. அப்படியிருக்கப் பெண்டுகளும் குழந்தைகளும், கிழவர்களும் ஐந்நூறு மைல்களுக்கும் அதிகமான தூரத்தை அந்தக் காட்டுத் தடத்தில் நடந்தே தீர்க்க வேண்டியிருந்த பரிதாபத்தை முழுதும் சொல்லிவிட எவராலும் முடியாது. சுகத்திலே பிறந்து சுகத்திலே வளர்ந்து சுகமாக வாழ்ந்தவர்கள்! கஷ்டம் என்பதைக் கனவிலும் கண்டறியாதவர்கள். அந்தக் காட்டுத்தடத்தில் ஒண்டவோ ஒதுங்கவோ உணவுப் பொருள்கள் வாங்கவோ ஊர்களில்லை. கனியோ, காயோ, கிழங்கோ, தழையோ, சருகோ நேர்ந்ததை உண்டுகொண்டு நெடுந்தூரம் நடக்க வேண்டும்! அந்தக் கந்த மூல உணவுகளும்கூட எல்லாருக்கும் கிடைக்கவில்லை. பசியாலும், நடந்த களைப்பாலும்,

ஒத்துக்கொள்ளாத உணவுகளை உண்ட கடுப்பாலும், மலைக்காட்டின் விஷக்காய்ச்சலாலும் எண்ணிறந்த பேர்கள் வழி நெடுக அங்கங்கே இறந்துபோனார்கள். இறந்துவிட்டவர்களுடைய உடலை அடக்கம் செய்யக் கூட முடியாமல் அங்கங்கே கிடத்திவிட்டு உறவினர்கள் அழுதுகொண்டே போய்விட வேண்டியிருந்தது. பதினேரு மக்களுடன் புறப்பட்ட ஒரு தாயும் தந்தையும் இந்தியாவின் எல்லைக்கு வருவதற்குள் ஒவ்வொன்றாக ஒன்பது மக்களை வழியில் இழந்துவிட்டார்கள். மிகுந்திருந்த இரண்டு மக்களும் இந்தியாவிற்கு வந்தபின் இறந்துவிட்டார்கள். அந்தப் பெற்றோரின் துயரத்தை என்னென்று சொல்ல முடியும்.

இப்படி மக்களை இழந்த பெற்றோரும், பெற்றோரை இழந்த மக்களும், கணவனையிழந்த மனைவியும், மனைவியை இழந்த கணவனுமாக எண்ணற்ற பேர்களைக் கண்ணீர் வடிக்கச் செய்த அந்தக் காட்டுத்தடம் சரித்திரப் பிரசித்தி பெற்று விட்டது.

அந்தக் காட்டுத் தடத்தில், மணிபூரை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார்கள் சிறையிலிருந்து தப்பி ஓடிவிட்ட சையத்காதரும் முனிஜியும். சங்கரலிங்கன், முனிஜி, சையத்காதர் ஆகிய மூவரும் ஒரே கட்டிடத்தில் தான் சிறைவைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் மூவரும் ஏக காலத்தில்தான் சிறையினின்றும் தப்பி வெளியேறினார்கள். சிறையிலிருந்து வெளியே போனபின் அந்த மணிபூர் ரோடை வழியாகத்தான் இந்தியாவுக்குப் போய்விட வேண்டும் என்பதை ஷங்கர்ஜிதான் முனிஜிக்கும் சையத்காதருக்கும் சென்னவன். அத்துடன் சிறையிலிருந்து வெளியே வந்தபின் அந்த முகாமைக் கடந்து போகும்போது யாரும் கண்டுகொள்ளாதபடி எப்படிப் போகவேண்டுமென்று தோதுசொன்னவனும் ஷங்கர்ஜி

தான். ஆனால், அவர்களுக்குப் பின்னாலேயே சிறையிலிருந்து வெளியே வந்த சங்கரலிங்கம் இருட்டில் எந்தப் பக்கம் போனான் என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. அவனும் தங்களுக்குப் பின்னால்தான் வருகிறானுக்குமென்று எண்ணிக்கொண்டே உயிருக்காக ஓடுகின்ற அவ்விருவரும் சங்கரனுக்காகக் காத்திருக்காமல் வெகு வேகமாக நடந்து விடிவதற்குள் முப்பது மைல் தூரத்திலுள்ள ஒரு ரயில்வேஸ்டேஷனை அடைந்தார்கள். அங்கிருந்துதான் மாந்தலேக்கு ரயில் ஏறவேண்டும் என்று சங்கரன் சொல்லியிருந்தான். அதனால் அவனும் அங்கே வந்து சேர்ந்து கொள்வான் என்று வெகுநேரம் எதிர்பார்த்தார்கள். சங்கரன் வரவில்லை. பிறகு அவ்விருவரும் சங்கரன் சொல்லிக் கொடுத்திருந்தபடி, தங்களுடைய அடையாளத்தை மாற்றிக்கொள்ள அந்த ஸ்டேஷனுக்கு ஒரு மைல் தூரத்திலிருந்த பெரிய கிராமத்துக்குப் போனார்கள். அங்கே ஒரு நாவிதனைத் தேடிப்பிடித்துச் சிறைவாசத்தால் காடுபோல் வளர்ந்திருந்த தலைமயிரை வெட்டிக் கொண்டு முகத்தில் அடர்ந்திருந்த தாடி, மீசைகளை மழுங்கச் சிரைத்துக் கொண்டார்கள். சையத் காதருக்குத் தாடி மீசைகளை முழுதும் அகற்றி விடுவது மதவிரோதமான காரியம் என்ற எண்ணமிருந்தாலும் ஆபத்துக்குப் பாபமில்லை யென்றுதான் சமாதானப்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது. அதன்பிறகு, அந்தக் கிராமத்திலிருந்த ஒரே ஜவுளிக்கடையில் வெகு நாளாக விலைபோகாமற்கிடந்த பர்மிய லுங்கிகளில் நீலநிறமும் பச்சை நிறமும் உள்ளனவாக நான்கு - ஆளுக்கு இரண்டு வாங்கிக் கொண்டார்கள். அத்துடன் பர்மாக்காரர்கள் தலையில் கட்டிக்கொள்ளும் சவுக்கத் துண்டுகளையும் வாங்கிக்கொண்டு ஒரு 'டீ' கடையில்

காலை ஆகாரம் உட்கொண்டார்கள். அந்த 'டீ' கடைக்குள்ளேயே தங்கள் உடைகளை மாற்றிக்கொண்டு அசல் பர்மியரைப்போல் தோன்றும்படி மீண்டும் ரயிலடிக்குப் போய், அடுத்த வண்டியில் மாந்தலேயை நோக்கிப் பயணமானார்கள். அவர்களுக்கு வழிச் செலவுக்குப் போதுமான பணமும் சங்கரலிங்கம் தந்ததுதான். சிறையிலிருந்து தப்பித்துக்கொண்டு ஓடவேண்டிய அவசரத்தில் இருட்டில் ஒவ்வொருவரும் தனித்தனியே வெவ்வேறு வழிகளில் சென்று பிரிந்துபோக நேர்ந்தாலும் நேரலாம் என்றே சங்கரன் அவர்கள் இருவருக்கும் தனித்தனியே ஆளுக்கு ஐந்நூறு ரூபாய் கொடுத்திருந்தான்.

சையத்காதர் சென்னை மாகாணத்தின் திருச்சி ஜில்லாவைச் சேர்ந்தவன். முனிஜி பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்தவன். இவர்கள் இருவரும் சங்கரலிங்கனைப் போலவே இங்கிலீஷ்காரரைச் சேர்ந்த இந்திய சேனையிலிருந்து நேதாஜியின் சேனைக்குப் போய்விட்டவர்கள். நேதாஜியின் தேசிய சேனையில் சங்கரலிங்கத்தின்கீழ் வேலை செய்தவர்கள். அதனால் டங்கன் துரை சங்கரலிங்கனை எவ்வளவு வெறுத்தாரோ அப்படியே இவர்களையும் வெறுத்தவர். இந்த மூவரையும் சுட்டுக் கொன்று விடுவது இங்லீஷ் ஏகாதிபத்தியத்துக்கே தாம் செய்யும் பெரிய சேவையென்று டங்கன் துரை எண்ணியிருந்தார். உலக நலத்தைக் காப்பது ராணுவ பலம்தான் என்றும் அந்த ராணுவ பலத்துக்குக் காரணம் தம்மைப் போன்ற கண்டிப்பான தளபதிகள்தாம் என்றும் எண்ணிக்கொண்டிருப்பவர் டங்கன் துரை. அப்படிப்பட்ட அவருடைய கட்டுதிட்டம் மிகுந்திருந்த அதிகாரத்தின்கீழ் சிறையிலிருந்த சங்கரன் முதலான மூவரும் தப்பி ஓடிவிட்டார்கள் என்பதை அவர் சகிக்க முடியுமா?

அசௌக்கியமாக இருக்கும் தன்னுடைய தாயாரைப் பார்த்துவிட்டு வந்துவிடுவதாக ஒரு மாத ரஜா வாங்கிக் கொண்டு ஜெயபால் இந்தியாவுக்குப் புறப்பட்டுப் போன பின் மூன்றுநாட்கள் கழித்து நான்காவது நாள் விடியற் காலம் ஐந்துமணிக்குப் பாரா மாற்றவேண்டிய சிப்பாய் சகன் என்பவன், சங்கரன் முதலானவர்கள் சிறைவைக் கப்பட்டிருந்த கட்டிடத்துக்கு வந்தான். காவல் புரிய வேண்டிய கதவுக்கு அருகில் வழக்கமாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் விளக்கு அணைந்து போய்க் கதவுக்கு முன்னுலுள்ள தாழ்வாரம் இருண்டு கிடந்தது. இருட்டில் மெதுவாக நடந்து, கதவண்டை வந்தான். தன்னிடத் தில் பாராவை மாற்றிக் கொடுக்கவேண்டிய முன் பாராக் காரனுகிய சிப்பாய் அங்கில்லை. கூப்பிட்டுப் பார்த்தான். பதிலில்லை; ஒருக்கால் தூங்கிவிட்டானே என்று தாழ்வாரம் முழுவதையும் இருட்டில் தடவிப் பார்த்தான். அங்கே யாருமில்லை. மறுபடியும் கதவண்டை சென்று பூட்டைத் தொட்டுப் பார்த்தான். பூட்டு திறக்கப்பட்டிருந் தது. ஆனுல் சாவி அதிலில்லை. கதவு வெகு கனமான இரும்புக் கதவு. முன் பலகைக் கதவாக இருந்தது. டங்கன் துரையின் உத்தரவின்மேல் இரும்புக் கதவாக மாற்றப்பட்டது. கதவைத் தள்ளிப் பார்த்தான். அது திறந்து கொண்டது. உள்ளே எட்டிப் பார்த்தான். ஒரே இருட்டாக இருந்தது. டங்கன் துரையின் உத்தர வின்படி உள்ளே விடிகிற வரைக்கும் எரிந்து கொண்டி ருக்க வேண்டிய விளக்கும் அணைக்கப்பட்டிருந்தது. சிப்பாய்க்குத் திகைப்பும் திகிலும் உண்டாகிவிட்டது. உள்ளே போக அஞ்சினன்.

அந்தக் கட்டிடம் துரைமார்கள் குடியிருப்பதற் கென்று கட்டப்பட்டது. மற்றக் கட்டிடங்களுடன் சேரா மல் அரை பர்லாங்கு தூரத்தில் தனியே இருந்தது. மிக

வும் பலமான கட்டிடம். அதனுல் அது சிறைச்சாலையாகப் பயன்படுத்தப்பட்டது. அந்தக் கட்டிடத்துக்கு மிகவும் சமீபமாக உள்ள கட்டிடம் ஜேகப் துரை வசிக்கும் சிறு வீடு. சகன் அந்த வீட்டுக்கு ஓடினன். கைதிகளைக் கண்காணிக்கும் பொறுப்பு ஜெயபாலும் ஜேகபும் வேலை பார்த்த காரியாலயத்தைச் சேர்ந்தது. ஜெயபால் ஊருக் குப் போய்விட்டதால் அந்தக் காரியாலயத்தின் அலுவல் கள் முழுதும் ஜேகப் துரையைச் சேர்ந்தது. அதனுல் அவரிடத்தில்தான் பாரா மாற்ற வேண்டியவன் இல்லா திருப்பதையும் சிறையின் கதவு திறந்து கிடப்பதையும் விளக்கில்லாதிருப்பதையும் தெரியப்படுத்தவேண்டும். அவரையும் கூட்டிக் கொண்டு விளக்கோடு வந்துதான் உள்ளே போகவேண்டுமென்ற எண்ணத்துடன் அந்தச் சிப்பாய் ஜேகப் துரையின் வீட்டுக் கதவை வெகு அவசரமாகத் தட்டினன். கதவண்டை படுத்திருந்த வேலைக்காரன் கதவைத் திறந்து என்னவென்று விசாரித் தான். சிப்பாய் ஜேகப் துரையை உடனே பார்க்க வேண்டும் என்று அவரை எழுப்பச் சொன்னன்.

"ஜேகப் துரை இங்கில்லை. இரண்டு நாளாக நெஞ்சுவலி யென்று அவர் ஆஸ்பத்திரியில் படுத்திருக் கிறார்" என்ருன் வேலைக்காரன். இதன் பிறகு சிறைச் சாலையைப் பற்றிய விவரங்களைச் சொல்லி ஒரு விளக்குத் தரும்படிக் கேட்டான், சிப்பாய். உடனே வேலைக் காரனும் விளக்கு ஒன்றைத் தந்தான். சகன் அந்த வேலைக்காரனையும் தன்னுடன் வரும்படி வேண்டிக் கொண்டான். இருவரும் சிறைச்சாலைக்கு நடந்தார்கள். இதற்குள் தடதடவென்று அவசரமாகச் சிப்பாய் கதவைத் தட்டிய சத்தத்தை தூரத்தில் கேட்ட சார்ஜண்ட் ஜோன்ஸ் என்ற துரையும் அங்கே வந்தான். அவனையும் கூட்டிக்கொண்டு மூன்று பேரும் கைதிகள் சிறையிருந்த கட்டிடத்துக்குப் போனர்கள்.

இரும்புக் கதவை நன்ருகத் திறந்து கொண்டு உள்ளே புகுந்தார்கள். அந்தக் கதவுக்கு அடுத்தது ஒரு பெரிய கூடம். அக் கூடத்துக்கப்பால் ஐந்தாறு அறைகள். முதல் அறை சங்கரலிங்கன் இருந்தது. அதற் கடுத்த இரண்டிலும் சையத்காதரும் முனிஜியும் இருந் தார்கள். முதலில் கைதிகள் இருந்த அறைகளைப் பார்க்க ஓடினர்கள். அந்த மூன்று அறைகளும் திறந்து கிடந்தன. கைதிகள் மூவரும் காணப்படவில்லே. கட்டி டத்தின் மூலே முடுக்குகளேயெல்லாம் சோதித்தார்கள். ஓடிப்போனவர்களே உள்ளே தேடிப் பயனென்ன? திரும்பிக் கூடத்துக்கு வந்தார்கள். கூடத்தின் கோடியில் யாரோ ஒருவன் படுத்திருப்பது தெரிந்தது. அருகிற் சென்று விளக்கு வெளிச்சத்தில் பார்க்கிறபோது ஒரு சிப்பாய் கொலேயுண்டு கிடப்பதுபோல் இருந்தது. அதைப் பார்த்தவுடன் சகன் பயந்து அலறி விட்டான். கூடவந்த ஜோன்ஸ் துரை கீழே கிடந்த மனிதனுக்கு அருகில் அமர்ந்து வெகு நிதானமாகத் தொட்டுப்பார்த்து ஆராய்ந்தான். அந்த மனிதன் இறந்துவிட்டவனல்ல; ஆனல் இறந்துவிடக் கூடும் என்றே எண்ணும்படி மூச்சு தடைபட்டுக் கொண்டு பிரக்ஞையற்றுக் கிடந் தான். அவனுடைய மூக்கையும் வாயையும் சேர்த்து ஒரு கனத்த துணி கட்டப்பட்டிருந்தது. அதனல் அவன் அடையாளம் தெரியவில்லே. ஜோன்ஸ் துரை அந்தத் துணியை அகற்றினன். உடனே அடையாளம் தெரிந்தது. அவன் மதன்சிங் என்னும் பெயருடைய சிப்பாய். சகன் வருவதற்கு முன்னல் அங்கே பாரா இருந்தவன். ராணுவ உடையோடு மல்லார்ந்து கிடந் தான். அவனுக்குப் பக்கத்தில் அவனுடைய துப்பாக்கி கிடந்தது. இரும்புக் கதவின் பூட்டினுடைய சாவியும் அதனருகில் கிடந்தது. உடம்பின் எந்தப் பாகத்திலும்

அடிபட்ட அடையாளம் எதுவுமில்லே. முதலடி மண் டையில் விழுந்து மயங்கியிருப்பானென்று எண்ணினர் கள். ஏனென்ருல் அவனுடைய தலேப்பாகைக் கட்டுக் கலேந்து தரையிற் கிடந்தது.

"மதன்சிங் நல்ல பலசாலி. மிக்க தைரியமுள்ள வன். இவன் இந்த மூன்று கைதிகளிடத்தில் அடிபட்டு விழுந்துகிடப்பது மிகவும் ஆச்சரியப்படத்தக்க விஷயம்" என்ருன் சகன்.

"எவ்வளவு பலசாலியானலும் அவன் ஏமாந்திருக் கும் சமயத்தில் திடீரென்று அவனேத் தாக்கி படக் கூடாத இடத்தில் அடிபட்டுவிட்டால் என்ன செய்ய முடியும்? இது அப்படித்தான் நடந்திருக்க வேண்டும். மேலும் மரணதண்டனேக்குத் தப்பி உயிருக்காக ஓடிவிடத் தீர்மானித்தவர்களுக்கு மற்றவர்களுக்கு இல்லாத துணிச்சலும் பலமும் எங்கிருந்தோ வந்து விடும். சரி, நாம் இங்கே பேசிக்கொண்டிருப்பது குற்றம். இவன் இறந்து போவதற்குள் டாக்டருக்குத் தெரியப் படுத்திவிட்டு டங்கன் துரைக்கு நிலேமையை உடனே சொல்ல வேண்டும். தாமதித்தால் தண்டனே நமக்குத் தான் கிடைக்கும்" என்ருன் ஜோன்ஸ்.

சகனே அங்கேயே காவலிருக்கச் சொல்லி ஜோன்ஸ் துரை டாக்டரிடம் போய்ச் சொல்லிவிட்டு அதன்பிறகு டங்கன் துரை பங்களாவிற்குப் போய் அவரை அவசர மாக எழுப்பச் செய்தான். டங்கன் துரை தூக்கக் கண் களேத் துடைத்துக்கொண்டு உடனே வந்தார். ஜோன்ஸ் துரை விஷயத்தைச் சொன்னன். மின்சாரம் பாய்ந்து விட்டது போல் டங்கன் துரையின் சரீரம் குலுங்கி ஸ்தம்பித்துவிட்டது.

"என்ன ஷங்கர்ஜியா! சிறையிலிருந்து ஓடிவிட் டானு! நிஜந்தானு? கூப்பிடு அந்த ஜெயபாலை" என்று கொதித்தார் தளபதி.

"ஜெயபால் ஊருக்குப் போய் நான்கு நாளாகிவிட்டதே."

"ஓ! ஆமாம். இந்தியாவுக்குச் சிப்பாய்களை ஏற்றிச் சென்ற கடைசிக் கப்பலில் ஜெயபாலும் ரஜாவில் இந்தியாவுக்குப் போனதை மறந்து விட்டேன். ஜெயபால் இருந்தால் இது நடந்திருக்காது. எங்கே அந்த ஜேகப்? உடனே ஓடி ஜேகபைக் கொண்டுவா இங்கே."

"ஜேகப் அசௌக்கியமாகி இரண்டு நாளாக ஆஸ்பத்திரியில் இருக்கிறார்."

"அப்படியா! அதுவும் ஓடிப்போனவர்களுக்கு அனுகூலமாகத்தான் இருந்திருக்கிறது.....சரி. இரு, வந்து விடுகிறேன்" என்று டங்கன் துரை உடனே டெலிபோனை எடுத்து முதலில் ரங்கூன் துறைமுக அதிகாரிகளைக் கூப்பிட்டார். கைதிகள் சிறையிலிருந்து ஓடிவிட்டதைச் சொல்லித் துறைமுகத்தில் இந்தியாவுக்குப் புறப்படவேண்டிய கப்பல்கள் இருந்தால் அவற்றை நிறுத்திச் சோதனை செய்யக் கேட்டுக் கொண்டார். அதன்பிறகு பர்மாவிலிருந்து இந்தியாவுக்குப் போகக்கூடிய எல்லா மார்க்கங்களையும் கண்காணிக்கவேண்டிய உத்தரவுகளை அங்கங்கே உள்ள அதிகாரிகளுக்கு அறிவித்தார். கம்பியில்லாத் தந்தி மூலம் இந்தியாவுக்கும் இந்தச் சேதி உடனே எட்டவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்படிப் பேசவேண்டியவர்களுடன் டெலிபோனில் பேசிவிட்டுத் தம் உடைகளை மாற்றிக்கொண்டு சிறைக் கட்டிடத்துக்கு ஜோன்ஸுடன் புறப்பட்டார், டங்கன் துரை.

பொழுது நன்றாக விடிந்துவிட்டது. டங்கனுக்கு முன்னாலேயே டாக்டர் அங்கே வந்து மதன்சிங்கைப் பரிசோதித்துக்கொண்டிருந்தார். அவனுக்கு அப்போது கொஞ்சம் உணர்ச்சி வந்திருப்பதாகத் தெரிந்தது. டாக்டருடைய பரிசோதனையில் மதன்சிங்குக்கு மயக்கத்தைத் தவிர வேறு கோளாறு இருப்பதாகத் தெரியவில்லை. பரிசோதனைக்காக அவனுடைய அள்ளைப்புறத்தை அழுத்தியபோது மட்டும் அங்கே வலிப்பதுபோல் முகத்தைச் சுருக்கி முனகினான். அந்த இடத்தில் அடிபட்டிருக்கவேண்டுமென்று அனுமானித்தார் டாக்டர். மதன்சிங்கின் மூக்கையும் வாயையும் சேர்த்துக் கட்டியிருந்த கனத்த துணியை, அடையாளம் பார்ப்பதற்காக முன்னே ஜோன்ஸ் துரை வாயைவிட்டு நகர்த்தியிருந்தான்; அது கழுத்தில் இப்போது மாலைபோற் கிடந்தது. அதை அவிழ்த்தெடுத்து டாக்டர் வெகு நேரம்வரை பரிசோதித்தார். அது ஒரு மெலீசான நீண்ட 'டவல்.' ஸ்நானம் செய்தால் உடம்பைத் துவட்டிக்கொள்ள உபயோகப்படக்கூடியது. அது நீளவாட்டில் நாலாக மடிக்கப்பட்டு மூக்கையும் வாயையும் சேர்த்துக் கட்டப்பட்டிருந்தது. அது எதற்காகக் கட்டப்பட்டிருந்தது என்பது டாக்டருக்கு விளங்கவில்லை. அதைப் பலமுறை முகர்ந்து பார்த்தார். ஒன்றும் நிச்சயிக்க முடியவில்லை.

தளபதி டங்கன் துரை அங்கே வந்தார். அவர் அங்கே வந்து அந்தச் சிப்பாய் விழுந்து கிடக்கும் நிலைமையைப் பார்வையிட்ட பின்பே அவனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகவேண்டுமென்று காத்திருந்த டாக்டர் தாம் செய்த பரிசோதனைகளின் விவரத்தைச் சொன்னார். பிரக்ஞை யில்லாதிருப்பதைத் தவிர பிராணாபாயம் இல்லையென்று சொன்னார். உடனே ஆஸ்பத்திரிக்குத் தூக்கும்படி டங்கன் உத்தரவிட்டார். 'அம்புலன்ஸ்' கொண்டுவரப்பட்டது. அதில் படுக்கவைக்க அவனைத் தூக்கினார்கள். அப்போது அவனுடைய சட்டையின் இடுக்குகளிலிருந்து 'லொட்'டென்று ஏதோ ஒரு சிறு பொருள் விழுந்த சத்தங்கேட்டது. அதை எடுத்துப் பார்க்கும்

போது அது ஒரு கண்ணுடிக் 'கல்கார்க்'காக இருந்தது. வெறும் 'கார்க்' மட்டும் அங்கிருக்கக் காரணமென்ன? அது மூடிக்கொண்டிருந்த சீசாவும் அங்கே இருக்க வேண்டும் என்ற அனுமானத்தில் அந்தக் கூடத்தை ஆராய்ந்தார்கள். கூடத்தின் எதிர் கோடியில் ஒரு சிறு பாட்டல் உடைந்து கிடந்தது. உடைந்த துண்டுகளை யெல்லாம் பொறுக்கிச் சேர்த்துப் பார்த்தவுடன் டாக்டருக்கு முன் உதித்த ஒரு சந்தேகம் நிவர்த்தியாகிவிட்டது. அந்தச் சீசா 'குளோரபாரம்' என்னும் மயக்கத் திரவம் இருந்த சிறு பாட்டல். அதில் ஒட்டப்பட்டிருந்த சீட்டு அதை உறுதிப்படுத்தியது.

"இப்போது விளங்கிவிட்டது" என்ருர் டாக்டர்.

"அது என்ன?" என்ருர் டங்கன்.

"இது 'குளோரபாரம்' பாட்டல். முதலில் அந்தக் கைதிகளில் ஒருவன் இவனுடைய அள்ளையில் வெகு பலமாகக் குத்தியிருக்கவேண்டும். அந்த வலி பொறுக்க மாட்டாமல் இவன் விழுந்திருக்கவேண்டும். உடனே அந்த மூவரும் சேர்ந்து இவனை அமுக்கிக்கொண்டு 'குளோரபாரம்' திரவத்தை இந்தத் துணியில் அளவுக்கு மீறி ஊற்றி மூக்கில் வைத்துக் கட்டியிருக்க வேண்டும்..."

"ஆமாம், அந்தத் துணி மூக்கையும் வாயையும் சேர்த்துத்தான் இறுக்கிக் கட்டப்பட்டிருந்தது. நான் தான் முகத்தின் அடையாளம் பார்க்க அதை மூக்கி லிருந்து நகர்த்தினேன்" என்ருன் ஜோன்ஸ் துரை.

"ஆ! பார்த்தீர்களா, புட்டியிலிருந்த 'குளோர பாரம்' அத்தனையும் ஊற்றியிருக்கிருர்கள். அதனல் தான் அபாயமுண்டாகும்படியான மயக்கம் வந்தி ருக்கிறது. இவனுக்குச் சரியான நினைவு வர வெகு நேரமாகும். மயக்க மருந்தின் வேகம் இருதயத்தைத் தாக்கினல் அபாயமுண்டாகும். அதனல் உடனே

அதைப் போய் நான் கவனிக்கிறேன்" என்று சொல்லி விட்டு டாக்டர் போய்விட்டார். அதன்பிறகு வெகு நிதானமாக டங்கன் துரை சிறைவீட்டின் எல்லாப் பகுதிகளையும் ஆராய்ந்தார். அதன்பின் அவர் சிப்பாய் சகனைப் பார்த்து, "இரவில் அந்தக் கைதிகள் இருக்கும் அறையைப் பூட்டுவதில்லையா?" என்று வெகு கோபத் துடன் கத்தினர்.

"இரவில் அந்த மூன்று அறைகளையும் பூட்டிவிட்டு, வெளிக்கதவையும் பூட்டிக்கொண்டுதான் காவல் புரிவது வழக்கம். அதில் தவறுவதே இல்லை" என்ருன் சகன்.

"வெளியே காவல் செய்துகொண்டிருந்த சிப்பாய் எப்படி உள்ளே வந்து அடிபட்டுக் கிடந்தான்?" என்ருர் டங்கன்.

"அது தாங்கள் முன்னே செய்த உத்தரவின்படி, வெளியே காவல் புரிகின்றவன் அடிக்கடி உள்ளே வந்து மூன்று அறைகளிலும் கைதிகள் இருக்கின்ருர்களா, பூட்டுகள் சரியாக இருக்கின்றனவா என்று கவனித்துக் கொள்ளவேண்டும் என்பதனல்."

"அது சரி. பூட்டியிருக்கின்ற அறைகளில் இருக்கும் கைதிகள் வெளியில் இருந்துகொண்டு அவர்களை கவனிக்கப் போகிற சிப்பாயை எப்படி அடித்துக் கீழே தள்ளி 'குளோரோ பாரம்' மூக்கில் ஏற்ற முடியும்?" என்ருர் டங்கன்.

"சில நாட்களில் அந்தக் கைதிகளில் யாராவது தாகத்துத் தண்ணீர் வேண்டும் என்றும், தலைவலி, வயிற்று வலி என்று டாக்டர் உதவி வேண்டுமென்றும், அல்லது அவசரமாகக் கொல்லைக்குப் போகவேண்டு மென்றும் நடுச்சாமத்தில் எங்களைக் கூப்பிடுவதுண்டு. ஒருநாள் நான் பாராக்கொடுத்துக்கொண் டிருந்த இரவு ஒரு மணிக்கு அந்த ஷங்கர்ஜிக்கு நெஞ்சுவலி வந்து

விட்டதாகக் கத்தி அழுதார். நான்தான் ஓடிப்போய் டாக்டரைக் கூட்டி வந்தேன். விடிய விடிய அழுது கொண்டு அவஸ்தைப்பட்டார். ஜெயபால், ஜேகப் எல்லாருந்தான் வந்து கவனித்தார்கள். அன்று விடிகிற வரைக்கும் வெளிக் கதவும் ஷங்கர்ஜியின் அறைக்கதவும் திறந்தே தான் இருந்தன. அவர்கள் நல்ல அந்தஸ்தில் இருந்தவர்களானதால் அவர்களைக் கண்ணியமாக நடத்தும்படித் தாங்கள் சொல்லியிருந்ததாக ஜெயபாலும் ஜேகப் துரையும் எங்களுக்குச் சொன்னதுண்டு.''

''அதற்காக மூன்று பேரையும் ஏககாலத்தில் இரவில் வெளியில் விட்டு விடவேண்டுமா? மூன்று பேருக்கும் ஒரேசமயத்தில் நெஞ்சுவலி வந்துவிட்டதா?'' என்று எரிந்து விழுந்தார் டங்கன். அதற்கு ஜோன்ஸ் துரை, ''மூன்று பேரையும் ஏககாலத்தில் வெளியில் விட்டிருக்க மாட்டான். யாராவது ஒருத்தன்தான் முதலில் வெளியில் வர ஏதாவது பொய்க்காரணம் சொல்லியிருப்பான். அதை நம்பி பாராக்காரன் அவனை வெளியில் விட்டிருப்பான். அவன் மதன்சிங் ஏமாந்த சமயம் பார்த்து அள்ளையில் பலமாகக் குத்தித் தள்ளியிருக்க வேண்டும். உடனே அவனிடத்திலிருந்த சாவிகளை எடுத்து மற்ற இரண்டு அறைகளையும் திறந்துவிட்டிருக்கவேண்டும். மதன்சிங்குக்கு அள்ளையிற்பட்ட அடி மிகவும் பலமானதாக இருந்திருக்கும்'' என்றான்.

''ஷங்கர்ஜி அப்படிப்பட்ட பலசாலியா?''

''ஷங்கர்ஜி குத்தியிருக்க முடியாது. மற்ற இருவரும் நல்ல பலசாலிகள்தாம். ஷங்கர்ஜி வேணுமானால் 'குளோரோபாரம்' கட்ட உதவி செய்திருக்கக் கூடும்'' என்றான் ஜோன்ஸ் துரை.

''எப்படியோ என்னுடைய மானமே போய்விடும்படி ஆகிவிட்டது. அவர்களைக் கண்ணியமாக நடத்தும்படி

இடங் கொடுத்தது என்னுடைய முட்டாள்தனம். அந்தச் சதிகாரப்பயல் ஷங்கர்ஜியை மட்டுமாவது அப்போதே அவன் தான் யாரையும் பார்க்க விரும்பவில்லை என்றும் தன்னை உடனே சுட்டுக் கொன்று விடலாம் என்றும் சொன்னபோதே சுட்டுக்கொன்று தண்டனையை நிறைவேற்றியிருக்கவேண்டும். இருக்கட்டும் அவனை எப்படியாவது பிடிக்காமலா விட்டுவிடப் போகிறேன்'' என்று தனக்குள் சொல்லிக்கொண்டே அந்தச் சிறை வீட்டைவிட்டு ஜேகப் துரையின் காரியாலயத்துக்குப் போனார் டங்கன் துரை. அங்கே சிறைவீட்டைக் காவல் புரியப் பாரா மாற்றும் தினசரிப் புத்தகங்களை யெல்லாம் பார்வையிட்டார். ரிகார்டுகள் எல்லாம் சரியாகவே இருந்தன. அன்று மாலை 5 மணி முதல் 9 மணிவரை கோவிந்தன் என்றும், இரவு 9 மணி முதல் 1 மணி வரை ராம்லால் என்றும், 1 மணியிலிருந்து 5 மணிவரை மதன்சிங் என்றும், 5 மணி முதல் காலை 9 மணி வரை சகன்சாயபு என்றும் பாராக்காரர்களின் பெயர்கள் பதிவாகியிருந்தன. ராம்லாலைக் கூப்பிட்டு விசாரித்ததில் அவன் தன்னுடைய பாராக் காலம் முடிந்து மதன்சிங்கிடம் பாரா மாற்றுகிற வரைக்கும் கைதிகள் எப்போதும் போல எந்தவிதமான சந்தேகத்துக்கும் இடமில்லாதபடி அவர்களுடைய அறையில் இருந்ததாகச் சொன்னான்.

டங்கன்துரை அங்கிருந்து ஆஸ்பத்திரிக்குப் போனார். மதன்சிங்கின் நிலைமையில் மாறுதல் இல்லாதிருந்தது. மயக்கம் தெளியவேயில்லை. அங்கிருந்து டங்கன் துரை தம்முடைய காரியாலயத்துக்குச் சென்று போட்டகிராப்பரை வரச்செய்து, கடைசியாக அந்தக் கைதிகள் மூவரையும் படம் பிடித்த போட்டகிராப்பில் மிகவும் அவசரமாக ஐம்பது பிரதிகள் தயாராக உத்தரவிட்டார்.

மறுநாள் காலை பத்துமணிக்குமேல்தான் மதன்சிங் குக்குத் தன்னினைவு வந்தது. அதன்பிறகு அவனை விசாரித்ததில், "நான் பாராவுக்கு வந்து அரைமணி நேரம் ஆனபின் சையத்காதர் தன்னைத் தேள் கடித்து விட்டதாகக் கத்தினான். நான் உண்மையென்று எண்ணி உடனே ஓடிக் கதவைத் திறந்து உள்ளே போனேன். அவன் வலிபொறுக்க முடியாதவன் போல் துடித்துக் கொண்டே அறையிலிருந்து வெளியே போய்க் கீழே உட்கார்ந்துகொண்டு அழுதான். நான் அவன்மேல் இரக்கங் கொண்டு என் கையிலிருந்த துப்பாக்கியைக் கீழே வைத்துவிட்டு அவனருகில் உட்கார்ந்து அவன் முதுகில் தேள் கொட்டினதாகச் சொன்ன இடத்தைத் தடவிக் கொடுத்தேன். அழுதுகொண்டிருந்த அவன் திடீரென்று நான் கீழே வைத்த துப்பாக்கியைப் பற்றிக் கொண்டு என் தலையில் அடிக்க ஓங்கினான். அந்த அடிக்குத் தப்பித்துக்கொண்டேன். உடனே வெளியே ஓடிக் கூச்சல் போட்டு அபாயத்தை அறிவிக்க எண்ணிக் கதவண்டைத் தாவினேன். அந்தச் சமயத்தில் அவன் துப்பாக்கியினால் என் அள்ளைப்புறத்தில் ஓங்கி அடித்து விட்டான். நான் இடுப்பொடிந்து போனதுபோல் பொறுக்க முடியாத வலியுடன் விழுந்துவிட்டேன். அதன் பிறகு என் மூக்கில் தண்ணீரை ஊற்றியது போல் இருந்தது. அதற்குமேல் எனக்கு ஒன்றுந் தெரியவில்லை" என்றான்.

ஐயோ பரிதாபம்!

உயிருக்காக ஓடுகின்றவர்கள் எவ்வளவு வேகமாகப் போகமுடியுமோ அவ்வளவு வேகத்தில் ஓட்டமும்நடையு மாகச் சையத்காதரும் முனிஜியும் மணிபுரிக்குப் போகும் மலைப் பாதையில் போய்க்கொண்டிருந்தார்கள். டங்கன் துரை வெகு பொல்லாதவன்; அவன் தங்களைப் பிடிக்க வேண்டிய எல்லா முயற்சிகளையும் வெகு தீவிரமாகச் செய்வான் என்பது இவர்களுக்குத் தெரியும். அதனால் யாராவது தம்மைத் தொடர்ந்து வருகிறார்களா வென்று திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே போனார்கள். அந்தப் பாதை செங்குத்தான ஏற்றங்களும் இறக்கங் களும் உள்ளது. அதனால் பின்னாலோ முன்னாலோ வெகுதூரம் வரைக்கும் ரஸ்தா கண்ணுக்குப் புலப்படும். அதில் ஆள் நடமாட்டம் இருந்தாலும் உருவங்கள் அசைவதிலிருந்து தெரிந்துகொள்ள முடியும். அப்படி யாரேனும் வருவதுபோலச் சந்தேகப்படுகிற சமயங்களி லெல்லாம் இருவரும் பாதையை விட்டுக் காட்டுக்குள் புகுந்து ஒளிந்துகொள்வார்கள். தாம் சந்தேகித்த உருவங்கள் தம்மைத் தொடர்பவர்கள் அல்லவென்பது நிச்சயமாகிறவரைக்கும் வனத்துக்குள்ளேயே பதுங்கிப் பார்த்துக்கொண் டிருப்பார்கள். அப்படிக் காட்டுக்குள் பதுங்கும்போது சில இடங்களில் சிறுத்தையும் சில இடங்களில் பெரு நரிகளும் இன்னும் சில இடங்களில் யானைகளும் கூடக் கண்ணிற்படுவதுண்டு. ஆனாலும் அந்த வனவிலங்குகளுக்கு இரையாக நேர்ந்து விட்டாலும்கூடப் பாதகமில்லை; மறுபடியும் அந்த டங்கன்துரையிடம் சிக்கிக்கொள்ளக் கூடாது என்ற

ஒரே ஆவல்தான் அவர்களுடைய உள்ளத்தில் உயர்ந்து நின்றது. அதனால் வனவிலங்குகளைப்பற்றி அவர்கள் அஞ்சவில்லை. ஒரு சிறுத்தை அவர்களைத் தாக்க வந்தாலும் இருவரும் அதைச் சமாளித்து வென்று விடலாம். ஒரு யானை அவர்களைத் துரத்தினாலும் ஒரு குன்றின் மீது ஏறித் தப்பித்துக் கொள்ளலாம். ஆனால் டங்கன் துரையிடம் சிக்கிக்கொண்டால் அவனுடைய துப்பாக்கிக் குண்டுக்கு மார்பைக் காட்டவேண்டியதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்? காட்டுக்குள் பதுங்கும் போதெல்லாம் இதை அவர்கள் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டுதான் உத்ஸாகமடைந்தார்கள். உண்மையில் ஒரு இடத்தில் இவர்கள்மீது பாயக்கூடிய ஒரு சிறுத்தை பயந்து நடுங்கி ஓடவேண்டியதாகிவிட்டது. இவர்கள் இருவரும் ஒரு பாறைக்குப் பின்னால் பதுங்கினர்கள். அவர்களுக்கு வெகு பக்கத்தில் வந்துவிட்ட ஒரு சிறுத்தை இவர்களை விழுங்க விழுங்கப் பார்த்துக் கொண்டு நின்றது. கொஞ்சம் தாமதித்திருந்தால் இவர்கள் மீது அது பாய்ந்திருக்கும். அதற்குள் முனிஜி தனது வலது கை விரல்களை மடக்கிக் கொண்டு கையின் பின்புறத்தை வாயில் வைத்து 'ஹப்பப்-பப்பப்-பப்' என்று வெகு பயங்கரமான ஓசைகளை உண்டாக்கினான். உடனே அந்தச் சிறுத்தை ஒரே ஓட்டமாக ஓடிக் காட்டில் மறைந்துவிட்டது.

இன்னொரு இடத்தில் இவர்கள் ஒண்டியிருந்த இடத்துக்குச் சிறிது தூரத்தில் சில யானைகள் வந்து கொண்டிருந்தன. அதைக் கண்ட முனிஜி உடனே தன் இரண்டு கைகளையும் தன் வாய்க்கு நேராகக் கூட்டிக் கொண்டு சிங்கம் கர்ஜிப்பது போன்ற ஒரு மிகப் பெரிய ஓசையுண்டாக்கினான். உடனே முன்னால் வந்து கொண்டிருந்த பெரிய யானை திகைத்து நின்று விட்டது.

முனிஜி மீண்டும் ஒரு முறை கர்ஜித்தான். யானைக் கூட்டம் வந்த வழியே திரும்பி வேகமாகச் சென்று மறைந்துவிட்டது. முனிஜி வெறும் பொழுதுபோக்கும் வித்தையாகத் தான் பட்டாளத்தில் சேருவதற்கு முன்னால் வெவ்வேறு மிருகங்களைப் போலவும் பட்சிகளைப் போலவும் ஓசையுண்டாக்கும் விகடங்களைச் செய்யப் பழகியிருந்தது இப்போது மிகவும் பயன்பட்டது. இப்படியாகப் பதுங்கிப் பதுங்கி அந்த மலைப்பாதையில் போய்க்கொண்டிருந்தார்கள். தம்மைப் பிடிக்க வருவதாக இவர்கள் அஞ்சினயாரும் இவர்களைத் தேடி வந்தவர்களல்ல. அவர்கள் பெரும்பாலும் அந்த மலைநாட்டுக் கிராமவாசிகள். அவர்களிற் சிலர் இவர்களைத் தங்கள் கிராமத்துக்குக் கூட்டிக்கொண்டுபோய் உணவளித்து உதவினார்கள். கிடைத்தமட்டிலும் ஆகாரங்களை அங்கங்கே மூட்டைக் கட்டிக்கொண்டு அந்தக் கிராமவாசிகளுக்குப் பணமும் தந்தார்கள்.

ஒரு நாளைக்கு அறுபது அல்லது எழுபது மைல் வீதம் பகல் முழுவதும் நடப்பார்கள். அப்படி நடக்கும் போதே அந்தப் பாதையில் கண்ணுக்குப்படுகிற கிராமவாசியிடமாவது அல்லது சில இடங்களில் ஆடுமாடுகளை மேய்த்துக்கொண்டிருக்கிறவர்களிடமாவது அடுத்த கிராமம் இன்னும் எவ்வளவு தூரத்தில் இருக்கிறதென்பதை அறிந்து கொள்வார்கள். அதற்குத் தகுந்தபடி நடையைக் குறுக்கியோ நீட்டியோ இரவை அடுத்த கிராமத்தில் கழித்துவிட்டு அதிகாலையில் புறப்பட்டு மறுபடியும் நடப்பார்கள்.

மணிபுரிக்குப் போய்ச் சேருவதற்கு முன்னால் கடைசியாக அவர்கள் தங்கி இரவைக் கழிக்கவேண்டிய கிராமத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள். மாலை ஐந்து மணி இருக்கும். பாதைக்கு வலதுபுறத்தில் ஒரு

சமவெளி காணப்பட்டது. அதில் மரங்களே இல்லை. முழுதும் புல்பூண்டுகள் நிரம்பியது. அநேக ஆடுகளும் சில மாடுகளும் மேய்ந்து கொண்டிருந்தன. அந்தக் காட்சியே அவர்கள் போய்த் தங்க வேண்டிய கிராமம் அருகாமையில் இருக்கிறதென்பதை அறிவித்தது. அந்த ஆடுமாடுகளை மேய்த்துக் கொண்டிருக்கிறவர்கள் அங்கே இருப்பார்கள். அவர்களிடம் கேட்டு அந்தக் கிராமத்துக்கு வழி தெரிந்து கொள்ளலாமென்று சையத்காதரும் முனிஜியும் நடையை நிறுத்தி நாலா பக்கமும் பார்த்தார்கள். மேய்ப்பவர்கள் யாரும் தென்படவில்லை. மறுபடியும் நடக்கத் தொடங்கினர்கள். எங்கிருந்தோ ஒரு அழுகுரல் அவர்களுடைய காதில் விழுந்தது. திடுக்கிட்டு அந்த அழுகுரல் வந்த திசையில் காது கொடுத்துக் கவனித்தார்கள். அழுகுரல் முன்னிலும் பலமாகக் கேட்டது. அழுகுரலைக் கேட்ட யாருக்குத்தான் அனுதாபம் பிறக்காது? உடனே அழுகுரல் வந்த திசையை நோக்கிச் செல்லுவதற்குப் பாதையிலிருந்த வேலியைத் தாண்டினர்கள். அங்கே அவர்கள் கண்ட காட்சி அடக்க முடியாத கோபக் கொதிப்பை உண்டாக்கி விட்டது. அங்கே ஒரு வெள்ளைக்கார சோல்ஜர் ஒரு இளம் கிராமப் பெண்ணின் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு அவளைக் கட்டித் தழுவி முத்தமிட முயன்றுகொண் டிருந்தான். அந்தப் பெண் அவனுக்கு இடங் கொடுக்காமல் தன்னுடைய கைகளை விடுவித்துக் கொள்ள இழுத்த வண்ணமாகத் தலையைக் கவிழ்த்துக் கதறிக்கொண் டிருந்தாள்.

இங்கிலீஷ்காரச் சோல்ஜர்களுக்கு இந்திய சிப்பாய்களுக்குக் கொடுப்பதைக் காட்டிலும் பல மடங்கு அதிகமான ஊட்டமுள்ள உணவும் உயர்ந்த உடைகளும் கொடுப்பதுதான் வெள்ளைக்கார ஆட்சியின் நீதி. ரொட்டியும் வெண்ணெயும் ஆட்டிறைச்சியும் மாட்

டிறைச்சியும் முட்டையும் கோழியும் பாலும் தயிருமாகத் தின்று கொழுத்துத் திமிர் பிடித்த சோல்ஜர்களிற் சிலர் காமவெறி பிடித்தவர்களாகி அடிக்கடி இப்படிச் சுதேசிப் பெண்களுக்குத் தொல்லை கொடுப்பது உண்டு. அதை சையத்காதரும் முனிஜியும் அறிந்தவர்கள். அத்துடன் வெள்ளைக்கார சோல்ஜர்களுக்கும் இந்திய சிப்பாய்களுக்கும் இங்கிலீஷ் ஆட்சியாளர் காட்டி வந்த பாரபட்சத்தைப் பற்றிய எரிச்சலும் இவர்களுக்குள் இருந்து கொண்டே யிருந்தது. அந்த ஆத்திரமும் ஒரு பெண்ணுக்கு நேர்ந்த அவமானத்தைப் போக்க வேண்டுமென்ற ஆவேசமும் சேர்ந்து சையத்காதரையும் முனிஜியையும் தம்முடைய நிலைமையையும் மறந்துவிடச் செய்து விட்டன. அவனே ஒரு இங்கிலீஷ் சோல்ஜர். ஆயுத பாணியாக இருக்கிறான். அந்த இடத்துக்குப் பக்கத்தில் அவனோடு சேர்ந்த வேறு சோல்ஜர்கள் பலர் இருந்தாலும் இருக்கலாம். அவனோடு தகராறு செய்து கொண்டிருக்கும்போது அவனைச் சேர்ந்த மற்றவர்கள் வந்து தம்மைப் பிடித்துக்கொண்டாலும் கொள்ளலாம். அல்லது ஆலோசிக்காமல் துப்பாக்கியால் சுட்டாலும் சுட்டுவிடுவார்கள் என்பதையெல்லாம் எண்ணிப் பார்க்காமல் இவர்கள் இருவரும் அந்தப் பெண்ணை விடுவிக்க சோல்ஜரிடம் ஓடினர்கள். முன்னால் ஓடினவன் சையத்காதர். சையத்காதரைக் கண்டவுடன் அந்தச் சோல்ஜர் தனக்கு அபாயம் வந்துவிட்டதாக எண்ணித் தன்னுடைய இடது கையால் அந்தப் பெண்ணைப் பிடித்தபடியே வலது கையால் தன் இடுப்பிற் கட்டியிருந்த கைத்துப்பாக்கியை எடுத்தான். சையத்காதர் குபீரென்று பாய்ந்து கைத்துப்பாக்கியோடு சோல்ஜரின் கையைப் பிடித்துக்கொண்டான். அதே சமயத்தில் முனிஜியும் பாய்ந்து துப்பாக்கியைப் பிடுங்கிக்கொண்

டான். உடனே அந்தச் சோல்ஜர் அந்தப் பெண்ணை விட்டுவிட்டு சையத்காதரின் மூக்கிலும் முகத்திலும் முஷ்டியினால் குத்தினான். சையத்காதர் நல்ல பலசாலி. சோல்ஜரை மடக்கிக் கீழே தள்ளி அமுக்கிக்கொண் டான். சோல்ஜரும் நல்ல பலசாலி. தன்னுடைய இரண்டு கால்களையும் சையத்காதருடைய வயிற்றில் பதிய வைத்து அவனை உதைத்துத் தள்ளிவிட்டு எழுந்து விட்டான். சிறிது நேரம் இருவருக்கும் குத்துச் சண்டை யும் குஸ்தியும் நடந்தது. சையத்காதர் நேதாஜியின் தேசிய சேனையில் இருந்தபொழுது அவன் ஜப்பானிய சிப்பாய்களிடமிருந்து 'ஜீயூ ஜீட்சு' என்னும் பிடி வரிசைகளைக் கற்றுக்கொண்டிருந்தான். அந்தப் பிடி வரிசைகள் எதிரிகளைச் சுலபமாக மடக்கிவிடக்கூடிய தந்திரமுள்ளவை. அந்த முறையில் சையத்காதர் சோல்ஜரின் வலது கையை அவனுடைய முதுகுப்புறத் தில் முறுக்கிப் பிடித்துக்கொண்டு அள்ளைப்புறத்தில் வெகு பலமான ஒரு குத்துவிட்டான். அந்தக் குத்து எதிரியின் ஈரற்குலையைத் தாக்கி மூச்சுத் திணற வைத்து விட்டது. சோல்ஜர் மயக்கமுற்றுக் கீழே விழுந்துவிட் டான். உடனே சையத்காதரும் முனிஜியும் அந்தப் பெண்ணைக் கூட்டிக்கொண்டு அவளுடைய வீட்டுக்கு வழிகாட்டச் சொல்லி ஓடினார்கள்.

அந்தப் பெண் பட்டிக்காட்டுப் பெண்தான். என் றாலும் மிகவும் வசீகரமான வடிவுடையவளாக இருந் தாள். பதினெட்டு வயதிருக்கும். உழைப்பினால் உருண்டு திரண்ட உடலுறுப்புகளுடன் பருவத்தின் பெண்மை யழகு அவளுடைய மேனி முழுவதும் படர்ந்திருந்தது. முத்துகள் போன்ற பற்களும், மொட்டுப் போன்ற மூக்கும், ஒளி வீசும் கண்களும், அழகான உதடுகளும், அள்ளிச் சொருகிய கருங்கூந்தலும் கண்ணுக்கு மிகவும்

களிப்பூட்டுவனவாக இருந்தன. இடையில் சற்றே கந்தலாகிவிட்ட புடவை கட்டியிருந்தாள். கைகளில் பித்தளை வளையல்களும் காணப்பட்டன. அதைத் தவிர வேறு அலங்கரிப்புகள் ஒன்றுமில்லை. ஆடுகளை ஓட்டு வதற்கு உதவுகின்ற ஒரு கெட்டியான மூங்கிற் கழியைக் கையிற் பிடித்துக்கொண் டிருந்தாள்.

தக்க சமயத்தில் வந்து தன்னைக் காப்பாற்றியதற் காகத் தன் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் முறை யில் சையத்காதரையும் முனிஜியையும் மாற்றி மாற்றிக் கைகூப்பிக் கும்பிட்டாள். குளறிக் குளறி வந்தனம் கூறினாள். அவள் பேசிய பாஷை மலைநாட்டு அஸ்ஸாம் பாஷை. அதில் இந்துஸ்தானி சொற்கள் அதிகமிருக் கும். அதனால் எளிதில் புரியக்கூடியதாக இருந்தது.

பேசிக்கொண்டே வெகு வேகமாக நடந்தார்கள். சுமார் அரை மைல் தூரம் ஒரு கொடித் தடத்தில் நடந்து அந்தப் பெண்ணின் கிராமத்துக்குச் சென்றார்கள். அது சுமார் ஐம்பது அறுபது குடிசைகளடங்கிய சிறு கிராமம். அங்குள்ள அனைவருக்கும் கம்பளிக்கு உரோமம் உதவக் கூடிய ஆடுகளை வளர்ப்பதே தொழில். சிலருக்குத் தோட்டம் துரவுகளும் உண்டு. அந்தக் கிராமத்தில் வீடுகளைவிட ஆடுகளை அடைக்கும் பட்டிகளே மிகவும் பலமாகக் கட்டப்பட்டிருந்தன. அந்தச் சிற்றூரின் நடு வில் இந்தப் பெண்ணின் வீடு அமைந்திருந்தது. இவர் கள் அங்கே போனபோது இந்தப் பெண்ணின் தகப்ப னும் தாயாரும் ஒரு தமயனும் இரண்டு தம்பிகளும் ஒரு தங்கையும் அங்கிருந்தார்கள். இருட்டுகிற சமயமாகி விட்டதால் இந்தப் பெண் மேய்த்துக்கொண் டிருந்த ஆடுகள் பட்டிக்கு வந்து சேருவதை எதிர்பார்த்துக் கொண்டு அவர்கள் பட்டியைச் சுத்தப்படுத்திக்கொண் டிருந்தார்கள். ஆடுகள் இல்லாமல் யாரோ இரண்டு

புது மனிதர்களைக் கூட்டிக்கொண்டு அந்தப் பெண் வருவதைக் கண்ட பெற்றோரும் உடன் பிறப்புகளும் திகைத்தார்கள்.

தாய் தந்தையரின் அருகில் வந்த அந்தப் பெண், விஷயத்தைச் சொல்ல வாயெடுத்தவள் பேச்சு வராமல் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்துவிட்டாள். பெற்றோர்களின் கண் கலங்கிவிட்டது. சையத் காதரையும் முனிஜியையும் பார்த்தார்கள். உடனே சையத்காதர் தனக்குத் தெரிந்த சில மலேநாட்டு வார்த்தைகளையும் சேர்த்துக்கொண்டு இந்துஸ்தானியில் பேசி விஷயத்தை அவர்கள் அறியும்படிச் செய்துவிட்டான். அதற்குள் அந்தப் பெண்ணும் அழுகையை விட்டுவிட்டு ஆதியோடந்தமாக நடந்ததைச் சொன்னாள்.

ஒரு வெள்ளைக்கார சோல்ஜரைக் குற்றுயிராக அடித்துத் தள்ளிவிட்டு வந்திருக்கிறார்கள் என்றதைக் கேட்டவுடனே அந்தப் பெண்ணின் பெற்றோர்கள் நடுங்கிவிட்டார்கள்.

"ஐயோ! அந்தப் படுபாவிகள் வெகு பொல்லாதவர்களாயிற்றே! நம்முடைய கிராமத்துக்கே அபாயம் வந்து விடுமே! என்ன செய்வது? அவனோடு சேர்ந்த வெள்ளைக்காரர்கள் இதை அறிந்தவுடனே இங்கே படையெடுத்து வந்து நம்முடைய ஊரைச் சூறையாடி விடுவார்களே! நம்மையும் சும்மா விடமாட்டார்களே!" என்று அலறத் தொடங்கினார்கள்.

"இங்கே வெள்ளைக்கார சோல்ஜர்கள் ரொம்பப் பேர்கள் இருக்கிறார்களோ?" என்றான் முனிஜி.

"ஐயோ ! அந்தச் சங்கடத்தை என்னவென்று சொல்லுவது! இங்கிருந்து ஒரு மைல் தூரத்தில் இரண்டாயிரம் பேர்களடங்கிய ஒரு பட்டாளமே இருக்கிறதே!" என்றான் அந்தப் பெண்ணின் தந்தை.

"எதற்காக இங்கே அந்தப் பட்டாளம்?" என்றான் சையத்காதர்.

"முன்னே ஜப்பான்காரர்கள் பர்மாவைப் பிடித்துக் கொண்டு இந்தியாவில் நுழைவதற்கு மணிபுரி வரையிலும் வந்துவிட்டார்களல்லவா?"

"ஆமாம்."

"அப்போது இந்த வெள்ளைக்காரர்கள் ஒன்றும் செய்யமுடியவில்லை. ஜப்பானியர் இந்த இடங்களை விட்டுவிட்டுத் திரும்பிப்போன பிற்பாடு மறுபடியும் அவர்கள் இங்கு வராதபடி தடுத்து எல்லையைப் பாதுகாப்பதற்காகவென்று இங்கே இந்தப் பட்டாளத்தை வைத்தார்கள். அதிலிருப்பவர்கள் எல்லாரும் வெள்ளைக்காரர்கள். அவர்களிற் பலர் சிறு சிறு கூட்டங்களாகவும், இரண்டு பேர் மூன்று பேர்களாகவும், சிலர் தனியாகவும் பக்கத்திலுள்ள கிராமங்களில் வந்து செய்கிற அட்டூழியங்களை என்னவென்று சொல்லுவோம்! அவர்களுடைய இஷ்டம் போல் தோட்டங்களிலுள்ள பழங்களைப் பறிப்பார்கள்; கோழிகளைப் பிடிப்பார்கள்; முட்டைகளைக் கேட்பார்கள்; பெண்களைச் சீண்டுவார்கள்; ஏனென்று கேட்டால் அடிப்பார்கள்; பூடசு காலால் உதைப்பார்கள்; பல இடங்களில் இன்று நடந்தமாதிரி இளம்பெண்களை இழுத்திருக்கிறார்கள். ஆறு மாதத்துக்கு முன்னால் எங்களுக்குச் சொந்தக்காரியான வேறொரு பெண்ணை ஒரு சோல்ஜர் பலாத்காரமாகப் பிடித்து, அவளுடைய கன்னங்களில் பலத்த காயங்களுண்டாகும்படி கடித்து, அவளைக் கற்பழிக்க முயன்றான். அதைக் கண்ட ஒரு இளைஞன் அந்தப் பெண்ணுக்குத் துணைபுரிய ஓடி, அந்தச் சோல்ஜருடைய கையைப் பிடித்து இழுத்து அந்தப் பெண்ணை விடுவிக்க முயன்றான். அந்தச் சோல்ஜர், தன் கைத்துப்பாக்கியினால் அந்த இளைஞனைச் சுட்டுவிட்டான்.

அந்த வெடிச் சத்தத்தைக் கேட்டவர்கள் அங்கே போவ தற்குள் அந்தச் சோல்ஜர் ஓடிவிட்டான். அந்த இளை ஞனுக்கு வலது தோள்பட்டையில் குண்டு பாய்ந்து விழுந்துவிட்டான். வெகு நாள் கஷ்டப்பட்டுப் பிழைத் தான். கிராமத்தாரெல்லாம் சேர்ந்து போய் அந்தப் பட்டாளத்தின் தலைவரிடத்தில் சொன்னோம். அவர் குற்றவாளியைக் கண்டு பிடித்துக் கடுமையாகத் தண்டிப் பதாக வாக்களித்தார். ஆனால் குற்றவாளியைக் கண்டு பிடிக்க முடியவில்லை. அந்தப் பையனையே அடையாளம் காட்டச் சொன்னார்கள். அந்த இளைஞனுக்குத் தன் னைச் சுட்டவன் இவன்தான் என்று நிச்சயித்துக் காட்ட முடியவில்லை. மூன்று முறை மூன்று வெவ்வேறு சோல் ஜர்களைக் காட்டினான். வெள்ளைக்கார முகங்கள் எல் லாம் ஒரே மாதிரிதான் இருக்கின்றன கிராமவாசி களுக்கு. என்ன செய்வது? அதற்கப்புறம் இந்த ஆறு மாதமாக இந்தப் பயம் இல்லாமலிருந்தது. இன்று மறு படியும் ஆரம்பமாகி விட்டது."

"நீங்களேன் பயப்படவேண்டும்? இந்தப் பெண்ணை விடுவிக்க வேண்டி அந்தச் சோல்ஜரை நாங்கள் தண் டித்தது தப்பா?" என்றான் சையத்காதர்.

"ஐயோ! சாமி! நான் அப்படிச் சொல்லுவேனா? என் மகளுக்கு நீங்கள் செய்த உதவிக்கு நாங்கள் உங்க ளைத் தெய்வமாகக் கும்பிடவேண்டுமே! இன்னும் ஒரு மாதத்தில் இந்தப் பெண்ணுக்குக் கலியாணம் நடத்த நிச்சயமாகியிருக்கிறது. இந்தச் சமயத்தில் இவளுடைய மானத்தைக் காப்பாற்றிய உங்களுக்கு நாங்கள் எவ்வளவு நன்றி செலுத்தினாலும் போதாதே. அப்படியிருக்க நீங்கள் உதவி செய்தது தப்பு என்று சொல்லுவேன்? அப்படி நினைத்துவிடவேண்டாம் சாமி. நான் எதற்கா கப் பயப்படுகிறேன் என்றால், நீங்கள் அடித்துப் போட்டு

விட்டு வந்த சோல்ஜர் ஒருவேளை செத்துப் போய்விட் டால், ஐயோ! . .அவனை அடித்துக் கொன்றது யாரென்று கண்டுபிடிக்க இந்த வட்டாரத்திலுள்ள எல்லாக் கிராமங் களிலும் புகுந்து தேடுவார்களே! பட்டாளத்திலுள்ள தலைவரும் அதிகாரிகளும் யோக்கியர்களாக இருந்தா லும் இந்தப் படுபாவிச் சோல்ஜர்கள் எமன்களாச்சே! கிராமங்களிற் புகுந்து நினைத்தபடியெல்லாம் அட்டூழியம் செய்து நிரபராதிகளையும் பெண்டுபிள்ளைகளையும் கூட இம்சித்து விடுவார்களே! இப்போது உடனே அவர்கள் இங்கே வந்து உங்களைக் கண்டு கொண்டால் உங்களை யும் எங்களையும் சும்மா விடமாட்டார்களே! அந்தச் சோல் ஜர் இந்தப் பெண்ணைக் கெடுக்க முயன்றதற்காகத்தான் நீங்கள் அவனைத் தண்டித்தீர்களென்பதை அவர்கள் நம்பமாட்டார்களே! எங்களுக்கு இவ்வளவு பெரிய உதவியைச் செய்த உங்களை அவர்கள் வந்து பிடித்துக் கொண்டால் என்ன செய்வது என்ற பயம்தான் எனக்கு அதிகமாகிறது" என்றான் அந்தப் பெண்ணின் தந்தை.

இதைக் கேட்டவுடன் சையத் காதருக்கும் முனிஜிக் கும் தங்களுடைய நிலைமையைப் பற்றிய அச்சம் உதித்து விட்டது. தாங்கள் சிறையிலிருந்து தப்பி ஓடிவந்து விட்ட கைதிகள் என்பதையே அவர்கள் அதுவரையிலும் மறந்திருந்தார்கள். வெள்ளைக்கார சோல்ஜர்கள் வந்து தங்களைப் பிடித்துக்கொள்ள நேரலாம் என்பதை நினைத்ததும் அவர்களுக்கு நடுக்க முண்டாகிவிட்டது. உடனே ஓடி எங்கேயாவது ஒளிந்துகொள்ள வேண்டு மென்ற உணர்ச்சி உண்டாகிவிட்டது.

"ஆம், நீங்கள் சொல்லுவதும் நியாயம்தான். சோல்ஜர்கள் இங்கே வந்தாலும் வருவார்கள். நாங்கள் எங்காவது மறைந்திருந்து இந்த இரவைக் கழிக்க வழி செய்யுங்கள். விடியுமுன் நாங்கள் புறப்பட்டுப் போய்

விடுகிறேம்'' என்ருன் முனிஜி. அதை சையத்காதரும் ஆமோதித்தான்.

"நீங்கள் எங்கே போகவேண்டும்?" என்று கேட்டான் பெண்ணின் தந்தை.

"நாங்கள் மணிபுரிக்குச் சென்று, அங்கிருந்து கல்கத்தாவுக்குப் போகவேண்டும்."

"மணிபுரிக்கா! ஐயோ! மணிபுரிக்குள் நுழைகின்ற இடத்தில் அந்த வழியாக இந்தியாவுக்குப் போகிற யாராஞலும் நிறுத்தி அவர்கள் எங்கிருந்து வருபவர்கள், எதற்காக இந்தியாவுக்குப் போகிறவர்கள் என்பதையெல்லாம் விசாரித்து அவர்களிடத்தில் ஆயுதங்கள் ஏதாவது இருக்கிறதா என்பதையெல்லாம் சோதித்துத் தானே விடுவார்கள். அதற்கென்று ஒரு சுங்கக் கட்டிடமும் அதற்குக் காவலாக அங்கேயும் இந்த வெள்ளைக்கார சோல்ஜர்கள்தானே இருக்கிருர்கள். அந்தச் சோல்ஜர்களும் இந்தப் பட்டாளத்தைச் சேர்ந்தவர்கள்தான். ஐயையோ! அந்த வழியாகப் போனல் உங்களுக்கு அபாயம்தான்" என்ருர் பெண்ணின் தந்தை.

இதைக் கேட்ட இருவருடைய உள்ளமும் உடலும் ஒடுங்கிவிட்டன. டங்கன் துரையிடமிருந்து தப்பித்துக் கொண்டு இவ்வளவு தூரம் வந்தபின் இங்குள்ள துரைகளிடம் சிக்கிக்கொள்ளக்கூடும் என்ற திகில் அவர்களைப் பற்றிக்கொண்டது. "வெள்ளைக்காரர்கள் கண்ணுக்குப்படாமல் இந்தியாவுக்குள் போய்விட நீங்கள்தான் வழி சொல்லி எங்களைக் காப்பாற்ற வேண்டும்" என்று, தன்னுடைய சுபாவத்துக்குப் பழக்கமே இல்லாத தீனக்குரலில் சையத்காதர் அந்தக் குடியானவனைக் கெஞ்சினன்.

"அதற்கு நான் வழி சொல்லுகிறேன். அது பின்னலாகட்டும். முதலில் உங்களை எங்கேயாவது

மறைத்து வைத்துவிட வேண்டும். வாருங்கள்" என்று அவர்கள் இருவரையும் அந்த வீட்டுக்குப் பின்னலிருந்த ஒரு தோட்டத்துக்குள் அழைத்துச் சென்ருன். அங்கே ஒரு சிறிய பழைய குடிசை இருந்தது. அதில் பலவித மான விவசாயக் கருவிகளும் மரப் பலகைகளும் நிறைந்திருந்தன. அங்கே ஒரு சுவரின்மீது மரப்பலகைகளை வரிசையாகச் சந்து தெரியாதபடிச் சாய்த்து வைத்துப் பலகைகளுக்கும் சுவருக்கும் இடையிலுள்ள குறுகிய இடத்தில் அவர்களைப் பதுங்கிக் கொள்ளச் செய்து, பலகைகளுக்கு முன்னுல் மற்றச் சாமான்களைப் பரப்பி வைத்துவிட்டு "இப்போதைக்கு இங்கே இருங்கள். என் மகனை அனுப்பி ஆடுகளை ஓட்டிக்கொண்டு வரச் செய்கிறேன். அப்படியே அந்த அடிபட்ட சோல்ஜர் என்ன வானுன் என்பதையும் அதைப்பற்றிய விஷயங்களையும் அறிந்து வரச் செய்கிறேன். மற்ற யோசனைகளைப் பின்னல் பேசிக்கொள்வோம். சோல்ஜர்கள் தேடி வந்து உங்களுக்கு அபாயம் ஏற்படும்போல் இருந்தால் உடனே வந்து எச்சரிக்கிறேன். இந்தத் தோட்டத்தின் பின்புறமாக நீங்கள் ஓடி விடலாம். உங்களுக்கு ஆகாரம் தயார் செய்யச் சொல்லியிருக்கிறேன். சமயம் பார்த்து கொண்டுவருகிறேன்" என்று சொல்லிவிட்டு அந்தக் குடிசையைப் பூட்டிக்கொண்டு அந்த இடையன் போய் விட்டான்.

ஐயோ! பரிதாபம்! சையத்காதரும் முனிஜியும் நிமிரவும் முடியாமல் நீட்டவும் முடியாமல் அந்த மிகவும் குறுகலான சந்தில் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

அருகில் வந்தார்

அபாயம்

சையத்காதர் அள்ளப்புறத்தில் பலமாகப் பாய்ச்சிய குத்தினுல் மூச்சடைத்துக் கீழே விழுந்துவிட்ட சோல்ஜர் வெகு நேரம் மயக்கமுற்றிருந்து, பிறகு சிறுகச் சிறுக மயக்கம் தெளிந்து எழுந்தான். மூக்கிலும் வாயிலும் கசிந்திருந்த ரத்தத்தைத் துடைத்துக்கொண்டு படை வீட்டை நோக்கி நடக்கலுற்ருன்; நடக்க முடியவில்லை; மூச்சுத் திணறிற்று; அங்கங்கே உட்கார்ந்து ஆயாசம் தீர்த்துக்கொண்டு மெள்ளமெள்ள முகாமுக்குப் போய்ச் சேர்ந்தான். அவன் அடிபட்ட இடத்துக்கும் முகாமுக்கும் சுமார் ஒரு மைல் தூரம் இருக்கும். அவன் தள்ளாடிக்கொண்டு வந்ததைக் கண்ட அவனுடைய சகாக்கள் அவனைச் சூழ்ந்துகொண்டு அவனுடைய நிலைமையை ஆராய்ந்தார்கள். அவன் முகம் குத்துகளால் வீங்கியிருந்தது. மூக்கு கன்றியிருந்தது. கண்கள் சிவந்திருந்தன. தான் செய்த குற்றத்தைச் சொல்லாமல் அவன் "யாரோ இரண்டு பர்மியர்கள் என்னைத் தாக்கி என் கைத்துப்பாக்கியைப் பறித்துக்கொண்டு ஓடிவிட்டார்கள்" என்ருன்.

"ஏன் உன்னை அவர்கள் தாக்கினர்கள்?" என்ருன் ஒருவன்.

"நான் அவர்களை வழி மறித்து 'எங்கே போகிறீர்கள்?' என்று மிரட்டினேன். உடனே அவர்கள் இருவரும் பாய்ந்து என் ரிவால்வாரைப் பிடுங்கிக்கொண்டு என்னை அடித்துத் தள்ளிவிட்டு ஓடிவிட்டார்கள்" என்ருன்.

இவனுடைய சுபாவத்தை அறிந்திருந்த சகபாடிகளில் ஒருவன், "நீ யாரையாவது பெண்களைச் சீண்டியிருப்பாய். அவர்கள் அடித்துவிட்டார்கள்" என்ருன்.

அதைக் கேட்டதும் அடிபட்டு வந்தவன் அவனையும் அறியாமல் சிரித்துவிட்டான். உடனே அங்கிருந்தவர்களுக்கு விஷயம் விளங்கி விட்டது. என்ருலும் அவனுடு சேர்ந்தவர்கள் பல பேருக்கும் உடனே அடித்தவர்களைக் கண்டு பிடித்துப் பழிவாங்க வேண்டுமென்ற ஆத்திரம்தான் அதிகமாக இருந்தது. அவன் அடிபட்ட இடத்தையும் அவனை அடித்தவர்களுடைய அடையாளங்களையும் விசாரித்தார்கள். அவன் தன்னை அடித்தவர்களுடைய அடையாளத்தை ஒருவாறு சொல்லிவிட்டு, "ஒருவன் பச்சை லுங்கியும், இன்னெருவன் ஊதா லுங்கியும் கட்டியிருந்தார்கள். அவர்கள் பர்மாவிலிருந்து இந்தியாவுக்குப் போகிறவர்களாகத்தான் இருக்கவேண்டும்" என்ருன். அதைக் கேட்ட இன்னெருவன், "பர்மாவிலிருந்து இந்தியாவுக்குப் போக அந்தத் தடத்தில் யார் வந்தாலும் அவர்களைக் கைது செய்து தகவல் கொடுக்கும்படி ரங்கூன் தளபதியிடமிருந்து தந்தி வந்திருக்கிறது. அதன்படி நம்முடைய பட்டாளத்தார் அந்த மணிபுரிப் பாதையைக் கண்காணிக்கவென்று பல சோல்ஜர்களைக் கொஞ்ச நேரத்துக்கு முன்னுல்தான் ஏவியிருக்கிருர்கள். அதனுல்தான் அடித்தவர்கள் தப்பித்துக் கொள்ள முடியாது," என்ருன். இப்படியாக அந்தச் சோல்ஜரை அடித்துவிட்டவர்களை எப்படியாவது பிடிக்க வேண்டுமென்ற பரபரப்பு அந்த முகாமில் பரவிற்று.

... ...

சையத்காதரையும் முனிஜியையும் தோட்ட வீட்டில் வைத்துப் பூட்டிவிட்டு வந்த குடியானவன் தன்னுடைய மகனை ஆடுகளைப் பட்டிக்கு ஓட்டி வர அனுப்பினன். தன்

மனைவியிடம் விருந்தாளிகளுக்கு நல்ல உணவு தயாரிக்கும்படி கட்டளையிட்டான். அவன் சொல்லுவதற்கு முன்னாலேயே அவளும் அந்தப் பெண்ணும் அதற்கு வேண்டியதைச் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள்.

இருட்டிவிட்டது. ஆடுகள் பட்டிக்கு வந்தன. அவைகளை ஓட்டிவரப் போன மகனும் வந்தான். அடிபட்டுக் கிடந்த சோல்ஜர் எழுந்து மெள்ள மெள்ள நடந்து போனதைப் பார்த்ததாகச் சொன்னான். சோல்ஜர் சாகவில்லை என்பதை அறிந்த குடியானவன் சந்தோஷப்பட்டான். ஆனாலும் அந்தச் சோல்ஜர் அவனுடைய முகாமுக்குப் போய்ச் சேர்ந்தவுடன் அங்குள்ள அவனுடைய தோழர்கள் அவனை அடித்தவர்களைத் தேடி வந்தாலும் வந்துவிடுவார்கள் என்று அஞ்சினான். இரவு எட்டு மணிக்குமேல் சோல்ஜர்கள் முகாமைவிட்டு வெளியே போகக்கூடாது என்பது பட்டாளச் சட்டம் என்பது அந்தக் குடியானவனுக்குத் தெரிந்திருந்தது. ஆனாலும் பத்து மணி வரைக்கும் பார்த்துவிட்டால், அதன் பிறகு பயமில்லாமல் விருந்தாளிகளை வீட்டுக்கே அழைத்து வந்து உபசரிக்கலாம் என்று காத்திருந்தான்.

சுமார் ஒன்பது மணிக்கு அந்தக் குடியானவனுடைய மைத்துனன்—அந்தப் பெண்ணின் தாய் மாமன்-அங்கே வந்தான். அவன் கொஞ்சம் பணக்காரன். ஆடுகள் மட்டுமல்லாமல் பெரிய மாட்டுப் பண்ணையும் அவனுக்குண்டு. அவன் அந்த வெள்ளைக்காரப் பட்டாளத்துக்குப் பால் அளக்கும் பல வாடிக்கைக்காரர்களில் ஒருவன். நல்ல மானமுள்ளவன். அடிக்கடி அந்தப் பட்டாள முகாமுக்குப் போய்வரவேண்டியவன். அன்றைக்கும் அங்கே போயிருந்து அப்போதுதான் அங்கிருந்து வந்தவன். பால் அளந்த பணம் வாங்கிக் கொண்டு வரத்தான் முகாமுக்குப் போயிருந்தான்.

இவன் அங்கே இருக்கும்போதுதான் அந்த அடிபட்ட சோல்ஜர் அங்கே வந்தது. அடிபட்டு வந்த சோல்ஜரை அவனுடைய சகாக்கள் சூழ்ந்துகொண்டதையும் அவர்கள் பேசிக்கொண்டதையும் அவனை அடித்தவர்களைக் கண்டுபிடித்துப் பழிவாங்க வேண்டுமென்று பல பேர் துடிதுடித்த பரபரப்பையும் கவனித்துக்கொண்டு பக்கத்தில் நின்றவன் இவன்.

வந்த மைத்துனனை வழக்கம்போல் வரவேற்றபின் தன்னுடைய மகளை ஒரு சோல்ஜர் கற்பழிக்க முயன்றதையும் அந்தச் சமயத்தில் யாரோ இரண்டு பர்மியர்கள் வந்து அவளை விடுவித்ததையும் குடியானவன் சொன்னான்.

"இரண்டு பர்மியர்களா ! அவர்கள் அந்தச் சோல்ஜரை அடித்துத் தள்ளிவிட்டார்களா !" என்றான் மைத்துனன் திடுக்கிட்டவனாக.

"ஆம். இரண்டு பர்மியர்கள் சோல்ஜரை நன்றாக அடித்துத் தள்ளியதால்தான் பெண்ணை விடுவிக்க முடிந்ததாம்."

"அவர்களில் ஒருவர் பச்சை லுங்கியும், மற்றவர் ஊதா லுங்கியும் கட்டியிருந்தார்களா ?"

"ஆமாம். அதெப்படி உனக்குத் தெரியும் ?"

"அடிபட்ட சோல்ஜர் அங்கே வந்து தன்னை அடித்தவர்களுடைய அடையாளத்தைச் சொல்லும்போது நான் பக்கத்திலிருந்தேன். இப்போது அந்த இரண்டு பர்மியர்களும் எங்கே ?" என்றான் மைத்துனன்.

"அவர்கள் இங்கேதான் இருக்கிறார்கள். ஏன் ?"

"அவர்களிடத்தில் அந்தச் சோல்ஜருடைய கைத்துப்பாக்கி இருக்கிறதா ?" என்றான் மைத்துனன்.

"அதை நான் கவனிக்கவில்லை" என்றான் குடியானவன். முனிஜி அதைத் தன் இடுப்பில் சொருகியிருந்தது குடியானவனுக்குத் தெரியாது.

"இப்போது அந்தப் பர்மியர்கள் எங்கே இருக்கிறார்கள்?" என்று வெகு அவசரமாகக் கேட்டான் மைத்துனன்.

"அவர்களைத் தேடிப் பிடிக்க சோல்ஜர்கள் இங்கே வந்தாலும் வந்து விடுவார்களே என்று நான் அவர்களைத் தோட்ட வீட்டில் மறைத்து வைத்திருக்கிறேன்" என்று அந்தக் குடியானவன் வெகு ரகசியமாகச் சொன்னான்.

"ஐயோ! அவர்களை இங்கே வைத்திருக்கவே கூடாது. நமக்குப் பெருத்த அபாயமுண்டாகும். இவர்களை எப்படியாவது தேடிப் பிடித்துப் பழி வாங்க வேண்டுமென்று அங்கே துடித்துக்கொண்டிருக்கிறார்கள். அடித்தது மட்டும் அல்லாமல் பட்டாளத்துக்குச் சேர்ந்த ரிவால்வாரையும் பிடுங்கிக் கொண்டிருப்பதால் இரவென்றும் பார்க்காமல் இங்கே வந்தாலும் வந்து விடுவார்களே! என்ன செய்வது? உடனே அவர்களை இங்கிருந்து தாட்டிவிட வேண்டும். இல்லாவிட்டால் நமக்கு என்ன துன்பம் வருமென்று சொல்ல முடியாது. அந்தச் சோல்ஜரை அடிக்க நீங்களும் உடந்தையாக இருந்திருப்பதாகச் சொல்லி அவர்கள் எதை வேண்டுமானாலும் கூசாமல் செய்து விடுவார்கள்."

"நம்முடைய பெண்ணின் மானத்தைக் காப்பாற்றிய அவர்களுக்கு நாம் நன்றி காட்ட வேண்டாமா? இந்நேரத்தில் அவர்களை இங்கிருந்து போய்விடச் சொன்னால் அவர்கள் எங்கே போவார்கள்? வழியில் அவர்களைப் பிடித்துக் கொண்டாலும் கொள்வார்களே! அது நாமே அவர்களிடம் பிடித்துக் கொடுத்துவிட்டது போலல்லவா? இந்த நன்றி கெட்ட காரியத்தை நாம் செய்யலாமா? அவர்களுக்கு உணவளித்து அவர்களைக் காப்பாற்ற வேண்டியது நம் கடமையல்லவா?" என்று கண் கலங்கினான் குடியானவன்.

"அவர்களுக்கு நன்றி செலுத்த வேண்டியது நம் முடைய கடமைதான். அதை நான் இல்லையென்பேனா? அவர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமானால் அவர்களை இங்கே வைத்திருக்கக் கூடாது. அந்தச் சோல்ஜர் அடிபட்ட இடத்துக்கு மிகவும் சமீபமாக உள்ளது இந்தக் கிராமந்தான். அவர்கள் முதலில் இங்கேதான் சோதனை செய்ய வருவார்கள். அடையாளம் காட்ட அடிபட்ட சோல்ஜரும் வந்தாலும் வரலாம். அவன் உங்கள் மகளை அடையாளம் கண்டு கொள்வான். அதனால் உங்களைத்தான் அந்தப் பர்மியர்கள் இருக்குமிடத்தைச் சொல்லும்படி இம்சிப்பார்கள். இங்குள்ள எல்லா இடங்களையும் ஒன்றுவிடாமல் சோதிப்பார்கள். தோட்ட வீட்டை மட்டும் விட்டுவிட மாட்டார்கள். அதனால் நான் சொல்லுவதைக் கேளுங்கள். அந்த உபகாரிகளைத் தப்ப வைக்க வேண்டுமானால் இன்று இரவுக்குள் அவர்களைக் கடத்தி விடவேண்டும். பொழுது விடிந்துவிட்டால் அவர்கள் தப்பித்துக் கொள்ளவே முடியாது" என்றான் மைத்துனன். அது உண்மைதான் என்று அந்தக் குடியானவன் உணர்ந்தான். உடனே "அதற்கு என்ன செய்யலாம்?" என்றான்.

"அவர்களையும் தப்பித்துக் கொள்ளச் செய்து நாமும் தப்பித்துக்கொள்ள வேண்டுமானால் ஒரே ஒரு வழிதான் உண்டு. அது என்னவென்றால், இருக்கிற உணவை உடனே அவர்களுக்குத் தந்து அவர்களைச் சீக்கிரம் சாப்பிடச் செய்ய வேண்டும். அதன் பிறகு முதலில் அவர்களுடைய பச்சை ஊதா உடைகளை மாற்றிச் சாதாரணமாக இந்த நாட்டு ஏழை மக்களைப் போல் உடை தரித்துக்கொள்ளச் செய்ய வேண்டும்.

அந்தப் பச்சை, ஊதா லுங்கிகளைக் குழி தோண்டி மண்ணில் மறைத்துவிட வேண்டும். அந்தக் கைத்துப்பாக்கி அவர்களிடம் இருந்தால் அதையும் புதைத்துவிட வேண்டும். அல்லது கண்டுபிடிக்க முடியாத இடத்தில் எறிந்து விட வேண்டும். அவர்கள் உடனே புறப்பட்டு மேற்குப் பக்கத்துப் பள்ளத்தாக்குக்குப் போகிற கொடித்தடத்தில் போய், அங்குள்ள வயல்களின் வழியாகக் கௌஹத்திக்குப் போய் அவர்கள் விருப்பப்படி எங்கே வேண்டுமானாலும் போய்க்கொள்ளலாம்,'' என்றான் மைத்துனன்.

''ஆமாம். அது நல்ல யோசனைதான். நானும் அவர்களை அந்த வழியில் இந்தியாவுக்குப் போகச் சொல்லலாம் என்றுதான் எண்ணியிருந்தேன். ஆனால், இப்போது உடனே இருட்டில் அனுப்பினால் அவர்களுக்கு வழி தெரியாதே!'' என்றான் குடியானவன்.

''நான் என்னுடைய பண்ணையாட்களில் ஒருவனை அவர்களுக்குத் துணையாக அனுப்புகிறேன். நான் உடனே வீட்டுக்குப் போய் அந்த இருவருக்கும் மாற்று உடைகள் கொண்டுவருகிறேன். அதற்குள் அவர்களுக்கு ஆகாரம் கொடுத்துப் பயணத்துக்குத் தயாராகச் செய்து வையுங்கள் என்று மைத்துனன் எழுந்தான். உடனே திரும்பி ''இன்னொன்று சொல்ல மறந்துவிட்டேன். நாளைக்கு சோல்ஜர்கள் யாராவது வந்து பெண்ணை அடையாளம் கண்டுகொண்டு கேட்டாலும், அவள் தனக்கு உதவி செய்து, சோல்ஜரை அடித்தவர்கள் அப்போதே தெற்குப் பக்கமாகத் துப்பாக்கியோடு ஓடிவிட்டதாகச் சொல்லும்படி இப்போதே சொல்லி வையுங்கள்'' என்று ரகசியமாகச் சொல்லிவிட்டுப் போய் விட்டான்.

உடனே அந்தக் குடியானவன் வீட்டுக்குள் சென்று, மனைவியும் மகளும் தயார் செய்துகொண்டிருந்த உணவுகளை வெந்ததும் வேகாததுமாக எடுத்து வரச்செய்து தோட்ட வீட்டுக்குப் போனான். அங்கே முனிஜியும் சையத்காதரும் மூச்சுவிடக்கூட முடியாமல் திணறிக் கொண்டிருந்தார்கள். சோல்ஜர் குத்தின குத்துகளின் வலி சையத்காதருக்கு அப்போதுதான் அதிகப்பட்டது.

கதவின் பூட்டு திறக்கப்படுகிற ஓசையைக் கேட்டு உள்ளம் பூரித்தார்கள். ஒரு வெகு மங்கலான கைவிளக்குடன் குடியானவன் குடிசைக்குள் வந்தான். அவனுக்குப் பின் அவனுடைய மனைவி உணவுத் தட்டுகளைச் சுமந்து கொண்டு நின்றாள். அவளுக்குப் பின்னால் அந்தப் பெண் தண்ணீர்ச் செம்புடன் வந்தாள். குடியானவன் பலகைகளுக்கு முன்னால் பரப்பிய சாமான்களையெல்லாம் வெகு அவசரமாக அப்புறப்படுத்திப் பலகைகளையும் ஒவ்வொன்றாக எடுத்து வேறிடத்தில் அடுக்கி விட்டுப் பக்கத்தில் உட்கார்ந்து வெகு சுருக்கமாக நிலைமையை விளக்கினான். அதைக் கேட்ட அவ்விருவரும் காதில் அமிர்தத்தை ஊற்றியதுபோல் ஆனந்தமடைந்தார்கள். வீட்டுக்காரர் விரும்பியபடியே வெகு விரைவில் உணவை உண்டுவிட்டு அங்கேயே குடியானவனுக்கும் அவன் மனைவிக்கும் மகளுக்கும் வந்தனம் சொல்லிவிடை பெற்றுக் கொண்டார்கள். பெண்களிருவரும் போனபிற்பாடு குடியானவன் கைத்துப்பாக்கியைப் பற்றிக் கேட்டான். முனிஜி உடனே அது தன்னிடத்தில் இருப்பதாக ஒத்துக்கொண்டு அதை அவர்களிஷ்டப்படி எங்கே வேண்டுமானாலும் எறிந்துவிடச் சம்மதித்தான்.

சிறிது நேரத்தில் குடியானவனுடைய மைத்துனன் சொல்லிவிட்டுப் போனபடியே மாற்று உடைகளுடன் அங்கே வந்து சேர்ந்தான். இருவரும் லுங்கிகளையும்

பர்மியர் மாதிரித் தலையிற் கட்டியிருந்த துணிகளையும் களைந்துவிட்டு ஏழைக் குடியானவர்கள் மாதிரி உடை தரித்துக்கொண்டு, லுங்கிகளையும் கைதுப்பாக்கியையும் கொடுத்துவிட்டார்கள். வழிகாட்டித் துணைபுரிய ஒரு பண்ணையாளும் வந்திருந்தான்.

விடை பெற்றுக் கொண்டார்கள். முன்னே வந்த வாசல் வழியாகப் போகாமல் அந்தத் தோட்டத்தின் பின் புறத்திலிருந்த ஒரு தட்டிக் கதவைத் திறந்துகொண்டு அதன் வழியாக அந்தப் பண்ணையாள் இவர்களுக்கு வழிகாட்டி அழைத்துக்கொண்டு போனான். மணி பத்துக்குப் பக்கமாக இருக்கும். அந்த வழி மரங்களடர்ந்ததாக இருந்ததால் நட்சத்திரங்களின் ஒளி கூட இல்லாமல் இருள் மிகுந்ததாக இருந்தது. வழிகாட்டியின் கையை சையத் பிடித்துக்கொண்டு, சையதின் கையை முனிஜி பிடித்துக்கொண்டு அடிமேல் அடி வைத்து நடக்கவேண்டியிருந்தது. விளக்குக் கொண்டு போனால் அதன் அசைவினால் யாரோ போகிறார்கள் என்பதை வெகு தூரத்திலிருந்தும் பிறர் கண்டுகொண்டால் அபாயமுண்டாகுமென்று விளக்கே கூடாதென்று குடியானவனின் மைத்துனன் சொல்லியிருந்தான்.

சுமார் ஒரு மைல் தூரம் அப்படி நடந்து மணிபுரி தடத்துக்கு வந்தார்கள். அந்தத் தடத்தின் குறுக்கே சென்று, தென் புறமாகப் போகிற ஒரு கொடித்தடத்தில் வெகு கஷ்டப்பட்டுக்கொண்டு ஐந்து மைல் தூரம் போனபின் வயல்களின் வரப்புகள் மீதும் வதிகளிலும் சுமார் மூன்று மைல்தூரம் நடந்து இன்னொரு கொடித் தடத்தைப் பிடித்தார்கள். தடம் சற்றே அகலமான தடமாக இருந்தது. நட்சத்திர வெளிச்சமுள்ள சம வெளியாக இருந்ததால் வழி கண்ணுக்குப் புலப்படக் கூடியதாக இருந்தது. அந்தத் தடத்தில் பதினேழு

மைல் நடந்து பொழுது விடிகிற சமயத்தில் கௌஹத்திக்குப் போகிற ராஜபாட்டையை அடைந்தார்கள். அவர்களை அங்கே விட்டுவிட்டுத் திரும்பி வரும்படியாகத் தான் அந்தப் பண்ணையாளின் எஜமானனின் உத்தரவு. அவன் விடைபெற்றுக் கொண்டான். அவனுக்கு வெகு மதியாக இருபது ரூபாய் கொடுக்கப்பட்டது. அவன் அவ்வளவு பெரிய தொகையை எதிர்பார்த்தவனல்ல. அடக்க முடியாத பூரிப்புடன் அதை வாங்கிக் கொண்டு பலமுறை குழைந்து குழைந்து கும்பிட்டுவிட்டுப் போய் விட்டான். அந்தப் பாட்டையில் அடிக்கடி பஸ்கள் போகும். அங்கிருந்து கௌஹத்திக்குப் போகும் வழியில் அடுத்த பெரிய ஊர் எதுவென்று விசாரித்துக் கொண்டு பஸ்ஸுக்காகக் காத்திருந்தார்கள். சிறிது நேரத்தில் ஒரு பஸ் வந்தது. அதில் ஏறி அடுத்த பெரிய ஊரில் போய் இறங்கிக் கொண்டார்கள். அவர்கள் அணிந்திருந்த எளிய உடைகளால் அவர்களைக் கவனிப்பவர்கள் யாருமில்லை. இறங்கின இடத்திலிருந்த ஒரு டீக்கடைக்குப் போய் அங்கே காலை ஆகாரம் உட்கொண்டபின் முதல் வேலையாகத் தபால் ஆபீசுக்குப் போனார்கள். இரண்டு தபால் 'கவர்களை' வாங்கிக் கொண்டு, கடைவீதிக்குப் போய் ஒரு கடையில் கடுதாசியும் பேனாவும் வாங்கி இருவரும் அவரவர் வீட்டுக்குக் கடிதம் எழுதினார்கள்.

முன் சிறையிலிருக்கும் போது, அவர்களைச் சுட்டுக் கொல்லுவதற்குமுன் அவர்கள் உறவினர்களைப் பார்க்க விருப்பமா என்று டங்கன் துரை கேட்டானல்லவா? அதன்படி அவர்கள் தம்முடைய குடும்பத்தாரை வர வழைக்கும்படி டங்கன் துரையைக் கேட்டுக் கொண்டார்கள். டங்கன் துரையும் அவர்களை வரும்படி ஏற்பாடு செய்வதாகச் சொல்லியிருந்தார். இப்போது இவர்கள்

இப்படி வந்துவிட்டதால், குடும்பத்தார் பர்மாவுக்குப் போய் அவதிப்பட வேண்டாம் என்பதைக் குடும்பத்துக்கு அறிவித்து விடத்தான் இந்த அவசரக் கடிதங்கள். அந்தக் கடிதங்களைத் தபாலில் போட்டுவிட்டு ஒரு ஓட்டலில் தங்கி மத்தியான சாப்பாட்டுக்குப் பின் கௌஹத்திக்குப் பயணமானார்கள்.

சிக்கிக் கொண்டார்கள்

சுங்கரன் முதலானவர்கள் தப்பி ஓடி நான்கு மாதங்களாகிவிட்டன. ஒரு துப்பும் கிடைக்கவில்லை. சங்கரலிங்கன் சிறையிலிருந்து தப்பி ஓடிவிட்டதிலிருந்து டங்கன் துரைக்குச் சரியான தூக்கமே இல்லை. மிகப் பெரிய தோல்வியடைந்துவிட்டவனைத் துக்கப்பட்டுக் கொண்டே யிருந்தார். தம்முடைய ஆண்மையும் ஆற்றலும் அழிந்து போனதுபோல் அவதியுற்றார். நேதாஜியின் மேல் அவருக்கிருந்த வெறுப்பு முழுவதையும் சங்கரலிங்கத்தின் மீது திருப்பியிருந்த டங்கன் துரை, நேதாஜியைச் சுட்டுக் கொல்லக் கிடைக்காத மனக்குறையை "ஷங்கர்ஜி"யைச் சுட்டுக் கொல்லுவதால் தீர்த்துக் கொள்ளலாம் என்றே எண்ணியிருந்தார். எப்படியாவது அந்த "ஷங்கர்ஜி"யைப் பிடித்துவிட வேண்டுமென்று இரவு பகலாக அதற்கான திட்டங்களையே சிந்தித்துக்கொண்டிருந்தார். அதற்காக இங்கிலீஷ் ஏகாதிபத்தியத்திற்குள்ள எல்லா வல்லமைகளையும் ஏவினர்.

மிகச் சிறிய குற்றத்துக்காகத் தண்டிக்கப்பட்டவனுங்கூட சிறையிலிருந்து தப்பி ஓடிவிட்டால் இங்கிலீஷ்காரன் ஆட்சியில் வெகுநாளைக்குச் சிக்காமல் இருந்துவிட முடியாது. அப்படியிருக்க இங்கிலீஷ் ஏகாதிபத்தியத்தை மட்டுமின்றி, இங்கிலாந்தின் வாழ்வையே அழித்துவிடக்கூடியதாக இருந்த யுத்தத்தில் ஹிட்லருக்குத் துணையாக ஜப்பானியருடன் சேர்ந்துகொண்டு

இப்படிச் சதிசெய்துவிட்டவர்கள் இராணுவச் சிறையி லிருந்து ஓடிவிட்டதைச் சும்மாவிட்டு விடுவார்களா?

பர்மாவின் கடற்கரையிலிருந்து மீன் பிடிக்கக் கட லுக்குள் போகிற சிறு சிறு படகுகளும்கூட ஒன்றுவிடா மல் சோதிக்கப்பட்டன. வியாபாரக் கப்பல்களும் பிர யாணிகள் கப்பல்களும் வெகு நுணுக்கமாகச் சோதிக்கப் பட்டன. இந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள எல்லாத் துறைமுகங்களிலும் வருகிற எல்லாக் கப்பல்களையும் சோதிக்க வென்று அங்கங்கே இராணுவ அதிகாரிகளும் போலீஸ் அதிகாரிகளும் பிரத்தியேகமாக நியமிக்கப்பட் டார்கள். பர்மாவிலும் இந்தியாவிலும் இலங்கையிலு முள்ள எல்லா போலீஸ் கச்சேரிகளுக்கும் புகைவண்டி நிலையங்களுக்கும் விவரமான தகவல்கள் அனுப்பப்பட் டன. முக்கியமான இடங்களுக்கு ஷங்கர்ஜி, சையத் காதர், முனிஜி ஆகிய மூவருடைய போட்டோ படங்க ளும் அங்க மச்ச அடையாளங்களும் அனுப்பப்பட்டன. அந்த அடையாளங்கள் பத்திரிகைகளிலும் விளம்பரப் படுத்தப்பட்டன. (1) ஷங்கர்ஜி—நல்ல சிவந்த நிறம் (ஆனால் சிறைவாசத்தால் மங்கியது). உயரம்-ஐந்து அடி ஆறு அங்குலம். கனம்-சிறைவாசத்தால் மெலிந்தது. வலது தோளில் முன்புறத்தில் கோழிமுட்டை வடிவமான அரைக்கால் அங்குலம் நீளமுள்ள ஒரு மச்சம். இடது கையில் 'மங்களம்' என்ற தமிழ் எழுத்துக்கள் சித்திர வேலைப்பாடுகளுடன் பச்சை குத்தப்பட்டிருக்கும். (இது மிகவும் முக்கியமானது. காதுகளில் கடுக்கன் துவாரங் கள்.) (2) முனிஜி-நல்ல சிவந்த நிறம். உயரம்-ஐந் தடி ஆறரை அங்குலம். வலது கண் புருவத்துக்கு மேல் அரை அங்குல நீளமுள்ள வெட்டுக்காயம் ஆறிப்போன தழும்பு. இடது மார்பின் மத்தியில் முக்கோண வடிவ முள்ள ஒரு மச்சம். இடது கைப் பெருவிரலில் வெளிப்

பக்கத்தில் ஒரு வட்டமான புள்ளி, துவரம் பருப்பின் அளவில். உயரத்துக்குத் தக்க கனம். (3) சையத்காதர்-சற்று மங்கலான சிவப்பு. உயரம் ஐந்தடி ஏழு அங்கு லம். உயர்ந்து கூர்மையான மூக்கு. இடது கண்ணின் வெள்ளை முழியில் மூக்குப் பக்கத்தில் ஒரு கருப்புப் புள்ளி. முன்னம் பற்கள் இரண்டில் வலது பல் இடது பல்லின் மேல் ஏறியிருக்கும். உயரத்துக்குத் தகுந்த கனமும் இடது துடையின் உட்புறத்தில் சிலந்திக்காக ஆபரே ஷன் செய்து ஆறிப்போன தழும்பு, இரண்டங்குல நீளமும் கால் அங்குல அகலமும் உள்ளதாக இருக்கும். (4) இவர்களைக் கண்டுபிடிக்கிறவர்களுக்கும், கண்டு பிடிக்க உளவு சொல்கிறவர்களுக்கும் ரூபாய் ஐம்பதினா யிரம் வெகுமதியளிக்கப்படும். குறிப்பாக ஷங்கர்ஜி என் பவனைப் பிடித்துத் தருகிறவர்களுக்குத் தனிச் சிறப்பு கள் தரப்படும்.

இந்த விளம்பரம் எல்லா பத்திரிகைகளிலும் வெளி யிடப் பட்டது. வசந்தபுரியில் சங்கரலிங்கத்தின் தந்தை கோபாலகிருஷ்ணருடைய மாளிகையும், விருதூரிலுள்ள அவனுடைய மாமனார் மகாதேவருடைய மனையும், பூனாவி லுள்ள முனிஜியின் குடும்பத்தாருடைய வீடும், திருச்சி ராப்பள்ளியிலுள்ள சையத்காதருடைய தாயாரும் சகோ தரரும் வசித்து வந்த வீடும் இரவு பகலாக இரகசியப் போலீஸாரால் கண்காணிக்கப்பட்டு வந்தன. சங்கர லிங்கனுடைய தந்தை கோபாலகிருஷ்ணர் மிகவும் செல் வாக்குடையவரானதால் அவரையும் அவருடைய வீட் டையும் கண்காணிக்க உள்ளூர் போலீசாரை நியமித் தால் அவர்கள் அவருக்குச் சலுகை காட்டினாலும் காட்டலாம் என்று சென்னையிலிருந்தே மிகவும் நம் பிக்கையுள்ள துப்பறியும் நிபுணர்கள் பிரத்யேகமாக நியமிக்கப்பட்டிருந்தார்கள். ஆனாலும் கோபாலகிருஷ்ண

ருடைய வீட்டுக்குள் யாரார் இருக்கின்றார்கள், அங்கே என்ன நடக்கிறது என்பனவற்றைப் பற்றிய உளவு கூறைத் துப்பறியும் நிபுணர்களால் அனுமானிக்கவும் முடியவில்லை. மங்களாம்பாளுடைய ஜாதக தோஷத்தால் யுத்தம் நடத்துகிற பட்டாளத்திலிருந்த மகன் இறந்து போயிருப்பானே என்ற அச்சம் உதித்துவிட்ட நாளிலிருந்து, கோபாலகிருஷ்ணருடைய மாளிகை குடியில்லாத வீடுபோல் காட்சியளித்தது. முன்னெல்லாம் அந்த வீட்டின் தலைவாசல் இரவு பன்னிரண்டு மணி வரையிலும்கூடத் திறந்திருக்கும். இப்போது பகலிலும் கூட அடைபட்டே கிடந்தது. முன்பெல்லாம் விடிகிற வரைக்கும் அந்த மாளிகையைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் மிகப் பிரகாசமுள்ள விளக்குகள் எரிந்துகொண்டிருக்கும். ஊரில் வெகு தூரத்திலிருப்பவர்களுக்கும் அந்த மாளிகையின் உச்சி இரவிலும் காணக் கூடியதாக விளங்கும். இப்போது அது இருளில் முழுகியிருந்தது. அந்த வீட்டின் சாளரங்களெல்லாம் இரவிலும் திறந்திருக்கும். உள்ளேயிருக்கும் ஒளியினால் அங்கே நடமாடுகின்றவர்களின் உருவத்தையும் அடையாளத்தையும் கூட அறியலாம். இப்போது வீதிப்புறங்களிலிருந்த எல்லா சாளரங்களும் மூடப் பெற்று, உள்ளே வெளிச்சம் இருக்கிறதா என்பதைக்கூட அறிய முடியாமலிருந்தது. வீட்டுக்கு வருகிறவர்கள், அங்கிருந்து போகிறவர்கள், வேலைக்காரர்கள் எல்லாரும் இப்போது அந்த வீட்டுக்குப் பின்புறத்திலிருந்த வாசலின் வழியாகப் போவதும் வருவதுமாக இருந்தது. அந்நல்வழி ஒரு சந்தில் அமைந்திருந்ததால் துப்பறிய நியமிக்கப்பட்டவர்கள் மறைந்திருந்து கண்காணிக்க இடமில்லாதிருந்தது. முன்பெல்லாம் கோபால கிருஷ்ணர் ஏதாவது ஒரு வேலையாக எந்த நேரத்திலும் வெளியே போவார். அதற்காக

அவருடைய மோட்டார் வண்டி வாசலில் இருந்து கொண்டே யிருக்கும். இப்போது அவர் மகனைப்பற்றிய விசனத்தால் வெளியே போவதே அரிதாகிவிட்டது. அப்படிப் போனாலும் பின்புறத்திலிருந்த மோட்டார் ஷெட்டுக்குப் போய் அங்கிருந்தே வண்டியேறிப் போய், மீண்டும் அங்கேயே வந்து இறங்கிப் பின்புறக் கதவின் வழியாக வீட்டுக்குள் போய் விடுவார்.

சங்கரலிங்கன் சௌக்யமாக வந்து சேரவேண்டுமென்று தினந்தினம் கோவிலுக்குப் போய் அபிஷேக ஆராதனைகள் செய்து வந்த அன்னபூரணியம்மாளையும் இப்போது வெளியில் காண முடிவதில்லை. அந்த அம்மாள் மகனுடைய ஏக்கத்தால் அசௌக்கியமாக இருப்பதாக அக்கம்பக்கத்தார் சொல்வதைத் தவிர வேறொன்றும் அறிய முடியவில்லை. அன்னபூரணியம்மாளுடைய உத்தம குணத்தால் அவள்மீது அனுதாபமுள்ள உள்ளூர்ப் போலீஸார் உண்மையாகவே அந்த அம்மாளைக் காணப் பெருமல் கவலைப்பட்டார்கள். சங்கரனுடைய மனைவி மங்களாம்பாள் எந்நேரமும் மாமியாருக்கு அருகிலிருந்து பணிவிடைகள் செய்துகொண்டிருந்ததால் அவளும் காணக் கிடைப்பதில்லை. இப்படியாகக் கோபாலகிருஷ்ணருடைய மாளிகை மர்மம் நிறைந்ததுபோல் மதிக்கும்படி இருந்தது. அதனால் வெளியூரிலிருந்து நியமிக்கப்பட்ட துப்பறியும் நிபுணர்கள் அந்த வீட்டில் சங்கரலிங்கன் இருப்பதாகவே சந்தேகித்தார்கள். அந்த வீட்டைச் சோதனை செய்ய அதிகாரம் பெற வேண்டுமென்று அவசரப்பட்டார்கள். நிச்சயமான துப்புக் கிடைக்கிறவரைக்கும் அப்படிச் சோதனை போடக் கூடாதென்று உள்ளூர் அதிகாரிகள் நிதானப் படுத்தினார்கள்.

உண்மையாகவே, சென்னையிலிருந்து அதற்கென்றே அனுப்பப்பட்ட துப்பறியும் போலீசாரைத் தவிர, அங்கிருந்த தலைமை அதிகாரிகள் பலரும் கோபால கிருஷ்ணருக்கு வேண்டியவர்கள். சங்கரலிங்கனைப் பற்றிய அனுதாபமும் அவர்கள் உள்ளத்தில் உண்டு. அத்துடன் அந்தச் சமயத்தில் ஜில்லா கலெக்டராக இருந்தவர் ஒரு இந்தியர். அவர் சிறு வயதில் வெகு தீவிரமான தேச பக்தராக இருந்தவர். உத்தியோகத்துக்கு வந்த பின்னும் வெள்ளைக்கார ஆதிக்கியத்தில் வெறுப்புள்ளவர். யுத்தம் நடந்தபோது நேதாஜி சுபாஷ் சந்திரபோசின் தீரத்தை மெச்சி மனதுக்குள்ளேயே மகிழ்ந்துகொண்டிருந்தவர். அதனால் சங்கரலிங்கனைப் பிடிப்பதற்கு உதவியாக இருப்பதைவிட சங்கரன் பிடிபடாமலிருப்பதற்கு உதவக்கூடிய மனப்பான்மையுடையவர். சங்கரலிங்கன் சிறையிலிருந்து ஓடி வந்து நான்கு மாதங்களாகி விட்டதால், அவன் எப்படியோ வந்து சேர்ந்து, அவனுடைய சொந்த வீட்டில் இப்போது இருப்பதாகவே நினைக்கும்படி கோபால கிருஷ்ணருடைய வீட்டின் சூழ்நிலை நிர்ப்பந்த முண்டாக்கியது. கடந்த ஒரு வருஷத்துக்கும் அதிகமாகக் கொஞ்சங் கொஞ்சமாகப் பொலிவிழந்து வந்த கோபாலகிருஷ்ணருடைய மாளிகை இப்போது முற்றிலும் இருள் சூழ்ந்ததுபோல் இருந்தது. அதனால் பலபேர் பலவிதமாக நினைக்க நேர்ந்து விட்டதில் வியப்பில்லை. போலீஸ்காரர் சங்கரலிங்கன் அங்கே வந்து ஒளிந்துகொண்டிருப்பதால்தான் அந்த வீடு அப்படி மூடிக் கிடப்பதாக எண்ணினார்கள். இன்னும் சிலர் மங்களாம்பாளுக்கு யாரோ ஒரு சீக்கியத் துறவி செய்து விட்ட மானக் கேட்டால், அவள் விருதூரிலிருந்து அங்கே வந்த பிறகுதான் அந்த வீடு அப்படி மூடிக் கிடக்கிறதாகச் சொன்னார்கள். வேறு சிலர் அன்னபூரணி

யம்மாள் அசௌக்யமாக இருப்பதைப்பற்றி விசாரிக்க அனுதாபங்கொண்டு ஊரார் கூட்டங் கூட்டமாக அடிக்கடி வீட்டுக்குள் வந்து விடுகிற தொந்தரவை விலக்குவதற்காக அப்படி அடைபட்டு இருப்பதாக நினைத்தார்கள்.

சங்கரலிங்கத்தின் வீட்டைச் சோதனை செய்யும் முயற்சிகள் இப்படியிருக்க, சையத்காதருடைய வீட்டைக் கண்காணித்து வந்த போலீசாரின் செய்கையைப் பார்ப்போம்.

சையத்காதர் பொருளாதார முறையில் நடுத்தர வகுப்பைச் சேர்ந்த குடும்பத்தில் பிறந்தவன். அவனுடைய குடும்பத்தார் திருச்சிராப்பள்ளியில் வசித்து வந்த வீடு, சங்கரலிங்கன் மனையைப் போன்ற மாளிகையல்லவென்றாலும் நல்ல கட்டிடந்தான். மாடியிலும் இரண்டு அறைகள் உள்ளது. அந்த வீடு பக்கத்திலோ, பின்புறத்திலோ, சந்து பொந்துகள் இல்லாதபடி அமைந்திருந்தது. கண்காணிக்கும் போலீசாருடைய கண்ணிற் படாமல் அந்த வீட்டுக்குள் யாரும் போகவும் முடியாது; அதிலிருந்து வரவும் முடியாது. மறைந்திருந்து கொண்டு அந்த வீட்டைக் கவனிப்பதற்கு, அந்த வீதியின் எதிர் வரிசையிலுள்ள வீடுகளிலும், அந்த வீட்டின் அண்டை வீடுகளிலும் போலீசாருக்குப் போதிய வசதிகள் இருந்தன. அன்றியும் அந்த வீதி எப்போதும் ஜனப்புழக்கம் மிகுந்துள்ள இடமானதால் சாதாரண உடையில் மறைந்து வரும் ரகசியப் போலீசார் பிறருடைய கவனிப்புக்கு ஆளாகாமல் அங்கே வேலை செய்ய முடியும். வசந்தபுரியில் சங்கரலிங்கன், உத்தமியென்று ஊரார் வணங்கும் அன்னபூரணி அம்மாளின் அருமைப் புதல்வன். மிக நல்லவன் என்று பெயரெடுத்து ஊராருடைய அன்பிற்கும் அனுதாபத்துக்கும் பாத்திர

மானவன். அதனால் அவனைப் பற்றிய ரகசியங்களை அறிந்திருந்தாலும் அங்கே யாரும் உளவு சொல்லமாட்டார்கள். ஆனால் திருச்சிராப்பள்ளியில் சையத்காதருடைய நிலைமை முற்றிலும் வேறு. அவன் சிறு வயதில் கோஷா வீட்டுப் பையனாக வளர்ந்தவன். பட்டணத்தில் அவனுடைய அத்தை வீட்டில் படித்துக்கொண்டிருந்தவன். அங்கிருந்தே பட்டாளத்துக்குப் போய் விட்டவன். அதனால் திருச்சியில் அவனுடைய குடும்பத்தார் வசிக்கும் வீதியிலேயே அவனைப் பற்றி அறிந்தவர்கள் வெகு சிலரே. அவனைப் போலீசார் தேடுகிறார்கள் என்பதும் அக்கம்பக்கத்தாருக்குத் தெரியாது. மேலும் திருச்சியிலுள்ள போலீஸ் சூப்பரிண்ட் ஒரு ஆங்கிலேயர். சங்கரலிங்கன் வீட்டைச் சோதனை செய்ய வேண்டுமென்று துடிக்கும் ரகசியப் போலீசாரை வசந்தபுரி போலீசார் நிதானிக்கச் சொன்னதைப் போன்ற நிலைமையும் இங்கில்லை. அதனால் சையத்காதருடைய வீட்டைப் போலீசார் வெகு நன்றாகக் கவனிக்க முடிந்தது.

சையத்காதரின் தகப்பனாரும் பட்டாளத்தில் சுபேதாராக இருந்து பென்ஷன் பெற்றவர். அவருக்கு ஐந்து பெண்களும் நான்கு ஆண்களும் மக்கள். சையத்காதர் தான் கடைசிக் குழந்தை. தமக்கைகளும் அவர்களுடைய குழந்தைகளும் அடிக்கடி அங்கே வந்து தங்குவார்கள். அண்ணன்மார்களின் மனைவிகளும் அவர்களுடைய குழந்தைகளும் சேர்ந்து, வீட்டில் எப்போதும் கூட்டம். சையத் காதரின் தகப்பனார் இல்லை. எழுபத்தைந்து வயதான தாயார் மட்டும் அசௌகியமாக இருந்தார்.

சையத்காதருடைய கடைசித் தமக்கை ஹைதராபாத்தில் வாழ்க்கைப் பட்டிருந்தாள். அவளுடைய கணவனுக்கு நிஜாம் அரண்மனையில் நல்ல உத்தியோகம். ஒரு

நாள் இரவு எட்டு மணிக்குமேல் சையத்காதருடைய குடும்பத்தார் வசிக்கிற திருச்சி வீட்டுக்கு முன்னால் ஒரு மோட்டார்கார் வந்து நின்றது. அதிலிருந்து தலையில் துருக்கிக் குல்லாய் அணிந்த ஒரு ஆண்பிள்ளை முதலில் இறங்கினான். அவன் முப்பது வயதுக்கு அதிகப்படாத வனைக் காணப்பட்டான். மோட்டாரின் முன்பக்கத்திலிருந்து இறங்கிவந்த அவன் மோட்டாரின் பின்பக்கத்துக் கதவைத் திறந்தான். பின்னாலிருந்து இரண்டு கோஷாப் பெண்கள் இறங்கினார்கள். அவர்கள் தலையிலிருந்து கால்வரையிலும் மூடுகின்ற புர்தா அணிந்திருந்தார்கள். அந்தப் புருதாப் பெண்களில் முதலில் வண்டியைவிட்டு இறங்கியவள் மிக்க இளம் வயதுள்ளவள் என்பது அவள் குதித்து இறங்கிய வேகத்திலிருந்து தெரிந்தது. அவளுக்குப் பின்னால் வெகு நிதானமாகக் கோலை ஊன்றிக்கொண்டு இறங்கியவள் ஒரு கூன் விழுந்த கிழவியென்றும் தெரிந்தது. பெண்கள் இருவரும் வீட்டுக்குள் போனபிறகு, அந்த ஆண்பிள்ளை மோட்டார் டிரைவரோடு வாடகையைப்பற்றியோ என்னமோ நிதானமாகப் பேசிக்கொண்டு நின்றான். அந்த வீதியின் எதிர் வரிசையிலிருந்து, இதைக் கவனித்துக்கொண்டிருந்தரகசியப்போலீஸ்காரன் மெதுவாகவந்து மோட்டார் காரை வேடிக்கை பார்ப்பதுபோல் மோட்டாரில் வந்திறங்கிய புது மனிதனைக் கூர்ந்து கவனித்தான். அந்தப் புது மனிதனுடைய உயரமும் நிறமும் சையத்காதரைப் பற்றி விளம்பரப்படுத்தப்பட்ட உயரத்துக்கும் நிறத்துக்கும் ஒத்தன போன்று இருந்தன. அவன் சையத் காதராகத்தான் இருக்கவேண்டுமென்று போலீஸ்காரன் எண்ணினான். ஆனால், இந்தப் புது மனிதனுக்கு சையத் காதருடைய போட்டோ படத்திலிருந்தமாதிரி மீசையும் தாடியும் இல்லை. என்றாலும், தன்னுடைய அடையா

ளத்தை யாரும் கண்டு கொள்ளாதிருப்பதற்கு சையத் காதர் அப்படித் தாடி மீசைகளைச் சிரைத்துக்கொண்டிருக்கலாம் என்பதும் போலீஸ்காரன் புத்தியில் பட்டது. உடனே அவனைப் பிடித்துச் சோதித்துவிடத் துடிதுடித்தான். ஆனால், அதற்கு வேண்டிய பக்கபலம் அப்போது அங்கில்லை. நான்கு மாதங்களாகப் பலபேர் அந்த வீட்டைக் கண்காணித்து அலுத்துப்போயிருந்ததால் இவன் ஒருவன் மட்டுந்தான் அந்த நேரத்தில் அங்கே இருந்தவன். உடைதரித்த போலீசாரோ, ஆயுதம்தரித்த அதிகாரிகளோ இல்லை. அதனால் தான்மட்டும் தனியே அவனைப்பற்றி ஏதாவது விசாரித்தால், அதனால் அவன் எச்சரிக்கை கொண்டு மறைந்துவிடுவான் என்பதை உணர்ந்தான். இப்படி இவன் குழம்பிக்கொண்டிருக்கையில், அந்தப் புது மனிதன் வீட்டுக்குள் நுழைந்து கதவை மூடித் தாழிட்டுக் கொண்டான். அந்த வீடு போலீசாரின் கண்காணிப்புக்கு உட்பட்ட நாளாக அவ்வளவு சீக்கிரத்தில் அதன் வெளிக் கதவு தாழிடப் பட்டதில்லை. அதனால் போலீஸ்காரனுடைய சந்தேகம் பலப்பட்டது. மோட்டாரில் வந்து, இறங்கிய மனிதன் அந்த வீட்டில் வசிப்பவனல்ல. அந்த வீட்டில் வசித்து வந்த எல்லா ஆண்பிள்ளைகளையும் இந்தப் போலீஸ்காரன் கடந்த நான்கு மாதங்களில் நன்றாகப் பார்த்திருக்கிறான். வேறு எங்கோ இருந்து விருந்தாளிபோல அப்போதுதான் வந்து வீட்டுக்குள் நுழைந்தவன் உடனே கதவைத் தாழிட்டுக் கொள்ளவேண்டிய காரணமென்ன? அதனால், அந்தப் புதுமனிதன் சையத் காதராகத்தான் இருக்க வேண்டும் என்ற எண்ணம் உறுதி பெற்றது. சிறிது நேரத்துக்கெல்லாம் வெளியே போயிருந்த அந்த வீட்டு ஆடவர்கள் ஒவ்வொருவராக வீட்டுக்கு வந்தார்கள். அவர்கள் வெவ்வேறு சமயத்தில் வந்தார்கள். ஒவ்வொருவனும் கதவைத் தட்டவேண்டியிருந்தது. ஒவ்வொரு தடவையும் கதவைத் தட்டினவன் வீட்டுக்குள் நுழைந்தவுடன் கதவு தாழிடப் பட்டது. இது நாள் வரையிலும் அப்படி நடந்ததில்லை. இரவு பத்துப் பதினேரு மணி வரையிலும் அந்த வாசற்கதவு திறந்தே இருக்கும். வெளியே போயிருந்தவர்கள் அவரவர் சௌகரியப்படி வீட்டுக்கு வந்து சேருவார்கள். வரக்கூடியவர்கள் எல்லாரும் வந்தபின் படுக்கப்போகிற போதுதான் அந்தக் கதவு தாழிடப்படுவது வழக்கம். அது போலீஸ்காரருக்கு நன்றாகத் தெரியும். அதனாலும் சந்தேகம் அதிகப் பட்டது.

மறுநாள் அந்த வீடு முன்னிலும் அதிகமான கவனிப்புடன் கண்காணிக்கப்பட்டது. அந்த வீட்டின் இரண்டு பக்கங்களிலும் இந்துக்கள் வீடுகள். அந்தத் தெருவில் அது ஒன்றுதான் கோஷா வீடு. அந்த வீட்டின் கொல்லைப்புறம் அடுத்த தெருவு வரையிலும் நீண்டது. அங்கே ஒரு பலமான கதவு உண்டு. அந்தக் கதவும் போலீசாரால் கண்காணிக்கப்பட்டு வந்தது.

மாலை நான்கு மணி இருக்கும். ஒரு போலீஸ்'வான்' மோட்டார் வண்டி அந்த வீட்டின் தலைவாசலுக்கு முன்னால் வந்து நின்றது. அதிலிருந்து போலீஸ் சூப்ரண்டுரையும், ஒரு வெள்ளைக்கார சார்ஜெண்டும், எட்டு ஆயுதம் தரித்த இந்தியப் போலீஸ் ஜவான்களும் இறங்கினார்கள். கோஷா வீட்டைச் சோதிக்க ஒரு வெள்ளைக்காரப் பெண்ணும் வண்டியினின்று இறங்கினாள். மேலும் அந்த வண்டியில் நான்கு ஜவான்களும் ஒரு சார்ஜெண்டும் இருந்தார்கள். அவர்களை அடுத்த தெருவிலிருக்கும் இந்த வீட்டின் கொல்லைக் கதவைக் காவல் புரிய அங்கே கொண்டுபோய் இறக்கி விடுவதற்காக வண்டி போய்விட்டது. இறங்கிய ஜவான்களில் இரண்டுபேர் வாசலுக்கு

முன்னல் காவல் புரிய, மற்றவர்கள் உள்ளே நுழையப் போனார்கள்.

சார்ஜெண்ட் துரை மெதுவாகக் கதவைத் தட்டினார். அந்தச் சமயத்தில் அந்த வீட்டைச்சேர்ந்த ஆண் பிள்ளைகளெல்லாம் அவரவர் காரியமாக வெளியே போயிருந்தார்கள். அவர்களில் யாராவதுதான் வந்து கதவைத் தட்டுகிறார்களென்று கதவுக்குப் பக்கத்தில் பெருக்கிக் கொண்டிருந்த வேலைக்காரப்பெண் யோசனை பண்ணாமல் கதவின் தாழ்ப்பாளை நீக்கிவிட்டாள். உடனே அவளுக்கு நினைவு வந்தது. கதவை, யார் வந்து தட்டினாலும் தட்டுகிறது யாரென்று நிச்சயமாகத் தெரிந்துகொண்டு தான் திறக்கவேண்டும் என்று, வெகு கண்டிப்பாகச் சொல்லப்பட்டிருந்தது. அந்த நினைவு வந்து அவள் மறுபடியும் தாழ்ப்பாளைப் பூட்ட முயன்றாள். அதற்குள் கதவைத் தள்ளிக் கொண்டு போலீசார் திபுதிபுவென்று புகுந்துவிட்டார்கள். அவர்களைக் கண்டதும் அந்தப் பெண் பயந்து, நடுங்கி, அலறிக்கொண்டு உள்ளே ஓடினாள். அவள் போட்ட கூச்சலைக் கேட்டு, சையத்காதர் என்று சந்தேகிக்கப்பட்ட அந்தப் புதுமனிதனே ஓடிவந்தான். அவன் இவர்களைச் சந்திப்பதற்குள் போலீசார் அந்த வீட்டின் முன்கட்டில் நுழைந்துவிட்டார்கள். அங்கிருந்த கோஷாப்பெண்கள் பின்கட்டுக்கு ஓடினார்கள். 'நேற்று மோட்டாரில் வந்து இறங்கிய ஆசாமி இவன்தான்' என்பதுபோல முந்தின இரவு அந்தப் புதுமனிதன் வந்ததைப் பார்த்துக்கொண்டிருந்த ரகசியப் யோலீஸ்காரன் சூப்ரண்ட் துரைக்குச் சாடை காட்டினான். அதற்குள்ளாக அந்தப் புதுமனிதன்,

"கோஷாப் பெண்கள் இருக்கிற வீட்டுக்குள் உத்தரவில்லாமல் எப்படி நீங்கள் உள்ளே வரலாம்? புத்தியில்லை? போங்கள் வெளியே" என்று இங்கிலீஷில்

கத்திக்கொண்டே குபீரென்று வெகு வேகமாகப் பாய்ந்து, முன்னலிருந்த சார்ஜெண்டின் கழுத்தைப் பிடித்துத் தள்ளிவிட்டான். அப்படிப்பட்ட எதிர்ப்பை எதிர் பார்க்காத அந்த சார்ஜெண்ட் தட்டுக் கெட்டுத் தடுமாறிப் பின்னலிருந்த சுவரின் மீது மோதிப் பக்கத்திலிருந்த வாசற்படியில் விழுந்தான். அதைக்கண்ட சூப்ரண்ட் துரைக்குக் கடுங்கோபம் வந்துவிட்டது. இருந்தாலும் அதை அடக்கிக்கொண்டு, அந்த வீட்டைச் சோதனை செய்யத் தனக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிற வாரண்டைக் காட்டிக்கொண்டே அவனுக்கு முன்னல் வந்தார். ஆனல் வெறி பிடித்தவன் போலாகிவிட்ட அந்தப் புதுமனிதன் அந்த வாரண்டை லட்சியம் செய்வானா? சூப்ரண்ட் துரையின் கைகளோடு சேர்த்து மார்பையும் இறுகப் பிடித்துக்கொண்டு வீதி வாசற் புறமாகத் தள்ளிக்கொண்டுபோக முயன்றான். அவன் மிகுந்த பலசாலியாக இருந்ததனல் சூப்ரண்ட்துரை, அவனுடைய பிடிப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முடியாமல் திணறிப் போய்விட்டார். கீழே விழுந்து எழுந்த சார்ஜெண்டும் மற்ற ஜாவன்களுமாகச் சேர்ந்தும் எளிதில் விலக்கிவிட முடியவில்லை. சார்ஜெண்டுக்குக் கோபம் மிகுந்து, தன் கையை மடக்கிக் கொண்டு, அந்தப் புதுமனிதன் அள்ளைப் புறத்தில் பலமான ஒரு குத்து விட்டான். அந்தச் சமயத்தில் சூப்ரண்ட்துரையும் அவரைப் பிடித்திருந்தவனும் ஒரு வரையொருவர் இழுத்துக்கொண்ட இழுப்பின் காரணமாக இடம் மாறிவிட்டதால், அந்தக் குத்துக் குறி தவறி, சூப்ரண்ட் துரையின் முதுகின் மேலேயே விழுந்துவிட்டது. சார்ஜெண்டின் கை நடுங்கிவிட்டது. மற்ற ஜவான்களும் பயந்துவிட்டார்கள். அவர்களுக்கு ஆவேசம் வந்து விட்டது. அந்தப் புது மனிதனுடைய ஒவ்வொரு

காலையும் மூன்று ஜவான்கள் சேர்ந்து பிடித்து இரண்டு கால்களையும் பூமியை விட்டுத் தூக்கிக்கொண்டார்கள். அவனும் தன்னால் முடிந்தமட்டிலும் வெகு பலமாக உதைத்துப் பார்த்தான். கால்களை விடுவித்துக் கொள்ள முடியவில்லை. அதே சமயத்தில் அவனுடைய கால்களைக் கட்டிவிட ஒரு கயிறு கிடைக்குமாவென்று சுற்றிச் சுற்றித் தேடினான் சார்ஜெண்ட். அருகிலிருந்த சுவரில் ஒரு மூலையில் மாட்டப்பட்டிருந்த ஒரு தலைப்பாத் துணியைக் கண்டான். உடனே அதைத் தாவி எடுத்து முறுக்கிக் கால்களைக் கட்டிவிட்டான். ஊன்றி நிற்கக் கால்கள் இல்லாமற் போகவே அந்த புது மனிதனுடைய வேகம் குறைந்துவிட்டது. அப்படியும், இரண்டு கால் களையும் சேர்த்து உதைத்துக்கொண் டிருந்தான்.

ஏழு பேர்களை எதிர்த்து ஒரு மனிதன், அவன் எவ்வளவு பலமுள்ளவனாக இருந்தாலும், எவ்வளவு நேரம் மல்லுக்கட்ட முடியும்? அதுவும் இரண்டு கால் களும் கட்டுண்டபின்? கால்கள் இரண்டையும் கட்டிய படியே ஜவான்கள் தூக்கிப் பிடித்துக்கொண் டிருக்க, சூப்ரண்ட் துரை தரையில் உட்கார்ந்துகொண்டார். அதனால் தலைகீழாக இருந்துகொண்டு அந்தப் புது மனிதன் சூப்ரண்டைப் பிடித்திருந்த பிடிப்புத் தளர்ந்தே தீரவேண்டியதாகிவிட்டது. பிடி தளரவே சூப்ரண்ட் வெகு சுலபமாகத் தன்னை விடுவித்துக்கொண்டார். பிறகு எல்லாரும் சேர்ந்து அந்தப் புதுமனிதனை அமுக்கிக்கொண்டு, அவன் கைகளுக்கு விலங்கு பூட்டி விட்டார்கள். கைகளுக்கு விலங்கிட்டபின் கால்களை அவிழ்த்துவிட்டார்கள்.

வெறிகொண்ட கோபமும், விலங்கு பூண்ட வெட்கமும் மாறி மாறி, அந்த மனிதனுடைய முகத்தை

விகாரப்படுத்தின. அவனுடைய கண்கள் எதிரேயிருந்த போலீசாரைச் சுட்டெரித்துவிடுவன போலக் கனல் வீசின. வாயிலிருந்த வசைமொழிகள் வெளியில் வராதபடி உதடுகள் முணுமுணுப்புகளை உதிர்த்துக் கொண்டிருந்தன. நாகப்பாம்பு சீறுவது போல் மூச்சு விட்டுக்கொண்டு, முன்னால் இருந்த போலீஸ்காரரை முறைத்து முறைத்துப் பார்த்தான். கூட்டிலடைபட்ட சிங்கம் போல் நெஞ்சம் குமுற நின்றுகொண்டிருந்தான். அருகிலிலுள்ள அறைகளிலிருந்த கோஷாப் பெண்கள் அழுது கொண்டும் போலீசாரைத் திட்டிக்கொண்டும் எட்டியெட்டிப் பார்த்தார்கள். சிறுவர்களும் சிறுமியரும் பயந்து நடுங்கிப் பதுங்கியபடியே பற்பல விதமாகக் கூச்சலிட்டுக்கொண் டிருந்தார்கள். அந்தச் சமயத்தில் தெரியாத்தனமாகக் கதவைத் திறந்துவிட்ட வேலைக்காரப் பெண் ஒரு அறையிலிருந்து வேறொரு அறைக்கு ஓடினாள். அவளைக் கண்டதும் விலங்கிடப்பட்ட மனித தனுக்கு அடக்க முடியாத ஆத்திரமுண்டாகி, அவளைத் துரத்திக்கொண்டு போய் விலங்கு பூண்ட இரண்டு கை களையும் சேர்த்து ஓங்கி அவள் தலையில் அடித்துவிட்டான். அவள் 'அல்லாரே' என்று அலறித் துடித்துக்கொண்டு விழுந்துவிட்டாள். அதைக் கண்ட பெண்டுகளின் ஓலம் அதிகப்பட்டது. உடனே சார்ஜெண்ட் ஓடிப்போய் அந்தப் பெண்ணைத் தூக்கி அப்புறப்படுத்திவிட்டுக் கைதியை இழுத்து வந்தான்.

இதற்குள் 'சூப்ரண்ட்' துரை, சையத் காதருடைய 'போட்டோ' படத்தையும் அவனுடைய அங்கமச்ச அடையாளங்களைப் பற்றிய விளம்பரக் குறிப்புகளையும் எடுத்துக்கொண்டு அவனைப் பரிசோதிக்கத் தொடங் கினார். போட்டோவையும் அந்த மனிதனையும் மாற்றி மாற்றிப் பார்த்தார். மூக்கும் முழிகளும் ஒத்திருப்பன

போல் இருந்தாலும், படத்திலிருந்த மீசையும் தாடியும் அந்த மனிதனுடைய முகத்தில் இல்லை.

"அடையாளம் தெரியாமலிருப்பதற்காகத் தாடியையும், மீசையையும் அகற்றிவிட்டீரோ ?" என்று ஏளனச் சிரிப்புடன் 'சூப்ரண்ட்' கேட்டார்.

"நான் தாடி மீசை வைத்துக் கொண்டதே இல்லை" என்ருன் கைதி.

"பொய்"

"நீர் சொல்லுவதுதான் பொய்" என்று அழுத்தமாகச் சொன்னன் கைதி.

"நான் சொல்லுவதா பொய்? யார் சொல்லுவது பொய் என்பதைப் பார்த்துவிடுவோம்" என்று, அவனுடைய உடைகளை அகற்றிப் பரிசோதிக்க விரும்பிய சூப்ரண்ட், அவர்கள் அப்போது இருந்த இடம் வெளிச்சம் குறைந்ததாக இருந்ததாலும் பக்கத்திலிருந்து பெண்கள் பார்த்துக் கொண்டிருந்ததாலும் வேறு இடத்திற்குக் கொண்டுபோய்ப் பரிசோதிக்க விரும்பினர்.

மாடியில் விசாலமான அறை வெளிச்சம் உள்ளதாக இருந்தது. அங்கே கைதியின் சட்டைகள் அகற்றப் பட்டன. கைதியின் அங்கம் முழுதும் பரிசோதிக்கப் பட்டது. சிறையிலிருந்து தப்பி ஓடிவிட்ட சையத் காதருடைய அடையாளங்களென்று விளம்பரத்தில் சொல்லப் பட்டுள்ள அடையாளங்களில் ஒன்றுவது இந்த மனிதனுக்கு இல்லை. என்ன ஏமாற்றம்! சூப்ரண்ட் துரையின் முகம் சுருங்கிவிட்டது. தலை குனிந்தது. அதிகார தோரணை அடங்கிவிட்டது. அவமானத் துன்பம் தொடங்கிவிட்டது. வெட்கமும் வருத்தமும் வேதனை செய்தன. என்ன சொல்வது, ஏதுசெய்வது என்பது தெரியாமல் திணறிவிட்டார் சூப்ரண்ட்துரை. மிகுந்த

மனக்குழப்பத்துடன் விலங்கிடப்பட்ட மனிதரைப் பார்த்து,

"உங்கள் பெயரென்ன ?" என்ருர்.

"அப்துல் ரஜாக்"

"சொந்த ஊர் ?"

"ஹைதராபாத்"

"உத்யோகம் ?"

"நிஜாம் அரண்மனையில் உத்யோகம்."

"இங்கே எதற்காக வந்தீர்கள் ?"

"இது என் மாமியார் வீடு. மாமியாருக்கு அசௌக்யம் என்று கேள்விப்பட்டு பார்த்துப் போக வந்தோம்."

"ஐயோ பாவம்! அப்படி வந்த உங்களுக்குத் தவறுதலாக நாங்கள் விலங்கிட நேர்ந்துவிட்டதற்கு மிகவும் வருத்தப்படுகிறேன். இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த சையத் காதரைக் கைது செய்யும்படி எனக்கு உத்தரவு. நீங்கள்தான் சையத் காதர் என்று எண்ணிவிட்டோம். மன்னிக்கவேண்டும். நீங்கள் சையத் காதர் அல்ல வென்பது தெளிவாகிவிட்டது..... ஆமாம், நீங்கள் தான் சையத் காதரல்லவே, பின் ஏன் நீங்கள் எங்களை இப்படி எதிர்த்து ரகளை செய்யவேண்டும் ?....."

"கோஷா வீட்டில் நீங்கள் அனுமதியின்றி நுழைந்ததைப் பற்றிய கோபத்தால்" என்ருன் அப்துல் ரஜாக்.

"ரொம்பவும் வருத்தப்படுகிறேன். நீங்கள்தான் சையத்காதர் என்று இந்த மனிதர் எனக்குத் தவருகச் சொல்லிவிட்டதால் இப்படியெல்லாம் நேர்ந்துவிட்டது" என்று சொல்லிக்கொண்டே, உளவு சொன்ன ரகசியப் போலீஸ்காரன் பக்கம் திரும்பி, "நேற்றிரவு மோட்டாரில் வந்திறங்கியதாக நீ சொன்னவர் இவர் தானே ?" என்று கேட்டார் சூப்ரண்ட்.

"இவரைப் போலத்தான் இருந்தது. இவர்தான் என்று நிச்சயமாக இப்போது சொல்ல முடியவில்லை. நேற்று இரவில் விளக்கு வெளிச்சத்தில் பார்த்தது. நேற்று நான் பார்த்தவருடைய உடையும் நடையும் வேருக இருந்ததுபோல்..." என்று தடுமாறினன் துப்பு சொன்னவன். அவனுடைய தடுமாற்றத்தைக் கண்ட சூப்ரண்ட் விலங்கிடப்பட்ட இந்த மனிதனைப் போன்ற தோற்றமுடைய வேறு ஒருவன் வீட்டுக்குள் இருந்தாலும் இருக்கலாமென்று எண்ணினர். அதனல் இந்த மனிதனுடைய விலங்குகளை நீக்கிவிட நினைத்த அவர் வீடு முழுவதையும் சோதனை செய்து பார்த்துவிடுகிற வரைக்கும் விலங்குகளை நீக்கக் கூடாதென்று தீர்மானித்துக்கொண்டு, விலங்கிடப்பட்ட அப்துல் ரஜாக்கைப் பார்த்து,

"தயவு செய்து கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள், என்னுடைய கடமையை நான் செய்ய வேண்டும். நாங்கள் தேடிக்கொண்டிருக்கிற சையத்காதர் இந்த வீட்டுக்குள் இருக்கிறாரா என்று சோதித்து விடுகிறோம். அதுவரைக்கும் தங்களுக்கு மறுபடியும் கோபம் வந்து எங்களைத் தாக்கிவிடாமல் இருப்பதற்காகமட்டும் விலங்கு இருக்கட்டும். கோஷாப் பெண்களுக்கு அவமதிப்பு நேராதபடி இந்தத் துரைசானியம்மாள் கவனித்துக் கொள்ளுவார்" என்று சொல்லிவிட்டுச் சோதனைக்கு உத்தரவிட்டார்.

மேல் மாடியை முழுதும் சோதித்துவிட்டுக் கீழே இறங்கினர்கள். அந்த வீட்டில் அநேக அறைகள் இருந்தன. சில அறைகளில் மிகவும் இருண்ட அட்டாளிகள் இருந்தன. அவற்றில் பெரிய பெரிய அண்டாக்களும் குண்டாக்களும் இருந்தன. இரண்டு மனிதர்கள் உள்ளே உட்கார்ந்துகொண்டாலும் தெரியாதிருக்கும்

படியான மிகப் பெரிய தேக்சாக்களும் இருந்தன. அவைகளில் ஒவ்வொன்றும் அதற்கேற்ற தட்டத்தால் மூடப்பட்டிருந்தது. அவைகளனைத்தும் சோதிக்கப்பட்டன. விலங்கிடப்பட்டவனைத் தவிர வேறு ஆண்பிள்ளை அங்கே இல்லை. முன் கட்டிலிருந்து ஒவ்வொரு அறையாகச் சோதித்துக்கொண்டுக் கொல்லைப் புறத்திலிருந்த கடைசி அறைக்கு வருவதற்குள் பொழுது சாய்ந்துவிட்டது.

வீட்டுக்குள் இந்தச் சோதனை நடந்துகொண்டிருக்கும்போது, கொல்லைப் புறத்தின் கோடியில் இருந்த கதவு திறக்கப்படுகிற ஓசை, அந்தக் கதவுக்கு நேராக அடுத்த தெருவில் காவல் செய்துகொண்டிருந்த சார்ஜெண்டின் காதில் விழுந்தது; கதவைக் கவனித்துக் கொண்டேயிருந்தான். மெதுவாகக் கதவு திறக்கப்பட்டது. முழுதும் புர்தாவால் மூடப்பட்டுக் கூன் விழுந்த ஒரு கிழவியின் உருவம் கோலை ஊன்றிக்கொண்டு வெளியே வந்தது. படிகளில் மெதுவாக இறங்கித் தெருவில் தத்தித் தத்தி நடக்கத் தொடங்கியது.

அந்தக் கதவின் வழியாக யார் வெளியே வந்தாலும் உடனே கைது செய்யும்படி, கண்டிப்பான உத்தரவிடப்பட்டிருந்தது. அதனல் அந்தச் சார்ஜெண்ட் விரைந்து சென்று அந்தக் கிழவியை அணுகி,

"யாரம்மா பெரியவளே, எங்கே போகிறாய்? நில்லு" என்றான்.

அதைக் கேட்டதும் அந்தக் கிழவி வேகமாக நடக்கத் தொடங்கினள். சார்ஜெண்டும் வேகமாகப் பின் தொடர்ந்து அவளை நிறுத்துவதற்காகப் புர்தாவைப் பிடித்து இழுத்தான். அதுவரையிலும் கூனிக் குறுகி நடந்துகொண்டிருந்த அந்தக் கிழட்டு உருவம் உடனே நிமிர்ந்து ஓட்டம் பிடித்தது. சார்

ஜெண்ட் துரத்தினர். ஜவான்களும் சேர்ந்து கொண்டார்கள். எதிரில் வரும் ஜனங்களையும் இடித்துத் தள்ளிக்கொண்டு அந்தப் புருதா உருவம் வெகு வேகமாக ஓடிற்று. வெகு தூரம் ஓடியபின், எதிரில் ஒரு இரட்டைமாட்டு வண்டியின் காளைகள் ஒரு மோட்டாரைக் கண்டு மருண்டு குதித்துக் கொண்டு வீதியின் குறுக்காக வண்டியைத் திருப்பிக்கொண்டன. வீதியின் ஒரு ஓரத்தில் மோட்டாரும், மற்றப் பகுதியின் குறுக்கே மாட்டுவண்டியுமாக, வழி முற்றிலும் அடைபட்டு விட்டிருந்தது. புருதா உருவத்தின் ஓட்டம் தடைபட்டு விட்டது. தப்ப வழியில்லை. சார்ஜெண்ட் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். ஜவான்களும் சேர்ந்து அசைய முடியாமல் அமுக்கிக்கொண்டார்கள். கூட்டமும் கூடி விட்டது.

அந்தப் புருதாவுக்குள் இருந்த ஆசாமியின் உடம்பை அழுத்திப் பிடிக்க நேரிட்ட காரணத்தால், அந்த உடம்பு ஒரு பெண்ணின் உடம்பும் அல்ல, கிழட்டு உடம்பும் அல்ல என்பதை சார்ஜெண்டும் ஜவான்களும் அறிந்துகொண்டார்கள். உடனே எல்லாருமாகச் சேர்ந்து, பலவந்தமாகப் புருதாவை நீக்கினர்கள்.

கட்டுமஸ்தான இளங்காளை போன்ற ஒரு ஆண் பிள்ளை அங்கே காணப்பட்டான். உயிருக்காகச் சிறையிலிருந்து ஓடிவந்து, கடக்க முடியாத காவல்களைக் கடந்து, நடக்க முடியாத காட்டுத் தடத்தில் ஐந்நூறு மைல்களுக்குமேல் நடந்து, தெய்வாதீனமாகக் கிடைத்த கிராமவாசியின் யோசனையினால் மணிபுரிக்குப் போய் அங்கிருந்த வெள்ளைக்கார சோல்ஜர்களிடம் சிக்கிக் கொள்ளாதபடி குறுக்கு வழியில் கௌஹத்தியை அடைந்து, கல்கத்தா வழியாகச் சென்னைக்கு வந்து, அங்கிருந்து ஹைதராபாத்துக்குச் சென்றவன் சையத்

காதர். அங்கே தமக்கை வீட்டில் வெகு சௌக்யமாகக் கொஞ்சங்கூடப் பயமில்லாமல் இந்த நான்கு மாதங்களாக இருந்துவந்தான். எழுபத்தைந்து வயதாகிவிட்ட தாயார் அசௌக்யமாக இருப்பதாகத் தமக்கை புருஷன் அப்துல் ரஜாக்குக்குத் திருச்சியிலிருந்து கடிதம் வந்தது. தாயாரைப் பார்த்து வரப் புறப்பட்ட தமக்கையும் அவளுடைய கணவனும் சையத்காதரை ஹைதராபாத்திலேயே இருக்கும்படி வற்புறுத்தினர்கள். ஆனால் விதி யாரை விட்டது? சையத்காதர், தனக்கும் தாயாரைப் பார்க்கவேண்டுமென்ற ஏக்கம் அதிகமாகி விட்டதாகவும், மிக்க வயசான காலத்தில் அசௌக்யமாக இருக்கும் தாயார் இறந்துவிட்டால் பிறகு பார்க்க முடியாதே என்றும் சொல்லித் தானும் வரவேண்டுமென்று மன்றாடினர். தமக்கையும் அதை ஆமோதித்தாள். அதைக்கண்ட மைத்துனன் அப்துல் ரஜாக்கின் ஆலோசனையின்படி புர்தாவுக்குள் புகுந்துகொண்டு கூன் விழுந்த கிழவிபோல் நடித்த சையத்காதர் இப்படி நடுத்தெருவில் சிக்கிக்கொண்டான்.

கூடுமிகை கொடுத்த கூடிதம்

பிடித்துவிட்டார்கள்

அசௌக்யமாக இருக்கும் தாயாரைப் பார்த்துவிட்டு வந்துவிடுவதாக டங்கன் துரையிடம் ஒரே ஒரு மாதத்துக்கு ரஜா வாங்கிக்கொண்டு போன ஜெயபால், அந்த ஒரு மாதம் முடிவதற்குள் மறுபடியும் ஒரு மாதம் ரஜா வேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொண்டான்

இங்கிலீஷ்காரருக்கு மிக்க விசுவாசத்துடன் போர் புரிந்த ஜெயபால் முதலான வீரர்களுக்குப் பரிசு கொடுத்து. வெற்றிவிழாக் கொண்டாடி, அந்த விழாவின் முடிவில் இங்கிலீஷ்காரருக்குத் துரோகம் செய்த ஷங் கர்ஜி முதலானவர்களைச் சுட்டுக் கொன்று, இங்கிலீஷ் ஏகாதிபத்தியத்தின் வல்லமையை நிலைநாட்ட வேண்டு மென்று டங்கன் துரை திட்டமிட்டிருந்தார். ஷங்கர்ஜி, சையத்காதர், முனிஜி ஆகிய மூவரும் சிறையிலிருந்து ஓடிவிட்டதால் அவர்களை மீண்டும் பிடிக்கிற வரைக்கும் அந்த வெற்றி விழாவை எப்படி நடத்த முடியும்? ஜெய பால் முதலான ராஜ விசுவாசிகளுக்குப பரிசு கொடுப்ப தெல்லாம் சங்கரலிங்கன் முதலான ராஜத் துரோகிகள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் என்பதைக் காட் டத்தானே? அப்படிச் செய்தால்தான் இந்தியச் சிப்பாய் கள் ஆசையோடும் அச்சத்தோடும் ஆங்கிலேயருக்கு அடங்கிநடப்பார்கள். மற்ற இங்கிலீஷ் அதிகாரிகளைக் காட்டிலும் டங்கன் துரைக்கு இந்தக் கொள்கையில் நம் பிக்கை அதிகம். அவருக்குப் பரிசு வழங்குவதைவிடப் பழிவாங்குவதில்தான் மனம் படிந்திருந்தது. அதனால் பழிவாங்க வேண்டிய சங்கரலிங்கன் முதலானவர்கள் பிடிபடுகிறவரைக்கும் பரிசு விழாவை ஒத்திவைக்கவே

எண்ணியிருந்தார். ஜெயபாலை ஒரு மாதத்துக்குள் திரும்பிவிடும்படி டங்கன் துரை சொல்லியிருந்தது பரிசு விழாவை நடத்திவிடத்தான். இப்போது அந்தப் பரிசு விழாவை ஒத்திப் போடவேண்டுமென்ற எண்ணம் உதித்துவிட்டதால்,ஜெயபால் மறுபடியும் ஒரு மாத ரஜா கேட்டது அவருக்கு மகிழ்ச்சியுண்டாக்கக் கூடியதாகவே இருந்தது. உடனே ரஜா உத்தரவிட்டார். அந்த ஒரு மாதம் முடிவதற்குள் ஓடிப்போன துரோகிகளைப் பிடித்து விடலாமென்று டங்கன் துரை நம்பினர். அது முடிய வில்லை. இந்த ஒரு மாதம் ரஜா தீரும் சமயத்தில் மறு படியும் ஜெயபால் தனக்கே உடம்பு அசௌக்யமாக இருப்பதாக டாக்டர் சர்டிபிகேட்டுடன் மூன்றுமாத ரஜா வுக்காக விண்ணப்பம் அனுப்பியிருந்தான். அதன்படி மறுபடி மூன்றுமாத ரஜா கொடுக்கப்பட்டது.

கைதிகள் ஓடிப்போனபின மூன்று மாதங்கள் முடி கிற மட்டும் டங்கன் துரையும் அவர் அதிகாரத்துக்கு உட்பட்ட இந்தியப் பட்டாளங்களும் ரங்கூனிலேயே இருந்தார்கள். அதன் பிறகு அகில இந்திய சேனைதி பதியாகிய 'கமாண்டரின் சீப்' பிடமிருந்து டங்கன் துரைக்கு உத்தரவு வந்துவிட்டது. அந்த உத்தரவில் பரிசு விழாவை இந்தியாவில் நடத்திக் கொள்ளலாம் என்றும் ரங்கூன் முகாமில்இருக்கும் இந்தியச் சேனைகளை யெல்லாம் இந்தியாவுக்குத் திருப்பி யனுப்பிவிடவேண் டும் என்றும் கண்டிருந்தது. டங்கன் துரை கட்டி யிருந்த மனக்கோட்டை இடிந்து மண்ணுகிவிட்டது. ரங்கூன் யுத்த முகாமைக் கலைத்துவிட்டு, யுத்தத்துக்கு முன்னால் பர்மாவிலிருந்த பட்டாளத்தைத் தவிர மற்ற வர்களை யெல்லாம் இந்தியாவுக்குத் திருப்பியனுப்பி விட்டு டங்கன் துரையும் இந்தியாவுக்கு வந்துவிட்டார். தன்னுடைய ரங்கூன் திட்டங்களை நடத்த முடியாமற்

போன வருத்தத்தாலும், இந்திய அரசாங்கத்தின் எல்லா வல்லமைகளும் சேர்ந்துகூட இன்னும் கண்டுபிடிக்க முடியாமலிருக்கிற கைதிகள் ஓடிப்போனது தன்னுடைய பொறுப்புக்கு உட்பட்ட காவலிலிருந்தே என்ற வெட்கத்தாலும், மனம் தளர்ந்துவிட்ட டங்கன் துரை, ரஜா வாங்கிக் கொண்டு இங்கிலாந்துக்குப் போகலாமா வென்று எண்ணிக்கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் சையத் காதரைப் பிடித்துவிட்ட செய்தியைக் கேட்டு அவர் அடைந்த ஆனந்தத்தை அளவிடவும் முடியுமா? அவருடைய வருத்தமும் வெட்கமும் குறைந்தன. நம்பிக்கை மீண்டது.

சூரிய அஸ்தமனமே இல்லாத பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் இந்தக் கைதிகள் எங்கே போய்த் தப்பித்துக் கொள்ள முடியும்? மற்ற இருவரும் கூட விரைவில் பிடிபட்டு விடுவார்கள், ரங்கூனில் நடத்தமுடியாமற் போனலும் அங்கே தீர்மானித்த திட்டத்தை இங்கே நடத்தி விடமுடியும். அந்தத் துரோகி ஷங்கர்ஜியைச் சுட்டுக் கொன்று, தம்முடைய விரதத்தை முடித்துக் கொள்ளலாம் என்ற உத்ஸாகத்தில் ரஜா வாங்க எண்ணியிருந்ததை ரத்துச் செய்துவிட்டார் டங்கன் துரை.

சையத்காதரின் மைத்துனன் அப்துல் ரஜாக் படித்துப் பட்டம் பெற்றவன்தான். ஹைதராபாத் அரண்மனையில் அன்ருடம் சில மாமூலான காரியங்களைக் கவனித்துவிட்டு நல்ல சம்பளம் வாங்கும் பதவியில் இருப்பவன். மிகுந்த உடல் வலிமையும் தைரியமும் உள்ளவன். ஆனல் வெறும் படிப்பும் பட்டமும் பதவியும் தேக பலமும் முரட்டுத் தைரியமும் எதற்காகும். புத்தி கூர்மையும் இருந்தால்தான் இவைகள் பயன்படும். அப்துல் ரஜாக்குக்குப் புத்திசாலித்தனம் போதாது. அத்துடன்

அவனுக்கு முன்கோபம் அதிகம். அதனல் நிதானம் என்பதே இல்லாதவன்.

சையத்காதர் இப்படிச் சிக்கிக் கொண்டது, அப்துல் ரஜாக்கின் புத்திக் குறைவாலும் நிதானமில்லாத முன் கோபத்தாலுண்டான முரட்டுத் துணிச்சலாலும்தான். திருச்சிஞப்பள்ளிக்கு வரவேண்டுமென்று விரும்பிய சையத்காதரைப் புருதாக் கிழவிபோல் நடிக்கும்படி சொல்லித் தந்தவன் இவன்தான். வழிநெடுகப் பார்த்தவர்களெல்லாரும் சையத்காதரை ஒரு கூன்விழுந்த முஸ்லீம் கிழவியென்றுதான் நம்பியிருப்பார்கள். திருச்சியில் இவர்கள் மோட்டாரில் வந்து இறங்கியதைப் பார்த்த ரகசியப் போலீஸ்காரனும் அப்படித்தான் எண்ணினன். அந்தப் போலீஸ்காரன் சந்தேகமெல்லாம் அப்துல் ரஜாக்தான் சையத் காதராக இருக்கலாம் என்பதுதான். சையத்காதர் புத்திசாலியாக நடந்து கொண்டிருந்தால், திருச்சிஞப்பள்ளியில் இவர்கள் வீட்டுக்குள் போனபின் வீதிக்கதவைத் தாழிட்டிருக்க வேண்டியதில்லை. அந்தக் கதவைத் தாழிடாமலிருந்தால் சந்தேகமே தோன்றியிருக்காது. கதவைத் தாழிடாமல் அப்துல் ரஜாக் அந்த வீட்டுக்குப் பெண்கள் சகிதமாக வந்திருக்கிற ஒரு விருந்தாளியாகவே வெளியிலும் தாராளமாக வந்து போய்க் கொண்டிருந்தால் இரவில் இவனே சையத்காதரென்று சந்தேகித்த போலீஸ்காரனே மறுநாள் பகலில் இவனை நன்ருகப் பார்த்து இவன் சையத் காதர் அல்லவென்று விட்டுவிட்டிருப்பான். அதுமட்டுமல்லாமல் மறுநாள் மாலையில் போலீஸ்காரர்கள் வீட்டுக்குள் வந்துவிட்ட போதாவது கொஞ்சம் நிதான புத்தியுடன் ரஜாக் நடந்துகொண்டிருந்தால், இவனை மட்டும் அவர்கள் சோதனை செய்து, அங்கமச்ச அடையாளங்களில் இவன் சையத்காதர் அல்லவென்று கண்டு அவ

னைத் தவருகச் சோதனை செய்ததற்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டு போலீஸ்காரர்கள் போய்விட்டிருப்பார்கள். வீடு முழுவதையும் சோதிக்க வேண்டுமென்ற எண்ணமே அவர்களுக்கு உண்டாகியிருக்காது. இவன் உள்ளே வந்தவர்களைத் திட்டி, சார்ஜெண்டைக் கீழே தள்ளி, சூப்ரண்டைப் பிடித்து நசுக்கிச் செய்துவிட்ட தவறுகளால் இவன் எதையோ மறைக்க முயல்கின்றான் என்று எண்ண இடமுண்டாயிற்று. அதனால்தான் இவன் சையத்காதர் அல்லவென்று தீர்மானமாகத் தெரிந்த பின்னும் வீடு முழுவதையும் சோதித்துவிடத் தீர்மானித்தார்கள். கோஷாப் பெண்களைச் சோதிக்க ஒரு வெள்ளைக்காரப் பெண்ணும் வந்திருந்ததால் சையத் காதர் தனியே ஓடவேண்டியதாகி விட்டது.

சையத்காதர் சிக்கிக் கொண்டது அவனைத் தவிர இன்னொருவனையும் காட்டிக் கொடுத்து விட்டது. சையத்காதர் மறுபடியும் தப்பித்துக்கொண்டு ஓடி விடாதிருக்க அவனை வெகு ஜாக்கிரதையாகப் பூட்டி வைக்க வேண்டுமல்லவா? அப்படிப் பூட்டுவதற்கு முன்னால் வழக்கம்போல் அவனிடத்தில் என்னென்ன இருக்கின்றனவென்று சோதனை செய்தார்கள். கத்தியோ, கைத்துப்பாக்கியோ, (தூக்குப் போட்டுக் கொள்ளக்) கயிறோ, (தற்கொலை செய்து கொள்ள) விஷமோ ஒன்றும் அவனிடத்தில் இல்லை. அவனைச் சுட்டுக் கொன்றுவிட வேண்டும் என்பது தண்டனையானாலும் அவன் அதற்கு முன் செத்துப் போய்விடக் கூடாதல்லவா? அதற்காகத் தான் அப்படிச் சோதிப்பது.

ஒரே ஒரு கடிதம் மட்டுந்தான் சையத்காதருடைய சட்டைப் பையில் இருந்தது. அது தபாலுக்கு அனுப்புவதற்காக ஒட்டி, மேல் விலாசம் எழுதப்பட்டிருந்த ஒரு கவர். அதை சூப்ரண்ட் துரை வாங்கிக் கொண்டார்.

சையத்காதர் 'லாக்கப்'பில் பூட்டப்பட்டான்..... 'சூப்ரண்ட்' துரை தம்முடைய காரிய அறைக்குப் போய் ஆசனத்தில் அமர்ந்து கொண்டு அந்தக் கடிதத்தை ஆராய்ந்தார். அது 'பம்பாயில், கால்பதேவி ரோட்டில், 399—25 எண்ணுள்ள இடத்தில், ராம்லால் கம்பெனியின் சொந்தக்காரர் ஸ்ரீ கோவர்த்தன்லால் மேல் பார்த்து, முகுந்தலால் என்பவருக்குக் கொடுப்பது' என்ற விலாசமிட்டிருந்தது.

சூப்ரண்ட்துரை, அந்தக் 'கவர்' ஒட்டப்பட்டிருந்த இடத்தில் மட்டும் தண்ணீரைத் தடவிச் சிறிது நேரம் ஊறவைத்துக் கிழிந்து போகாதபடி அதைப் பிரித்தார். உள்ளேயிருந்த கடிதத்தை எடுத்துப் பார்த்தார். அதிலிருந்த தேதி அன்றைய தேதிதான். அது சையத் காதரே எழுதியது. அதைத் தபாலுக்கு அனுப்புவதற்குள் போலீஸ்காரர் வீட்டுக்குள் புகுந்துவிட்டதால், தன்னுடைய சட்டைப்பைக்குள் போட்டுக்கொண்டவன் இப்படிச் சிக்கிக்கொண்டான்.

அந்தக் கடிதத்தில் இருந்த விஷயம்:

'அநேக சலாம், நான் மிகவும் சுகமாக இருக்கிறேன். இதுநாள் வரையிலும், நீங்கள் இருக்கிற இடம் தெரியாமல் மிகவும் விசனப்பட்டுக்கொண் டிருந்தேன். உங்கள் தாயாரைப் பற்றியும், மனைவியைப் பற்றியும், நீங்கள் ரொம்பவும் கவலைப்பட்டுக் கொண்டு இருந்தீர்களே? அவர்கள் சௌக்கியமாக இருக்கிறார்களா? நான் இதுவரையிலும் ஹைதராபாத்தில்தான் இருந்தேன். என்னுடைய தாயார் மிகவும் அசௌக்யமாக இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்துவிட்டுப்போக நேற்றுத்தான் இங்குவந்தேன். இரண்டு மூன்று நாளில் மறுபடியும் ஹைதராபாத்துக்குப் போய்விடுவேன். நீங்களும் அங்கேயே இருக்கவேண்டும். சொந்த வீட்டிலோ, அல்லது மாமனார் வீட்டிலோ, தங்கியிருக்கக் கூடாது. அவசியமிருந்து அங்கே போனாலும்

உடனே பம்பாய்க்குத் திரும்பி விடவேண்டும். நான் ஹைதராபாத்துக்குப் போய் விவரமான கடிதம் எழுதுகிறேன். என்னுடைய விலாசம்: ஹைதராபாத் நிஜாம் அரண்மனைக் காரியாலயத்தில் அப்துல் ரஜாக் மேல் பார்த்து பீபிஜான் கையில் கொடுப்பது.' என்று எழுதுங்கள். அன்புள்ள பீபிஜான்."

இந்தக் கடிதத்தை சூப்ரண்ட்துரை திருப்பித் திருப்பிப் பலமுறை படித்துப் பார்த்தார். கைச்சாத்து 'பீபிஜான்', என்று பெண் பெயராக இருக்கிறது. விஷயமோ வேறு விதமாக இருக்கிறது. வெகு நேரம் மூளையைக் குழப்பிக் கொண்டு யோசனை செய்து பார்த்தார். ஓ! ஆமாம் இப்போது விளங்கிவிட்டது! சையத் காதரைப் புருதாவோடு பிடித்தபோது, சூப்ரண்ட் அங்கேயில்லை. புருதாவோடு பிடித்த சார்ஜெண்டும் ஜவான்களும், பிடித்த இடத்திலேயே புருதாவை எடுத்துவிட்டார்கள். அந்தப் புருதாவை ஒரு ஜவான் எடுத்துச் சுருட்டிக் கையில் கொண்டு வந்தான். சையத் காதரைப் பிடித்தவர்கள் அவனை நேரே போலீஸ் கச்சேரிக்குக் கொண்டு போய்விட்டார்கள். அவர்கள் அங்கே போய்ச் சேர்ந்து ஒரு மணிநேரம் சென்ற பிறகு தான், சூப்ரெண்ட் துரையும், அவருடன் வீட்டுக்குள் நுழைந்த சார்ஜெண்ட்டும், ஜவான்களும், கச்சேரிக்கு வந்தார்கள். வீடு முழுதும் சோதனைசெய்து, சையத் காதர் அங்கே இல்லையென்று தெரிந்தபின், அப்துல் ரஜாக்கின் விலங்குகளைக் கழட்டிக் கொண்டு, அவனிடமும் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு வீட்டைவிட்டு வாசலின் வழியாகவே வெளியே போனார்கள். சையத் காதர் கொல்லைப்புறம் போனதும், கதவைத் திறந்துகொண்டு அடுத்த வீதிக்குள் இறங்கியதும், வீட்டுக்குள் சோதனை செய்துகொண்டிருந்த போலீசாருக்கோ அப்துல் ரஜாக்குக்கோ தெரியாது. வீடு முழுவதையும்

சோதித்துவிட்டுப் போலீசார் கொல்லைக் கதவு வரையிலும் தேடிவிட்டுத்தான் போனார்கள். அவர்கள் கொல்லைப் புறத்துக்கு வருவதற்கு வெகு நேரத்துக்கு முன்னாலேயே சையத்காதர் பிடிபட்டுவிட்டான். திறந்து கிடந்த கொல்லைக் கதவை அப்துல் ரஜாக்தான் மூடினான். அவனை அல்லது போலீசாரோ ஏன் அந்தக் கதவு திறந்து கிடந்தது என்பதைக் கவனிக்கவில்லை. வீட்டைச் சோதித்துவிட்டு, வெளியே வந்து, மோட்டார் வானில் ஏறிக்கொண்ட சூப்ரண்ட் முதலானவர்களுடன் அந்த வண்டி கொல்லைக் கதவுக்குக் காவலிருந்தவர்களையும் ஏற்றிக்கொள்ள அங்கே போனபோது, அங்கிருக்க வேண்டிய சார்ஜெண்டும், ஜவான்களும், காணப்படவில்லை. அவர்கள் முன்னால் போய்விட்டார்களாக்கு மென்று எண்ணிக்கொண்டு மோட்டார் போலீஸ் கச்சேரிக்கு ஓட்டப்பட்டது. அங்கே வந்த பிறகுதான் சையத்காதர் பிடிபட்ட விஷயம் சூப்ரண்டுக்குத் தெரிய வந்தது. சையத்காதர் புருதாவுக்குள் ஒளிந்து கொண்டு ஓடினான் என்பதை அவர்கள் துரைக்குச் சொன்னார்கள். ஆனால் சையத் காதரின் அங்க மச்ச அடையாளங்களைச் சரி பார்த்த சந்தோஷத்தில் அதை மறந்துவிட்ட சூப்ரண்ட், கடிதத்தில் இருக்கிற பெண் பெயரைக் கண்டு கொஞ்சம் திகைத்துவிட்டது. நினைவுக்கு வந்ததும் புருதாவுக்குள் இருந்த கிழவியின் பெயர்தான் 'பீபிஜான்' என்பதைக் கண்டுகொண்டார்.

அந்தக் கடிதத்தில் இருக்கிற விஷயங்களால் அது சையத்காதருடன் ரங்கூன் ராணுவச் சிறையிலிருந்து ஓடிவந்துவிட்ட ஷங்கர்ஜி முனிஜி ஆகிய இருவரில் ஒருவருக்குத்தான் எழுதப்பட்டிருக்க வேண்டும். 'முகுந்தலால்' என்ற பெயரும் 'பீபிஜான்' என்ற பெயர் மாதிரி

பொய்ப் பெயராகத்தானிருக்க வேண்டும் என்று தீர்மானித்தார், சூப்ரெண்ட். அந்த இருவரில் ஒருவன், கவரின் மேலுள்ள விலாசத்தில் காணப்படுகிற கோவர்தன் லாலின் பாதுகாப்பில் பதுங்கிக்கொண்டிருக்கிறான். அந்த கோவர்தன் லாலைப் பிடித்துக் கசக்கினால் அவனையும் பிடித்துவிடலாம். அதற்காக அந்தக் கடிதத்தை அப்படியே பம்பாய் போலீசாருக்கு அனுப்பி நடவடிக்கை எடுக்கச் செய்யலாமாவென்று நினைத்தார். ஆனால் அப்படி பம்பாய் போலீசார் கோவர்தன் லாலைப் பிடித்து விசாரித்தால் அவனிடத்தில் அடைக்கலமாக இருக்கிறவனைக் காட்டிக் கொடுத்துவிடுவானே? அங்குள்ள போலீசார் தவறான முறையில் காரியங்களைச் செய்துவிட்டால் பிடிபடவேண்டியவன் வேறு எங்காவது மறைந்து விடலாம். அன்றியும் கோவர்தன்லால் வேறு யாரையாவது காட்டி, அவன்தான் முகுந்தலால் என்று மறைத்துவிடலாம். காரியம் கெட்டுப் போகும். அதனால் தாமே பம்பாய்க்குச் சென்று அதைக் கவனிப்பது நல்லது என்று முடிவுசெய்தார். கடிதத்தைத் தபாலிலேயே போட்டுவிட்டால், அது அந்த ஆசாமியை நிர்ப்பயமாகப் பம்பாயிலேயே இருக்கச் செய்யும். சையத் காதரைப் பிடித்த பெருமையோடு, பம்பாயில் பதுங்கிக் கொண்டிருக்கிற இவனையும் பிடித்துவிட்ட பெருமை தமக்கே வரவேண்டுமென்று சூப்ரெண்ட் துரை ஆசைப் பட்டதில் தவறில்லை. இங்கிலீஷ் ஏகாதிபத்தியமே பிடிக்கத் தேடிக்கொண்டிருக்கிற அந்த ஷங்கர்ஜி என்பவனைப் பிடித்துவிட்டால் அதனால் அடையக்கூடிய சிறப்புகள் அளவிடற்கரியனவல்லவா? அது மட்டுமா ? அது தம்முடைய தாய்நாடாகிய இங்கிலாந்துக்கே செய்யும் மகத்தான சேவையல்லவா - என்று நினைத்தார் அந்த ஆங்கிலேய அதிகாரி. கடிதத்திலிருந்த விலாசத்தையும் விஷயங்களையும் எழுதிக்கொண்டு, அதைத் தபாலில் சேர்த்துவிட்டுப் பம்பாய்க்குப் பயணமானார்.

பம்பாயிலுள்ள 'ராம்லால் கம்பெனி' என்பது காஷ்மீர தேசத்துச் சால்வைகளிலும், பஞ்சாப் தேசத்துப் பட்டு ஜவுளிகளிலும் மொத்த வியாபாரம் நடத்துகிற மிகவும் பிரபலமான ஜவுளி மண்டி. தென்னாட்டிலுள்ள ஜவுளி வியாபாரிகள் வெகுபேர் அந்தக் கடையில் பற்று வரவு உள்ளவர்கள். கோவர்தன்லால்தான் அந்த மண்டிக்குச் சொந்தக்காரர்.

ஒரு நாள் முற்பகல் பத்துமணி இருக்கும். அந்த மண்டியில் மும்முரமாக வியாபாரம் நடந்து கொண்டிருந்தது. சென்னையில் புதிதாக ஒரு ஜவுளிக்கடை ஆரம்பித்திருக்கிற ஒரு வியாபாரி தம்முடைய கடைக்குப் பட்டுத் தினுசுகளை மொத்தமாக வாங்கிக் கொண்டு போகும் விஷயமாக கோவர்தன்லாலிடம் விலைகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். அந்த சமயத்தில் ஹைதராபாத்திலிருந்து வந்ததாக ஒரு மஹம்மதிய கனவான் அங்கே வந்தார். அவர் கோவர்தன்லாலிடம் ஒரு விலாசமிட்ட கடிதத்தைக் காட்டி,

"ஐயா, முகுந்தலால் எங்கேயிருக்கிறார்?" என்றார்.

"முகுந்தலாலா? எதற்காக?"

"அவருக்கு இந்தக் கடிதம் தரவேண்டும்."

"அது யார் கொடுத்த கடிதம்?"

"ஹைதராபாத்திலிருக்கிற அவருடைய நண்பர் தந்தது."

"அந்த நண்பர் முகுந்தலால் இருக்கிற இடத்தை உமக்குச் சொல்லவில்லையா?"

"உங்களுடைய கடையில் இருப்பதாகத்தான் அவர் சொன்னார்."

"என்னுடைய கடையில் அவர் இல்லை. எங்கே அந்தக் கடிதத்தைக் கொடுங்கள்" என்று கோவர்தன்லால் கடிதத்தைவாங்கி, அதன்மேலிருந்த விலாசத்தைப் பார்த்துவிட்டு, "இதில் 'ராம்லால் கம்பெனி சொந்தக் காரர் கோவர்தன்லால் மேல்பார்த்து முகுந்தலாலுக்குக் கொடுப்பது" என்றுதானே இருக்கிறது. கடிதத்தை என்னிடத்தில் கொடுத்து விடுங்கள். நான் அவரிடம் சேர்ப்பித்து விடுகிறேன். நான்தான் கோவர்தன்லால்" என்றார்.

"ஆஹா, அப்படியே செய்யுங்கள். கடிதத்தை உங்களிடத்திலேயே வைத்துக் கொள்ளுங்கள். அதில் ஒரு அவசரக்காரியத்தைப் பற்றி எழுதியிருக்கிறார். உடனே பதில் வாங்கிக்கொண்டு வரச் சொன்னார். அதனால் நானே கடிதத்தை முகுந்தலாலிடம் நேரிற் கொடுத்துக் கையோடு பதிலையும் வாங்கிக் கொண்டு போகலாம் என்று எண்ணினேன்"

"பரவாயில்லை. நீங்கள் அவரைப் பார்க்க வேண்டுமென்பதில்லை. உடனே பதில் கொடுக்க வேண்டிய அவசர காரியமிருந்தால் அவரே பதில் கொடுப்பார். நான் அந்தப் பதிலை வாங்கிவைக்கிறேன். நீங்கள் மாலையில் ஐந்து மணிக்குமேல் வந்து வாங்கிக் கொண்டு போகலாம்" என்றார் கோவர்தன்லால்.

"ரொம்ப சந்தோஷம். நான் மாதுங்கா வரையிலும் போய்விட்டு மாலையில் வருகிறேன். தவறினால் நாளைக் காலையில் வருகிறேன். பதில் வாங்கிவையுங்கள். சலாம்" என்று சொல்லிவிட்டு அந்த கடிதம் கொண்டு வந்தவர் போய்விட்டார்.

அதன் பிறகு கோவர்தன்லால் அந்தக் கடிதத்தை ஒரு புறம் வைத்துவிட்டுச் சென்னை வியாபாரியுடன் பேசிக்கொண்டிருந்த பேச்சுகளைத் தொடர்ந்தார். சென்னை வியாபாரி, தமக்குக் கொஞ்சம் அதிகப்படியாகக்

கமிஷன் தரவேண்டுமென்று கேட்டார். அதற்குக் கோவர்தன்லால்,

"இந்தச் சரக்குகளுக்கு எங்களைவிட அதிகமாக வியாபாரிகளுக்குக் கமிஷன் தரக்கூடியவர்கள் இந்த பம்பாயில் வேறு யாரு மில்லை. தென்னாட்டிலுள்ள எல்லா ஊர்களுக்கும் வியாபாரிகளுக்கும் நாங்கள் ஜவுளிகள் அனுப்புகிறோம். எல்லோருக்கும் ஒரே விலைதான். உங்களுக்குச் சந்தேகமிருந்தால் இப்படிப்பட்ட சரக்குகளுக்கு நாங்கள் தருவதைப் போல் அவ்வளவு கமிஷன் கொடுக்கக் கூடியவர்கள் உண்டா என்று பல கடைகளிலும் விசாரித்துப் பாருங்கள்" என்றார்.

"சரி, நான் சாயந்திரம் வந்து வேண்டிய சரக்குகளுக்கு ஆர்டர் தருகிறேன்" என்று சொல்லி விட்டு எழுந்த அந்தச் சென்னைவியாபாரி, மறுபடியும் உட்கார்ந்து கொண்டு "அப்பப்பா! என்ன வெய்யில்! ரொம்ப தாகமாக இருக்கிறது. ஒரு சோடா வாங்கிவரச் சொல்லுங்கள்" என்று அதற்கு விலை கொடுக்க, தம்முடைய 'மணிபர்ஸை' எடுத்தார். அதைத் தடுத்துவிட்டு கோவர்தன்லால் கடையிலுள்ள பையன்களில் ஒருவனைக் கூப்பிட்டு, சோடா, வெற்றிலை பேடா முதலியவற்றை வாங்கிவரக் கட்டளையிட்டார். பையன் அவற்றை வாங்கி வந்தான். சோடாவைக் குடித்துவிட்டு, வெற்றிலை போட்டுக்கொண்டு இளைப்பாறுவது போல் உட்கார்ந்து கொண்டு, தன்னுடைய தோல் பையைத் திறந்து அதிலிருந்து சில காகிதங்களையும் தினக்குறிப்புப் புத்தகத்தையும் எடுத்துப் புரட்டிக்கொண்டிருந்தார், சென்னை வியாபாரி.

அவர் ஏதோ வியாபார சம்பந்தமான சொந்தக்காரியமாகக் குறிப்புகளைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்று அவரை அந்தக் காரியத்தில் விட்டுவிட்டுச் சும்மா

உட்கார்ந்துகொண் டிருந்த கோவர்தன்லால் முகுந்த லாலுக்கு ஹைதராபாத்காரர் கொடுத்துவிட்டுப் போன கடிதம் பக்கத்தில் கிடந்ததைப்பார்த்தார். உடனே அதை எடுத்து முன் சோடா வாங்கிவந்த இளைஞனைக்கூப்பிட்டு,

"இதைக் கொண்டுபோய் நம்ம "கிருஷ்ணானந்த் பவன்' மேல் மாடியில் இருக்கிற முகுந்தலாலிடம் கொடுத்து இதற்கு ஏதாவது பதில் கொடுக்கவேண்டு மானால் எழுதிவைக்கச் சொல்லு. சைக்கிளில் போய்க் கொடுத்துவிட்டு ஜல்தி வா"என்று கடிதத்தை அவனிடம் கொடுத்தார். அதை வாங்கிக்கொண்டு இளைஞன் 'சைக் கிள்' எடுத்துவரக் கடையின் பின்கட்டுக்குப்போனான்.

அதுவரைக்கும் தம்முடைய தோல் பையிலிருந்த காகிதங்களைப் புரட்டிக் கொண்டிருந்த சென்னை வியா பாரி காகிதங்களையும் குறிப்புப் புத்தகத்தையும் தோல் பையில் போட்டு எடுத்துக் கொண்டார். மறுபடியும் வந்து 'ஆர்டர்' கொடுப்பதாகக் கோவர்தன்லாலிடம் மிக்க விநயத்துடன் சொல்லி விடை பெற்றுக் கொண்டு வெளியே போய் அவருக்காகக் காத்துக்கொண்டிருந்த மோட்டார் காரில் ஏறிக்கொண்டார். மோட்டார் டிரை வர் வண்டியை எங்கே ஓட்டவேண்டுமென்று கேட்டான். கொஞ்சம் பொறுக்கச் சொல்லிவிட்டு, அந்த வியாபாரி கோவர்தன்லாலுடைய கடையையே கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் கோவர் தன்லால் கடிதம் கொடுத்த இளைஞன் சைக்கிளுடன் வெளியே வந்தான். உடனே வியாபாரி அந்த இளைஞனை டிரைவருக்குச் சுட்டிக் காட்டி "அந்த சைக்கிளுக்குப் பின்னாலேயே மெதுவாக ஓட்டு" என்றார்.

அந்த ரோட்டில் சுமார் ஒரு மைல் தூரம் போய் அந்த இளைஞன் வலதுபுறத்திலிருந்த ஒரு மிகவும் குறுக லான சந்துக்குள் சைக்கிளை விட்டான். அந்த சந்துக்

குள் மோட்டார் போக முடியாது. உடனே வியாபாரி மோட்டாரை விட்டு இறங்கி சைக்கிளைப் பின் தொடர்ந்தார். அந்த சைக்கிள் அந்த சந்துக்குள்ளிருந்த பல மூலைகளில் திரும்பிப் பின்னும் ஒரு மைல் போனபின் மாளிகை போன்ற ஒரு பெரிய வீட்டுக்கு முன்னால் நின்றது. இளைஞன் உள்ளே போனபின் வியாபாரி மெதுவாக அந்த வீட்டு வாசலுக்கு முன்னால் சென்று பார்த்தார். அந்த வாசலுக்குமேல் சுவரில் பெரிய பெரிய எழுத்துக்களால் மராத்தி பாஷையில் ஏதோ எழுதப்பட் டிருந்தது. அதுதான் 'கிருஷ்ணானந்த பவன்' என்ற பெயராக இருக்குமென்று எண்ணிக்கொண்டு அந்த வீட்டின் அடையாளங்களை நன்றாக மனதிற் பதிய வைத்துக்கொண்டு உடனே வியாபாரி வந்த வழியே திரும்பி அந்த இளைஞன் வருவதற்குள் தம்முடைய மோட்டாருக்கு வந்து விட்டார்.

மோட்டார் அந்தப் பகுதிக்கான போலீஸ் கச் சேரிக்கு ஓட்டப்பட்டது. அங்கே திருச்சினாப்பள்ளிப் போலீஸ் சூப்ரெண்ட் துரையும், பம்பாய் சூப்ரண்டுகளில் ஒருவரான இங்கிலீஷ்காரர் ஒருவரும், கோவர்தன் லாலிடம் முகுந்தலாலுக்குக் கடிதம் கொடுத்து விட்டுப் போன ஹைதராபாத் சாயபும் இந்தச் சென்னை வியா பாரிக்காகக காத்துக் கொண்டிருந்தார்கள்.

'கிருஷ்ணானந்த பவன்' என்பது இதற்கு முன்னால் கிருஷ்ணதாஸ் என்ற ஒரு பெரும் பணக்காரருடைய வீடாக இருந்தது. செல்வம் ஒரே இடத்தில் அதிக நாள் தங்குவதில்லை என்ற உண்மைக்கிணங்க, கிருஷ்ண தாசுக்குப் பல நஷ்டங்கள் ஏற்பட்டு, வீட்டை விற்றுவிட நேர்ந்தது. அதைக் கோவர்தன்லால் வாங்கினார். இப் போது அந்த வீட்டின் கீழ்ப்பாகம் காஷ்மீர சால்வை களுக்கும் பஞ்சாப் பட்டு ஜவுளிகளுக்கும் இருப்பிடங்

களான இரும்பு பீரோக்களும் கண்ணுடி அலமாரிகளும் நிறைந்த கிடங்காக இருக்கிறது. மேல் மாடி, வசிப் பதற்கு வேண்டிய எல்லா வசதிகளும் உள்ள பல அலங் காரமான அறைகள் அடங்கிய விஸ்தாரமான வீடாக இருந்தது. அதை வாடகைக்கு விடவேண்டிய அவசிய மில்லாததால் கோவர்தன்லாலுக்கு வேண்டியவர்களான வெளியூர்க்காரர்கள் வந்து தங்குவதற்கென்றே காலியாக வைத்திருத்தார். அந்த மாடியின் ஒரு பகுதியில் முகுந்தலால் என்பவர் தங்கியிருந்தார். அந்த மாடிக்குப் போக வீட்டின் கீழ்ப்பகுதியின் முன்கட்டில் ஒரு படிக் கட்டும் பின்பகுதியில் ஒரு படிக்கட்டும் இருந்தன. பின் கட்டிலிருந்த படிக்கட்டின் வழியாகவே முகுந்தலாலுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் அப்போதைக்கப்போது வந்து சேரும். அதற்கென்றே தனியாக மிகவும் நம்பிக் கையுள்ள ஒரு வேலைக்காரன் இருந்தான். கீழே வர வேண்டிய அவசியமே இல்லாமல் முகுந்தலால் அந்த மாடியில் சௌக்யமாக இருந்து வந்தார்.

அன்று மத்யானம் கோவர்தன்லால் கடைப் பையன் மூலமாகக் கொடுத்தனுப்பிய கடிதத்தை முகுந்தலால் பிரித்துப் பார்த்தான். அதில் :—

அநேக சலாம். நான் பத்து நாளுக்கு முன்னால் திருச்சினுப்பள்ளியிலிருந்து தங்களுக்கு எழுதிய கடிதம் கிடைத்திருக்கும். என் தாயார் குணமடைந்து வருகிறார் கள். நான் அவசரக் காரியமாகத் தங்களைப் பார்த்து விட்டுப் போக பம்பாய்க்கு வந்திருக்கிறேன். கோவர்தன் லால் அவர்களிடம் என்னைப் பற்றிச் சொல்லித் தாங்கள் இருக்கும் இடத்துக்கு நான் வருவதற்கு அனுமதி கொடுக்கச் செய்யுங்கள். மற்ற விஷயங்களை நேரிற் சொல்லுகிறேன்.

தங்களன்புள்ள
பீபிஜான்
(ஹைதராபாத்)

என்று எழுதப்பட்டிருந்தது. அதைப் படித்த முகுந்த லாலுக்குப் பழைய நினைவுகளெல்லாம் குபீலெனப் பாய்ந்து உள்ளத்தை உலுக்கிவிட்டன. டங்கன் துரை யும், ரங்கூன் ராணுவச் சிறையும் கண்ணுக்கு முன்னால் இருப்பனபோலத் தோன்றிக் கலக்கிவிட்டன. சையத் காதரை உடனே பார்த்து மகிழப் பதைத்தான்.

கோவர்தன்லாலுக்கு, ஹைதராபாத்திலிருந்து வந்த சாயபு மறுபடியும் கடைக்கு வந்தால் உடனே அவனைத் தன்னிடம் ரகசியமாக அனுப்பும்படிக் கடிதம் எழுதி வைத்து விட்டுத்தான் சாப்பிடப் போனான்.

திருச்சினுப்பள்ளி சூப்ரெண்ட் துரை கையாண்ட சூழ்ச்சி மிகவும் சாமர்த்தியமானதுதான். கடிதம் கொண்டு வந்தவன் முகுந்தலால் நேரிற் கண்டு கடிதத்தை அவ னிடம் கொடுப்பதற்கு கோவர்த்தன்லால் இடங் கொடுக்க மாட்டார் என்பது எளிதில் அனுமானிக்கக் கூடியது. அதனால் கடிதத்தை வாங்கி அவர் என்ன செய்கிறார், எங்கே அனுப்புகிறார், யாரிடம் கொடுக்கிறார் என்பதை அறிந்து கொள்ளக் கடிதம் கொண்டு வந்தவனுக்குச் சம்பந்தமில்லாத வேறொரு மனிதன் அதைக் கவனிக்க வேண்டும். அதற்காகக் கடிதம் கொண்டு வந்தவன் கடைக்கு வருவதற்கு வெகு நேரத்துக்கு முன்னாலேயே வந்து பேரம் பேசிக்கொண் டிருந்தான் சென்னை வியா பாரி. அவனை கோவர்த்தன்லால் சந்தேகிக்க முடியாது. இந்தச் சென்னை வியாபாரி தெரிந்து கொள்ளும்படி கோவர்த்தன்லால் எதையும் வெளியிட்டு விடாமற் போனாலும், கடிதத்தைப் பார்த்தவுடன் முகுந்தலால் சையத்காதரைச் சந்திக்க ஆசை கொள்ளாமல் இருக்க முடியாது. நிச்சயமாகக் கடிதத்துக்குச் சாதகமான பதில் கிடைக்கும். ஏனென்றால் சையத்காதருடைய சட்டைப் பையிலிருந்து கிடைத்த கடிதத்தைத் தபாலில் போட்டது

பயனளிக்கத் தவறுது. திருச்சினுப்பள்ளி சூப்ரெண்டின் யூகம் இரண்டும் பலித்து விட்டன.

எழுதி வைத்திருக்கும் பதிலை வாங்கிக்கொண்டுபோவ தற்குக் கடைப் பையன் வருவான் என்று முகுந்தலால் காத்துக் கொண்டிருந்தான். யாரோ கதவைத் தட்டுகிற ஓசை காதில் விழுந்தது. எழுந்து போய்,

" யார் ?" என்ருன்.

" பீபிஜான் "

" பீபிஜானு !"

" ஆம் ஹைதராபாத் பீபிஜான்."

ஹைதராபாத் பீபிஜான் என்னும் சையத் காதரையே அப்போது எண்ணிக்கொண்டிருந்த முகுந் தலால், தன்னுடைய பதில் கடிதம் போகாமல் அதற்குள் எப்படி சையத்காதர் அங்கே வந்திருக்கமுடியும் என்று எண்ணிப்பார்க்க நேரமில்லாமல் கதவைத் திறந்து விட்டான். இரண்டு வெள்ளைக்கார சூப்ரெண்டுகளும் உடனே தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்துவிட்டார் கள். அவர்களுக்குப் பின்னல் சில ஆயுதம் தாங்கிய ஜவான்களும் நுழைந்தார்கள்.

அவர்களைக் கண்டதும் அவனுக்கு விஷயம் விளங்கி விட்டது. எமதூதர்களைக் கண்ட உயிர் போல் நடுங்கி விட்டான். கண்கள் இருண்டன. கால்கள் வெட வெடத்தன. விழிகள் பிதுங்கின. மூச்சுத் திணறிற்று. நெஞ்சு நெக்குவிட்டது.

" உங்கள் பெயரென்ன ?" என்ருர் திருச்சி சூப் ரெண்ட்.

" என் பெயர் முகுந்தலால் " என்று, குரல் நடுங்கிற்று.

" முகுந்தலாலா ? அல்ல, அல்ல. 'ஷங்கர்ஜி' என்பதல்லவா உங்கள் பெயர் ?" என்ருர் சூப்ரெண்ட்.

" அல்லவே அல்ல. என் பெயர் ஷங்கர்ஜியல்ல."

" ஷங்கர்ஜியல்லவா ? ஷங்கர்ஜியல்லாவிட்டால் உங்கள் பெயர் முனிஜியாகத்தான் இருக்கவேண்டும். முகுந்தலாலாக இருக்க முடியாது. முனிஜிதானே நீங்கள் ?"

பதிலில்லை.

அங்கமச்ச அடையாளங்களைச் சோதித்தார்கள். முகுந்தலாலின் அங்க மச்சங்கள் முனிஜியின் அடை யாளங்களாகவே இருந்தன.

முனிஜியும் சையத்காதரும் சென்னையில் வந்து பிரிந்தபோது சையத்காதர், தான் நேராக ஹைதரா பாத்துக்குப் போய், தன்னுடைய மைத்துனர் அரண்மனை உத்யோகஸ்தர் அப்துல் ரஜாக் வீட்டில் ஒளிந்திருக்கப் போவதாக விலாசம் கொடுத்திருந்தான். அப்போது முனிஜிக்கு எங்கே போய் ஒளிந்திருப்பது என்பது நிச்சயமாகவில்லை. அதனல் முனிஜி ஒரு விலாசமும் கொடுக்க முடியவில்லை. சொந்த வீட்டுக்குப் போகக் கூடாது என்பது மட்டும் இருவரும் தீர்மானித்துக் கொண்டது. மூன்று மாதங்களாக முனிஜி எங்கெங்கோ இருந்துவிட்டுத் தன்னுடைய மனைவியையும் தாயாரை யும் பார்த்துவிட ஆசையுண்டாகி, ஒருநாள் இரவு சொந்த வீட்டுக்குப் போய் அங்கே இரண்டு நாள் இருந் தான். அவனைப் போலீஸ்காரர்கள் தேடிக்கொண்டு அடிக்கடி வீட்டுப் பக்கம் வருவதனல் அங்கிருப்பது அபாயம் என்று அவனுடைய தாயாருடைய ஆலோ சனைப்படி பம்பாய்க்கு வந்தான். கோவர்த்தன்லால் முனி ஜிக்குத் தாய் மாமன். தாயாருக்குத் தம்பி. கோவர்தன் லால் அவனுக்கு வேண்டிய பாதுகாப்புகளுக்கு ஏற்பாடு செய்து, புது மனிதர் யாரும் அவனை அணுக முடியாத படிப் பார்த்துக் கொண்டார். வசதிகளும் பந்தோபஸ்தும்

உள்ளதான கிருஷ்ணானந்த பவனிலேயே தங்கியிருக்கத் தீர்மானித்தவன் சும்மாயிருக்காமல் ஹைதராபாத்தி லுள்ள சையத்காதருக்குக் கடிதம் எழுதினன். அந்தக் கடிதம் சையத்காதர் திருச்சினுப்பள்ளிக்குப் பயணப் பட்டுக்கொண் டிருக்கும்போது கிடைத்தது. அதனல் அங்கிருந்தே பதில் எழுதமுடியாமல் திருச்சினுப் பள்ளியி லிருந்து பதில் எழுதினன். அந்தக் கடிதம்தான் இப்படி முனிஜியைக் காட்டிக்கொடுத்து விட்டது.

ஏமாந்து போனுர்கள்

சையத் காதரையும் முனிஜியையும் பிடித்துவிட்டார் கள். சங்கரலிங்கன் மட்டும் இன்னும் எத்தனை நாளைக்குப் பிடிபடாமல் இருக்க முடியும்? இங்கிலீஷ் ஆட்சியின் சகல சக்திகளும் சேர்ந்து 'ஷங்கர்ஜி' யைத் தேடிக் கொண்டிருக்கின்றன. சையத்காதரைப் பிடித்த திருச்சி சூப்ரெண்ட் துரை, முகுந்தலால் என்ற பெயரில் பம்பா யில் பதுங்கியிருப்பவன் அந்த 'ஷங்கர்ஜி' யாக இருக்க வேண்டுமென்றே ஆசைப்பட்டார். ஆனல் அது முனிஜியாக முடிந்தது. என்ருலும் ஓடிப்போன கைதிகள் மூன்று பேர்களில் இருவரைத் தாம் ஒருவரே கண்டு பிடித்துவிட்ட களிப்பு, அந்த 'ஷங்கர்ஜி'யையும் தாமே கண்டுபிடித்ததாக இருக்கவேண்டும் என்ற ஆவலை எழுப்பிவிட்டது. 'ஷங்கர்ஜி' யைப் பிடித்து விட்டால் பெரும்பரிசு கிடைப்பதுமட்டுமா? பாராட்டு கள் எவ்வளவு கிடைக்கும்! பதவி எவ்வளவு உயரும்!

அதனல் உடனே அவர் மேலதிகாரிகளுக்கு எழுதி, தம்மை 'ஷங்கர்ஜி' யைக் கண்டுபிடிக்கும் 'ஸ்பெஷல் டியூட்டி' யில் நியமிக்கும்படி கேட்டுக்கொண்டார். மேலதிகாரிகளும் மிகுந்த மகிழ்ச்சியுடன் அவரை அந்த வேலையில் நியமித்தார்கள். சங்கரலிங்கனுடைய சொந்த ஊராகிய வசந்தபுரியிலும் அவனுடைய மாமனுர் ஊராகிய விருதூரிலும் ஏற்கெனவே கண்காணித்துக் கொண்டிருந்த ரகசியப் போலீஸ்காரர்களுக்குத் தலை வரானர். திருச்சி சூப்ரெண்ட். வசந்தபுரியிலுள்ள கோபாலகிருஷ்ணரின் மாளிகையும் விருதூரிலுள்ள

மகாதேவர் வீடும் முன்னிலும் அதிகக் கவனிப்புடன் கண்காணிக்கப்பட்டன. இந்த இரண்டு வீடுகளையும் எப்போது வேண்டுமானலும் சோதனை செய்யக்கூடிய அதிகாரத்தையும் வாங்கிக்கொண்டார். அத்துடன் இந்த இரண்டு வீடுகளிலும் வசிக்கிற யாருக்கும் வருகிற எல்லாத் தபால்களையும் உடைத்துப் பார்க்கும் அதிகாரமும் உடையவரானர்.

... ...

கல்லிற் செதுக்கிய சிலையோ, கனகத்தாற் செய்த பதுமையோ, ஓவியத்திலுள்ள உருவமோ என்று நினைக்கும்படி மூச்சுவிடும் அசைவுகூடத் தெரியாமல், கண்களை மூடித் தலையைக் கவிழ்த்துக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள், மாதர் திலகமான மங்களாம்பாள். கணவனை நினைத்துக்கொண்டோ, கணவனைக் காப்பாற்ற வேண்டுமென்று கடவுளை எண்ணிக் கொண்டோ மெய்ம்மறந்து மேஜைக்கு முன்னல் அமர்ந்திருந்தாள். விருதூரில் சிவன் கோயில் சேவை செய்து கொண்டிருந்தவரையிலும் மங்களாம்பாளுக்குத் தன் கணவரைப்பற்றிய சேதி ஒன்றும் வரவில்லையே என்ற ஒரு ஏக்கம்தான். தீங்கு எதுவும் நேர்ந்துவிடாதிருப்பதற்குத் தோஷ பரிகாரமாகத்தான் சிவசேவை செய்து வருவதாக நம்பினாள். பக்திபூர்வமான சேவையினால் நல்ல பலனுண்டாகும் என்று தன்னுடைய சிந்தனையை முற்றிலும் பகவானிடத்திற் செலுத்தியிருந்ததால் அப்போது அவளுக்குத் துயரம் என்பது துளிகூட இல்லாமல் இருந்தது.

கள்ளத்துறவியின் காமவெறியினால் அந்த சிவசேவைக்குப் பங்கம் வந்து, மானங்கெட்டதுபோன்ற மாசும் உண்டாகி, விருதூரை விட்டு வசந்தபுரிக்கு வந்த நாளாக அவளுக்குத் துயரம் மலைபோல் வளர்ந்து

விட்டது. இப்போது தன்னுடைய கணவனுக்கு நேர்ந்துள்ள கதி இன்னதென்பது விளங்கிற்று. யுத்த முனைக்கு அனுப்பப்பட்ட சங்கரலிங்கன் இங்கிலீஷ் ஆட்சிக்கு விரோதியான ஜப்பானோடு உறவுகொண்டிருந்த நேதாஜியுடன் சேர்ந்து கொண்டதும், நேதாஜிக்கு நேர்ந்த மரணமும், சங்கரலிங்கன் முதலானவர்கள் சிறைப்பட்டதும், மரணதண்டனை விதிக்கப்பட்டதும், சிறையிலிருந்து ஓடிவிட்டதும், போலீஸ்காரர்கள் பிடிக்கத் தேடிக்கொண்டிருப்பதும் இப்போதுதான் தெரிந்தது. சங்கரலிங்கனுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டிருப்பதைப் பத்திரிகையில் முன்னே பார்த்த எதிர் வீட்டுக் குப்புசாமியும் மகாதேவரும் அதை மறைக்க முடிந்தது. இப்போது யாருக்கு மறைக்க முடியும் ?

இந்த விவரங்கள் வெளியாவதற்கு முன்னாலேயே மகனைப்பற்றிய ஏக்கம் அதிகப்பட்டு அன்னபூரணியம்மாள் அசௌக்கியமடைந்து விட்டாள். அப்போதுதான் மருமகளை அழைத்து வரும்படி விருதூருக்குக் 'கார்' அனுப்பப்பட்டது. கார் வருவதற்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னல்தான் கள்ளத்துறவியினால் மங்களாம்பாளுக்கு மானக்குறைவான காரியம் நடந்து சிவன் கோயில் சேவையும் நிறுத்திவிடப்பட்டிருந்தது. விருதூரிலிருந்து வந்த மங்களாம்பாள், சிவபூசையினால் தன்னுடைய ஜாதகதோஷம் நீங்கிவிடும் என்றும் கணவர் ஒரு குறையும் இல்லாமல் வந்துவிடுவார் என்று பார்வதிதேவி தனக்குக் கனவில் வந்து வரங்கொடுத்திருப்பதாகவும் புனைந்துசொல்லி மாமியாரை உத்ஸாகப்படுத்தினாள். இயல்பாகவே தெய்வ நம்பிக்கை மிகுந்த அன்னபூரணியம்மாள் மருமகள் செய்த பார்வதி ஜெபம் பலிக்கும் என்றே ஆறுதல் அடைந்தாள். அத்துடன் மங்களாம்பாள் தன்னுடைய மனதில் எரிமலைபோல்

பொங்கிக்கொண்டிருந்த குழப்பங்களை ஒரு சிறிதும் காட்டிக்கொள்ளாமல் மாமியாருக்குப் பணிவிடைகள் செய்து, சங்கடங்களை மறந்திருக்கும்படியான விஷயங்களையே பேசிக்கொண்டிருந்ததால் அன்ன பூரணியம்மாள் உள்ளமும் உடலும் சிறுகச் சிறுகத் தேறுதலடைந்தன. மாமனுர் கோபாலகிருஷ்ணரிடத்திலும் மங்களாம்பாள் அதைப்போலவே நடந்துகொண்டு அவரை மகிழ்வித்தாள். கோபாலகிருஷ்ணரும், அவர் மகனைக்குறித்து ஜோசியம் கேட்டதும் ஜோசியர் மங்களாம்பாளின் ஜாதகத்திலுள்ள தோஷத்தைச் சொல்லி அதற்குப் பரிகாரமாகச் சிவபூசை செய்து பார்வதி தோத்திரம் ஜெபிக்கச் சொன்னதும் நன்மையுண்டாக்கியதாகப் பூரிப்படைந்தார்.

இந்த நிலைமை அதிக நாள் நீடிக்கவில்லை. சிறையிலிருந்து தப்பி ஓடிவிட்ட சங்கரலிங்கனையும் மற்ற இருவரையும் பிடிக்கும்படி விளம்பரப்படுத்தப்பட்டதும் அதன் பிறகு போலீசாருடைய கண்காணிப்பு எந்த நேரத்திலும் வீட்டைச் சுற்றிக் கொண்டிருப்பதும் கோபாலகிருஷ்ணரையும் அன்னபூரணியம்மாளையும் மறுபடியும் கண்கலங்கச் செய்துவிட்டன. அந்தக் கலக்கம் மங்களாம்பாளுக்கும் உண்டு. ஆனாலும் அதை வெளியில் காட்டிவிட்டால் மாமியார் மனமுடைந்து போவாரென்று, தன்னுடைய வயசுக்கு மிகவும் மீறிய மனவலிமையுடன் அடக்கிக்கொண்டு, மீண்டும் மீண்டும் பார்வதிதேவி கனவிற் கொடுத்த வரத்தையே நினைப்பூட்டித் தேற்றுவாள். மாமனுருக்குத் துயரம் மிகுந்தால் அது அவருக்கு அழுகையையும் ஆத்திரத்தையும்தான் உண்டாக்கும். ஆனால் மாமியாருக்குத் துக்கம் அதிகப்பட்டால் அது மரண அபாயம் உண்டாக்கக்கூடிய நோயாகத்தான் மாறிவிடும். அதனால் மங்களாம்பாள் வெகு ஜாக்கிரதை

கூடும் கூடும்.

யுடன் தன் மனவேதனைகளை வெளிக்குக் காட்டாமல் அடக்கி மறைத்து நடந்து கொள்வாள். மாமிக்கும் மாமனுருக்கும் முன்னலிருக்கும்போது மட்டும்தான் இந்த மறைப்பு. அவர்களைவிட்டுத் தனியே இருக்க நேரிடுகிற போதெல்லாம் ஆரம்பத்தில் சொன்னது போல் தன்னுடைய அறைக்குள் அசையாமல் உட்கார்ந்துகொண்டு எண்ணி யெண்ணிக் கண்ணீர் வடிப்பதுதான் அவளுடைய அந்தரங்கம்.

அப்படித்தான் இன்றைக்கும் அழுதுகொண்டிருந்தாள். மாமியாரையும் மாமனுரையும் தேற்றத் தெரிந்திருந்த அவள் தன்னைத்தானே தேற்றிக்கொள்ள முடியவில்லை. கணவனைச் சூழ்ந்து நிற்கும் அபாயம் அவளுக்குத் தெளிவாகத் தெரிந்தது. இப்போது உயிரோடுதான் இருக்கிறார். மரணதண்டனையடைந்து சிறையிலிருந்துத் தப்பி ஓடிவந்துவிட்ட அவர் எவ்வளவு காலம் போலீசாருக்கு அகப்படாமல் மறைந்திருக்க முடியும்? முடிந்தாலும் என்ன பயன்? வீட்டுக்கு வரமுடியுமா? வந்தால் பிடிக்காமல் விடுவார்களா? பிடித்தால் உடனே மரணதண்டனையை நிறைவேற்றிவிடுவார்கள். பிறகு என்கதி? தண்டனை விதிக்கப்பட்டுச் சிறையிலிருந்து ஓடிவிட்டவர்கள் சிக்கிக்கொண்டால் முன்னே விதிக்கப்பட்ட தண்டனைக்குமேல் இன்னும் அதிக தண்டனை கொடுப்பார்களேயன்றிக் குறைக்கமாட்டார்கள். எப்படிப் பார்த்தாலும் அவர் தப்பித்துக்கொள்ள வழியில்லை. பார்வதிதேவி கனவில் காட்சியளித்து வரங்கொடுத்ததாகச் சொன்னேன். அது அவர் உயிரோடிருக்கிறார் என்ற மகிழ்ச்சியினால் மாமிக்கும் மாமாவுக்கும் துயரம் குறையவேண்டிச் சொன்னதுதான். அது பலிக்குமா? பலிப்பது அரிது. பலிக்கும் என்று அனுமானிக்கத்தக்க அறிகுறி ஒன்றுமில்லை. பலிக்காவிட்டால்! ஐயோ!

அவருக்கு முன்னால் நான்.....' என்று எண்ணிக் கொண்டிருந்த சமயத்தில் அந்த அறையின் கதவை யாரோ தட்டுவது கேட்டது. கதவு தாழிடப்பட்டிருந்தது. அவசரமாக எழுந்து கண்களைத் துடைத்துக்கொண்டு கண்ணாடியில் முகத்தைச் சரிபார்த்துவிட்டுக் கதவைத் திறந்தாள். மாமனார் கோபாலகிருஷ்ணர் கையில் ஒரு கடிதத்துடன் மலர்ந்தமுகத்துடன் உதட்டில் ஒரு புன் சிரிப்புத் தவழ நின்றுகொண்டிருந்தவர்,

" கதவைத் தாழிட்டுக்கொண்டு என்ன அம்மா செய் கிறாய்? ஏன் முகம் வாடியிருக்கிறது? கண் கலங்கியிருக் கிறதே!" என்றார்.

என்ன பதில் சொல்லுவதென்று சற்றே தயங் கினாள். தானும் ஒரு புன்முறுவல் இழுத்துக்கொண்டு,

" என்னவோ எண்ணிக்கொண்டு உட்கார்ந்திருந் தேன். அப்படியே மேஜையின்மேல் சாய்ந்து கண்ணை யர்ந்துவிட்டேன்" என்றாள்.

" கவலைப்படாதே இனி நமக்கு நல்லகாலம் வந்து விட்டது. தோஷம் தொலைந்துவிட்டது. பார்வதி பூசை பலிக்கும். இப்போதுதான் வந்தது, இந்தக் கடிதத்தைப் பார்" என்று மாமனார் தம் கையிலிருந்த கடிதத்தைக் கொடுத்தார். தான் தேற்றிக்கொண்டிருந்த மாமனார் தன்னைத் தேற்றித் தைரியமூட்டுகின்றாரே என்ற வியப் புடன் வெகு ஆவலோடு கடிதத்தை வாங்கி விரித்தாள். அதில்:—

தேவரீர் தந்தையவர்களுக்குப் பலகோடி நமஸ்காரம். நான் மிகவும் சௌக்கியமாக இருக்கிறேன். என்னைப் பற்றித் துளிகூடக் கவலைப்படவேண்டாம். நான் சீக்கிரம் அங்கே வருகிறேன். தாயார் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைச் சொல்லி அவர்களைத் தைரியப்படுத்தும்

கள். சௌபாக்கியவதி மங்களாம்பாளுக்கு என் வாழ்த் துக்களைச் சொல்லுங்கள். நமஸ்காரம்.

தங்கள்
Shankar.

என்று இருந்தது. அதைப் படித்த மங்களாம்பாளின் மனதில் பொங்கியெழுந்த மகிழ்ச்சியை மதிப்பிடவும் முடியுமா? சற்று நேரத்துக்கு முன்னால் அழுகைக் கண்ணீர் வடித்த கண்களில் ஆனந்த நீர் பொழிந்தன.

" அத்தை இதைப் பார்த்தார்களா?" என்றாள்.

" இல்லை. இதை நீயே அவளுக்குக் காட்டவேண்டு மென்றுதான் உன்னைத் தேடிக்கொண்டு வந்தேன்" என்றார்.

மான்குட்டிபோல் துள்ளிக்கொண்டு மங்களாம்பாள் மாமியைத் தேடி ஓடினாள். மாமனார் பின்தொடர்ந்தார். மருமகளோ மற்றவர்களோ அருகில் இல்லாதபோ தெல்லாம் மகனைப் பற்றிய சிந்தனைதான் அன்னபூரணி அம்மாளுக்கு. காலடி ஓசைக்கும் மேலாகக் கலகலத்த சிரிப்போடு ஓடிவந்த மருமகளைக்கண்டு, சோர்ந்து படுத் துக்கொண் டிருந்த அன்னபூரணியம்மாள் சுருட்டிவாரி உட்கார்ந்துகொண்டு,

" என்னடி! என் கண்ணே, எதனால் அவ்வளவு சந்தோஷம்?"

" இதோ கடிதம் வந்திருக்கிறது."

" எங்கிருந்து?"

" அவரிடத்திலிருந்துதான்"

"சங்கரனிடமிருந்தா?"

"ஆமாம், இதோ நீங்களே பாருங்கள். அவருடைய எழுத்துதான் பாருங்கள்" என்று மங்களம் கடிதத்தை நீட்டினாள்.

"என்ன எழுதியிருக்கிருன்? நீயே படி கேட் கிறேன்."

மங்களம் படித்தாள். மாமியாரின் முகம் மலர்ந்தது. வறண்டு வெளுத்துக் கிடந்த முகத்தில் செழுமை வந் தது. பதுங்கிக் கிடந்த கண்கள் பளிச்சிட்டன. சுருங்கி யிருந்த கன்னங்கள் சுரந்தன. வெகு நாளாகக் காணு மற்போயிருந்த சிரிப்பு காணக்கிடைத்தது. உலர்ந் திருந்த தொண்டை ஊற்றெடுத்தது. குமுறிக்கொண் டிருந்த உள்ளம் குளிர்ந்தது.

"எங்கேயிருந்து எழுதியிருக்கிருன்?"

"இருக்கிற இடம் எழுதவில்லே"

"தபால் முத்திரையைப் பாரேன்"

"தபால் முத்திரை 'ஆக்ரா' என்றிருக்கிறது."

"ஆக்ராவிலா இருக்கிருன் ?"

"ஆக்ராவில் இருக்கிருரோ வேறு எங்கே இருக்கி ருரோ, தபால் முத்திரை 'ஆக்ரா'."

"எப்போது வருகிருனும் ?"

"குறிப்பாக எப்போது என்று ஒன்றுமில்லே. சீக்கிரம் வருவதாக எழுதியிருக்கிறது."

"அந்த 'சீக்கிரம்' என்பது எத்தனேநாளோ, எத் தனே மாசமோ, யார் கண்டது? போகட்டும். இந்தக் கடிதத்தையாவது எழுதி வயிற்றில் கொஞ்சம் பாலே வார்த்தானே" என்ருள் அன்னபூரணியம்மாள். அது வரையிலும் சும்மாயிருந்த கோபாலகிருஷ்ணர் தம் மனேவியைப் பார்த்து,

"மங்களத்தின் ஜாதகதோஷம் நீங்கிவிட்டது. அவள் செய்த சிவசேவை வீண்போகாது. நீ சும்மா அலட்டிக் கொள்ளாதே. தைரியமாக இரு" என்ருர்.

சங்கரலிங்கனுடைய நிலேமை எதுவானுலும் கவலே யில் முழுகிக்கிடந்த இவர்களேத் 'துளிகூடக் கவலேப்பட

வேண்டாம்' என்று சொல்லும் இந்தக் கடிதம் அளவற்ற ஆறுதலேக் கொடுத்ததில் அதிசயமில்லே. மங்கி இரு ளடைந்திருந்த கோபாலகிருஷ்ணர் மாளிகையில் மகிழ்ச்சி ஒளிவீசத் தொடங்கியது.

கோபாலகிருஷ்ணரையும் அன்னபூரணியம்மாளே யும் மங்களாம்பாளேயும் விட இந்தக் கடிதத்தால் மகிழ்ச்சி யடைந்தவர் மற்ருெருவர். அவர்தான் திருச்சிஞப்பள்ளி சூப்ரெண்ட் துரை. இப்போது 'ஸ்பெஷல் டியூட்டியில்' 'ஷங்கர்ஜி'யைப் பிடிப்பதற்காகக் கோபாலகிருஷ்ணர் மாளிகையைக் கண்கொட்டாமல் கவனித்துவரும் துப் பறியும் போலீசாரின் தலேவர். வழக்கம் போல் இந்தக் கடிதமும் போலீசார் பிரித்துப் பார்த்து அனுப்பியது. இந்தக் கடிதத்தில் ஷங்கர்ஜி இருக்கிற விலாசம் இல்லே. ஆக்ரா என்னும் தபால் முத்திரையிலிருந்து ஒன்றும் கண்டுகொள்ள முடியாது. அந்த விஷயத்தில் ஷங்கர்ஜி வெகு ஜாக்கிரதையாகத்தான் இருந்திருக்கிருன். சையத் காதரும் முனிஜியும் தம்முடைய விலாசத்தை ஒருவருக் கொருவர் தெரியப்படுத்திக்கொண்ட அறிவீனத்தால் தான் சிக்கிக் கொண்டார்கள். ஹைதராபாத்திலுள்ள தன் மைத்துனன் விலாசத்தைச் சொல்லாமல் இருந் திருந்தால் சையத்காதருக்கு முனிஜி கடிதம் எழுதி யிருக்கமாட்டான். முனிஜியாவது தன்னுடைய விலா சத்தை எழுதாமல் வெறும் க்ஷேம சமாசாரத்தைமட்டும் எழுதியிருந்தால் அவனும் பிடிபட்டிருக்கமாட்டான். இந்த முன் யோசனே ஷங்கர்ஜிக்கு இருந்திருக்கிறது. அதனல் போலீஸ்காரர் அவன் இப்போது மறைந்திருக் கிற இடத்தைக் கண்டுபிடிப்பது கடினம். ஆனலும் அவன் சீக்கிரத்தில் இங்கே வரப்போவதாக எழுதி யிருக்கிற அதுவே போதும் என்று சூப்ரெண்ட் துரை ஆனந்த மடைந்தார். அதனல் கண்காணிப்பு அதிகப்

பட்டது. அந்த ஊருக்கு வருகிற எல்லா ரயில்வண்டி களிலும் வந்து இறங்குகிற ஒவ்வொரு பிரயாணியும் கவனிக்கப்பட்டான். பெண் வேஷத்தில் வந்தாலும் வரலாமென்று பெண்களும் கவனிக்கப்பட்டார்கள்.

ஆங்கிலேய மேலதிகாரிகளின் கண்டிப்பான உத் தரவுகளால் உள்ளூர் போலீஸ் அதிகாரிகள், கோபால கிருஷ்ணர் ஊரில் மிகப்பெரிய மனிதரென்பதற்காகவும், அன்னபூரணியம்மாள் பெரிய புண்ணியவதியென்பதற் காகவும், சங்கரலிங்கன் மிகவும் நல்லவன் என்பதற்காக வும், அவனுடைய மனைவி அனுதாபத்துக்குரிய குணவதி யென்பதற்காகவும் காட்டிவந்த சலுகைகளுக்கு இடமில் லாமற் போய்விட்டது. கோபாலகிருஷ்ணருடைய மாளி கையைச் சுற்றிலுமுள்ள சந்து பொந்துகளிலெல்லாம் துப்பறியும் போலீசார் இடங்கொண்டார்கள்.

ஒருமாதம் வரையில் ஒன்றும் நடை பெறவில்லை. சீக்கிரம் வருவதாக எழுதியிருந்த ஷங்கர்ஜி இன்னும் வரவில்லையே என்று சூப்ரெண்ட் துரை துடித்துக் கொண்டிருந்தார்.

அதன் பிறகு ஒருநாள் இரவு எட்டுமணிக்கு ஒரு 'மோட்டார்கார்' கோபாலகிருஷ்ணருடைய மாளிகையின் பின்புறத்துச் சந்தில் வந்து நின்றது. அதிலிருந்து முதலில் ஐம்பது வயதுக்குமேல் மதிக்கக்கூடிய ஒரு ஆண்பிள்ளை இறங்கினார். வைதீக முறையில் கச்ச மிட்டு வேஷ்டிகட்டியிருந்தார். அதன்பின் முப்பது வயதுக்கும் குறைவாக மதிக்கத்தக்க ஒரு வாலிபன் இறங்கினான். அவன் 'சூட்டும்பூட்டு'மாக உடை தரித் திருந்தான். கடைசியாக ஒரு இளம் பெண் இறங்கி னாள். மூவரும் கோபாலகிருஷ்ணர் வீட்டுப் பின்புறத்து வாசல் வழியாக உள்ளே போய்விட்டார்கள். இதை அந்தப் பின்புறச் சந்தில் நியமிக்கப்பட்டிருந்த துப்பறி

யும் போலீசார் பார்த்துக் கொண்டிருந்தார்கள். உடனே இந்தச் சேதி மாளிகையின் முன்புறத்தை கவனித்துக் கொண்டிருக்கும் அவர்கள் தலைவனுக்கு அறிவிக்கப் பட்டது. அவன் உடனே சூப்ரெண்ட் துரைக்குச் சேதி யனுப்பினான்.

கோபாலகிருஷ்ணருடைய மாளிகைக்குள் புகுந்து சோதனையிடவும் அங்கிருந்து யாரும் தப்பி ஓடிவிட முடி யாதபடி பார்த்துக் கொள்ளவும் போதுமான ஏற்பாடு களுடன் சூப்ரெண்ட் துரை வந்தார். அந்த மாளிகை யின் பின்புறத்து வாசலைக் காவல்புரிய ஆயுதபாணிக ளான ஆறு ஜவான்களை அமர்த்திவிட்டு, சூப்ரெண்ட் துரையும் ஒரு சார்ஜெண்டும் ஆறு ஜவான்களும் மாளி கையின் தலைவாசலுக்குப் போனார்கள். அந்த வீதிமுழு வதிலும் பின்புறத்துச் சந்துகளிலும் வெவ்வேறு இடங் களில் ஆயுதந்தரித்த போலீசார் நிறுத்தப்பட்டனர்.

கோபாலகிருஷ்ணர் கண்ணியந் தெரிந்த கனவான். அத்துடன் வயதானவர். முரட்டுத்தனமான எதிர்ப்புக் காட்டமாட்டார். ஆனால் அவர் வீட்டில் ஏராளமான வேலைக்காரர்கள் இருக்கிறார்கள். பெரும்பாலும் வலிமை யுள்ள வாலிபர்கள். அவர்கள் எதிர்ப்புக் காட்டலாம். புதிதாக வீட்டுக்குள் போனதாகச் சொல்லப்படுகிற ஆண்பிள்ளைகளில் ஒருவன் கட்டுமஸ்தான வாலிபன். அவன்தான் ஷங்கர்ஜியாக இருக்கும். அவன் நம்மைக் கண்டு தப்பி ஓடிவிட முரட்டுத்தனம் மேற்கொள்ள லாம் என்றெல்லாம் எண்ணிக்கொண்டே சூப்ரெண்ட் துரை மாளிகையின் தலைவாசலை மெதுவாகத் தட்டினார். பதிலில்லை. மீண்டும் சற்றே பலமாகத் தட்டினார். சிறிது நேரத்தில் கதவு திறக்கப்பட்டது. உள்ளே நுழைந்தார் கள். திறந்துவிட்ட வேலைக்காரன் போலீசாரைக் கண்டு திடுக்கிட்டான்.

அவன் திகைத்துக் கொண்டிருக்கும் போதே போலீசார் அந்த மாளிகையின் வரவேற்புக் கூடத்துக்கு வந்து விட்டார்கள். அந்தக்கூடம் மிக்க விலையுயர்ந்த நாற்காலி களும் சோபாக்களும் உள்ள வெகு அலங்காரமான இடம். கோபால கிருஷ்ணரைப் பார்க்க வருகிறவர்களை அவருடைய காரியதரிசி முதலில் வரவேற்று அங்கே தான் அமரச்செய்வது வழக்கம்.

வந்தவர்களை எதிர்கொள்ளக் காரியதரிசி வந்தார். துரையையும் ஜவான்களையும் கண்டு துணுக்குற்றார். சமாளித்துக் கொண்டு துரைக்கு ஆசனம் தந்து அமரச் சொன்னர். துரை அதில் உட்காராமல் மிகவும் சாந்தமாக,

"எஜமான் எங்கே?" என்றார்.

"எஜமான் மாடியில் இருக்கிறார்" என்றார் காரிய தரிசி.

"அவரை நான் உடனே பார்க்கவேண்டும். அவர் இருக்கிற இடத்துக்கு வழிகாட்டுங்கள்."

"எஜமானை உடனே பார்க்கமுடியாது. வடக்கே யிருந்து யாரோ விருந்தாளி வந்திருக்கிறார். அவருடன் ஏதோ இரகசியம் பேச வேண்டுமென்றும் அந்தப்பேச்சு முடிகிறவரைக்கும் அங்கே யாரும் வரக்கூடாது என்றும் வெகு கண்டிப்பாக எனக்கு உத்தரவிட்டிருக்கிறார். உட் காருங்கள். அந்தப் பேச்சுக்கள் முடிந்தவுடன் நானே எஜமானை இங்கே அழைத்து வருகிறேன்."

"வடக்கேயிருந்து விருந்தாளி வந்திருக்கிறாரா! ஆக்ராவிலிருந்துதானே?"

"ஆக்ராவோ டில்லியோ ஊரின் பெயர் எனக்குத் தெரியாது. உட்காருங்கள், எஜமான் வருவார்."

"எனக்கு உட்கார நேரமில்லை. நானும் வடக்கே யிருந்து வந்திருக்கிற அந்த விருந்தாளியைப் பார்க்கத்

தான் வந்திருக்கிறேன். வெகு அவசர காரியமாக உடனே பார்க்கவேண்டும். உங்கள் எஜமானருக்குத் தெரியப்படுத்துங்கள்" என்றார் துரை.

"இருங்கள், எஜமானைக் கேட்டுக்கொண்டு வரு கிறேன்" என்று காரியதரிசி மாடிப்படிக்குப் போனார். போலீசார் காத்திருக்கவில்லை. பின்னாலேயே போய் மாடிப்படிக்கு வழி தெரிந்தவுடன் அவர்களும் மாடிக்குப் போய்விட்டார்கள். போலீஸ்காரர் பின்னால் வருவதைக் காரியதரிசி கவனிக்கவில்லை.

கோபாலகிருஷ்ணர் அவருடைய அறைக்குள் வீட் டுக்கு வந்த இரண்டு ஆண் பிள்ளைகளுடன் பேசிக் கொண்டிருந்தார். அறை தாழிடப்பட்டிருந்தது. காரிய தரிசி கதவைத் தட்டுவதற்குள் போலீஸ்துரையே கதவண்டை வந்துவிட்டார். கதவு தட்டப்பட்டது. கோபாலகிருஷ்ணர் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தார். போலீஸ்காரர்களைக் கண்டு அச்சமும் வருத்தமும் அவமானமும் அடைந்தார். தமது காரிய தரிசியும் இருப்பதைக் கண்டு அவன்தான் இவர்களை அழைத்து வந்துவிட்டது போல் ஆத்திரமடைந்தார். ஆனால் அடக்கிக்கொண்டார்.

சூப்ரெண்ட் துரை கோபாலகிருஷ்ணருடைய அந் தஸ்துக்குரிய மரியாதையுடன் 'சல்யூட்' செய்து:

"மன்னிக்கவேண்டும். நான் என்னுடைய கடமை யைச் செய்ய வேண்டியிருக்கிறது. இப்படி வந்து தங்க ளுக்கு வருத்தமுண்டாக்க நேர்ந்துவிட்டது" என்றார்.

"பரவாயில்லை. உங்கள் கடமையை நீங்கள் செய் யத்தானே வேண்டும். இங்கே உங்கள் கடமை என்ன?"

"சற்று நேரத்துக்கு முன்னால் இந்தவீட்டின் பின் புறத்து வாசலின் வழியாக இரண்டு ஆண் பிள்ளைகளும்

ஒரு பெண்ணும் வீட்டுக்குள் வந்திருக்கிறார்களே, அவர்கள் யார் என்று அறியவேண்டும்.''

'' அவர்களா ? அவர்கள் என்னுடைய உறவினர். உடல் நலமில்லாதிருந்த என் மனைவியைப் பார்த்து விட்டுப்போக வந்தவர்கள்.''

'' அவர்களை நான் சோதிக்கவேண்டும். தாங்கள் சொல்வது உண்மையானாலும் நான் செய்யவேண்டியதைச் செய்ய வேண்டுமல்லவா ?'' என்றார் துரை.

இந்தப் பேச்சுக்கள் நடந்துகொண்டிருக்கும் போதே அந்த அறைக்குள்ளிருந்த இரண்டு ஆடவருள் வயதிற் பெரியவரானவர் வெளியே வந்தார். அவர் வேறு யாருமல்ல. கோபாலகிருஷ்ணரின் சம்பந்தி, மங்களாம்பாளின் தந்தை மகாதேவர்தான். அவரை விருதூரிலேயே இந்த சூப்ரெண்ட் பலமுறை பார்த்திருக்கிறார். மோட்டாரில் வந்து இறங்கியவருள் அவர் ஒருவரா என்று, மோட்டார் வந்தபோது பார்த்துக்கொண்டிருந்த இரகசியப் போலீஸ்காரனைக் கேட்டார். 'ஆம்' என்று பதில் வந்தது. மாமனார் மருமகனுடன் வந்திருப்பதாக துரை நினைத்தார்.

'' இவருடன் வந்த இளைஞர் எங்கே ?'' என்று துரை கேட்டுக்கொண்டிருக்கும் போது அந்த அறைக்குள்ளிருந்து ஏதோ ஓசை கேட்டது. அந்த ஓசை உள்ளே இருக்கிறவன் தப்பி ஓடிவிடுவதற்காக அங்குள்ள வேறொரு கதவைத் திறப்பதுபோல் சூப்ரெண்டுக்குத் தோன்றியது. உடனே அவர் அறைக்குள் வேகமாகப் புகுந்தார். ஜவான்களும் பின் தொடர்ந்தார்கள். அந்த சமயத்தில் உள்ளேயிருந்த வாலிபன் அவ்வறையின் கோடியிலிருந்த ஒரு ஜன்னலைத் திறக்கத் தான் முயற்சி செய்து கொண்டிருந்தான். ~~உள்ளே~~

~~இருந்தபடியே போலீசாரைப் பார்க்கவே அவன் அந்தச் காளாத்தைத் திறக்க விரும்பியது.~~

உள்ளே வந்துவிட்ட போலீசாரை உற்றுப்பார்த்துக் கொண்டே அந்த இளைஞன் அசையாமல் நின்று கொண்டிருந்தான். சூப்ரெண்ட் துரை அவனருகில் வந்தார். அவனைக் கூர்ந்து பார்த்தார். அவன் உயரமும் நிறமும் 'ஷங்கர்ஜி' யின் உயரத்தையும் நிறத்தையும் ஒத்திருந்தன. காதுகளில் கடுக்கன் துவாரங்களும் காணப்பட்டன. அவன் இரண்டு கைகளையும் பின்னல் கட்டிக்கொண்டு நிமிர்ந்து நின்றபடியே துரையைப் பார்த்தான். அவன் தன்னுடைய கைகளைப் பின்னல் கட்டிக்கொண்டிருப்பது அவன் இடது கையிலுள்ள 'மங்களம்' என்ற பச்சையை மறைக்கத்தான் என்று துரை எண்ணினார்.

'' நீங்கள் ஆக்ராவிலிருந்துதானே வந்தீர்கள் ?'' என்று கேட்டார் துரை.

'' இல்லை நான் டில்லியிலிருந்து வருகிறேன்.''

'' டில்லியிலிருந்தா ? உங்கள் பெயரென்ன ?''

'' என் பெயர் குமரேசன் ''

'' குமரேசனு ! உங்கள் கைகளை நீட்டுங்கள் ''

இரண்டு கைகளையும் சட்டையோடு நீட்டினான்.

'' சட்டையைக் கழற்றுங்கள்.''

சட்டையைக் கழற்றினான். இளைஞனைச் சாளரத்தின் அருகில் அழைத்துக்கொண்டுபோய் துரை அவனுடைய இடதுகையைத் திருப்பிப்பார்த்தார். அதில் 'மங்களம்' என்ற பச்சை இல்லை. வலது கையாக்குமென்று அதையும் பார்த்தார். பச்சை இல்லை. அடடா ! என்ன ஏமாற்றம்! உடனே இவர்களுடன் வந்ததாகச் சொல்லப்படுகிற பெண்தான் மாறுவேடம் பூண்டு வந்த ஷங்கர்ஜியாக இருக்குமென்று எண்ணி,

"உங்களுடன் வந்த அந்த அம்மாள் எங்கே?" என்றார்.

"அந்தப் பெண் என்னுடைய தங்கை. ஏன்? பெண் பிள்ளையை எதற்காகத் தொந்தரவு செய்யவேண்டும்?"

"அவரையும் நான் பார்த்துவிட வேண்டியது என் கடமை" என்றார் துரை. பின் கட்டில் இருந்த அந்தப் பெண்ணும் அழைத்து வரப்பட்டாள். அவளையும் பார்த்து விட்ட துரையின் முகம் தோல்வியுற்ற வெட்கத்தால் வெளுத்துவிட்டது. மிகவும் தணிந்த குரலில்,

"இந்த மூன்று பேரையும் தவிர வேறு யாரும் இங்கு இன்று வரவில்லையே?" என்று கோபாலகிருஷ்ணரைப் பார்த்தார். அவர்,

"வேறு யாரும் வரவில்லை. உங்களுக்கு சந்தேக மிருந்தால் வீடு முழுதையும் சோதித்துக் கொள்ளலாம்" என்றார்.

"இல்லை சந்தேகமில்லை. தாங்கள் சொல்வதே போதும். தவறுக தகவல்களால் தங்களுக்குத் தொந் தரவு கொடுத்துவிட்டேன். மன்னியுங்கள்" என்று சொல்லிவிட்டு எல்லாருக்கும் தனித்தனியே வணக்கம் தெரிவித்துவிட்டுத் தம்முடைய பரிவாரத்துடன் மாடியை விட்டு இறங்கிவிட்டார். கோபாலகிருஷ்ணர் வீதி வரை யிலும் துரையுடன் சென்று அவரை வழியனுப்பிவிட்டு வந்தார். போலீசார் மிகவும் ஏமாந்து போனார்கள்.

திருந்திய உள்ளம்

மகாதேவரோடு கோபாலகிருஷ்ணருடைய வீட் டுக்கு வந்த குமரேசனும் அவனுடைய தங்கையும் யார் என்பதை அறியும் போது நமக்கு ஆச்சரியமுண்டாகும். குமரேசன் என்பவன் விருதூரில் மகாதேவர் வசிக்கும் வீட்டுக்கு எதிர்வீட்டுக்காரனுகிய குப்புசாமியின் மைத் துனன். அவனுடைய தங்கைதான் ஆறு வருடங்க ளுக்கு முன்னால் குப்புசாமி வீட்டை விட்டுத் தாய் வீட்டுக்கு இரண்டு குழந்தைகளோடு ஓட்டிவிட்ட கோமதி என்னும் அவனுடைய மனைவி. குமரேசனும் கோமதியும் குப்புசாமியின் தாயாரின் தம்பியின் மக்கள். அவர்களுடைய சொந்த ஊர் விருதூருக்கு மூன்று மைல் தூரத்திலுள்ள புதூர் என்ற சிறு கிராமம். செல்வம் மிகுந்தவர்களல்லவென்றாலும் ஏழைகளல்ல. கோமதி அழகும் குணமும் உள்ள பெண். குப்புசாமியின் தாய் தந்தையர்க்கு அவளிடத்தில் மிகவும் பிரியம். குப்புசாமி யின் கெட்ட சகவாசங்களைப் பற்றிக் கோமதி வருத்தம் தெரிவித்ததற்காக அவளை அவன் குழந்தைகளோடு ஓட்டிவிட்டதை முன்னமேயே அறிவோம். அப்படி ஓட்டப்பட்ட கோமதி, தன் தாய் தந்தையுடன் கிராமத்தில் இருந்துகொண்டிருந்தாள். அவளுடைய தந்தை இறந்து போனார். அவளுக்குப் பூங்காவனம் என்ற ஒரு தமக்கை உண்டு. அவளும் விருதூரிலுள்ள ஒரு வியாபாரிக்கு வாழ்க்கைப்பட்டிருந்தாள். அந்த வியாபாரி ஒரு சிறு மளிகைக் கடையும் ஒரு காய்கறிக் கடையும் நடத்து கிறவர். கோமதியின் தந்தை இறந்தபின் கிராமத்தில் கோமதியும் அவளுடைய தாயாரும் மட்டும்தான் இருந்

தார்கள். குமரேசன் அங்கில்லை. அதனால் கோமதியின் தாயார் விருதூரில் தன் மூத்த பெண்ணுடன் இருந்து விட விரும்பினாள். கோமதிக்கும் கிராமவாசம் பிடிக்க வில்லை. குழந்தைகளைப் படிக்கவைக்கவேண்டுமானாலும் விருதூரில் இருப்பது நல்லது என்று கிராமத்திலுள்ள நிலங்களைக் குத்தகைக்கு விட்டு விட்டு தாயும் மகளும் விருதூருக்கு வந்துவிட்டார்கள். கோமதியின் தமக்கை யின் கணவன் ரங்கசாமி மிகவும் நம்பத்தகுந்த வியாபாரி. மகாதேவர் விருதூருக்கு மாற்றலாகி வந்தநாளாக அவரும் அவருடைய மனைவியும் அந்த ரங்கசாமியின் கடையில்தான் உணவுப்பொருள்களையும் காய் இலை முதலியவைகளையும் வாங்குவது வழக்கமாகிவிட்டது. ரங்கசாமியின் வீடும் கடையோடு சேர்ந்திருந்தது. அதனால் மகாதேவரும் அவருடைய மனைவி ஜானகியம் மாளும் அடிக்கடி கோமதியைப் பார்க்க நேரிட்டுப் பழக்க மும் ஏற்பட்டது. தெருவிலேயே நின்றபடி பேசிவிட்டுப் போய்விடுவதால் கோமதியின் உண்மையான நிலைமை ஜானகியம்மாளுக்கு வெகுநாள்வரை தெரியாது. பிறகு கொஞ்சங் கொஞ்சமாக அறியலானாள். அதன்பிறகு மங்களாம்பாள் சிவன்கோயில் சேவை செய்ய ஆரம் பித்தபின் கோமதியின் பரிசயம் அதிகப்பட்டது. கோமதி இருக்கும் ரங்கசாமியின் வீடும் கடையும் மங்களாம்பாள் கோயிலுக்குப் போகிற வழியில்தான் இருந்தன. வெய்யில் நேரங்களில் நிழலுக் கென்றுவது ஜானகியம்மாள் கோமதி வீட்டண்டைச் சிறிது நின்றுவிட்டுப் போவாள். அடிக்கடி கோமதியும் அவர்களுடன் கோயிலுக்குப் போய் திரும்பி அவர்களுடனேயே வருவாள். மங்களாம் பாள் அதிகம் பேசமாட்டாள். பக்தி உள்ளத்துடன் மௌனமாகவே போய் வருவாள். ஆனால் ஜானகி

யம்மாள் வழிநெடுகக் கோமதியுடன் பேசிக் கொண்டே நடப்பாள். மங்களம் அதையெல்லாம் காதிற் போட்டுக் கொள்ளாமல் சற்று தூரத்தில் பின்னால் நடப்பாள். அந்த முறையில் கோமதியின் நிலைமை ஜானகிக்கும் மங்களத்தின் நிலைமை கோமதிக்கும் நன்றாகத் தெரியும். கோமதிக்கும் தன்னைப் பற்றிய கவலையைவிட மங்களாம் பாளைப் பற்றிய பரிதாபம் அதிகமாக இருந்தது.

இனி, குமரேசன் நிலைமையை ஆராய்வோம். குமரேசன் சிறுவயதில் விருதூரில் அத்தை வீட்டிலேயே படித்துக்கொண்டிருந்தவன். ஒரு நாள் குப்புசாமிக்கும் அவனுக்கும் ஏற்பட்ட சச்சரவினால் குப்புசாமி குமரே சனை மிகவும் வெறுத்துப்பேசி அடித்தும்விட்டான். இவனும் திருப்பிக் குப்புசாமியை நன்றாக அடித்து விட்டான். அதன்பிறகு குமரேசன் அந்த வீட்டில் இருக்க முடியாதபடி குப்புசாமி எந்நேரமும் ரகளை செய்யத் தொடங்கினான். அதனால் குமரேசன் படிப்பே நின்றுவிட்டது. குமரேசன் குப்புசாமியைப் போல் கெட்ட சகவாசங்கள் உள்ளவனல்ல. என்றாலும் முரட் டுப் பிடிவாதமுள்ளவன். அவன் படிப்பை நிறுத்திவிட்டு அங்குமிங்கும் அலைந்துகொண்டிருந்ததை அவனுடைய தந்தை கண்டித்துக் கொண்டிருந்தார். அப்படி ஒரு நாள் அவன் தந்தை கடிந்து பேசினது பொறுக்காமல் குமரேசன் சொல்லாமல் ஊரைவிட்டே ஓடிவிட்டான். பலவிடங்களில் அலைந்து திரிந்துவிட்டு பெங்களூரில் மோட்டார் வண்டிகளைப் பழுது பார்க்கும் ஒரு பட்டறை யில் கூலியாளாகச் சேர்ந்து, கொஞ்சங் கொஞ்சமாக மோட்டார் ஓட்டவும் பழுதுபார்க்கவும் பழகிக்கொண் டான். அங்கிருக்கும்போது ஆகாய விமானங்களைப் பழுதுபார்க்கும் பட்டறைக்கு ஆள் சேர்க்கிறார்களென்று அறிந்து விண்ணப்பம் போட்டான். அந்தப் பட்டறை

யில் இடங்கிடைத்து, விமான எஞ்சினியருக்குச் சிற்ரு ளாக வேலை பார்த்துக்கொண்டிருந்தான். அதன் பிறகு பட்டாளத்தில் சேர்ந்துகொண்டான். யுத்தம் ஆரம்பிப் பதற்கு மூன்று வருடங்களுக்கு முன்னுலேயே குமரேசன் பட்டாளத்தில் சேர்ந்தவன்.

அவனுக்குப்பின், யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னுல் தான் ராணுவத்தில் சேர்ந்த ஜெயபாலையும் சங்கரலிங் கனையும் இந்தியாவில் பல இடங்களில் சந்தித்துப் பழகி நண்பனுனவன். அவனுக்கு ஜெயபால்தான் முதலில் பழக்கமானுன். ஜெயபால்தான் குமரேசனைச் சங்கர னுக்கு அறிமுகம் செய்து வைத்தவன். குமரேசன் இந்தியாவிலேயே வேலை பார்த்தான். ஜெயபாலும் சங் கரனும் பர்மாவுக்கு அனுப்பப்பட்டார்கள். பர்மாவில் சங்கரன் புது ஆட்களுக்கு ராணுவப் பயிற்சி கொடுக்கும் வேலை பார்த்துக் கொண்டிருந்தபோது அவனைச் சென்னையிலிருந்துகொண்டு அதே வேலையைச் செய்யும் படி உத்தரவானதை முன்னே படித்தோம். அப்படி சங்கரன் சென்னையிலிருந்தபோது குமரேசனும் அவ னுடன் இருந்தான். அந்த சமயத்தில் குமரேசன் ஒரு உத்தரவைச் சரியாகக் கவனிக்காமல் பெருந்தவறு செய்து விட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டான். அதற்காக தளபதி அவனைத் தண்டிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அந்தத் தளபதி ஜெயபாலிடத்திலும் சங்கரனிடத்திலும் அன்பும் மதிப்பும் உள்ளவன். அவர்களுடைய சிபார் சினுல் குமரேசனுடைய குற்றம் மன்னிக்கப்பட்டது. அந்த முறையில் குமரேசன் ஜெயபாலிடத்திலும் சங்கர னிடத்திலும் மிகுந்த நன்றியுள்ளவனுன்.

இப்போது ஜெயபாலும் குமரேசனும் சேர்ந்து தான் சங்கரலிங்கத்தை வெகு ரகசியமான இடத்தில் வைத்துப் பாதுகாத்து வருகிறார்கள். கு ம ரே சன்

டில்லியிலுள்ள ராணுவ விமான நிலையத்தைச் சேர்ந்த பட்டறையில் முதல் மேஸ்திரியாக உதவி 'எஞ்சினியர்' வேலையில் இருக்கிறுன். சங்கரலிங்கத்தைப் பார்த்துப் போகவும் வேறுசில அலுவல்களைக் கவனிக்கவும் மூன்று மாத ராஜாவில் இருக்கிறுன்.

சங்கரலிங்கன் கூடியமட்டும் தைரியமாகவும் சந் தோஷமாகவுந்தான் இருக்கிறுன் என்றாலும் அடிக்கடி தன்னுடைய தாயாரை நினைத்து மிகவும் ஏக்கமடை வான். சில சமயங்களில் அழுதும் விடுவான். தன்னை நினைத்து நினைத்து தாயார் இறந்துபோய் விடுவாரே என்று தவிப்பான். தாயாரை ஒரு முறை பார்த்து விட்டால் போதும்; அதன் பிறகு போலீசார் பிடித்துக் கொண்டாலும் பாதகமில்லை யென்றுகூட ஜெயபாலிடத் திலும் குமரேசனிடத்திலும் சொல்லுவான். தாயார் மன முடைந்து மாண்டு போகாம லிருப்பதற்காகவே, முன் ஆக்ராவில் தபாலில் போடப்பட்ட கடிதத்தை எழுதி னுன். அதை எழுதச் சொன்னது ஜெயபாலும் குமரேச னும்தான். அந்தக் கடிதத்தை இருக்கும் இடத்தில் தபாலில் சேர்க்காமல் வெகுதூரத்திலுள்ள ஆக்ரா விற்குக் கொண்டுபோய் அங்கே தபாலில் போட்டவன் குமரேசன்தான்.

சங்கரனுடைய விருப்பத்தின்மேல் ஜெயபாலின் ஏற் பாடாக, அன்னபூரணியம்மாளை நேரிற்கண்டு அவருக் குச் சங்கரனைப் பற்றிய சில ரகசியங்களைச் சொல்லித் தைரிய மூட்டவும் அன்னபூரணியம்மாளுடைய சௌக் யத்தை அறிந்து போகவும்தான் இப்போது குமரேசன் வசந்தபுரிக்கு வந்தது. அந்த ரகசியங்களைக் கடிதத்தில் எழுதுவது அபாயமுண்டாக்கும். தாயாருடைய நலத் தைக் கடிதம் மூலமாக அறிய விரும்பினுலும் பதில் வந்து

சேர ஒரு விலாசம் கொடுக்கவேண்டும். அது நிச்சயமாக இருப்பிடத்தைக் காட்டிக் கொடுத்து விடும்.

இப்படி வந்த குமரேசன், முதலில் தன்னுடைய தாயாரைப் பார்க்கத் தன் சொந்தக் கிராமமாகிய புதூருக்குப் போனான். அவன் வீட்டைவிட்டு ஓடிப்போன பின் தன்னுடைய தந்தை இறந்துபோனதைக் கேள்விப் பட்ட பிறகுதான் முதல் தடவையாக அங்கே வந்திருந்தான். அதன்பிறகு மூன்றுமுறை தாயாரையும் சகோதரிகளையும் பார்த்துப்போக வந்தான். கடைசியாக அவன் வந்துபோனது ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால். தாயாரும் தங்கை கோமதியும் விருதூரிலுள்ள தமக்கை வீட்டுக்கே போய்விட்டது அவனுக்குத் தெரியாது. புதூரில் தாயாரைக் காணமல் விருதூருக்குத் தமக்கை வீட்டுக்கு வந்தான். அங்கே அவன் தாயாரும், தமக்கையும் தங்கையும் மைத்துனரும் நெடுநாளைக்குப் பின் வந்த அவனைக் கண்டு ஆனந்தமடைந்து உபசரித்தார்கள். இளம்பிராயத்தின் முறுக்கால் வீட்டைவிட்டு ஓடினவன் என்றாலும் குமரேசன் தந்தை தாயாரிடத்திலும் சகோதரிகளிடத்திலும் ரங்கசாமியிடத்திலும் மிக்க பாசமுள்ளவன். குப்புசாமிமீது மட்டுந்தான் கொஞ்சம் கோபம் இருந்துகொண்டேயிருந்தது.

சங்கரன் விருதூரிலுள்ள தன்னுடைய மாமனார் மகாதேவரையும் அவர் குடும்பத்தையும் பார்த்துவரச் சொல்லி யனுப்பினான். மேலும் குமரேசனுக்குச் சங்கரனுடைய தந்தையைத் தெரியாது. அவரை அறிமுகம் செய்துவைக்கவும் அன்னபூரணியம்மாளையும் மங்களாம்பாளையும் சந்திப்பதற்கும் அனுகூலமாக இருக்குமென்று முதலில் மகாதேவரைப் பார்க்கும்படி சங்கரன் சொல்லியிருந்தான். குமரேசனைச் சந்தேகிக்காமலிருப்பதற்காக மகாதேவருக்கு மட்டும் சங்கரன் ஒரு கடிதம் தந்திருந்

தான். அதில் 'இவர் என்னைப் பாதுகாத்துவரும் உயிருக்குயிரான நண்பர். என்னுடைய வேண்டுகோளுக்கிணங்கித்தான் அங்கே வருகிறார். முற்றிலும் நம்பத் தகுந்தவர்' என்பது மட்டுந்தான் எழுதியிருந்தான்.

குமரேசன் மகாதேவரைச் சந்தித்தான். மகாதேவரும் குமரேசனுடன் வசந்தபுரிக்குப் போவதில் மிக்க மகிழ்ச்சி கொண்டார். குமரேசன் சங்கரனைப் பற்றிக் கொண்டுவந்திருக்கிற ரகசியம் என்னவென்பதை அறிய முடியாவிட்டாலும் தன் அண்ணன் மங்களாம்பாள் இருக்கிற வீட்டுக்குப் போகிறார் என்பதை அறிந்த கோமதி தனக்கும் மங்களாம்பாளைப் பார்க்கவேண்டுமென்ற ஆவல் அதிகமாயிருப்பதால் தன்னையும் கூட்டிக் கொண்டு போகவேண்டுமென்று கெஞ்சினாள். கோமதியிடத்தில் எப்போதுமே குமரேசனுக்குப் பிரியம் அதிகம். இப்போது அவள் கணவனால் கைவிடப்பட்டவளாக மனம் நொந்துபோயிருக்கிறவள். அவளுடைய வேண்டுகோளை மறுத்துவிடக் குமரேசனுக்கு மனம் வரவில்லை. அத்துடன் சங்கரன் மனைவி மங்களத்திடம் அவள் கொண்டிருந்த மதிப்பும் பாசமும் அவனை மிகவும் மகிழ்வித்தன.

கொஞ்சங் கொஞ்சமாகக் கோமதியின் சிறந்த குணங்களை அறிந்துகொண்டிருந்த மகாதேவரும் அவள் தன் மகளைப் பார்க்க விரும்பியதை மகிழ்ச்சியுடன் வரவேற்றார்.

குமரேசனும் கோமதியும் மகாதேவரும் வசந்தபுரியில் மூன்று நாள் தங்கியிருந்தார்கள். கடைசிநாள் மத்தியசோறு உணவுக்குப்பின் குமரேசன் கோபாலகிருஷ்ணர், அன்னபூரணியம்மாள், மங்களாம்பாள், மகாதேவர் ஆகிய நால்வரை மட்டும் ஏகாந்தமாக வைத்துக் கொண்டு சங்கரனைப் பற்றிய நிலைமையை விளக்கமாகச்

சொல்லி இன்னும் சிலகாலம் கவலைப்படாமல் இருக்கும் படி சங்கரன் அவர்களைக் கேட்டுக் கொண்டதாகவும் மிகவும் பிரத்தியேகமாகத் தன் தாயாரை வேண்டிக் கொண்டதாகவும் சொன்னான். கவலைப்பட்டு அசௌகர்யம் அடைந்து விடாமலிருப்பதாகத் தாயாருடைய உறுதி மொழியும் ஆசீர்வாதமும் பெற்றுக்கொண்டு வரச் சொன்னதாகவும் சொன்னான்.

உடனே அன்னபூரணியம்மாள், தான் கவலைப்படாமலிருக்க முயல்வதாக உறுதி கூறிவிட்டு,

"இப்போது அவன் எங்கே இருக்கிறான்?" என்றாள்

"அம்மா, சங்கரன் இருக்கிற இடத்தை நான் யாருக்கும், உங்களுக்கும் கூடச் சொல்லக்கூடாது. அது எனக்கும் ஜெயபாலுக்கும் மட்டுந்தான் தெரியும். நான் உங்களுக்கு அதைச் சொல்லி நீங்கள் யாராவது வாய் தவறி வேறு யாரிடமாவது சொல்லிவிட்டால் உடனே அபாயம் வந்துவிடும். இங்கே நான் இதுவரையிலும் சொன்னதைக்கூடப் போலீசார் கேட்டுக்கொண்டார்களோ என்று அஞ்சுகிறேன். அவ்வளவு விஸ்தாரமாகப் போலீசார் சங்கரனைப் பிடிக்க வலை விரித்துக் கண்ணி வைத்திருக்கிறார்கள். ஆகையினால் சங்கரன் இருக்குமிடத்தைக் கேட்கவேண்டாம்."

"அது போனாற் போகட்டும். இன்னும் எத்தனை நாளில் அவன் வருவான்? அதையாவது சொல்லுங்கள்" என்றாள்.

"அது எனக்கே தெரியாது. அது ஆண்டவன் கருணையைப் பொறுத்தது. உங்கள் ஆசீர்வாதத்தைப் பொறுத்தது. மங்களம் அம்மாள் செய்த சிவ பூசை பலிக்கிற காலத்தைப் பொறுத்தது. அந்தச் சிவன்கோயில் சேவையைப் பற்றி என் தங்கை கோமதி சொன்னதைக்

கேட்டதிலிருந்து அது சீக்கிரம் பலிக்கும் என்றே நம்புகிறேன். சங்கரன் உயிருக்கு அபாயம் வராது. பயப்பட வேண்டாம்" என்றான் குமரேசன்.

உடனே மங்களாம்பாள் குறுக்கிட்டு,

"உயிருக்கு அபாயம் வராது என்றால் மரண தண்டனை ஆயுள் தண்டனையாக மாறும் என்று அர்த்தமா?" என்றாள். அந்தக் கேள்வியில் அடங்கியுள்ள மங்களாம்பாளின் புத்திக் கூர்மையை உணர்த்த குமரேசன், குலுங்கச் சிரித்துவிட்டான். மங்களாம்பாளுடைய வெகு அபூர்வமான சிறப்புகளையும் அவளுக்கேற்ற சங்கரலிங்கனுடைய அருமையையும் எண்ணி அகம் மகிழ்ந்து விட்டு மங்களாம்பாளைப் பார்த்து,

"அதையும் இப்போது நான் சொல்லமுடியாது. நீங்கள் செய்திருக்கிற சிவ பூசைக்கு அதைவிட அதிகமான நன்மையே உண்டாகும்" என்றான்.

"ஆயுள் தண்டனையில்லாமல் குறைந்த காலச் சிறைவாசம் கிடைக்குமாக்கும்?" என்றாள்.

மறுபடியும் குமரேசன் சிரித்துவிட்டு,

"இப்படி யெல்லாம் கேட்டு மனசைக் குழப்பிக் கொள்ளவேண்டாம். எதற்கும் எல்லாரும் இன்னும் இரண்டு மாதத்துக்காவது பொறுத்துக் கொள்ளுங்கள். சங்கரலிங்கன் சௌக்கியமாக இருப்பதை நேரிற் சொல்லி அவருடைய தாயாருக்குத் தைரியமுண்டாக்க வேண்டும். தாயார் சுகமாக இருக்கிறார்கள் என்பதைச் சங்கரனுக்குச் சொல்லி அவருடைய துயரத்தைப் போக்கவேண்டும். இந்த இரண்டுந்தான் என் வேலை. இதற்கு வேண்டிய அளவுக்குமேல் எதையும் நான் சொல்லிவிடக்கூடாதென்பது ஜெயபாலின் கண்டிப்பான கட்டளை. தயவுசெய்து மேற்கொண்டு எதையும் கேட்காமல் கொஞ்ச காலம் பொறுத்திருங்கள். நன்மையுண்டா

கும்' என்று பேச்சை முடித்துவிட்டு, குமரேசன் ஒரு 'டைப்' அடித்த இங்கிலீஷ் விண்ணப்பத்தை மங்களாம் பாளிடம் தந்து, அதில் அவளைக் கையெழுத்திடச் சொன்னான். அது அவள் தன் கணவனுக்கு மன்னிப் பளிக்க வேண்டுமென்று சேஷாதிபதி மூலம் வைசிராய்க் குச் செய்து கொள்ளும் மனு. அதைப் படித்துப் பார்த்து மங்களம் கையெழுத்திட்டுக் கொடுத்தாள். விருந்தினர் கள் மூவரும் விருதூருக்குத் திரும்பினர்கள். தன் தாயா ருடைய விருப்பத்திற்கிணங்கிக் குமரேசன் மூன்று நாட்கள் விருதூரில் தங்கினான். மங்களத்தின் தந்தை மகாதேவர் தம்வீட்டில் ஒரு நாள் விருந்துண்டு போக வேண்டுமென்று குமரேசனைக் கேட்டுக் கொண்டார். அவனும் மகிழ்வுடன் இசைந்தான். அந்த விருந்துக்கு மகாதேவர் குப்புசாமியையும் அழைத்திருந்தார்.

மகாதேவரும் அவருடைய மனைவி ஜானகி யம்மாளும் குப்புசாமியை எப்போதும் தங்கள் குடும்பத் துக்கு வேண்டிய நண்பனாகவே மதித்துவந்தார்கள். ஆதியில் அவன் மங்களாம்பாள் அழகில் மயங்கி அவ ளிடம் காட்டிவிட்ட காமக் குறும்புகள் எதுவும் அவர்க களுக்குத் தெரியாது. மங்களாம்பாள் அவற்றை யாரிடத் திலும் சொன்னதில்லை. மங்களம் விருதூருக்கு வந்து சிவன் கோயிலில் சேவை செய்து கொண்டிருக்கிற போதும் சில சமயங்களில் அவள்மீது காமக்கண் வீசின தும், செல்லாது என்று கண்டு காமம் கோபமாக மாறின தும், அந்தக் கோபத்தைச் சங்கரலிங்கன்மீது செலுத்தக் குப்பன் காத்திருந்ததும் பார்த்தோம். அப்படிப்பட்ட குப்புசாமி சங்கரலிங்கனுக்கு மரண தண்டனை விதிக்கப் பட்டிருப்பதைப் பத்திரிகையில் படித்தவுடன் பதறிப் போய் 'ஐயோ' என்று அலறிவிட்டதையும் அறிந்தோம். அந்தப் பத்திரிகைச் சேதி சங்கரனைப் பற்றியது

என்பது மங்களம் அறிந்துவிடக் கூடாது என்பதற் காகவே அதைப்பற்றி யாரிடத்திலும் சொல்லுவதில்லை என்று குப்புசாமி மகாதேவருக்குச் சத்தியம் செய்து கொடுத்ததையும், அந்தச் சத்தியத்தை அவன் காப்பாற்றி யதையும் கண்டோம். அதன் பிறகு குப்புசாமிக்குச் சங்கரன் மீதிருந்த மாச்சரியம் மறைந்தது. மங்களம் கோயிலுக்குப் போய் வருவதைப் பார்க்கும்போதெல்லாம் அவள்மீது பரிதாபமும் பயபக்தியும் உண்டாகிவிட்டது. மகாதேவர் தினந்தினம் கச்சேரியிலிருந்து வந்ததும் மருமகனைப் பற்றிய சேதி பத்திரிகையில் ஏதேனும் வந்ததா என்று கேட்கக் குப்புசாமியிடம்தான் வருவார். அவருடன் பேசும்போதெல்லாம் அவர் மகளைப் பற்றியும் மருமகனைப் பற்றியும் கலங்குவார். அப்போது குப்புசாமி யும் உண்மையாகவே அவருடன் சேர்ந்து கவலைப்படத் தொடங்கினான். இப்படியாகக் குப்புசாமிக்குள் மறைந்து கிடந்த மனுஷத்தனம் மலரத் தொடங்கி மிருகத் தன்மை குறையத் தொடங்கியது. மங்களாம்பாளின் ஜாதக தோஷத்தால் அவளுக்கு மாங்கல்ய பலம் குறைவாக இருக்கிறதென்றும் அதற்குப் பரிகாரமாகத்தான் அவள் பார்வதி பூசை செய்கிறாள் என்றும் மகாதேவர் குப்பு சாமிக்குச் சொல்லியிருந்தார். சங்கரன் சிறையிலிருந்து தப்பி ஓடிவிட்டான் என்பதை அறிந்தவுடனே மங்களாம் பாளுடைய தெய்வ வழிபாட்டினால் அவளுடைய மாங்கல் யம் பலமடைந்து விட்டதாகவே குப்புசாமி நம்பலானான். அதனால் கோயிலைப் பற்றிய நினைப்பே இல்லாதிருந்த குப்புசாமி கோயிலுக்குப் போவதில் பயனிருப்பதாக நினைக்கலானான். மேலும் மகாதேவர் எப்போதும் குப்பு சாமியிடத்தில் வைத்திருந்த நம்பிக்கையும் பொதுவாக எல்லாரிடத்திலும் அவர் நடந்துகொள்ளும் பெருந் தன்மையும் அவனை என்னமோ செய்துவிட்டன. மகா

தேவருக்காக வேனும் மங்களாம்பாளுக்கு ஒரு குறைவும் வந்துவிடக்கூடா தென்று, அவனுக்கும் தெரியாமல் அவனுடைய உள்ளத்தில் ஒரு ஆவல் குடிபுகுந்து விட்டது. சங்கரன் போலீசாரிடத்தில் சிக்கிக் கொள்ளக் கூடாதே என்ற விசாரம் குப்புசாமிக்கு அதிகம். மகாதேவர் வீட்டை வேவுபார்க்க ரகசியப் போலீசார் சுற்றிக் கொண்டிருப்பது அவனுக்குத் தெரியும். குப்புசாமி வீட்டுப் பக்கத்திலிருந்து கவனித்தால் மகாதேவர் வீட்டுக்கு வருகிறவர்களை நன்றாகப் பார்க்கலாம். அதற்காகத் தன்வீட்டுப் பக்கம் வருகிற போலீசாரைக் குப்புசாமி மிகவும் கண்டிப்பான்.

குமரேசனுக்கு மகாதேவர் வீட்டில் விருந்து நடந்தது. மிகவும் சுவையுள்ள விருந்து. ஜானகியம்மாள் மருமகனே வந்துவிட்டது போன்ற மகிழ்ச்சியுடன் ஆக்கிய விருந்தல்லவா? குப்புசாமியை விருந்துக்கு அழைத்த போது மகாதேவர் மிகவும் ரகசியமாக, சங்கர லிங்கன் போலீஸ்காரர் கண்டுபிடிக்க முடியாத இடத்தில் சுகமாக இருக்கிற சேதியை நேரிற் சொல்ல வந்திருக்கிற ஒரு நண்பருக்கு விருந்து செய்வதாக மட்டுந் தான் சொல்லியிருந்தார்.

குப்புசாமியும் குமரேசனும் பக்கத்தில் பக்கத்தில் தான் உட்கார்ந்து விருந்துண்டார்கள். குப்புசாமி குமரேசனை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. குமரேசன் குப்புசாமியின் வீட்டை விட்டுப் போய் பதினைந்து ஆண்டுகளுக்கும் அதிகமாகிவிட்டது. தந்தை இறந்த தற்கென்றும் தாயாரைப் பார்ப்பதற் கென்றும் குமரேசன் விருதூருக்கு வந்தபோதெல்லாம் குப்புசாமியைப் பார்க்க அவன் விரும்பவில்லை. சிறு வயதில் மிகவும் ஒல்லியாக இருந்த குமரேசன் இப்போது திரண்டு உருண்டு வளர்ந்து திடகாத்திர முள்ளவனாக முறுக்கிவிட்ட

அடர்ந்த மீசைகளுடன் யாரும் அஞ்சத் தக்கத் தோற்ற முள்ளவனாக இருந்தான். யாரையும் அலட்சியம் செய்யக் கூடிய குப்புசாமிகூடக் குமரேசனைக் கண்டவுடன் குனிந்து வணங்கிக் கும்பிடுபோட்டு வரவேற்றான்.

விருந்துண்டபின் கூடத்தின் கோடியிலிருந்த அறைக்குள் சென்று அமர்ந்தார்கள். ஜானகியம்மாள் தாம்பூலம் கொண்டு வந்தாள். மகாதேவர் தாம்பூலம் போடுவதில்லை. விருந்தினர் இவருவரும் போட்டுக் கொண்டிருந்தார்கள். மகாதேவர் குமரேசனுக்கு முகமன் கூறுவது போல்,

"சங்கரலிங்கன் உயிரைக் காத்துவருகிறவர் இவர் தான்."

என்று குமரேசனைச் சுட்டிக் குப்புசாமியிடம் சொன்னார்.

"அடடா! அதற்காக இவருக்கு நாம் எவ்வளவு நன்றி செலுத்தினாலும் போதாது. மங்களாம்பாள் செய்த சிவ பூசையின் பலன்தான் இப்படிப்பட்ட அருமையான நண்பரை நமக்குத் தேடித் தந்திருக்கிறது. அந்தத் தெய்வானுக்கிரகம்தான் மங்களாம்பாளின் மாங்கல்யத்துக்கு நேர்ந்த பலக்குறைவை நீக்கியிருக்கிறது" என்றான் குப்புசாமி.

"அதற்கென்ன சந்தேகம்? பல மாதங்களுக்கு முன்பே சுட்டுக் கொல்லப்பட்டிருக்கவேண்டிய சங்கரன், இப்போது சௌக்கியமாக இருந்து வருவது தெய்வானுக்கிரகமில்லாமல் நடக்கக்கூடிய காரியமா? சிவபூசையின் பலன்தான் அது" என்றார் மகாதேவர்.

"அடடா! மங்களம் அம்மாள் செய்த அந்தச் சிவன் கோயில் சேவையை இப்போது நினைத்தாலும் என் உள்ளம் உருகிவிடுகிறது. அப்பப்பா! என்ன விரதம்! எவ்வளவு பக்தி! எப்பேர்ப்பட்ட வைராக்கியம்! பார்வதி

தேவி பரமசிவனுக்காகத் தவம் செய்ததாகக் கதை சொல்லுவார்களே, அப்படியல்லவா இருந்தது! நைவேத்தியத் தட்டத்தோடு கோயிலுக்குப் போவதையும் வருவதையும் பார்த்துப் பார்த்து எனக்கும்கூட பக்தி வந்துவிட்டது.. ...''

இப்படிக் குப்புசாமி சொல்லிக்கொண்டிருக்கும் போதே குமரேசன் குபுக்கென்று சிரித்துவிட்டான். அடக்கமுடியாமல் மகாதேவருக்கும் சிரிப்பு வந்துவிட்டது. அந்தச் சிரிப்பு குப்புசாமியை என்ன செய்ததோ? உடனே அவன்,

'' என்ன சிரிக்கிறீர்கள்? நான் சொல்வது பொய் யல்ல. சில சமயங்களில் மங்களாம்பாள் கோயிலிலிருந்து வருவதைப் : பார்க்கும்போது எனக்குக் கண்ணீர்கூட வந்துவிடும். கணவனைக் கருதி மங்களம் மேற்கொண்ட நோன்பு மாதிரி நான் கதைகளிற்கூடப் படித்ததில்லை. பெண்களுக்குக் கணவன்தானே தெய்வம்'' என்றான்.

'' ஆமாம், பெண்கள் கணவனைத் தெய்வமாகத் தான் மதிக்க வேண்டும். ஆனால் ஆண்கள் மட்டும் மனைவியை அடிமையிலும் கேவலமாக அவமதிக்க வேண்டும்'' என்றான், இதுவரையிலும் பேசாதிருந்த குமரேசன்.

'' சேச்சே! சங்கரலிங்கம் அப்படி மனைவியை அவ மதிக்கக் கூடியவரல்லவே'' என்றான் குப்புசாமி.

'' சங்கரலிங்கம் அப்படிப்பட்டவ ரென்று நான் சொல்ல வில்லை. நம்முடைய சமுதாயத்தில் பல கணவன் மார்கள் மனைவியை மிகவும் இழிவாகத்தான் மதிக்கிறார் கள். கணவனைத் தெய்வமாகக் கருதுகின்ற மனைவியை யும் காரணமில்லாமல் வீட்டைவிட்டுத் துரத்திவிடுகிற கணவன்மார்களும் இருக்கிறார்களல்லவா?'' என்றான் குமரேசன்.

இந்தப் பேச்சிலுள்ள குத்தலை உணர்ந்த மகா தேவர் உடனே குறுக்கிட்டு,

'' இளம் பிராயத்தின் வேகத்தில் அப்படிச் சில சமயம் நடந்து விடுவதும் உண்டு; இருந்தாலும்.....'' என்று முடிப்பதற்குள்,

'' இளம்பிராய மெனன? பல வருடங்கள் குடும்பம் நடத்திக் குழந்தைகளைப் பெற்ற பிறகும் குற்றமற்ற மனைவியைக் குழந்தைகளையும் சேர்த்துத் தாய் வீட்டுக் குத் தூரத்திவிடுகிற கணவன்மார்களும் இருக்கிறார் களே! மொத்தத்தில் நம்முடைய சமுதாயத்தில் மனைவி கணவனை மதிக்கின்ற அளவுக்குக் கணவன் மனைவியை மதிப்பதில்லை என்பதுதான் நான் சொல்ல வந்தது'' என்றான் குமரேசன்.

இது குப்புசாமியின் உள்ளத்தை மிகவும் உறுத்தி விட்டது. தன்னுடைய மனைவி கோமதியைக் குழந்தை களோடு தாய் வீட்டுக்குத் துரத்திவிட்டதைத்தான் குமரேசன் குத்திக் காட்டுவதாக எண்ணினான். அந்த விஷயம் இந்தப் புது மனிதனுக்கு எப்படித் தெரிந்தது? ஒரு வேளை மகாதேவர் சொல்லியிருப்பாரோ? ஆனால் மகாதேவர் அப்படித் தன்னை இன்னொருவர் ஏளனம் செய்யும்படி எதையும் சொல்லக் கூடிய வரல்லவே! இல்லாவிட்டால் மகாதேவரின் மனைவி ஜானகியம்மாள் சொல்லியிருக்கலாமோ! ஆனால் அந்த அம்மாளும் முன்பின் அறியாத இந்தப் புது மனிதனிடத்தில் அந்த விஷயங்களைப் பற்றிப் பேசும் அளவுக்கு நெருங்கிப் பழகியிருக்கக் காரண மில்லையே! எப்படியானாலும் அதை இடித்துக் காட்ட இந்தப் புது மனிதன் யார்? இவனை எப்போதோ எங் கேயோ பார்த்திருக்கிற மாதிரி இருக்கிறதே'—என்ற சங்கடமும் சந்தேகமும் மனதைக் கலக்கப் பேச்சு வராமல்

குப்புசாமி குமரேசனையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அந்தச் சமயத்தில் அந்த அறைக்கு இரண்டு பெண் குழந்தைகள் வந்தன. அவை தாமாக அங்கே வந்தவை களல்ல. அவர்களைக் கூட்டிக்கொண்டு வந்து அந்த அறைக்குள் அனுப்பியது ஜானகியம்மாள்,

இரண்டு குழந்தைகளும் பார்த்தவர்களை வசீகரிக்கக் கூடிய இயற்கை அழகுடையவர்கள். அத்துடன் அவர் களுக்கு அணிவித்திருந்த உடைகளும் அணிகளும் கண்ணைக் கவர்ந்தன. பெரிய பெண்ணுக்கு ஒன்பது வயது. மற்றதுக்கு ஏழு வயது. பெரிய பெண் அடக்க மான சுபாவமுள்ளதாகக் காணப்பட்டது. சிறிய பெண் மிக்கச் சுறுசுறுப்பும் சுட்டித்தனமும் உள்ளதாக இருந்தது. பெரிய பெண் அறைக்குள் வந்ததும் குமரேசனைப் பார்த்து 'மாமா' என்று சொல்லிக் கொண்டே அவனருகிற் சென்றது. அவன் அதை அணைத்துக் கொண்டான். சிறிய பெண் துள்ளிக் குதித்துக்கொண்டு அங்கும் இங்குமாக அறைக்குள் ஓடிற்று. அது குப்புசாமிக்குச் சமீபமாக வந்தபோது அவன் அதைப் பிடித்துத் தன்னுடைய இரண்டு துடைகளுக்கும் மத்தியில் இடுக்கிக் கொண்டு கொஞ்சினான். அது அவனுடைய கால்களின் இடுக்கில் சிறைப்பட்டிருக்க விரும்பாமல் தன்னை விடுவித்துக் கொள்ள வெகு தீவிரமாகப் போராடிக் கொண்டிருந்தது. அந்தக் குழத்தையின் துறுதுறுப்பைக் கண்ட குப்புசாமி "இது யாருடைய குழந்தை?" என்று மகாதேவரைப் பார்த்தான்.

அவர் அதற்குப் பதில் சொல்லுவதற்கு முன்னால் குமரேசன் "இவர்கள் என்னுடைய தங்கையின் குழந்தைகள்" என்றான். அதே சமயத்தில் மகாதேவர் குப்புசாமியைப் பார்த்து. "இவர்கள் உங்களுடைய குழந்தைகள்தான். உங்கள் மனைவி கோமதியும் விருந்துக்கு வந்திருக்கிறது" என்றார்.

திடுக்கிட்ட குப்புசாமி குமரேசனைத் திரும்பிப் பார்த்தான். குமரேசன் கலகலவென்று சிரித்தான். அந்தச் சிரிப்பில் ஏதோ அடையாளம் கண்டுவிட்டதுபோல் குப்புசாமி "அட! குமரேசனா நீ ?" என்றான்.

"ஆமாம் அத்தான் ஆமாம். நெடு நாளைக்கு முன்னால் நீங்கள் உங்களுடைய வீட்டை விட்டுத் துரத்தி விட்ட அதே குமரேசன் தான்."

அதைக் கேட்ட குப்புசாமிக்கு வெட்கமும், வருத்தமும், வியப்பும், திகைப்பும் ஒருங்கே உதித்து அவன் உணர்ச்சிகளை உலுக்கிவிட்டன. விழித்த கண் இமைக்காமல் குமரேசனை வெறிக்க வெறிக்கப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டுக் கடைசியில் ஒரு புன்னகையுடன் எதிரில் குதித்துக்கொண்டிருந்த இளைய குழந்தையை இழுத்து முகத்தோடு முகம் வைத்து ஒரு முத்தமிட்டான். பாசம் பற்றிக் கொண்டது.

கோமதியைக் கணவனோடு சேர்த்து வைத்துவிட வேண்டுமென்று ஜானகியம்மாளும் மகாதேவரும் செய்திருந்த ஏற்பாடுகள் பலித்தன.

அடுத்த நாள் குமரேசன் புறப்படு முன் அவனுக்குக் குப்புசாமி வீட்டில் மிகவும் விமரிசையான விருந்து நடந்தது. அந்த விருந்தை அந்த வீட்டின் இல்லக் கிழத்தியாகிய கோமதியே நடத்தினாள்.

ஆச்சரியம்தான்

சங்கரலிங்கன் இன்னும் பிடிபடவில்லையே என்ற ஏக்கம் டங்கன் துரைக்கு அதிகம். ஆனால் சையத் காதரும் முனிஜியும் பிடிபட்டுவிட்டதால் இனி அந்த 'ஷங்கர்ஜி'யையும் பிடித்து விடலாம் என்று துரை எண்ணினார். ஷங்கர்ஜி இருக்கிற இடம் இவர்களுக்குத் தெரிந்திருக்கும். நயமான வழியில் விசாரித்தால் துப்பு கிடைத்துவிடும் என்று நினைத்து அவர்களைத் தம் முடைய அந்தரங்க அறைக்குக் கொண்டுவர உத்தர விட்டார்.

பூட்டிய விலங்குகளுடன் அவர்கள் இருவரும் கொண்டுவரப்பட்டார்கள். அவர்களை அழைத்து வந்த காவலர்களை வெளியே போயிருக்கச் சொல்லிவிட்டு, டங்கன் துரை அவர்களுடன் ஏகாந்தமாகப் பேசலுற்றார். தம்முடைய சுபாவமான கடுகடுப்பையும் பதவிக்குரிய பிகுவுகளையும் விலக்கிவிட்டு இனிய முகத்துடன் பரி வோடு அவர்களைப் பார்த்து மிக்க அனுதாபமுள்ள தொனியில்,

"சையத்காதர்! முனிஜி! உங்களைப் பற்றி நான் மிகவும் பரிதாபப்படுகிறேன். நீங்கள் இருவரும் அந்த ஷங்கர்ஜியின் தூண்டுதலால்தான் எதிரிகளோடு சேர்ந்து கொண்டவர்கள். உங்களுக்கு இந்தக் கதி வந்தது அந்த ராஜத்துரோகியினால்தான். நீங்கள் உள்ளது உள்ளபடி எதையும் ஒளிக்காமல் சொல்லி அவனைப் பிடிக்க ஒத்தாசை செய்யவேண்டும். அதற்காக உங்கள் மரண தண்டனையை மாற்றிக் குறுகிய கால சிறைவாச மாக்கிவிடச் செய்கிறேன். என்ன சொல்லுகிறீர்கள்?"

என்றார் துரை. "எங்களுக்குத் தெரிந்த எதையும் மறைக்காமல் உள்ளதை உள்ளபடி சொல்லுகிறோம்" என்றனர்.

"ரொம்ப சந்தோஷம். அந்த ஷங்கர்ஜி எங்கே ஒளிந்துகொண்டிருக்கிறான்?"

"அது எங்களுக்குத் தெரியாதே, என்ன செய்வோம்?"

"உங்களுக்குத் தெரியாதா! நீங்கள் மூன்று பேரும் சேர்ந்துதானே சிறையிலிருந்து தப்பி வந்தீர்கள்?"

"ஆமாம், சிறையைவிட்டு மூன்று பேரும் சேர்ந்து தான் வெளியில் வந்தோம். அதன் பிறகு அவன் எங்களோடு சேரவில்லை."

"ஓஹோ! பேஷ்! பேஷ்! சிறையிலிருந்து ஓடுவதற்காகப் பாராக்காரன் மதன்சிங்கைத் துப்பாக்கிக் கட்டையால் அள்ளையில் அடித்துக் கீழே தள்ளி, அவன் மூக்கில் மயக்க மருந்தை வைத்துக் கட்டுகிற வரைக்கும் தான் நீங்கள் மூன்று பேரும் சேர்ந்து வேலை செய்தீர்களாக்கும்? அதற்குப்பின் ஒன்றும் தெரியாதாக்கும்? யாரை ஏமாற்றப் பார்க்கிறீர்கள்? இதை நம்பி விடுவதற்கு நானென்ன முட்டாளா?" என்று துரை படபடவென்று பேசிக் கோபக்குறி காட்டினார்.

"ஐயோ! துரையவர்களே! இதென்ன அபாண்டம்! நாங்கள் யாரையும் அடிக்கவுமில்லை; தள்ளவுமில்லை; மயக்க மருந்து கட்டவுமில்லையே! நாங்கள் சிறையை விட்டு வரும்போது மதன்சிங்கையோ அல்லது வேறு பாராக்காரனையோ பார்க்கக்கூட இல்லையே!"

"பொய்! பொய்! பொய்! யாரை ஏமாற்றப் பார்க்கிறீர்கள்?" என்று துரை கடுகடுத்தார்.

"பொய்யல்ல துரையவர்களே! உண்மையாக சத்தியமாக நாங்கள் யாரையும் அடிக்கவுமில்லே, தள்ளவுமில்லே; எவருக்கும் எந்தத் தீமையும் செய்யவுமில்லே. யாரோ இந்தப் பெரும் பழியை எங்கள்மீது போட்டிருக்கிறார்கள். அதை நம்ப வேண்டாம் துரையவர்களே."

"இல்லே, இல்லே. நீங்கள் சொல்லுவது பொய். உங்களுக்கு நன்மை செய்ய நினைத்தேன். உங்களுக்கு நல்ல காலமில்லே. நானே போய் நேரில் பார்த்தேன். மதன்சிங்கு அடிபட்டு மூக்கில் குளோரபாரம் கட்டப்பட்டு மயங்கிக் கிடந்ததை. மயக்கம் தெளிந்த பின் அவன் கொடுத்த வாக்குமூலத்திலும் அவனே சையத்காதர் அடித்துத் தள்ளியதைப் பற்றிச் சொல்லியிருக்கிறான். இதையே இல்லையென்று மறுக்கின்ற நீங்கள் ஷங்கர்ஜியைப்பற்றிய உண்மையைச் சொல்லவா போகிறீர்கள்?"

"துரையவர்களே! அல்லாஹுதாலா அறிய எங்கள் வேதமாகிய குரானின்மீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன். சிறையிலிருந்து வரும்போது நாங்கள் யாருக்கும் ஒரு துன்பமும் செய்யவில்லே" என்று சையத்காதர் கண்ணீர் சொரிந்து கையேந்தி மண்டியிட்டு அழுது கொண்டே சொன்னான். முனிஜியும் அதே மாதிரி சத்தியம் செய்து அழுதான்.

அதைக் கண்ட துரை சற்றே திகைப்படைந்தார். ஒரு மகமதியன் குரான்மேல் ஆணையிட்டுச் சொல்லுவது எளிதில் அலட்சியம் செய்யக் கூடிய விஷயம் அல்ல வென்பதை அனுபவத்தில் கொஞ்சம் அறிந்திருந்தார் டங்கன் துரை. அதனால் திகைத்தார். இருந்தாலும் இவர்கள் சொல்லுவதை நம்பிவிட முடியவில்லே. மனம் குழம்பியது. எது பொய்? எது மெய்? சையத் காதரும் முனிஜியும் அழுது தவிக்கிறார்கள். இப்போது அவர்கள் இருக்கிற நிலைமையில் தாங்கள் அறிந்த

உண்மைகளையெல்லாம் ஒளிக்காமல் சொல்லி மரண தண்டனையை மாற்றிக் கொள்ளத்தான் ஆசைப் படுவார்களேயன்றி எதையும் மறைக்க முயலமாட்டார்கள். இவர்கள் மறுப்பதிலும் உண்மை இருக்குமோ? அப்படியானால் இவர்கள் சிறையிலிருந்த இடத்தைக் காவல் புரிந்துகொண்டிருந்த பாராக்காரனை அடித்துத் தள்ளி மயக்கமடையச் செய்துவிட்டு இவர்களை ஓடிவிடும்படி செய்ய வெளியிலிருந்து வேறு யார் வந்திருக்க முடியும்? முடியவே முடியாது. இவர்களோ இல்லவே இல்லை என்று சத்தியம் செய்து சாதிக்கிறார்கள்! மதன்சிங் அடிபட்டுக் கிடந்ததை நேரிற் பார்த்ததெல்லாம் பொய்யா? மறுநாள் மயக்கம் தெளிந்தபின் மதன்சிங்கு சையத்காதர் தேள் கடித்துவிட்டதாகப் பாசாங்கு பண்ணித் துப்பாக்கியைப் பிடித்துக்கொண்டு தன் அள்ளைப்புறத்தில் அடித்துத் தள்ளிவிட்டதாகச் சொன்னதெல்லாம் பொய்யா? என்றெல்லாம் எண்ணியெண்ணிப் பார்த்து இவர்கள் பொய்ச்சத்தியம் செய்வதாகவே தீர்மானித்தார். மறுபடியும் மனம் குழம்பியது.

அந்த நிகழ்ச்சிகளைப் பற்றித் தாம் எழுதி வைத்திருந்த தினசரிக் குறிப்புகளையெல்லாம் புரட்டிப் பார்த்துக்கொண்டே,

"நீங்கள் சிறையிலிருந்து தப்பி ஓடிய தேதி நினைவிலிருக்கிறதா?" என்றார் துரை.

"தேதி நினைவில் இல்லே. ஆனால் அந்தநாள் நினைவிலிருக்கிறது" என்றான் முனிஜி.

"அது எந்த நாள்?"

"எங்கள் சிறைச்சாலையின் அதிகாரியாகிய ஜெயபால் ஒரு மாத ரஜாவில் இந்தியாவுக்குப் கப்பலேறிய நாள்?"

"ஜெயபால் கப்பலேறிய நாள் உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"ஜெயபால் நாங்கள் ஜப்பானியருடன் சேர்ந்து கொண்டதை மிகவும் கண்டித்தவரென்றாலும் எங்களிடத்தில் மிகவும் இரக்கமுள்ளவர். எங்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதைப்பற்றி வருத்தப்பட்டு அடிக்கடி ஆறுதல் சொல்லி அன்பாக இருப்பவர். அதனால் அவர் ரஜாவில் போவதற்குக் கப்பலேறத் துறைமுகத்துக்குப் போகுமுன் எங்களிடம் சொல்லிவிட்டுப் போவதற்காகப் பகல் ஒரு மணிக்குச் சிறைச்சாலைக்கு வந்து, 'நான் என் தாயாரைப் பார்த்துவர ரஜாவில் இந்தியாவுக்குப் போகிறேன். இன்று மாலை ஐந்து மணிக்கு அந்தக் கப்பல் ரங்கூன் துறைமுகத்தைவிட்டுப் புறப்படுகிறது. நான் ரஜாவிலிருந்து திரும்பி வருகிறதற்குள் உங்கள் தண்டனையை நிறைவேற்றிவிடுவார்களே என்று மிகவும் துக்கப் படுகிறேன். என்ன செய்யலாம்? ராணுவச் சட்டம் அப்படியிருக்கிறது. கடவுள்தான் உங்களுக்குச் சாந்தியளிக்கவேண்டும்' என்று கண்கலங்கிச் சொல்லிவிட்டுப் போனார். அன்று இரவுதான் நாங்கள் தப்பி ஓடியது."

"அன்றைக்கா நீங்கள் சிறையிலிருந்து ஓடியது!" என்று திடுக்கிட்ட ஆவேசத்தோடு அலறினார் துரை.

"ஆம் அன்றைய இரவில்தான்."

"நிஜமாகவா?"

"நிஜமாகத்தான். அல்லா அறிய" என்றான் சையத் காதர். டங்கன் துரைக்குத் தடுமாற்றம் அதிகரித்தது. தம்முடைய தினசரி (டைரி)யைப் புரட்டிப் பார்த்துவிட்டு,

"ஜெயபால் இந்தியாவுக்குப் போன கப்பல் ஜூலை மாதம் 14-ஆம் தேதி மாலை ஐந்துமணிக்கு ரங்கூனைவிட்டுப்புறப்பட்டது நிச்சயம்; அதில் துளிகூட சந்தேகமில்லை. நீங்கள் 18-ஆம் தேதி இரவில் அல்லவா மதன்சிங்கை

அடித்துப்போட்டு விட்டு ஓடியிருக்கிறீர்கள்! சிறைச்சாலையில் அடிபட்டு மயங்கிக் கிடந்த மதன் சிங்கை நானே பார்த்தேன். அது 18-ஆம்தேதி இரவின் விடியற்காலையில் என்பதும் நிச்சயம். நீங்கள் 14-ஆம் தேதி இரவில் சிறையிலிருந்து ஓடினதாகச் சொல்வது சுத்தப் பொய். நீங்கள் உண்மைகளை மறைக்கிறீர்கள்.——சரி அதிருக்கட்டும். நீங்கள் பூட்டியிருந்த அறைகளிலிருந்து எப்படி வெளியே வந்தீர்கள்?"

"ஜெயபால் எங்களைப் பார்த்துவிட்டுப் போனபின் எங்களைச் சீக்கிரம் சுட்டுக் கொன்றுவிடுவார்கள் என்று அவர் சுட்டிக்காட்டிப் பேசியதை நினைத்து நினைத்து நாங்களிருவரும் நெடுநேரம் அழுதுகொண்டிருந்தோம். அதையறிந்த ஷங்கர்ஜி எங்களை அழவேண்டாமென்று ஆறுதல் சொன்னார்."

"உங்கள் அறைக்குள் அவன் வந்தானு?" என்று சீறினார் துரை.

"எங்கள் அறைக்கு அவர் வரவில்லை. நாங்கள் வாய்விட்டு அழுத குரலைக் கேட்டு அவர் தம்முடைய அறைக்குள் இருந்தபடியே ஆறுதல் சொன்னார். அன்று மாலை ஆறு மணிக்கு வழக்கம்போல் எங்களுக்கு ஆகாரம் கொடுக்கப்பட்டது. பாராக்கார சிப்பாயின் மேற்பார்வையில் நாங்கள் மூன்று பேரும் ஒன்றாகத்தான் சாப்பிட்டோம்; சாப்பிடும்போது சேர்ந்துதான் சாப்பிடுவது வழக்கம்.

"அது தெரியும் எனக்கு. அது நானே அனுமதித்ததுதான். மேலே சொல்லுங்கள்" என்றார் துரை.

"சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது பாராக்காரருக்குத் தெரியாமல் ஷங்கர்ஜி எங்களிடத்தில் ஒரு துண்டுக் கடிதம் கொடுத்தார். அதில் 'இன்றிரவு ஒரு மணிக்கு மேல் நாம் மூவரும் இந்தச் சிறையிலிருந்து ஓடிவிட முடி

யும். தயாராக இருங்கள். நான் வந்து கூப்பிடுகிறேன்' என்று எழுதியிருந்தது. நாங்கள் வெகு ஆசையோடு தூங்காமல் காத்துக்கொண் டிருந்தோம். கடிதத்தில் இருந்தபடியே நடு ஜாமத்துக்குமேல் ஷங்கர்ஜியே வந்து எங்கள் அறைகளின் பூட்டுக்களைத் திறந்தார்.

"யார் ஷங்கர்ஜியா?"

"ஆம், ஷங்கர்ஜிதான்"

"பாராக்காரன் யாரும் அங்கே இல்லையா?"

"பாராக்காரர் வெளிக் கதவண்டை இருந்தாரோ தூங்கிவிட்டாரோ எங்களுக்குத் தெரியாது. சிறையி லிருந்த எல்லா விளக்குகளும் அணைக்கப்பட்டு ஒரே இருட்டாக இருந்தது. ஷங்கர்ஜியைக் கூட, அவர் எங் கள் காதோடு பேசியதிலிருந்துதான் அறிந்துகொண் டோமேயன்றி அடையாளம் காணமுடியவில்லை. எங்க ளைத் தம்முடைய அறைக்குள் கூட்டிக்கொண்டு போய் எங்கள் காதுகளில் வாய்வைத்து, நாம் உடனே மாந் தலே ரஸ்தாவுக்குச் சென்று, விடிகிறதற்குள் அடுத்த கிராமத்தை அடைந்து, அங்கே தாடி மீசைகளைச் சவரம் செய்துகொண்டு உடைகளையும் பர்மியர்போல் மாற்றிக் கொண்டு மணிபுரி வழியாக அஸ்ஸாமுக்குப் போய் அங் கிருந்து சாமர்த்தியத்தின்படி மறைந்துவிடவேண்டும். வழிச் செலவுக்கு இதோ ஆளுக்கு ஐந்நூறு ரூபாய் தரு கிறேன். அவரவர் கையில் அது இருக்கட்டும். உடனே புறப்படுங்கள். நானும் பின்னல் வருகிறேன்" என்று சொல்லிப் பணத்தையும் எங்களிடம் தந்து உடனே மாந்தலேக்குப் போகத் துரிதப் படுத்தி, அவரும் எங்க ளுடன் சிறையை விட்டு வெளியே வந்தார். அவரும் பின்னல் வருகிறார் என்று எண்ணிக்கொண்டு வெகு வேகமாக நாங்கள் இருவரும் ரஸ்தாவுக்கு நடந்தோம்.

"நீங்கள் சிறையிலிருந்து வெளியே வந்தபோது அங்கே பாராக்காரன் இல்லையா? என்ரூர் துரை.

"நாங்கள் கவனிக்கவில்லை. எந்தப் பக்கமும் திரும் பிக்கூட பார்க்காமல் ராணுவ முகாமைக் கடந்து ரஸ்தா வுக்குப் போய்விட்டோம்"

"பிறகு?"

"விடிவதற்குள் ஒரு ரைல்வே ஸ்டேஷனை அடைந் தோம். அங்கிருந்துதான் மாந்தலேக்குப் போய்விடலாம் என்று ஷங்கர்ஜி சொல்லியிருந்தது. அதனால் அவரும் அங்கே வந்து சேருவாரென்று அவருக்காக வெகுநேரம் காத்துக்கொண்டிருந்தோம். அவர் வரவில்லை. அதன் பிறகு அருகிலிருந்த ஒரு கிராமத்துக்குப் போய் தாடி மீசைகளையெல்லாம் சவரம் செய்துவிட்டு, பர்மாக்கார ரைப் போல் உடை தரித்து எங்களுடைய அடையாளங் களை மாற்றிக்கொண்டு மாந்தலேக்கு ரயிலேறிச் சென் றோம். அங்கே ஒரு நாள் தங்கி மணிபுரிக்குப் போகும் மலைப் பாதையைப்பற்றிய விவரங்களை அறிந்துகொண்டு, அந்தப் பாதையின் வழியாகப் பல நாள் நடந்து கௌஹத்திக்குப் போய்ச் சேர்ந்தோம்."

"மணிபுரி எல்லையிலுள்ள சுங்கக்கட்டிடத்தில் உங் களை சோல்ஜர்கள் நிறுத்திச் சோதனை செய்ய வில்லையா?"

"நாங்கள் மணிபுரி எல்லைக்குப் போகவில்லை. அங்கே சோல்ஜர்கள் இருப்பதையும் அவர்கள் எங்களை சோதிப் பார்கள் என்பதையும் ஒரு கிராமவாசி எச்சரித்தார். அதனால், நாங்கள் மணிபுரிக்கு இருபது மைலுக்குஇப்பா லேயே அந்தக் கிராமவாசி காட்டிய குறுக்குப் பாதையில் ஒரு பள்ளத்தாக்கில் இறங்கி வயல்களிலும் வரப்புகளி லும் நடந்து கௌஹத்திப் பாதைக்குப் போனோம். அங்

கிருந்து கல்கத்தா வழியாகச் சென்னைக்கு வந்து சேர்ந்தோம். அங்கே நாங்கள் பிரிந்தோம்'' என்ருன் முனிஜி.

''இதெல்லாம் உண்மையாக இருக்கலாம். ஆனல் நீங்கள் சிறையிலிருந்து ஓடியது 14-ஆம் தேதி என்பதும், 18-ஆம் தேதி மதன் சிங்கை அடிக்கவில்லை யென்பதும் நம்பத் தகுந்தவையல்ல. ஷங்கர்ஜிதான் உங்களை விடுவித்துப் பண உதவியும் செய்தவன் என்ற விசுவாசத்துக்காக அவனைப்பற்றிய உண்மைகளை மறைக்கிறீர்கள். நானே கண்ணுரக் கண்டதையெல்லாம் தள்ளிவிட்டு நீங்கள் சொல்லுகின்ற கட்டுக் கதையை நம்பச் சொல்லுகிறீர்கள். இப்படியெல்லாம் புளுகச் சொல்லி அந்த ஷங்கர்ஜிதான் உங்களுக்குச் சொல்லிக் கொடுத்திருப்பான். நான் ஒரு ஏகாதிபத்திய வெறியன் என்று என்னையே இகழ்ந்து பேசினவன் அவன். நீங்கள் அவனைப்பற்றிய உண்மைகளைச் சொல்லாவிட்டாலும் நான் அவனைக் கண்டுபிடிக்காமல் விடப்போவதில்லை.....ஏய்! ஸையத் காதர், நீ மதன் சிங்கைத் துப்பாக்கியால் அடித்ததையும், நீங்கள் மூவரும் அவனை அமுக்கிக் குளோரபாரம் கொடுத்ததையும் மறைப்பதற்காக 14-ஆம் தேதியே ஓடிவிட்டதாகச் சொல்லுகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். உங்களுக்கு நல்ல காலம் இருந்தால்—இன்னும் மூன்று நாள் தவணை கொடுக்கிறேன்—நன்ருக ஆலோசனை செய்து உண்மையைச் சொல்லிவிடுங்கள். இல்லையானல்.....ஏய்! இவர்களை லாக்கப்புக்குக் கொண்டு போங்கள்'' என்று கத்தினர் டங்கன்துரை. உடனே வெளியே காத்துக்கொண்டிருந்த சோல்ஜர்கள் வந்து அவர்களைச் சிறைக்குக் கொண்டுபோய்விட்டார்கள்.

ஸையத் காதரும் முனிஜியும் டங்கன் துரையிடம் சொன்னதெல்லாம் உண்மையே. ஆனல், டங்கன்

துரைக்கு சங்கரலிங்கன்மேலிருந்த கோபத்தால் இவர்கள் சொன்னவற்றை ஆராய்ந்து எண்ணிப் பார்க்கவோ, விசாரித்து அறிந்துகொள்ளவோ வேண்டிய பொறுமை இல்லாமற் போய்விட்டது.

ஆனல் இவர்கள் 14-ஆம் தேதி இரவிலேயே ஓடிவிட்டதாகவும் 18-ஆம் தேதி இரவில் மதன் சிங்கு அடிபட்டு மயங்கிக் கிடந்தது இவர்கள் செய்த காரியம் அல்ல வென்பதும் சிறிதும் நம்பமுடியாத ஆச்சரியம்தான்.

சங்கரலிங்கம்

நாகபுரிக்கு வடக்கே வெகுதூரத்தில் ஒரு அடர்ந்த வனம். வானளாவிய பிரம்மாண்டமான மரங்களும் வகை வகையான செடிகொடிகளும் முட்புதர்களும் செறிந்து சுமார் இருபது சதுர மைல்கள் விஸ்தீரண முள்ள மிகப் பெரிய காடு. அதற்குள் இருந்துகொண்டு குனிந்து பார்த்தால் பசுமையான இலைகளையும் கொடி களையும் தவிர வெறும் தரையைக் காணமுடியாது. அண் ணாந்து பார்த்தால் மரக்கிளைகளைத் தவிர ஆகாயம் தெரி யாது. அந்த வனம் சர்க்கார் காட்டு இலாகாவைச் சேர்ந்த 'ரிஸர்வ்.' அதில் எல்லாவிதமான மரங்களும் இருந்தனவென்றாலும் சந்தன மரங்களே முக்கியம். அதனால் வெகு பலமான காவலுள்ளது. அந்த வனத் துக்குள் போவதற்கென்று சர்க்கார் அமைத்திருக்கிற பந்தோபஸ்தான பாதைகளின் வழியே போனாலன்றி வேறு விதமாக உள்ளே நுழைவது மிகவும் அபாயகர மானது. ஏனெனில், இரவு பகல் எந்த நேரத்திலும் எல்லாவிதமான வனவிலங்குகளும் எல்லாப் பக்கங்களி லும் சஞ்சரித்துக் கொண்டிருக்கும். அந்த வனத்துக்குள் யாரும்விலங்குகளையோ பறவைகளையோ வேட்டையாடக் கூடாது என்பது கண்டிப்பான உத்தரவு. அதனால், அங்கே சிறுத்தை, புலி, யானை, செந்நாய், கரடி, காட்டுப் பன்றி முதலிய கொடிய மிருகங்கள் அதிகம். வெளியே இருந்து யாரும் அங்கே வந்து வேட்டையாடக் கூடா தென்றாலும் காட்டிலாகாவைச் சேர்ந்த அதிகாரிகளும் சிப்பந்திகளும் தங்களுடைய தற்காப்புக்காக மிருகங்களைச் சுட்டுக் கொன்றுவிட நேர்ந்தால் அது குற்றமல்ல.

இப்படிப்பட்ட வனத்துக்குள் வெகு பந்தோபஸ்தாக உருக்குக் கம்பிகளால் வேலி கட்டப்பட்டிருக்கும். ஒரு பாதை, மோட்டார் வண்டிகளும் போகக்கூடிய அகலமான ரஸ்தா. அந்த ரஸ்தாவில் சுமார் பத்து மைல் போனால் அங்கே ஒரு மிகப் பெரிய பங்களா உண்டு. அது மிகவும் பலமான கட்டிடம். யானைகள் வந்து முட்டித் தள்ள முயன்றாலும் அசைக்கமுடியாதபடி இருக்கவேண்டு மென்ற திட்டத்தோடு கட்டப்பட்டது. அது மூன்று மாடிகள் உள்ளது. மாதத்தில் பாதிக்குமேல் காட்டிலாகா வின் தலைமை அதிகாரி அதிலே தங்குவார். வசிப்பதற்கு வேண்டிய சகல வசதிகளும் உணவுப் பொருள்களும் உள்ளது. அதைச் சுற்றிலும் சுமார் இருபது கெஜ தூரத் தில், வன விலங்குகள் கட்டிடத்தை நெருங்கமுடியாதபடி உருக்குத்தண்டுகள் நட்டு முள்வேலி கட்டப்பட்டிருந்தது. இந்தக் கட்டிடத்தைச் சுற்றிலும் அதேமாதிரி பாதுகாப்பு கள் உள்ள சிறு கட்டிடங்களும் பல இருந்தன. வெட்டப் பட்ட சந்தன மரங்களை அடுக்கவும் வேறுள்ள வனச் செல்வங்களைச் சேகரித்து வைக்கவும் சிப்பந்திகள் வசிக் கவும் என்று தனித்தனிக் கட்டிடங்கள் இருந்தன. அந்த வனத்தைப் பற்றிய சகல அதிகாரங்களும் முதலில் சொல்லப்பட்ட பெரிய பங்களாவில் வந்து தங்கும் உரிமையுள்ள காட்டிலாகாவின் தலைமை அதிகாரி பால்தேவ் என்பவரைச் சேர்ந்தவை. அவருடைய முத்திரை தாங்கிய அனுமதிச் சீட்டு இல்லாமல் யாரும் அந்த வனத்துக்குள் நுழையமுடியாது.

அந்த பால்தேவ் என்பவர் சங்கரலிங்கத்தின் ஆருயிர் நண்பனுகிய ஜெயபாலின் தகப்பனுருடன் பிறந்த அத்தையின் மகன். அவருடைய மனைவிக்கு மிகவும் நெருங்கிய உறவான நிர்மலா என்ற பெயருள்ள வெகு அழகான கன்னிகையும் ஜெயபாலும்தான், மங்க

ளாம்பாளையும் சங்கரலிங்கனையும் போலவே, குழந்தைப் பருவம் முதல் ஒருவரையொருவர் விரும்பிப் பின் காதலர் களாகி, அந்தக் கலியாணம் காத்துக்கொண்டிருக்கிறது. ஜெயபாலின் பெற்றோர்கள் அவனுக்கு வேறு பெண்ணை மணமுடிக்க விரும்பினர்கள். அதை மறுப்பதற்காகத் தான் அவன் பட்டாளத்தில் சேர்ந்தான். அவன் பட்டா ளத்துக்குப் போய் வெகு நாள் வராமலிருந்ததால் நிர்மலா வின் பெற்றோர்களும் அவளுக்கு வேறு மாப்பிள்ளையை எண்ணினர்கள். ஆனால், அவள் ஜெயபாலைத் தவிர வேறு யாரையும் மணந்துகொள்ளமாட்டேன் என்று விட்டாள். மேலும் பால்தேவ் என்பவர் ஜெயபாலின் தகப்பனரால் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டுப் படித்து பட்டம் பெற்று முன்னுக்கு வந்தவர். ஜெயபாலின் காதலி நிர்மலாவின் தந்தை இந்தியாவின் 'கவர்னர் ஜெனர லான' 'வைசிராயின்' மெய்காப்பாளரின் தலைவர். டில்லி யில் அதிகார வர்க்கத்தாரிடம் செல்வாக்குள்ளவர். அந்த செல்வாக்கும் பால்தேவின் உத்தியோக உயர்வுக்கு மிக வும் உதவியது.

அப்படிப்பட்ட பாசபந்தங்களால் கட்டுப்பட்ட பால் தேவ், ஜெயபால் கண்கலங்கிக் கை குவித்துக் கேட்டுக் கொண்டதை மறுக்கமுடியாதவராகி சங்கரலிங்கன் தம் முடைய வனமாளிகையில் மறைந்திருக்க இடங்கொடுத் தார். முதலில் ஜெயபாலின் உறவைப் பற்றிய தாட் சண்ணியத்துக்காக அரைமனதுடன் அனுமதி கொடுத் தார். பிறகு சங்கரலிங்கத்தின் குணத்தையும் சரித்தி ரத்தையும் அறிந்து, அவரும் (சுபாஷ் சந்திர போஸ்) நேதாஜியிடத்தில் கொண்டிருந்த நன்மதிப்பால் மனப் பூர்வமாகவே சங்கரலிங்கனைப் பாதுகாத்தார். சங்கர லிங்கன் யார் என்பதைத் தம்முடைய சிப்பந்திகளிலும் எவரும் அறிந்துவிடமுடியாதபடி எல்லாவித ஏற்பாடு

களையும் மிக்க எச்சரிக்கையுடன் மேற்கொண்டார். அந்த வனமாளிகையின் மேல் மாடியிலேயே குடியிருப் பதற்கு வேண்டிய சகல சௌகரியங்களும் ஏற்கெனவே அமைக்கப்பட்டிருந்தன. அந்த மாடியிலுள்ள மிகப் பெரிய சாளரங்களும், குரங்கு, மரநாய் முதலிய பிராணி கள் உள்ளே புகுந்துவிட முடியாதபடி மிகவும் நெருக்க மாகக் கம்பிகள் பொருத்தப்பட்டவை. அதனால் கீழே யிருந்து யாரும் சன்னலுக்குப் பின்னல் இருப்பவரை அறிந்துகொள்ள முடியாது.

ஒரு நாள் இரவில் சங்கரலிங்கனைத் தம்முடைய மோட்டார் வண்டியிலேயே பால்தேவ் அங்கே கொண்டு வந்துவிட்டார். அப்போது ஜெயபாலும் வந்திருந்தான். அவர்களுடன் கூடவே சங்கரனுக்குச் சமைத்துப் போடவும் மற்ற சௌகரியங்களைக் கவனித்துக் கொள்ள வும் பால்தேவ் வீட்டு வேலைக்காரர்கள் இருவர் வந்தார் கள். அவர்களுக்கும் அந்தப் பங்களாவில் எப்போதும் காவலிருக்கும் சில வேலைக்காரர்களுக்கும் சங்கரலிங்கன் பால்தேவுக்கு நெருங்கிய நண்பர் என்றும் ஆரோக்கியத் துக்காகச் சில காலம் அங்கே தங்கியிருக்க வந்திருக்கிறார் என்றும்தான் தெரியும்.

சங்கரலிங்கன் அங்கே வந்தபின் பால்தேவ் முன்னி லும் அதிகமாக அந்தப் பங்களாவில் முகாம் போட்டுத் தங்கி அவனைக் கவனித்துக் கொண்டார். இடையிடையே ஜெயபாலும் குமரேசனும் வந்து போவார்கள். அங்கே வந்து நான்கு மாதங்கள் வரை சங்கரன் சந்தோஷ மாகத்தான் இருந்தான். அதன்பிறகு கொஞ்சங் கொஞ்சமாக நம்பிக்கை குறையத் தொடங்கிவிட்டது. ஜெயபால் எங்கெங்கோ சென்று தனக்காக என்னென் னவோ முயற்சிகளைச் செய்துகொண்டிருக்கிறான் என் பது சங்கரனுக்குத் தெரியும். ஆனால் அந்த முயற்சிகள்

பலனளிக்கும் என்பதற்கான அறிகுறிகள் சிறிதும் தென் படவில்லை. உயிராசையால் சிறையிலிருந்து ஓடி வந்து பல மாதங்களாகியும் இன்னும் அந்த உயிரை நடுங்கச் செய்து கொண்டிருக்கும் அபாயம் கூடவே இருந்து கொண்டுதான் இருக்கிறது. தனக்கு என்ன கதி நேரும் என்பது இன்னும் தெரியவில்லை. போலீஸ்காரருடைய பிடிக்கு அகப்படாமல் வாழ்நாளெல்லாம் இப்படியே மறைந்து இருந்துவிட முடியுமென்றாலும் அது என்ன வாழ்வு! என்ன நேருமோ, எப்படியாகுமோ என்று ஒவ்வொரு கணமும் நடுங்கிக்கொண்டே உயிரைச் சுமந்து கொண்டு நரகவேதனையில் கிடப்பானேன்? தர்ம தேவதையே போன்ற தாயார் தவித்துக்கொண் டிருக்க, குபேரசம்பத்தைக்குவித்துக்கொடுத்துள்ளதந்தை குலைந்து கிடக்க, பல ஜன்மங்களிற் செய்த நல்வினை களின் பயனேபோல் வாய்த்த மனைவி மனமுடைந்து போக, அவர்களோடு வாழ்க்கை நடத்தமுடியாமல் எங்கே மறைந்துகொண்டு எவ்வளவு காலம் உயிரோடிருந் தாலும் எதற்காகும்?.....என்றெல்லாம் எண் ணி யெண்ணித் தினமும் ஏங்குவான்.

சிறையிலிருந்து தப்பியபோதிருந்த நம்பிக்கையும் மகிழ்ச்சியும் நாளுக்குநாள் குறைந்து, ரங்கூன் சிறையி லிருந்து நாகபுரிச் சிறைக்கு மாற்றப்பட்டுள்ள கைதி யாகவே கலங்கிக்கொண் டிருந்தான். ரங்கூன் சிறையில் இருந்தபோதாவது தன்னுடைய துன்பங்கள் தீர்ந்து போவதற்கான ஒரு எல்லைக்கோடு தெரிந்துகொண் டிருந்தது. இங்கே அத்துன்பம் எல்லையற்றதாகி விட்டது.

இரவில் தூக்கம் வருவதில்லை. சில சமயம் வந்தா லும் வினவிலங்குகளின் ஆரவாரம் அதைக் கெடுத்து விடும். இல்லாவிட்டால் தாய் தந்தையரைப் பற்றியும்

மனைவியைப் பற்றியும் கனவுகள் தோன்றிக் கலைத்து விடும். விடிந்ததும் ஸ்னானம் செய்விக்கவும் ஆகாரம் கொடுக்கவும் வேலைக்காரர்கள் காத்துக் கொண்டிருப் பார்கள். அவர்களைக் காணும் போதெல்லாம் கைதியைக் காவல் புரியும் சிப்பாய்களின் நினைவுதான் உண்டாகும். குளித்தபின் நெற்றியில் விபூதியைப் பூசி, குங்குமத் திலகமிட்டுக்கொண்டு, தெய்வத்தைத் தொழுது தியானம் செய்யவென்று உட்கார்ந்து, கரங்களைக் குவித்துக் கண் களை மூடுவான். மனக்கண்ணின் முன்னால் தெய்வம் தோன்ற வேண்டுமென்று எண்ணிய இடத்தில் மங்களாம்பாளும் மாதா பிதாவும்தான் நிற்பார்கள். மாற்ற முயல்வான்; ஆனால், முடிவதில்லை. காலை ஆகாரத்துக்குப் பின் எதையாவது படித்துப் பொழுது போக்கலா மென்று அங்குள்ள அலமாரிகளிலிருந்து நல்ல புத்தகமாகப் பொறுக்கி யெடுத்துக்கொண்டு சாய்வு நாற்காலியில் உட்காருவான். விரித்த புத்தகம் கைகளில் இருக்கும்; விழிகள் முகட்டையே பார்த்துக் கொண்டிருக்கும். மனம் வசந்த புரியையும் விருதூரையும் வட்டமிட்டுக் கொண்டிருக்கும். பரிசாரகன் பலமுறை அழைத்தபின் எழுந்து போய் கொஞ்சம் பகலுணவைக் கொறிப்பான். அதற்குள் மற்றொரு வேலைக்காரன் மஞ்சத்தின்மீது பஞ்சணை விரித்துப் படுக்கை தயார் செய்துவைப்பான். அதில் வந்து படுத்துக் கண்களை மூடிக்கொண்டு தூங்க முயல்வான். அருகிலுள்ள மரங் களில் குயில்கள் கூவும். அதைக் கேட்டுக்கொண்டே படுத்திருப்பான். குயிலோசை திடீரென்று நின்றுவிடும். உடனே எழுந்து சன்னலுக்கருகிற் சென்று குயிலைத் தேடி மரக்கிளைகளைப் பார்ப்பான். குயில்கள் கூவிக் கொண்டிருந்த இடத்தில் குரங்குகள் தாவிக்கொண் டிருக்கும். இன்னொரு கிளையில் இரண்டு மூன்று குரங்கு

கள் ஒன்றை யொன்று கட்டிப் பிடித்துக்கொண்டு தூங்கும். வேறொரு கிளையில் ஒரு குரங்கை மற்றொரு குரங்கு மடியில் படுக்க வைத்துப் பேன் பார்த்துக் கொண்டிருக்கும். அருகே ஒரு மரத்தில் கிளிகள் முத்த மிட்டுக் கொஞ்சிக் கொண்டிருக்கும். பலவிதமான குருவி கள் கூட்டமாகவந்து உட்காரும், கூட்டமாகவே பறந்து மறைந்துவிடும்.

ஒரு குயிலாகக், கிளியாகக், குருவியாக அல்லது ஒரு குரங்காகத்தான் பிறந்தோமா என்றும் எண்ணு வான். மாலைப் பொழுது வந்துவிடும். இன்று இரவை எப்படிக் கடப்பது என்று ஏங்குவான்.

சங்கரலிங்கன் மிகவும் மனந்தளர்ந்துவிட்டான் என் ரூலும் ஜெயபால் சிறிதும் தளர்ச்சியடையாமல் சங்கர லிங்கத்தின் உயிரைக் காப்பாற்றப் பெருமுயற்சிகள் செய்துகொண் டிருந்தான்.

ஜெயபாலின் முன்னோர்கள் மூன்று தலைமுறைக்கு முன்னால் நேபாள தேசத்திலிருந்து இந்தியாவுக்கு வந்தவர்கள். பரம்பரையாகவே போர் வீரர்கள். அவர் களிற் பலர் இந்திய ராணுவத்தில் மிக உயர்ந்த பதவி களில் இருந்தவர்கள். ஜெயபாலின் பாட்டனார் ஒரு கூர்க்கா பட்டாளத்தின் தலைவராக இங்கிலீஷ்காரருக்குப் பல போர்முனைகளில் உதவி புரிந்து பரிசுகள் பெற்றவர். அந்தப் பாட்டனாரின் தந்தை இங்லீஷ்காரருக்கும் பர்மி யருக்கும் நடந்த முதல் பர்மிய யுத்தத்தில் இங்கிலீஷ்கா ரருக்கு உதவியாக இருந்து வெற்றி கண்டவர். இப்படிப் பட்ட காரணங்களால் இந்தக் குடும்பங்களோச் சேர்ந்த வர்களுக்கு ஆங்கிலேயரிடத்தில் அமோகமான செல்வாக் கிருந்தது. அதனால், இப்போதும் ஜெயபாலின் பந்துக் களில் பலபேர் மிகப்பெரிய உத்தியோக பதவிகளில் இருந்தார்கள்.

அவ்வளவு பேர்களின் செல்வாக்கையும் திரட்டி, எப்படியாவது சங்கரலிங்கத்துக்கு மன்னிப்பு வாங்கித் தந்துவிட வேண்டும் என்பது ஜெயபாலின் முயற்சி. அதற்காக அவன் இந்தியாவுக்கு வந்தது முதல் ஓய்வே இல்லாமல் பிரயாணம் செய்து, இதற்கு உதவிசெய்யத் தகுதியுள்ள எல்லாரையும் தனித் தனியே சந்தித்துப் பேசித் தன்னுடைய உயிருக்காகவே கெஞ்சுவது போல் கேட்டுக் கொண்டான். அவர்களும் அனுதாபப் பட்டார்கள்.

அத்துடன் ரங்கூன் ராணுவ முகாம் கலைக்கப்பட்ட பின் இந்தியாவுக்கு வந்த ஜேகப் துரையும் முன்போல் தம்முடைய தமயன் தாமஸ் மூலமாக மீண்டும் ஒரு முயற்சி செய்ய விரும்பி, அதற்காகச் சேனாதிபதியைச் சந்திக்கத் தருணம் பார்த்துக்கொண் டிருந்தார். அந்தத் தருணம் வாய்ப்பது தாமதப்பட்டுக் கொண்டே வந்தது. ஏனென்றால், அப்போது 'வைசிராய்', 'கமாண்டர்-இன் - சீப்' முதலிய தலைமை அதிகாரிகளெல்லாம் இந்தியா சுதந்தரம் அடைய வேண்டுமென்று மகாத்மா காந்தி நடத்திவந்த சாத்வீகப் போராட்டத்தின் பயனாக, இங்கிலாந்து அரசாங்கத்துக்கும் இந்திய அரசாங்கத்துக் கும் இடையே நடந்து கொண்டிருந்த ஆலோசனைகளில் ஈடுபட்டிருந்தார்கள். வெள்ளைக்காரன் வெளியே போய் விட வேண்டும் என்ற கிளர்ச்சி அதிகப்பட்டு, இந்திய காங்கிரசின் சக்தி நாட்டில் மேலோங்கி யிருந்தது. இங்கி லாந்திலும் பொதுஜன அபிப்பிராயம் இந்திய சுதந்தர முயற்சிகளுக்கு அனுகூலமாக மாறத் தொடங்கியது. இங்கிலீஷ்காரன் இனி இந்தியாவை ஆளக்கூடாது என்ற மனக்கசப்பு இந்திய மக்களிடை இவ்வளவு அதிகப்பட்டபின் எதற்காக அவ்வளவு பெரிய இந்தி யாவை ஆளும் பாரத்தை இங்கிலாந்து சுமந்துகொண்டு

கஷ்டப்பட வேண்டும் என்று இங்கிலாந்தின் ஆட்சி யாளரும் எண்ணத் தொடங்கினர்கள். இந்தியாவை இந்தியர்களிடத்திலேயே விட்டுவிட்டு விலகிவிடத் தீர் மானித்தார்கள். ஆனல் அதை எப்படி விடுவது, யாரி டத்தில் விடுவது, என்பனவற்றைப் பற்றிய பிரச்னைகள் எழுந்தன. அதற்காக இங்கிலாந்து அரசாங்கத்துக்கும் இந்திய அரசாங்கத்துக்கும் அடுத்தடுத்து பல ஆலோ சனைகள் நடக்கவேண்டியிருந்தன. இங்கிலாந்தின் கருத்துகளைத் தெரிவிக்க வைசிராயும் இந்திய காங்கிர சின் கருத்துகளைத் தெரிவிக்க மகாத்மா காந்தியுமாக இவர்களுக்கிடையில் கடிதப் போக்கு வரவுகளும், சந்திப்பும் சர்ச்சைகளும் நடைபெற்றுக் கொண்டிருந் தன. முக்கியமான ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் ஆலோசிப்பதற்குக் காந்தியடிகள் காங்கிரஸ் காரியக் கமிட்டியைக் கலந்து பேச அவகாசம் கோருவார். அதைப் போலவே வைசிராயும் தம்முடைய ஆலோசகர் களுடன் கலந்து பேசவேண்டியிருக்கும். இந்திய சைனி யங்களின் தலைவராகிய 'கமாண்டரின் - சீப்' வைசிரா யின் முக்கிய ஆலோசகர்களில் ஒருவரானதால் அவ ருக்கு இந்த விஷயமாக ஓயாத அலுவல்கள் இருந்து கொண்டிருந்தன. அதனல் தாமஸ் துரையின் உதவி யுடன் ஜேகப்துரை சேனதிபதியைக் கண்டு பேசும் வாய்ப்பு தாமதப்பட்டது.

தாமஸ்துரை, தம்பி ஜேகப்துரையின் சிபார்சுகளுக் காக, முன்பே மூன்று முறை சங்கரலிங்கனுக்காக மறை முகமான ஒத்தாசைகளைச் செய்தவர். இப்போது தாமஸ் துரையும் தன்னுடன் சேர்ந்து, சங்கரலிங்கனுடைய உயிருக்காகச்சிபார்சு பேசவேண்டுமென்று ஜேகப்துரை தமயனை மிகவும் வேண்டிக்கொண்டார். சேனதிபதியின் குடும்பமும் தாமஸ் - ஜேகப் குடும்பமும் இங்கிலாந்தில்

ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். அக்கம் பக்கமாக நெருங்கிப் பழகியிருந்த நண்பர்கள். அந்த முறையில் (உத்தியோக முறையிலல்லாமல்) சேனதிபதி அவர்களுடைய வேண்டு கோளுக்குச் செவிசாய்ப்பாரென்ற நம்பிக்கையினல் தாமஸ்துரையும் தம்பியின் விருப்பத்திற்கு இணங்கினர்.

ஒரு நாள் வெறும் நட்புமுறையில் தாமஸ்துரையும் ஜேகப்துரையும் சேனதிபதியின் வீட்டிற்குப் போகும்படி யான வாய்ப்பு வந்தது. சேனதிபதி, அவர்களை மிகவும் அன்புடன் வரவேற்றார். இரண்டு குடும்பத்தாரின் க்ஷேமங்களைப் பற்றியும் வெகுநேரம் பேசிக்கொண்டிருந் தார்கள். சாப்பாட்டு நேரம் வந்தது. சேனதிபதி நண்பர் கள் இருவரையும் தம்முடன் உணவுகொள்ள அழைத் தார். உணவுக்குப் பிறகு மூவரும் ஏகாந்தமாக இருக்க நேர்ந்த சமயத்தில் ஜேகப்துரை மெள்ள ஷங்கர்ஜியைப் பற்றிப் பிரஸ்தாபித்து, "அவன் பர்மாவில் நேதாஜி யுடன் சேருவதற்கு முன்னல் எனக்கு மிகவும் நெருங்கிய நண்பனாக இருந்தவன். அந்த பாசத்தால் அவனுக்குத் தாங்கள் உயிர்ப்பிச்சை கருணை செய்யவேண்டு மென்று மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்ளுகிறேன். என்ன செய்வேன்? உயிருக்குயிரான நேசர்களாக இருந் தோம். மனம் கேட்கவில்லை. என்னை மன்னிக்க வேண்டும்" என்று மிகவும் தழுதழுத்த குரலில் சொன்னர்.

சேனதிபதி திடுக்கிட்டவர்போல் தாமஸ்துரையைத் திரும்பிப் பார்த்தார். தம்பி சொன்னதை ஆமோதிப்பவர் போல் புன்சிரிப்புடன் தலையை அசைத்து,

"இதே ஏக்கமாக ஜேகப் ஊணுறக்க மில்லாமல் உருகுகிறன்" என்றார் தாமஸ்துரை.

சேனதிபதியின் முகம் சிறுத்துவிட்டது. புருவங்கள் சுருங்கின. தலை குனிந்தது. நெடுநேரம் மௌனம் நில

வியது. அதன்பிறகு சேனாதிபதி தலை நிமிர்ந்து எதிரே யிருந்த இருவரையும் பார்த்து,

" இப்படிப்பட்ட ஒரு கோரிக்கை உங்களிடமிருந்து வரும் என்று நான் எதிர்பார்க்கவே யில்லை. அதுவும் இப்போதுள்ள சூழ்நிலையில் இது மிகவும் விபரீதமான வேண்டுகோள். அந்த ஷங்கர்ஜி என்பவன் சிறையி லிருந்து ஓடுவதற்கு முன்னால் இப்படி நீங்கள் கேட்டிருந் தால், நான் அதை அனுதாபத்துடன் கவனித்திருக்க முடியும். இப்போது அதற்குக் காலம் கடந்துவிட்டது. அவனை சிறையிலிருந்து ஓடிப்போய் இன்னும் இருக்கு மிடம் கண்டுபிடிக்க முடியாமல் இருக்கிறது. அது நம் முடைய ராணுவத்துக்கும் ராஜரீகத்துக்கும் சவால் விட்டது போன்ற காரியம். நமக்கு மிகவும் மானக்கேடு உண்டாக்கிவிட்ட விஷயம். இன்னும் அந்த ஷங்கர்ஜி யைக் கண்டுபிடிக்கவில்லையா என்று இந்தியாவிலும் இங்கிலாந்திலும் உள்ள எல்லா அதிகாரிகளும் கண் கொட்டாமல் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியாததல்ல. இந்தச் சமயத்தில் நான் அவனுக்கு உயிர்ப்பிச்சை தந்துவிடுவது என்னுடைய பொறுப்புகளுக்குப் பொருந்துமா ? இப்போது நான் என்ன காரணங்காட்டி அவனுக்குக் கருணை புரிய முடியும் ? உங்களுக்கு அவன் நெருங்கிய நண்பன் என் பதற்காக நான் அவனுக்குச் சலுகை காட்டினேன் என்று சொல்லிக் கொள்ளமுடியுமா ? உங்களுக்கு அவன் நண்பன். எனக்கு நீங்கள் நண்பர்கள். அது போதுமா ?" என்றார்.

உடனே ஜேகப்துரை தாம் கொண்டு வந்திருந்த மங்களாம்பாள் கையெழுத்திட்ட மனுவை சேனாதிபதி யிடம் நீட்டி,

" இதைத் தங்களிடம் நான் நேரிற் கொடுத்து சிபார்சு செய்ய வேண்டுமென்று ஷங்கர்ஜியின் மனைவி எனக்கு அனுப்பியிருக்கிறாள். அதனால்தான் தங்களிடம் சொல்லிக் கொள்ளத் துணிந்தேன் " என்றார்.

சேனாதிபதி அதை வாங்கிப் படித்துப் பார்த்தார். (அந்த மனு குமரேசன் வாங்கிக் கொண்டு வந்தது. அந்த மனுவைத் தயார் செய்து ஜெயபாலிடம் தந்தது ஜேகப்தான். இந்த ரகசியமெல்லாம் தாமசுக்குத் தெரியாது. ஜெயபாலுக்கும் ஷங்கர்ஜிக்கும் உள்ள தொடர்பும் தாமஸ்துரைக்குத் தெரியாது. தம்பிக்கு நெருங்கிய நண்பன் ஷங்கர்ஜி என்பது ஒன்றுதான் தாமஸ் அறிந்தது.)

அந்த விண்ணப்பம் வெகு அழகான முறையில் மனதை உருக்கும்படி எழுதப்பட்டிருந்தது. அதைப் படித்துவிட்டுச் சேனாதிபதி,

" இந்த விண்ணப்பம் இப்போது ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல. முதலில் அவன் பிடிபடட்டும் அல்லது அவனுகவே வந்து சரணடையட்டும். பிறகு பேசிக் கொள்வோம் " என்று தீர்மானமாகச் சொல்லி விண்ணப் பத்தைத் திருப்பித் தந்துவிட்டார்.

உயிர்ப்பிச்சை கிடைத்தது!

வேறு முயற்சி

சேஞ்திபதி சொன்னதில் தாமஸ் துரைக்கு ஏமாற்றம் ஒன்றுமில்லை. அது அவர் எதிர்பார்த்தது தான். தம்பியின் கட்டாயத்துக்காக உடன் சென்றார். சேஞ்திபதி மிகவும் நிதானமாகப் பதில் சொன்னது தாமஸ் துரையைக் கருதித்தான். ஜேகப் துரையும் தமையன் தன்னுடன் வரச் சம்மதித்ததால் பலிக்கும் என்று செய்த முயற்சிதான்.

ஜெயபாலுக்குத்தான் ஏமாற்றம். வெள்ளைக்கார ருக்கு வெள்ளைக்காரர், ஒரே ஊரைச் சேர்ந்த பழகிய குடும்பத்தினர் என்ற முறையில் அனுகூலம் கிடைக்கு மென்றே எதிர்பார்த்தான்.

ஆனலும் ஜெயபால் இந்த ஒரு முயற்சியை மட்டும் நம்பியிருக்கவில்லை. இதைவிடச் செல்வாக்குள்ள சில பெரிய இடங்களில் ஒன்று ஜெயபாஜ் மணந்துகொள்ளக் காத்திருக்கும் அவனுடைய காதலி நிர்மலாவின் தந்தை ஜெயசந்திரா என்பவர். அவர் வைசிராயின் மெய்காப் பாளர்களின் தலைவர். இனிய முகமும் கம்பீரமான தோற்றமும் உடையவர். குணவான், பலவான், தைரிய சாலி. பட்டாளத்தில் தீரச் செயல்களுக்காகப் பல பரிசுகள் பெற்றவர். வரிசையாக நான்கு வைசிராய் களுக்கு மெய்காப்புத் தலைவனக இருந்து வருபவர். வைசிராய்கள் மாறி மாறி வந்தாலும் அங்கே நீடித்து அதிகாரத்திலிருந்து வரும் வெள்ளைக்காரர்களிடத்தில் மிகுந்த செல்வாக்குடையவர்.

o

சங்கரலிங்கன் விஷயமாக முனனமேயே ஜெயபால் இவரிடம் பேசியிருந்தான். ஜேகப் செய்த முயற்சி

பலிக்காது போனபின் ஜெயபால் மீண்டும் ஜெயசந்திரா வைப் போய்ப் பார்த்தான். அவர் தம்மாலான முயற்சி களை விரைவில் செய்வதாக உறுதிகூறி யனுப்பினர்.

ஜெயசந்திராவுக்கு முதல் நான்கு குழந்தைகளும் ஆண்கள். அதன்பிறகு நிர்மலா பிறந்தாள். அவளுக்குப் பின்னல் மூன்று ஆண்குழந்தைகள். ஏழு ஆண் மக்க ளுக்கிடையில் நிர்மலா ஒரே ஒரு பெண் குழந்தை. அபூர்வமான அழகும் குணமும் அறிவும் அமைந்தவள். ஜெயசந்திராவுக்கும் அவருடைய மனைவிக்கும் நிர்மலா தான் கண்மணி. அப்படிப்பட்ட அருமை மகளை மணந்து கொள்ளப் போகிறவன் ஜெயபால். மகளுடைய திருமணம் விரைவில் நடக்கவேண்டும் என்பது ஜெய சந்திராவின் விருப்பம். ஆனல் ஜெயபாலோ தன் னுடைய அருமை நண்பன் சங்கரலிங்கனுடைய உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கிற வேளையில், கலியாணத்தைப் பற்றிய பேச்சைக் காதில்கூட வாங்கிக்கொள்வதில்லை. நிர்மலாவும் தன் காதலனையே ஆதரித்து, அவருடைய நண்பர் சங்கரனுக்கு நன்மை யுண்டாக்கக்கூடிய சிபார்சு களைச் சீக்கிரமாகச் செய்யவேண்டும் என்று தன் தந்தை யைக் கேட்டுக்கொண்டாள். என்ன செய்வார்! யாரைக் கொண்டாவது இதற்கு ஒரு பெருமுயற்சி செய்துதானக வேண்டும். யாரைக் கொண்டு எப்படி அந்தச் சிபார்சைச் செய்விப்பது என்று எண்ணி யெண்ணிப் பார்த்தார்.

தாமே வைசிராயை அணுகலாமா என்று எண்ணி னர். ஆனல், இந்த விஷயம் சேஞ்திபதியைச் சேர்ந்தது. வைசிராய் தலையிடத் தயங்குவார். சேஞ்திபதியும் பழக்கமானவர்தான். ஆனல் நெருங்கிய தொடர்பில்லை .....ஆம், நினைவுக்கு வந்துவிட்டது! சிம்சன் துரை இருக்கிறார்; அவர்தான் இந்த உதவி கேட்க மிகவும்

தகுதியானவர். உண்மையான நண்பர். கேட்டால் மறுக்கமாட்டார். மனப்பூர்வமாகச் சிபார்சு செய்வார்.

சிம்சன் துரை என்பவர் வைசிராயின் அந்தரங்கக் காரியதரிசி. பதினைந்து ஆண்டுகளாக ஜெயசந்திராவிடம் அந்தரங்க நட்புடையவர். பத்து வருடங்களுக்கு முன்னால் சிம்சனும் அவருடைய நண்பர்களும் யமுனை நதிக்கரையிலுள்ள நந்தவனத்தில் ஒரு தோட்ட விருந்து நடத்த ஏற்பாடு செய்தார்கள். அவர்களில் பெரும்பாலும் வைசிராய் காரியாலயத்தைச் சேர்ந்த ஆங்கிலேய அதிகாரிகள். அந்த விருந்துக்கு அழைக்கப் பட்டிருந்த ஒரே ஒரு இந்தியர் ஜெயசந்திரா. அவருக்கும் அழைப்பு அனுப்பச் செய்தவர் சிம்சன்தான்.

மற்றவர்களெல்லாம் அங்கே போய்ச் சேர்ந்தபின் கடைசியாக ஜெயசந்திரா நந்தவனத்துக்குச் சென்றார். அவர் அங்கே போனபோது மற்ற விருந்தினர்கள் நந்தவனத்தில் இல்லை. அவர்களெல்லாம் நீந்தி விளையாடி நீராடி வரப் படித்துறைக்குப் போயிருப்பதாக பட்லர்கள் சொன்னார்கள். ஜெயசந்திராவும் படித்துறைக்குப் போனார். அங்கே போயிருக்கிற எல்லாரினும் சிம்சன் தான் ஜெயசந்திராவுக்கு மிகவும் பிரியமானவர். அதனால் படித்துறைக்குச் சென்றவுடன் அவருடைய கண்கள் சிம்சனைத் தேடின. அவர் அங்கே காணப்படவில்லை. மற்றவர்கள் நீந்திக்கொண்டும் ஒருவர்மேல் ஒருவர் நீரிறைத்துக்கொண்டும் விளையாட்டும் வேடிக்கையுமாக இருந்தார்கள். ஜெயசந்திரா முன்னாலிருந்த ஜான் என்பவரைப் பார்த்து, "சிம்சன் துரை இன்னும் வரவில்லையா?" என்றார்.

"ஓ! சிம்சன் வெகுநேரத்துக்கு முன்பே வந்து விட்டாரே. இதோ நீந்திக்கொண்டிருக்கிறாரே" என்று சொல்லிக்கொண்டே பின்னால் திரும்பி, சிம்சன் சற்று

முன் நீந்திக்கொண்டிருந்த இடத்தைக் காட்டினார், ஜான்.

சிம்சன் அங்கே இல்லை. எல்லாரும் திடுக்கிட்டு அங்குமிங்கும் திரும்பித் திரும்பித் தேடினார்கள். சிம்சன் காணப்படவில்லை. சிம்சன் புதிதாக நீச்சல் கற்றுக் கொண்டவர். வெள்ளத்தில் முழுகிப் போனாரோ என்று எல்லாரும் திகிலடைந்தார்கள். இதற்குள் ஜெயசந்திரா, இப்படிப்பட்ட சமயங்களில் அவருக்கு இயல்பாக உண்டாகும் துடிப்புடன் தம் சட்டைகளைக் களைந்துவிட்டு ஆற்றில் குதித்தார். படித்துறையைவிட்டு ஆற்றுக்குள் சென்று வெள்ளம் போகிற போக்கோடு நாலாபக்கமும் பார்த்துக்கொண்டே நீந்திச்சென்றார். சற்று தூரத்தில் மனிதனுடைய தலை போலத் தெரிந்து மறைந்து விட்டது. வெகு வேகமாக அந்த இலக்குப்பார்த்துப் பாய்ச்சல் நீச்சத்தில் போய்ச் சேர்ந்தார். தலை பிடிபட்டது. நல்ல வேளை கரை வெகு தூரத்திலில்லை. வெள்ளத்தோடு நீந்தி வேறொரு இடத்தில் கரை யேறினார். ஜெயசந்திரா மிகுந்த பலசாலி. அதுவும் அப்போது வாலிபப் பருவம். சிம்சன் ஒல்லியான மனிதர்; அவரைத் தலைகீழாகக் குப்புறப் பிடித்துக்கொண்டு சுழற்றி, குடித்த தண்ணீரைக் கக்கச் செய்துகொண்டிருந்தார். மற்ற நண்பர்களும் வந்து சேர்ந்தார்கள்.

ஜெயசந்திரா சாரணர் பயிற்சியில் தேறியவர். 'முதல் உதவி' சிகிச்சைகளை அறிந்தவர். செய்யவேண்டியவற்றை முறைப்படி வெகுநேரம் செய்தபின் சிம்சன் பிழைத்துக்கொள்வார் என்ற அறிகுறிகள் தோன்றின. உடனே ஒரு மோட்டார் வண்டியில் அவர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டார். அவருடைய மனைவி அலறிக்கொண்டு ஓடி வந்தாள். ஜெயசந்திராவுக்கு மண்டியிட்டு வந்தனம் செய்தாள். சிம்சன் துரைக்

குத் தன் நினைவு வர இரண்டு நாட்கள் சென்றன. ஜெய சந்திரா இரண்டு நாளும் அருகிலேயே இருந்தார். சிம்சன் பூரண சௌக்கியம் அடைய ஒரு மாதமாயிற்று. தினந் தினம் ஜெயசந்திரா அவரைப் பார்க்கப் போவார்.

அதிலிருந்துஜெயசந்திராவின் குடும்பத்தாருசிம்சன் குடும்பத்தாரும் மிக நெருங்கிய நேசர்களாகிவிட்டார்கள். இரண்டு குடும்பங்களும் ஒன்றுக்கொன்று மாறி மாறி விருந்து வைக்கும். ஜெயசந்திராவைக் காணும்போதெல் லாம் சிம்சன் துரையின் மனைவி 'என் கணவருக்கு உயிர் கொடுத்தவர்' என்று உபசரிப்பாள்.

சிம்சன் துரைக்கு மூன்று பெண்களும் இரண்டு ஆண் மக்களும் உண்டு. இரண்டு வீட்டுக் குழந்தை களும் ஒரு வீட்டுக் குழந்தைகள்போல் கொஞ்சிக் குலவி மகிழ்வார்கள். நிர்மலா அடிக்கடி தன் தாயோடும் தனி யாகவும் சிம்சன் வீட்டுக்குப் போய் அவருடைய பெண் களோடு பொழுது போக்குவாள். சிம்சனுக்கும் அவ ருடைய மனைவிக்கும் நிர்மலாவிடத்தில் அலாதி பிரியம். இது மட்டுமல்ல. காரியதரிசி என்ற முறையில் சிம்ச னும், மெய்காப்பாளர் தலைவன் என்ற முறையில் ஜெய சந்திராவும் வைசிராய் போகுமிடங்களுக்கெல்லாம் கூடவே போகவேண்டியவர்கள். அதனால் உள்ளூரில் மட்டுமன்றி வெளியூர்களிலும் இணைபிரியாமல் இருக்கக் கிடைத்தவர்கள்.

இந்த சிம்சன் துரை, இங்கிலாந்தில் 'கேம் பிரிட்ஜ்' சர்வகலாசாலையில் சேனாதிபதியுடன் சேர்ந்து படித்தவர். அப்போதிருந்தே நெருங்கிய நண்பர்கள். இந்தியாவுக்கு வந்தபின் அந்த நட்பு அதிகப்பட்டது. அத்துடன் சிம்சன் துரையின் மூத்த மகளும் சேனாதிபதியின் மக னும் ஒருவரையொருவர் விரும்பி, அவர்களுக்குள்-மேல்

நாட்டு வழக்கப்படி கலியாணத்துக்குமுன் நடக்கிற 'வூயிங்' நடந்துகொண்டிருந்தது.

ஒரு நாள் மாலையில் சிம்சனையும் அவர் மனைவியை யும் சந்திக்க விரும்புவதாக அவர்களுக்கு முன்னறிவிப்பு அனுப்பிவிட்டு ஜெயசந்திரா நிர்மலாவையும் கூட்டிக் கொண்டு அவர்களுடைய மனைக்குப் போனார்.

வழக்கம்போல் குதூகலத்துடன் வரவேற்றார்கள். சிம்சனுடைய மக்களெல்லாம் ஓடி வந்து நிர்மலாவைச் சூழ்ந்துகொண்டார்கள்; சிம்சனுடைய மனைவியும் பெண் மக்களும் நிர்மலாவைத் தனித்தனியே கட்டித் தழுவிக் கொஞ்சினார்கள். பிறகு முதியவர்கள் மூவரும் க்ஷேம லாபங்களைப்பற்றிப் பேசத் தொடங்கினார்கள். பெற்றோ ரைப் பேசவிட்டுவிட்டு, சிம்சனுடைய மக்கள் நிர்மலா வைக் கூட்டிக்கொண்டு பங்களாவுக்கு வெளியே 'பாட் மிண்டன்' விளையாடப் போய்விட்டார்கள். குடும்ப விஷய மான பேச்சுக்கள் வந்தபோது-"நிர்மலாவின் திருமணம் எப்போது?" என்றாள் ஸ்ரீமதி சிம்சன். "அது உங்களால் தான் ஆகவேண்டும்; அதைப்பற்றிப் பேசத்தான் வந்தேன்" என்றார் ஜெயசந்திரா.

"எங்களாலா!" என்று திடுக்கிட்டார் சிம்சன் துரை.

"ஆம், மிகச் சிறந்த குடும்பத்தைச் சேர்ந்த மிக நல்ல ஒரு இளம்பெண் தன்னுடைய கணவனுக்கு உயிர்ப்பிச்சை கேட்கிறாள். அதை நாம் வாங்கிக் கொடுத் தால்தான் நிர்மலாவின் திருமணம் சீக்கிரம் நடக்கும்."

சிம்சனும் அவருடைய மனைவியும் ஜெயசந்திரா சொல்வது விளங்காமல் விழித்தார்கள். தன்னுடைய 'கணவனுக்கு உயிர்கொடுத்த' ஜெயசந்திரா யாரோ ஒரு பெண்ணினுடைய கணவனுக்கு உயிர்ப் பிச்சைக் கேட் கிறார் என்று வெகு அனுதாபத்துடன் நினைத்துக்கொண் டாள் ஸ்ரீமதி சிம்சன்.

"எந்தப் பெண் தன் கணவனுக்கு உயிர்ப்பிச்சைகேட் கிருள்? அதில் நாம் செய்யக்கூடியது என்ன?" என்ருர் சிம்சன். "அந்தப் பெண்ணைப் பற்றிய விவரம் பின் னல் சொல்லுகிறேன். அவளுடைய கணவனுக்கு உயிர்ப்பிச்சை கிடைப்பது உங்களால்தான் ஆகக் கூடி யது. வேறு எவராலும் முடியாது. தங்களுக்கு இந்தச் சிரமத்தைக் கொடுக்க மிகவும் தயங்கினேன். ஆனலும் நிர்மலாவுக்காகத் தங்களிடம் சொல்லிக்கொள்ளாமல் இருக்க முடியவில்லை."

"ஓ! நிர்மலாவுக்காக நான் என்னலான எதையும் செய்யத் தயார். அந்தப் பெண் யார்? அவளுடைய கணவனுக்கு உயிர்ப்பிச்சை கொடுக்க நான் என்ன செய்யவேண்டும்?"

"அந்தப் பெண் இவள்தான்" என்று முன் ஜேக பிடம் வாங்கிப் பார்த்துச் சேனுதிபதி திருப்பிக் கொடுத்து விட்ட மங்களாம்பாளின் மனுவைச் சிம்சனிடம் கொடுத் தார், ஜெயசந்திரர். அந்த மனு முன்னமேயே சேனுதி பதியால் நிராகரிக்கப்பட்டது என்பது ஜெயசந்திரா வுக்குக் கூடத் தெரியாது. ஜெயபால் ஜேகப் செய்த முயற்சியைப் பற்றி அவரிடம் சொல்ல வில்லை. மனுவை மட்டும் கொடுத்திருந்தான்.

மனுவைப் படித்தவுடனே சிம்சன் துரைக்கு விஷ யம் விளங்கிவிட்டது. வைசிராயின் அந்தரங்கக் காரிய தரிசி என்ற முறையில் 'ஷங்கர்ஜி' என்பவனைப் பற்றிய எல்லா விவரங்களையும் ஏற்கெனவே அறிந்திருப்பவர் சிம்சன்.

உடனே பதில் சொல்ல முடியாதவராய் சிம்சன் துரை வெகுநேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். கடைசி யாக, "இது மிகவும் கடினமான விஷயம். இருந்தாலும் நிர்மலாவுக்காக என்னல் கூடியதையெல்லாம் செய் கிறேன். 'ஷங்கர்ஜி' என்பவனைப் பற்றிய தஸ்தாவேஜு களை ஆராய்ந்து, அவனுக்காக சிபார்சு பேசக் காரணம் ஏதாவது கண்டுபிடிக்கிறேன்" என்ருர்.

ஜெயசந்திரர் பெருமகிழ்ச்சி யடைந்தார். ஸ்ரீமதி சிம்சன் மனதுக்குள்ளேயே கணவரை வாழ்த்திக் கட வுளை வணங்கினுள்.

அதன்பிறகு ஒருமாதம் வரை சிம்சன் துரை சேனுதி பதியைச் சந்திக்க முடியவில்லை. டில்லியை விட்டுச் சேனுதிபதி சுற்றுப்பிரயாணம் சென்றிருந்தார். ஒருநாள் மாலையில் சிம்சன்துரை ஜெயசந்திராவை டெலிபோனில் கூப்பிட்டுத் தம்மை வந்து பார்க்கும்படி அழைத்தார். வெகு ஆவலோடு அவர் மட்டும் போனர். மனைவியும் கணவனும் மகிழ்ந்த முகத்துடன் வரவேற்ருர்கள். ஒரு மேஜையின் மீது சிற்றுண்டிகளும் பழங்களும் மூன்று பேருக்குப் பரிமாறப்பட்டிருந்தன. தேநீரும் இருந்தது. மூவரும் அருந்தி முடிந்த பின்பு சிம்சன் துரை,

"சேனுதிபதி கொஞ்சத்தில் இடங் கொடுக்கவில்லை. அந்த மனுவை முன்னமேயே அவர் நிராகரித்துவிட்ட தாகச் சொல்லிவிட்டு, அது எப்படி எனக்கு வந்ததென்று கேட்டார். நீங்கள் தந்து, சிபார்சு செய்யக் கேட்டுக் கொண்டதாகச் சொன்னேன. ஆனல் ஜெயபாலைப் பற் றியோ நிர்மலாவின் கலியாணத்தைப் பற்றியோ நான் ஒன்றும் சொல்லவில்லை. ஷங்கர்ஜியைப் பற்றிய 'ரிகார்டு' களில் அவனுக்குக் கருணை காட்ட இடமிருக்கிறதென்று வாதாடினேன். அவர் அதை ஒப்புக்கொள்ளவில்லை. அதற்கு அவர் சொன்ன காரணம் நான் ஒப்புக்கொள்ள வேண்டியதாக இருந்தது. அந்த வழக்கில் சம்பந்தப் பட்ட யாருக்குக் கருணை காட்டினலும் இந்த ஷங்கர்ஜிக் குக் கருணை காட்ட நியாயம் இல்லையென சொல்லி மனுவை என்னிடம் திருப்பிக் கொடுத்துவிட்டார்.

எனக்கு அடக்கமுடியாத வருத்தம் வந்துவிட்டது. வாதாடுவதை விட்டுவிட்டுத் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டேன். பிறகு அவர் பல கேள்விகள் கேட்டார். நான் ஒன்றுக்கும் பதில் சொல்லாமல் தலையைக் கவிழ்த்துக் கொண்டு, தரையைப் பார்த்துக்கொண்டிருந்தேன். பள்ளிப் பருவத்தில் என்னுடன் மிகவும் நெருங்கிப் பழகினவராதலால் அப்படி நான் பதில் சொல்லாமல் தலைகுனிந்திருப்பதின் அர்த்தம் அவருக்குத் தெரியும். அதனால் "இதில் உமக்கென்ன இவ்வளவு விசாரம்?" என்றார். உடனே நான் 'எனக்கு இதில் மிகுந்த விசாரம் இருப்பதனால்தான் கேட்டுக்கொள்ள நானே வந்தேன், என்றேன். அவர் மிகுந்த வியப்புடன் 'எப்படி?' என்றார். நான், "மனுச் செய்துகொண்டிருக்கும் இந்தப் பெண், ஜெயசந்திராவின் குடும்பத்துக்கு மிகவும் உறவானவள். அந்தப் பெண்ணுக்காக அவள் கணவனுக்கு உயிர்ப் பிச்சையாவது கிடைக்க நான் உங்களிடம் சிபார்சு செய்ய வேண்டுமென்று ஜெயசந்திரா என்னை மிகவும் கேட்டுக் கொண்டார். உங்களிடம் சிபார்சு பேசுவதாக ஜெயசந்திராவுக்கு நான் வாக்களித்தேன். ஜெயசந்திரா எனக்கு உயிர் கொடுத்தவர் என்பது உங்களுக்குத் தெரியும். அவருக்காக நான் இந்தச் சிபார்சு செய்ய உங்களிடத்தில் எனக்கு உரிமையில்லையா ? இல்லையென்றால் சொல்லிவிடுங்கள். ஒரு பெண்ணுக்காக அவளுடைய கணவனுக்கு இரக்கங் காட்ட நம்முடைய சட்டங்களில் இடமில்லாமற் போகவில்லை. தங்களுக்கு என்மீது இரக்கமுண்டானால் அந்தப் பெண்ணுக்கு இரக்கம் காட்டுங்கள். அதற்குச் சட்டமும் நியாயமும் இடங் கொடுக்கும்" என்று என்னையும் அறியாத ஆவேசத்துடன் பேசி விட்டேன். இது அவருடைய மனதை இளகச் செய்து விட்டது. உடனே அவர் என்னிடம் தந்த அந்த மனுவை

மறுபடியும் வாங்கிக்கொண்டு மேஜையின் அருகில் உட்கார்ந்து அந்த மனுவின் பின்புறத்தில் தம்முடைய சிபார்சுகளை எழுதிக் கையொப்பமிட்டு என்னிடம் காட்டினார். அதில் ஷங்கர்ஜியின் மரணதண்டனையை ஆயுட்கால சிறைவாசமாக மாற்றிவிட வைசிராய்க்கு சிபார்சு செய்யப்பட்டிருந்தது. அதற்கு அவர் அதில் காட்டியிருந்த காரணம் எனக்கு வியப்பளித்தது. சற்று நேரத்துக்கு முன்னால் எந்தக் காரணத்துக்காக கருணை காட்ட இடமிருக்கிறது என்று நான் வாதித்து அவர் ஒப்புக் கொள்ளவில்லையோ, அதே காரணம் எழுதப்பட்டிருந்தது. மனமிருந்தால் வழி இருக்கும் என்ற பழமொழிக் கிணங்க அமைந்திருந்தது. அந்த மனம் இன்னும் கொஞ்சம் அதிகமாக விரிந்திருந்தால் மனுவில் கேட்டுக் கொண்டிருந்தபடி அவர் மன்னிப்பே அளித்திருக்கலாம். ஆனால் அவர் அப்படிச் செய்திருந்தால் அது அவருடைய உத்தியோகப் பொறுப்புகளை மிகவும் பாதிக்கும். ஷங்கர்ஜி விஷயம் இந்திய அரசாங்கத்துக்கு மட்டுமன்றி இங்கிலாந்து அரசாங்கத்துக்கும் சேர்ந்தது. வைசிராயின் நிலைமையும் இங்கிலாந்தில் பழிப்புக்கிடமுள்ளதாகி விடும். அதனால் நான் மேலும் வற்புறுத்த விரும்பவில்லை. நீங்கள் கோரிய உயிர்ப்பிச்சை கிடைத்துவிட்டது. அதனால் நிர்மலாவின் விவாகம் நடப்பதற்குத் தடையாக இருந்த விசாரம் நீங்கிவிட்டது. நமக்கு அது போதும். ஆனால் ஒரு விஷயம். இந்த ஷங்கர்ஜி உடனே சரணடைந்துவிட வேண்டும். அதன் பிறகு தான் சேனாதிபதியின் சிபார்சு வைசிராய்க்குப் போகும்."

போன உயிர் வந்துவிட்ட பூரிப்பு

சங்கரலிங்கன் செய்த குற்றத்தையும், டங்கன் துரை அவனைச் சுட்டுக் கொல்வதற்குக் காத்துக் கொண்டிருந்த துடிப்பையும், அவன் சிறையிலிருந்து தப்பி ஓடி வந்து விட்டதையும், அவனைப் பிடித்தாக வேண்டுமென்று இங்கிலீஷ் ஏகாதிபத்தியத்தின் சகல சக்திகளும் இரவு பகலாகத் தேடிக் கொண்டிருக்கிற தீவிரத்தையும், சேர்த்து எண்ணிப் பார்த்தபோது சேனதிபதி மரண தண்டனையை மாற்றிவிட இசைந்தது மகத்தான விஷயம்தான். சிம்சன் துரையைத் தவிர வேறு எவருக்கும் சேனதிபதி இணங்கி யிருக்க மாட்டார். அது மாங்கல்ய பலத்துக்காக மங்களாம்பாள் செய்த பார்வதி பூஜையின் பலன் என்றுதான் எண்ணச் செய்கிறது.

போன உயிர் வந்து விட்டது என்பது இலேசான விஷயமா? எல்லையற்ற மகிழ்ச்சியோடு ஜெயசந்திரா சிம்சன் துரைக்கு நன்றி செலுத்திவிட்டுத் திரும்பினர். தம்முடைய வீட்டுக்கு வந்து நிர்மலாவுக்கு மட்டுந்தான் மிகவும் ரகசியமாகச் சங்கரலிங்கனுக்கு உயிர்ப் பிச்சை கிடைத்துவிட்டதைச் சொன்னர். அதைக் கேட்ட நிர்மலா தன் காதலனை மணவறையில் கைப்பிடித்தது போல் களிப்படைந்தாள்.

ஜெயசந்திராவின் பெற்றேரும், ஜெயபாலின் பெற்றேரும், காட்டிலாகா தலைவர் பால்தேவின் பெற்றேரும் ஆரம்பத்தில் ஆக்ராவில்தான் வசித்தார்கள். பிறகு உத்யோக முறையில் வெவ்வேறு இடங்களுக்குப் பிரிந்து விட்டார்கள். இப்போது ஜெயசந்திராவின் குடும்பம் டில்லியில் இருக்கிறது. ஜெயபாலின்

தாய் தந்தையர்கள் ஆக்ராவில் இருந்தார்கள். பால் தேவின் குடும்பம் நாகபுரியில் இருந்தது. பர்மாவிலிருந்து வந்தது முதல் ஜெயபால் ஒரு இடத்திலும் சில நாள் கூடச் சேர்ந்தாற்போல் தங்குவதில்லை. பெற்றேர்களுக்காக ஆக்ராவில் சில நாளும், சங்கரலிங்கனைக் கவனிக்க நாகபுரியில் சில நாளும், சங்கரனுக்காகச் சிபார்சு செய்யத் தகுந்த உறவினர்களையும் நண்பர்களையும் பார்க்க டில்லியில் சிலநாளும், டில்லியைவிட்டு வேறு இடங்களில் உள்ள இந்த சிபார்சுக்குத் தகுந்தவர்கள் என்று எண்ணிய உத்தியோகஸ்தர்களைப் பார்க்கவென்று சில நாளுமாக அலைந்து கொண்டே யிருந்தான்.

முன் ஜேகப் துரையும் தாமஸ் துரையும் சேர்ந்து செய்த முயற்சி பலிக்காமற் போன பிறகு ஜெயபால், ஜெயசந்திராவை வந்து பார்த்தானல்லவா? அப்போது அவர் சீக்கிரம் முயற்சி செய்வதாக உறுதி கூறியனுப்பினர். எப்போது யாரைக்கொண்டு முயற்சி செய்வது என்பது ஜெயசந்திராவுக்கே அப்போது தெரியாது.

சிம்சன் துரை சேனதிபதியைப்பார்த்து, சங்கரலிங்கனுக்கு உயிர்ப் பிச்சை கிடைத்து விட்டதை, அவர் ஜெயபாலுக்கு நேரிற் சொல்ல விரும்பினர். அது உடனே பகிரங்கப்படுத்தக் கூடிய சேதியல்ல. ஏனெனில் வெள்ளைக்காரருக்குப் பெரிய விரோதியென்று சங்கரலிங்கன் மீது வெறுப்புடைய ஆங்கிலேய அதிகாரிகள் பலர். அவர்களில் யாராவது இதையறிந்தால் அது டங்கன் துரைக்கும் தெரிந்துவிடலாம். அவன் சேனதிபதி செய்தது இங்கிலீஷ்காரரின் தன்மானத்துக்கும் இங்கிலாந்தின் கௌரவத்துக்கும் மிகவும் தகாத காரியமென்று வைசிராயிடம் முறையிட்டு, அதனால், ஏதேனும் கெடுதியுண்டாகலாம் என்றெல்லாம் எண்ணினர். ஜெயசந்திரா-

அவர் தம்முடைய மகள் நிர்மலாவுக்கு அதைச் சொன்ன போதும் அவள் அதை வேறு யாருக்கும் இப்போது தெரியப்படுத்திவிடக் கூடாது என்று அழுத்தமாகச் சொல்லி யிருந்தார்.

உடனே வரும்படி ஜெயபாலுக்கு அவனுடைய ஆக்ரா விலாசத்துக்குத் தந்தி கொடுத்தார். அந்தத் தந்தி வந்தபோது அவன் அங்கில்லை; மிகவும் மனம் தளர்ந்து போயிருக்கிற சங்கரலிங்கனைப் பார்த்து அவனுக்குத் தைரியம் சொல்ல நாகபுரிக்கருகிலுள்ள வனமாளிகைக்குப் போயிருந்தான். மூன்று நாள் சங்கரனுடன் தங்கியிருந்து விட்டு, அங்கிருந்து வேறு சில இடங்களுக்கு இரண்டு நாள் போய்விட்டான். அதுவும் சங்கரலிங்கனைக் கருதித்தான். ஜெயசந்திராவுக்கு ஆங்கிலேய அதிகாரிகளிடத்தில் இருக்கும் அபார செல்வாக்கை அவன் அறிவான். ஆனாலும் ஜெயசந்திராவின் முயற்சியும் ஜேகப்-தாமஸ் முயற்சிபோல் தவறிப் போனால் என்ன செய்வது என்ற ஏக்கத்தில் அவன் நம்பியிருந்த மற்ற இரண்டு பெரிய இடங்களையும் மறுபடியும் பார்த்து வைக்கத்தான் போயிருந்தான். நாகபுரி வனமாளிகையில் ஜெயபால் தன் நண்பனை மறைத்து வைத்திருப்பதும், அதற்கென்று அவன் அடிக்கடி போவதும், ஆக்ராவிலுள்ள அவனுடைய பெற்றோருக்குத் தெரியாது. அதனால் அவனுக்கு வந்த தந்தியைத் திருப்பி யனுப்ப அவர்களுக்கு விலாசம் தெரியவில்லை. ஜெயசந்திரா அனுப்பிய தந்தியை ஜெயபால் ஆறு நாள் வரைக்கும் பார்க்கவில்லை.

ஜெயசந்திரா சிம்சன் துரையைப் பார்த்துவிட்டு வந்த மறுநாள் காலையிலேயே முதல் வேலையாக அவசரத் தந்தியாக அனுப்பப்பட்டது. அன்று மாலையிலேயே ஜெயபால் வந்து விடுவான் என்று எதிர்பார்த்தார்கள்.

மற்றவர்கள் எதிர்பார்த்தது எப்படி யிருந்தாலும் தந்தியை அனுப்பிய நிமிஷம் முதல் நிர்மலாவுக்கு நிலை கொள்ளவில்லை. காதலனுடைய கண்ணுக்கு இன்ப மூட்டக்கூடியவை என்று அவள் எண்ணியபடி தன்னை அலங்கரித்துக் கொள்ள ஆடைகளையும் ஆபரணங்களையும் பொறுக்கியெடுப்பதிலும் அவருக்குப் பிரியமான உணவுக்கும் சிற்றுண்டிகளுக்கும் வேண்டிய சாமான்களைச் சேகரிப்பதிலும் அவருடன் தனியாகப் பேசிக் கொண்டிருக்கத் தகுதியான அறையை அலங்கரிப்பதிலும் அலைந்து கொண்டே இருந்தாள்.

குழந்தைப் பருவத்திலிருந்து கொஞ்சிக் களித்த நேசம். பால பருவத்தில் பற்றி வளர்ந்த பாசம். எவ்வனத்தில் கவ்விக் கொண்ட காதல். பிரிக்க முடியாத உள்ளப் பிணைப்பு. நிர்மலாவுக்கும் ஜெயபாலுக்கும் இப்படிப்பட்ட உறவு உறுதியடைந்த பின், ஜெயபாலின் தந்தை அவனுக்குப் பெரும் பணக்காரியான வேறொரு பெண்ணை மணம் செய்து வைக்கப் பேசிக் கொண்டிருந்தார். அதை மறுத்துப் போனவன்தான் பட்டாளத்தில் சேர்ந்து கொண்டான். பிறகு பல முறை நிர்மலாவைப் பார்க்க வந்து போனான். அதன் பிறகு பர்மாவுக்குப் போன பின் இப்போதுதான் வந்திருக்கிறான். இடையில் எத்தனையோ காதற் கடிதங்கள் எழுதி யிருந்தான். கடிதங்களால் மனதைத் தேற்றிக்கொண்டு அவனுக்காகக் காத்திருப்பவள் நிர்மலா. இந்தியாவுக்கு வந்த பின் பலமுறை அவளைப் பார்க்க வந்தான். ஆனால் ஒவ்வொரு முறையும் அவன் சங்கரலிங்கனைக் காப்பாற்ற வேண்டிய முயற்சிகளைப் பற்றியே அவளுடைய தந்தையுடன் ஏகாந்தமாக நெடுநேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுக் கடைசியில் போகும்போது அவளிடம் இரண்டொரு வார்த்தைகள் பேசிப் புன்முறுவல் காட்டிக்

'கொஞ்ச நாள் பொறுத்துக்கொள் நிர்மலா' என்று போய் விடுவான். தன் நண்பனுடைய உயிரை எப்படியாவது காப்பாற்ற வேண்டுமென்ற கவலையினால் தன் காதலன் ஏங்கி இளைத்து நிம்மதியில்லாதிருப்பதை உணர்ந்த நிர்மலாவும் அவனுடைய முயற்சிகள் பலிக்க வேண்டுமென்று பகவானை வேண்டிக்கொண்டு தகப்பனுரையும் தூண்டிக் கொண்டிருந்தாள்.

இப்போது அந்தப் பிரார்த்தனை பலித்து விட்டது. அதுவும் தன்னுடைய தந்தையின் முயற்சியால் அது பலித்தது. அதை அறிந்தவுடன் தன் காதலர் எவ்வளவு சந்தோஷப்படுவார்! என்னென்ன சொல்லித் தந்தையைப் புகழ்வார்! எவ்வளவு ஆசையைத் தன்மீது அள்ளிக் கொட்டுவார்! தன்னுடன் எப்படியெல்லாம் சல்லாபிப்பார்! விவாகமும் விரைவில் நடந்து விடும் என்றெல்லாம் எண்ணிக்கொண்டு ஜெயபால் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள் நிர்மலா.

ஆறுவது நாள் மாலை ஐந்து மணிக்கு அவன் வந்தான். அப்போது ஜெயசந்திராவும் அவர் மனைவியும் ஒரு நண்பருடைய வீட்டில் நடந்த சிற்றுண்டி விருந்துக்குச் சென்றிருந்தார்கள். நிர்மலாவின் தம்பிகளில் இருவர் மட்டும் வாசலுக்கருகில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். ஐந்து நாட்களாகக் காத்துக் காத்துக் களைத்துப் போயிருந்த நிர்மலா, அன்றைக்கு அவர் வருவார் என்று எண்ணுமலும் அலங்காரங்கள் செய்து கொள்ளாமலும் உள்ளே ஏதோ வேலையாக இருந்தாள். தம்பிகள் ஓடிப் போய் அக்காளுக்கு அறிவித்தார்கள். நிர்மலா ஓடி வந்து வரவேற்று,

"ஆக்ராவிலிருந்து டில்லிக்கு வர ஆறு நாளா?" என்றாள்.

"என்ன செய்வேன் நிர்மலா, நண்பனைப் பார்க்க நாகபுரிக்குப் போயிருந்தேன். இன்றுதான் வந்து தந்தியைப் பார்த்தேன்; உடனே ஓடிவந்தேன்."

"சரி, வாருங்கள். அப்பாவும் அம்மாவும் ஒரு விருந்துக்குப் போயிருக்கிறார்கள். அவர்கள் வருவதற்குள் நீங்கள் கொஞ்சம் சிற்றுண்டி அருந்துங்கள்" என்று அவள் அவனுக்கென்று மாடியில் அலங்காரம் செய்து வைத்துள்ள அறைக்கு அழைத்துக் கொண்டு போனாள். அவனை சோபாவில் அமரச் செய்து விட்டு, 'இதோ வந்து விட்டேன்' என்று கீழே ஓடினாள். களைந்திருந்த சிகையைச் சீவி, முகத்தைக் கழுவித் திலகமிட்டு, உடைகளை மாற்றிக்கொண்டு பலவிதமான பட்சணங்களையும் பழங்களையும் சுமந்து கொண்டு மாடிக்கு வந்து,

"இந்த ஐந்து நாளாக என்னைத் தவிக்கச் செய்ததற்குச் சரியான தண்டனை. உங்களுக்கென்று நானே செய்து, ஐந்து நாளாகக் காத்துக் கொண்டிருக்கிற இத்தனை பட்சணங்களையும் நீங்கள் தின்றுக வேண்டும்" என்று சிரித்தாள்.

"ஐந்து நாளென்ன? ஐந்து வருஷங்களாக எனக்காகக் காத்துக் கொண்டிருக்கிற உன்னைவிடவா, ஐந்து நாளாகக் காத்திருக்கும் இந்தப் பட்சணங்கள் எனக்கு இனிக்கும்?" என்றான்.

அதைக் கேட்டு நிர்மலா உள்ளம் பூரித்து உடலும் பாரித்துப் பரவசமடைந்து நாணிவிட்டாள்.

"அதிருக்கட்டும். எனக்குத் தந்தி கொடுத்த காரியம் என்ன?" என்றான்.

"சொல்லுகிறேன், சாப்பிடுங்கள்."

ஜெயபால் சாப்பிட ஆரம்பித்து ஒரு பட்சணத்தை எடுத்துக் கடித்துக் கொண்டே அவளைப் பார்த்தான்.

"உங்கள் நண்பர் ஷங்கருக்காகச் சேஞ்திபதியிடம் சிபார்சு செய்யும்படி அப்பா சிம்சன் துரையைக் கேட்டுக் கொண்டார்....."

"சிம்சன் துரையையா! பேஷ்! அவரைத்தான் கேட்பார் என்று நானும் எண்ணினேன். சரி, சிம்சன் துரை என்ன சொன்ஞராம்?"

"சிம்சன் துரை சேஞ்திபதியைக் கண்டு பேசினஞராம்."

"சிம்சன் துரை சேஞ்திபதியைக் கண்டு பேசியாச்சா? பேஷ்! பேஷ்! பேஷ்! சேஞ்திபதி என்ன சொன்ஞராம்?

"சிம்சன் துரை ஆறு நாட்களுக்கு முன்னுல் அப்பாவை டெலிபோனில் கூப்பிட்டு அவருடைய வீட்டுக்கு அழைத்தார்....."

"அப்பா போயிருந்தாரா?"

"போயிருந்தார். வெகு நேரம் பேசிவிட்டு வந்தார்."

"சேஞ்திபதி என்ன சொன்ஞராம்?"

"சேஞ்திபதி சொன்னதாக சிம்சன் துரை அப்பாவிடம் சொன்னது மிகவும் ரகசியமான விஷயமாம். அதை உங்களிடம் ரகசியமாகச் சொல்லத்தான் உங்களை வரும்படி தந்தி கொடுத்தது" என்று நிர்மலா மிகவும் நிதானமாகச் சொன்ஞள். அவள் சொன்ன விதத்திலிருந்து காரியம் வெற்றியா தோல்வியா என்பதை அனுமானிக்க முடியாமல் ஜெயபால் திகைத்தான். தகப்பனர், அது ரகசியம் என்றும், யாரிடத்திலும் சொல்லிவிடக் கூடாது என்றும் சொல்லியிருந்தாலும் அவள் ஜெயபாலுக்குச் சொல்லிவிட்டால் அவர் வருத்தப்பட மாட்டார். ஆனுலும் கூட சிறிது நேரத்தில் அவரே வந்து சொல்லப் போகிறதை அவருக்கு முன் தான் சொல்லி

விட்டதாக இருக்கக் கூடாதென்றே அவள் அந்த விதமாகச் சொன்ஞள். உண்மையாகவே நிர்மலாவுக்கும் அவர் அந்த ரகசியத்தைச் சொல்லவில்லையென்றே ஜெயபால் எண்ணினுன். சேஞ்திபதி மறுத்துவிட்டாரோ என்றும் அஞ்சினுன்.

"அப்பா சிம்சன் துரையிடம் பேசிவிட்டு வந்த பிறகு சந்தோஷமாக இருந்தாரா சலிப்பாக இருந்தாரா?" என்ருன் ஜெயபால்.

"அடேயப்பா! கொள்ளைகொள்ளைக் குதூகலத்துடன் வந்தாரே! அன்று இரவு படுக்கிறவரைக்கும் எல்லாரோடும் வெகு சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருந்தார். ஒரு பக்கம் விடிவதற்குள் எழுந்து தந்தியை எழுதினர்" என்ருள்.

"அப்படியானுல் ஷங்கருக்கு மன்னிப்புக் கிடைத்திருக்கும். சிம்சன் கேட்டு சேஞ்திபதி இல்லையென்று விடுவாரா? இனி நம்முடைய திருமணம் வெகு விரைவில் மிகுந்த கோலாகலத்துடன் நடந்தேறும். அந்த வைபவத்தில் ஷங்கர் மிகவும் முக்கியமான விருந்தாளியாக வீற்றிருப்பார். முடியுமானுல் குமரேசனை அனுப்பி ஷங்கரின் மனைவி மங்களாம்பாளையும் அவளோடு அங்கிருந்து வரக்கூடிய மற்றவர்களையும் நம்முடைய திருமணத்துக்கு அழைத்து வரவேண்டும் என்பது என் ஆசை" என்ருன்.

"ஆமாம். எனக்கும் அந்த மங்களாம்பாளைப் பார்க்க வேண்டுமென்று வெகு ஆவல். நீங்கள் முன்னே அவளைப் பற்றியும் ஷங்கரைப் பற்றியும் எழுதியிருந்ததெல்லாம் என் மனதில் இருந்து கொண்டே யிருக்கின்றன."

"சரி, மங்களாம்பாளையும் அழைத்து வரச் செய்கிறேன்—உனக்காகவேனும். அதற்கு நீ எனக்கு என்ன பரிசு கொடுக்கிறாய்?" என்று சிரித்தான்.

"உங்களுக்குப் பரிசா? இதோ தருகிறேன்" என்று நிர்மலா எழுந்து அவனருகில் வந்தாள் ....."

யாரோ வருகிற காலடிசத்தம் கேட்டுத் திரும்பினாள். ஜெயசந்திராவும் அவருடைய மனைவியும் அறைக்குள் வந்தார்கள்.

சந்திப்பின் மகிழ்ச்சிகள் முடிந்து, ஜெயபால் வரத் தாமதப்பட்டதன் காரணமும் சொன்னபின் நிர்மலாவும் அவளுடைய தாயாரும் கீழே போய்விட்டார்கள்.

தாம் சிம்சன் துரையிடம் ஷங்கர்ஜிக்கு உயிர்ப் பிச்சை கிடைக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டதையும், சிம்சன் துரை சேனாதிபதியைச் சந்தித்ததையும், முதலில் சேனாதிபதி அந்த மனுவை ஏற்றுக்கொள்ள மறுத்ததையும், பிறகு சிம்சன் துரை சினேக முறையில் மிக்க வருத்தத்துடன் பேசியதைக் கேட்டு மனம் மாறி, மீண்டும் மனுவை வாங்கி மரண தண்டனையை மாற்றிச் சிபார்சுகள் எழுதிக் கையொப்பமிட்டுக் காட்டினதையும் ஆதியோடந்தமாக ஜெய சந்திரா சொல்லி முடித்தார்.

தன்னுடைய அருமை நண்பனுக்கு உயிர்ப் பிச்சை கிடைத்து விட்டதைக் கேட்டு, ஜெயபால் அடைந்த மகிழ்ச்சியை அளவிட முடியுமா? அடடா! அதற்காக அவன் என்னென்ன அரிய காரியங்களைச் சாதித்து எவ்வளவு தவங் கிடந்தான்! மரண தண்டனை மாற்றப் பட்டது அவனுக்கு மாபெரும் வெற்றிதான். அதற்காக ஜெயசந்திராவுக்கு அவன் எவ்வளவு நன்றி செலுத்தினாலும் போதாது என்பதை அவன் உள்ளம் அறியும். என்றாலும் ஏதோ ஏமாற்றம் அடைந்து

விட்டவன்போல் அவனையும் அறியாமல் அவனுடைய உள்ளம் குழம்பியது.

"தாங்கள் சிம்சன் துரை மூலமாகத்தான் இந்த முயற்சியைச் செய்வீர்களென்று அனுமானித்தேன். சிம்சன் துரை சிபார்சினால் மனுவில் கேட்டுக் கொண்டிருக்கிறபடியே ஷங்கருக்கு பூரண மன்னிப்புக் கிடைத்திருக்குமென்றே எதிர்பார்த்தேன்" என்று முனகினான் ஜெயபால்.

"இப்போதுள்ள சூழ்நிலையில் அப்படி எதிர்பார்க்க இடமில்லை. இது, இங்கிலீஷ் இனத்தின் கௌரவத்தையே பாதிக்கிற விஷயமாக சேனாதிபதியும் பல அதிகாரிகளும் கருதுவது. அவர் இவ்வளவு செய்ததே நம் முடைய நல்ல காலம். பூரண மன்னிப்புக் கிடைப்பது கடினம். என்றாலும் சேனாதிபதியின் சிபார்சு வைசிராய்க்கு வரும்போது, ஆயுள் தண்டனையைக் குறுகிய காலச் சிறைவாசமாகவாவது மாற்றும்படி சிம்சன் துரையையே கேட்டுக் கொள்ளுகிறேன்" என்றார் ஜெயசந்திரா.

ஜெயபால் திருப்தியடைந்தான். பத்து மாதங்களுக்கு முன்னாலேயே சுட்டுக் கொல்லப்பட்டிருக்க வேண்டிய சங்கரலிங்கன் இதுவரையிலும் உயிரோடிருந்ததே அதிசயம். இனி அவனுடைய உயிருக்குப் பயமில்லை என்ற நிலைமை உண்டாகிவிட்டது அதிசயத்திலும் அதிசயம். அத்துடன் ஆயுள் தண்டனையும் குறுகிய காலச் சிறைவாசமாக மாறிவிட இடமிருக்கிறபோது திருப்தியில்லாமல் வேறென்ன? ஆனாலும் மனிதனுடைய ஆசைக்கு அளவுண்டா? தன்னுடைய திருமணத்துக்கு மங்களாம்பாளையும் அழைத்து வந்து

சங்கரனை அவளிடம் ஒப்படைத்துவிட்டால், பர்மாவி
லிருக்கும்போது மங்களாம்பாள் தன்னுடைய கண
வரைப்பற்றிய விவரம் எழுத வேண்டுமென்று தனக்கு
எழுதிக் கொண்ட கடிதத்துக்குத் தக்க பதிலாகும் என்று
ஜெயபால் ஆசைப்பட்டான். அந்த ஆசையுடன்தான்
சற்று நேரத்துக்கு முன்னால் நிர்மலாவிடம் மங்களாம்
பாளையும் தங்கள் திருமணத்துக்கு அழைத்து வரப்
போவதாகப் பேசிக் கொண்டிருந்தான். இப்போது
அந்த ஆசை பூர்த்தியடைய இடமில்லை. அவ்வளவு
தான். அவன் விரும்பியபடி சங்கரனுக்குப் பூரண
மன்னிப்புக் கிடைக்கவில்லையென்றாலும் அவனுடைய
உயிரைத் தொடர்ந்து கொண்டிருந்த அபாயம் நீங்கி
விட்டதில் ஜெயபாலுக்குப் பொங்கி வழிந்த ஆனந்தமே
அவனைத் தூங்க விடவில்லை.

மறுநாள் அதிகாலையிலேயே சங்கரலிங்கனைப்
பார்க்க நாகபுரிக்குப் பயணமானான்.

சங்கரலிங்கன் வனமாலிகையின் மாடியில் தன்
தலைமயிரைக் கோதிக்கொண்டும் தாடியைத் தடவிக்
கொண்டும் சன்னலுக்கருகில் அமர்ந்து யோசனையில்
ஆழ்ந்திருந்தான். வனத்தில் தவம் செய்ய வந்திருக்கும்
ஒரு மகரிஷியைப் போலவே காட்சியளித்தான். அவ
னுடைய தாடியும் மீசையும் அப்படி அடர்ந்திருந்தன.
சையத்காதருக்கும் முனிஜிக்கும் அவர்களுடைய அடை
யாளத்தைப் பிறர் எளிதில் அறியாதிருக்கும் பொருட்டுத்
தலைமயிரையும் தாடி மீசைகளையும் உடனே சவரம்
செய்துவிட வேண்டுமென்று தந்திரம் சொல்லியனுப்
பினவன் இவன். ஆனால் இவன் உடனே தன் தாடி
மீசைகளை நீக்கிவிடவில்லை. இவன் இந்தியாவுக்கு
வந்த விதத்தில் தாடி மீசை அகற்றப்படாமலிருப்பதே
அனுகூலமாக இருந்தது. இந்தியாவுக்கு வந்து பத்து

நாள் வரையிலும் தாடி மீசையோடுதான் இருந்தான்.
அதன் பிறகு அவற்றை எடுத்துவிட்டு வேறு வேஷம்
போட்டுக் கொள்ள வேண்டியது அவசியமாகி விட்டது.
வனமாலிகைக்கு வரும்போது மொட்டையாண்டியாகத்
தான் வந்தான். ஆனால், இங்கே வந்து கிட்டத்தட்ட
எட்டு மாதங்களாகி விட்டன. இங்கே வந்த பின் சவரம்
செய்து கொள்ள எண்ணமே வரவில்லை. தனக்கு என்ன
கதி நேரும் என்று நிச்சயமாகத் தெரிகிற வரையிலும்
எந்த வித அலங்காரங்களையும் செய்து கொள்வதில்லை
யென்று தீர்மானித்துக் கொண்டு உண்மையாகவே
ஓரளவு தவசிபோலத் தான் நியமநிஷ்டை, தியானம்
முதலிய எண்ணங்களோடு அங்கே இருக்க ஆரம்பித்
தான். நான்கு மாதங்களுக்குப் பின் சையத்காதரும்
முனிஜியும் பிடிபட்டு விட்ட சேதியைக் கேட்ட பின்பு
தான் மீண்டும் தன் உயிரைப் பற்றிய நடுக்கம் உண்
டாகி விட்டது. அதையறிந்த ஜெயபால் அடிக்கடி வந்து
அவனுடைய மனவேதனைகளைக் குறைக்கும்படியான
பேச்சுகளைப் பேசிப் போவது.

மூன்று நாட்களுக்கு முன்னால் அப்படி ஜெயபால்
வந்து, தன்னுடன் தங்கியிருந்து நம்பிக்கையூட்டும்படி
சொல்லிப் போன விஷயங்களைப் பற்றிச் சிந்தித்துக்
கொண்டிருந்தான். 'ஜெயபால் எனக்காக எவ்வளவோ
தான் பாடுபடுகிறான். தன் திருமணத்தையும் திரணமாக
மதித்து என் பொருட்டு இரவு பகலாக அலைகிறான்.
நான் எத்தனை ஜன்மங்கள் எடுத்து என்னென்ன செய்
தாலும் இதுவரையிலும் அவன் செய்துள்ள முயற்சி
களுக்கே ஈடு செய்ய முடியாது. அவனும் அடிக்கடி வந்து
என் உயிரைக் காப்பாற்றிவிடக் கடவுள் கருணை புரிவார்
என்றுதான் சொல்லிவிட்டுப் போகிறான். ஒரு மாதத்
துக்கு முன்னாலும் அதைத்தான் சொன்னான். அதற்கு

முன்னலும் பலமுறை அதைத்தான் சொன்னன். மூன்று நாட்களுக்கு முன்னல் வந்தபோதும் அதைத் தான் சொன்னன்! அவனுடைய பிரார்த்தனை அது தான். இதையே மீண்டும் சொல்ல இன்னும் எத்தனை நாட்கள் சென்று வருவானனை? ஆனல் அவன்தான் என்ன செய்வான்? என்னுடைய உயிர் கடவுள் கையில் இருக்கிறதோ இல்லையோ, நிச்சயமாக அது இப்போது வெள்ளைக்காரன் கையில்தான் இருக்கிறது' என்று சங்கரன் கலங்கிக் கொண்டிருக்கும்போது 'ஷங்கர்' என்று உரக்கக் கூவிக்கொண்டு ஜெயபால் அங்கே தோன்றினன்,

இவ்வளவு சீக்கிரம் ஜெயபால் மறுபடியும் அங்கே வருவானென்று எதிர்பாராத சங்கரன் திடுக்கிட்டுத் திகைக்கும் போதே ஜெயபால், சங்கரனுடைய இரண்டு கைகளையும் பிடித்துக் குலுக்கி, அவனைக் கட்டித் தழுவி,

"ஷங்கர், கவலையை விட்டுவிடு. கடவுள் உன் உயிரைக் காப்பாற்றி விட்டார்," என்றன்.

"கடவுளா! என் உயிரைக் காப்பாற்றி விட்டாரா? உண்மைதானு?" என்று குளறினன்.

"ஆம், சத்தியம். சந்தேகம் வேண்டாம்."

"அப்படியானல் நீதான் எனக்குக் கடவுள்" என்று கரங்குவித்தான் சங்கரன்.

ஆனந்த மிகுதியால் பேச்சு அடைபட்ட இருவரும் சிறிது நேரம் தழுவியபடியே நின்றனர். அதன் பிறகு எதிர் எதிராக அமர்ந்தார்கள். தன் உயிர் காப்பாற்றப் பட்டுவிட்ட விஷயத்தைப் பற்றி ஜெயபால் விளக்கம் சொல்வதைக் கேட்கவேண்டுமென்ற ஆவலில் அங்காந்த வாயுடன் சங்கரன் ஜெயபாலையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஜெயபாலும் உடனே விளக்கம் சொல்லாமல் சங்கரனை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். அதற்குக் காரணம், எந்த விதமாகச் சொன்னல் நண்பனுக்கு அதிகமான ஆறுதல் உண்டாகும் என்று ஆலோசித்துக் கொண்டிருந்ததுதான். சிம்சன் சொன்னதாக ஜெய சந்திரா தன்னிடம் சொன்னபடியே சொல்வது சரியல்ல வென்று எண்ணினன். உண்மையைச் சிறிது மாற்றி அடுக்கிக்கொண்டு அத்துடன் உண்மையென்று சொல்ல முடியாத உறுதி மொழிகளையும் சேர்த்துக்கொண்டு,

"சிம்சன் துரை வைசிராயின் அந்தரங்கக் காரியதரிசி. அவரும் சேனுதிபதியும் இங்கிலாந்தில் ஒன்ருகப் படித்த வர்கள். இங்கேயும் நெருங்கிய நண்பர்கள். என் மணமகளின் தந்தை ஜெயசந்திரா பத்து வருடங்களுக்கு முன்னல் சிம்சன் துரையின் உயிரைக் காப்பாற்றியவர். அதிலிருந்து சிம்சன் குடும்பமும் ஜெயசந்திராவின் குடும்பமும் ஒரு குடும்பம்போல் வாழ்ந்து வருகிறவர்கள். என் காதலி நிர்மலா, சிம்சனுக்கும் அவர் மனைவிக்கும் செல்லக் குழந்தை. அவளுக்காக அவர்கள் எதையும் செய்வார்கள். அந்தச் சிம்சன் துரையிடத்தில் நிர்மலாவின் தந்தை 'ஷங்கர்ஜியின் உயிர் காப்பாற்றப்பட்டால் தான் நிர்மலாவின் திருமணம் நடைபெறும்' என்ற முறையில் கேட்டுக் கொண்டார். சிம்சன் துரை நிர்மலாவுக்காக உடனே அந்த முயற்சியைச் செய்வதாக வாக்களித்திருந்தார். ஆனல் சேனுதிபதி ஊரில் இல்லாததால் சிம்சன் துரை ஒரு வாரத்துக்கு முன்னல்தான் அவரைப் பார்க்க முடிந்தது. சிம்சன் துரையின் பலமான சிபார்சினல் சேனுதிபதி உன்னுடைய மரண தண்டனையைச் சிறைவாசமாக மாற்றிவிட்டார். அதுமட்டுமல்ல. சிறைவாசத்தையும் குறுகியகாலச் சிறைவாசமாக்க சிம்சன் துரை வைசிராயிடம் கேட்டுக் கொள்ளப்

போகிறார். பூரண மன்னிப்பே கிடைத்தாலும் கிடைக்க லாம். பொல்லாத காலம் போய் விட்டது. குமரேசன் வந்து சொன்னதைப் பார்த்தால் உன்னுடைய மனைவி மங்களாம்பாள் செய்த சிவபூசையின் பலன்தான் இது என்று சொல்ல வேண்டும்.....'' என்று ஜெயபால் சொல்லி முடிக்குமுன் '' என் மனைவி செய்த சிவபூசை மட்டுமல்ல. என்தாயார் செய்துள்ள தான தர்மங்களும் பிரார்த்தனைகளும் சேர்ந்தது'' என்றான் சங்கரன்.

'' ஆமாம். மறந்து விட்டேன். அந்த உத்தமியின் புண்ணியமும் சேர்ந்ததுதான்,'' என்றான் ஜெயபால்.

'' ஆனாலும் என் அன்னை செய்த புண்ணியமும் என் மனைவி செய்த சிவபூசையும் கடவுள் காட்டிய கருணையும் எல்லாம் எனக்கு நீதான். வெகு பாடுபட்டு நீ காப் பாற்றியது என் உயிர். எனக்குக் கண்கண்ட கடவுள் நீதான். இதற்காக நான்.....''

'' போதும் ஷங்கர், என்னைப் புகழ்வதோ எனக்கு நன்றி கூறுவதோ வேண்டாம்.....வேண்டாம்; அது எனக்குத் துன்பமுண்டாக்கும். நான் செய்த முயற்சிகள் உனக்காக மட்டுமல்ல. எனக்காகவும் நான் செய்தவை. சேஞ்திபதி உன் மரண தண்டனையை மாற்றுமற் போயிருந்தால் முதலில் என் மனந்தான் முறிந்திருக்கும். அதன் பிறகு என்னுடைய வாழ்க்கை பசையற்ற பாலைவனமாகத்தான் போயிருக்கும். இந்த ஜன்மத்தின் மிகப் பெரிய லட்சியத்தை இழந்து விட்டதாகிய துக்கம் எப்போதும் என்னைத் துன்புறுத்திக் கொண்டே இருக்க நேர்ந்திருக்கும். அந்தத் துக்கம் வேறு தீமைகளை விளை விக்கவும் நேரலாம்.....நானும் நிர்மலாவும் எப்படிக் காதலிக்கிறோம் என்பது உனக்கு நன்றாகத் தெரியும். உன் உயிருக்குள்ள அபாயம் நீங்காமல் நான் திருமணம் செய்து கொள்வதில்லையென்று விரதம் பூண்டேன்.

அதுவும் உனக்குத் தெரியும். உன் உயிருக்கிருந்த அபாயம் நீங்காமல் போயிருந்தால், நெடு நாளாகக் காத்திருக்கும் எங்கள் மணவாழ்க்கையின் இன்பம் எவ் வளவு கெட்டுப் போயிருக்குமென்று எண்ணிப் பார். நிர்மலாவும் என்னைப் போலவே உன் உயிர் காப்பாற்றப் படவேண்டுமென்று கடவுளுக்குப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தது மட்டுமன்றி தன்னுடைய தந்தையை அடிக்கடி தூண்டிக் கொண்டே யிருந்தாள். எங்கள் திருமணத்துக்கு மங்களாம்பாளை இங்கே அழைத்து வர வேண்டுமென்றும் ஆசைப்பட்டாள். மங்களாம்பாளை அழைத்து வருவது எப்படியானாலும் இப்போது என் னுடைய விரதம் வெற்றியுற முடிந்து, நெடு நாளாகக் காத்துக் கொண்டிருக்கிற எங்கள் திருமணம் இனி விரைவில் நடந்தேறும். என் திருமண காலத்தில் எனக்கு மனக் குறையில்லாமல் மகிழ்ச்சி நிரம்பியிருக்க வேண்டுமென்ற சுயநலத்தையும் கருதித்தான் உன் உயிரைக் காப்பாற்றும் முயற்சிகளைச் செய்தேன். அதற் காக நீ எனக்கு வந்தனம் சொல்ல வரவேண்டாம்,'' என்றான் ஜெயபால்.

சங்கரன் அதை முற்றிலும் ஒத்துக்கொள்ள முடியா விட்டாலும் அதற்கு எதிர்ப்புப் பேசி இன்பத்தைக் கெடுத்துக் கொள்ள விரும்பாமல் சும்மா இருந்து விட் டான். ஆனாலும் ஜெயபாலின் பேச்சிலுள்ள பெருங் குணத்தை யெண்ணி மனதுக்குள் மகிழ்ந்து கொண் டான். இது நாள் வரையிலும் எங்கெங்கோ அலைந்து கொண்டிருந்த சங்கரனுடைய உயிர் உடலுக்குள் சென்று தங்க வேண்டிய இடத்தில் தங்கி, அந்த இடத் தில் இதுவரையிலும் இருந்து கொண்டிருந்த துக்கத்தை ஒரு பெரு மூச்சுவிட்டு வெளியே தள்ளிற்று. உயிர் நிலைத்தது. உள்ளம் களித்தது. உடல் துளிர்த்தது.

உணர்ச்சிகள் ஊறின. தளர்ச்சிகள் மாறின. ஜெயபால் சொன்ன மாதிரியில் அப்போதே விடுதலை பெற்று விட்டவன்போல் சங்கரன் ஆனந்தமடைந்தான். அன்னையும் பிதாவும் அருகில் இருப்பதுபோல் அகம் குளிர்ந்தான். மங்களாம்பாளுடன் இங்கிதம் பேசுவதுபோல் இன்ப முற்றான். போன உயிர் வந்துவிட்டது என்ற பூரிப்பை என்னென்று சொல்வது !

டங்கன் துரையின் சீற்றம்

இந்தியாவை ஆயுத பலத்தால் அடக்கியாள வேண்டும் என்பதே ஆங்கில ஆட்சியின் மூலக் கொள்கை. மற்ற ஆங்கில உத்தியோகஸ்தர்களை விட ஆங்கில ராணுவத் தலைவர்களில் பெரும்பாலோரும் இந்திய மக்களை வேட்டையாடத் தகுந்த விலங்குகளுக்குச் சமானமாகவே எண்ணினர்கள். நேர்ந்த போதெல்லாம் நியாயமில்லாமலும், நிராயுதபாணிகளையும் நிரபராதிகளையும் சுட்டுத்தள்ளத் தயங்கினதில்லை,

அமிர்தசரஸ் என்ற நகரில் ஜாலியன்வாலாபாக் என்ற பூங்காவில் ஆண்களும், பெண்களும், சிசுக்களும், சிறுவர்களும், கிழங்களுமாக லட்சக்கணக்கில் பாமர மக்கள் கூடியிருந்தார்கள். அவர்கள் கூடியிருந்தது பிரசங்கங்களைக் கேட்கத்தான். இந்திய மக்களை அடக்கியாள்வதற்கென்றே புதிதாகக் கொண்டு வரப்பட்ட 'ரௌலட் சட்டங்கள்' என்ற வெகு பயங்கரமான மசோதாக்களின் கொடுமைகளைப் பற்றிக் குறைகூறும் பேச்சுகளைக் கேட்கத்தான் ஜனங்கள் கூடியிருந்தார்கள். டையர் என்ற ராணுவத் தலைவன் தன்னுடைய ஆங்கிலப் பட்டாளத்துடன் திடீரென்று அங்கு வந்து, கூட்டத்தைக் கலைந்து போகும்படி எச்சரிக்கை கூடச் செய்யாமல் உடனே சுட்டுத் தள்ளும்படி உத்தரவிட்டான். சோல்ஜர்களும் தம்மிடமிருந்த குண்டுகளெல்லாம் தீருகின்ற வரையில் சுட்டுக் கொன்றார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் அதில் மாண்டொழிந்தனர். இதைக் கேட்ட இந்திய மக்கள் கொதித்தெழுந்தார்கள். நாகரீகம் அறிந்த எல்லா நாடுகளும் இந்த மிருகத்தனமான அட்

டூழியத்தை வெகு அழுத்தமாகக் கண்டித்தன. இங்கி லாந்திலும் நேர்மையுள்ளவர்கள் இதை நிந்தித்தார்கள். ஆனாலும் என்ன? அந்த டையர் செய்த இவ்வளவு பெரிய பாதகத்திற்காக அவனுக்கு ஆட்சியாளர் தண் டனை எதுவும் தந்து விடவில்லை. அதற்கு மாறாக அவன் செய்தது சரிதான் என்று ஆமோதிப்பது போல அவ னுக்கு உபகாரச் சம்பளம் கொடுத்து இங்கிலாந்துக்கு அனுப்பினர்கள். அங்கு பலபேர் சேர்ந்து, அவன் செய்த காரியந்தான் இங்கிலீஷ்காரரின் ஆண்மைக்கும் ஆற்ற லுக்கும் ஆட்சிக்கும் ஆக்கம் தரக்கூடியதென்று அவ னுக்குத் தங்கத்தால் செய்யப்பட்ட வீரவாள் பரிசளித் துப் பகிரங்கமாகப் பாராட்டினர்கள்.

இப்படிப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர் டங்கன் துரை என்பதை ஏற்கெனவே அறிவோம். அவர் சங்கர லிங்கத்தைக் கண்டுபிடித்து அவனைச் சுடடுக் கொல்லத் துடித்துக் கொண்டிருக்கிறார்.

இந்த நிலையில் சிம்சன் துரையின் சினேகிதத்தைக் கருதிச் சேனாதிபதி சங்கரனுடைய மரண தண்டனையை மாற்றிவிட்டார். சேனாதிபதியும் சங்கரன் செய்தது மிகப் பெரிய துரோகம் என்றும் வேறு யாருக்குக் கருணை காட்டினாலும் அந்த 'ஷங்கர்ஜி'க்குக் கருணை காட்டக் கூடாது என்றும் எண்ணியிருந்தவர்தான். ஆனாலும் சிம்சன் துரை, அவருடைய உயிரைக் காப்பாற்றிய ஜெயச்சந்திராவுக்காக இதைச் செய்ய வேண்டுமென்று நட்புரிமையுடன் வற்புறுத்தியதால் தம்முடைய எண் ணத்தை மாற்றிக்கொள்ள வேண்டியதாகி விட்டது. இல்லாவிட்டால் சிம்சனுடைய மனம் முறிந்திருக்கும். மேலும் சிம்சன் வைசிராயின் அந்தரங்கக் காரியதரிசி. அவருடைய வேண்டுகோளைத் தான் மறுத்துவிட்டால் அவர் அதை வைசிராயிடம் சொல்லிச் சாதித்துக்

கொள்ளமுடியும். கடைசித் தீர்ப்புச் சொல்லும் அதிகாரம் வைசிராயுடையது. அதனால் சேனாதிபதி சங்கரனுக்குக் கருணை காட்டவேண்டிய கட்டாயம் உண்டாகிவிட்டது.

அதைச் செய்தபின் அவருக்கு மிகப் பெரிய தர்ம சங்கடம் வந்துவிட்டது. நேதாஜியுடன் சேர்ந்து கொண்டு இங்கிலீஷ்காரனுக்குத் துரோகம் செய்தவர் களில் முதன்மையானவன் 'ஷங்கர்ஜி'தான். அவ னுக்கே கருணை காட்டியபின் சையத்காதர், முனிஜி யாகிய மற்ற இருவரை மட்டும் சுட்டுக் கொல்வது நேர்மையாகுமா என்ற சங்கடம் சேனாதிபதியைத் திண றச் செய்துவிட்டது. பலமுறையும் எண்ணிப் பார்த்து அவர்களுக்கும் கருணை காட்டி மரண தண்டனையை மாற்றிவிட வேண்டியதுதான் நியாயம் என்று தீர் மானித்தார்.

பர்மாப் போர்முனைக்குத் தலைவராக இருந்தவர் டங்கன் துரை. இங்கேயும் பர்மா போர்முனைக் குச் சம்பந்தப்பட்ட சகல பிரச்சினைகளும் டங்கன் துரை காரியாலயத்தைச் சேர்ந்தவை. 'ஷங்கர்ஜி' யின் மரண தண்டனையை மாற்றுவதற்கும் மற்ற இருவருக்கும் கருணை காட்டுவதற்கும் டங்கன் துரை யுடன் கலந்து பேசி அவருடைய சம்மதத்தையும் பெற வேண்டு மென்பதுதான் முறை. அதனால் சேனாதிபதி டங்கன் துரையைப் பார்க்க வேண்டுமென்று அவருக்கு அழைப்பு அனுப்பினர். டங்கன் துரை வந்தார். சேம லாபப் பேச்சுகள் முடிந்தபின் சேனாதிபதி டங்கனைப் பார்த்து, "சையத் காதரும், முனிஜியும் அந்த ஷங்கர்ஜி யைப் பற்றி ஏதாவது தகவல் சொன்னர்களா?"

"ஷங்கர்ஜி எங்கே போனான், எப்படிப் போனான் என்பதைப் பற்றித் தமக்கு ஒன்றுமே தெரியாதென்று சாதிக்கிறார்கள்."

"உண்மையில் அவர்களுக்குத் தெரியாதோ என்னவோ" என்ரூர் சேஞதிபதி.

"அதை நான் நம்பவில்லை. இவர்கள் மூன்று பேரும் சேர்ந்தாற் போல்தான் சிறையை விட்டு வெளியே வந்திருக்கிரூர்கள். அதை இவர்கள் ஒப்புக்கொள்ளுகிரூர்கள். இவர்கள் மூன்று பேரும் சேர்ந்துதான் பாராக்காரனை அடித்துத் தள்ளி அமுக்கிக்கொண்டு மூக்கில் மயக்க மருந்தைக் கட்டியிருக்க முடியும். சையத் காதர்தான் தன்னுடைய அள்ளையில் அடித்துத் தள்ளினதாகவும் பின்பு மூன்று பேரும் சேர்ந்து அமுக்கிக் கொண்டதாகவும் அடிபட்டுக் கிடந்த மதன்சிங்கு என்ற பாராக்காரன் மிகவும் உறுதியாகச் சொல்லியிருக்கிரூன். நானே அவன் அடிபட்டுக் கிடந்ததை நேரிற் போய்ப் பார்த்தேன். மதன்சிங்கை அடித்துவிட்டு ஓடி வந்ததை மறைப்பதற்காக இவர்களிருவரும் அவன் அடிபட்டுக் கிடந்ததை நானே பார்த்த அந்த தேதிக்கு நான்கு நாட்களுக்கு முன்னலேயே சிறையிலிருந்து மூவரும் ஓடி வந்துவிட்டதாகச் சொல்லுகிரூர்கள். அத்துடன் சிறையை விட்டு வெளியே வருகிற வரைக்குந்தான் ஷங்கர்ஜி இவர்களுடன் இருந்ததாகவும் அதன்பிறகு அவனைப் பற்றி ஒன்றுமே தெரியாதென்றும் சொல்லுகிரூர்கள். அதை எப்படி நம்புவது?" என்ரூர் டங்கன்.

இந்த விவரங்கள் சேஞதிபதிக்கு இதுவரையிலும் தெரியாது. அவரும் இவர்கள் மூவரும் சேர்ந்துதான் இந்தியாவுக்கு வந்திருக்க வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்தார். டங்கன்துரை மேலும் சொன்ன விவரங்களிலிருந்து, சேஞதிபதிக்கும் பல சந்தேகங்கள் உண்டாகிவிட்டன. டங்கன் துரைக்குச் சங்கரன்மேல் இருந்த வெறுப்பினல் சையத்காதரும், முனிஜியும் சொன்னதில் உண்மை

யிருக்கலாம் என்று நிதானிக்க முடியவில்லை. ஆனல் சேஞதிபதிக்கு அப்படிப்பட்ட வெறுப்பு ஒன்றும் இல்லாததினல் சையத்காதரும் முனிஜியும் சொல்லுவதில் உண்மை இருக்க வேண்டுமென்று எண்ணினர். இதைப் பற்றி விரிவான விசாரணை நடத்தவேண்டும் என்றும் நினைத்தார். அதனல் என்ன பயன்? ஷங்கர்ஜிக்குக் கருணை காட்டி அவனுடைய மரண தண்டனையை மாற்றிச் சிபார்சு செய்தாகிவிட்டது. அதை இனி மாற்ற முடியாது. மாற்ற நினைப்பது சிம்சன் துரைக்குத் தந்த வாக்குறுதியை அழிப்பதோடு, தன்னுடைய மனுஷத் தனத்துக்கே மாசுண்டாக்கும். அதனல் இவர்கள் எப்படி எப்போது தப்பியோடினர்கள் என்பதைப் பற்றிய விசாரத்தை விட்டுவிட்டுச் சேஞதிபதி, "சரி இவர்களை என்ன செய்வது?" என்ரூர்.

"என்ன செய்வது? அந்த ஷங்கர்ஜியினல்தான் இவர்கள் கெட்டது. அவன் இருக்கிற இடத்தை இவர்கள் சொல்லிவிட்டால் இவர்களுடைய மரண தண்டனையைச் சிறைவாசமாக மாற்றிவிடச் சிபார்சு செய்யலாம்."

"இல்லாவிட்டால்?"

"இல்லாவிட்டால் ஷங்கர்ஜியை நாமே கண்டு பிடித்து உடனே மூவரையும் சுட்டுக் கொன்றுவிட வேண்டியதுதான்."

"ஷங்கர்ஜி கிடைக்காவிட்டால்?"

"கிடைக்காமலா போகப் போகிரூன்? கிடைத்து விடுவான் என்றுதான் நம்புகிறேன். அப்படிக் கிடைக்காமற்போனல் இவர்கள் தண்டனையை நிறைவேற்றி விடுவது" என்ரூர் டங்கன்.

சேஞதிபதி சிரித்துவிட்டு,

" இவர்கள் கெட்டுப்போனது அவனுல்தான் என் கிறீர்களே ! அவன் கிடைக்காவிட்டால் இவர்களை மட்டும் கட்டுவிடுவது சரியா ?"

" ஆமாம்; இவர்களிருவரும் அவனுல்தான் எதிரி களோடு சேர்ந்தவர்கள். அவனைப்போல் இவர்கள் இங்கிலீஷ்காரரை வெறுப்பவர்களல்ல. மிக்க மரியாதை யுள்ளவர்கள். அதனுல்தான் இவர்கள் சங்கரனைப் பற்றிய உண்மைகளைச் சொல்லிவிட்டால் தண்டனை யைக் குறுகிய சிறைவாசமாக மாற்றிவிடத் தங்களிடம் சிபார்சு செய்வதாகச் சொன்னேன் " என்ருர் டங்கன்.

" குறுகிய சிறைவாசமாக மாற்றுவதைவிட இவர் களுக்கு மன்னிப்பே தந்துவிடலாம்" என்ருர் சேனுதிபதி.

" ஓ ! அதுகூடச் செய்யலாம், அவர்கள் அந்த ஷங்கர்ஜியைப்பற்றிய உண்மைகளைப் சொல்லிவிட் டால். "

மறுபடியும் சேனுதிபதி புன்சிரிப்புச் செய்துவிட்டு,

" நீங்கள் சொன்ன விஷயங்களையெல்லாம் கூர்ந்து பார்த்தால், இவர்கள் சொன்ன விஷயங்களில் உண்மை இருக்குமென்றுதான் எண்ணுகிறேன். ஷங்கர்ஜி இவர் களுடன் சிறையிலிருந்து வெளியே வந்தபின் இவர் களையும் ஏமாற்றிவிட்டுத் தனியே போய்விட்டான் என்று தான் தெரிகிறது. இவர்களுக்கு அவன் எங்கே போனுன் என்பது உண்மையாகவே தெரியாது என்றுதான் நான் தீர்மானிக்கிறேன். இவர்கள் இருவரும் அவனுல்தான் கெட்டார்களென்றும் இவர்கள் அவனைவிட நல்லவர்க ளென்றும் நீங்கள் கருதுவதால் இவர்களைச் சுட்டுக் கொல்லுவதைவிட மரண தண்டனையைச் சிறைவாச மாக மாற்றிவிடலாமென்று எண்ணுகிறேன் " என்ருர் சேனுதிபதி.

டங்கன் திகைத்தார். அவர் சையத்காதரையும் முனிஜ்யையும் விசாரித்தபோது சையத்காதர் குரான் மீது சத்தியம் செய்ததும் முனிஜி அழுதுகொண்டு ஆணையிட்டுச் சொன்னதும் அப்போது அவர்கள் சொல்லுவதில் உண்மை இருக்கலாமென்று தாம் எண்ணினதும் நினைவுக்கு வந்தன. சேனுதிபதி ஊகிப் பதும் சரியாக இருக்கலாமென்று,

" ஷங்கர்ஜி இருக்குமிடம் இவர்களுக்குத் தெரியாது என்று தீர்மானிக்க இடமிருந்தால் தாங்கள் சொல்லு கிறபடி இவர்களுடைய மரண தண்டனையைச் சிறை வாசமாக மாற்றுவதில் எனக்கு ஆட்சேபமில்லை " என்ருர் டங்கன்.

" நிச்சயமாக இவர்களுக்கு ஷங்கர்ஜியின் இருப் பிடம் தெரியாது என்றுதான் நினைக்கிறேன். சிறையி லிருந்து தப்பித்துக்கொண்டு வந்தும் சிக்கிக்கொண்ட இவர்கள், ஷங்கர்ஜி இருக்கிற இடத்தைச் சொன்னுல் மரண தண்டனையைக் குறுகிய சிறைவாசமாக மாற்றி விடுவதாக நீங்கள் சொல்லியும் அவர்களுக்கு ஷங்கர்ஜி யைப்பற்றிய உண்மைகள் தெரியாது என்று சத்தியம் செய்கிறார்கள் என்ருல், அதன் அர்த்தமென்ன ? உண் மையில் அவர்களுக்குத் தெரியாது என்பதுதான் " என்று மேஜையின்மீது அடித்தார் சேனுதிபதி.

"அப்படியானுல் இவர்களுக்குக் கருணை காட்டலாம். ஆனுல் அந்த ஷங்கர்ஜியும் பிடிபட்ட பிறகுதானே அப்படிச் செய்யவேண்டும்?"

" ஆமாம். அவனும் பிடிபட்ட பிறகுதான் இந்த ஆலோசனை. அவன் பிடிபடாவிட்டால் இவர்களை மட்டும் சுட்டுவிடுவது சரியல்லவென்பதற்காகத்தான் இவ்வள வும் நான் சொன்னது."

" அது நியாயம்தான். "

" ஆனலும் அந்த ஷங்கர்ஜி பிடிபட்டபின் அவனை மட்டும் சுட்டுவிட்டு இவர்களுக்கு மட்டும் கருணை காட்டுவது நேர்மையாகுமா ? அவனுல்தான் இவர்கள் கெட்டார்கள் என்ருலும் இந்த மூன்று பேரும் ஒரே மாதிரியான குற்றத்திற்காகத்தான் தண்டிக்கப்பட் டிருக்கிருர்கள். அப்படியிருக்க, அவர்களுள் இருவருக்கு மட்டும் கருணைகாட்டி ஒருவனை மட்டும் சுட்டுக் கொன்று விடுவது நியாயமாகுமா ?"

" அப்படியானுல் யாருக்குமே கருணை காட்டவேண்டாம். மூன்று பேருக்கும் தீர்ப்பான தண்டனையை நிறைவேற்றி விடுங்கள்".

" ஏன் அந்த ஷங்கர்ஜிக்கும் கருணை காட்டிவிட்டால் என்ன ?"

" அவனுக்குக் கருணை காட்டுவதை நான் ஒப்புக் கொள்ளவே முடியாது. அவனுக்கும் கருணைகாட்ட வேண்டுமென்று இப்போது எண்ணுவது நம்முடைய ராணுவத்துக்கே அவமானமுண்டாக்கக்கூடியது. ஆயிரக் கணக்கான இங்கிலீஷ் இளைஞர்களைப் பலிகொடுத்து நாமடைந்த வெற்றியும் இதனுல் தோல்விக்குச் சமானமாகிவிடும். கறுப்பு மனிதர்கள் நம்மை இனி மதிக்க மாட்டார்கள். இந்த மூன்று பேரும் இவர்களுடைய மரண தண்டனைக்குப்பின் மூன்றுமுறை அப்பீல் செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டார்கள். அந்த மூன்று அப்பீல்களையும் தாங்கள்தான் ஆராய்ந்து அவற்றைத் தள்ளிவிட்டு மரணதண்டனையை ஊர்ஜிதம் செய்தீர்கள். அதற்குப்பின் இவர்கள் நம்முடைய ராணுவக் கட்டுத்திட்டத்தைக் கேலிக் கூத்தாக்கி விட்டு, பாராக்காரனையும் அடித்துத் தள்ளிவிட்டுச் சிறையிலிருந்து ஓடி விட்டவர்கள். இரண்டுபேர் பிடிபட்டு இன்னும் அந்த ஷங்கர்ஜி நம்முடைய சாமர்த்தியங்களுக்குச் சவால் விடுவதுபோல்

இருப்பிடம் கண்டுபிடிக்க முடியாமல் இருக்கிருன். இந்த சமயத்தில் இவர்களுக்குக் கருணைகாட்ட என்ன புதிய காரணம் புகுந்துவிட்டது ? நம்முடைய சட்டங்களையும், விசாரணைகளையும், தீர்ப்புக்களையும் நாமே அவமதித்தால் இனி ராணுவத்தின் கட்டுப்பாடு என்பது வெறும் கனவாகத்தான் முடியும். இதைக் கருணையென்று கருத மாட்டார்கள். கோழைத்தனமென்றுதான் கூறுவார்கள்" என்று டங்கன் இரைந்தார்,

சேனுதிபதியும் முன்னே இதைப்போலவே எண்ணிக்கொண் டிருந்தவர்தானே ? அதனுல் டங்கன் சொன்னதில் ஆட்சேபிப்பதற்கு ஒன்றுமில்லை. ஆனுல் சேனுதிபதியின் மனம் தாட்சணியத்தால் இப்போது மாறிவிட்டது. டங்கன் துரை சொன்னதையெல்லாம் பொறுமையுடன் கேட்ட சேனுதிபதி,

" நீங்கள் சொன்னதெல்லாம் உண்மைதான். இப்போது அந்த ஷங்கர்ஜியின் மனைவி, தன்னுடைய கணவனுக்குக் கருணைகாட்ட வேண்டுமென்று மிகவும் உருக்கமான விண்ணப்பம் அனுப்பிக்கொண் டிருக்கிருள். அந்த இளம்பெண்ணைக் கருதி, ஷங்கர்ஜிக்கு உயிர்ப் பிச்சை கொடுத்து மரணதண்டனையை ஆயுள் சிறை வாசமாக மாற்றிவிடலாமென்று....."

" கூடாது, கூடாது. அந்த விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்ளவே கூடாது " என்று இடைமறித்தார் டங்கன்.

" தயவுசெய்து சற்று அனுதாபத்துடன் எண்ணிப் பாருங்கள். சையத்காதருக்கும் முனிஜிக்கும் கருணை காட்டச் சம்மதித்தீர்கள். ஒரு பெண்ணின் பரிதாபத்தைக் கருதி ஷங்கர்ஜிக்கும் கருணைகாட்டி விடலாம் என்றே கருதுகின்றேன். அதனுல் ஒரு குற்றமும் வராது " என்ருர் சேனுதிபதி.

"மன்னிக்கவேண்டும். நான் அப்படிக் கருத முடியாது."

"அவசரமில்லை. நிதானமாகப் பாருங்கள். ஷங்கர்ஜி பிடிபட்ட பிறகுதான் இதைத் தீர்மானிக்கப் போகிறோம். அதுவரையிலும் வேண்டிய அவகாசம் இருக்கிறது. ஆலோசித்துப் பாருங்கள். இப்போதைக்கு இந்தப் பேச்சை இத்துடன் நிறுத்திவைப்போம்" என்றார் சேஞ்திபதி.

டங்கன் துரை விடை பெற்றுக்கொண்டார். டங்கன் துரை போனபின் சேஞ்திபதி வெகுநேரம் வரை சிந்தனையில் ஆழ்ந்துவிட்டார்.

டங்கன் ஒரு கண்டிப்பான அதிகாரி. சிறந்த ராணுவ வீரர். பர்மா யுத்தத்தைத் திறமையுடன் நடத்தினவர் என்று அரசாங்கத்தால் மிகவும் பாராட்டப்பட்டவர். ராணுவ சட்டங்களைத் தயவு தாட்சணியமில்லாமல் அமுல் நடத்துபவர். ராணுவ பலந்தான் உலக நலத்தைக் காக்கமுடியும் என்ற உறுதியான நம்பிக்கையுள்ளவர். மிகவும் முரட்டுப் பிடிவாதமுள்ளவர். மேலதிகாரிகளையும் எதிர்த்து வாதாட அஞ்சமாட்டார். ஸ்தலத்தில் இருந்துகொண்டு பர்மா யுத்தத்தை நடத்தியவர் அவர். ஷங்கர்ஜி முதலானவர்கள் திடீரென்று பகைவர்களுடன் சேர்ந்துகொண்டு உண்டான மாபெரும் சங்கடங்களைச் சமாளித்து நேதாஜியின் முயற்சிகளை முறியடித்தவர் அவர். ஷங்கர்ஜி முதலானவர்களைச் சிறைபிடித்த செயல்முறைகளை வகுத்துக் கொடுத்தவர் அவர். ராணுவ விசாரணை நடக்கச் செய்தவர் அவர். ஷங்கர்ஜி மேலிருந்த குற்றச்சாட்டுகளை யெல்லாம் ருசுப்படுத்தியவர் அவர். ராணுவக் கட்டு திட்டங்களை யெல்லாம் ஏமாற்றிவிட்டு பாராக்காரனையும் அடித்துத் தள்ளிவிட்டு, சிறையிலிருந்து அவர்கள் ஓடிவிட்டதால் தமக்

குப் பெருத்த அபகீர்த்தி உண்டாக்கிவிட்டதாகப் பொங்கிக்கொண்டிருப்பவர் அவர். அப்படிப்பட்ட டங்கன் துரை ஷங்கர்ஜிக்குக் கருணைகாட்டுவதை ஒப்புக்கொள்ள முடியாது என்று அழுத்தமாகச் சொல்லிவிட்டதில் சேஞ்திபதியின் திட்டத்தில் கொஞ்சம் சிக்கு விழுந்து விட்டது. டங்கன் துரை தம்முடைய பிடிவாதத்தைக் கடைசி வரையிலும் கொண்டு செலுத்த முயல்வார். ஷங்கர்ஜிக்குக் கருணை காட்டக்கூடாது என்று வைசிராயிடம் வாதாடுவார். அவசியமானால் இங்கிலாந்திலுள்ள 'இந்தியா ஆபீஸ்' கரரியதரிசியும், இங்கிலாந்தின் பிரதம மந்திரியும், இங்கிலீஷ் பார்லிமெண்ட் அங்கத்தினர்களும் கூட இதில் தலையிடும்படியான முயற்சிகளைச் செய்யக் கூடியவர் டங்கன் துரை. சாதாரணமாக இப்படிப்பட்ட விஷயங்களில் சேஞ்திபதியின் சிபார்சுதான் செல்லுபடியாகும்.

ஆனால் இந்த ஷங்கர்ஜி விஷயம் அப்படிச் சாதாரண முறையில் கவனிக்கப்படக் கூடியதல்ல. ஆங்கில அதிகாரிகளிற் பெரும்பாலரும் டங்கன் துரைக்கே சாதகமாக இருப்பார்கள். அதனால் டங்கன் துரையும் சம்மதித்தாலல்லாமல் சிம்சன் துரையின் சிபார்சுக்காகத் தாம் ஷங்கர்ஜிக்குக் கருணைகாட்டிச் செய்துள்ள சிபார்சு செல்லுபடியாவது மிகவும் சிரமம். இதுதான் சேஞ்திபதியைச் சிந்தனையில் ஆழ்த்திவிட்டது.

இது இப்படியிருக்கச் சேஞ்திபதியிடம் விடை பெற்றுச் சென்ற டங்கன், நேராகத் தன்னுடைய காரியாலயத்துக்குப் போனார். ரங்கூனில் ஷங்கர்ஜி முதலானவர்களைப்பற்றி நடத்தப்பட்ட ராணுவ விசாரணைக்குச் சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகளையெல்லாம் ஆராய்ந்து ஒரு அறிக்கை தயார் செய்தார். அதில், எந்தக் காரணத்தைக் கொண்டும் ஷங்கர்ஜிக்குக் கருணை காட்டவே

கூடாது என்பதற்கான ஆதாரங்களையெல்லாம் ஆணித் தரமான வாதங்களுடன் வடித்தெழுதினர்.

இந்த அறிக்கையுடன் உத்தியோக முறையில் தம் முடைய விண்ணப்பம் ஒன்றையும் வைசிராய்க்கு எழுதி னர். அந்த விண்ணப்பத்தில், ஷங்கர்ஜி என்பவனுக்குக் கருணை காட்ட வேண்டுமென்ற மனு ஒன்று மறுபடியும் சேனுதிபதிக்கு வந்திருப்பதாகவும், சேனுதிபதி அந்த மனுவுக்கு அனுதாபமுள்ளவராக இருப்பதாகத் தமக்குத் தெரிவதாகவும், சேனுதிபதி சிபார்சு செய்தாலும் வைசி ராய் அதை நிராகரித்துவிட வேண்டுமென்று தாம் வற்புறுத்துவதாகவும் எழுதினர். மேலும் வைசிராய் அதை அங்கீகரித்தால், அது பர்மா யுத்தத்தில் ராஜ விசுவாசத்தோடு போர் புரிந்து உயிர் துறந்த வீரர்களின் தியாகத்தை அவமதிப்பதாகுமென்றும், இராணுவத்தின் கட்டுப்பாட்டை நாசப்படுத்துமென்றும், இங்கிலீஷ் காரரை இந்தியர்கள் ஏளனம் செய்ய இடமுண்டாகு மென்றும், அதைத் தாம் ஒப்புக் கொள்வது தற்கொலைக் குச் சமானமாகுமென்றும் எழுதினர். மேலும் பர்மாவில் பல நெருக்கடிகளைச் சமாளித்து வெற்றி பெற வெகு பாடுபட்ட தம்முடைய கருத்தை அலட்சியம் செய்து விட்டு அந்த ஷங்கர்ஜிக்குக் கருணை காட்ட வைசிராய் இடங் கொடுத்துவிட்டால் அது தமக்கு மிகப் பெரிய அநீதி செய்வதாகும் என்றும் வெகு அழுத்தமாக எழுதி னர். இந்த இரண்டு அறிக்கைகளையும் வைசிராய்க்கு அனுப்பிவிட்டு அவற்றின் பிரதிகளைச் சேனுதிபதிக்கும் அனுப்பத் தீர்மானித்தார். அத்துடன் இது விஷயமாக வைசிராய் அவர்களைத் தாம் பேட்டி கண்டு பேச விரும்புவதாகவும் அதற்கு நாளும் நேரமும் குறிப்பிட் டெழுத வேண்டுமென்றும் வைசிராயைக் கேட்டுக் கொண்டார்.

'நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் இங்கிலீஷ் இனத் துக்கே பரம விரோதி. அவனுடன் சேர்ந்த அனைவரும் அழிக்கப்பட வேண்டியவர்கள். அதிலும் இங்கிலீஷ் காரரின் கட்சியிலிருந்து அதற்குத் துரோகம் செய்து விட்டு நேதாஜியுடன், தான் சேர்ந்து கொண்டது மட்டு மன்றி மற்றவர்களையும் சேரும்படித் தூண்டிய ஷங்கர்ஜி மற்ற எல்லாரினும் கொடிய பகைவன். அவனைச் சுட்டுக் கொல்வதே தம்முடைய உத்தியோகத்தின் உயர்ந்த லக்ஷியம்' என்ற வஞ்சினம் வளர்ந்து விட்ட டங்கன் துரையின் எண்ணத்தில் 'ஷங்கர்ஜிக்குக் கருணை' என் பதற்கு இடமேது? சேனுதிபதி ஷங்கர்ஜிக்குக் கருணை காட்டச் சிபார்சு செய்தால் அதை முறியடிக்கத் தக்க எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வது என்று டங்கன் துரை முடிவு கட்டிக் கொண்டார்.

* * *

ஜெயபாலின் குடும்பத்திலும் நிர்மலாவின் குடும்பத் திலும் குதூகலம் பொங்கிப் பெருகி வழிந்தோடத் தொடங்கி விட்டது. இரண்டு குடும்பங்களையும் சேர்ந்த எல்லாரும் நெடுநாளாகக் காத்துக் கொண்டிருக்கும் ஜெயபால்—நிர்மலா திருமணத்துக்கான முயற்சிகளில் வெகு தீவிரமாக ஈடுபட்டார்கள்.

ஜெயபாலுக்கும் நிர்மலாவுக்கும் அவர்களுடைய திரு மணத்திற்கு முன்னுள்ள ஒரு நாள் கழிவது ஒரு யுகம் போலத் தோன்றியது. சங்கரலிங்கனைக் கருதி அவர்கள் அடக்கி வைத்திருந்த ஆசைகளெல்லாம் மடை உடைந்த வெள்ளம்போல் பாய்ந்து அவர்களையும் மீறி அலை மோத ஆரம்பித்து விட்டன. கன்னிப்பருவம் அடைந்து காத்திருக்கும் ஒரு பெண்ணுக்கும் காளைப் பருவமடைந்து காத்திருக்கும் ஒரு ஆணுக்கும் 'திரு மணம்' என்பதைவிட தித்திக்கும் சொல்லும் உண்டா?

கலியாணம் என்பதைவிடக் களிப்பூட்டும் காரியமும் உண்டா?

ஆணுக்காயினும் பெண்ணுக்காயினும் திருமணம் என்பது அவர்களுடைய வாழ்நாளில் ஒரே ஒரு முறை தான் இயல்பான இன்பமளிக்கும் நிகழ்ச்சி. மனைவியை இழந்து மறுமணம் செய்து கொள்ளும் ஆணுக்கோ, அல்லது கணவனை இழந்து மறுமணம்செய்துகொள்ளும், வழக்கமுள்ள இனத்தைச் சேர்ந்த பெண்ணுக்கோ முதல் மணத்தில் இருந்த இயல்பான இன்பம் மறு மணத்தில் இருக்க முடியாது. இளம்பருவத்தில் நிகழும் முதல் திருமணம், அப்போது அலர்ந்த புதுமலரின் மணத்தை அனுபவிப்பதைப் போன்றது. மறுமணம் என்பது வாடிப்போன மலரை முகர்வதைப் போன்றதே. ஆதலால் திருமணம் என்பது வாழ்நாளில் ஒரே ஒரு முறைதான். கட்டாயக் கலியாணமாக இல்லாமல் தம்பதி கள் மனமொப்பி ஈடுபடுகின்ற எல்லாத் திருமணங் களுக்கும் இது பொருந்தும். என்ருல், வினத் தெரிந்த காலத்திலிருந்து ஒருவரையொருவர் மிகவும் விரும்பி, காமப் பருவம் அடைந்ததிலிருந்து ஒருவரையொருவர் காதலித்து, மணந்து கொள்ளத் தவித்துக் கொண்டிருக் கும் நிர்மலாவுக்கும் ஜெயபாலுக்கும் அவர்களுடைய திருமண நாள் நெருங்கி வருவது எவ்வளவு தித்திப்பு உண்டாக்கி யிருக்கும்! அவர்கள் இருவரும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தோடிக் கொண்டிருந்தார்கள்.

தனக்காக மட்டுமன்றி சங்கரலிங்கனைக் கருதியும் தன்னுடைய விவாகம் விரைவில் நடந்தேற வேண்டு மென்று ஜெயபால் விரும்பினன். ஏனென்ருல், 'ஷங்கர்ஜி' சரணடைந்த பிறகுதான் சேனுதிபதி அவனுடைய மரண தண்டனையை மாற்றிவிடும் சிபார்சை வைசி ராய்க்கு அனுப்புவார். விவாகம் விரைவில் நடந்து அந்த

வைபவத்தில் ஷங்கர்ஜியும் கலந்து கொண்ட பிறகே அவன் சரணடைய வேண்டுமென்பது ஜெயபாலின் தீர்மானம். விவாக முகூர்த்தத்தின் போதும் அதை யொட்டிய விருந்துகள் நடக்கும்போதும் ஷங்கர்ஜி வன மாளிகையில் மறைந்திருக்க வேண்டியதில்லை. பகிரங்க மாகவே திருமணத்துக்கு வந்த விருந்தாளியாக வீற்றி ருக்கலாம். அவனை யாரும் கண்டு கொள்ள முடியாது. அப்படி யாரேனும் கண்டு கொண்டாலும் விவாக வைபவங்களெல்லாம் முடிகிற வரையிலும் அவனை யாரும் சிறைப்படுத்தாமல் பொறுத்திருக்கச் செய்யப் போதுமான செல்வாக்கு ஜெயபாலுக்கும் அவனுடைய மாமனர் ஜெயசந்திராவுக்கும் மற்றும் சில உறவினர் களுக்கும் உண்டு. அதனல் திருமணத்தைச் சீக்கிரம் நடத்தி ஷங்கர்ஜியைச் சேனுதிபதியிடம் சரணடையச் செய்து, அவர் மரண தண்டனையை மாற்றிவிட்ட சிபார்சை உடனே வைசிராய்க்கு அனுப்பச் செய்து, சிம்சன் துரையின் உதவியால் ஆயுள் சிறைவாசத்தை யும் குறுகிய காலமாக மாற்றும்படிக்கான முயற்சிகளையும் சீக்கிரமாகச் செய்துவிட வேண்டுமென்பதே ஜெயபாலின் திட்டம். இதைப் பற்றிச் சிந்தனை செய்துகொண்டிருந்த போது ஜெயபாலுக்கு இன்னெரு ஆசையும் உதித்தது. அதாவது, முன் வசந்தபுரிக்கும் விருதூருக்கும் சென்று ஷங்கர்ஜியின் பெற்ருர்களையும் மனைவியையும் மாமனர் முதலானவர்களையும் பார்த்துத் தைரியம் சொல்லி விட்டு வந்த குமரேசனை மீண்டும் அனுப்பி, மங்களாம்பாளை மட்டும் அழைத்து வரச் செய்து வனமாளிகையில் கணவனும் மனைவியும் சந்தித்து மகிழச் செய்து திரு மணத்திலும் அவர்கள் விருந்தினர்களாக வீற்றிருக்கச் செய்ய வேண்டும் என்பது. மங்களாம்பாள் மிகவும் புத்திசாலியான பெண். தன் கணவனுக்கு உடனே

விடுதலை கிடைக்கவில்லை யென்றாலும் மரண தண்டனை மாற்றப்பட்டு விட்டதிலும், சிறைவாசமும் குறுகிய காலமாகச் செய்யப்படும் என்பதிலும் மிக்க பூரிப்படைவாள். இந்தச் சமயம் தப்பினால் இப்படி அவர்கள் இருவரும் ஏகாந்தமாகச் சந்திக்க முடியாது. ஷங்கர்ஜி சரணடைந்த பின் அவனைக் கைதியென்ற முறையில், சிறைச்சாலையில் சிறை அதிகாரியின் அனுமதி கிடைத்தால்தான் பார்க்க முடியும். அப்படிப் பார்த்தாலும் தாராளமாக மனங் கலந்து பேசிக் கொள்ள முடியாது. அதனால் குமரேசனை அனுப்பித் தக்கபடி சொல்லச் செய்து மங்களாம்பாளை அழைத்து வரச் செய்ய வேண்டும். மங்களாம்பாளைப் பார்க்க நிர்மலாவும் மிகவும் ஆசைப்பட்டாள். ஷங்கர்ஜியும் அவருடைய மனைவி மங்களாம்பாளும் நெடுநாளைக்குப் பிறகு சந்திப்பதில் அடடா! எவ்வளவு ஆனந்தமிருக்கும்! அப்படி அவர்களைச் சந்திக்க ஏற்பாடு செய்வதில் தனக்கும் எவ்வளவு இன்பமுண்டாகும்! அது எவ்வளவு பெரிய சேவை செய்ததாகும்! என்றெல்லாம் ஜெயபால் எண்ணி முடித்து, அதை ஷங்கர்ஜிக்குச் சொல்லி அவன் அபிப்பிரயத்தையும் அறிந்து வர ஒரு நாள் வனமாளிகைக்குச் சென்றான்.

ஜெயபாலின் விருப்பத்தை அறிந்த ஷங்கர்ஜி அடைந்த ஆனந்தத்தை அளக்கவும் முடியுமா! ஜெயபாலின் திட்டத்தை வரவேற்றது மட்டுமா? எப்படியாவது மங்களாம்பாளை அழைத்துவர ஏற்பாடு செய்யவேண்டுமென்று பன்முறையும் கேட்டுக் கொண்டான்.

குமரேசனை அனுப்புவதாகத் தீர்மானிக்கப்பட்டது. ஷங்கர்ஜி தன்னுடைய தந்தைக்கும் தாயாருக்கும் தனித் தனியே கடிதங்கள் எழுதிக் குமரேசனிடம் தரவேண்டுமென்றும். அவற்றில் தயங்காமல் மங்களாம்பாளை குமரேசனுடன் அனுப்பிவைக்க வெண்டுமென்று கேட்டுக்

கொள்வதென்றும் முடிவு செய்யப்பட்டது. குமரேசன் ஷங்கர்ஜியின் பெற்றோரிடத்திலும் மங்களாம்பாளிடத்திலும் என்னென்ன சொல்லவேண்டும், எதைச் சொல்லக் கூடாது என்பதும் தீர்மானிக்கப்பட்டது.

அடுத்தவாரம் திருமண நிச்சயார்த்தம் நடந்தது. ஜெயசந்திரா தம்முடைய அருமை மகள் நிர்மலாவின் திருமணத்தை முற்றிலும் தம்முடைய செலவில் வெகு விமரிசையாக நடத்தப் பிரமாதமான ஏற்பாடுகள் செய்தார்.

நிச்சயார்த்தம் நடத்தி லக்னப் பத்திரிகை கொடுக்கிற போதும் ஒரு விழா நடத்தி விருந்து வைக்கவேண்டுமென்பது அவர்களுடைய குடும்ப வழக்கம். அதன்படி ஜெயபாலுக்கும் நிர்மலாவுக்கும் திருமண நிச்சயார்த்தம் பெண்வீட்டில் நடந்தது. அதற்கு ஏராளமான உறவினர்களும் நண்பர்களும் வந்திருந்தார்கள். ஜெயசந்திராவுக்கு நண்பர்களான ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களும் நூற்றுக் கணக்கில் வந்திருந்தார்கள்.

நிச்சயார்த்தச் சடங்குகளெல்லாம் முடிந்து அடுத்த பதினைந்தாம் நாள் திருமண முகூர்த்தம் என்பதும் நிச்சயிக்கப்பட்டபின் விருந்து நடந்தது. அந்த விருந்தில் பெண்கள் பகுதியில் நிர்மலாவும் அவளுடைய தாயாரும் பந்தி விசாரிப்பு கவனித்துக் கொண்டிருந்தார்கள். ஜெயசந்திராவும் நிர்மலாவின் சகோதரர்களும் ஆடவர் பகுதியை கவனித்துக்கொண்டிருந்தார்கள். ஜெயசந்திரா மிகவும் குறிப்பாக ஆங்கிலேய நண்பர்கள் விருந்துண்ணும் பகுதியைக் கவனித்துக் கொண்டிருந்தார். அங்கே விருந்துக்கு வந்திருந்த அத்தனை ஆங்கிலேய நண்பர்களுக்குள்ளும். அவருக்கு மிகவும் ஆப்தரான சிம்சன் துரை மட்டும் வரமுடியாமற் போனது ஜெயசந்திராவின் உள்ளத்தை உறுத்திக் கொண்டிருந்தது. சிம்சன்துரை

வைசிராயுடன் சிம்லாவுக்குச் சென்றிருந்தார். அதனால் அவர் வரமுடியாமற் போய்விட்டது. ஆனாலும் அவருடைய மனைவியும் மக்களும் வந்திருந்தார்கள். சிம்சன் துரையும் எப்படியாவது அன்றைக்கு வந்து சேருவதாகத் தான் தெரிவித்தார். ஆனால் என்ன அவசர காரியமோ வரமுடியவில்லை.

இரவு பதினெரு மணிக்கு மேல் விருந்து முடிந்தது. விருந்தினர்கள் ஒவ்வொருவராக விடைபெற்றுக்கொள்ளத் தொடங்கினர்கள். அவர்களுக்கு வந்தனம் கூறி வழியனுப்புவதற்காக ஜெயசந்திராவும் அவருடை மனைவியும் வாசற்புறத்திலேயே இருந்துகொண்டிருந்தார்கள். மிகவும் அலுத்துப் போயிருந்த நிர்மலா தன் தாயாரும் வந்த பிறகு அவளுடன் சேர்ந்து ஆகாரம் உண்ணப் போகலாம் என்று அருகிலிருந்த ஒரு சாய்வு நாற்காலியில் அமர்ந்தாள். தாயார் வரத் தாமதமாயிற்று. நிர்மலா நாற்காலியில் சாய்ந்தபடியே கண்ணுறங்கிவிட்டாள்.

ஒரு வேலைக்காரி ஓடிவந்து அவளை எழுப்பி 'டெலிபோன்' மணியடிப்பதாகத் தெரிவித்தாள். பெரும்பாலும் அந்த வீட்குக்கு வருகிற டெலிபோன் அழைப்புகளுக்கு நிர்மலாதான் பதில் சொல்வது வழக்கம். உடனே ஓடினாள். 'ரிசீவரை' எடுத்துக் காதில் வைத்துக் கொண்டு,

"ஹல்லோ!"

.....

"ஆ! சிம்சன் அப்பாவா! (சிம்சன் துரையை நிர்மலா அப்பா என்றுதான் அழைப்பது வழக்கம்) ஏன் அப்பா விருந்துக்கு வராமல் வீட்டிலிருந்தே பேசுகிறீர்கள்? சிம்சன் அம்மாவும் சகோதர சகோதரிகளும் இன்னும் இங்கேதானிருக்கிறார்கள். நீங்களும் வாருங்கள் அப்பா..."

"....."

"ஓ! நீங்கள் சிம்லாவிலிருந்து பேசுகிறீர்களா! மறந்தே போனேன். மன்னித்துவிடுங்கள். என்ன விசேஷம்?"

"....."

"அப்பாவா? அப்பாவும் அம்மாவும் விருந்தினர்களை வழியனுப்பிக் கொண்டு வாசற்புறத்தில் இருக்கிறார்கள்."

"....."

"இதோ போய் அப்பாவை வரச் சொல்லுகிறேன்." ரிசீவரைக் கீழே வைத்துவிட்டு ஓடிப்போய் ஜெயசந்திராவுக்குத் தெரியப் படுத்தினாள். அவரும் உடனே வந்து ரிசீவரை எடுத்து,

"ஹல்லோ! மிஸ்டர் சிம்சன்."

"....."

"பரவாயில்லை. தாங்கள் வரமுடியாமற்போனது தங்கள் தவறல்லவே. அவசரமான அரசாங்கக் காரியத்தை விட்டுவிட்டு எப்படி வரமுடியும்? சிம்சன் துரைசானியும் குழந்தைகளும் வந்திருக்கிறார்கள். தாங்கள் வரமுடியாது போனதற்காக வருத்தப்படவேண்டாம்."

"....."

"என்ன? என்ன? மிகவும் ரகசியமான விஷயமா?"

"....."

"சரி, நானும் அதை ரகசியமாகவே வைத்துக் கொள்ளுகிறேன். தங்கள் அனுமதியின்றி யாருக்கும் சொல்லமாட்டேன்."

"....."

"இங்கேயா? என் பக்கத்திலா? வேறு யாருமில்லை ; நிர்மலா மட்டும்தான் இருக்கிறாள்."

இதைக் கேட்டவுடன் மிகவும் புத்திசாலியான நிர்மலா அவ்விடத்தைவிட்டுப் போய்விட்டாள்.

"....."

"நிர்மலா இருப்பதில் குற்றமில்லை என்று நீங்கள் சொல்லிக்கொண்டிருக்கும்போதே அவள் நான் சொன்னதைக் கேட்டவுடன் இங்கிருந்து போய்விட்டாள்."

"....."

"ஆமாம்."

"....."

"ஆமாம்."

"....."

"டங்கன் துரையா! வைசிராயிடம் வந்திருந்தாரா?"

"....."

"அடப்பாவி! சுவாமி கொடுத்த வரத்தை இந்தப் பூசாரி கெடுக்கத் துணிந்துவிட்டானே? ஷங்கர்ஜிக்குக் கருணை காட்டிவிட்டால் இந்த டங்கனுக்கு என்ன முழுகிப் போவது? வைசிராய் என்ன சொன்னார்?"

"....."

"முடிவு சொல்லவில்லையா? ஏன் சொல்லவில்லை?"

"....."

"சத்யாக்ரக விஷயமாக மகாத்மா காந்தி வைசிராயுடன் பேச வந்திருப்பதால் டங்கன் துரை பேச்சு இன்னும் முடியவில்லையாக்கும்?"

"....."

"ஓ! அப்படியா! வைசிராய் ஒப்புக்கொண்டுவிட்டாரா?"

"....."

"ஆமாம். அது நியாயந்தான். லண்டனிலுள்ள இந்தியா மந்திரி மூலமாகப் பிரிட்டிஷ் மந்திரி சபையைக் கேட்டுத்தான் வைசிராய் முடிவு சொல்ல முடியும். அது தெரிகிறது. ஆனால் வைசிராயைப் பொறுத்தமட்டில் அவர் அனுகூலமாக இருக்கிறாரா, பிரதிகூலமாக இருக்கிறாரா?"

"....."

"ரொம்ப சந்தோஷம். பிரிட்டிஷ் மந்திரிசபையின் அபிப்பிராயம் எப்பொழுது தெரியும்?"

"....."

"நாளைக்கே தெரிந்துவிடுமா! அதன்மேல் வைசிராயின் முடிவும் நாளைக்கே வெளியாகிவிடுமல்லவா?"

"....."

"வைசிராயின் முடிவு தெரியப் பத்து நாளைக்குமேல் ஆனாலும் ஆகுமா! ஏன்?"

"....."

"மகாத்மா காந்தியுடன் அவ்வளவு பேச்சிருக்கிறதா?"

"....."

"ஓ! அப்படியா! சரி, சரி. பிரிட்டிஷ் மந்திரி சபையின் அபிப்பிராயம் வைசிராயின் சிபார்சுக்கு அனுகூலமாக இல்லாமற் போய்விட்டால், ஐயோ! தங்களுடைய பேரன்பினால் ஷங்கர்ஜிக்குக் கிடைத்துள்ள உயிர்ப் பிச்சை கைக்கெட்டியும் வாய்க்கெட்டாமற்போக டங்கன் துரை செய்துவிடுவாரே!"

"....."

"பார்ப்போம். தெய்வ சித்தம் எப்படியாகுமோ! எனக்குப் பயமாகத்தான் இருக்கிறது. வைசிராயின் தீர்ப்பு எப்போது வந்தாலும் வரட்டும். பிரிட்டிஷ் மந்திரி சபையின் அபிப்பிராயம் என்னவென்பதை நாளைக்குத் தெரிந்தவுடனே எனக்குத் தெரிவிக்கிறீர்களா?"

"....."

"மிக்க வந்தனம். இன்றைக்குச் சரியாக பதினைந்தாம் நாள் நிர்மலாவின் முகூர்த்தம் நிச்சயமாகிவிட்டது. அதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டேன். லண்டனிலிருந்து எதிர்பார்க்கிற சேதி ஷங்கர்ஜி முதலா

னவர்களுக்குச் சாதகமாக இருந்தால்தான் திருமண விழா சந்தோஷம் நிறைந்ததாக இருக்கும்.''

''.....''

''உண்மைதான். தாங்கள் இப்போது ஒரு நண்பர் வீட்டு டெலிபோனில் பேசுகிறீர்கள் என்பதுதான் சரி. இதையெல்லாம் தங்கள் ஆபீஸ் டெலிபோனில் பேசுவது நல்லதல்லதான்.''

''.....''

''ஆமாம். அதுதான் சரி. நாளைக்குத் தாங்களே கூப் பிட்டுச் சொல்லுங்கள். காத்திருக்கிறேன்.''

''.....''

''ரொம்ப சந்தோஷம், குட்நைட்.''

இதற்குப் பிறகுதான் ஜெயசந்திராவும் அவருடைய மனைவி மக்களும் உணவருந்தினர்கள். சிம்சன்துரை பேசிய ரகசியம் என்னவென்பதைப் பற்றி நிர்மலாவும் கேட்கவில்லை; ஜெயசந்திராவும் சொல்லவில்லை. வழக்க மாக எந்த ரகசியமானாலும் மகளிடம் சொல்ல ஜெய சந்திரா கூசுவதில்லை. நிர்மலாவும் ரகசியமென்றால் வெகு பய பக்தியுடன் பாதுகாப்பாள். ஆனாலும் இந்த விஷயத்தை அவளுக்குச் சொல்லி அவளுடைய திருமண மகிழ்ச்சியைக் கெடுத்துவிடக்கூடாது என்று எண்ணி னர். நிர்மலாவுக்கு சிம்சன் பேச்சைப்பற்றி ஒன்றும் சொல்லாவிட்டால் பாதகமில்லை. ஆனால், ஜெயபாலுக்கு இதைப்பற்றி ஒன்றுமே சொல்லாதிருப்பது நியாய மாகுமா என்று எண்ணிப் பார்த்தார். ஷங்கர்ஜியின் உயிரைக் காப்பாற்றவேண்டும் என்பதே தன்னுடைய மூச்சும் பேச்சுமாக அரும்பாடுபட்டவன் ஜெயபால். அவனைவிட ஷங்கர்ஜியின் நிலைமையைப்பற்றி அறிய வேண்டிய உரிமையுள்ளவர்கள் வேறு யாரும் இல்லை. சிம்சன் துரை தனக்கு இந்த ரகசியத்தை அறிவித்ததும்

ஜெயபாலைக் கருதித்தான். அதனால் ஜெயபாலுக்கும் இதைத் தெரிவிக்கக் கூடாதென்று சிம்சன் எண்ணி யிருக்கமாட்டார் என்றே ஜெயசந்திரா தீர்மானித்தார்.

விருந்துக்கு வந்திருந்த சில நண்பர்களுடன் சல்லாபித்துக்கொண்டே வெளியே சென்றிருந்த ஜெயபால் திரும்பிவந்தான். அப்போது ஜெயசந்திராவும் அவருடைய மனைவியும் நிர்மலாவும் சிலரும் விருந்து நடந்ததைப் பற்றி வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருந் தார்கள். ஜெயபாலும் அவர்களுடன் அமர்ந்துக் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தான்.

ஜெயசந்திரா எழுந்துபோய் மாடிப்படிக்கு அருகில் நின்றுகொண்டு ஜெயபாலை அழைத்தார். இருவரும் மாடிக்குச் சென்றார்கள்.

சிம்சன்துரை சற்று முன்னால் டெலிபோனில் பேசிய ரகசியத்தின் சாரத்தை ஜெயசந்திரா ஜெயபாலுக் குச் சொன்னார். மௌனமாகக் கேட்டுக்கொணடிருந்த ஜெயபால் சிறிது நேரம் தனக்குள்ளேயே சிந்தனை செய்துவிட்டு,

''லண்டனிலிருந்து எதிர்பார்க்கிற சேதி எப்படி யிருந்தாலும் இன்றைக்குப் பதினைந்தாம் நாள் நடத் தத் தீர்மானித்திருக்கிற எங்கள் திருமணத்தைத் தயவு செய்து வேறு முகூர்த்தத்திற்கு ஒத்திவைக்கும்படித் தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்,'' என்றான்.

''உன்னுடைய விருப்பம் அதுவானால் அப்படியே செய்வோம்'' என்றார் ஜெயசந்திரா.

நிச்சயம் செய்யப்பட்டிருந்த முகூர்த்தத்தில் திரு மணம் நடப்பது நிறுத்தப்பட்டது. அச்சுக்கூடத்துக்கு அனுப்பப்பட்டிருந்த திருமண அழைப்பின் கைப்பிரதி வாபஸ் வாங்கப்பட்டது.

யாரோ ஒரு கிழவன்

வசந்தபுரியில்

சங்கரலிங்கத்தைப் பற்றிய சந்தோஷச் செய்தி வரும் வரும் என்று எதிர்பார்த்து ஏமாந்துபோன அவனுடைய பெற்ரோரும், மனைவியும், மாமனார் வீட்டாரும் மறுபடியும் மனங் கலங்கத் தொடங்கி விட்டார்கள்.

முன்னே வந்திருந்த குமரேசன், இரண்டு மாதங்கள் பொறுத்திருந்தால், சங்கரனைப் பற்றிய அபாயம் நீங்கி விடுமென்று உறுதி கூறி அதுவரைக்கும் அன்னபூரணி யம்மாள் மகனைப் பற்றிய ஏக்க மடையாமல் இருக்க வேண்டுமென்று வாக்குறுதி வாங்கிக்கொண்டு போனான். அதன்படியே அன்னபூரணியம்மாளும் கவலைக்கு இடங் கொடுக்காமல்தான் இருந்துவந்தாள். ஆனால், குமரேசன் சொன்ன இரண்டு மாதங்களும் போய், அதற்கு மேலும் நான்கு மாதங்கள் ஓடிவிட்டன. தாயார் தவிக்கத் தொடங்கிவிட்டார். தந்தையினுடைய நம்பிக்கையும் தளர்ந்துவிட்டது. மங்களாம்பாளுக்கு மாங்கல்ய பலம் போதா தென்று முன்னே ஜோசியர் சொன்னது மறுபடியும் இப்போது அடிக்கடி நினைவுக்கு வந்து, கோபால கிருஷ்ணரின் நிம்மதியைக் குறைத்து விட்டது. மங்களாம்பாளுடைய மனநிலையை என் னென்பது! மிகவும் அசாதரணமான சகிப்புத்தன்மை இயல்பாகவே அவளுக்கு அமைந்திருந்ததனால், மாமியார் மாமனார்முதலானவர்களுக்கு முன்னால் கவலைப்படாதவள் போலவே காட்டிக் கொள்வாள். என்ரூலும், அவளுடைய உயிர் கணவனுடைய உயிரோடுதான் கலந்திருந்தது. பகலெல்லாம் மாமியாருக்குப் பக்கத்திலேயே இருந்து

கொண்டு, அவருடைய விசாரத்தைக் குறைப்பதற்கான காரியங்களையே கவனித்துக்கொள்வதும் இரவெல்லாம் ஏகாந்தமாகப் பிரார்த்தனை செய்வதும்தான் அவளுடைய அலுவல்கள்.

வசந்தபுரியில் இப்படியிருக்க, விருதூரில் மங்களாம்பாளின் அன்னை ஜானகியம்மாள், மருமகனைக் கருதிக் கண்ணைக் கசக்காத நாளே இல்லை. மங்களத்தின் தந்தை மகாதேவர் ஒருவர்தான் 'தெய்வ சித்தம் எதுவோ அதுதான் நடக்கும்; மனிதனுக்குத் தோன்ரூத் துணையாக நின்று நன்மை புரியும் தெய்வ சக்தியின் திருவருள் கூடினால்தான் சங்கரலிங்கம் தப்பிவர முடியும்' என்று தெய்வத்தின் மீது பாரத்தைப் போட்டுவிட்டு மனதைத் தேற்றிக்கொள்ள முயன்றார். மற்ற எல்லாரும் கலங்கிவிட்டார்கள்.

மிகவும் கடின சித்தமுள்ளவனைக் கருதப்பட்ட எதிர் வீட்டுக் குப்புசாமியும்கூட, மங்களாம்பாள் செய்த சிவன் கோயில் சேவை பலிக்காமற் போய்விடுமோ என்று பயப்படலானான்.

மங்களாம்பாள் நடத்திய சிவ சேவையினால்தான் தன்னுடைய மனம் நல்வழிப் பட்டதென்ற நம்பிக்கை உண்டான நாள் முதல் குப்புசாமி உண்மையாகவே மங்களாம்பாளுக்கு மங்கள முண்டாக வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டிருந்தான்.

வசந்தபுரியிலும் விருதூரிலும் உள்ளவர்கள் மட்டு மன்றி, மதுரையில் வாழ்க்கைப்பட்டிருந்த சங்கரலிங்கன் தங்கை அம்புஜமும், தமயனைப்பற்றித் தவித்துக்கொண் டிருந்தாள். அவளும் அவளுடைய கணவன் பரமேசுரனும் சங்கரன் விஷயம் என்னவாயிற்று என்று கேட்டு அடிக்கடி கோபால கிருஷ்ணருக்கும் மங்களாம் பாளுக்கும் எழுதிக்கொண்டே யிருந்தார்கள்.

கடைசியாக மதுரையி லிருந்து அம்புஜம் தன் தந்தைக்கு எழுதியிருந்த கடிதத்தில் அம்புஜத்தின் மூத்த பெண்ணுக்கு ஒரு பெரிய சிலந்தி வந்து ஆஸ்பத்திரியில் ஆபரேஷன் செய்யப்பட் டிருப்பதாகவும் அவள் தாத்தாவையும் பாட்டியையும் பார்க்க விரும்புவ தாகவும் கோபாலகிருஷ்ணரும் அன்னபூரணி யம்மாளும் மங்களாம்பாளுடன் வந்து போக வேண்டுமென்றும் எழுதியிருந்தாள். கோபாலகிருஷ்ணருக்குப் போய் வரத்தான் விருப்பம். ஆனல், அன்னபூரணியம்மாள் மகளைப் பற்றிய ஏக்கத்தால் மிகவும் இளைத்துப் பிரயாணத்துக்குத் தகுந்த உத்ஸாக மில்லா திருந்தாள். அத்துடன் சற்றே அசௌக்யமும் ஆரம்பித்திருந்தது. அதனல் மதுரைக்குப் போவது நிச்சயமற்றிருந்தது.

நான்கு நாட்களுக்குப்பின் மறுபடியும் மதுரையி லிருந்து அம்புஜம் எழுதிய கடிதம் வந்தது. அதில் ஆபரேஷன் செய்த புண் ஆறி வருவதாகவும், ஆனல் பாட்டியையும் தாத்தாவையும் பார்க்க வேண்டுமென்று குழந்தை அடிக்கடி சொல்லுவதாகவும் எல்லாரும் உடனே ஒரு பயணம் வந்துபோக வேண்டும் என்றும் எழுதியிருந்தது.

அன்னபூரணி யம்மாளுக்கும் போய்வர வேண்டும் என்றுதான் ஆ சை. ஆ னல், பிரயாணத்துக்கு வேண்டிய உத்ஸாகமோ, உடல் நலமோ இல்லை. மாமியாரைவிட்டு மங்களாம்பாள் போக மாட்டாள். அதனல், கோபால கிருஷ்ணர் மட்டுமாவது போய்வர வேண்டும் என்று தீர்மான மாயிற்று.

மறுநாள் காலையில் கோ பா ல கி ரு ஷ் ண ரு ம் அவருடைய காரியதரிசியும், ஒரு வேலைக்காரனுடன் மதுரைக்குப் போய்விட்டார்கள்.

அன்று மாலை நான்கு மணிக்கு ஒரு புது போலீஸ் இன்ஸ்பெக்டர் கோபாலகிருஷ்ணருடைய மாளிகைக்குள் நுழைந்தார். அவர் இதுவரையிலும் அந்த வீட்டைக் கண்காணித்துக் கொண்டிருந்த இரகசியப் போலீஸ் இன்ஸ்பெக்டரல்ல; இதுவரையிலும் அந்தத் தெருவி லுள்ள யாரும் இவரைப் பார்த்ததில்லை. சங்கரலிங்கனைக் கண்டு பிடிப்பதற்காக முன்னே நியமிக்கப்பட் டிருந்த போலீஸ்காரர்கள் சரியாக வேலை செய்யவில்லை யென்று அவர்களை நீக்கி விட்டுப் புதிய ஆட்கள் நியமிக்கப்பட் டிருக்கிறார்கள் என்றே, இவர் கோபால கிருஷ்ணர் வீட்டுக்கு வந்ததைப் பார்த்துக்கொண் டிருந்தவர்கள் நினைத்தார்கள். முன்னிருந்த இன்ஸ்பெக்டர் நாற்பது வயதுக்கு மேற்பட்டவர். இவரோ இருபத்தைந்து வயதே மதிக்கத்தக்க முறுக்கான இளைஞர்.

தாளிடப்பட் டிருந்த தலைவாசற் கதவைத் தன் கையிலிருந்த பிரம்பால் தட்டி 'ஸார்' 'ஸார்' என்று கூப்பிட்டார் அந்த இன்ஸ்பெக்டர். சிறிது நேரம் கழிந்தபின் ஒரு வேலைக்காரன் கதவைத் திறந்தான். அவனைப் பார்த்த இன்ஸ்பெக்டர் இங்கிலீஷில் என்னவோ கேட்டார். அவனுக்குப் புரியவில்லை. இங்கிலீஷ் தெரிந்த காரியதரிசியும் கோபாலகிருஷ்ண ருடன் மதுரைக்குப் போய்விட்டார். வேலைக்காரன் மங்களாம்பாளிடம் தெரியப்படுத்த எண்ணி, இன்ஸ் பெக்டரை அங்கேயே இருக்கும்படிச் சாடை காட்டி விட்டு உள்ளே போனன்.

அந்த வே லை க் கா ர ன் அந்த வீட்டிலுள்ள நிலைமையை நன்ருக அறிந்தவன். அதனல் மெதுவாகச் சென்று, மாமியுடன் இருந்த மங்களாம்பாளைத் தனியே அழைத்து விஷயத்தைச் சொன்னன். தன்னுடைய வீட்டைச் சுற்றி போலீஸ்காரர்கள் எந்நேரமும் அலைந்து

கொண்டிருப்பதை அன்னபூரணியம்மாள் மிகவும் அருவருப்பவள். போலீஸ்காரன் வீட்டுக்கு வந்தான் என்றாலே, மகனுக்கு ஏதோ அபாயம் நேர்ந்துவிட்டது போல் மருண்டுவிடுவாள். அதனால் மாமியாருக்கு முன்னால் சொல்லிவிடாமல், வேலைக்காரன் போலீஸ்காரர் வந்திருப்பதாகத் தன்னிடம் இரகசியமாகச் சொன்னதை மிகவும் மெச்சி, அதை அன்னபூரணி யம்மாளுக்குச் சொல்லிவிட வேண்டாமென்று எச்சரித்துவிட்டு, வந்திருக்கிற போலீஸ்காரரை சந்திக்க முன்கட்டுக்குப் போனாள், மங்களம்.

மங்களாம்பாளைக் கண்டவுடன் அந்தப் புது இன்ஸ்பெக்டர் புன்முறுவல் செய்து கும்பிட்டார்.

மங்களாம்பாளும் திருப்பிக் கும்பிட்டாள்.

"கோபாலகிருஷ்ணரைப் பார்க்கவேண்டும்" என்றார் இன்ஸ்பெக்டர், இங்கிலீஷில்.

"எதற்காக?" என்று இங்கிலீஷிலேயே கேட்டாள் மங்களம்.

"ஷங்கர்ஜியைப் பற்றி அவருடன் கொஞ்சம் பேச வேண்டும்."

"ஷங்கர்ஜி இந்த வீட்டில் இல்லை. வேண்டுமானால், சோதனை போட்டுக் கொள்ளுங்கள். போலிஸ்காரர்கள் எந்நேரமும் இப்படி எங்களை நடுங்கச் செய்துகொண்டிருப்பது நன்றாயில்லை" என்று சற்றே கடுகடுத்தாள் மங்களம்.

"தயவுசெய்து கோபித்துக் கொள்ள வேண்டாம். ஷங்கர்ஜி இப்போது இந்த வீட்டில் இல்லை யென்பது போலீசாருக்கு நன்றாகத் தெரியும். நான் வந்தது, கோபாலகிருஷ்ணரைப் பார்க்கத்தான். தயவு செய்து அவரிடம் நான் வந்திருப்பதைச் சொல்லுங்கள்."

"கோபால கிருஷ்ணர் ஊரில் இல்லை."

"எங்கே போயிருக்கிறார்"

"அவர் எங்கே போயிருக்கிறார் என்பதைப் பற்றிப் போலீசார் எதற்காக அறியவேண்டும்?"

"வேண்டாம். அவர் எங்கே போயிருக்கிறார் என்பது எனக்குத் தெரிய வேண்டிய தில்லை. அவர் எப்போது வருவார், நான் எப்போது அவரைப் பார்க்கலாம் என்பதை மட்டுமாவது, தயவு செய்து சொல்லுங்கள்" என்று இன்ஸ்பெக்டர் மிகவும் தணிவாகக் கேட்டார்.

"அவர் எப்போது வருவார் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. அவர் திரும்பிவரக் குறைந்தது இரண்டு நாட்களாவது ஆகும். அதற்கு மேலும் ஆகலாம்."

"சந்தோஷம். அவர் எப்போது வந்தாலும்வரட்டும். அவர் வந்த பிறகு கண்டு கொள்ளுகிறேன். உங்களுக்குத் தொந்தரவு தந்துவிட்டதை மன்னித்திடுங்கள். மிக்க வந்தனம்" என்று இன்ஸ்பெக்டர் போய்விட்டார்.

அந்த மாளிகையின் முன்கட்டுக்கும் பின்கட்டுக்கும் இடையில், பல அறைகளும் இரண்டு கூடங்களும் உள்ளன. முன்கட்டைக் கடந்ததும் இருபது அடி தூரம் வரையிலும் சிமிண்ட் தளமுள்ள திறந்த வெளி. அதற்கப்புறம்தான் பின்கட்டு. பின்கட்டில் ஒரு பெரிய கூடமும் ஆறு அறைகளும் உண்டு. அந்த அறைகளில் ஒன்றுதான் இப்போது அன்னபூரணியம்மாளின் இருப்பிடம். முன் கட்டிலும், மேல் மாடியிலும், அந்த அம்மாளுக்கென்றுள்ள அறைகள் உண்டு. ஆனால் இப்போதெல்லாம் அநேகமாக முன்கட்டுக்கும் மாடிக்கும் அவள் போவதே இல்லை. அதனால், முன்கட்டில் யார் வந்து போனாலும் எது நடந்தாலும் பின்கட்டிலுள்ள அன்னபூரணியம்மாளுக்குத் தெரியாது.

போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்து போனதில் மங்களாம்பாளுக்குக் கணவனைப்பற்றிய கவலை அதிகமாகி விட்டது. அந்த இன்ஸ்பெக்டரும் புதிய மனிதராக இருப்பதால் தன் கணவனைக் கைது செய்யப் புது முயற்சிகள் நடப்பதாகக் கருதினாள்.

அன்று வெள்ளிக்கிழமை யானதால், அன்னபூரணி யம்மாள் வழக்கமாகச் செய்துவரும் இஷ்ட தெய்வப் பூசைக்கு வேண்டிய ஏற்பாடுகளை கவனிக்கத் தொடங் கினாள் மங்களாம்பாள். சாதாரண காலங்களில் அன்னபூரணி யம்மாள் அடிக்கடி கோவிலுக்குப் போவ துண்டு. மற்ற நாட்களில் தவறினாலும், வெள்ளிக் கிழமைகளில் தவருமல் ஆலயம் சென்று வழிபட்டு வருவதே வழக்கம். சங்கரலிங்கனைப்பற்றிக் கவலைப் படத் தொடங்கியபின் கோயிலுக்குப் போய் வரும் வழக்கம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வந்தது. வீட்டைச் சுற்றிப் போலீஸ்காரர்கள் காவல் புரியத் தொடங்கியதி லிருந்து அன்னபூரணியம்மாள் வீட்டை விட்டு வெளியே போவது நின்றுவிட்டது. அதனால் வெள்ளிக்கிழமைகளில் தவருமல் நடத்தி வந்த ஆலய வழிபாடுகள் வீட்டிலுள்ள பூசை அறையிலேயே நடந்தன.

முன்கட்டின் நடுவில் விசாலமான பூசை அறை ஒன்று உண்டு. அதில் எல்லாத் தெய்வங்களின் சிறு சிறு சிலைகளும் படங்களும் இருக்கும். சில சிலைகள் தங்கத்தால் செய்யப்பட்டவை. மற்றவை வெள்ளியி னாலும், வேறு உலோகங்களாலும் செய்யப் பட்டவை. அன்னபூரணியம்மாளுக்கு சைவம், வைஷ்ணவம் என்ற வேற்றுமை உணர்ச்சி இல்லை. இராமபிரானும் முருகக் கடவுளும் அவளுடைய இஷ்ட தெய்வங்கள். மங்களாம் பாளுக்குப் பார்வதியும் முருகனும் உபாசனை மூர்த்திகள்.

மாலை எட்டு மணியிலிருந்து பத்து மணி வரையிலும் மாமியாரும் மங்களாம்பாளும் பூஜாக் ருகத்தில் ஒரு குறிப்பிட்ட முறையில் பூசை நடத்தி விட்டுப் பிரார்த்தனை புரிவார்கள். அதற்கு முன்னால், மங்களாம்பாள்தான் வெகு ஆசாரத்துடன் பூசைக் குரிய விக்ரகங்களுக்கும், படங்களுக்கும் அலங்காரம் செய்து புதுமலர் மாலைகளைச் சூட்டி, நைவேத்தியங்களையும் தயார் செய்து வைப்பாள். பூசை அறையி லுள்ள படங்கள் மட்டுமன்றி அந்த வீட்டில் பல இடங்களிலும் வெவ்வேறு தெய்வங்களின் படங்கள் மாட்டப்பெற் றிருக்கும். அவைகளுக் கெல்லாம் புது மாலைகள் சூட்டப் படும்.

வீதிப்புறத்தி லுள்ள தலைவாசலுக்கு மேல் கையால் வரையப்பட்ட பெரிய முருகன் படம் ஒன்று எப்போதும் மாட்டப் பெற்றிருக்கும். அங்கே வைப்பதற் கென்றே பெருஞ் செலவில் கைதேர்ந்த சித்திரக்காரனைக் கொண்டு வரையப் பெற்றது. அதற்கென்று கட்டப்பட்ட மிகப் பெரிய பூமாலை வாரத்துக் கொருமுறை வெள்ளிக் கிழமையில் மாற்றப்படும்.

அன்று மாலை ஏழு மணிக்கு அந்தப் படத்துக்கு மாலை சூட்டிக்கொண் டிருந்தான் ஒரு வேலைக்காரன். படம் உயரத்தில் இருந்ததால், ஏணியின்மேல் ஏறித்தான் அலங்கரிக்க வேண்டும். வேலைக்காரன் மாலையை சூட்டிக்கொண் டிருந்தான். உள்ளேயிருந்து வந்த மங்களாம்பாள் அதைச் சரிபார்த்துக்கொண்டு நின்றாள்.

அவளுக்கு இடது பக்கத்தி லிருந்து, "முருகா!— முருகா! முருகா! முருகா! கருதிக் கருதிக் கவலைப் படுவார் கவலைக் கடலைக் கடிவாய் வடிவேல் முருகா! முருகா! முருகா!" என்று யாரோ நடுக்கிக் கொண்டு பாடுவது காதில் விழுந்தது. மங்களம் திரும்பிப்

பார்த்தாள். அந்த நீண்ட திண்ணையின் கோடியில் சுவரோரத்தில், யாரோ ஒரு கிழவன் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. உற்றுப் பார்த்தாள். மறுபடியும்,

'கருதிக் கருதிக் கவலைப் படுவார் கவலைக் கடலைக் கடிவாய் வடிவேல் முருகா! முருகா! முருகா' என்ற பாட்டு சாரீர சம்பத்தில்லாத ஒரு கிழட்டுத் தொண்டையிலிருந்து வருவதைக் கவனித்தாள். சாரீரம் எப்படியிருந்தாலும் அந்தப் பாட்டு அவளுக்கும் பழக்க மானது. தன்னுடைய கவலைகளைத் தீர்க்க வேண்டு மென்று முருகனைத் தியானிக்கும் போது அடிக்கடி அந்தப் பாட்டை அவள் மனதுக்குள்ளேனும் பாடிக் கொள்வதுண்டு. முருகன் படத்துக்கு மாலை சூட்டுவதைப் பார்த்துக்கொண் டிருக்கிற அந்தச் சமயத்தில், உள்ளே போய், பூஜை செய்யும்போது மனதுக்குள் சொல்லப்போகிற இந்தப் பிரார்த்தனையை யாரோ ஒரு கிழவன் அசரீரிபோல் வந்து அங்கே பாடியது அவளுடைய மனதை என்னவோ செய்து விட்டது. உடனே அந்தக் கிழவனுக்கு அருகில் ஓடினாள்.

தும்பைப் பூவைப்போல் நரைத்த தாடியும் சரக் கொன்றைக் காய்களைப் போல் சடை விழுந்த தலையும், சற்றே நடுங்குகின்ற கைகளுமாகச் சாளேசரக் கண்ணுடிகளுடன் எழுபது வயதுக்குமேல் மதிக்கக்கூடிய அந்தக் கிழவன், மங்களாம்பாள் அவனை யாரென்று கேட்பதற்கு முன்னால்,

"அம்மா, முருகன் உங்கள் துன்பங்களை யெல்லாம் விரைவில் நீக்கியருள்வான். கவலைப்பட வேண்டாம்" என்று தழுதழுத்த குரலில் சொன்னான்.

"ஐயா நீங்கள் யார்?" என்றாள் மங்களம். அதில் சொல்ல வாயெடுத்த அக்கிழவருக்கு இருமலும் இளைப்பும்

வந்துவிட்டது. சிறிதுநேரம் இருமி, இளைப்பும் குறைந்த பின்,

"அம்மா, நான் இருப்பது திருக்கோவிலூர். அங்கே ஒரு சைவ மடத்தைப் பராமரிக்கும் பண்டாரம். நான் முருகனுக்குப் பிரார்த்தனை செலுத்தப் பழநிக்குப் போகிறேன். வழியில் இந்த ஊரிலுள்ள ஒரு நண்பரைப் பார்த்துவிட்டு இன்று இரவு அவருடன் தங்கிப் போகலா மென்று எண்ணினேன். ஆனால் அவர் ஊரில் இல்லை. அவருடைய வீடு பூட்டிக்கிடக்கிறது. என்னிடத்தில் பெருந்தொகையான பணமும் சில நகைகளும் இருக் கின்றன. இன்றைக்கு இரவை ஒரு பந்தோபஸ்தான இடத்தில் படுத்திருந்து கழிக்க வேண்டும். அதற்குத் தகுந்த இடம் எங்கே கிடைக்குமென்று விசாரித்தபோது பலபேர் இந்த வீட்டைப் பற்றியும் அன்னபூரணி அம் மாளைப் பற்றியும் சொன்னார்கள். அந்தப் பேச்சோடு பேச்சாக அன்னபூரணியம்மாளுடைய அருமை மகனைச் சூழ்ந்திருக்கிற அபாயத்தைப் பற்றியும் போலீசார் கண் காணிப்பைப் பற்றியும் சொன்னார்கள். முருகன் அரு ளால் எனக்குக் கொஞ்சம் ஜோசியம் தெரியும்."

மறுபடியும் கிழவனுக்கு இருமல் வந்துவிட்டது. சிறிது நேரம் இருமிவிட்டு, நிறுத்தி நிறுத்தி, ஒவ்வொரு வார்த்தையாக,

"எனக்கு வெகு நாளாக இளைப்பு நோய் உண்டு. இன்றுவரையிலும் இல்லாதிருந்த அந்நோய் இன்று ஆரம்பித்துவிட்டது. அதற்காகவும் இரவில் கொஞ்சம் சௌகரியமான இடத்தில் தங்கியிருக்க வேண்டும்...அது கிடக்கட்டும். எனக்கு ஆருடமும் தெரியுமென்று சொன்னேனல்லவா? நானே இந்த நேரத்துக்குள் அன்னபூரணியம்மாள் மகனைப் பற்றி நல்ல சேதி

வந்துவிடும். நீங்கள் அன்னபூரணியம்மாளுக்கு என்ன உறவு?"

"நான்தான் அன்னபூரணியம்மாளின் மருமகள். என் கணவரைப் பற்றியதுதான் அந்த அபாயம்."

"ஆ! அப்படிச் சொல்லுங்கள். நானும் அப்படித் தான் நினைத்..."

மறுபடியும் கிழவருக்கு இருமலும் இளைப்பும் பலமாக வந்துவிட்டது. அவை அடங்கியபின்,

"அம்மா, எனக்கு இப்போது பேசக் கஷ்டமாக இருக்கிறது. கொஞ்ச நேரம் போகட்டும். இளைப்பு நின்றுவிடும். விவரமாக ஜோசியம் சொல்லுகிறேன். நான் இங்கேயே படுத்து இளைப்பாறுகின்றேன். என்னிடத்திலுள்ள பணத்தையும் நகைகளையும் மட்டும் உள்ளே கொண்டு போய் வைத்திருந்து விடிந்தபின் கொடுங்கள்" என்று தன் காஷாயச் சட்டையின் உட்புறத்திலுள்ள பையிலிருந்த பணமுடிப்பை எடுக்க முயன்றார். அதற்குள் மங்களம்,

"வேண்டாம் சுவாமி, வேண்டாம். பணமும் நகைகளும் தங்களிடமே இருக்கட்டும். தாங்கள் இங்கே வெளியில் படுக்கவேண்டாம். காற்றிலும் குளிரிலும் இளைப்பு அதிகமாகிவிடும். உள்ளே பந்தோபஸ்தான இடத்தில் படுக்கை போட்டுத் தரச் செய்கிறேன். படுத்திருங்கள். பத்துமணி வரையிலும் பூசை நடக்கும். அதன் பிறகு தங்களுக்கு ஆகாரம் கொண்டு வருகிறேன். உணவு அருந்தியபின் ஜோசியம் சொல்லுங்கள். தங்கள் வாக்கால் என் கவலைகள் நீங்கவேண்டும்" என்றாள்.

கிழவர் வெகு சந்தோஷப்பட்டு அவளை ஆசீர்வதித்தார்.

மங்களாம்பாளின் உத்தரவின்படி வீட்டுக்குள் ஒரு விசாலமான அறைக்கு அந்தப் பெரியவரை வேலைக்காரன் அழைத்துக்கொண்டு போனான். அந்த அறை வீட்டுக்கு வரக்கூடிய பெரிய மனிதர்கள் தங்கியிருப்பதற்கென்றே உள்ளது. பஞ்சணை பரப்பிக் கொசுவலை கட்டப்பட்ட மஞ்சங்களும், மேஜை நாற்காலிகளும், நிலைக் கண்ணாடிகளும், மின்சார விளக்குகளும் விசிறிகளும் அமைந்த அலங்காரமான அறை.

அங்குள்ள மஞ்சம் ஒன்றில் கிழவருக்காகப் படுக்கை விரிக்கப்பட்டது. ஆனால் கிழவர் மஞ்சத்தை மறுத்து விட்டுத் தரையில் ஒரு ஜமக்காளத்தைமட்டும் விரிக்கச் சொல்லி அதிலே படுத்துக் கொண்டார்.

மங்களாம்பாள் மாமியுடன் பூசை நடத்தப் போய் விட்டாள்.

வழக்கம்போல் பூசை நடந்தது. ஆனால் மங்களத்தின் மனம் மட்டும் வழக்கம்போல் அந்தப் பூசையில் லயிக்கவில்லை. அவள் அந்தக் கிழப் பண்டாரம் பாடிய முருகன் பாட்டையும், நாளை இந்நேரத்துக்குள் தன் கணவரைப் பற்றிய நல்ல சேதிவரும் என்று ஜோசியம் சொன்னதையும், மறுபடியும் விவரமாக ஜோசியம் சொல்லுவதாகச் சொன்னதையுமே திருப்பித் திருப்பி எண்ணிக் கொண்டிருந்தாள். அந்தப் பண்டாரத்தைப் பேச முடியாதபடி தொந்தரவு செய்யும் இருமலும் இளைப்பும் நீங்கி, அவர் சிரமமில்லாமல் தன் கணவரைப் பற்றி விவரமான ஜோசியம் சொல்லக்கூடிய தெம்பு உண்டாகவேண்டுமென்று பிரார்த்தனை செய்துகொண்டாள். 'நாளைக்குள் நல்லசேதி வருமென்றுதானே சொன்னார். ஆனால் என் நாயகன் எப்போது வருவாரோ, சொல்லவில்லையே! அதையும் சொல்லியிருப்பார். அதற்குள் அந்தப் பாழும் இருமல்வந்து பேச முடியாமற் செய்துவிட்டது. நல்ல சேதி வருமென்றால் மரணதண்டனை ஆயுள்சிறைவாசமாக மாற்றப்பட்டது

என்ற சேதிதான் வரும்போலிருக்கிறது. அப்படியானால் ஐயோ! அவர் வந்துசேரக் குறைந்தது பதினைந்து வருஷங்களாவது போகவேண்டுமே! அது வரையிலும் பொறுத்துக்கொண்டு நான் உயிர்தரிக்க முடியுமா? ஒருக்கால் நான் உயிரோடிருந்து விட்டாலும் மாமியவர்கள் உயிர் தரிக்கமாட்டார்களே! போகட்டும். மரணதண்டனை மாறிவிட்ட சேதிமட்டும் வந்தாலும் போதுமே. பூசை முடிந்ததும் பண்டாரக் கிழவரை விவரமாக ஜோசியம் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்ள வேண்டும். முன்னே மாமியவர்களுக்காக வாங்கப்பட்ட இருமல் மருந்து இருக்கிறது. அதைக் கொடுத்தால் இருமலின் தொந்தரவு இருக்காது. விவரமாகச் சொல்லுவார். அந்தப் பெரியவர் வந்திருப்பதை மாமிக்குச் சொல்லலாமா? இப்போது வேண்டாம். மறுபடியும் அவரைக்கண்டு விவரமாகக் கேட்டபின் சொல்லலாம்" என்றெல்லாம் எண்ணிக்கொண்டிருந்த மங்களம் பூசையில் மாமியாருக்கு உதவியாகச் செய்யவேண்டிய காரியங்களையும் மறந்துவிட்டாள்.

மருமகள் மெய்ம்மறந்து தியானம் செய்துகொண்டிருப்பதனால் காரியங்களை மறந்துவிட்டதாகக் கருதிய அன்னபூரணியம்மாள் பூசைக்கான கிரியைகளையெல்லாம் தானே செய்துவிட்டுக் கற்பூரத்தை ஏற்றினாள். அப்போதுதான் மங்களத்துக்குக் குழப்பம் நீங்கியது. அதன் பிறகு நடக்கவேண்டியவற்றை மங்களம் வழக்கம்போல் செய்தாள்.

பூசை முடிந்தபின் அன்னபூரணியம்மாள் வெறும் பால்மட்டும் அருந்திவிட்டுப் படுக்கச் சென்றுவிட்டாள். தூக்கம் வந்தாலும் வராவிட்டாலும் பத்துமணி ஆனதும் படுத்துக்கொள்வது அன்னபூரணியின் பழக்கம். மாமி படுக்கைக்குப் போனபின் வேலைக்காரர்களுக்கும்

சமையற்காரருக்கும் சொல்ல வேண்டியவற்றைச் சொல்லிவிட்டு, கவனிக்க வேண்டிய காரியமிருந்தால் கவனித்துவிட்டு வீதிக் கதவு வரையில் ஒரு முறை பார்வையிட்டுவிட்டு மாமியின் அறையிலேயே மங்களமும் படுத்துக் கொள்வது வழக்கம்.

இன்றைக்குப் பண்டாரக் கிழவரிடம் தன் கணவரைப் பற்றி ஜோசியம் கேட்கவேண்டுமென்ற துடிப்பு அவளை முடுக்கிக் கொண்டிருந்தது. மாமியார் படுக்கப் போனவுடன் பண்டாரக் கிழவருக்காகப் பழங்களும் இட்லி தோசை முதலிய பலகாரங்களும் பாலும் கையலம்பத் தண்ணீரும் இரண்டு பணிப் பெண்கள் எடுத்துவர மங்களாம்பாள் பண்டாரம் படுத்திருக்கும் அறைக்குச் சென்றாள். அறையின் கதவண்டை வரும் போது உள்ளே கிழவர் இருமிக்கொண்டிருக்கிற ஓசை கேட்டது. உடனே நினைவு வந்து, மங்களாம்பாள் பணிப் பெண்களை நிற்கச் சொல்லிவிட்டு மீண்டும் பின் கட்டுக்கு விரைந்து சென்று, இருமல் மருந்தையும் எடுத்து வந்தாள்.

அறையின் கதவைத்திறந்து விளக்கைப் போட்டாள். படுத்திருந்த பண்டாரம் எழுந்து உட்கார்ந்து மங்களத்தைக் கண்டு மகிழ்ச்சி காட்டினார்.

"சுவாமி, வெகு நேரமாகிவிட்டது. பசியோடு இருக்கிறீர்கள். தங்களுக்கு ஆகாரம் கொண்டு வந்திருக்கிறேன். இதோ கையலம்பத் தண்ணீர் இருக்கிறது. அலம்பிக்கொண்டு அருந்துங்கள்." என்று உபசரித்தாள்.

பெரியவர் இருமிக் கொண்டே, "என்ன ஆகாரம்?" என்றார்.

பணிப் பெண்கள் கொண்டு வந்தவை அவருக்கு முன்னால் வைக்கப்பட்டன.

அவைகளைப் பார்த்துவிட்டுக் கிழவர்,

" அடே யப்பா! இதெல்லாம் எனக்கென்னத்திற்கு? கொஞ்சம் பால் மட்டும் போதும். மற்றவைகளைக் கொண்டு போகச் சொல்லுங்கள்" என்றார்.

இரண்டு பழங்களையாவது எடுத்துக் கொள்ளும்படி வற்புறுத்தினாள். கிழவர் மறுத்துவிட்டார். பாலையும் தண்ணீர்ச் செம்பையும் வைத்துவிட்டு மற்றவைகளைக் கொண்டு போய்விடும்படி மங்களம் கட்டளையிட்டாள். பணிப் பெண்கள் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். தன் கையிலிருந்த இருமல் மருந்துப் புட்டியைக் காட்டி,

" இது இருமலுக்கு மிக நல்ல மருந்து. இதைக் கொஞ்சம் சாப்பிட்டால் இருமல் உபத்திரவம் உடனே குறையும்," என்று மருந்தை நீட்டினாள் மங்களம்.

அதை வாங்கி அந்த மருந்தின் பெயரைப் பார்த்து விட்டுக் கிழவர்,

" என்னுடைய இளைப்பும் இருமலும் இந்த மருந்துக் கெல்லாம் அசையக்கூடியதல்ல. என்ன செய்வது? பட வேண்டியது பட்டுத்தானே தீரவேண்டும். இருந்தாலும் உங்களுடைய அன்புக்காகக் குடித்துப் பார்க்கிறேன் " என்று அதில் குறிப்பிட்ட அளவு குடித்தார். சற்று நேரத்தில் இருமலின் வேகம் குறைந்தது போல் காணப் பட்டது.

இருமல் குறைந்தும் இளைப்பு குறையவில்லை. கிழவர் தலையைக் கவிழ்த்துக் கொண்டு விரைவாக மூச்சு விட்டுக் கொண்டிந்தார். மங்களத்துக்கு அவரைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. அவருடைய நரைத்த தாடி அவர் வயிற்றை முட்டிக்கொண்டிருந்தது. தலை யிலிருந்த சடைகள் முகத்தை மறைத்துக் கொண்டு, அவர் மூச்சு வாங்குவதற்கேற்ப ஆடிக்கொண்டிருந்தன. சிறிது நேரம் சென்றபின் மங்களம்,

" ஐயா, சிரமமாக இருந்தால் படுத்துக்கொள்ளுங் கள்" என்றாள். கிழவர் தலையைக் கவிழ்த்தபடியே மெதுவாக,

" பயப்பட வேண்டாம் அம்மா. இளைப்பென்றால் இப்படித்தான். கொஞ்சம் பொறுங்கள். உங்கள் கண வரைப் பற்றி ஆருடம் சொல்லுகிறேன்." என்றார்.

" சூடாகக் கொஞ்சம் பால் குடியுங்கள். பிறகு ஆருடம் சொல்லலாம் " என்றாள் மங்களம்.

" இப்போது வேண்டாம். உங்கள் கணவருடைய நிலைமையைத் தெரியச்செய்து ஏக்கத்தைப் போக்கிய பிறகு பால் குடிக்கிறேன். சரி, இப்போது ஆருடம் சொல்லுகிறேன். உங்கள் மனதில் உடனே உதிக்கின்ற ஒரு புஷ்பத்தின் பெயரைச் சொல்லுங்கள் " என்றார் கிழவர்.

" ரோஜாப்பூ " என்று பளிச்சென்று சொன்னாள்.

" பேஷ்! வெற்றி நிச்சயம். உங்கள் கணவருக் கிருந்த அபாயம் நீங்கிவிட்டது. சந்தேகம் வேண்டாம் " என்றார் கிழவர்.

" அவர் எப்போது இங்கே வருவார்?" என்றாள்.

" அவர் எப்போது வருவார் என்பதைப் பற்றி வெறும் ஆருடத்தில் சொல்லிவிட முடியாது. ஜாதகம் பார்த்தால் நிச்சயமாகச் சொல்லமுடியும். ரேகை பார்த்தும் ஏறத்தாழச் சரியாகச் சொல்லலாம். எங்கே உங்கள் இடது கையை நீட்டுங்கள் " என்றார் கிழவர். உடனே மங்களம் அவருக்கு அருகில் வந்து முன்னால் உட்கார்ந்து தன்னுடைய இடது கரத்தை நீட்டினாள். கையைத் தீண்டக் கூசிக்கொண்டே வெகு நேரம் ரேகைகளை ஆராய்ந்தார் பண்டாரம்.

" அம்மா, வருத்தப்படவேண்டாம். உங்கள் கணவன் இங்கு எப்போது வருவார் என்றதைப் பற்றிய ஒரு ரகசி

யத்தை உங்களிடம் மட்டுந்தான் சொல்லவேண்டும். அது மற்றவர்களுடைய காதில் விழுந்துவிடக் கூடாது. யாராவது உங்கள் வேலைக்காரர்கள் நான் சொல்லப் போவதைக் கேட்டுவிடக்கூடியபடி இந்த அறைக்குப் பக்கத்திலிருக்கிறார்களா?'' என்று குசுகுசு வென்று கேட்டார் கிழவர்.

''இந்த அறைக்குப் பக்கத்தில் யாரும் இருக்க மாட்டார்கள். இருங்கள். எதற்கும் போய்ப் பார்த்துவிடு கிறேன்'' என்று மங்களம் அறையைவிட்டுச் சிறிது நேரம் வெளியே போய்விட்டுத் திரும்பி வந்து, கதவை மூடிவிட்டு மறுபடியும் கிழவருக்கு அருகில் அமர்ந்து,

''யாரும் இல்லை; சொல்லுங்கள்'' என்றாள்.

''கையை நீட்டு'' என்றார் கிழவர்.

மங்களம் மறுபடியும் தன் இடது கையை நீட்டினாள். கிழவர் மறுபடியும் ரேகைகளைப் பார்த்து,

''அம்மா உங்கள் கணவன் உயிர் தப்பியது முழுதும் இந்த ரேகைகளின் பலத்தால்தான். இப்படிப்பட்ட ரேகைகள் பெண்களுடைய இடது கரத்தில் அமைவது மிகவும் அபூர்வம். கோடியில் ஒருவருக்குக்கூட இப்படி அமையாது. இப்படிப்பட்ட அதிருஷ்டக்கார அழகியின் கரம் பற்றிய ஆடவனே பெரும்பாக்கியசாலி,'' என்று சொல்லிக்கொண்டே அந்தக் கரத்தைப் பிடித்து முத்த மிட்டார் கிழவர்.

''சீ! இதென்ன விளையாட்டு'' என்று மங்களம் கையைப் பிடுங்கிக்கொண்டு எட்டி உட்கார்ந்து அந்தக் கிழவனை எரித்து விடுவது போல் பார்த்து,

''இதற்காகத்தான் பக்கத்தில் யாரும் வேலைக்காரர் கள் இருக்கக் கூடாது என்றீர்களோ? ரொம்ப நன்று யிருக்கிறது உங்கள் ஜோசியம்'' என்றாள்.

''ஏனம்மா அவ்வளவு கோபம் உனக்கு? நான் என்ன செய்துவிட்டேன்? நீ சிறு பெண்; நான் ஒரு கிழவன். உன் இடது கையில் முத்தமிட்டதில் என்ன முழுகிப் போய் விட்டது? இதோ நான் என் இடது கையை நீட்டுகிறேன். நீ வேண்டுமானால் என் கைரேகைகளைப் பாரேன்'' என்று அந்தக் கிழவர் தன் னுடைய சட்டையைச் சுருட்டிக்கொண்டு இடது கையை நீட்டினார்.

அடடா! அந்த இடது கையில் சிறு வயதில் குறத்தி யர்கள் சித்திர எழுத்துக்களால் பச்சை குத்திய 'மங்களம்' என்ற பெயரைக் கண்டாள் மங்களம். எட்டியிருந்து பார்த்தவள் கிட்டவந்து உற்றுப்பார்த்தாள். ஆம், அதே கைதான். சந்தேகமில்லை.

''அத்தான்! நீங்களா! வந்துவிட்டீர்களா!'' என்று, மகிழ்ச்சியின் வேகத்தால் தாக்குண்ட மங்களம் புயற் காற்றால் தாக்குண்ட மரம்போல் சங்கரலிங்க னுடைய மடிமீது சாய்ந்து மயக்கமடைந்துவிட்டாள்.

வேடம் கலைந்த பின்

மடிமீது சாய்ந்த மனைவியைச் சங்கரன் வாரியெடுத்து மார்போடணைத்து முதுகைத் தடவிக் கொடுத்துத் தண்ணீரைத் தெளித்து முகத்தைத் துடைத்தான்.

சிறிது நேரத்தில் மயக்கம் தெளிந்துவிட்ட மங்களம் எழுந்து உட்கார்ந்து, துன்பம் கலந்த தொனியில் "அத்தான்! இன்னும் உங்களுக்கு அபாயம் நீங்கவில்லையா? போலீசாருக்குப் பயந்து இன்னும் மாறுவேடத்தில்தான் இருக்கிறீர்களா? ஐயோ! என்ன விகாரமான வேடம்! அபாயம் நீங்கிவிட்டது என்று சொன்னீர்களே? அது எனக்காகச் சொன்னதுதானே? சொல்லுங்கள். எனக்குப் பயமாகவே இருக்கிறது. இவ்வளவு பக்கத்தில் நீங்கள் இருந்தாலும் இன்னும் எனக்கு எட்டாத தூரத்திலிருப்பதாகவே என் மனம் நடுங்குகின்றது. உண்மையைச் சொல்லுங்கள் அத்தான்!" என்றாள். தேனினும் இனிய அவளுடைய குரலைக் கேட்டு நெடு நாளாகிவிட்ட சங்கரன் அவளை மார்போடணைத்து,

"கண்மணீ! நீ இப்படிக் கலங்குவதற்குக் காரணம் இந்த என்னுடைய விபரீதமான வேடம்தான். என் நிலைமையைப் பற்றி விவரமாகச் சொல்லுகிறேன். முதலில் நான் முழுகிக் குளித்து இந்த வேடத்தைக் கலைக்கவேண்டும். தாடி நரைத்திருப்பது தண்ணீரிற் குழைத்த சாயத்தால். தலையில் சடை விழுந்திருப்பது வெறும் கோந்துப் பசையினால். நீ உடனே சென்று பணிப் பெண்களை எழுப்பி நான் ஸ்நானம் செய்வதற்கு வெந்நீர் கொண்டுவந்து கொட்டச் செய். அம்மாளுக்கு

நான் வந்திருப்பதை இப்போது சொல்லிவிட வேண்டாம். காலையில் அவர்களைப் பார்ப்போம்" என்றான்.

துள்ளியெழுந்தாள் மங்களம். விரைந்து சென்றாள். வெந்நீர் அடுப்பைத் தானே மூட்டினாள். அதன்மீதிருந்த அண்டாவில் ஏற்கெனவே வேலைக்காரர்கள் காலையில் காய வைப்பதற்காகத் தண்ணீர் நிரப்பியிருந்தார்கள். வெகு சீக்கிரம் வெந்நீர் தயாராகிவிட்டது. அதைக் குடங்களிற் கொண்டுபோய்க் கொட்டுவதற்குப் பணிப் பெண்களையாவது வேலைக்காரரையாவது எழுப்ப நினைத்தாள். ஆனால் தன் கணவருடைய மாறுவேடத்தையும் புதுப் போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்து போனதையும் சேர்த்துப் பார்த்தால் இன்னும் இவர் போலீசுக்குப் பயந்து மறைந்திருப்பதாகவே தெரிகிறது. அதனால் இந்தப் பண்டாரம் யாரென்பது வீட்டு வேலைக்காரர்களுக்குக் கூடத் தெரியாதிருப்பது நல்லதென்று தீர்மானித்து, வெந்நீரை 'பாத் ரூமுக்குக்' கொண்டு போகாமல் அங்கேயே அவர் ஸ்நானம் செய்ய ஏற்பாடு செய்தாள். வெந்நீர் அடுப்புக்குப் பக்கத்திலேயே குளிக்கவும் இடமிருந்தது. ஆனால் 'பாத்ரூமி'ல் உள்ள வசதிகள் இங்கில்லை. ஆனாலும் சோப்பு, சீயக்காய்த்தூள், வாசனாமாவு, தைலம், துடைத்துக் கொள்ளத் துண்டு, மாற்று உடைகள் முதலிய எல்லாவற்றையும் வெந்நீர் அறைக்கே கொண்டுவந்து வைத்துவிட்டுக் கணவனை ஸ்நானத்துக்கு அழைத்தாள். காவியுடைகளைக் களைந்து விட்டு, இடையில் ஒரு துண்டைக் கட்டிக்கொண்டு காத்திருந்த சங்கரனும் உடனே குளிக்கப் போனான்.

"தலையிலுள்ள சடைகளை வெந்நீர் விட்டு நான் அலுங்காமல் பிரித்து விடுகிறேன்" என்றாள் மங்களம்.

"வேண்டாம். அது ஒன்றும் சிரமமில்லை. இரண்டு செம்பு வெந்நீரை விட்டுக் கசக்கினால் ஒரு நிமிஷத்தில்

சரியாகிவிடும். தாடியிலுள்ள வெளுப்பும் வெந்நீரைக் கண்டவுடன் கரைந்துவிடக் கூடியது. நானே பார்த்துக் கொள்ளுகிறேன். நீ போய் அம்மாளை எழுப்பிவிடாமல் கூடாகச் சில தோசைகளும் நல்ல காப்பியும் தயார் செய். பசிக்கிறது. மத்தியானம் ஓட்டலில் சாப்பிட்டது,'' என்றான்.

மங்களம் ஆகாரம் தயார் செய்யப் போய்விட்டாள். சங்கரன் நிதானமாகக் குளித்து முழுகிவிட்டு மனைவி வைத்திருந்த மாற்று உடைகளைத் தரித்துக்கொண்டு, முன்னிருந்த அறைக்கு வந்து நிலைக்கண்ணாடிக்கு முன்னால் நின்று, மங்களம் அங்கே வைத்திருந்த வாசனைத் தைலத்தைத் தடவித் தலைமயிரைச் சீவித் தாடியை நீவிக்கொண்டு மனைவியின் வருகைக்காகக் காத்திருந்தான். சிறிது நேரத்தில் மங்களம் ஒரு தட்டு நிறையத் தோசைகளையும் பழங்களையும் கொண்டுவந்து வைத்து விட்டு,

''அத்தான்! இப்போது உங்களைப் பார்த்தால் ஒரு இளந் தவசி போலவே எவ்வளவு அழகாக இருக்கிறது!'' என்றாள்.

''ஆம். நீயும் நானும் தவம்தானே செய்துகொண்டிருக்கிறோம் உன் தாலிக்காக?'' என்றான்.

''சரி, இதைச் சாப்பிடுங்கள். 'டிகாக்ஷன்' இறங்கியிருக்கும். காப்பி கொண்டு வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு மறுபடியும் பின்கட்டுக்குப் போனாள். தூங்குகின்ற யாரையும் எழுப்பிவிடக் கூடாது என்ற பயத்தால் வெகு நிதானமாய் நடந்து ஓசை செய்யாமல் காரியம் செய்யவேண்டியிருந்தது. அதனால் மணி பன்னிரண்டுக்கு மேல் ஆகிவிட்டது. சங்கரன் உணவு கொள்ள உட்கார்ந்தான். மங்களமும் காய்ச்சிய பாலையும் காப்பி 'டிகாக்ஷனை'யும் கொண்டுவந்து வைத்து விட்டு அவனருகில் அமர்ந்து பரிமாறத் தொடங்கினாள்.

வீதிக் கதவை யாரோ தட்டின ஓசை கேட்டது. அந்நேரத்தில் வந்து கதவைத் தட்டுவது யாராக இருக்கும் என்று மங்களம் திகைப்படைந்தாள். போய்ப் பார்க்க எழுந்தாள். அதற்குள் கதவுக்கருகில் வழக்கமாகப் படுத்துக்கொள்ளும் வேலைக்காரன் கதவைத் திறந்துவிட்டான். கதவு திறக்கப்பட்ட சத்தமும் காதில் விழுந்தது. மங்களத்துக்கு அவளையுமறியாமல் ஒரு அச்சமுண்டாகி விட்டது. வருவது யாரென்று பார்க்க அறையைவிட்டு விரைந்து சென்றாள்.

மங்களம் நினைத்தபடியே அப்போது வீட்டுக்குள் வந்தது அன்று மத்தியானம் வந்திருந்த புதுப் போலீஸ் இன்ஸ்பெக்டர்தான். இப்போது அவருடன் ஒரு ஜவானும் வந்திருந்தான். அவர்களைப் பார்த்ததும் மங்களாம்பாளின் உள்ளமும் உடலும் நடுங்கிவிட்டன.

''அம்மா, ஷங்கர்ஜி இங்கே வந்திருப்பதாகத் தெரிகிறது. எங்கே அவர்?'' என்றார் இன்ஸ்பெக்டர்.

மங்களம் பதில் சொல்லாமல் விழித்தாள்.

''ரங்கூன் சிறையிலிருந்து அவர் ஓடிவந்து ஒரு வருஷம் ஆகப் போகிறது. அவருடன் ஓடிவந்த மற்ற இருவரையும் போலீசார் பிடித்துவிட்டார்கள். இவர் மட்டும் இருக்குமிடம் கண்டுபிடிக்க முடியாமலேயே இது வரைக்கும் இருந்து வந்தார். எத்தனை நாளைக்குப் போலீசை ஏமாற்றமுடியும்?'' என்றார் இன்ஸ்பெக்டர் இங்கிலீஷில். மங்களம் பதில் பேசாமல் நடுங்கினாள்.

''அம்மா! தயவு செய்து அவரை எங்களிடம் ஒப்படைத்து விடுங்கள்.''

''ஐயா! ஐயா!.....'' என்று மங்களம் வாய் குளறினாள்.

"அம்மா! நானென்ன செய்யமுடியும்? என் கடமையை நான் செய்யவேண்டும். தயவுசெய்து ஓசையில்லாமல் அவரை எங்களுடன் அனுப்பிவிடுங்கள். இல்லையானால் வீடு முழுவதையும் சோதனை போட வேண்டி வரும்."

"அவரை என்ன செய்யப் போகிறீர்கள்?" என்ருள் மங்களம்.

"அவரைக் கைது செய்யப் போகிறேம்."

"கைது செய்து?"

"கைது செய்து டில்லிக்குக் கொண்டு போகப் போகிறேம்."

"டில்லிக்குக் கொண்டு போய்?"

"விசாரணை நடக்கும். தண்டனை நிறைவேறும்."

"ஐயோ! தண்டனை நிறைவேறுமா? அவருக்கிருந்த அபாயம் நீங்கிவிட்டதாகவும் சொன்னீரே! ஐயா! ஐயா! தயவு செய்யுங்கள். என் குலை நடுங்குகிறது....."

"ஆமாம் அம்மா, அவர் அபாயம் நீங்கி, நிச்சயமாக உயிர் தப்பிவிட்டதாகத்தான் இருந்தது. ஆனால் அதை அவரே கெடுத்துக் கொண்டாரே" என்ருர் இன்ஸ்பெக்டர்.

"அப்படியா! அதெப்படி?"

"எப்படியா? சொல்லுகிறேன். நீங்கள் உங்கள் கணவருக்குக் கருணை காட்டவேண்டுமென்று விண்ணப்பம் செய்து கொண்டீர்களல்லவா?"

"ஆமாம்."

"அந்த விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டு சேஞதிபதியவர்கள் 'ஷங்கர்ஜி உடனே மறைந்திருப்பதை விட்டு வந்து சரணடைந்து விட்டால் மரண தண்டனையை மாற்றிவிடுவது என்று தீர்மானித்திருந்தார்.

அது ஷங்கர்ஜிக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் ஷங்கர்ஜி அதன்படி சேஞதிபதியிடம் சரணடையாமல் மறைந்திருந்த இடத்திலிருந்து இங்கே ஓடி வந்துவிட்டாரே! அதற்கு யார் என்ன செய்வது?"

"ஆ! அப்படியா அது? ஐயா, உங்களை மிகவும் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன். இதற்கு ஒரு வழி செய்யுங்கள். என் கணவர் உங்களுடன் டில்லிக்கு வந்து சேஞதிபதியிடம் சரணடைந்துவிட்டால் மரண தண்டனை மாறிவிடுமல்லவா ?"

"அவர் வந்தால் மட்டும் போதாது. நீங்களும் எங்களுடன் டில்லிக்கு வந்து நான் சொல்லுகிறபடி கேட்டுக் கொண்டால் மரணதண்டனை மாறலாம்."

"சரி நானும் வருகிறேன். நீங்கள் சொல்லுகிறபடி செய்கிறேன்."

"அத்துடன் உங்கள் மாமியாரும் மாமனரும் கூட டில்லிக்கு வரவேண்டி யிருக்கும்."

"ஐயோ! அவர்கள் எதற்காக? தன் மகனுக்கு இன்னும் அபாயம் நீங்கவில்லை என்பதை அறிந்தாலே மாமியவர்கள் மனமுடைந்து போவார்களே! அவர்களுக்கே அபாயம் நேர்ந்துவிடுமே! ஐயா! தயவு செய்து என் மாமியைத் தொந்தரவு செய்யவேண்டாம். நான் என் கணவருடன் எங்கு வேண்டுமானாலும் வருகிறேன். யாரை வேண்டுமானாலும் நீங்கள் சொல்லுகிறபடி கேட்டுக் கொள்ளுகிறேன். என்னையும் வேண்டுமானால் சிறையிலிடுங்கள். என் மாமியவர்களை மட்டும் டில்லிக்கு இழுக்கவேண்டாம்."

"அம்மா! நீங்களும் உங்கள் மாமியாரும் மாமனரும் ஷங்கர்ஜியுடன் டில்லிக்கு வந்தேயாக வேண்டுமென்று 'வாரண்ட்' கொண்டு வந்திருக்கிறேம். இதோ பாருங்

கள்'' என்று உறையிட்ட ஒரு கடிதத்தை இன்ஸ்பெக்டர் மங்களத்திடம் நீட்டினர்.

''ஐயையோ! அத்தைக்கு 'வாரண்டா?' என்ன அநியாயம்!'' என்று அலறிவிட்டாள், மங்களம்.

களுக்கென்று சிரித்துவிட்டான், ஜவான்.

இன்ஸ்பெக்டரும் சிரித்துவிட்டார்.

மங்களம் மலைத்தாள். அறைக்குள்ளிருந்த சங்கர லிங்கனும் சிரித்துக் கொண்டே வெளியே வந்து,

''மங்களம்! பயப்படாதே. நீ விருதூரில் நடத்திய சிவன் கோயில் சேவையினால் கிடைத்த மகத்தான வரப் பிரசாதத்தின் இன்பத்தை அதிகப்படுத்தவே இந்த அவஸ்தையான தமாஷ். இது நாங்கள் திட்டமிட்டு நடித்த ஒரு சிறு நாடகம். அதற்குப் பொறுப்பாளி நான் தான். எல்லோரும் அறைக்குள் வாருங்கள். விளக்கு கின்றேன்'' என்றான்.

எல்லாரும் அறைக்குள் சென்றார்கள். மிகப் பிரகாச முள்ள இன்னொரு மின்சார விளக்கு ஏற்றப்பட்டது.

சங்கரலிங்கன் மங்களத்துக்கு இன்ஸ்பெக்டரைச் சுட்டிக் காட்டி, ''இவருடைய பெயர் 'ஜெயராம்.' இவர் உண்மையாகவே ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர்தான். ஆனால் இங்கே அல்ல: டில்லியிலே. இந்தப் போலீஸ் உடையும் அவருடைய சொந்த உடைதான். வேடமல்ல. இவர், உனக்கு மாங்கல்ய பிச்சை கிடைக்கச் செய்த மானிடத் தெய்வம். எனது ஆருயிர் அன்பன் ஜெயபால் மணந்து கொள்ளப் போகிற 'நிர்மலா' என்னும் பெண் மணியின் மூத்த சகோதரர்.''

மங்களம் மகிழ்ச்சி பொங்கும் பார்வையுடன் ஜெய ராமை வணங்கினாள்.

சங்கரன், ஜவானைச் சுட்டிக் காட்டி,

''அவரை நீ முன்னே ஒரு முறை பார்த்திருக்கிறாய். ஆனால், அப்போது அவருக்கு மீசை இருந்தது. அதை இந்த ஒரு நாள் கூத்துக்காகச் சிரைத்து விட்டார். அவர் தான் விருதூரில் உங்கள் வீட்டுக்கு எதிர் வீட்டுக்கார ரான குப்புசாமியின் மைத்துனர் குமரேசன்.....''

''ஆ! குமரேசனா! மீசையில்லாமல் அடையாளமே தெரியவில்லையே!'' என்று குமரேசனைக் கும்பிட்டாள்.

''அப்பா ஊரில் இல்லையென்பதனால்தான் இந்த நாடகம் நடத்தினோம். அப்பா இருக்கிறாரா இல்லையா என்பதை அறிந்து போகத்தான் மத்தியானம் ஜெயராம் இங்கே அனுப்பப்பட்டார். நாங்கள் நேற்றைக்கு முன் தினமே இவ்வூருக்கு வந்துவிட்டோம். நாடகம் வெற்றி கரமாக முடிந்துவிட்டது. மங்களம்! நம்மைப் பிடித் திருந்த பீடைகளெல்லாம் விட்டொழிந்தன. மகாத்மா காந்தியவர்களின் ஒப்பரிய முயற்சியினால் எனக்குப் பரிபூரண மன்னிப்புக் கிடைத்து விட்டது. காந்தி மகானை வாழ்த்திக் கை கூப்பி வணங்குவோம்.''

எல்லாரும் வணங்கினார்கள். மங்களம் ஏதோ கேட்க வாயெடுத்தாள். அவளைப் பொறுக்கச் சொல்லி,

''அந்த விவரங்களைப் பின்னால் சொல்லுகின்றேன். உடனே சொல்ல வேண்டியதைச் சொல்லி விடுகிறேன். ராணுவ தண்டனை ரத்தாகி விட்டது. போலீஸ்காரர்கள் இனி என்னைத் தொடர மாட்டார்கள். நாம் நிம்மதியாக வாழலாம்.....

''எனக்கிருந்த அபாயம் நீங்குகிற வரைக்கும் திரு மணம் செய்து கொள்வதில்லை என்ற விரதத்துடன், எனக் காக அரும்பாடுபட்ட ஜெயபாலின் திருமணம் பதினைந்து நாட்களுக்கு முன்னாலேயே நடந்திருக்க வேண்டும். ஆனால், அந்தத் திருமணத்துக்கு அம்மாவும், அப்பாவும், நீயும் வரவேண்டுமென்றே நிச்சயதார்த்தம் செய்யப்பட்

டிருந்த முகூர்த்தம் நிறுத்தி வைக்கப்பட்டது. திருமணத்தில் நீ விசேஷ விருந்தாளியாகத் திகழ வேண்டுமென்பது ஜெயபாலுக்கு மட்டுமல்ல, நிர்மலாவுக்கும் அளவற்ற ஆசை. அப்பாவும் அம்மாவும் நீயும் திருமணத்துக்கு வரவேண்டும் என்ற அழைப்புத்தான் அந்த 'வாரண்ட்.' அது ஜெயபால் அப்பாவுக்கு எழுதியிருக்கும் கடிதம். சரி, வெகு நேரமாகி விட்டது. எனக்கும் பசி. இப் போதைக்கு இவ்வளவு போதும். மற்றது நாளைப் பேசிக் கொள்வோம். நீ போய் அம்மாவை எழுப்பி விடாமல் இவர்களுக்கும் தோசை காப்பி கொண்டு வா'' என்றான் சங்கரன்.

''எங்களுக்கு வேண்டாம். நாங்கள் ஓட்டலில் நிறையச் சோறு தின்று விட்டோம்'' என்றான் குமரேசன். ஜெயராமுக்குத் தமிழ் புரியாது. பேசாமல் உட்கார்ந் திருந்த அவன் மங்களாம்பாளைப் பார்த்து,

''என்னுடைய தங்கை நிர்மலா உங்களைக் கட்டாய மாக அழைத்து வர வேண்டுமென்றுதான் என்னை அனுப்பினாள்'' என்றான் ஆங்கிலத்தில்.

''கட்டாயமாக நானும் வருகிறேன்'' என்றாள் மங்களம்.

சங்கரலிங்கன் ஆகாரம் அருந்தினான். 'டிகாக்ஷ்னும்' பாலும் நிறைய இருந்ததால், மங்களம் மூவருக்கும் காப்பி கொடுத்தாள்.

அந்த அறையிலேயே அவர்கள் மூவரும் படுத்துக் கொண்டார்கள்.

ஏறத்தாழ இரண்டு மணிக்கு மங்களம் தன் மாமியார் அறைக்குச் சென்று படுத்தாள். மகனுடைய ஏக்கத்தால் அன்னபூரணியம்மாளுக்கு நல்ல தூக்கம் வருவதே யில்லை. மங்களம் நெடுநேரம் சென்று படுக்க வந்தது அன்னபூரணியம்மாளுக்குத் தெரியும். ஆனால், மருமகள்

என்ன செய்தாலும் மாமியார், ஏனென்று கேட்பதில்லை.

பொழுது விடிந்தது. எல்லையற்ற மகிழ்ச்சியினால் தூக்கம் வராமல் துடித்துக் கொண்டிருந்த மங்களம் வெகு சீக்கிரமாகவே எழுந்து, வேலைக்காரர்களை எழுப்பி, ஒவ் வொருவருக்கும் ஒரு வேலை ஏவினாள். என்றுமில்லாத பரபரப்பும் சுறுசுறுப்பும் அந்த வீடு முழுதும் பரவியது. தினந்தினம் வெந்நீர் தயாரானதும், முதலில் மாமியாரை அழைத்துவந்து, அவரைக் குளிக்கச் செய்துவிட்டு, அதன் பிறகுதான் மங்களம் நீராடுவது வழக்கம். இன்றைக்கோ வெந்நீருக்காகக் காத்திராமல், குளிர் நீரிலேயே மாமிக்கு முன் நீராடிவிட்டு, மாடியிலுள்ள தன்னுடைய அறைக் குச் சென்றாள். வெகு நாளாகப் பூட்டிக் கிடந்த தன் பெட்டிகளையும் அலமாரிகளையும் திறந்து, அது நாள் வரையிலும் புறக்கணிக்கப்பட்டிருந்த ஆடைகளையும் ஆபரணங்களையும் ஆராய்ந்தாள்.

கணவனைப் பிரிந்தபின் கழற்றி வைத்துவிட்ட நகைகளை அணிந்து கொண்டாள். தன் திருமண காலத் தில் மணவறையில் தாலி கட்டி மாலைசூட்டிய தருணத்தில் தரித்திருந்த புடவையையும், ரவிக்கையையும், தேடி யெடுத்துப் புனைந்து கொண்டாள். வாசனைத் தைலம் தடவிக் கூந்தலை வாரிப் பின்னிக் கொண்டாள். நிலைக் கண்ணாடியின் முன் நின்று நெற்றியில் திலக மிட்டாள். தன் முழு உருவத்தையும் கண்ணாடியில் ஆராய்ந்து அலங்காரத்தைச் சரி பார்த்துக் கொண்டாள். கீழே ஓடினாள். அதிகாலையிலேயே பணிப்பெண் ஒருத்தியிடம் உத்திரவிட்டிருந்தபடி, அவள் தயார் செய்திருந்த பூச் செண்டுகளில் ஒன்றைப் பொறுக்கியெடுத்துத் தலையிற் சூடிக்கொண்டாள். பூசை அறைக்குட் சென்று பார்வதி தோத்திரத்தைப் பாராயணம் செய்து, கற்பூரம் காட்டி, முருகனை வணங்கிவிட்டு, அன்னபூரணியம்மாளிருக்கும்

அறைக்குப் போனுள். இது நாள் வரையிலும் இல்லாத அவளுடைய அலங்காரங்களைக் கண்ட வேலைக்காரர்கள் ஆச்சரியப்பட்டார்கள். இரவில் வெகு நேரம் வரை தூக்கம் வராமல் விடியற்காலையில் கண்ணயர்ந்த அன்ன பூரணியம்மாள் அப்போதுதான் கண் விழித்திருந்தாள். எப்போது கண் விழித்தாலும், ஒவ்வொரு நாளும், காலை யில் மருமகள் வந்து அழைத்த பிறகுதான் குளிக்கப் போவது வழக்கம்.

மருமகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்த மாமியின் அறைக்குள் மங்களாம்பாள் மணக் கோலத்தோடு புகுந் தாள்.

யாரோ ஒரு அன்னியப் பெண் வருவதாக எண்ணிய அன்னபூரணியம்மாள் அடையாளம் தெரியாமல் சிறிது நேரம் திகைத்து விட்டாள். மாமியின் அருகில் வந்த மங்களம்,

" அத்தை! கொஞ்சம் எழுந்து நில்லுங்கள் " என்ருள்.

குரலைக் கேட்டு மருமகள்தான் என்று கண்ட மாமியார் ஏனென்றும் கேட்காமல் எந்திரம் போல் எழுந்து நின்ருள். மங்களம் மாமியாரின் பாதங்களில் விழுத்து நமஸ்கரித்தாள்.

மருமகளை வாரியெடுத்து அணைத்துக் கொண்டு "என்னடி என் கண்ணே! என்ன விசேஷம் ? இன்றைக் கென்ன இவ்வளவு அலங்காரம்?" என்ருள்.

"அத்தை! அத்தை! அத்தை! நம்முடைய துன்பங்க ளெல்லாம் தொலைந்து விட்டன. பார்வதி தேவி நாம் கோரிய வரத்தைக் கொடுத்துவிட்டாள்."

"அப்படியா! உனக்கு மாங்கல்ய பிச்சை தந்துவிட் டாளா? மரண தண்டனை மாறிவிட்டதா? யார் சொன் னது? எப்படித் தெரிந்தது? தந்தி வந்ததா?"

"அத்தை! மரண தண்டனை மாறிவிட்டது மட்டு மல்ல. அத்தானுக்குப் பரிபூரண மன்னிப்புக் கிடைத்து விட்டது. அத்தானே வந்துவிட்டார். அவரே சொன்னது."

"சங்கரனு! வந்துவிட்டானு! எப்போது வந்தான்? எங்கே அவன் ? மன்னிப்பே கிடைத்து விட்டதா ? அவனே சொன்னதா ?" என்று உடனே போய் மகனைக் காணத் துடித்தாள் மாதா.

"அத்தை! கொஞ்சம் பொறுங்கள். அவருடன் இரண்டு நண்பர்களும் வந்திருக்கிறார்கள். அதற்குள் ஸ்நானம் செய்துவிடுங்கள். நான் அத்தானை இங்கே அழைத்து வருகிறேன்" என்ருள் மங்களம்.

"அவர்கள் எப்போது வந்தார்கள்?"

"நேற்றிரவு பன்னிரண்டு மணிக்கு வந்தார்கள். அந்நேரத்தில் உங்கள் தூக்கத்தைக் கெடுத்து விடக் கூடாது என்று அத்தான் கண்டிப்பான உத்தரவிட்டார். அதனல் உங்களுக்குச் சொல்லாமல் நானே தோசையும் காப்பியும் தயார் செய்து கொடுத்தேன்."

"அடி என் கண்ணே! அதுதான் இரண்டு மணி வரைக்கும் நீ படுக்க வரவில்லையா! சரி, அவர்களெல் லாம் குளித்துவிட்டார்களா?"

"அவர்கள் இன்னும் தூங்கிக் கொண்டிருப்பார்கள். முதலில் நீங்கள் குளித்துவிடுங்கள். மற்றதெல்லாம் நான் கவனித்துக் கொள்ளுகிறேன்," என்ருள் மங்களம்.

அன்னபூரணியம்மாள் ஸ்நானம் செய்யப் போனுள். மங்களம் முன்கட்டுக்கு விரைந்தாள். அவளைப் போலவே இரவு முழுதும் தூக்கம் வராமல் துடித்துக்கொண்டிருந்த சங்கரன், வெகு நேரத்திலேயே படுக்கையை விட் டெழுந்து அவளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். குமரேசனும், ஜெயராமனும் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

அறையின் கதவு தட்டப்பட்டதைக் கேட்டு சங்கரன் எழுந்து சென்று கதவைத் திறந்தான்.

மங்களம் மணப் பெண் போல் நின்று கொண்டிருந் தாள். தூங்குகின்ற நண்பர்களை எழுப்பிவிடக் கூடா தென்று அறையின் கதவை மூடிக்கொண்டே சங்கரன் வெளியே வந்தான். மங்களம் அவனுக்கு நமஸ்காரம் செய்து எழுந்தாள். அவளுடைய அலங்காரத்தையும் அணிந்திருந்த திருமணப் புடவையையும் கண் களிக்கப் பார்த்துவிட்டு, சங்கரன் அவளுடைய முகத்துக்கருகில் தன் முகத்தை நீட்டி, ரகசியமாக "கண்ணே! நமக்கு இன்று கலியாணமா?" என்றான்.

"ஆமாம், அதற்காகத்தான் குளித்து முழுகி ஆசா ரத்தோடிருக்கிறேன். நீங்கள் இன்னும் பல் கூடத் தேய்க்கவில்லையே? நீங்களும் குளித்துவிட்டு வந்து கலியாணச் சடங்குகள் முடிகிற வரைக்கும் என்னைத் தொட்டுவிடக் கூடாது" என்றாள்.

"நான்தான் நேற்றிரவே குளித்து முழுகிவிட் டேனே? நானும் ஆசாரமாகத்தான் இருக்கிறேன்; ஆனாலும் உன் விருப்பத்துக்கு விரோதமாக நான் உன்னைத் தொட்டுவிடப் போவதில்லை. நீ எண்ணியிருக் கிற கல்யாணச் சடங்குகள் முடியட்டும். இப்போது நடக்கவேண்டிய சடங்கு என்ன?" என்றான்.

"அதைச் சொல்லத்தான் வந்தேன். அத்தை உங் களைப் பார்க்கப் பறந்து தவித்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் உடனே ஸ்நானம் செய்யுங்கள். நாம் இருவரும் சேர்ந்து சென்று அவர்களை நமஸ்கரித்து ஆசி பெற வேண்டும். நான் நோற்ற நோன்பை விட அவர்கள் செய்த புண்ணியந்தான் நமக்கு இந்த நல்வாழ்வு தந்தது" என்றாள்.

அதைக் கேட்ட சங்கரன் ஆனந்தமடைந்து, "சபாஷ்! மங்களம், மிக நல்ல யோசனை. இதோ ஒரு நொடிக்குள் குளித்து விடுகிறேன். எனக்கு வெந்நீர் கூட வேண்டாம். தண்ணீரிலேயே முழுகிவிடுகிறேன். ஜெயராமும் குமரேசனும் விழிப்பதற்கு முன் அம்மாளை வணங்கி ஆசி பெறுவோம்" என்றான்.

அந்த மாளிகையில் ஆண்களுக்கென்று ஒரு ஸ்நான அறையும் பெண்களுக்கென்று ஒரு ஸ்நான அறையும் உண்டு. வெந்நீர் அறை பொது. ஸ்நான அறைகளில் குழாய்களின் வழியாக எந்த நேரத்திலும் தண்ணீர் வரும். தொட்டிகளில் நிரப்பியோ அல்லது தலைக்கு மேலிருந்து பொழியச் செய்தோ, பிறருடைய உதவியில் லாமல் யாரும் ஸ்நானம் செய்யலாம். சோப்பு, தைலம் முதலிய எல்லாம் அங்கே எப்போதும் இருக்கும்,

சங்கரன் ஸ்நானம் செய்தான். அதற்குள் மங்களம் மாடிக்குச் சென்று அவன் திருமண முகூர்த்தத்தில் அணிந்திருந்து, பிறகு மடித்து வைத்துவிட்ட உடை களைக் கொண்டுவந்து கொடுத்தாள். அந்த உடைகளைப் பற்றிய நினைப்பே சங்கரனுக்கு இல்லை. மங்களம் அவற் றைக் கொண்டு வந்த மதிநுட்பத்தை எண்ணிப் பூரித் துப் போனான். மனைவியின் மணக் கோலத்துக்கு ஒத்த படியே தன்னையும் அலங்கரித்துக் கொண்டான்.

அன்னபூரணியம்மாள் ஸ்நானத்தை முடித்துக் கொண்டு வழக்கம் போல் பூஜாக் கிருகத்துக்குச் சென்று இராமபிரானுக்கும் முருகக் கடவுளுக்கும் தூப தீபம் காட்டி, வணங்கிவிட்டுத் தன்னுடைய அறையில் மஞ்சத் தின் மீது உட்கார்ந்து கொண்டு மருமகளையும் மகனையும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

மங்களமும் சங்கரனும் வந்தார்கள்.

'அம்மா! வந்துவிட்டேன்' என்று மகிழ்ச்சி பொங்கக் கூவிக்கொண்டே சங்கரன் அன்னையிருந்த அறைக்குள் புகுந்தான். உடனே மஞ்சத்தை விட்டிறங்கி மகனை எதிர்கொள்ளத் தாவிச் சென்ற மாதா, மகனுடைய குரலில் இருந்த அடையாளத்தை அவனுடைய உருவத்தில் காணாது கலங்கினாள்.

மகனும் மருமகளும் பாதத்தில் விழுந்து பணிந்து எழுந்தார்கள். அவர்களுடைய மணக் கோலத்தின் நோக்கத்தை உணர்ந்த அன்னபூரணி மனதுக்குள்ளேயே தெய்வங்களை வணங்கித் தன்னுடைய இரண்டு கரங்களையும் இருவருடைய உச்சியிலும் வைத்து வாயார வாழ்த்தினாள். பிறகு மஞ்சத்தில் அமர்ந்து, இருவரையும் இரண்டு பக்கத்திலும் இருக்கச் செய்து, மகனைப் பார்த்து "பகவான் திருவருளால் எங்கள் வயிற்றில் பால் வார்த்து விட்டாய். இனிமேல் பயப்பட வேண்டியது ஒன்றுமில்லையே?" என்றாள்.

"அம்மா! எங்களுக்குப் பரிபூரண விடுதலை கிடைத்து விட்டது, காந்தி மகான் கருணையினால். இனித் துளி கூடப் பயமில்லை."

"மகனே! உன் தேகம் மிகவும் இளைத்திருப்பதற்குக் காரணம் இருக்கிறது. நிறமும் மங்கிப் போனதற்கு நியாயமுண்டு. ஆனால் ஏன் தாடியும் மீசையும் தலை மயிரும் இப்படிக் காடுபோல் வளர்ந்து முகத்தை மூட விட்டிருக்கிறாய்?"

"அம்மா! உங்கள் முருகனுடைய அருளால்தான் எனக்கு விடுதலை கிடைத்தது என்று எண்ணினேன். அதனால் பழநிக்குப் போய் முடி இறக்கி முருகனைச் சேவித்துவிட்டு வரத் தீர்மானித்தேன்."

"அப்படியா! மிக நல்ல யோசனை. ஆம் அவனருளால்தான் இந்தப் பாக்கியம். சரி, அப்படியே பழநிக்குப் போய் வா. யாரோ நண்பர்கள் உன்னோடு வந்திருக்கிறார்களாமே? அவர்கள் பசியோடிருப்பார்களே? காலை ஆகாரத்துக்குப் பின் மற்றதெல்லாம் பேசுவோம். உடனே போய் விருந்தினரைக் கவனி. ஸ்நானம் செய்வித்து அவர்களையும் அழைத்து வா. எல்லோரும் இங்கேயே காப்பி சாப்பிடலாம்" என்றாள்; உடனே சங்கரனும் மங்களமும் போய்விட்டார்கள். அன்னபூரணியம்மாள், அதுவரையிலும் எட்டிக்கூடப் பாராதிருந்த சமயலறைக்குள் சென்று காரியங்களைத் தானே கண்காணிக்கலானாள்.

மங்களமும் சங்கரனும் உடைகளை மாற்றிக் கொண்டார்கள். சங்கரன் முன் கட்டுக்குப் போனான். மங்களம் சமயலறைக்குள் வந்தாள்.

இதற்குள் ஜெயராமுக்கு முன்னால் விழித்தெழுந்த குமரேசன், அவர்கள் மூவரும் முந்தின இரண்டு நாளும் தங்கியிருந்த ஓட்டலுக்குப் போய் அவர்களுடைய பெட்டிகளையும் படுக்கைகளையும் கொண்டு வந்திருந்தான்.

குமரேசனும் ஜெயராமும் குளித்து உடைகளை மாற்றிக் கொண்டார்கள். சங்கரன் அவர்களை அழைத்து வந்து, அன்னைக்கு அறிமுகம் செய்து வைத்தான். அவர்கள் மூவருக்கும் அன்னபூரணியம்மாளே சிற்றுண்டிகளைப் பரிமாறினாள். மங்களம் காப்பி கொண்டு வந்தாள். அதுநாள் வரையிலும் காலையில் சிறிதளவு பாலைத் தவிர எதையும் அருந்தாதிருந்த அன்னபூரணியம்மாளும் சிற்றுண்டி அருந்தினாள்.

காலை ஆகாரம் முடிந்தபின் அங்கே களிப்பும் சிரிப்பும் கலகலத்தன. சூரியனில்லாத உலகம்போல் சங்கர

னில்லாமல் இருண்டு கிடந்த அந்த வீட்டில் சங்கரன் வந்துவிட்ட சந்தோஷம் சமுத்திரம் போல் அலை புரண்டதில் ஆச்சரியமில்லை. வெவ்வேறு விஷயங்களைப் பற்றி எல்லோரும் வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். அதன் பிறகு அன்னையின் விருப்பத்திற்கிணங்கி, சங்கரன், தான் போர்முனைக்கு அனுப்பப்பட்டதும் நேதாஜியுடன் சேர்ந்து கொண்டதும் சிறை பிடிக்கப்பட்டதும் விசாரணை நடந்ததும் மரண தண்டனை அடைந்ததும் ஆகிய நிகழ்ச்சிகளைப் பற்றிய விவரங்களை வெகு நுணுக்கமாகச் சொன்னான். மரண தண்டனைக்குப் பிறகு சேனாதிபதிக்கும் வைசிராய்க்கும் மன்னர்பிரானுக்கும் அனுப்பிக்கொண்ட 'அப்பீல்'களும் நிராகரிக்கப்பட்ட விவரங்களையும் சொன்னான். ஜெயபாலும் ஜேகப் துரையும் தனக்காகச் செய்த எல்லா முயற்சிகளையும் மிக்க நன்றியறிவோடு விவரித்தான். உடனே தான் மறைந்திருந்த வனமாளிகையைப் பற்றியும் அதில் தங்கியிருக்க உதவி செய்த பால்தேவ் என்பவரைப் பற்றியும், அந்த பால்தேவ் ஜெயபாலுக்கு உறவினர் என்பதைப் பற்றியும் பேசத் தொடங்கினான். சிறையிலிருந்து எப்படித் தப்பினான், எப்படி இந்தியாவுக்கு வந்து சேர்ந்தான் என்பதைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லை. அதைச் சொல்லாது விட்டதைப் பாராட்டுவது போல் குமரேசன் சங்கரனைப் பார்த்துக் கண்ணால் பேசிப் புன்சிரிப்புக் காட்டினான். சங்கரனும் அதை ஏற்றுக் கொண்டான்.

மகன் சொல்லுவதை வெகு ஆர்வத்தோடு கேட்டுக் கொண்டு வந்த அன்னபூரணியம்மாளுக்கு அவன் எந்த இடத்தில் எதை விட்டுவிட்டுச் சொல்லுகிறான் என்பதைப் பற்றிய சந்தேகம் எப்படி வரும்? அவளுடைய ஆவல் முழுதும் மகனுக்குப் பரிபூரண விடுதலை

கிடைத்துவிட்டது யாரால், எப்படி என்றதை அறியத் தான்.

சங்கரன் சொல்லி வந்த வரலாற்றில் தொடர்ச்சி விட்டுப் போனதை அன்னபூரணியம்மாள் கவனிக்க வில்லை யென்றாலும் மங்களாம்பாள் கண்டு கொண்டாள். அதைச் சுட்டிக் காட்ட வாயெடுத்த மங்களம் குமரேசனும் சங்கரனும் ஒருவரையொருவர் பார்த்துச் சாடையாகச் சிரித்துக் கொண்டதைக் கண்டு பேசாதிருந்து விட்டாள். இதற்கிடையில்,

"அப்பா! சங்கரா! நீ அடைந்த துன்பங்களைக் கேட்கச் சங்கடமாக இருக்கிறது. கடைசியில் யாரால் உனக்கு எப்படி விடுதலை கிடைத்தது என்ற விவரத்தை மட்டும் சொல்லு. அது போதும்" என்றாள் அன்னை.

"அந்த விவரங்கள் சங்கரனை விட எனக்கு நன்றாகத் தெரியும். சங்கரனுக்கும் நான்தான் சொன்னேன். உங்களுக்கும் நானே சொல்லுகிறேன்," என்றான் குமரேசன்.

"நீயேதான் சொல்லப்பா" என்றாள் அன்னபூரணி.

குமரேசன் சொல்லலுற்றான். (அதை நன்றாகப் புரிந்துகொள்ள, சிம்சன் துரை சிம்லாவிலிருந்து ஜெயசந்திராவுடன் டெலிபோனில் பேசியதையும் அதற்கு முன்னால் டங்கன் துரை ஷங்கர்ஜிக்குக் கருணை காட்டவே கூடாது என்று வைசிராய்க்கு எழுதி, அவரை நேரிற் கண்டு அதைப் பற்றிச் சொல்லிக் கொள்ள நாள் குறிப்பிடக் கேட்டிருந்ததையும் நாம் நினைப்பூட்டிக் கொள்ள வேண்டும்.) குமரேசன் சொன்னது:

டங்கன் துரை சிம்லாவுக்குச் சென்று வைசிராயைக் கண்டு, ஷங்கர்ஜிக்குக் கருணை காட்டும்படி சேனாதிபதி சிபார்சு செய்தால் அதை அங்கீகரித்து விடக் கூடாதென்று வெகுநேரம் விளக்கினார். மிகவும்

அனுதாபம் காட்டிக் கேட்டுக் கொண்டிருந்த வைசி ராய், எல்லாவற்றையும் ஆராய்ந்து இரண்டு நாளில் முடிவு சொல்லுவதாகச் சொன்னர். டங்கன், அந்த முடிவை அறிந்துகொண்டு போக சிம்லாவில் தங் கினர். அடுத்த நாள் மகாத்மா காந்தி சிம்லாவுக்கு வந்தார். அவர் எதற்காக வந்தாரென்ரூல், வைசிரா யுடன் பேசுவதற்காக. அதற்கு முன் சில நாட்களாக மகாத்மாவுக்கும் வைசிராய்க்கு மிடையில் கடிதப் போக்கு வரவு நடந்து கொண்டிருந்தது. எதைப் பற்றி யென் ரூல், மகாத்மா அப்போது நடத்திக் கொண்டிருந்த சத்தியாக்கிருகச் சட்டமறுப்புகளை நிறுத்தி, இந்தியாவுக் குச் சுயராஜ்யம் வழங்குவதைப் பற்றிச் சமரசப் பேச்சு கள் நடத்தவேண்டும் என்பதைப் பற்றி அதற்காக மகாத்மா வைசிராயை சந்திக்க விரும்பினர். வைசிரா யும் அதை ஏற்றுக்கொண்டு காந்தியடிகளைச் சிம்லா வுக்கு அழைத்தார். அப்படி வந்து வைசிராயுடன் நடத் திய பேச்சில் மகாத்மா அவர்கள் சமரச மனப்பான்மை உண்டாவதற்கு உதவும்படியாகச் சில நிபந்தனைகளைக் கோரினர். அந்தக் கோரிக்கைகளில் ஒன்று :—பர்மாவில் நேதாஜியுடன் சேர்ந்து இங்கிலீஷ்காரரை எதிர்த்த 'இந்திய தேசியச் சேனை'யைச் சேர்ந்த எல்லாருக்கும் பரிபூரண மன்னிப்புக் கொடுத்துவிட வேண்டும் என்பது. அதை வைசிராய் லண்டனிலுள்ள 'இந்தியா' காரியதரி சிக்குத் தெரிவித்தார். இந்தியா பற்றிய எல்லாக் காரி யங்களுக்கும் பொறுப்பாளி அந்த 'இந்தியா செக்ரட் டெரி' தான். ஆனலும் அவரும் பிரிட்டிஷ் மந்திரிசபை யோடு கலந்து எதையும் செய்யக் கட்டுப்பட்டவர். மகாத்மாவின் கோரிக்கை மந்திரி சபைக்குத் தெரிவிக்கப் பட்டது. இரண்டு மூன்று நாள் ஆலோசனை நடத்தி மகாத்மாவின் கோரிக்கைக்கு இணங்கினர்கள். அது

உடனே வைசிராய்க்குத் தெரிவிக்கப்பட்டது. சிம்சன் துரையும் அதை ரகசியமாக ஜெயசந்திராவுக்கு 'டெலி போனில்' சொன்னர். ஜெயசந்திராவும் அதை மிகவும் ரகசியமாக ஜெயபாலுக்குச் சொன்னர். ஜெயபால் உடனே எனக்கு அழைப்பு அனுப்பினர். நான் போனேன். என்னிடம் அவரும் இதை ரகசியமாகச் சொல்லி ஷங்கர்ஜிக்குத் தெரியப்படுத்த என்னை வன மாளிகைக்கு அனுப்பினர். நான்தானம்மா சங்கரலிங் கத்துக்கு இதை முதலில் சொன்னேன்" என்று நிறுத்தி, குமரேசன் பெருமகிழ்ச்சியோடு அன்னபூரணியம்மாளைப் பார்த்தான். அந்த அம்மாள்,

"நீ மகாராஜனுக நீடுழி வாழ்வாய்" என்று ஆசீர் வதித்து, ஆனந்தக் கண்ணீர் வடித்தாள்.

"அதற்குப் பின் ஒரு வாரம் சென்றுதான் வைசி ராய் அதைப் பற்றிய உத்திரவுகளைப் பிறப்பித்தார். உடனே ஜெயபால் தாமே வனமாளிகைக்குச் சென்று, சங்கரலிங்கனை டில்லிக்கு அழைத்து வந்து, தம்முடன் ஜெயசந்திரா மனையிலேயே இருக்கச் செய்தார்.

அவர் அங்கிருந்தபடியே, என்னை இங்கே அனுப்பி உங்களை யெல்லாம் ஜெயபால் - நிர்மலா திருமணத் துக்கு அழைத்துவரச் செய்ய வேண்டுமென்று ஜெயபால் சொன்னர்.

ஆனல் அம்மா! உங்கள் மகனுக்கு உடனே ஓடி வந்து உங்களைப் பார்க்க வேண்டுமென்ற ஏக்கம் அதிகம். அதனல் சங்கரலிங்கம் தாமே வந்து உங்களை யும் தகப்பனுரையும் மங்களாம்பாளையும் மாமனர் மகா தேவர் முதலானவர்களையும் பார்த்துவிட்டுத் திருமணத் துக்கும் உங்களையெல்லாம் அழைத்துக்கொண்டு வர ஆசைப்பட்டார். அதை ஜெயபால் ஏற்றுக் கொண் டார்.

சங்கரன் என்னையும் துணை வர அழைத்தார். நானும், மறுபடியும் உங்களையும் என் தாயார் தங்கைகள் முதலானவர்களையும் காணும் ஆசையால் உடனே சம்மதித்தேன். நெடு நாட்களாகத் தமிழ்நாட்டைப் பார்க்க வேண்டுமென்று ஆசைப்பட்டுக் கொண்டிருந்த ஜெயராமும் எங்களுடன் வர விரும்பினர். வந்து சேர்ந்தோம். முன்னே நான் இங்கே வந்தபோது எத்தனைப் போலீஸ்காரர்கள் இந்த வீட்டைச் சுற்றிக் கொண்டிருந்தார்கள்! இப்போது ஒரு போலீஸ்காரன் இருக்கிறானே? பார்த்தீர்களா?" என்றான்.

"அடடா! ஆமாம் நானும் இரண்டு நாட்களுக்கு முன்னமேயே அதைக் கவனித்தேன். என்னமோ ஏதோ என்று இருந்துவிட்டேன். நேற்று இந்தப் புதுப் போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்ததைக் கண்டு முன்னிருந்த போலீஸ்காரர்களை விலக்கிவிட்டுப் புது ஆசாமிகளை நியமிக்கப் போகிறார்களாக்கும் என்றே எண்ணினேன்" என்றாள் மங்களம்.

எல்லோரும் சிரித்தார்கள்.

மகாத்மா காந்திக்கு ஜே!

டில்லிக்கு

அன்று மத்தியான சாப்பாட்டுக்குப் பின் சங்கரன், மங்களம், குமரேசன், ஜெயராம் ஆகிய நால்வரும் அன்னபூரணியம்மாள் ஆசியுடன் மகாதேவர், ஜானகியம்மாள் முதலானவர்களைப் பார்த்து வர விருதூருக்குப் போனார்கள்.

மருமகனை உயிரோடு பார்க்கக் கிடைக்குமா என்று பயந்து நடுங்கி நித்தம் நித்தம் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த ஜானகியம்மாள், தாடியும் மீசையுமாகத் தன் மகளுக்கு அருகில் நின்றவன் சங்கரலிங்கம்தான் என்று தெரிந்து கொண்டவுடன் மட்டுக்கு மீறிய மகிழ்ச்சியினால் தாக்குண்டு மாரடைப்பு வந்து விட்டது போல் மயக்கமுற்று விழப் போனாள். உடனே மங்களாம்பாள் தாயாரைத் தாங்கிக் கொண்டாள். மகாதேவர் சிறிதும் பதற்றமில்லாமல் மலர்ந்த முகத்துடன் மருமகனை வரவேற்று மனதுக்குள்ளேயே மகிழ்ச்சி பொங்கத் தம்முடைய இஷ்ட தெய்வத்தை வணங்கினார்.

ஜானகியம்மாளுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி விரைவில் நீங்கி விட்டது. பார்வதியும் பரமசிவனும் மகளுக்கு மாங்கல்ய பிச்சை தந்து விட்டதாகப் பாடியாடித் தீர்த்து விட்டாள். சந்தோஷம் தாங்க முடியவில்லை. வீட்டுக்குள் ஓடி விருந்து சமைக்க வேண்டியதைப்பற்றி ஆலோசனைகள் சொல்லுவாள். உடனே அங்கிருந்து ஓடி வந்து தன் கணவரிடம் கோவிலில் அபிஷேகங்கள் நடக்க வேண்டியதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி அவசரப் படுத்துவாள். விருந்துக்கு வேண்டிய சாமான்களை வாங்கி வரச் சொல்லி, எதிர்பட்ட ஒவ்வொருவரையும்

கடைக்கு ஓட்டுவாள். என்றும் இல்லாத மாதிரி தன் குழந்தைகளைக் கொஞ்சிக் கொஞ்சி முத்தமிடுவாள். இடையிடையே மருமகளை எட்டியெட்டிப் பார்ப்பாள். மருமகனுடன் பேசி மகிழும் ஆசைக்காக அவருடன் வந்திருக்கும் இரண்டு புது மனிதர்கள் யாரென்று கேட்பாள். ஜெயராமனைப் பற்றி, அவர் சங்கரனுடைய உயிரைக் காப்பாற்றிய ஜெயபால் மணந்து கொள்ளப் போகிற நிர்மலாவின் தமையன் என்று சொன்னவுடன் நன்றி தெரிவித்துப் பலமுறை வணங்கி வாழ்த்துவாள். குமரேசன் மீசையில்லாதிருந்ததால் அடையாளம் கண்டு கொள்ள முடியாமற் போனதற்குக் கலகலவென்று சிரித்துக் கை தட்டிக் களிப்படைவாள்.

இப்படியாகச் சானகியம்மாள் செய்த சந்தோஷ ஆரவாரம் அக்கம்பக்கத்தாரையும் அழைத்துக் கும்பல் கூட்டிவிட்டது. அதைக் கண்ட எதிர்வீட்டுக் குப்புசாமி ஓடி வந்தான். ஜானகியம்மாள் பொங்கி வழியும் பூரிப்போடு அவனை வரவேற்றுத் தன் மருமகன் வந்து விட்டதைச் சொல்லி மகிழ்ந்தாள். குப்புசாமி, மங்களாம்பாள் சிவ சேவை செய்து கொண்டிருந்த காலத்திலேயே அவளுடைய தூய்மையை உணர்ந்து அவளைத் தெய்வமெனக் கருதி தன்னுடைய வாழ்க்கையையும் திருத்திக் கொண்டவன். அது முதல் அவன், மங்களாம்பாளின் நோன்புகள் பலித்துச் சங்கரனுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை மாறிவிட வேண்டும் என்று மனமார விரும்பினவன். அத்துடன் தன்னிடத்தில் அளவற்ற நன்மதிப்பும் நம்பிக்கையும் கொண்டுள்ள மகாதேவரும் ஜானகியம்மாளும் மகளுக்கு வரக் கூடிய துயரத்தால் மனமுடைந்து போக நேர்ந்துவிடக் கூடாதென்று நெஞ்சார நினைத்தவன். அதனால் சங்கரன் வந்திருக்கிறான் என்றதைக் கேட்டவுடன் குப்புசாமி தன்னையும் அறியாமல் தாவிச் சென்று ஜானகியம்மாள் காட்டிய தாடி மீசைக்காரனைக் கட்டித் தழுவி ஆனந்தக் கண்ணீர் வடித்து விட்டான். சங்கரனும் அந்த அன்பை ஏற்றுக் கொண்டான் மங்களாம்பாளும் குப்புசாமி அவளை வரவேற்றுப் பேசினதற்கு மகிழ்ச்சியுடன் மறுமொழி கூறினாள்.

மகாதேவர் குடியிருந்த வீடு மிகவும் சிறியது. அதனால் அவர் சொல்லாமலேயே, குப்புசாமி தன்னுடைய மாளிகையில் விருந்தினர்க்கு வேண்டிய வசதிகளையெல்லாம் செய்து அவர்களை அங்கே தங்கியிருக்கக் கேட்டுக் கொண்டான். குப்புசாமி மனைவி கோமதியும், தன்னுடைய வாழ்க்கை மறுமலர்ச்சியடைந்தது மகாதேவரின் பெருங் குணத்தால்தான் என்ற நன்றியுடன் ஓடி ஓடி விருந்தினர்களை உபசரித்தாள்.

ஜானகியம்மாளின் கட்டாயத்தால் சங்கரன் முதலானவர்கள் விருதூரில் மூன்று நாட்கள் தங்கினார்கள். அந்த மூன்று நாளும் குப்புசாமி வீட்டில்தான் எல்லாருக்கும் விருந்து. மகாதேவர் விருதூருக்கு மாற்றப் பட்டுத் தன்னுடைய வீட்டுக்கு எதிரில் குடி வந்த ஆரம்பத்தில் மங்களாம்பாளிடம் செய்து விட்ட குறும்புத் தனங்களால் உண்டான பாபங்களுக்குப் பரிகாரம் செய்வதுபோலப் பரிந்து பரிந்து மங்களத்துக்கும் சங்கரனுக்கும் அவர்களுடன் வந்த ஜெயராமுக்கும் சகல விதச் சௌகரியங்களையும் செய்து கொடுத்துச் சந்தோஷப் பட்டான்.

சங்கரன் விடுதலையடைந்த விதத்தைக் கேட்டு எல்லாரும் மகிழ்ந்து வியந்து மகாத்மா காந்தியை வாழ்த்தி வணங்கினார்கள். பரம காந்தி பக்தரான மகாதேவர் பரவசமடைந்தார். குப்புசாமி உடனே ஓடிச் சென்று அது நாள் வரையிலும் எங்கோ ஒரு மூலையில் கிடந்த

அழகான காந்தி படத்தை எடுத்துத் துடைத்துக் கொண்டே வந்து மேஜைமீது வைத்து மாலை சூட்டி வணங்கினான். அதைக் கண்ட மங்களாம்பாள் குப்புசாமி முன்னே செய்துவிட்ட குற்றங்களை மனமார மன்னித்து விட்டதுபோல் அவனைப் பாராட்டிவிட்டு காந்தியை வணங்கும் பாட்டுப் பாடினாள். மங்களம் பாட்டுப் பாடி நெடுங்காலமாகி விட்டது. ஆனாலும் பக்தி மேலீட்டின் ஆர்வத்தால் கிளம்பிய அந்தப் பாட்டில் அவளே அதிசயிக்கும்படியாகச் சங்கீதமும் சாரீரமும் அமைந்து விட்டன. பாஷை புரியாத ஜெயராம் கூட ஓசையின் இனிமையில் மயங்கி ஓயாது தலையாட்டி விட்டான்.

மூன்றும்நாள் பகல் விருந்துக்குப் பின், மறுநாள் பயணத்தைப் பற்றிப் பேச்சு நடந்தது. விருந்தாளிகள் வசந்தபுரிக்குச் சென்று அன்னபூரணியம்மாளையும் அழைத்துக் கொண்டு, மதுரைக்குப் போய், சங்கரனுடைய சகோதரி பங்கஜத்தையும் அவளுடைய கணவன் பரமேசுவரனையும், கோபால கிருஷ்ணர் இன்னும் மதுரையில் இருந்தால் அவரையும் கூட்டிக் கொண்டு பழநிக்குச்சென்று, சங்கரனுடைய பிரார்த்தனையை முடித்துக்கொண்டு திரும்பி வந்து, ஜெயபால் திருமணத்திற்கு டில்லிக்குப் புறப்படுவது என்று திட்டம் பேசப்பட்டது.

சங்கரனுடைய மாமனார் மகாதேவரும் குடும்பத்தோடு ஜெயபால் திருமணத்துக்குத் தன்னுடன் புறப்பட வேண்டுமென்று சங்கரன் விரும்பினான். அதை அங்கு வந்த முதல் நாளே அவரிடம் சொல்லி யிருந்தான். அவரும் மூன்று மாத ரஜாவுக்கு விண்ணப்பம் கொடுத்திருந்தார். மகளோடும் மருமகனோடும் டில்லிக்குப் போகிற பெருமையில் ஜானகியம்மாளுக்குத் தலைகால் தெரியாத சந்தோஷம். அதையறிந்த முதல் நாளே டில்லிக்கு மூட்டை கட்டத் தொடங்கினாள். டில்லியில்

ரொம்பவும் குளிராக இருக்குமாமே அதற்கு வேண்டிய கம்பளிப் போர்வைகள் இல்லையே என்று ஏங்குவாள். மருமகன் உயிரைக் காப்பாற்றிய ஜெயபாலுக்குக் கல்யாணம். அவருக்கு வாழ்க்கைப்படப் போகிற நிர்மலா மிகப் பெரிய பணக்கார வீட்டுப் பெண். பெரிய இடத்துக் கல்யாணத்துக்குப் போனால் அதற்குத் தகுந்த மாதிரி உடுத்திக் கொள்ள இரண்டு உயர்ந்த புடவைகளாவது வேண்டுமே என்று ஆசைப்பட்டாள். மகாதேவர் வாங்குவதெல்லாம் கதர் அல்லது கைத்தறி நூல் புடவைகள்தாம். (அவர் உடுத்துவதெல்லாம் கதரேதான்.) டில்லிக்குப் போக இரண்டு பட்டுப் புடவைகளாவது இருந்தால் நல்லது என்ற சபலம் ஜானகியம்மாளுக்கு இதுவரையிலும் இல்லாமல் இப்போதுதான் உண்டாயிற்று. ஆனால் அதை வெளியில் காட்டிக் கொள்ள விரும்பாமல் தனக்குள்ள புடவைகளில் சிலவற்றை டில்லிக்குக் கொண்டு போகத் தயார் செய்த ஒரு பெட்டியில் வைக்கும்போது அருகில் நின்ற மங்களாம்பாளைப் பார்த்து, " டில்லியில் கல்யாணத்தில் கட்டிக் கொள்ளத் தகுந்ததாக ஒரு நல்ல புடவைகூட இல்லையே " என்றாள். அதைக் கேட்ட மகள் தாயைப் பார்த்து, " அம்மா, நல்ல புடவைகளும் மற்றவைகளும் வேண்டிய மட்டும் சென்னையில் வாங்குவோம். அங்கேயே ஒரு நல்ல புதுப் பெட்டியும் வாங்கி அதில் வைத்துக் கொள்ளலாம். துருப்பிடித்த பெட்டியும் பழைய புடவைகளும் இங்கேயே இருக்கட்டும். டில்லி பிரயாணத்துக்கு உனக்கு வேண்டியதையெல்லாம் நான் கவனித்துக் கொள்ளுகிறேன். உனக்கு அந்தக் கவலையே வேண்டாம் " என்றாள்.

அதைக் கேட்டுப் பூரித்துப் போன ஜானகியம்மாள் அப்போதே மூட்டை கட்டுவதை நிறுத்தி விட்டாள். இது, முதல் நாள் இரவிலேயே நடந்த விஷயம்.

இப்போது மூன்றுவது நாள். எல்லாருமாகக் குப்பு சாமி வீட்டில் டில்லி பயணத்தைப் பற்றி விரிவாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். இடையிடையே குப்புசாமி டில்லியைப் பற்றியும், ஜெயபால் குடும்பத்தைப் பற்றியும், நிர்மலாவின் தந்தையைப் பற்றியும், சிம்சன் துரையைப் பற்றியும், சங்கரன் மறைந்திருந்த வனமாளிகையைப் பற்றியும் பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டேயிருந்தான். அந்தக் கேள்விகளில் இருந்த ஆர்வத்தை அநுமானித்த சங்கரன், குப்புசாமியைப் பார்த்து, "நீங்களும் டில்லியைப் பார்க்க வேண்டும். ஜெயபாலுக்குப் பிரதிநிதியாக நானே உங்களை ஜெயபாலின் திருமணத்துக்கு அழைக்கிறேன், புறப்படுங்கள்" என்றான். அதைக் கேட்ட குப்புசாமி, எண்ணிப் போன தெய்வம் எதிரே வந்து விட்டதுபோல் அளவற்ற மகிழ்ச்சியடைந்து,

"உங்களுடன் டில்லிக்கு வரவேண்டுமென்ற என் விருப்பத்தை நானே தெரியப்படுத்த எண்ணினேன். அந்தக் குறிப்பை அறிந்து கொண்டதுபோல் நீங்களே அழைத்ததில் எனக்கு அளவற்ற சந்தோஷம். ஏழெட்டு மாதங்களுக்கு முன் இங்கு வந்த என் மைத்துனர் குமரேசன் ஜெயபாலைப் பற்றிச்சொன்னதிலிருந்து அந்த ஜெயபாலைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் எனக்கு அதிகம். அந்த ஆசையைத் தீர்த்துக்கொள்ள, அநுகூலமாக அவருடைய திருமணத்துக்கே என்னை அழைத்து விட்டீர்கள். இந்த அழைப்பை மிக்க வந்தனத்துடன் ஏற்றுக்கொள்ளுகிறேன். நானும் டில்லிக்கு வருகிறேன்" என்றான்.

அதைக் கேட்டுக் கொண்டிருந்த அவனுடைய மனைவி கோமதி "நானுந்தானே?" என்றாள்.

உடனே கோமதிக்கு அருகிலிருந்த மங்களம்,

"நீங்கள் இல்லாமலா! நீங்களுந்தான் உங்கள் குழந்தைகளுந்தான்" என்றாள்.

குப்புசாமி, கோமதியையும் கூட்டிக்கொண்டு போக எண்ணியிருந்தானே என்னவோ, மங்களாம்பாள் சொன்னதை உடனே ஆமோதித்து "ஆம், குடும்பத்தோடுதான்" என்றான்.

அதைக் கேட்டு மங்களம் கலகலவென்று சிரித்து விட்டு கோமதியின் தோளைப் பிடித்துக் குலுக்கி "கோமதி எங்கே நீங்கள் வரமுடியாமற் போய்விடுமோ என்று பயந்தேன். இப்போது நீங்களும் வருவது நிச்சயமாகிவிட்டது. எனக்கு நல்ல துணை. டில்லியைப் பார்த்து விட்டுக் காசி முதலான பல தலங்களையும் தரிசித்து வரலாம்." என்றாள். கோமதியையும் கூட்டிக் கொண்டு வருவதாகக் குப்புசாமி பிரியப்படமாட்டானே என்ற சந்தேகம் குப்புசாமிக்கும் மங்களத்துக்கும் மட்டுந்தான் இருந்தது. மற்றவர்களுக்கு இருக்கவில்லை. சங்கரனுக்குக் குப்புசாமி முன்னே கோமதிக்குச் செய்து விட்ட கொடுமைகளைப் பற்றி ஒன்றும் தெரியாது. அதனால் அவன் சந்தேகிக்கக் காரணமில்லை. மகாதேவரும் ஜானகியம்மாளும் சந்தேகிக்க நியாயமில்லை. ஏனெனில், குப்புசாமி மீண்டும் கோமதியைக் கூட்டிக் கொண்டதிலிருந்து அவன் அவளை மிகவும் அன்புடன் நடத்துகிறான் என்பதையும், ஒரு மனையாளுக்குரிய சகலவித உரிமைகளும் தந்து மனமொத்த மகிழ்ச்சியுடன் இல்லறம் நடத்துவதையும் அநுதினமும் அருகிலிருந்து பார்க்கும் அநுபவமுள்ளவர்கள். முன் ஒரு முறை குமரேசன் அவ்வூருக்கு வந்திருந்தபோது மகாதேவர் வீட்டில் அவனுக்கு விருந்து நடந்த நாளில்தான் குப்புசாமி கோமதியை மறுபடியும் வீட்டுக்குக் கூட்டிக் கொண்டது. அதற்குப்பின் குமரேசன் ஒரே ஒரு நாள்

தான் குப்புசாமி வீட்டில் விருந்துண்ணத் தங்கினான். அதனால் குப்புசாமிக்கும் கோமதிக்கும் இப்போதுள்ள நேசம் எப்படி என்பது அவனுக்குத் தெரியாது. குப்புசாமி கோமதியை வீட்டுக்குக் கூட்டிக் கொண்டபோது மங்களாம்பாள் விருதூரில் இருக்கவில்லை. வசந்த புரியில் மாமியாருடன் வசித்தாள். அதற்குப்பின் இப்போதுதான் விருதூருக்கு வந்திருக்கிறாள். அதனால் அவளுக்கும் குப்புசாமி கோமதியை இப்போது எப்படிக் கொண்டாடுகிறான் என்பது தெரியாது.

உண்மையில் குப்புசாமி, மங்களமும் குமரேசனும் சந்தேகித்தபடி முன்னாள் குப்பன் அல்ல. எல்லா விதத்திலும் அவன் இப்போது ஒரு புது மனிதனே ஆகி விட்டான். அவனுக்கு முன்னிருந்த கெட்ட நடத்தையெல்லாம் துஷ்ட சகவாசத்தால் தூண்டப்பட்டதென்றே தோன்றச் செய்கிறது. மங்களாம்பாள் மீது அடக்க முடியாத ஆசையுண்டாகி அவளைக் கல்யாணம்செய்து கொள்ள எண்ணினான். மங்களத்தின் தந்தை மகாதேவர் சொற்ப சம்பளமுள்ள ஒரு குமாஸ்தாவானதால் தன்னுடைய பெருஞ்செல்வத்தையும் மாளிகை வீட்டையும் கண்டு மயங்கி எளிதில் கொடுக்க இசைந்துவிடுவாரென்றே எண்ணினான். மங்களத்துக்கும் அவளுடைய பெற்றோருக்கும் தன்னுடைய செல்வத்தின்மீது ஆசை மூட்டவென்றே அவர்களுக்குத் தன் மாளிகையில் பெரிய விருந்து நடத்தித் தன்னிடம் இருந்த மிக்க விலையுயர்ந்த நவரத்தினங்கள் இழைத்த நகைகளைக் காட்டி, அவை, தான் மணந்து கொள்ளப் போகிற பெண்ணுக்கு என்று சொன்னான். அப்படியெல்லாம் தனியே அவர்களுடன் சல்லாபிக்கவென்றே, அதுவரையிலும் அவனுடன் எப்போதும் இருந்துகொண்டிருந்த களியாட்ட நண்பர்களில் ஒருவனைக்கூட அந்த விருந்

துக்கு அவன் அழைக்கவில்லை. அந்தச் செய்கை அப்போதே அவனுடைய துஷ்ட சகவாசங்கள் அவனைவிட்டு நீங்கிவிட ஆரம்பித்தது போலத்தான் அமைந்தது. மகாதேவரிடம் ஏகாந்தமாகப் பேசிப் பெண் கேட்டான். அவர் அது தன் மகளுடைய விருப்பத்தைப் பொறுத்த விஷயம் என்று சொல்விட்டார். பிறகு மங்களத்தையே கேட்டுச் சரிப்படுத்திக்கொள்ளலாம் என்று தீர்மானித்து அதே சிந்தனையாக இருந்தான். அதனால் பழைய சகவாசங்களில் மனம் படியவில்லை. எப்படியாவது மங்களாம்பாளை வசப்படுத்திவிடவேண்டும் என்ற ஆசை அதிகப்பட்டு, அந்த ஆசையைப் பூர்த்தி செய்துகொள்ளும் வழியைக் கண்டுபிடிப்பதிலேயே கருத்தாகிவிட்டதால் அவனுக்கு மிகவும் பிரீதியான சீட்டாட்டத்தில்கூட சிந்தை செல்லவில்லை. மங்களத்தின் அழகில் சொக்கிப் போன அவன் கண்கள் அதுவரையிலும் அவனுக்குப் பழக்கமாயிருந்த காமப் பெண்களைக் காணவும் மறுத்துவிட்டன. இப்படியாக அவனுடைய கெட்ட சகவாசங்கள் அவன் முயற்சியில்லாமலும் அகன்றுவிட்டன. அவன் மங்களத்துடன் நேரிற் பேச நினைத்தது நிறைவேறவில்லை. அப்புறம் மங்களத்திடம் நேரில் ஒரு கடிதம் கொடுத்து மானபங்கமடைந்தான். அது அவன் கோபத்தையும் குரோதத்தையும் குமுறச் செய்து, கவலையை உண்டாக்கிவிட்டது. அதன் பிறகு மங்களத்துக்கு என்ன தீங்கை எப்படிச் செய்யலாம் என்பதையே எண்ணலானான்.

அது எப்படியிருந்தாலும் மங்களத்தின் தந்தை மகாதேவரும் தாயார் ஜானகியும் குப்புசாமியைத் தங்கள் குடும்பத்துக்கு மிகவும் நெருங்கிய நண்பனாகவே மதித்து அவனுடன் பழகிவந்தார்கள். அவனும் தனக்கு மங்களத்தின் மீதுள்ள மாச்சரியத்தை ஒதுக்கிவைத்து

விட்டு, மகாதேவரிடத்திலும் ஜானகியம்மாளிடத்திலும் மிக்க மரியாதையுடன் நடந்து கொண்டான். இது அவனுக்கு நல்ல சகவாசமாக அமைந்தது. மங்களத்தின் மீது அவனுக்குள்ள மாச்சரியம் இவர்களைக் கண்ட வுடன் மறந்து போகும். அப்படி மகாதேவரும் ஜானகி யும் குப்புசாமியுடன் நெருங்கிப் பழகும் நட்பு நீடித்ததற்குக் காரணமும் மங்களாம்பாளின் சற்குணமே. குப்புசாமி தன்னிடத்தில் செய்த தப்பிதங் களை அவள் யாருக்கும் சொன்னதில்லை. மங்களத்துக்கும் சங்கரனுக்கும் திருமணம் நடப்பதற்கு முன்னால் சங்கரன் எங்கே போனானே என்ன ஆனானே என்று சங்கரன் வீட்டாரும் மங்களம் வீட்டாரும் தவித்துக்கொண்டிருந்த போது, சங்கரன் ஒரு பர்மாக்காரியை மணந்துகொண்ட தாக மங்களத்துக்கு ஒரு கடிதம் வந்து அவள் மூர்ச்சை யானாள். அதேபோல் மங்களம் நெறிதவறி வீட்டை விட்டு ஓடிவிட்டாள் என்று பர்மாவிலிருந்த சங்கரனுக்கு விருதூரிலிருந்து ஒரு கடிதம் போய், அவன் அதிர்ச்சி யடைந்து நோயுற்று ஆஸ்பத்திரியில் இருந்து தப்பிப் பிழைத்தான். அதன் பிறகுதான் அவன் 'சிக்லீவில்' தாயாரைப் பார்க்க இந்தியாவுக்கு வந்தான். இங்கே வந்தபின் தன் தாயாருடன் பேசியதிலிருந்து தனக்கு வந்த கடிதம் பொய்க்கடிதம் என்று கண்டான். அந்தக் கடிதத்தை மற்றவர்களுக்குக் காட்டாமல், மங்களத்துக்கு மட்டும் அவள் தனியே மாடிக்கு வந்து பேசிக்கொண்டு இருந்தபோது காட்டினான். அந்தக் கடிதத்தையும் தனக்கு வந்த கடிதத்தையும் சேர்த்து எண்ணிப் பார்த்த தில், அது குப்புசாமியினுடைய வேலையாகத்தான் இருக்க வேண்டும் என்று மங்களம் ஊகித்தாள். அப்போதுங் கூட அவள் குப்புசாமியைப்பற்றி ஒன்றும் சொல்ல வில்லை.

திருமணத்துக்குப்பின் சங்கரன் பர்மாவுக்குப் போக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. உத்தியோகத்தை விட்டுவிட்டு வீட்டுக்கு வந்துவிட முயன்றது பலிக்க வில்லை. பிறகு யுத்தம் மூண்டுவிட்டது. போர்முனைக்குப் போனான். நேதாஜியுடன் சேர்ந்து கைதியாகிவிட் டான். நெடுங்காலம் சங்கரனைப்பற்றிய ஒரு சேதியும் வராததால் அவனுடைய க்ஷேமத்துக்காக மங்களம் விருதூரில் சிவன்கோயில் சேவை செய்துகொண்டிருந் தாள்.

அப்போது 'ஷங்கர்ஜி' என்பவனுக்கு மரண தண் டனை விதிக்கப்பட்டிருப்பதாகப் பத்திரிகையில் இருந்த சேதியைப் பார்த்துக் குப்புசாமி 'ஐயோ' என்று அலறி விட்டானல்லவா? அந்த நிமிஷம் முதல் அவனுடைய மனம் மாறத் தொடங்கிவிட்டது. மங்களத்தின் சிவபூசை பலித்து அவளுடைய மாங்கல்யத்துக்கு நேர்ந்துள்ள அபாயம் நீங்கவேண்டுமென்று நினைக்கலானான். பத்திரி கையில் 'ஷங்கர்ஜி' என்றிருப்பது சங்கரலிங்கத்தின் பெயர் என்பதை யாருக்கும் சொல்லிவிடக்கூடாது என்று மகாதேவர் கேட்டுக்கொண்டார். குப்புசாமி அப் படியே சொல்வதில்லையென்று வாக்களித்து, அந்த வாக்கைக் காப்பாற்றினான். மங்களம் செய்துகொண்டி ருந்த சிவ சேவையை, அவள் காலையும் மாலையும் கோயி லுக்குப் போகும்போதும் வரும்போதும் ஒவ்வொரு நாளும் பார்த்துக்கொண்டிருந்ததால் அவளிடத்தில் அவ னுக்கு மிகுந்த பயபக்தி உண்டாகிவிட்டது. யாரோ ஒரு சீக்கியத் துறவி அவளைக் கட்டித் தழுவி முத்தமிட முயன் றான் என்று ஜானகியம்மாள் கூக்குரலிட்டதைக் கேட்டு உடனே ஓடிவந்து, அந்தச் சீக்கியத் துறவியைக் கண்டு பிடித்துத் தண்டிக்கத் துடித்தவன் குப்புசாமி. சங்கர லிங்கன் சிறையிலிருந்து தப்பி ஓடிவிட்டான் என்பதை

அறிந்தவுடன் மங்களத்தின் நோன்பு பலித்துவிட்ட தாகவே நம்பி தனக்கும் தெய்வபக்தி உண்டாகச் செய்துவிட்ட தேவதை மங்களாம்பாள் என்று மதிக்க லானுன்.

இப்படியாக மகாதேவரோடும் ஜானகியம்மாளோடும் நெருங்கிப் பழகிய நட்பும், மங்களத்தின் பரிசுத்தமாகிய நோன்பைப் பார்த்துக்கொண்டிருந்த செய்கையும் குப்பு சாமிக்கு சாதுசங்க சகவாசம்போல் உதவி, அவனுடைய போக்கை அடியோடு மாற்றி, அவனை நல்வழிப் படுத்தி விட்டன. அதனுல் அவன் தன் மனைவி கோமதியையும் கூட்டிக்கொண்டு குடும்பத்தோடு டில்லிக்கு வருவதாகச் சொன்னது அவனே விரும்பிச் சொன்னதுதான்.

சாதுக்கள் சகவாசந்தான் சொர்க்கபோகம் என்றும், துஷ்டர்கள் சகவாசந்தான் நரகவேதனை என்றும் பெரி யோர்கள் சொல்லுவதன் உண்மை இதுதான்போலும்.

டில்லிப் பயணத்தைப் பற்றி நெடுநேரம் பேசிக் கொண்டிருந்து மணி நான்கு அடித்துவிட்டது. விருந் தினர்களுக்குச் சிற்றுண்டிகளும் காப்பியும் கொண்டு வரும்படி குப்புசாமி கட்டளையிட்டான், அந்தச் சமயத் தில் கோபால கிருஷ்ணருடைய 'கார்' மகாதேவர் வீட்டு வாசலில் வந்து நின்றது. அதிலிருந்து சங்கரனுடைய தாயும் தந்தையும் தங்கை பங்கஜமும் அவளுடைய இரண்டு குழந்தைகளும் இறங்கினர்கள்.

சங்கரன் முதலானவர்கள் விருதூருக்கு வந்த வுடனே அன்னபூரணியம்மாள், மகன் வந்துவிட்ட மகிழ்ச்சியை மதுரைக்குப் போயிருந்த கோபாலகிருஷ்ண ருக்குத் தந்தியில் தெரியப்படுத்தியிருந்தாள். பங்கஜத் தின் மூத்த குழந்தை இன்னும் மூன்று நாள் ஆஸ்பத்திரி யில் இருக்கவேண்டுமென்று பெரிய டாக்டர் சொன்ன தால் பரமேஸ்வரன் மகளைக் கவனித்துக் கொள்ளத்

தான் மதுரையில் இருந்துகொண்டு மனைவியை மாமனரு டன் அனுப்பினுன். உடனே வசந்தபுரிக்கு வந்தார்கள். விருதூருக்குப் போயிருக்கும் சங்கரன் முதலானவர்கள் மறுநாளே வந்துவிடுவார்கள் என்று அன்னபூரணியம் மாள் சொன்னதால் இரண்டுநாளும் எதிர்பார்த்தார்கள். வராதது கண்டு விருதூருக்கே வந்துவிட்டார்கள்.

மறுநாள் காலை ஆகாரத்துக்குப் பின் எல்லாரும் புறப்படுவது என்று பேசப்பட்டது. ஆனல் மிகவும் அபூர்வமாக அன்னபூரணியம்மாளும் கோபாலகிருஷ்ண ரும் தன் வீட்டுக்கு வந்திருப்பதால், அவர்களுக்கு விருந்து நடத்தவேண்டும் என்றும் மறுநாள் மத்தியான் னம் விருந்துக்குப்பின் புறப்படவேண்டும் என்றும் குப்பு சாமி கேட்டுக்கொண்டான். அது ஒத்துக்கொள்ளப் பட்டது.

அன்றிரவு குமரேசனுடைய தாயாரும் மூத்த தங்கை பூங்காவனமும் தாங்களும் டில்லியைப் பார்க்க ஆசைப் படுவதாகக் குமரேசனிடம் அறிவித்தார்கள். அதுவரை யிலும் அதைப்பற்றி எண்ணுதிருந்த குமரேசன் உடனே அதை ஏற்றுக்கொண்டு, பூங்காவனத்தின் புருஷனையும் குழந்தைகளுடன் கூட்டிக்கொண்டு போகத் தீர்மானித் தான். அடுத்தநாள் பகல் விருந்துக்குப்பின் நான்கு குடும்பத்தாரும் ஏழு மோட்டார் வண்டிகளில் புறப்பட் டார்கள். வசந்தபுரியில் இரவைக் கழித்துவிட்டு மறு நாள் மதுரைக்குச் சென்ருர்கள்.

அங்கே பரமேஸ்வரன் தன் மூத்த மகளை ஆஸ்பத்திரி யில் இருந்து வீட்டுக்கு அழைத்து வந்திருந்தான். ஆப ரேஷன் செய்த இடத்தில் இன்னும் ஆறவேண்டிய சிறு புண் இருந்தது. அந்தப் புண்ணுக்குக் கட்டவேண்டிய மருந்தை எடுத்துக்கொண்டு, அந்தப் பெண்ணையும்

அழைத்துக்கொண்டு எல்லோரும் மறுநாளே பழநிக்குச் சென்றார்கள்.

முறைப்படி சங்கரலிங்கன் முடியிறக்கிப் பிரார்த்தனை செலுத்தப்பட்டது. பழநியாண்டவனைத் தரிசிக்க மலை யேறுவதற்காக அன்னபூரணியம்மாள் மிகவும் மெலிந்து போயிருப்பதை எண்ணி, அவளுக்கும், ஆபரேஷன் புண்ணுள்ள பங்கஜத்தின் மகளுக்கும் 'டோலி'கள் ஏற் பாடு செய்யபபட்டன. ஆனல் மகன் வந்துவிட்ட பூரிப்பினல் புது சக்திகள் ஊறிவிட்ட அன்னபூரணியம் மாள் தனக்கு டோலிவேண்டாமென்றுவிட்டு மருமகளைப் பிடித்துக்கொண்டே மலையேறிவிட்டாள்.

பழநியிலிருந்து மதுரைக்குப்போய், அங்கிருந்து வசந்த புரிக்குச் சென்று, அங்கிருந்து டில்லி பயணத் துடன் சென்னைக்குச் சென்றார்கள். முன்னலேயே கோபாலகிருஷ்ணர் தம்முடைய காரியதரிசியை அனுப் பிச் சென்னையிலிருந்து டில்லிக்கு ஒரு தனிச் 'சலூன்' ஏற்பாடு செய்தார். சென்னையில் இரண்டுநாள் தங்கித் துணிமணிகளை வாங்கிக்கொண்டு, 'கிராண்ட் ட்ரங்க் எக்ஸ்பிரசில் இணைக்கப்பட்ட'சலூனில்' புறப்பட்டார்கள். முன்னேற்பாட்டின்படி, 'சலூன்' நாகபுரியில் பிரித்து விடப்பட்டது. அங்கே வன இலாகா தலைவர் பால்தேவ் இவர்களை வரவேற்று, சங்கரன் மறைந்திருந்த வன மாளிகைக்கு அழைத்துக்கொண்டு போய் விருந்தூட்டி னர்.

எல்லாரும் அந்த வனமாளிகையின் அமைப்பையும் அழகையும் சுற்றிப்பார்த்தார்கள். அப்போது மங்களம் தன் கணவனிடத்தில் ரகசியமாக "பர்மாவிலிருந்து இந்த வனமாளிகைக்கு எப்படி வந்து சேர்ந்தீர்கள்?" என்றாள். ,'அதை நானே குமரேசனே ஜெயபாலின் அனுமதி

யில்லாமல் யாருக்கும் சொல்லக்கூடாது என்பது வாக் குறுதி" என்றான். அதை ஏற்றுக்கொண்டாள் மங்களம்.

அன்று மாலை வரை அந்த வனமாளிகையில் இருந்துவிட்டு, இரவை நாகபுரியில் கழித்துவிட்டு, மறு நாள் எக்ஸ்பிரஸ் வண்டியில் 'சலூன்' இணைக்கப்பட்டு, அதற்கடுத்த நாள் காலையில் டில்லியை அடைந்தார்கள். இவர்களை வரவேற்க ஜெயபாலே ரயிலடிக்கு வந்திருந் தான்.

சங்கரன் இந்தியாவுக்கு வந்தது எப்படி?

தம்முடைய மகள் நிர்மலாவைப் போன்ற அழகான பெண் யாருமில்லை என்று எண்ணிக்கொண்டிருந்த ஜெயசந்திராவும் அவருடைய மனைவியும் மங்களாம்பாளின் அழகைப் பார்த்து மயங்கிவிட்டார்கள். அவர்கள் அதுவரைக்கும் மங்களத்தை, அவளும் சங்கரனும் அவர்களுடைய திருமணத்தின் போது சேர்ந்து எடுத்துக் கொண்ட 'போட்டோவில்'தான் பார்த்திருந்தார்கள். நேரில் வந்துவிட்ட மங்களம் அந்தப் படத்தில் இருப்பதைவிடப் பல மடங்கு அழகாக இருப்பதைப் பார்த்து இன்புற்றார்கள். உண்மையில் அவள் அந்தப் படத்திலிருப்பதைவிட இப்போது அழகாகத்தான் புடமிட்ட பொன்போலப் பிரகாசித்தாள். ஏனெனில் தன் கணவன் விடுதலை அடைந்ததில், அவள் இனிமேல் அடையவே முடியாது என்று எண்ணியிருந்த சம்பத்தை அடைந்துவிட்ட ஆனந்தம் அழகை அதிகப்படுத்தியது. தேகம் சற்றே மெலிந்துவிட்டாலும் அவள் காத்த நோன்புகளால் உண்டான தேஜஸ் முகத்தில் திகழ்ந்து கொண்டிருந்தது.

மங்களாம்பாளைக் கண்டவுடனே நிர்மலா தாவிச் சென்று அவளைத் தழுவிக்கொண்டு நெடுநாள் பிரிந்திருந்த சகோதரி வந்துவிட்டதுபோல் சந்தோஷப் பட்டாள்..

சங்கரனுடைய தந்தையும், தாயும், மாமனாரும், மாமியும், தங்கையும், அவள் கணவனும், குப்புசாமியும்

கோமதியும், குமரேசனுடைய தாயாரும், பூங்காவனமும், அவள் புருஷனும் ஜெயசந்திராவுக்கும் அவருடைய மனைவிக்கும் தனித் தனியாக அறிமுகப்படுத்தப்பட்டார்கள். குசலப் பேச்சுக்கள் நடந்தன.

பக்கத்திலிருந்த அழகான ஒரு மாளிகையில் விருந்தினர்கள் தங்கியிருக்க எல்லா வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அந்த மாளிகைக்கு அவர்களையெல்லாம் அழைத்துப் போகும்படி ஜெயசந்திரா குமரேசனிடம் சொன்னார்.

அப்போது நிர்மலா, மங்களம் தன்னுடனேயே தங்கியிருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டாள். அதற்கு மங்களம், மாமியாருக்குத் துணையாக அவருடன் இருக்க வேண்டுமே என்றாள். அதைக் கேட்ட நிர்மலா அன்னபூரணி அம்மாளும் தன்னுடன் தங்கவேண்டும் என்றாள். அன்னபூரணியம்மாள் 'எனக்குத் துணை வேண்டியதில்லை மங்களம் நிர்மலாவுடன் இருக்கட்டும்' என்றாள். மங்களம் அதில் மகிழ்ச்சி காட்டவில்லை. அதையறிந்த நிர்மலா அன்னபூரணியம்மாளும் அங்கேயே தங்கவேண்டும் என்று மிகவும் விநயத்துடன் கேட்டுக் கொண்டாள். அன்னபூரணி சம்மதித்தாள். மற்றவர்களெல்லாம் அடுத்த மாளிகைக்கு அழைத்துக்கொண்டு போகப் பட்டார்கள்.

டில்லியைச் சுற்றிப் பார்க்க வென்றே இவர்கள் திருமணத்துக்கு ஒரு வாரத்துக்கு முந்தியே வந்திருந்தார்கள். குமரேசனுடைய மேற்பார்வையில் அவர்கள் ஊரைச் சுற்றிப் பார்க்கவேண்டிய ஏற்பாடுகள் கவனிக்கப் பட்டன. சாப்பாட்டு நேரம் தவிர மற்ற நேரமெல்லாம் டில்லியைச் சுற்றிப் பார்க்க மோட்டார்களில் ஓடிக் கொண்டே யிருந்தார்கள்.

மற்றவர்கள் சுற்றிப் பார்க்க வேண்டிய ஏற்பாடுகளைக் குமரேசன் கவனித்துக்கொள்ள, மங்களமும் அவளுடைய மாமியாரும் சுற்றிப் பார்க்க வேண்டிய ஏற்பாடுகளை நிர்மலாவும் அவளுடைய தமையன் ஜெயராமும் மேற்கொண்டார்கள். ஜெயராமும் நிர்மலாவும் தங்கள் வீட்டு மோட்டாரில் மங்களத்தையும் மாமியாரையும் ஏற்றிக்கொண்டு, பார்க்க வேண்டிய இடங்களைக் காட்டுவார்கள். ஜெயராம் மோட்டாரை ஓட்டுவான். நிர்மலா வெவ்வேறு இடங்களைப்பற்றி விமர்சனம் செய்துகொண்டே போவாள்.

மங்களமும் நிர்மலாவும் மாடியிலுள்ள ஒரு அறையில் படுத்துக் கொள்வார்கள். அன்னபூரணியம்மாள் நிர்மலாவின் அன்னையுடன் கீழே படுத்துக் கொள்வாள். நிர்மலாவும் மங்களமும் பக்கம் பக்கமாகத் தங்கள் படுக்கைகளை விரித்துக் கொண்டு, பழங்கதைகளைப் பேசிக் கொண்டே தூங்கிவிடுவார்கள். மங்களம் டில்லிக்கு வந்த மறுநாள் இரவில் அப்படிப் படுத்துக் கொண்டே பேசும்போது நிர்மலா, மங்களத்துக்கும் சங்கரனுக்கும் விவாகமான விதத்தை விவரமாகச் சொல்லும்படி மங்களத்தை வேண்டிக் கொண்டாள். மங்களமும் அதைச் சொல்ல ஆசைப்பட்டவள்போல் கேட்டவுடன் சொல்லுற்றாள் : "எனக்கு ஆறு அல்லது ஏழு பிராயம் இருக்கும். அவருக்குப் பதினொன்று அல்லது பன்னிரண்டு பிராயம் இருக்கும். அப்போதுதான் நாங்கள் ஒருவரை யொருவர் பார்க்க நேர்ந்தது. பார்த்த உடனேயே எங்களுக்குள் பாசம் உண்டாகிவிட்டது. அவருடைய வீட்டில் ஒரு பக்கத்தில் நாங்கள் குடியிருந்தோம். அதனால் நானும் அவரும் விநாடி நேரங்கூட விட்டுப் பிரியாமல் விளையாடிக் கொண்டிருப்போம். எங்கள் வீட்டிலோ அவர் வீட்டிலோ இருவரும் சேர்ந்து சாப்

பிடத்தான் ஆசைப்படுவோம். இரவில்கூடப் பிரிந்திருக்கப் பிரியமில்லாமல் ஒருவர் வீட்டுக்கு ஒருவர் போய் அங்கேயே உறங்கிவிடுவோம். என்னுடைய பெற்றோரும் அவருடைய தாயாரும் எங்களுக்குள் வளர்ந்துவந்த நேசத்தைப் பாராட்டி இன்பமுறுவார்கள். அவருடைய தந்தை மிகப் பெரிய பணக்காரர். எந்நேரமும் பண விவகாரங்களுக்காக வீடு தங்காமல் மோட்டாரில் எங்கெங்கோ பறந்துகொண்டே இருப்பார். தொடர்ச்சியாகப் பலநாட்கள் வீட்டில் இருக்கமாட்டார். அவர் என்னைச் சரியாகப் பார்த்ததுகூட இல்லை. அவருடைய மகனும் நானும் சேர்ந்து விளையாடுவதையும் பிரிக்க முடியாத நேசர்களாக இருந்ததையும் அறிந்துகொள்ள அவருக்கு நேரமில்லை. இப்படி நாங்கள் இணைபிரியாத ஜோடியாக ஏழு ஆண்டுகள் சேர்ந்து விளையாடிக் கொண்டிருந்தோம். அப்போது எங்களுக்குக் கலியாணம் என்ற எண்ணமே இருந்ததில்லை.

ஒருநாள் அவருடைய அரண்மனை போன்ற வீட்டின் வாசலில் நாங்களிருவரும் விளையாடிக்கொண்டிருக்கையில் அங்கே குறத்தியர்கள் வந்து ஆடிப்பாடிக் குறிசொல்லுவதாகச் சொன்னார்கள். இவர் சொல்லச் சொன்னார். அவர்கள் பாட்டுப் பாடிக் குறி சொன்னார்கள். அதில் நாங்கள் இருவரும் சரியான ஜோடி என்றும், எங்களுக்குத் திருமணம் நடக்கப்போவது நிச்சயமென்றும் சொன்னார்கள். நான் அவருக்கு மனைவியாகப் போகிறேன் என்ற மகிழ்ச்சியினாலோ என்னவோ அவர் 'மங்களம்' என்ற என் பெயரைத் தமது கையில் பச்சை குத்திக்கொண்டார். அதைக் கண்டு நான் திகைத்தேன். ஏளனமும் செய்தேன். ஆனாலும் என்னுடைய மனதில் என்னையும் அறியாமல் ஒரு மகிழ்ச்சி ஊறி, எங்களிருவருக்கும் கலியாணம் ஆகி விட்டது போன்ற களிப்புண்

டாயிற்று. அன்று முதல் நாங்கள் முன்னிலும் அதிகமாக ஒருவரையொருவர் நேசிக்கலானேம்.

இந்தச் சமயத்தில் என் தந்தையை அங்கிருந்து விருதூருக்கு மாற்றி விட்டார்கள். விவரிக்க முடியாத வேதனையோடு இரண்டு குடும்பங்களும் பிரிந்தோம். ஆனலும் என் மாமி அன்னபூரணியம்மாள் அவருக்கென்று உள்ள தனி மோட்டார் வண்டியில் அடிக்கடி விருதூருக்கு வருவார். இவரும் வருவார். அதே மோட்டாரை அனுப்பி எங்களையும் அவர்கள் வீட்டுக்கு அடிக்கடி அழைத்துக் கொள்வார்கள். என் மாமிக்கு என்னைத் தன் மகனுக்கு மணந்து கொள்ள வேண்டும் என்ற பிரியம் இருந்ததை அவர் என் தாயாரோடு பேசும் பேச்சுகளிலிருந்து அப்போதே நாங்கள் அறிவோம். அப்போதெல்லாம் நாங்களிருவரும் காதலர்களாகவே சந்திப்போம். ஆனலும் எங்கள் பேச்சிலோ செயலிலோ ஒழுக்கத் தவறுகள் இருந்ததில்லை.

இப்படியிருக்கும்போது இவருடைய தந்தை ஒரு பெரும் பணக்காரர் பெண்ணை இவருக்கு மண முடிக்கத் தீர்மானித்தார். இவர் அதற்கு இணங்கவில்லை. தந்தை, தாம் செய்த ஏற்பாட்டை மகன் ஒத்துக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்திக் கடுமையாகப் பேசி விட்டார். அங்கேயிருந்தால் தந்தை அவர் இஷ்டப்படி அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ளச் சொல்லிக் கட்டாயப்படுத்துவார் என்று பயந்துதான் இவர் பட்டாளத்தில் போய்ச் சேர்ந்து கொண்டது....."

மங்களம் பேசி முடிப்பதற்குள் படுத்திருந்த நிர்மலா துடித்தெழுந்து உட்கார்ந்து,

"மங்களா! இதே மாதிரிதான் என்னுடைய காதலரும் ஓடிப் போய் பட்டாளத்தில் சேர்ந்தது. உங்களைப் போலவே நாங்கள் இருவரும் குழந்தைப் பருவத்தி

லிருந்தே எப்போதும் இணை பிரியாமல் விளையாடிக் கொண்டிருந்தோம். உங்களைப் போலவே சிறுகச் சிறுகக் காதலர்களாகி விட்டோம். என் பெற்றோர்களும் உங்களுடைய பெற்றோர்களைப் போலவே எங்களுடைய நேசத்தைக் கொண்டாடினர்கள். உங்கள் மாமனர் செய்ததைப் போலவே இவருடைய தந்தையும் இவருக்கு வேறு பெண்ணைக் கட்டி வைக்கத் தீர்மானித்தார். அதைத் தட்டிக் கழிக்கவேதான் இவரும் பட்டாளத்துக்குப் போனது. பட்டாளத்துக்குப் போன பிறகும் அடிக்கடி எனக்குக் கடிதம் எழுதுவார். பல கடிதங்களில் உங்களைப் பற்றியும், உங்கள் கணவரைப் பற்றியும் எழுதி யிருக்கிறார். உங்கள் கணவர் பர்மாவில் இருந்த போது நீங்கள் எங்கேயோ ஓடிப் போனதாக அவருக்கு ஒரு பொய்க் கடிதம் உங்கள் ஊரிலிருந்து வந்து, அவர் மூர்ச்சையடைந்து, கடுமையான இதய நோய் உண்டாகி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுத் தப்பிப் பிழைத்தாராம்....."

"ஆ! அது கூட உங்களுக்குத் தெரியுமா!" என்று குறுக்கிட்டாள் மங்களம், தானும் எழுந்து உட்கார்ந்து.

"அது மட்டுமா! உங்கள் கணவரைப் பற்றிய எல்லா ரகசியங்களும் எனக்குத் தெரியும்."

"அவர் நாகபுரி வனமாளிகையில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததுகூட உங்களுக்குத் தெரியுமோ?"

"ஓ! தெரியும். அவர் விடுதலை அடைகிற மட்டும் வனமாளிகையில் மறைந்திருந்தது எனக்கு மட்டுந்தான் தெரியும். அப்போது என் தந்தைக்குக் கூடத் தெரியாது. இப்போது நம்மைச் சேர்ந்த எல்லாருக்கும் தெரியும். வனமாளிகைக்கு உங்கள் கணவரைக் கொண்டு வந்து மறைத்து வைத்துக்கொண்டுதான் என் காதலர் உங்கள் கணவருடைய மரண தண்டனையை

மாற்றுவதற்காக அலைந்து கொண்டிருந்தார். அதற்காக என் தந்தையுடன் பேசுவதற்குக் காதலர் அடிக்கடி இங்கு வருவார். அப்படி வரும்போதெல்லாம் என்னிடத்தில் 'ஏகாந்தமாக ஷங்கர்ஜியின் உயிரைக் காப்பாற்ற என்னால் ஆகக் கூடிய எல்லா முயற்சிகளையும் செய்து பார்த்துவிட்ட பிறகுதான் நம்முடைய திருமணத்தைப் பற்றி எண்ண வேண்டும். அதுவரைக்கும் நீ பொறுத்துக் கொள். நீயும் உன் தந்தையிடம் சிபார்சு செய்து மங்களாம்பாளுக்கு மாங்கல்ய பலம் கிடைக்கும்படிச் செய்' என்று சொல்லுவார். அப்போது 'ஷங்கர்ஜி எங்கே இருக்கிறார்?' என்று ஒரு நாள் கேட்டேன். அவர் வனமாளிகையில் இருக்கிற ரகசியத்தை எனக்கு மட்டும் சொல்லி, அதை நான் யாருக்கும் சொல்லிவிடக் கூடாதென்றும் எச்சரித்தார்" என்றாள் நிர்மலா.

"அப்படியானால் என் கணவர் பர்மாவிலிருந்து இந்தியாவுக்கு எப்படி வந்து சேர்ந்தார் என்பதும்கூட உங்களுக்குத் தெரிந்திருக்குமே?" என்றாள் மங்களம், ஆர்வத்துடன்.

"ஓ! தெரியும்."

"எப்படி வந்தார், சொல்லுங்கள்?"

"ஏன்? ஷங்கர்ஜி உங்களுக்கு அதைச் சொல்லவில்லையா?"

"சொல்லவில்லை."

"அவரைக் கேட்கிறதுதானே?"

"கேட்டேன். அவர் ஜெயபாலின் அநுமதியில்லாமல் அதை யாருக்கும் சொல்லக் கூடாது என்று சொல்லிவிட்டார்."

"பேஷ்! பேஷ்! ஷங்கர்ஜி மிகவும் உத்தமர் என்பது இதனாலும் விளங்குகிறது. ஆம். அநுமதியில்லாமல் அதை யாருக்கும் சொல்லக் கூடாது என்று என் காதலர்

உங்கள் கணவருக்கும் சொல்லியிருந்தது எனக்குத் தெரியும். உயிருக்குயிரான உங்கள் கணவரே அதை உங்களுக்குச் சொல்லக் கூடாது என்றபின் நான் அதை வெளியிடலாமா?"

"நான் யாருக்கும் சொல்ல மாட்டேன்" என்றாள் மங்களம்.

"நீங்கள் யாருக்கும் சொல்ல மாட்டீர்கள் என்பதை நான் நம்புகிறேன். ஆனால் அவருடைய அநுமதியின்றி நான் யாருக்கும் சொல்லக் கூடாது என்று என் காதலர் என்னிடம் சத்தியம் வாங்கிக் கொண்டிருக்கிறாரே! நான் சொல்லலாகுமா? வேண்டுமானால் அவர் அநுமதியைப் பெற்றுக்கொண்டு சொல்லுகிறேன்" என்றாள் நிர்மலா.

தன் கணவரே அநுமதியின்றி சொல்லக் கூடாது என்று சொல்லிவிட்ட விஷயத்தை, நிதான புத்தியில்லாமல் நிர்மலாவிடம் கேட்டது பெரிய குற்றம் என்ற வருத்தத்துடன் மங்களம் தன்னைத் தானே நொந்துகொண்டு, தலையைக் கவிழ்த்துக் கொண்டாள். அதைக் கண்ட நிர்மலா, தான் அந்த ரகசியத்தைச் சொல்ல மறுத்துவிட்டதால் மங்களத்தின் மனம் புண்பட்டு விட்டதோ என்று வருந்தி, "மங்களா! மன்னித்திடுங்கள். அது மிகவும் அபாயகரமான ரகசியம். டங்கன் துரை மிகவும் பொல்லாதவன். அவனுக்கு இந்த ரகசியம் தெரிந்துவிட்டால் உடனே என்னுடைய காதலரையும் குமரேசனையும் கைது செய்து விடுவான். ராணுவ விசாரணை நடத்தி என்ன தண்டனை விதிப்பார்களோ சொல்ல முடியாது" என்றாள்.

"நீங்கள் சொல்லுவது மிகவும் உண்மை. நான் நிதானமில்லாமல் உங்களைக் கேட்டு விட்டேன். மன்னித்திடுங்கள்."

"அப்படி ஒன்றும் மன்னிக்க வேண்டிய குற்றம் நீங்கள் செய்து விடவில்லை. அந்த ரகசியத்தை அறிய ஆசைப்பட உங்களுக்கு உரிமையுண்டு. பொறுத்துக் கொள்ளுங்கள். நானே என் காதலருடைய அநுமதி பெற்று உங்களுக்கு மட்டும் சொல்லுகிறேன்.....பாருங்கள், உங்கள் கணவர் வனமாளிகையில் மறைந்திருந்த விஷயங்கூட இப்போது இவ்வளவு பேருக்குத் தெரிந்திருக்கக் கூடாது. அந்த வனமாளிகையில் உங்கள் கணவர் மறைந்திருக்க இடங் கொடுத்து மிகப் பெரிய உபகாரம் செய்தவர் பால்தேவ் என்னும் வன இலாகாத் தலைவர். வெகு நல்லவர். எங்களுக்கு நெருங்கிய உறவினர். பொறுப்புள்ள பதவியிலிருக்கும் உயர்ந்த உத்தியோகஸ்தர். அவர் நமக்கு உளவாக இருந்தது சர்க்காருக்குத் தெரிந்து விட்டால் அவருக்கு உத்தியோகம் போய் விடும். தண்டனையும் கிடைக்கும் அல்லவா?" என்றாள் நிர்மலா.

"ஆமாம். மிகவும் உண்மை."

"உங்கள் கணவர் இந்தியாவுக்கு வந்த ரகசியம் என் காதலருக்கும் குமரேசனுக்கும் மட்டுந்தான் தெரியும். என் காதலர் என்மீது கொண்டுள்ள அபார நம்பிக்கையினால் எனக்கு மட்டும் சொல்லி இதை நான் என் தாய் தந்தைக்குக் கூடச் சொல்லிவிடக் கூடாதென்று சத்தியம் வாங்கிக் கொண்டார். அதே மாதிரி உங்கள் கணவரிடத்திலும் குமரேசனிடத்திலும் சத்தியம் வாங்கியிருக்கிறார். அதனால்தான் உங்கள் கணவரும் சொல்லவில்லை. உங்களை நான் பரிபூரணமாக நம்புகிறேன். ஆனாலும் அந்தச் சத்தியத்தைக் காப்பாற்ற அவருடைய அநுமதி பெற்றுத்தான் சொல்ல வேண்டும். கவலைப்பட வேண்டாம். அவருடைய அநுமதி பெற்றுச் சொல்லுகிறேன். மேலும் இன்னொரு விஷயம் என்னவென்றால்

என்னுடைய காதலர் எங்கள் திருமணத்துக்குப் பின் உத்தியோகத்திலிருந்து விலகிவிடப் போகிறார். அவருடைய குடும்பமும் எங்கள் குடும்பமும் செல்வமுள்ள குடும்பங்கள். இவர் பட்டாளத்தில் ஊழியம் செய்து சம்பாதிக்கவேண்டிய அவசியமில்லை. ஆனால் குமரேசன், அவருக்கு நடக்கப்போகிற திருமணத்துக்குப் பின்னும் இங்கே உத்தியோகம் செய்யப் போகிறவர்..."

"குமரேசனுக்குத் திருமணம் நடக்கப் போகிறதா?"

"ஆம்."

"எப்போது நடக்கப் போகிறது? யார் மணப்பெண்? குமரேசர் திருமணத்தைப் பற்றி அவருடைய தாயாருக்கும் சகோதரிகளுக்கும்கூடத் தெரியாதே! இது வரையிலும் அதைப் பற்றிய பேச்சே இல்லையே!"

"ஆம் அதுவும் ஒரு ரகசியம். ஆனால் அந்த ரகசியம் உங்களுக்குச் சொல்லக் கூடாதது அல்ல. கேளுங்கள்: குமரேசன் இங்குள்ள ராணுவ விமான நிலையத்தில் நல்ல உத்தியோகத்தில் இருக்கிறார். ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் சம்பளம். விமானங்களை சரிபார்ப்பதில் வெகு கெட்டிக்காரர். அவர் இந்த ஊருக்கு வந்தது முதல் அதே விமான நிலையத்தில் ஒரு சின்ன உத்தியோத்திலிருந்த மோகன்ராம் என்பவருக்கு நெருங்கிய நண்பராகிவிட்டார். மோகன்ராம் 'பென்ஷன்' பெற்றுக் கொண்டு விலகிவிட்டார். அவருக்குக் கிடைத்த 'பென்ஷன்' நூற்று இருபத்தைந்து ரூபாய்தான். அப்போது அவருடைய மனைவி மிகவும் நோயாளியாக இருந்தார். பென்ஷன் பணம் சாப்பாட்டுக்கும் வைத்தியத்துக்கும் போதாமல் சிரமப்பட்டார். அதையறிந்த குமரேசன் அவருக்குப் பல உதவிகள் செய்து தினமும் போய், நோயாகக் கிடந்த அந்த அம்மாளைப் பார்த்து, வைத்தியம்

நடக்க வேண்டியதற்கான வசதிகளைச் செய்து கொடுப் பார். அந்த அம்மாளுக்குக் குமரேசனிடத்தில் அதிக மதிப்பும் பிரியமும் உண்டாகிவிட்டது. குமரேசன் அடிக்கடி அங்கே சாப்பிடுவார்.

மோகனராமுக்குப் பரிமளா என்ற ஒரே மகள். மிகவும் அழகான பெண். நல்ல குணவதி. இப்போது இருபது வயது இருக்கும். தாயார் படுக்கையாகக் கிடந்ததால் அந்தப் பெண்தான் குமரேசனுக்குச் சாப் பாடு பரிமாறுவாள். கொஞ்சம் கொஞ்சமாகக் குமரேச னிடத்தில் கூச்சப்படாமல் பேசிப் பழகிவந்தாள். அந்தப் பெண்ணுக்கும் குமரேசன் விலையுயர்ந்த ஆடைகளும் ஆபரணங்களும் வாங்கிப் பரிசளிப்பார். பரிமளா பரவச மடைவாள். அவளுடைய பெற்றோரும் அதை விகற்ப மாக எண்ணுமல் குமரேசனுடைய அன்பைக் கொண் டாடினர்கள். ஆரம்பத்தில் குமரேசன் வெறும் நட்பு முறையில்தான் உதவிகளும் பரிசுகளும் கொடுத்து வந் தார். பரிமளாவுக்கும் குமரேசனுக்கும் உண்டான பரிசயம் நட்பாக முதிர்ந்து, காதலாகக் கனிந்துவிட்டது. மோகன்ராம் அதைக் கவனிக்கவில்லை. ஆனால் அவ ருடைய மனைவி அதைக் கண்டு கொண்டாள். குமரேசன் வீட்டுக்குள் இருக்கிறவரையிலும் பரிமளா பரபரப்பும் கலகலப்புமாகப் பரிமளிப்பாள். அவர் போனவுடன் தானும் ஒரு நோயாளியாகத் தாயாருக்கருகில் உட் கார்ந்துவிடுவாள். ஆரம்பத்தில் விருந்தாளிபோல் அங்கே வாரத்தில் ஒருநாள் இரண்டு நாள் சாப்பிட்ட குமரேசன், பிறகு தான் சாப்பிட்டுக் கொண்டிருந்த ஹோட்டல் கணக்கைத் தீர்த்துவிட்டு மூன்று வேளையும் மோகன்ராம் வீட்டிலேயே சாப்பிடலானார். அந்த வீட்டி லுள்ள எல்லாருக்கும் வேண்டிய உணவுப் பொருள் களை யெல்லாம் தன் செலவிலேயே வாங்கி வந்தார்.

இப்படி நடந்துவரும் சமயத்தில் பரிமளாவின் தாயாருக்கு நோய் அதிகப்பட்டுவிட்டது. அவள், தான் இறந்து போகக் காலம் வந்துவிட்டதோ என்று எண்ணி, ஒருநாள் மோகன்ராமை அருகில் அழைத்து, தான் இறந்துபோனாலும் பரிமளாவைக் குமரேசனுக்கே மனைவியாக்கி விடும்படி கேட்டுக் கொண்டாள். மோகன் ராமும் உடனே அதை ஒத்துக் கொண்டார். மறுநாளே மோகன்ராம் குமரேசனிடம் சொல்லி, மனைவி இறந்து போகுமுன் திருமணத்தை நடத்திவிட வேண்டும் என்றார். குமரேசன் எல்லையில்லாத மகிழ்ச்சியடைந்து, அப்போதே திருமணச் செலவுக்குவேண்டிய பணத்தைக் கொடுத்துவிட்டார்; திருமணம் நிச்சயமாகிவிட்டது.

மோகன்ராமுடைய தம்பி ஒருவன் வைசிராய் மாளி கையில் டபேதாராக இருந்தான். அவனுக்கு அந்த வேலை கிடைக்கச் செய்தவர் என் தந்தை. அந்த டபேதார் தன்னுடைய அண்ணன் மகள் பரிமளாவை, அவர்களுடைய இனத்தில், அவன் குறித்து வைத் திருந்த ஒரு மாப்பிள்ளைக்குத்தான் கொடுக்கவேண்டும் என்றும் எங்கோ இருந்து வந்த அன்னியனுக்குக் கொடுக்கக் கூடாது என்றும் ரகளை செய்தான். அவன் குறித்திருந்த மாப்பிள்ளை முன்னமேயே ஒரு முறை பரி மளாவைப் பெண் கேட்டவன். பரிமளாவே அவனைத் தனக்குப் பிடிக்கவில்லை என்று தள்ளிவிட்டவன். மேலும் பரிமளா குமரேசனைத் தவிர வேறு யாரையும் மணந்து கொள்ள மாட்டேனென்று சொன்னாள். ஆனாலும் அந்த டபேதார், உறவினர்களைக் கூட்டிக்கொண்டு பரிமளா வைக் குமரேசனுக்குக் கொடுக்கக் கூடாதென்று வாதாட அண்ணன் வீட்டுக்கு வந்தான். வீட்டு வாசலில் பெரிய கூட்டத்துடன் அண்ணனுடைய காரியத்தைக் கண்டித் துக் கூச்சல் போட்டுக் கொண்டிருந்தான். அப்போது

வழக்கம்போல் மோகன்ராமுடைய வீட்டுக்குச் சாப்பிட வந்த குமரேசனை வீட்டுக்குள் நுழையக்கூடாது என்று தடுத்துவிட்டான். அவனோடு தகராறு செய்துகொண்டிருப்பது தன்னுடைய அந்தஸ்துக்குத் தகாது என்பதை உணர்ந்த குமரேசன் வீட்டுக்குள் போகாமல் ஹோட்டலுக்குப் போய்விட்டார். அதற்குப் பிறகு இன்றளவும் குமரேசன் பரிமளா வீட்டுக்குப் போகவில்லை. இது நடந்தது ஆறு மாதங்களுக்கு முன். அப்போது என் காதலர் உங்கள் கணவருடைய மரண தண்டனையை மாற்றுவதற்காகச் சிபார்சுகளுக்காக ஓய்வின்றி ஊரூராக ஒடிக் கொண்டிருந்தார். குமரேசனும் பரிமளாவும் காதலர்களாகிவிட்ட விஷயம் முழுதும் அவருக்குத் தெரியும். குமரேசனும் பரிமளாவும் மணந்துகொள்ள வேண்டும் என்பதில் என் காதலருக்கு மிகுந்த அக்கறையும் உண்டு. ஆனலும் குமரேசனைப் பொறுத்திருக்கும்படிச் சொல்லிவிட்டு உங்களுடைய கணவரைப்பற்றிய காரியமாகவே அலைந்து கொண்டிருந்தார்.

சிம்சன் துரை மூலமாகச் சிபார்சு பேசி, உங்களுடைய கணவரின் மரண தண்டனையைச் சிறைவாசமாக மாற்றியது நிச்சயமான பிறகுதான் அவர் குமரேசன் பரிமளா விவாகத்துக்கான முயற்சிகளை மேற்கொண்டார். எங்களுடைய திருமணத்துக்கு நிச்சயார்த்தம் நடந்தபின் என் காதலர், குமரேசனுக்கும் பரிமளாவுக்கும் உள்ள காதலையும், பரிமளாவின் தாயும் தந்தையும் அவளைக் குமரேசனுக்கே விவாகம் செய்துவைக்க விரும்புவதையும், பரிமளாவின் சிற்றப்பன் செய்யும் இடைஞ்சல்களையும் என் தந்தையிடம் சொல்லி, அந்த டபேதார் சிற்றப்பனைக் கூப்பிட்டு என் தந்தை அவனுக்கு புத்தி சொல்லவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அந்தச் சிற்றப்பன் வைசிராய் மாளிகையில் டபேதாராக

இருப்பது என் தந்தையின் சிபார்சினல். அதனல் என் தந்தையும் அவனுக்குச் சொல்லிச் சரிப்படுத்துவதாக ஒத்துக்கொண்டார்.

உங்களையெல்லாம் எங்கள் திருமணத்துக்கு அழைத்துவர என் தமையனும் குமரேசனும் உங்கள் கணவரும் உங்கள் ஊருக்குப் போன பிறகுதான் என் தந்தை அந்த டபேதாரை இங்கே அழைத்துவரச்செய்து வெகுநேரம் அவனுடன் பேசினர். அவனும் கடைசியில் குமரேசன் பரிமளாவை மணந்துகொள்ளச் சம்மதித்தான். இப்போதுதான் குமரேசன் திருமணம் நிச்சயப் பட்டிருக்கிறது. குமரேசன் உங்களூருக்கு வந்த போது நிச்சயமில்லை. அதனல்தான் தம்முடைய திருமணத்தைப் பற்றி அவர் அங்கே சொல்லவில்லை.

எங்கள் திருமணத்தோடேயே குமரேசன் திருமணத்தையும் நடத்திவிட வேண்டுமென்று என் காதலர் விரும்பினர். என்னுடைய பெற்ருேரும் சம்மதித்தார்கள். ஆனல் பரிமளாவின் தாயார், சாகக் கிடந்தவள் எப்படியோ தப்பிப் பிழைத்துக் கொண்டாள். அவள் தனக்கு எழுந்து நடமாடக் கூடிய தென்பு வந்தபின் திருமணம் நடக்கவேண்டும் என்றும் அத்துடன் சிங்கப்பூரில் இருக்கிற தன் தங்கையும் திருமணத்துக்கு வந்து சேர அவகாசம் கொடுக்கவேண்டும் என்றும் குமரேசனிடமே கேட்டுக் கொண்டாளாம். அதனல் இன்னும் சிலநாளில் குமரேசன் பரிமளா திருமணம் இந்த வீட்டிலேயே நடக்கும். நீங்கள் இருக்கும்போதே நடத்திவிட ஏற்பாடு செய்வார்கள்" என்று முடித்தாள் நிர்மலா.

அந்தக் கதையை அங்காந்து கேட்டுக்கொண்டிருந்த மங்களம், வெகு ஆவலோடு அந்தப் பரிமளாவைப் பார்க்க ஆசைப்பட்டாள். அடுத்த நாள் ஊரைச் சுற்றிப் பார்க்கப்போகும்போது பரிமளாவின் வீட்டுக்கும் போய் வரலாம் என்று நிர்மலா சொன்னுள்.

அன்பு அன்ன அற்புதம்!

திருமணம்

அதற்கு முன் அப்படிப்பட்ட திருமண வைபவம் டில்லியில் நடந்ததில்லை யென்று சொல்லும்படி, அவ்வளவு கோலாகலத்துடன் ஜெயபால்-நிர்மலா திருமணம் நடைபெற்றது.

வானளாவிய கொட்டகை; அதில் வகை வகையான சிங்காரிப்புகள்; வண்ணம் வண்ணமான மின்சார விளக்குகளும் விசிறிகளும்; விதம் விதமான ரத்தினக் கம்பள விரிப்புகள்; ஆயிரக் கணக்கான நாற்காலிகள்; கண்ணைக் கவரும் சித்திரங்கள்; கருத்தைக் கவரும் சிற்பங்கள்; அன்பு நிறைந்த வாசகங்கள்; அருள் நிறைந்த பொன்மொழிகள். இப்படியாக, மணக்கூடம் கண்கொள்ளாக் காட்சியாக அலங்கரிக்கப் பட்டிருந்தது. ஆங்கிலேய நண்பர்களுக்குத் தனி இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. எல்லாரும் நன்றாகப் பார்க்கக் கூடியதாக, மணவறை ஒரு மேடையின்மீது சிங்காரிக்கப் பட்டிருந்தது. திருமணத்துக்கு இரண்டு நாட்களுக்கு முன்னிருந்தே மணக் கொட்டகையின் அழகைப் பார்க்கக் கூட்டம் கூட்டமாக ஜனங்கள் குவிந்தார்க ளென்றால் அந்தக் கொட்டகையின் சிறப்பை என்னென்று கூறுவது.

டில்லியிலிருந்த ஆங்கிலேய நண்பர்கள் அனைவரும் திருமணத்துக்கு வந்திருந்தார்கள். வைசிராய்க்குப் பிரதிநிதியாக ஒரு உத்தியோகஸ்தரும், சேனாதிபதிக்குப் பதிலாக ஒருவரும் வந்திருந்தார்கள். சிம்சன் துரையின் குடும்பம் முழுதும் வந்திருந்தது. ஜேகப் துரையின் தமையன் தாமஸ் துரையும் குடும்பத்தோடு வந்திருந்

தார். ஆங்கிலேயரை வரவேற்று உபசரிக்கும் வேலையை ஜேகப் துரையும், ஜெயசந்திராவும் கவனித்துக் கொண்டார்கள். மற்றவர்களை கவனிக்கும் பொறுப்பை ஜெயராமும், குமரேசனும் மேற்கொண்டார்கள். நிர்மலாவின் தாயாரும் மங்களமும் பெண்களை வரவேற்றார்கள்.

மிகவும் குறிப்பிடத் தகுந்ததாக டங்கன் துரையும் வந்திருந்தார். அவர் பர்மாவிலேயே ஜெயபால் ரஜா கேட்ட போது, அவரும் திருமணத்துக்கு வருவதாகச் சொல்லியிருந்தார். டங்கன் துரையை ஜெயபாலே நேரிற் சென்று அழைத்திருந்தான். ஜெயபால் சங்கரனுக்கு நண்பன் என்பதுகூட அவருக்குத் தெரியாது. ஜெயபால் சங்கரனுக்குச் செய்துள்ள உதவியின் ரகசியத்தை அறிந்தால், அந்தக் கல்யாணக் கூட்டத்திலேயே ஜெயபாலைக் கைது செய்வார்.

அந்தக் கல்யாணக் கூடத்தில் டங்கன் துரை வீற்றிருந்ததைவிடச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டியது, அதே கொட்டகையில் ஷங்கர்ஜியும் சையத் காதரும் முனிஜியும் அமர்ந்திருந்ததுதான். மறந்து விடாமல் ஜெயபால் விடுதலைபெற்ற சையத் காதரையும் முனிஜியையும் சிறைவாசலிலேயே சந்தித்து, அழைத்து வந்து, தன்னுடைய திருமணம் நடக்கிற வரையிலும் அவர்கள் டில்லியிலேயே தங்கியிருக்க ஏற்பாடு செய்து, அவர்களைச் 'சாந்தினி சௌக்' என்ற டில்லியின் முக்கிய பகுதியில், ஒரு நண்பர் வீட்டில் இருக்கச் செய்திருந்தான். அவர்களை அங்கே தங்கியிருக்கச் செய்த பிறகுதான் ஜெயபால் வனமாளிகைக்குச் சென்று, சங்கரனை அழைத்து வந்து தன்னுடன் வைத்துக்கொண்டது.

தங்களுடன் சேர்ந்தே சிறையிலிருந்து வெளியில் வந்து, இந்தியாவுக்குப் போய்ச் சேர மணிபுரி பாதைக்குத் தங்களுக்கு வழிசொல்லிக் கொடுத்து, பணமும்

தந்து, தானும் பின்னால் வருவதாகச் சொன்ன ஷங்கர்ஜி, தங்களுடன் வராமல் எங்கே போனானே, என்னவானானே என்ற ஏக்கம் சையத் காதருக்கும் முனிஜிக்கும் இருந்துகொண்டே யிருந்தது. டங்கன் துரை அவர்களிடம் ஷங்கர்ஜி எங்கே இருக்கிறான் என்ற உளவு சொல்லும்படி கேட்டதனால், ஷங்கர்ஜி பிடிபடவில்லை என்பதைத் தெரிந்து கொண்டார்கள். ஆனால், அவன் தனியே மணிபுரிப் பாதையில்வந்து வனவிலங்குகளால் ஏதாவது அபாயம் நேர்ந்திருக்குமோ என்றும் நினைத்தார்கள். தங்களைச் சிறையிலிருந்து விடுவித்தவன் அவன். அவன் சௌக்கியமாக இருக்கிறானா என்று அறிய அவர்களுக்கு மிகுந்த ஆசை. ஜெயபாலைக் கேட்க விரும்பினார்கள். ஆனால் அவர்கள் மூவரும் சிறையிலிருந்து தப்பி வந்த இரவுக்கு முந்தின நாள் மாலை ஐந்து மணிக்கே ஜெயபால் சென்னைக்குப் போன சேனைக் கப்பலில் தானும் ரஜாவில் போவதாக அவர்களிடம் சொன்னான். அதனால் சிறையிலிருந்து வெளியில் வந்த ஷங்கர்ஜி எங்கே போனான் என்பது, ஜெயபாலுக்குத் தெரிந்திருக்க முடியாது என்று நினைத்தார்கள். ஆனாலும் ஜெயபால் அவர்களைச் சிறைச்சாலை வாசலில் வரவேற்றவுடனே சையத் காதர் முதல் கேள்வியாக "ஷங்கர்ஜியைப் பற்றிய தகவல் ஏதாவது கிடைத்ததா?" என்றான். ஜெயபால் அதற்கு நேரான பதில் சொல்லாமல் "ஷங்கர்ஜி இருக்கிற இடம் யாருக்கும் தெரியாது. அவர் எங்கிருந்தாலும் என் திருமணத்துக்கு வந்து சேரும்படியான ஏற்பாடுகளைச் செய்கிறேன்" என்றான்.

அதைக் கேட்ட அவ்விருவரும் ஷங்கர்ஜி இருக்கிற இடம் ஜெயபாலுக்கும் தெரியாதாக்கும் என்று எண்ணிக் கொண்டார்கள். அதற்குப் பின் திருமணக் கொட்ட

கையில்தான் இப்போது அவர்கள் சங்கரனைச் சந்தித்தார்கள். சங்கரன் பழநியில் முடியிறக்கிக் கொண்டதாலும், இப்போது உடம்பு ஊறியிருப்பதாலும் அவர்கள் உடனே அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. கண்டு கொண்டதும் கட்டித் தழுவிக் கரைகாணக் களிப் படைந்து அவன் சுகமாக இருப்பதற்காகக் கடவுளுக்கு வணக்கம் செலுத்தினார்கள். கல்யாண வைபவங்களைக் கூட மறந்துவிட்டு, சையத் காதரும் முனிஜியும் தாங்கள் மணிபுரிப் பாதையில் இந்தியாவுக்கு வந்துசேர்ந்த கதைகளைச் சொன்னார்கள். பிறகு மீண்டும் சிக்கிக்கொண்ட விதத்தையும் விவரித்தார்கள். அதைச் சங்கரன் மிக்க அநுதாபத்தோடு கேட்டு ரசித்தான். அவர்களுடைய வரலாறுகளைச் சொல்லிவிட்டுச் சையத் காதர் மிகவும் ஆவலோடு, அவன் எப்படி இந்தியாவுக்கு வந்து சேர்ந்தான் என்பதை அறிய விரும்பினான். சங்கரன் ஒரு புன்சிரிப்புடன் அதைப் பற்றிப் பிறகு பேசிக்கொள்ளலாம் என்று மழுப்பி விட்டுக் கல்யாண வைபவத்தை கவனிக்கும்படி அவர்களைக் கேட்டுக் கொண்டதுடன் பேச்சை மாற்றி, நிர்மலாவின் நற்குணங்களையும் ஜெய சந்திராவின் சிறப்புகளையும் புகழ்ந்து பொழுதைப் போக்கி விட்டான்; சையத் காதரும் கல்யாணச் சடங்குகளுக்குப்பின் கேட்டுக் கொள்ளலாமென்று எண்ணினான். ஆனால், அதற்குப்பின் அவர்கள் ஏகாந்தத்தில் சந்திக்க முடியவில்லை.

திருமணச் சடங்குகள் நடந்தன. ஜெயபாலும், நிர்மலாவும் மதனும் ரதியும் போல் மணவறையில் அமர்ந்திருந்த அழகு, பார்ப்பவரைப் பரவசப் படுத்தக் கூடியதாக இருந்தது. மணப் பெண்கள் வழக்கமாகத் தலையை நட்டுக் கொண்டு இருப்பதுபோல் அல்லாமல், நிர்மலா எல்லோரையும் பார்த்துக் கொண்டு, இனிய

முகத்துடன் புன்முறுவல் செய்து கொண்டிருந்தாள். அடிக்கடி மங்களாம்பாளைப் பார்த்து மகிழ்ச்சி காட்டுவாள்.

திருமணச் சடங்குகள் மூன்று நாளும், அதற்குப் பின் பல விருந்துகள் நான்கு நாட்களும் நடந்தன. இந்த ஏழுநாளும் எத்தனையோ விதமான வாத்தியக் கச்சேரிகளும், நடனங்களும் நடந்தன. வடநாட்டு வாத்தியங்களும் ஆடலும், பாடலும், தென்னாட்டுக் கோபாலகிருஷ்ணனுடைய கோஷ்டிக்குப் புதுமைகளாகத்தான் இருந்தன.

கல்யாணச் சந்தடிகள் ஓய்ந்தபின் கோபாலகிருஷ்ணர் முதலானவர்கள் லாகூர், பெஷாவர், சிம்லா, ஹரித்துவாரம் முதலான பல இடங்களைப் பார்க்க விரும்பினர்கள். ஜெயபாலும், நிர்மலாவும், ஜெயராமும், அவர்களுடன் உல்லாசப் பிரயாணம் செய்து பல ஊர்களைப் பார்க்கச் செய்தார்கள். பதினைந்து நாட்களுக்கும் அதிகமாக அனேக இடங்களைப் பார்த்துவிட்டுத் திரும்பி டில்லிக்கு வந்தார்கள். அதற்குள் குமரேசன்-பரிமளா திருமணம் கூடிவிட்டது. சிங்கப்பூரிலிருந்து வரவேண்டுமென்ற பரிமளாவின் சிற்றன்னையும் வந்துவிட்டாள். பரிமளாவின் தாயாரும் மிக்க நலமடைந்து நடமாடலானாள். குமரேசன் திருமணத்தைக் கருதியே, ஜெயபால் திருமணம் நடந்த மணக் கொட்டகை கலைக்கப் படாமல் இருந்தது. இவர்கள் டில்லிக்குத் திரும்பிவந்த மறுவாரம், அதே மணவறையில் குமரேசன் திருமணத்தை ஜெயசந்திராவே முன்னின்று நடத்தி வைத்தார்.

குமரேசனுடைய தாயாருக்கு மட்டும், தன் மகன் சொந்தக்காரருள் ஒரு பெண்ணை மணந்து கொள்ளாமல் தமிழே தெரியாத வடநாட்டுப்பெண்ணை வரித்துக்கொண்

டதில் வருத்தம்தான். ஆனாலும் பரிமளாவின் அழகும் பணிவும், தணிவும், அதற்குப் பரிகாரம் செய்துவிட்டன.

சங்கரனும் மங்களமும் அவர்கள் பெற்றோரும் மற்றவரும் ஊருக்குத் திரும்பவேண்டிய சமயம் நெருங்கியது. வந்தவர்கள் எல்லாரும் கயா, பிரயாகை, காசி முதலான தலங்களை தரிசித்துக் கொண்டு கல்கத்தாவுக்குச் சென்று பூரி-ஜெகந்நாத்தைத் தரிசித்துக்கொண்டு, சென்னைக்குப் போவது என்று திட்டமிடப்பட்டது. அவர்களுடன் குமரேசனும் பரிமளாவும் ஊருக்கு வந்து வர வேண்டுமென்று, குமரேசனுடைய தாயாரும் மற்றவர்களும் விரும்பியபடி, அவர்களும் பயணமானார்கள்.

அன்னபூரணியம்மாளும், கோபாலகிருஷ்ணரும், ஜெயபால் நிர்மலாவுடன் தமிழ்நாட்டிற்கு வந்து தம்முடன் சிலகாலம் தங்கியிருக்க வேண்டுமென்று அழைத்தார்கள். உடனே ஜெயபால் "நீங்கள் அழைக்காவிட்டாலும், நானும் நிர்மலாவும் நிச்சயமாக வரத்தான் போகிறோம். இப்போதே உங்களுடன் புறப்பட முடியவில்லையே என்று வருத்தப்படுகிறேன். நான் என்னுடைய ராணுவ உத்தியோகத்திலிருந்து விலகிக் கொள்ள அதற்கான முயற்சிகளை உடனடியாகச் செய்ய வேண்டியிருக்கிறது. உத்தியோகத்தை விட்டுவிட்டால் உங்களுடன் எவ்வளவு காலம் வேண்டுமானாலும் தங்கலாமல்லவா? வெகு சீக்கிரம் வருகிறோம்" என்று உறுதி கூறினான்.

"இவர் ஷங்கர்ஜியை மறந்தாலும், நான் மங்களாவை மறக்க மாட்டேன். இவர் தாமதப்படுத்தினாலும், நான் துரிதப்படுத்தி அங்கே வருவோம். இனிமேல் அடிக்கடி நீங்களும் இங்கே வரவேண்டும்" என்றாள் நிர்மலா. மங்களம் உடனே நிர்மலாவைத் தழுவிக் கொண்டாள்.

பிறகு கோபாலகிருஷ்ணர், ஜெயசந்திராவையும் அவருடைய மனைவியையும், குழந்தைகள் எல்லாரோடும் வசந்தபுரிக்கு வரவேண்டுமென்று அழைத்தார். அவர்களும் வருவதாகச் சொன்னார்கள்.

விருந்தினர்கள் புறப்படுவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னால், நிர்மலா மங்களாம்பாளை மாடிக்கு அழைத்துக்கொண்டு போய் ஒரு அறைக்குள் கதவைத் தாளிட்டுக்கொண்டு ஏகாந்தமாக "மங்களா! உங்கள் கணவர் எப்படி இந்தியாவுக்கு வந்துசேர்ந்தார் என்ற பரம ரகசியத்தை உங்களுக்குச் சொல்லலாமா என்று என் கணவரை அனுமதி கேட்டேன். அவர் உடனே 'மங்களா மிகவும் நம்பத் தகுந்த பெண். வெகு புத்திசாலி. அவளுக்குமட்டும் அந்த விவரத்தை நீ சொல்லலாம். ஆனால் அவள் அதை வேறு யாருக்கும் எப்போதும் சொல்லிவிடக் கூடாது என்பதையும் சத்தியபூர்வமாகச் சொல்லு' என்று அனுமதி தந்துவிட்டார். நான் அதைச் சொல்லுகிறேன். அதை நீங்கள் யாருக்கும் சொல்லக் கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்றால் அந்த ரகசியம் வெள்ளைக்காரருக்கு எப்போது தெரிந்தாலும், நமக்கு ஆபத்து வந்துவிடும்" என்றாள்.

"நிர்மலா! எனக்கு மாங்கல்ய பிச்சை அருளிய அந்தப் பார்வதி பரமேசுவரன் சாட்சியாக, அந்தப் பாக்கியம் எனக்குக் கிடைப்பதற்குக் கண்கண்ட தெய்வமாக ஒப்பரிய உதவி செய்த உங்கள் கணவர் மீதும், உங்கள் மீதும் ஆணையிட்டுச் சொல்லுகிறேன். நீங்கள் சொல்லும் ரகசியத்தை என் உயிர் உள்ளளவும் யாருக்கும் எப்போதும் சொல்ல மாட்டேன். என் கணவரே இனிமேல் அதை எனக்குச் சொன்னாலும் நீங்கள் எனக்குச் சொல்லிவிட்டதாகச் சொல்லமாட்டேன்" என்றாள்.

நிர்மலா, அந்த ரகசியங்களை வெகு விஸ்தாரமாக வெகு நேரம் சொன்னாள். வரிசைக் கிரமத்தில் தொடர்ச்சியாகச் சொல்ல நினைவுக்கு வராவிட்டாலும் அதைப் பற்றிய எல்லா நுணுக்கங்களையும் துண்டு துண்டாகவேனும் நிர்மலா சொல்லி விட்டாள்.

அப்படித் துண்டு துண்டாக, முன்னும் பின்னுமாக நிர்மலா மங்களத்துக்குச் சொன்னதை நாம் வரிசைக் கிரமத்தில் தொகுத்துச் சொல்லுவோம்:—

எல்லாம் அன்பு செய்த அற்புதந்தான். அன்பு என்பதன் தன்மையை அமரரும் அறிய முடியாது என்று ஆன்றோர் சொன்ன உண்மைக்குச் சங்கரலிங்கன் உயிர் தப்பிய விதம் ஒரு நல்ல சான்றாகும். அன்புதான் நட்பு என்பதற்கு ஆதாரம். அன்புதான் காதல் என்பதன் அடிப்படை. அன்புதான் அருளாக விரிவது. அந்த அருள்தான் ஆண்டவனை உணர்த்துவது. அந்த உணர்வுதான் ஜீவர்களின் ஆன்மநேய ஒருமைப் பாட்டை உறுதிப்படுத்துவது. அன்பு உள்ள இடத்தில் துன்பமும் இன்பமாகும். அன்பு இல்லாத இடத்தில் இன்பமும் துன்பமாகிவிடும்.

உயிருள்ள எல்லாப் பிராணிகளிடத்தும் இந்த அன்புணர்ச்சி ஓரளவேனும் இருப்பது உண்மை. ஆனாலும் அது மனிதர்களிடத்தில்தான் அதிகமாகத் துலங்குகிறது. அதற்குக் காரணம் மனிதருக்குத்தான் ஆறாவது அறிவாகிய பகுத்தறிவு இருக்கிறது என்று சொல்லலாம். ஆனால் பல சமயங்களில் இந்த பகுத்தறிவுக்கும் எட்டாததாக இருக்கிறது, அன்பு என்ற உணர்ச்சி. மனிதருக்குள் அன்புத் தொடர்பு உண்டாவதும், அது வலிமையடைவதும் பெரும்பாலும் ஒரு

காரணத்தை முன்னிட்டுத்தான். அப்படிப்பட்ட சமயங்களில் அது பகுத்தறிவுக்கு எட்டுகின்றது. ஆனால், ஒரு காரணமும் இல்லாமல் முன்பின் அறியாத இருவர் ஒருவருக்கொருவர் அன்புடையராகிப் பிரிக்கமுடியாத பாசமாகப் பற்றிக்கொள்ளும் உறவுகள் பல உண்டு. அப்போது நம் பகுத்தறிவு பயன்படுவதில்லை. அப்படி நம்முடைய அறிவுக்கு எட்டாத உறவுக்கு வேறுகாரணம் சொல்லமுடியாமல் 'அது அவர்கள் முகத்தில் முழித்த நேரம்' என்று மட்டுந்தான் சொல்ல முடிகிறது. அதனால் தான் 'அன்பு என்பது ஒன்றின் தன்மை அமரரும் அறிந்ததன்று' என்று கல்வியிற் பெரிய கம்பன் பாடியது.

அப்படிக் காரணம் கண்டுபிடிக்க முடியாததாக ஜெயபாலும் சங்கரனும் ஒருவருக்கொருவர் 'முகத்தில் முழித்த நேரம்' என்று மட்டும் சொல்லும்படி, அவர்களுடைய முதல் சந்திப்பிலேயே பற்றிக்கொண்ட அன்பின் பாசந்தான் சங்கரலிங்கத்தின் உயிரைக் காப்பாற்றியது. அதுதான் மங்களாம்பாளுக்கு மாங்கல்ய பிச்சை கிடைக்கச் செய்தது.

மங்களாம்பாளின் தெய்வ பக்தியும் சிவன்கோயில் சேவையும் பார்வதித் தோத்திரப் பாராயணமும் அவளுடைய மாங்கல்யத்தைக் காத்ததாகச் சொன்னாலும் சொல்லலாம். அல்லது அன்னபூரணியம்மாளின் புண்ணியங்கள்தாம் மகனுடைய உயிரைக் காத்தது என்று சொன்னாலும் சொல்லலாம். அப்படியெல்லாம் சொல்லுவது தெய்வத்தினிடத்திலும் புண்ணிய காரியங்களிலும் நமக்கிருக்க வேண்டிய நம்பிக்கைக்கு ஒத்ததுதான். ஆனால் மங்களாம்பாளின் சிவ சேவையும் அன்னபூரணியம்மாளின் புண்ணியமும் இதற்கு எப்படி உதவி செய்தன என்பதை நாம் எண்ணிப்பார்க்கவும் முடியாது. அது மனோவாக்குக் காயங்களுக்கு எட்டாத விஷயம்.

அதனால், மங்களாம்பாளின் சிவ சேவையினாலோ, அன்னபூரணியம்மாளின் புண்ணியத்தினாலோ சங்கரன் உயிர் தப்பினான் என்பது வெறும் நம்பிக்கைதான். அந்த நம்பிக்கையை நாம் இகழ்ந்துவிடக் கூடாது. சங்கரன் உயிர் தப்பியது மங்களத்தின் நோன்பின் பயனாகவோ, அல்லது அன்னபூரணியின் புண்ணியத்தின் பயனாகவோ, அல்லது இவை இரண்டும் சேர்ந்த தன் பயனாகவோ கிடைத்தது அல்லவென்றே சொன்னாலும், சங்கரனுக்கு நேரிட்ட பிராணாபாயத்தால் அன்னபூரணியம்மாளுக்கும் மங்களாம்பாளுக்கும் உண்டான மகத்தான மனவேதனையைச் சகித்துக்கொள்ள அவர்களுக்குச் சக்தி தந்தது அந்த நம்பிக்கைதான். அதனால் அந்த நம்பிக்கையை வாழ்த்துவோம். மங்களத்தின் நோன்பும் அன்னபூரணியின் புண்ணியமும் தோன்றுத்துணையாக ஜெயபாலையும் மற்றவர்களையும் தூண்டியிருக்கலாம்.

ஆனாலும் உண்மையில் சங்கரனுடைய உயிரைக் காப்பாற்றியது ஜெயபாலின் அன்பு செய்த அற்புதந்தான். பர்மாவில் நேதாஜியுடன் சேர்ந்து இங்கிலீஷ் காரருக்கு விரோதமாகச் சண்டை செய்த எல்லாருக்கும் மன்னிப்பளிக்க வேண்டுமென்று மகாத்மா காந்தி வைசிராயிடம் உறுதிமொழி வாங்கினதால்தான் சங்கரன் விடுதலையடைந்தான். என்றாலும் காந்தியடிகள் வைசிராயைச் சந்திப்பதற்குப் பல மாதங்களுக்கு முன்னாலேயே பர்மாவில் சுட்டுக் கொல்லப் பட்டிருக்க வேண்டிய சங்கரன், மரணதண்டனை நிறைவேற்றப்படுவதற்கு முன் சிறையிலிருந்து தப்பி ஓடிவிடத் தூண்டியதும் துணைபுரிந்ததும் ஜெயபாலின் அன்புதான். சிறையிலிருந்து ஓடிவிட்ட அவனை எப்படியாவது பிடித்துவிட வேண்டுமென்று வெகுபாடுபட்ட ரகசியப் போலீஸார்

கண்டுபிடிக்க முடியாதபடி, சங்கரனை மறைத்து வைத்திருந்த மாபெரும் காரியத்தைச் சாதித்ததும் ஜெயபாலின் அன்புதான். தனக்கு மாமனார் ஆகப்போகிற ஜெயசந்திராவின் மூலமாகச் சிம்சன் துரை சிபார்சு பேசி, சங்கரனுக்குக் கருணைகாட்டி மரணதண்டனையைச் சிறைவாசமாக மாற்றிவிடச் சேஞ்திபதியை ஒத்துக் கொள்ளச் செய்ததும் ஜெயபாலின் அன்புதான்.

சங்கரனுக்குக் கருணைகாட்டவே கூடாதென்று டங்கன் துரை செய்த பிடிவாதம் வெற்றியடைந்து, சேஞ்திபதியின் கருணை சிபார்சை வைசிராய் ஒத்துக் கொள்ளாமல் மரண தண்டனை ஊர்ஜிதப் படுத்தப் பட்டிருந்தாலும் இருக்கலாம். எப்படியோ காந்தியடி கள் வைசிராயைச் சந்தித்த நாள் வரையிலுமாவது சங்கரனை உயிரோடிருக்கச் செய்தது ஜெயபாலின் அன்பு செய்த அற்புதந்தான்.

சங்கரனுடு மரண தண்டனை அடைய வேண்டிய சையத் காதர், முனிஜி ஆகிய அவர்களுடை உயிரையும் காப்பாற்றியது ஜெயபாலின் அன்புதான். சிறையி லிருந்து ஓடிவிட்ட சங்கரனை எப்படியாவதுகண்டுபிடித்து அவனை முதலில் சுட்டுக்கொல்ல வேண்டும் என்பது தான் டங்கன் துரையின் தளரா முயற்சி. சையத் காதரும் முனிஜியும் சிக்கிக் கொண்டதுபோல் ஷங்கர்ஜி யும் சிக்கிக் கொள்வான், அதன் பிறகு மூவரையும் சுட்டுவிடலாம் என்றே டங்கன் எண்ணியிருந்தார். மேலும், ஷங்கர்ஜி எங்கே யிருக்கிறான் என்பது சையத் காதருக்கும் முனிஜிக்கும் தெரிந்துதானிருக்க வேண் டும்; அவர்களைப் பயமுறுத்தி அவகாசம் கொடுத்தால் ஷங்கர்ஜியைப் பிடிக்க அவர்கள் உளவு சொல்லி விட லாம் என்றும் நம்பித்தான் அவர்களுடைய தண்டனையை நிறைவேற்றத் தாமதித்தது. அதனால் ஜெயபால்

சங்கரனை மறைத்து வைத்திருந்த காரியந்தான் இவர் கள் பிடிபட்ட பிறகும் உயிரைக் காப்பாற்றியது.

சங்கரனுடைய உயிரைக் காப்பாற்ற மூலகாரண மாக இருந்தது ஜெயபால் சங்கரன்மீது கொண்டிருந்த தெய்வீக அன்புதான். ஆனாலும் ஜெயபாலின் முயற்சி வெற்றிபெறத் துணைபுரிந்தது வேறு பலருடைய அன்பும் சேர்ந்ததுதான். அந்த வேறு பலருடைய அன்புகளும் துணைபுரியக் காரணமாக இருந்ததும், ஜெய பால் அவர்களுக்குச் செய்திருந்த அன்புக் காரியங்கள் தாம். அப்படிப்பட்ட அன்புகளின் கூட்டுறவால்தான் ஜெயபால் இந்த அபூர்வ காரியத்தைச் சாதிக்க முடிந் தது. இல்லாவிட்டால் அவ்வளவு வல்லமையுள்ள ஆங்கில ஆட்சியின் கட்டுக்காவல்களை ஏமாற்றி யிருக்க முடியுமா?

சங்கரனும் ஜெயபாலும் முதல் சந்திப்பிலேயே 'கண்டதும் காதல்' என்பது போலக் காரணம் சொல்ல முடியாத அன்புப் பாசத்தால் கட்டுண்டவர்களானார்கள். குண்டுபட்டுக் குற்றுயிராய்ப் புதரில் மறைந்து கிடந்த ஜேகப் துரையை நள்ளிரவில் தேடியெடுத்து ஆஸ்பத் திரிக்குக் கொண்டுபோய் உயிரைக் காப்பாற்றியதால், அவர் ஜெயபாலின் அன்புக்குக் கட்டுண்டவரானார். குமரேசன் முன்னே விமான நிலையத்தில் செய்துவிட்ட மன்னிக்க முடியாத ஒரு குற்றத்தை ஜெயபாலும் சங்கரனும் சேர்ந்து செய்த சிபார்சினால் அதிகாரிகள் மன்னித்து விட்டார்கள். அதனால் குமரேசன் ஜெயபாலும் சங்கரனும் காட்டிய அன்புக்குக் கட்டுப் பட்டவனானான். ஜெபயால் எப்போதும் சிப்பாய்களிடத் திலும் சிப்பந்திகளிடத்திலும் மிக்க அன்புடையவனாக, அவர்களுக்கு வேண்டிய சலுகைகளைச் செய்வான். அதனால், அவனிடம் வேலை பார்த்த எல்லாரும் அவ

னுடைய அன்புக்குக் கட்டுப்பட்டவர்களாகவே இருந்தார்கள். அத்துடன் அகஸ்மாத்தாக ஒரு கப்பலின் தலைவனும் ஜெயபாலின் அன்பிற்குக் கட்டுப்பட்டவனாகவே இருக்கக் கிடைத்தது. இத்தனை பேருடைய அன்பும் சேர்ந்ததுதான் சங்கரனைப் பர்மாச் சிறைச்சாலையிலிருந்து இந்தியாவுக்குக் கொண்டுவந்து சேர்த்தது. சங்கரன் சிறையிலிருந்து ஓடிப்போன விதத்தை டங்கன் துரை அறிய முடியாமற் செய்துவிட்டதும் இவர்களுடைய அன்பின் கூட்டுறவுதான். அது எப்படி யென்பதைப் பார்ப்போம்:—

யாரிடமும் அன்பைக் கூடாத
நிகழ்ச்சியம்

விளக்கம்

பர்மா யுத்தத்தில் ஜெயபாலும் சங்கரனும் வெவ்வேறு போர் முனைகளுக்கு அனுப்பப்பட்டார்கள். சங்கரன் நேதாஜியுடன் சேர்ந்து கொண்டது ஜெயபாலுக்குத் தெரியாது. நேதாஜியின் முயற்சிகள் தோல்வியுற்று, சங்கரன் ராணுவக் கைதியாகப் பிடிபட்டான். அவனையும் அவனுடன் பிடிபட்ட கைதிகளையும் ஜெயபால் மிக்க செல்வாக்குடன் இருந்த பாசறைக்குக் கொண்டு வரப்பட்ட போதுதான் சங்கரனைக் கைதியாகக் கண்ட ஜெயபால் அதிர்ச்சியடைந்தான். அவன் ஆங்கிலேய அதிகாரிகளுக்கு மிகவும் நம்பத் தகுந்தவனாக இருந்ததால் சங்கரனையும் அவனுடன் கொண்டு வரப்பட்ட கைதிகளையும் சிறையில் வைத்துக் கண்காணிக்கும் பொறுப்பு அவனிடம் விடப்பட்டது. அப்போதே ஜேகப் துரையும் ஜெயபாலுக்குக் கீழ் அவனுடைய காரியாலய வேலைகளைக் கவனிக்க வேண்டியவராக இருந்தார். தான் சங்கரனுக்கு அன்பன் என்பதைச் சிறிதும் காட்டிக் கொள்ளாமலேயே ஜெயபால் சங்கரனுக்கு வேண்டிய சௌகரியங்களைக் கவனித்துக் கொண்டான். பிறகு ஜேகப் துரையின் ஒத்துழைப்புடன் சங்கரனைத் தப்புவிக்கப் பல முயற்சிகளில் ஈடுபட்டு இரவு பகலாக உழைத்தான். அவனும் ஜேகபும் செய்த எல்லா முயற்சிகளும் தோல்வியுற்று சங்கரனையும், ஸ.சயத்காதரையும் முனிஜியையும் சுட்டுக் கொன்று விடும்படியே கடைசியான தீர்ப்பு வந்த பின், ஜெயபால் மிகவும் மனம் உடைந்தவனாகத் தன்னுடைய முயற்சிகளையெல்லாம் முறியடித்தது டங்கன் துரைதான் என்று கோபம்

பொங்கி, டங்கன் துரையைச் சுட்டுக் கொன்றுவிட்டுத் தானும் சங்கரனைச் சுட்டுக் கொல்லுமுன் மாண்டு போவதாக வெறி கொண்டான். அதைச் சங்கரனிடத்திலும் வெளியிட்டான். அதைத் தடுத்து சங்கரன் சொன்ன சமாதானங்களால் அப்படிச் செய்வதில்லையென்று வாக்களித்தான். அந்தக் கொதிப்பு அடங்கின பின், டங்கன் மீது ஆத்திரப்படுவதைவிட்டு எப்படியாவது சங்கரனைக் காப்பாற்றிவிட வேண்டும் என்ற துணிச்சல் உண்டாகி விட்டது.....சையத்காதரும் முனிஜியும் தம்மைச் சுட்டுக் கொல்லு முன் தம்முடைய உறவினர்களைப் பார்க்க வேண்டும் என்ற விருப்பத்தை டங்கன் துரையிடம் சொல்லி, வர வேண்டிய உறவினர்களின் விலாசங்களைத் தெரிவித்தார்கள். ஆனால் சங்கரன், தான் எந்த உறவினரையும் பார்க்க விரும்பவில்லையென்று டங்கன் துரையைத் துச்சமாகப் பேசி விட்டான். ஆனாலும் டங்கன் மற்ற இருவருடைய உறவினரும் வந்து பார்த்த பிறகுதான் சங்கரனையும் சுடவேண்டும் என்றே தீர்மானித்தான். அதையறிந்த ஜெயபால், அந்த உறவினர்கள் வருவதற்குள் சங்கரனைச் சிறையிலிருந்து ஓடிவிடச் செய்துவிடத் தீர்மானித்தான். அப்படித் தப்பி ஓடச் செய்துவிட்டாலும் அவன் எப்படி இந்தியாவுக்குப் போய்ச் சேர முடியும் என்பதையெல்லாம் எண்ணிக் குழம்பிக் கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில் பர்மாவிலிருக்கும் சிப்பாய்களில் ஐயாயிரம் பேர்களை அவசரமாக இந்தியாவுக்கு அனுப்ப வேண்டும் என்று டங்கன் துரைக்கு உத்தரவு வந்தது. அந்த ஐயாயிரம் சிப்பாய்களை விரைவில் சென்னைக்கு அனுப்பும் பொறுப்பை டங்கன் ஜெயபாலிடம் ஒப்படைத்து, ஜெயபாலின் ராஜ விசுவாசத்தையும் போர் வீரத்தையும் பாராட்டிப் பரிசு வழங்கப் போவதாகவும் சொன்னார்.

அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு ஜெயபால், தன் தாயாரைப் பார்த்து வரவேண்டும் என்று ரஜா வாங்கிக்கொண்டுக் கடைசியாகப் புறப்படும் சேனைக் கப்பலில் அவனும் இந்தியாவுக்குப் போக டங்கனிடம் அனுமதியும் பெற்றுக் கொண்டான். தான் போகும் கப்பலில் சங்கரனையும் ஒரு சிப்பாய் போலவோ அல்லது தன்னுடைய சேவகன் போலவோ உருமாற்றிக் கூட்டிக் கொண்டு போய்விடுவதென்று உறுதி கொண்டான். அந்த யோசனையை ஜேகப் துரைக்கும் சொன்னான். சங்கரன் தப்பித்துக் கொள்வதில் ஜேகப் துரைக்கும் சந்தோஷந்தான். ஆனால் இந்த யோசனையை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. " கப்பல் சென்னைக்குப் போய்ச் சேர ஏழு நாட்கள், சில சமயம் அதற்கு மேலும் ஆகும். அதற்குள் கைதி தப்பி ஓடி விட்டான் என்பது டங்கனுக்குத் தெரிந்து விட்டால் இந்தக் கப்பலைச் சோதிக்கும்படி சென்னைக்குக் கம்பியில்லாத் தந்தி போய்விடும். நிச்சயமாக ஷங்கர்ஜியைக் கண்டு பிடித்து விடுவார்கள். அது மட்டும் அல்ல. அந்தக் கப்பலில் பிரயாணம் செய்யும் சிப்பாய்களின் எண்ணிக்கையும் பெயர்களின் ஜாபிதாவும் நீங்கள் தயார் செய்து உங்கள் கையெழுத்துடன் கொடுக்கப்படுவது. அதனால் அந்தக் கப்பலில் ஷங்கர்ஜி இருந்ததற்கு நீங்கள்தான் ஜவாப்தாரியாக வேண்டும். மேலும் ஷங்கர்ஜி தப்பி ஓட விட்டுவிட்ட குற்றத்துக்கு நானும் பதில் சொல்ல வேண்டும். ஆகையால் இந்த யோசனை நம் எல்லாருக்கும் அபாயம் உண்டாக்கி விடும் " என்றார் ஜேகப்.

அவர் சொன்னது மிகவும் உண்மையென்பதை ஜெயபால் உணர்ந்தான். அதனால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. பிறகு இருவரும் சேர்ந்து பலவித யோசனைகள் செய்தும் சரியான வழி புலப்படவில்லை.

சொல்லவொண்ணாத மனவேதனையுடன் ஜெயபால் தவித்துக் கொண்டிருந்தான்.

அந்தக் கடைசி கப்பல் புறப்பட நான்கு நாட்களுக்கு முன்னால் தெய்வாதீனமாகக் குமரேசன் ஜெயபாலைப் பார்க்க வந்தான். குமரேசன் சென்னைக்கும் ரங்கூனுக்கும் தபால் கொண்டு போகும் ராணுவ ஆகாய விமானத்தை ஓட்டும் 'பைலட்'டாக இருந்தான். ரங்கூனுக்கு வரும்போதெல்லாம் அவன் ஜெயபாலைக் கண்டு, சங்கரனுக்கு நேர்ந்த கதியைப் பற்றி இருவரும் துக்கப்படுவார்கள். இப்போதும் குமரேசன் சங்கரனைப் பற்றி விசாரிக்கவே ஜெயபாலைப் பார்க்க வந்தான். யுத்தம் நடந்து கொண்டிருந்தபோது குமரேசன் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை ரங்கூன் பாசறைக்குத் தபால் கொண்டு வருவான். யுத்தம் ஓய்ந்த பின், கொஞ்ச காலம் வாரத்துக்கு ஒரு முறை வந்து கொண்டிருந்தான். அதன் பிறகு அபூர்வமாக எப்போதாவது வருவான். இப்போது டங்கன் துரைக்கு ஒரு அவசரத் தபால் கொண்டுவர நேர்ந்தது. அதனால் குமரேசன் வந்தது மிகவும் எதிர்பாராதது. திடீரென்று வந்து எதிரில் நின்ற குமரேசனைக் கண்ட ஜெயபால், அது கனவோ என்று திகைத்து விட்டான்.

குமரேசன் வந்தவுடன் சங்கரனைப் பற்றி விசாரித்தான். ஜெயபால் உடனே பதில் சொல்லாமல் குமரேசன் கையைப் பிடித்து அவனை மிகவும் ஏகாந்தமான ஒரு இடத்துக்குக் கூட்டிக்கொண்டு போனான். அங்கே சங்கரன இந்தியாவுக்கு ரகசியமாகக் கொண்டு போய் விட ரஜா வாங்கினதையும் சென்னைக்குப் போகிற சேனைக் கப்பலில் சங்கரனையும் ஒரு சிப்பாய் போலக் கூட்டிக்கொண்டு போய்விடத் திட்டமிட்டதையும் அதற்கு

ஜேகப் சொன்ன ஆட்சேபணையையும் எல்லாம் விவரமாகச் சொல்லி ஆலோசனை கேட்டான்.

எல்லாவற்றையும் கூர்ந்து கேட்டுக் கொண்ட குமரேசன், சிறிது நேரம் தனக்குள்ளேயே சிந்தனை செய்து கொண்டிருந்து விட்டு, மிகுந்த ஆர்வத்தோடு சொல்லலானான் :—

"சங்கரனை எப்படியாவது காப்பாற்ற வேண்டியது நம் கடமை. அதற்கு இதுதான் தக்க சமயம். நான் சற்று நேரத்துக்கு முன்னால்தான் சென்னைக்கு வாங்கிக் கொண்டு போக வேண்டிய தபால்களைப் பற்றி டங்கன் துரையைச் சந்தித்துப் பேசினேன். நீங்கள் பிரயாணம் செய்ய நினைத்த சேனைக் கப்பல் புறப்படுவதற்கு அடுத்த நாள்தான் என் விமானம் தபால்களுடன் சென்னைக்குப் புறப்படும். சங்கரனை உங்களுடன் சேனைக் கப்பலில் கொண்டு போவது சரியல்லவென்று ஜேகப் துரை சொன்னது மிகவும் சரியான புத்திமதி. அதில் போனால் நிச்சயம் அகப்பட்டுக் கொள்ளுவீர்கள். சங்கரனைக் காப்பாற்ற எண்ணி நீங்களும் அபாயத்தில் மாட்டிக் கொள்வீர்கள்.....நான் சொல்லுகிறபடி செய்யுங்கள். நீங்கள் அந்தக் கப்பலிலேயே பிரயாணம் போவதாக உங்கள் சாமான்களை, அந்தக் கப்பலில் உங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற அறையில் வைத்து, பார்ப்பவர்கள் நீங்கள் அந்தக் கப்பலில் பிரயாணம் செய்யப் போவதாக எண்ணும்படி செய்ய வேண்டும். ஆனால், அதில் பிரயாணம் செய்ய வேண்டாம். அந்தக் கப்பலின் தலைவன் நீங்கள் அந்தக் கப்பலில் பிரயாணம் செய்யவில்லை என்பதை யாருக்கும் தெரியப்படுத்தாமல் ஒத்தாசை செய்யக் கூடியவனாக இருக்க வேண்டும்....."

"ஓ! அந்தக் கப்பலின் தலைவர் எனக்கும் ஜேகபுக்கும் நெருங்கிய நண்பர்" என்று துள்ளினான் ஜெயபால்.

"அப்படியானால் மிகவும் நல்லதாயிற்று. அந்தக் கப்பல் சனிக்கிழமை மாலை ஐந்து மணிக்குப் புறப்படுவதாகச் சொன்னீர்களல்லவா ?"

"ஆமாம்."

"அந்தக் கப்பல் புறப்படுவதற்கு முன்னால் நீங்கள் டங்கன் துரையைப் பார்த்து அத்தக் கப்பலுக்குப் போவதாக விடை பெற்றுக்கொள்ளுங்கள். போவதுபோல் பிறருக்குக் காட்டிவிட்டுப் போகாமல் மறைந்து இருங்கள். அன்று மத்தியான்னமே டங்கன் துரை என்னிடம் தபால்களைத் தந்துவிடுவார். அன்று இரவு அவர் ரங்கூன் நகரத்தில் வசிக்கும் ஒரு ஆங்கிலேயே நண்பர் வீட்டுக்கு விருந்துண்ணப்போகிறார். ரங்கூனில் இரண்டு மூன்று நாள் தங்கினாலும் தங்குவாராம். இதை அவருடைய காரியதரிசி சொன்னார். அதற்காகத்தான் தபால்களை அவசரமாகத் தயார் செய்யச் சொன்னதாகவும் காரியதரிசி சொன்னார். அதுதான் நமக்கு நல்லதிருணம். அன்று இரவிலும் அடுத்த இரண்டு மூன்று நாட்களும் டங்கன் இங்கே இருக்க மாட்டார். நீங்கள் அதற்கு வேண்டிய ஜாக்கிரதையுடன் உங்கள் உத்தியோக உடைகளை மாற்றிக்கொண்டு, சங்கரனையும் அடையாளம் கண்டு கொள்ள முடியாத உருமாற்றிக் கொண்டு, இரவு ஒரு மணிக்குமேல் சங்கரனுடன் விமான நிலையத்துக்கு வந்துவிடுங்கள். நான் உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன். தபால்களும் விமான சிப்பந்திகளும் தவிர வேறு யாரும் விமானத்தில் இருக்கமாட்டார்கள். சிப்பந்திகளை நான் கவனித்துக் கொள்ளுகிறேன். ஆனால் நீங்கள் மட்டும் எந்த வெள்ளைக்காரன் கண்களிலும் பட்டுவிடாமல் விமான நிலையத்துக்கு வந்துவிட வேண்டும். இருட்டாக இருக்கும் போதே உங்களை விமானத்தில் ஏற்றிவிட்டு நான் போய்

சொல்ல வேண்டியவர்களிடம் சொல்லிவிட்டு வந்து சரியாக ஏழு மணிக்கு விமானத்தைக் கிளப்பி விடுகிறேன்" என்றான் குமரேசன்.

அதைக் கேட்ட ஜெயபால், நின்று போன மூச்சு நெட்டுயிர்த்தது போல் பெருமூச்சுவிட்டு, குமரேசனைத் தெய்வம் என்றே கும்பிட்டுக் கொண்டாடினான். இப்படி ஒரு உதவி வந்து சேரும் என்று கனவிலாவது கருதியிருக்க முடியுமா? இதைத்தான் தெய்வாதீனம் என்று சொல்லுவதோ!

இருவரும் சேர்ந்து இந்தத் திட்டத்தை ஜேகப் துரைக்குத் தெரிவித்தார்கள். ஜேகப் மிகவும் மகிழ்ந்து அந்தத் திட்டத்தை வியந்து வரவேற்று, நன்றாக ஆராய்ந்து பார்த்தபின் ஆமோதித்தார்.

மறுநாள் காலையிலேயே ஜெயபாலும் ஜேகபும் கடைசியாகப் புறப்படப் போகிற சேனைக் கப்பலில், சேனைக்கு வேண்டிய வசதிகளைக் கண்காணிக்கப் போவது போல் துறைமுகத்துக்குப் போனார்கள். அந்தக் கப்பலின் தலைவர் இவர்களை வெகு மகிழ்ச்சியுடன் வரவேற்றார். பல விஷயங்களைப் பற்றி நெடுநேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். பகல் உணவுக்கு நேரமாகிவிடவே இவர்களைக் கப்பல் தலைவர் தம்முடன் விருந்துண்ணச் செய்தார். விடை பெற்றுக் கொள்ளுவதற்கு முன்னால் தாங்கள் வந்த காரியத்தை ஜேகப் துரையே அவருக்குச் சொன்னார். அதில் சங்கரனைப் பற்றிய தகவல் ஒன்றும் சொல்லாமல், ஜெயபால் மிகவும் நோயாகக் கிடக்கும் தாயாரைப் பார்க்க உடனே இந்தியாவுக்குப் போகவேண்டியிருப்பதாகவும், அதனால் தபால் விமானத்தில் போக ஏற்பாடு செய்திருப்பதாகவும், ஆனால் தபால் விமானத்தில் பிரயாணிகளை ஏற்றிக்கொள்ளக் கூடாது என்பதால் அவர் விமானத்தில் போனதாக இல்லாமல்

இந்தக் கப்பலிலேயே பிரயாணம் செய்ததாகக் கணக்குச் செய்யத் தயவுபுரிய வேண்டு மென்றும் கேட்டுக் கொண்டார். உடனே அந்த மாலுமி,

"ஓ! அது ஒன்றும் பிரமாதமில்லை. அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை நான் பார்த்துக் கொள்கிறேன். ஆனால் அந்தத் தபால் விமானக்காரர்கள் இதை யாருக்கும் வெளியிடாமல் இருப்பார்களா என்பதை நிச்சயம் செய்து கொள்ளுங்கள். இல்லாவிட்டால் எனக்குத்தான் சங்கடம் வரும்" என்றார்.

ஜெயபால் குமரேசனைப் பற்றி விவரமாகச் சொன்ன பின் மாலுமி திருப்தியடைந்தார்.

ஜெயபால் தன் தாயாரைப் பார்க்கப் போவதாகச் சொல்லி டங்கன் துரையிடம் ரஜா வாங்கிக்கொண்ட அன்றைக்கே சங்கரனுடைய சிறையறைக்குச் சென்று கடைசியாகப் புறப்படுகிற சேனைக் கப்பலில் மாறுவேடத்தில் அவனையும் இந்தியாவுக்குக் கொண்டு போய்விடத் திட்டமிட்டிருப்பதைச் சொன்னான். சிறைச்சாலையைப் பற்றிய சகல அதிகாரங்களும் ஜெயபாலுக்கும் ஜேகபுக்கும் சேர்ந்தவை என்பது சங்கரனுக்கு நன்றாகத் தெரியும். ஆனதால் தனக்கு நிச்சயமாக விமோசனம் கிடைத்துவிட்டது என்று பூரித்து விம்மினான். அப்போது அவனடைந்த மகிழ்ச்சியை அளவிடவும் முடியுமா? அதன் பின் அந்தக் கடைசிக் கப்பல் புறப்படும் நாளை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். ஜெயபால் அந்த திட்டத்தைச் சொன்ன நிமிஷம் முதல் சங்கரன் தான் விடுதலையடைந்து விட்டவனைகவே சந்தோஷத்தில் மிதந்து கொண்டு மனைவியைப் பற்றியும் மாதாவைப் பற்றியும் மற்றவர்களைப்பற்றியும் பல இன்பக் கனவுகள் கண்டுகொண்டிருந்தான்.

அவ்வளவு சந்தோஷத்துக் கிடையில், அடுத்த அறைகளில் அடைபட்டுக் கிடக்கும் சையத்காதரும் முனிஜியும் அடிக்கடி அழுது புலம்புவதைக் கேட்டு மனம் கலங்குவான். 'ஐயோ! அவர்களைச் சுட்டுக் கொன்றுவிடுவார்களே! நான்மட்டும் தப்பித்துக் கொண்டு போகிறேனே! என் பேச்சைக் கேட்டுத்தானே அவர்கள் இருவரும் எனக்குத் துணையாக நேதாஜி படையில் சேர்ந்து கொண்டார்கள்! அவர்களை யார் வந்து எந்தக் கப்பலில் கொண்டு போக முடியும்? அவர்களையும் அதே கப்பலில் கொண்டுபோய்விட்டால் என்ன? என்னைக் காப்பாற்றும் ஜெயபால் அவர்களையும் காப்பாற்ற முடியாதா? அப்படிச் செய்ய ஜெயபால் சம்மதிப்பாரா? சம்மதித்தாலும் சௌகரியங்கள் இடங்கொடுக்குமோ என்னவோ! எதற்கும் அவர்களையும் காப்பாற்றும்படி ஜெயபாலைக் கேட்போமே' என்று அடிக்கடி எண்ணி ஏங்கிக்கொண்டிருந்தான்.

சேனைக் கப்பலில் போய்விடலாம் என்று சங்கரனுக்குச் சொன்னபின் ஜெயபால் சில தினங்கள் சங்கரனைப் பார்க்க முடியவில்லை. காரணம், கப்பலில் போகிற திட்டம் கைவிடப்பட்டு வேறு வழி தெரியாமல் திண்டாடிக் கொண்டிருந்ததுதான். கப்பல் தலைவனுடைய ஒத்துழைப்பு உறுதியானபின் அன்று மாலையிலேயே ஜெயபால் சங்கரனுடைய சிறையறைக்கு வந்தான். தன்னுடைய விடுதலையைப் பற்றிய களிப்பும் சையத்காதர் முனிஜியைப் பற்றிய கவலையுமாக, ஒவ்வொரு கணமும் ஜெயபால் வருகையை விரும்பிக் கொண்டிருந்த சங்கரன் ஏக்கம் நீங்கி இன்பம் பொங்க எதிர் கொண்டான்.

ஜெயபால் சங்கரனுக்கு அருகில் அமர்ந்து, கப்பலில் போகிற திட்டம் கைவிடப்பட்ட காரணத்தையும், கும்

பிடப் போகாமலேயே தெய்வமே குறுக்கே வந்துவிட்டது போல் குமரேசன் வந்திருப்பதையும் அவன் சொன்ன படி ஏற்பாடாகியிருக்கிற விமானப் பிரயாணத்தையும் வெகு ரகசியமாகச் சொன்னான்.

அந்தத் திட்டத்தின் சிறப்பைக்கண்டு பெருமகிழ்ச்சி யடைந்த சங்கரன், "ஜெயபால் நீங்கள் என்னைக் காப் பாற்றுவதற்காக மேற்கொண்ட கஷ்டங்களுக்கும் தியாகத்திற்கும் நான் எத்தனை ஜென்மங்கள் எடுத்து என்னென்ன செய்தாலும் என் நன்றியைச் செலுத்தி விட முடியாது. ஒரே ஒரு கவலை இப்போது உண்டாகி என்னை மிகவும் வருத்துகின்றது....."

"என்ன! என்ன கவலை?"

"சொல்லுகிறேன்; நான்மட்டும் உயிர்தப்ப ஓடி விடுகிறேனே, என்னுடைய தூண்டுதலால் எனக்குத் துணைவர்களாய் நேதாஜி படையில் சேர்ந்து ஆங்கில ஆதிக்கத்தை ஒழிக்கப் பாடுபட்ட சிறந்த தேச பக்தர் களான சையத்காதரும் முனிஜியும் சுட்டுக் கொல்லப் பட்டுவிடுவார்களே என்ற கவலை என்னை வாட்டு கின்றது. எனக்குக் கிடைத்த விடுதலை அவர்களுக்கும் கிடைக்க நீங்கள் ஒரு வழி செய்ய முடியாதா?" என்று கண்கலங்கினான்.

"ஐயோ! அதெப்படி முடியும்? தபால் விமானத்தில் நம்மிருவருக்கு இடம் கிடைத்ததே ஆச்சரியம். அதில் அவர்களையும் கொண்டுபோனால் எல்லோரும் சிக்கிக் கொள்ளவேண்டியதுதான்" என்றான் ஜெயபால். "அவர்களையும் அந்த விமானத்திலேயே கொண்டுபோக வேண்டுமென்று நான் சொல்லவில்லை. அவர்களையும் சிறையிலிருந்து வெளியே விட்டுவிட்டால் அவர்கள் ஓடிப் பிழைத்துக் கொள்வார்கள்."

"அவர்கள் எங்கே ஓடமுடியும்?"

"ஏன், அவர்கள் இருவரும் தைரியமும் திடகாத்திர மும் உள்ளவர்கள். மணிபுரி பாதை வழியாக இந்தியா வுக்குப் போய்விடுவார்கள். அவர்களுடைய வழிச் செலவுக்குமட்டும் போதிய பணம் கொடுத்து வழி சொல்லிவிட்டுவிட்டால் மாறுவேடத்தில் அவர்கள் இந்தியாவுக்குப் போய்விட முடியும்."

"வழியில் சிக்கிக்கொண்டால்?"

"அது அவர்களுடைய அதிருஷ்டத்தைப் பொறுத்தது. நம்மைப் பொறுத்தமட்டில் நாம் அவர்களுக்குச் செய்யமுடிந்ததைச் செய்துவிட்டோம் என்ற நிம்மதி கிடைத்தால் அதுபோதும் எனக்கு" என்றான்.

ஜெயபால் அநுதாபப் பட்டவனாகிச் சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு,

"எனக்குப் பின் இந்தச் சிறைச்சாலையைப் பற்றி உத்திரவாதியாக இருக்கவேண்டியவர் டங்கன் துரை. அவர் இதற்குச் சம்மதித்தால்தான் முடியும். அவருடன் பேசிப் பார்க்கிறேன்" என்று சொல்லிவிட்டுப் போய் விட்டான்.

உடனே ஜெயபால் ஜேகப் துரையைக் கண்டு சங்கரனுடைய விருப்பத்தைத் தெரிவித்தான். ஜேகபும் வெகுநேரம் ஆழ்ந்து ஆலோசனை செய்துவிட்டுச் சங்கரன் விரும்புகிறபடியே சையத்காதரையும் முனிஜி யையும்கூட தப்பி ஓடச் செய்வதில் தமக்கே ஒரு நன்மை இருப்பதாகவும், அதைப் பின்னால் திட்டமாகச்சொல்லுவ தாகவும் சொல்லி, அவர்களுக்கும் சிறையிலிருந்து விடுதலை அளித்துவிடச் சம்மதித்தார்.

கப்பல் புறப்பட வேண்டிய சனிக்கிழமையன்று மத்தியான்னம் ஜெயபால், டங்கன் துரையைக் கண்டு நெடுநேரம் சந்தோஷமாகப் பேசிவிட்டுக் கப்பலுக்குப் போவதாக விடைபெற்றுக்கொண்டான். அதற்கு முன்பே

அவனுடைய சாமான்களும், (அவனிடத்திலிருந்த) சங்கரனுடைய சாமான்களும் கப்பலுக்குப் போய் விட்டன.

ஜெயபால் விடைபெற்றுக்கொண்டபின், டங்கன் துரை குமரேசனிடம் தபால்களைக் கொடுத்துவிட்டு, ஜேகப் துரையை வரவழைத்து, "நான் இன்றிரவு ரங்கூனுக்கு ஒரு நண்பர் வீட்டு விசேஷத்துக்குப் போக வேண்டும். இரண்டு மூன்று நாள் ரங்கூனில் தங்கிவிட நேர்ந்தாலும் நேரலாம். இங்குள்ள அலுவல்களையெல் லாம் நீங்கள் கவனித்துக்கொள்ள வேண்டும். அவசர காரியம் இருந்தால் உடனே எனக்குத் தெரியப்படுத்துங் கள்" என்று உத்தரவிட்டு ரங்கூன் விலாசம் கொடுத்தார்.

அன்றிரவு இரண்டு மணிக்குமேல் சங்கரன் இருந்த சிறையறையின் கதவு திறக்கப்பட்டது. அவன் வெளி யில் வந்தான். அவன் கையில் மற்ற இரண்டு கைதி களின் சிறையறைகளைத் திறக்கவேண்டிய சாவிகள் கொடுக்கப்பட்டன. அவனே போய்க் கதவுகளைத் திறந்து, சையத் காதரையும் முனிஜியையும் வெளியே விட்டு, தப்பி ஓடவேண்டிய பாதையைச் சொல்லிச் செலவுக்குப் பணமும் தந்து, அவர்களை முன்னால் போகச் சொல்லித் தானும் பின்னால் வந்து சேருவதாகச் சொன்னான்.

அவர்கள் மணிபுரி பாதைக்குப் போன கதையை அறிவோம். சிறையைவிட்டு மூவரும் சேர்ந்து வெளி யில் வந்து, சையத் காதரும் முனிஜியும் முன்னால் போக இருட்டில் மறைந்தபின் சங்கரனை ஜெயபால் தன் விடுதிக்கு இட்டுக்கொண்டுபோனான். அங்கே தயாராக இருந்த முன்னேற்பாட்டின்படி சங்கரனுடைய தாடி மீசையெல்லாம் பசைதடவி, மேல் நோக்கிச் சுருட்டப் பட்டு ஒரு சீக்கிய சிப்பாய்போல் உரு மாற்றப்பட்டான். ஜேகப் துரையின் அபூர்வமான அன்பின் ஒத்தாசை

களால் குமரேசன் சொல்லியிருந்தபடி விமான நிலையத் துக்குப் போய்ச் சேர்ந்தார்கள். திட்டப்படி விமானம் காலை ஏழு மணிக்குக் கிளம்பிவிட்டது.

சென்னையில் ஒரு ஹோட்டலின் மேல்மாடியில் ஒரு தனி அறை வாடகைக்குப் பிடித்துக்கொண்டு அதில் ஜெயபாலும் சங்கரனும் தங்கினர்கள். அந்த அறைக்கே அவர்களுடைய சாப்பாடு வந்துவிடும்படியான ஏற்பாடு செய்யப்பட்டது. ஸ்நானாதி காரியங்களுக்கும் அந்த அறைக்குள்ளேயே வசதிகள் இருந்தன. அதனால் சங்கரன் அந்த அறையைவிட்டு வெளியே போக வேண்டிய அவசியம் இல்லை. வெளியே போகவேண்டிய காரியம் இருந்தால் ஜெயபால் மட்டும் போய்வருவான்.

அவர்களுடைய சாமான்களெல்லாம் கப்பலில் வந்து கொண்டிருந்தன. அவைகளை எடுத்துக்கொள்ளவும் ஜெய பால் அந்தக் கப்பலிலேயே வந்ததாகக் காட்டிக்கொள்ள வும் கப்பல் வருகிறவரைக்கும் காத்திருக்கவேண்டிய கட் டாயம் ஏற்பட்டது.

சென்னை மண்ணை மிதித்தவுடன், சங்கரனுக்குத் தன் மனைவியையும் தாயாரையும் பார்க்க வேண்டும் என்றும், தான் உயிரோடிருப்பதை அவர்கள் அறிந்துவிட வேண்டும் என்றும் ஆசை வந்துவிட்டது. சங்கரன் ஜெயபாலுடன் கூடவே வடநாட்டுக்குப் போய்விட வேண்டும் என்பதும், சென்னை மாகாணத்தில் எங்கும் தங்கக் கூடாது என்பதுந்தான் ஜெயபாலின் திட்டம். அதைப்பற்றிய நுணுக்கங்களைக் குமரேசனும் ஜெய பாலும் ஆராய்ந்து முடிவுகட்டியிருந்தார்கள். அது சங்கரனுக்கும் தெரியும். ஆனாலும் மனைவியையும் மாதா வையும் பார்க்கவேண்டுமென்ற ஆசை அடக்க முடியாத தாக அவஸ்தை கொடுத்தது. கப்பல் வந்து சேர ஏழு நாளாகும்; அதிகமும் ஆகலாம். அதற்குள் தான் மட்டும்

போய், தாயாரையும் மனைவியையும் பார்த்துவிட்டு வந்துவிடலாம் என்று எண்ணி, அதை ஜெயபாலுக்குத் தெரிவித்தான். ஜெயபால் "ஐயோ! அது கூடவே கூடாது. நீங்கள் சிறையிலிருந்து ஓடிவிட்டதை டங்கன் அறிந்தவுடன் உங்களைக் கண்டுபிடிக்க இங்கிலீஷ் ஏகாதிபத்தியத்துக்குள்ள எல்லா சக்திகளையும் ஏவி விடுவார். முதலில் உங்கள் வீட்டையும், உங்கள் மாமனார் வீட்டையும்தான் சோதிப்பார்கள். நீங்கள் இப்போது தாய்தந்தையையோ மனைவியையோ பார்க்கப் போய்க்கொண்டிருந்தால் கட்டாயம் கண்டுபிடித்துவிடு வார்கள். பிறகு இவ்வளவு பாடுபட்டு வந்தது பயனற்ற தாகிவிடும்" என்றான்.

"நான் எங்கள் வீட்டுக்கோ மாமனார் வீட்டுக்கோ போகாமல் வேறிடத்தில் மறைந்திருந்து என் மனை வியை மட்டும் பார்த்து, நான் உயிரோடிருப்பதை அவ ளுக்கு மட்டுமாவது அறிவித்துவிட்டுக் கப்பல் வருவதற் குள் இங்கே வந்துவிட முடியாதா?" என்றான்.

சற்றுநேரம் சர்ச்சை நடந்தது. கடைசியாக ஜெய பால், தனக்கு மங்களம் எழுதிய கடிதத்தை நினைத்து அவள்மீது உதித்த அநுதாபத்தாலும், சங்கரனை வடநாட்டுக்குக் கொண்டு போய்விட்டபின் அவன் மறுபடியும் தென்னாட்டுக்கு வரும் வாய்ப்பு எப்போது கிட்டுமோ என்ற எண்ணத்தாலும், இப்போதே ஒரு முறை சங்கரன் மங்களாம்பாளை மட்டுமாவது பார்த்து விடுவது நல்லதுதான் என்று பரிதாபம் வந்து,

"சரி, அப்படியானால் நீங்கள் உங்கள் வீட்டுக்காவது மாமனார் வீட்டுக்காவது போய்த் தங்காமல் மறைந்திருந்து மனைவியை மட்டும் பார்த்துச் சொல்லி விட்டு இங்கே வந்துவிட முடியுமானால் இன்று இரவே புறப்பட்டுப் போய் இரண்டு நாளில் வந்து விடுங்கள். உங்கள்

மனைவியிடத்திலும், அவள் நீங்கள் வந்திருப்பதை வேறு யாருக்கும் சொல்லிவிடக் கூடாது என்பதைக் கண்டிப் பாகச் சொல்ல வேண்டும். எதற்கும் நீங்கள் வீட்டுக்குப் போகாமல் வெளியில் தங்கியிருக்கப் போகிற விலாசம் கொடுங்கள்" என்றான்.

சங்கரன், முதலில் சென்னைக்குச் சமீபமாக உள்ள விருதூருக்குப் போவதாகவும், அங்கே பைராகி மடத்தில் தங்குவதாகவும், விருதூரில் மங்களம் இல்லாவிட்டால் வசந்தபுரிக்குப் போவதாகவும், அங்கே 'வாணி விலாஸ்' என்ற ஹோட்டலில் தங்குவதாகவும் விலாசங்கள் தந் தான். எங்கே தங்கினாலும் இருட்டிய பிறகுதான் சங்கரன் வெளியே போக வேண்டுமென்று ஜெயபால் எச்சரித்தான்.

உடனே ஜெயபால் கடைகளுக்குப் போய் வந்தான். அந்த அறைக்குள்ளேயே சீக்கிய சிப்பாயாக இருந்த சங்கரனை, ஜெயபால் 'யோகானந்தா' என்ற சீக்கியத் துறவியாக உருமாற்றி விட்டான்.

இந்தச் சீக்கியச் சாமியார்தான் மங்களாம்பாளைக் கட்டித் தழுவி முத்தமிட்டது. அதைப் பார்த்து விட்ட ஜானகி கூச்சல் போட்டுக் கும்பல் கூடியது. இந்தத் துறவி பைராகி மடத்தில் தங்கியிருந்து செய்த காரியங் களையும் அங்கிருந்து மறைந்து விட்டதும் நமக்குத் தெரியும். ஆனால் இந்தப் பொய்த் துறவி மகாதேவர் வீட்டுக்குள் மங்களத்தை முத்தமிட்டதற்கு முன்னால் அவளிடம் காதல் கடிதம் என்று கருதப்பட்ட ஒரு கடிதம் கொடுத்தாரல்லவா? அதில் என்ன எழுதியிருந்தது? ஒரு துறவி தன் மகளைக் கட்டித் தழுவி முத்தமிட்டதைத் தாயார் கண்டு விட்டதில் மங்களத்தின் நிலைமை எப்படி யிருந்தது என்பதையும் இப்போது அறிந்து கொள்ள நமக்கு ஆசையுண்டாவது இயல்புதான். அந்தக் கடிதம்:

" கண்மணீ ! என்னைப் பார், சந்தேகிக்க வேண்டாம். சத்தம் போட்டுவிடாதே. இதோ என்னுடைய இடது கையிலுள்ள ' மங்களம் ' என்ற பச்சையைப் பார். நான்தான் - ஷங்கர் - இந்த மாறுவேடத்தில் இருக்கிறேன். நான் யுத்த களத்துக்குப் போய் நேதாஜியுடன் சேர்ந்து கொண்டு வெள்ளைக்காரனுக்கு விரோதமாகச் சண்டை நடத்தினேன். தோற்றுப் போய்க் கைதியாகி விட்டேன். சதிக் குற்றத்துக்காக மரணதண்டனை விதிக்கப்பட்டுச் சிறையில் இருந்தேன். மரண தண்டனை நிறைவேற்றுவதற்கு முன் மானிடத் தெய்வமாகிய எனது நண்பன் ஜெயபாலின் உதவியால் சிறையிலிருந்து தப்பி இந்தியாவுக்கு வந்து விட்டேன். விரைவில் என் கஷ்டங்கள் நீங்கி உன்னுடன் வந்து சேரக் கடவுள் கருணைபுரிவார். உன்னுடைய நோன்பு வீண்போகாது. என்னைப் போலீசார் தேட ஆரம்பித்து விடுவார்கள். நான் இங்கே வந்தது யாருக்கும் தெரிந்துவிடக் கூடாது. உன் தாய் தந்தைக்குக்கூட இப்போது சொல்ல வேண்டாம். என் தாயாரைப் பார்க்க நேரமில்லை. உடனே காசிக்கு வந்துவிடும்படி ஜெயபால் தந்தி கொடுத்திருக்கிறார். நான் இப்போதே ரயிலுக்குப் போகிறேன். உடனே நீ போய் என் தாயாரிடம் நான் சௌக்கியமாக இருக்கிறேன் என்பதை மட்டும் மறைமுகமாகச் சொல்லி அவரைத் தேற்று. நான் இங்கே வந்ததை இப்போது அவருக்கும் சொல்ல வேண்டாம். கண்ணே ! எனக்கு விடைகொடு. நீ வழிபடும் தெய்வங்களை நம்பித் தைரியமாக இருப்பாயாக, கண்ணே மங்களம் !"

இதிலுள்ள முதல் வரியைப் படித்தவுடனே எழுத்தின் அடையாளம் கண்டுகொண்டு, மங்களம் துறவியை உற்றுப் பார்த்தாள். அந்தச் சமயத்தில் அவன் தன் இடதுகைச் சட்டையைச் சுருட்டிக் கொண்டு பச்சை

குத்தியிருந்ததைக் காட்டினான். கணவர்தான் என்பதைக் கண்டுகொண்டாள். மகிழ்ச்சி பொங்கியது. அடக்கிக் கொண்டு கடிதத்தை முழுதும் படித்தாள். நிலைமையைப் புரிந்து கொண்டாள். கணவரைச் சூழ்ந்திருக்கும் அபாயத்தை அறிந்தாள். கையிலிருந்த கடிதத்தை மடித்துப் பத்திரப் படுத்திக் கொண்டு, உடம்பு முழுதும் இன்பம் ஊறிப் புல்லறிக்க, மலர்ந்த முகத்தோடு மணாளனைப் பார்த்தாள். அந்தச் சமயத்தில்தான் அவன் அவளைக் கட்டித் தழுவி முத்தமிட்டான். ஜானகியம்மாள் வந்துவிட்டாள். அதனால் ஒரே முத்தத்தோடு ஓடிவிட நேரிட்டது. மங்களம் முத்தத்தைச் சுவைத்தாள். ஆனால் கணவன் அப்படி ஓடிவிட வேண்டிய நிலைமையையும் அவரை மரணதண்டனை தொடர்ந்து கொண்டிருப்பதையுமே நினைத்து முத்தமிட்ட இடத்திலேயே அழுது கொண்டு விழுந்து கிடந்தாள். அவளுடைய அன்னை, யாரோ ஒரு அன்னியன் கட்டித்தழுவி முத்தமிட்டு விட்ட மானக்கேட்டை எண்ணித்தான் மகள் அழுவதாக எண்ணிக் கொண்டாள்.

சங்கரன் சீக்கியத் துறவியாகவே விருதூரிலிருந்து காசிக்குப் போய், தந்தியில் கொடுக்கப்பட்டிருந்த விலாசத்தில் ஜெயபாலுடன் சேர்ந்து கொண்டான். அங்கிருந்து நாகபுரி வனமாளிகைக்குப் போய்விட்டான்.

இனி, மூன்று கைதிகளும் சிறையிலிருந்து தப்பி ஓடிவிட்டபின் ரங்கூன் பாசறையில் நடந்ததைச் சொல்லுவோம். அதைச் சொல்லுவதற்குமுன் சங்கரன் முதலியவர்கள் அடைபட்டிருந்த சிறையைப் பகலிரவாகப் பாராக் கொடுத்துக் காவல் காத்த சிப்பாய்களைப் பற்றிக் கொஞ்சம் சொல்ல வேண்டும்.

அந்தச் சிறைச்சாலையைக் காவல் புரியவென்று ஜெயபால் தனக்கு மிகவும் நம்பிக்கையுள்ளவர்களான

இருபது சிப்பாய்களைப் பொறுக்கியெடுத்து, அவர்களே மாற்றி மாற்றிப் பாராக் கொடுக்க ஏற்பாடு செய்திருந்தான். அவர்களிற் பெரும்பாலோரும் தமிழர்கள். அதிற் சிலர் முன்னே சங்கரனுக்குக் கீழே வேலைபார்த்தவர்கள். சங்கரனுடைய சௌகரியங்களை அநுதாபத்தோடு கவனிப்பார்கள் என்றே தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களே அதிகமாயிருக்கும்படி பொறுக்கப்பட்டது. சங்கரனை சதிக் குற்றத்திலிருந்து விடுவிக்கவும், பிறகு மரணதண்டனையை மாற்றவும், ஜெயபாலும் ஜேகப் துரையும் அப்பீல்களும் கருணை மனுக்களும் அனுப்பிக் கொண்டிருந்ததை அவர்கள் அறிவார்கள். சங்கரனுடைய மரணதண்டனை மாறவேண்டும் என்பதில் அவர்களுக்கும் ஆழ்ந்த அநுதாபம். அத்துடன் ஜெயபாலிடத்திலும் ஜேகபிடத்திலும் மிக்க விசுவாச முள்ளவர்கள். அந்த விசுவாசம் அபரிமிதமான உதவி செய்தது.

கைதிகள் சிறையிலிருந்து ஓடிவிட்டதற்கு ஜேகப் துரையும் இந்த இருபது சிப்பாய்களுமே பதில் சொல்ல வேண்டியவர்கள். கைதிகள் ஓடிவிட்டதற்காக இவர்களில் யார்மீதும் குற்றம் சுமத்த இடமில்லாதிருக்க வேண்டும் என்பதற்காகத்தான், ஜேகப் துரையின் அபூர்வமான யுக்தியினால் மூன்று கைதிகளும் சேர்ந்து பாராக்காரனை அடித்துத்தள்ளி மயக்கம் கொடுத்துவிட்டு ஓடிவிட்டதாக ஒரு நாடகம் நடிக்கப் பட்டது. அதற்காகவேதான் வெகு தீர்க்கமான முன்யோசனையுடன் ஜேகப் துரை சங்கரனைத் தவிர மற்ற இருவரையும் சிறையிலிருந்து விட்டுவிடச் சம்மதித்தது.

ரங்கூனுக்குப் போன டங்கன்துரை, மூன்று நாள் கழித்து முகாமுக்கு வந்தார். அவர் வந்த இரவே அந்த நாடகம் நடிக்கப்பட்டது. விடியற்காலையில் கைதிகள் ஓடிவிட்ட சேதி அவருக்குத் தெரிவிக்கப்பட்டது.

ஷங்கர்ஜி ஓடிவிட்டான் என்பதைக் கேட்டவுடன் அவருடைய உள்ளமும் உடலும் கோபத்தால் கொதித்து விட்டன. 'கூப்பிடு அந்த ஜெயபாலை' என்றார். ஜெயபால் நான்கு நாட்களுக்கு முன்னாலேயே ரஜாவில் சேனைக் கப்பலில் போய்விட்டது நினைவூட்டப்பட்டது. உடனே ஜேகப்துரையைக் கூப்பிடச் சொன்னார். ஜேகப் இரண்டு நாளாக அசௌக்கியமுற்று ஆஸ்பத்திரியில் படுத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. சிறைச் சாலைக்கு ஓடினார். அங்கே மதன்சிங்கு மயங்கிக் கிடந்ததையும், பக்கத்தில் துப்பாக்கி கிடந்ததையும், அவனைத் தூக்கியபோது ஒரு கல் 'கர்க்' விழுந்ததையும், அங்கே மூலையில் 'குளோரபாரம்' சீசா கிடந்ததையும் நேரிற் பார்த்தார். மதன்சிங்கு தன்னுடைய வேஷத்தை வெகு திறமையுடன் நடித்தான். ஒருநாள் முழுதும் நினைவு இல்லாதவனைகவே பாசாங்கு செய்து, மறுநாள் தன்னை சையத் காதர் அள்ளையில் அடித்துத் தள்ளிவிட்டதாகவும் மூவரும் சேர்ந்து அமுக்கிக் கொண்டு மூக்கில் ஏதோ ஊற்றினதாகவும் வாக்குமூலம் கொடுத்தான். மூன்று கைதிகளும் சேர்ந்து பாராக்காரனை அடித்துச் செயலற்றவனாக்கி விட்டுத்தான் ஓடிவிட்டார்கள் என்பதைத் தவிர டங்கன் வேறு என்ன முடிவைக் காண முடியும்? அப்படியே நம்பித்தான் டில்லியில் சையத் காதரும் முனிஜியும், அவர்கள் சங்கரன் கப்பலில்போன அன்றைதான் தாங்கள் சிறையிலிருந்து ஓடிவந்ததாகவும், தாங்கள் யாரையும் அடித்துத் தள்ளி மயக்கம் கொடுக்கவில்லை யென்றும் சத்தியம் செய்து சொன்னதையும் நம்பாமல் அவர்கள் பொய் சொல்லுவதாகவே எண்ணினது.

இப்படியாக அன்பு செய்த அற்புதத்தால் மாங்கல்ய நலமடைந்தாள் மங்களம்.

முற்றும்